www.padippakam.com

சர்வதேசப் புரட்சியின்
சக்திவாய்ந்த போர்ஆயுதம்
மூன்றுலகக் கோட்பாடு

மரம் ஓய்வை நாடினாலும்
காற்று தணிந்துவிடாது

ஒரு முக்கிய முடிவு

படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின் மூன்றாவது பிளீனத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் - கோட்பாட்டு ஆவணங்களைக் கீழ்க்கண்ட வரிசைக் கிரமத்தில் படிக்கின்ற பொழுது அவைகள் சர்வ தேசிய, தேசியப் புரட்சி பற்றிய ஓர் ஒருங்கிணைந்த கண்ணோட்டத்தைத்தரும்.

(அ) சர்வதேசியப் புரட்சி குறித்து :—

இரு முக்கிய முடிவுகள்.

(i) சர்வதேசியப் புரட்சியின் சக்திவாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு.

(ii) மரம் ஓய்வை நாடினாலும் காற்று தணிந்து விடாது. லியு - தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதம் : ஓர் எதிர்மறை ஆசிரியன்.

(ஆ) தேசியப் புரட்சி குறித்து :—

பகுதி I இந்தியாவின் சமுதாயப் பொருளாதாரப் படிவம்.

பகுதி II வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணி.

பகுதி III இந்திய சமுதாயத்தில் நிலவும் அடிப்படை முரண்பாடுகளும் பிரதான முரண்பாடும்

பகுதி IV இந்தியப் புரட்சியின் அரசியல் பாதையும் இராணுவப் பாதையும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!

# இரு முக்கிய முடிவுகள்

## சர்வதேசப் புரட்சியின் சக்தி வாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு

★ ★ ★

## மரம் ஓய்வை நாடினாலும் காற்று தணிந்து விடாது

தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி
இந்தியப் பொதுவுடமைக் கட்சி
(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)
தமிழ்நாடு.

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : மார்ச், 1982.
விலை ரூ. 10-00

**சர்வதேசப் புரட்சி குறித்து!**
**தமிழ் மாநில அமைப்புக் கமிட்டியின்**
**மூன்றாவது பிளீன ஆவணங்கள்**

* * *

*தமிழ் மாநில அமைப்புக் கமிட்டி*
*இந்திய பொதுவுடமைக் கட்சி*
*(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)-யின்*
*மூன்றாவது பிளீனத்தில் (செப்டம்பர் 18-21, 1981)*
*நிறைவேற்றப்பட்டது.*

படிப்பகம்

www.padippakam.com

# நேர்மறையில் ஓர் ஆய்வும் எதிர்மறையில் ஒரு படிப்பினையும்

அன்பார்ந்த தோழர்களே,

## I

முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு தம்மை ஒப்புக்கொடுத்து விட்டவர்கள் அமைப்பில் ஏற்படுத்திய சலசலப்புகளையெல்லாம் வெற்றிகரமாக கடந்து நடந்து முடிந்த மாநில அமைப்புக் கமிட்டி, இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)-யின் மூன்றாவது பிளீனத்தில் இன்றைய சீனப் பொதுவுடமைக்கட்சி (சீ.பொ,க.) தலைமை பற்றியும், உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியை நடத்த இன்று உலக அரங்கில் உள்ள அரசியல் சக்திகள், யுத்த தந்திரம், போர்த் தந்திரம் பற்றியும் நிறைவேற்றப்பட்ட இரு ஆவணங்கள்—சீனத்தலைமைபற்றிய ஆவ்ணம் பின்னர்விரிந்து எழுதப்பட்டு—இங்கே புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசிய, தேசிய புரட்சிகர இயக்கத்தின் கோட்பாட்டு அடிப்படையைப் பூர்த்தி செய்வதில் பங்காற்றுவதால் இந்த இரு கட்டுரைகளும் மிகவும் முக்கியத்துவம் உடையவை; நடைமுறைக்-கான திசைவழியை வகுத்துக் கொடுக்க உயிராதாரமானவை.

மூன்றுலகக் கோட்பாட்டைப் பொருத்தவரை தோழர் மாவோ-வால் படைத்தளிக்கப்பட்டது; சீ. பொ. க.-யால் உயர்த்திப் பிடிக்கப்படுகிறது என்ற பார்வையிலிருந்தோ அல்லது சீ. பொ. க. எமது 'குருபீடம்' என்ற பார்வையிலிருந்தோ அதை நாங்கள் சரியென ஏற்றுக் கொள்ளவில்லை. அதேபோல திரிபுவாத வியு—தெங் கும்ப-லால் மூன்றுலகக் கோட்பாடு மிகவும் ஏற்றிப் போற்றப்படுவதா-லேயே அதைத் தூற்ற வேண்டும் என்றும் அதைத் தூக்கியெறிந்து விடவில்லை. மாறாக, ஏகாதிபத்திய உலகக் கட்டமைவின் தோற்றம், அதன் அடிப்படை முரண்பாடுகள், அவைகளின் இயக்கப் போக்கு, பாட்டாளி வர்க்க இயக்கத்தில் அவற்றின் பிரதிபலிப்பு ஆகியவைகளைப் பற்றிய வரலாற்றுப் பூர்வ தொகுப்பு, அவைகளின் இன்றைய வெளிப்பாடு இவைகளைப் பற்றி மார்க்சிய—லெனினிய கண்ணோட்டத்தில் பகுத்தாய்ந்து பெறப்பட்ட முடிவுகளின் அடிப்ப-டையில் மூன்றுலகக் கோட்பாட்டை நாங்கள் சரியென ஏற்றுக் கொண்டுள்ளோம். மூன்றுலகக் கோட்பாட்டின் வழிகாட்டுதலில் உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் இன்றைய அரசியல் யுத்த தந்திரம் (*Strategy*), போர்த்தந்திரம் (*Tactics*) ஆகியவைகள் எம்மால் வகுக்கப்பட்டு அவையும் மூன்றுலகக் கோட்பாடு பற்றிய எமது நிலைப்பாடும் சேர்ந்து முதல் கட்டுரையாக வெளியிடப்பட்-டுள்ளது.

இரண்டாவது கட்டுரையில் இன்றைய சீனத் தலைமை எவ்-வாறு ஒரு திரிபுவாதத் தலைமையாக குணமாற்றம் பெற்றுள்ளது என்பது ஆதாரபூர்வமாக, ஆணித்தரமாக நிலைநாட்டப்பட்டுள்ளது. மகத்தான சீனக் கட்சி, உலகப் புரட்சியின் மையம் என்றெல்லாம் கொண்டாடி வந்த கட்சியாதலால் எப்பொழுதுமே அது புரட்சிகர கட்சியாகத்தான் இருக்க வேண்டும் என்றோ அல்லது தலைமை திரிபுவாதமாகிவிட்டது என்று உணர்ந்த உண்மையை பகிரங்கமாக உலகிற்கு அறிவித்து விடுவது உலக, உள்நாட்டு மார்க்சிய—லெனினிய இயக்கங்களுக்கு ஊறு விளைவிக்குமோ என்ற உள்ளூர அச்சத்தின் காரணமாகவோ சரியான தலைமை என்று முடிவெடுக்க வில்லை. இன்னொரு பக்கம் ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைக் கண்ட-வுடனேயோ அல்லது தெங் தலைமைக்கு வந்து விட்டார் என்பதா-லேயோ 'அதோ! சீ. பொ. க. தலைமை திரிபுவாதமாகி விட்டது' என்று ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ செய்யவுமில்லை. மாறாக, புரட்சிகர பொறுப்புணர்வுடன், மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனையின் ஒளியில் சீனத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை



படிப்பகம்

www.padippakam.com

சீர்தூக்கிப் பார்த்தோம். தலைமை திரிபுவாதமாக உருமாற்றம் பெற்றுவிட்ட கசப்பான உண்மையை உணர்ந்தோம். அவ்வாறு உணர்ந்த உண்மையைத் தான் இரண்டாவது கட்டுரையில் விளக்கி யிருக்கிறோம்.

'சீனத்தலைமை பற்றி முடிவெடுக்கப் போதுமான ஆவணங்களும், ஆதாரங்களும்—அதுவும் முறையான மூலங்களிலிருந்து—இல்லாமலேயே மாநில அமைப்புக் கமிட்டியினர் அவசர கோலமாக முடிவெடுத்துள்ளனர்' என்று சற்று எரிச்சலுடன் கூடிய அலட்சியமான குரலொன்று எங்கள் செவிகளுக்கு எட்டியுள்ளது. சீனத் தலைமை பற்றிய மா. அ. க.—யின் கோட்பாட்டு முடிவுகள் அடங்கிய கட்டுரை வெளிவருவதற்கு முன்பே, அதைப் படித்துக்கூட பார்க்காமலேயே, வெண்மணி வழக்கில் உயர்நீதி மன்ற தீர்ப்பு போல ஒரு தீர்ப்பை இவர்கள் வழங்கியிருப்பது விநோதம் தான். போதுமென்ற அளவிற்கு கண்முன்னால் குவிந்து கிடக்கிற ஆதாரங்களை போதுமானவையல்ல என்று வலிந்து பொய் சொல்ல ஒரே ஒரு காரணம் தான் இருக்கிறது. போதுமானவை என ஒப்புக்கொண்டால் சீனத் தலைமை திரிபுவாதத் தலைமை என்பதை மறுக்கவே முடியாது. இது அவர்களது அடித்தளத்திற்கு குழி பறிக்கும். அதாவது, சீனத்தில் யார் அல்லது எது தலைமைக்கு வந்தாலும் புரட்சிகர தலைமையாக உயர்த்திப் பிடித்தேயாக வேண்டும் என்ற அவர்களது கோட்பாட்டு அடிப்படைக்கு இது உலை வைக்கும். எனவேதான், அவசரகோல முடிவென மிக அவசரமாக அறிவித்துள்ளனர். ஆனால், போதுமான ஆதாரம் எங்களிடம் இருக்கிறது. போதுமான அளவிற்கு அவற்றை இந்தக் கட்டுரையில் பொருத்திக் காட்டியுமிருக்கிறோம்.

மேலும் மார்க்சிய ஆசான்களின் ஏராளமான மேற்கோள்களுடன் எமது கோட்பாட்டு முடிவுகள் நிலைநாட்டப்பட்டிருக்கின்றன; ஓரளவிற்கு இது திகட்டச் செய்யலாம். ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதும் மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனையின் உயிர் மூச்சாகும். தமிழில் இந்த மாதிரியான முயற்சி முதன்முறையாக வருவதாலும் ஏறத்தாழ எல்லா விஷயங்களும் ஆங்கிலத்தில் இருப்பதாலும் இவ்வாறு செய்ய வேண்டியது அவசியமாகிறது. அத்துடன் 'கரையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்தது போல' இன்று சீ.பொ.க. தலைமையில் லியு-தெங் கும்பல் ஆதிக்கம் பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள தத்துவார்த்த குழப்பங்களையும், குட்டி முதலாளித்துவ சிந்தனையெனும் குட்டிச் சாத்தான் சிலரது எண்ணங்களில் உற்பத்தி செய்கிற நிகழ்காலம் பற்றிய சலிப்புகளையும் எதிர்கால ம்பற்றிய அவநம்பிக்கைகளையும் அடியோடு துடைத்தெறிய வேண்டியிருப்பதும் இந்தஅவசியத்தின் அவசியத்தை



படிப்பகம்

www.padippakam.com

மேலும் அவசியமாக்குகின்றது. இந்த முறை ஒன்றும் புதிதல்ல. ஜார்ஜ் தாம்சன் அவர்கள் இந்த முறையைக் கையாண்டு மார்க்சிய-லெனினியத்தை எளிமையாக புரிய வைத்துள்ளதோடு அதன் சர்வ வியாபக உண்மையைப் படிப்பவர்கள் மனதில் ஆணித்தரமாக நிலைநாட்டியிருப்பதையும் இங்கே நினைவு கூர்கிறோம்.

## II

மூன்றுலகக் கோட்பாட்டைப் பொறுத்தவரை கீழ்க்கண்ட மூன்று முக்கிய அம்சங்கள் உள்ளன.

1. ஏகாதிபத்திய முகாமில் மேல்நிலை வல்லரசுகள் தோன்றியுள்ள ஒரு குணமாற்றம் நிகழ்ந்துள்ளது.
2. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் பரம எதிரியை இனங்காணுவது; அதனடிப்படையில் சாத்தியமாகக் கூடிய, இன்றியமையாத சக்திகள் அனைத்யையும் பாட்டாளி வர்க்கம் தனது தலைமையில் திரட்டிப் போராட வேண்டும்.
3. மூன்றுலகக் கோட்பாடு யுத்த தந்திரமோ, போர்த் தந்திரமோ அல்லது இரண்டுமோ அல்ல; மாறாக, அது உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சிக்கான கோட்பாடாகும்.

சர்வதேசப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியினுடைய இன்றைய யுத்த தந்திர, போர்த்தந்திரங்களை வகுக்க வழிகாட்டும் மூன்றுலகக் கோட்பாட்டின் பால், தவறான அல்லது எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டிருப்போரை மூன்று 'வகையாகப் பிரிக்கலாம்.

அ. மூன்றுலகக் கோட்பாட்டை எதிர்ப்பவர்கள் -அல்பேனிய மற்றும் அதன் தொங்கு சதை கட்சிகள்; இந்திய திரிபுவாதிகள் மற்றும் நவீன திரிபுவாதிகள் புனரமைப்புக் கமிட்டி, இ. பொ. க. (மா.லெ).

ஆ. மூன்றுலகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்பவர்கள்; ஆனால் தவறாக' புரிந்து கொண்டிருப்பவர்கள்— ஐக்கிய கமிட்டி இந்தியப் பொதுவுடமைப் புரட்சியாளர்கள் (மா-லெ).

இ. மூன்றுலகக் கோட்பாட்டை கண்மூடித்தனமாக ஆதரிப்பவர்கள்; அதனால் தவறாகப் பிரயோகிப்பவர்கள் - விநோத் மிஸ்ரா குழுவினர், சந்திரா புல்லா ரெட்டி குழு, சத்திய நாராயணன் குழு.


படிப்பகம்

www.padippakam.com

1957 நவம்பரில் மாஸ்கோவில் கூடிய சோசலிச நாடுகளின் பொதுவுடமை மற்றும் தொழிலாளர் கட்சிகள் வெளியிட்ட பிரகடனம் 1960 நவம்பரில் மாஸ்கோவில் கூடிய 81 பொதுவுடமை மற்றும் தொழிலாளர் கட்சிகள் வெளியிட்ட அறிக்கை ஆகியவைகளிலுள்ள நிலைப்பாடுகளையே தாங்கள் கடைப்பிடிப்பதாக இந்திய திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் சொல்கின்றனர். சோசலிச முகாமிற்கும் ஏகாதிபத்திய முகாமிற்கும் இடையிலான முரண்பாடே முரண்பாடுகளின் குவிமையப் புள்ளியாக இருக்கிறதென்றும், அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக மக்களின் பரம எதிரி என்றும் இந்த ஆவணங்கள் சொல்கின்றன. இருபத்திரண்டு ஆண்டுகளாக எவ்வித மாற்றமும் ஏற்படாமல் அதே நிலைமைகள் தான் அப்படியே நிலவுகின்றன என்ற இயக்க மறுப்பியல் கண்ணோட்டத்தில் அணுகுகின்றனர். அல்பேனிய தொழிலாளர் கட்சி அமெரிக்காவையும் ரஷியாவையும் மேல்நிலை வல்லரசுகள் எனச் சொன்னாலும், சமூக ஏகாதிபத்தியம் மூன்றாவது உலக யுத்தத்திற்கான பிரதான அபாயமாக இருக்கிறது என்பதை மறுத்து இரு மேல்நிலை வல்லரசுகளுமே சமமான அபாய -மூட்டுவதாக சொல்கின்றது. திரிபுவாதம் எனச் சொல்லி மூன்றுலகக் கோட்பாட்டை வன்மையாக எதிர்க்கிறது. புனரமைப்புக் கமிட்டி, இ. பொ. க. (மா-லெ) -வினர் இந்தக் கோட்பாடு மாசே-துங்கால் படைத்தளிக்கப்படவில்லை; தெங் கும்பலினால் தயாரிக்கப்பட்டது எனச் சொல்லி அதை எதிர்க்கின்றனர். இதனால் இவர்களனைவருமே உலக மக்களின் மிகப்பெரிய அபாயமாக உள்ள ரஷிய சமூக ஏகாதிபத்தியத்திற்கு மறைமுகமாக உதவுகின்றனர்.

மூன்றுலகக் கோட்பாட்டை ஆதரிப்பதாகச் சொல்லும் இரண்டாவது வகையினர் அதை ஒரு யுத்த தந்திரமாக அல்லது போர்த்தந்திரமாக அல்லது இரண்டுமாகப் பார்க்கின்றனர். சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் புறநிலையாக உள்ள நிலைமைகளைப் பகுத்தாயும் கோட்பாடாகப் பார்க்காமல் அதை அகநிலையாகப் பார்ப்பது தான் இவர்களின் தவறாகும்.

மூன்றுலகக் கோட்பாட்டைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கும் மூன்றாவது பிரிவினர் அமெரிக்க ஆதரவு சக்திகளோடு இன்றே ஐக்கிய முன்னணி கட்ட வேண்டும் என்று நடைமுறையில் முயன்று கொண்டிருப்பவர்கள்; சர்வதேச ரீதியில் அமெரிக்க மேல்நிலை வல்லரசோடு கூடிக் குலாவி வரும் லியு—தெங் கும்பலின் இந்தியப் பதிப்புக்களாக இவர்கள் உள்ளனர். சமூக ஏகாதிபத்தியம் மூன்றாம் உலக யுத்தத்திற்கான பிரதான அபாயமாக இருக்கிறது என்பதை ரஷ்யா யுத்தத்தைத் தொடங்கி விட்டது என்றே எடுத்துக் கொண்டு அமெரிக்காவின் வாலாக மாறும் பாதையில் செல்கின்றனர். மேலும் தெங் கும்பலும் வினோத் மிஸ்ரா குழுவும் மூன்றுலகக் கோட்பாட்டை

படிப்பகம்

www.padippakam.com

காட்டி உலகறிந்த திரிபுவாதக் கட்சிகளைக் கூட புரட்சிகர கட்சிகள் என்றும் புரட்டலாளர்களைப் புரட்சியாளர்கள் என்றும் சொல்லும் கடைகோடி நிலைக்கு சென்றுள்ளனர்.

இவ்வாறு மாநில அமைப்புக் கமிட்டி சொல்வதால் சமூக ஏகாதிபத்தியத்தை மூன்றாம் உலக யுத்தத்தின் பிரதான அபாயம் என்பதை மறுத்து விடுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே சமயத்தில் மூன்றாவது உலக யுத்தத்திற்கான அபாயம் இல்லையென்று சொல்லும் பாசிபிஸ்டுகளையும் சமூக ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக கொடுத்து அல்லது சிறிய இரைகளை பலி கொடுத்து சாந்தப்படுத்த முயலுபவர்களையும் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதை மாநில அமைப்புக் கமிட்டி தனது முக்கிய கடமைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது.

இன்னும் 'மக்கள் யுத்தக்' குழு போன்ற ஒரு சிலர் மூன்றுலகக் கோட்பாடு என்பதன் முக்கிய சாராம்சம் தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிப்பதும் கட்டவிழ்த்து விடுவதும் என்று எண்ணிக் கொண்டு நமது நாட்டில் தேசிய இனப் பிரச்சினைக்கு அந்த அடிப்படையில் அதீத முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

எனவே, மூன்றுலகக் கோட்பாட்டை நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எதிர்க்கும் எல்லா சக்திகளையும் போக்குகளையும் எதிர்த்து முறியடித்து அதன் உண்மையான பொருளில் மூன்றுலகக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்க உறுதிபூண வேண்டியுள்ளது.

## III

சீனப் பொதுவுடமைக் கட்சியின் வரலாற்றுப் பாத்திரம் காரணமாக அதன் தலைமையில் ஏற்படும் மாற்றங்கள் சர்வதேசிய ரீதியில் விச்சை ஏற்படுத்தக் கூடியவை. எனவே அந்த மாற்றங்கள் குறித்து உரியகாலத்தில் கறாரான முடிவெடுத்து அதை நிலைநாட்டப்போராடுவது ஒவ்வொரு மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் கட்சியின் கடமையும் பொறுப்புமாகும். அதுவே தோன்றக்கூடிய குழப்பங்களுக்கோ, ஊசலாட்டங்களுக்கோ தீர்வைத் தரும். இந்தப் பொறுப்பையும் கடமையையும் யார் தட்டிக் கழிக்கிறார்களோ அவர்கள் மார்க்சியத்தைப் பாதுகாப்பதில் தவறுகிறார்கள். ஏனெனில் மார்க்சியத்திற்கு எதிர்ப்பு நேரிடையாகவும் வெளிப்படையாகவும் வராமல் மிகவும் கபடத்தனமாக, நயவஞ்சகமாக, மார்க்சியத்தைப் புகழ்ந்து கொண்டே வருகிறது. அதை மார்க்சியத்திலிருந்து வேறுபடுத்தி இனங்கண்டுஎவ்வளவுக்கெவ்வளவுதெளிவான எல்லைக்கோடுகளை



படிப்பகம்

www.padippakam.com

வரையறுக்கிறோமோ அந்த அளவிற்கே எதிர்ப்பை முறியடிக்க
முடியும்.

1840-ம் ஆண்டுகளிலிருந்து தொடங்கி மார்க்சியம் தனது
வாழ்வின் முதல் அரை நூற்றாண்டில் அடிப்படையிலேயே தனக்கு
விரோதமான தத்துவங்களுக்கு எதிராகப் போராடியது; அதில்வெற்
றியும் பெற்றது. ஆனல் மார்க்சியம் முறியடித்த கருத்துக்கள் (தத்
துவங்கள்) மார்க்சியத்தின் வாழ்வில் இரண்டாவது அரை நூற்
றாண்டில் (தொண்ணூறாம்ஆண்டுகளிலிருந்து) பிறவழிகளில் தலை
தூக்கின. மார்க்சியத்திற்கு விரோதமாய் மார்க்சியத்திற்கு உள்ளி-
ருந்தே செயல்பட்ட ஒரு போக்காக—திரிபுவாதமாக—எழுந்தது.
அதாவது, மார்க்சியத்திற்கு முந்திய 'சோசலிசம்' முறியடிக்கப்பட்
டது. ஆனால் அதன் எதிரி முன்புபோல தனது சொந்த அடித்தளத்
திலிருந்து போராடுவதற்குப் பதிலாக மார்க்சியத்தின் பொது அடிப்
படையில் நின்று திரிபுவாதமாக போராட்டம் நடத்தியது. வடிவங்
களும், முறைகளும, முகாந்திரங்களும் மேலும் மேலும் கபடத்தன
மாக, நயவஞ்சகமாக—நவீனதிரிபுவாதமாக—தோன்றின; தோன்
-றிக் கொண்டிருக்கின்றன.
மையமாக.

மார்க்ஸ் காலத்தில் மார்க்சியத்திற்கும் அதன் எதிரிகளுக்-
கு ான போராட்டமானது தத்துவார்த்த துறையில்,
மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானமாக நிலைநாட்டுவதற்
கும் அதற்கு எதிரானவற்றிற்குமானதாகவும் இருந்தது.
லெனின் காலத்தில் போராட்டமானது பாட்டாளிவர்க்கப் புரட்சியின்
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான
கோட்பாடு, யுத்த தந்திரம் ஆகிய துறைகளில் இருந்தது.
மாவோ காலத்தில் போராட்டமானது பாட்டாளிவர்க்க சர்வாதிகா
-ரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வற்-
கான கோட்பாடு, யுத்ததந்திரம், போர்த்தந்திரம் ஆகிய
துறைகளில் நடைபெற்றது, பின்னரும்நடைபெறுகிறது.

இவ்வாறு மார்க்சியத்திற்கும் அதன் எதிரிகளுக்கும் இடை
-யில் நடந்த போராட்டத்தில், தொடர்ந்து நடந்து வரும் போராட்-
டத்தில் மார்க்சியம் எது? திரிபுவாதம் எது? என்பதைத் தெளிவாக
எல்லைக்கோடுகள் வகுத்து வரையறுப்பது மிக மிக கேந்திரமானதா
கும். அப்படிப்பட்ட ஓர் எல்லைக்கோட்டை லெனின் கொடுத்திருக்கி-
றார். 'வர்க்கப் போராட்டத்தை அங்கீகரிப்பதை பாட்டாளி வர்க்க
சர்வாதிகாரத்திற்கான அங்கீகரிப்பாகவும் யார் விரித்துச் செல்கி
றார்களோ, அவர்கள் மட்டுமே மார்க்சியவாதிகள்' என்று லெனின்
வரையறுத்தார். முன்பு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான
அங்கீகாரத்தை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நடைமுறையில்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களை
நி-லநாட்டுவதற்கு யார் விரித்துச் செல்றொர்களோ ஏற்றுக் கொண்டவர்களாக
மார்க்சிய—லெனினியத்தை தற்போது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை
நாம் சொன்னோம் தொடர்ந்து பாட்டாளிவர்க்க சர்வாதிகார
நிலைநாட்டுவதைத் தொடர்ந்து நடத்துவதற்காக விரித்துச் செல்கி
தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்காக விரித்துச் செல்கி
றார்களோ அவர்களையே மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்த-
னையை ஏற்றுக் கொண்டவர்ளாக நாம் மேலும் சொல்கிறோம்.

ஏனென்றால் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பணி
(*Historical mission*) முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியைத் தூக்-
கியெறிவது மட்டுமல்ல; மாறாக, வர்க்கங்களே இல்லாமல் செய்வ
தும், எல்லாவகை சுரண்டல்களையும் ஒழித்துக்கட்டுவதும் இறுதியில்
மகோன்னதமான இலட்சியமாகிய கம்யூனிசத்தை அடைவதுமாகும்.
பாட்டாளி வர்க்கம் அரசியலதிகாரத்தை வென்றெடுப்பதுடன் இந்த
இலட்சியம் நின்றுவிடுவதில்லை. மாறாக, அது தனது இலட்சிய பய
-ணத்தில் பாட்டாளி வர்க்கம் போராடி தேடிக் கொண்ட ஒரு
போராட்ட கருவியாகும். அவ்வளவுதான். இந்தக் கருவியைக்
கொண்டு வர்க்கங்களையே இல்லாமல் செய்வதற்கான வர்க்கப்
போராட்டப் பாதையில் பாட்டாளி வர்க்கம் தொடர்ந்து முன்னேற
வேண்டும். புரட்சியைத் தொடர்ந்து நடத்த வேண்டும். ஆனால்,

> "சந்தர்ப்பவாதமானது வர்க்கப் போராட்டத்
> திற்கான அங்கீகாரத்தை தலையாய விவகாரத்
> திற்கு, அதாவது முதலாளித்துவத்
> திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வதற்-
> குரிய கால கட்டத்திற்கு, முதலாளித்துவ வர்க்-
> கத்தை வீழ்த்தி அதை அறவே அழிக்கும் கால
> கட்டத்திற்கு விரித்துச் செல்வதில்லை. உண்மை
> யில் இந்த கால கட்டம் தவிர்க்க முடியாதபடி
> வர்க்கப் போராட்டம் என்றுமில்லாத
> உக்கிர மூர்க்கத்தனத்துடனும் என்றுமில்லாத
> வடிவங்களில் நடைபெறும் காலகட்டமாகும்."
>
> (லெனின்; அரசும் புரட்சியும் : அழுத்தம் எமது)

லெனின் மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பவாதத்திற்கு நேர்வாரி
சான லியு-தெங் கும்பல் லெனின் சுட்டிக்காட்டியவாறான என்றுமில்
-லாத மூர்க்கத்தனமான, உக்கிரமான வர்க்கப் போராட்டம் இல்லை
என்று சொல்கிறது. இன்னும் லஸ்ஸாலிலிருந்து குருஷ்சேவ் வரை
மார்க்சிய எதிர்ப்பாளர்கள் சொன்ன அனைத்து வாதங்களையும்
தனக்கே உரிய கபடத்தனமான, நயவஞ்சகமான வார்த்தைகளில்



படிப்பகம்

www.padippakam.com

சொல்கிறது. இவ்வாறு லியு—தெங் கும்பல் சரியான தீர்ப்புகளை மாற்றிஎழுதி வலதுசந்தர்ப்பவாதப் பாதையில் மிகவேகமாக சென்று கொண்டிருப்பதை சுத்தமாக தோலுரித்துக் காட்டி மார்க்சிய-லெனி -னிய-மாசேதுங் சிந்தனையை இந்தக் கட்டுரை உயர்த்திப் பிடித்தி ருக்கிறது.

சீனத்தலைமை பற்றிய அணு நமுறையில் மாறான கண் -ணோட்டங்கள் சில மார்க்சிய லெனினிய குழுக்களிடம் உள்ளன. 'மக்கள் யுத்தக்' குழு, விநோத் மிஸ்ரா தலைமையிலான குழு ஆகிய வற்றின் பத்திரிக்கைகள் கிடைத்திருக்கிற காரணத்தால் அவைக ளின் நிலைப்பாடுகளைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

'சகோதர கட்சிகளிடையேயான வேறுபாடுகளைத் தீர்ப்ப -தில் மாவோவின் முறைகளைப் பின்பற்றி சர்வதேசியப் பாட்டாளி வர்க்க ஐக்கியத்தின் பதாகையை உயர்த்திப் பிடிப்போம்' என்று தலைப்பிட்டு (மக்கள் யுத்தம், ஆங். 1981 மே இதழ்) சீனத்தலைமை பற்றிய பிரச்சினைகள் மீது மக்கள் யுத்தக் குழு (ம.யு.கு) -வினர் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

சோவியத் யூனியன் பொதுவுடமைக் கட்சியின் 20-வது காங்கிரசிலிருந்து எழுந்த குருஷ்சேவ்-பிரஷ்னேவ் திரிபுவாதத்தை சீனப் பொதுவுடமைக் கட்சி 1960-க்குப் பின்னர் தான் பகிரங்கமாக விமர்சித்ததெனவும் அதுவும் குருஷ்சேவ் சீ.பொ.க. மீது பகிரங்கத் தாக்குதல்தொடுத்த பின்னர்தான் இவ்வாறுசெய்ததெனவும் ம.யு.கு. கூறியுள்ளது. பிற சகோதர கட்சிகள் மீது பெரியதனம் பண்ணு வது, சமாதான மாற்றம் என்ற பெயரில் பிறநாட்டு புரட்சித்தீக்களில் தண்ணீர் ஊற்றியது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு கூடிக் குலா வியது போன்ற நடவடிக்கைகள் மூலம் சோ. யூ. பொ. க. முற்றாக திரிபுவாதமாக மாறிய பின்னரே சீ. பொ. க. பகிரங்க விமர்சனத்- தைக் கையாண்டது; இவைகளே மாவோவின் அணுகுமுறை. வெளி -யுலகப் பிரச்சாரத்தில் வாயை நாம் அதிகம் திறக்கக்கூடாது; தெரு வில் நின்று கத்தக்கூடாது—இவ்வாறு ம.யு.கு. அறிவுறுத்துகிறது. இந்த அறிவுரையைக் கூறி சீனத்தலைமை பற்றிய தங்களது கருத்து களை மார்க்சிய-லெனினியக் குழுக்கள் சீ. பொ. க. விடம்தான் வைக்க வேண்டும். சீ. பொ. க. முற்றாக திரிபுவாதமாக மாறி மார்க்சிய—லெனினியக் குழுக்களைத் தாக்கும் போது மட்டுமே பகிரங்கமாக விமர்சனம் செய்ய வேண்டுமென வேண்டுகோளும் விடுத்திருக்கிறது.

ஒரு கட்சியின் பால் என்ன அணுகுமுறையைக் கையாள வேண்டுமென்பது அக்கட்சியைப் பற்றி என்ன கணிக்கிறோம் என்ப திலிருந்தே பிறக்கிறது. கணிப்பு பிரதானமானது; அணுகுமுறை இரண்டாம் பட்சமானது. புரட்சிகர கட்சியென கணித்தால் சகோதர,



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர் உறவுப் புரட்டல்வாதகட்சியாக மாறிவிட்டது என்றுகணித்தால் அதை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி முறியடிப்பது. திரிபுவாத பாதையில் செல்கிறது, திருத்திவிடலாம் என்று நம்பிக்கை கொண்டால் உறுதியான மார்க்சிய-லெனினிய நிலைப்பாடுகளுடன் அக்கட்சியுடன் பரஸ்பரம் (பகிரங்கமாக அல்ல) சித்தாந்தப் போராட்டம். எடுத்துக்காட்டாக, குருஷ்சேவ் தலைமையில் சோ.யூ.பொ.க. திரிபுவாதப் பாதையில் அடியெடுத்து வைத்தபோது அதைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கையில் மாவோவும் அவரது தலைமையிலான சீ.பொ.க. வும் தங்களது விமர்சனங்களை பகிரங்கப்படுத்தவில்லை; திருத்த முடியாது என்ற கணிப்புக்கு வந்த பின்னர் பகிரங்கமாக தங்களது விமர்சனத்தை வைத்தனர். உறவுகளைத் துண்டித்துக் கொண்டனர். இது சம்பந்தமாக சீ.பொ.க. சொல்வதை கேட்போம்

> ''ஒரு குறிப்பிட்ட நீண்ட காலத்திற்கு குருஷ்சேவின் திரிபுவாதத்தை பகிரங்கமாக மறுத்துரைப்பதிலிருந்து எம்மைக் கட்டுப்படுத்தி வந்தோம். எங்களது கோட்பாட்டுநிலைப்பாட்டை நாங்கள் தக்க வைத்துக் கொண்டே சில பிரச்சினைகளில் குருஷ்சேவிற்கு நாங்கள் சலுகைகளை அளித்தோம். எங்களதுநோக்கம் சோ.யூ.பொ.க. தலைவர்களை மார்க்சிய-லெனினியப் பாதைக்கு மீண்டும் கொண்டு வருதாக இருந்தது. ஆனால் அவர்கள் நல்லவைகளுக்கு தீயவற்வையே பதிலாக தந்தார்கள். சோ.யூ.பொ.க .யின் மத்தியக் கமிட்டியின் பகிரங்க கடிதத்தை விமர்சனம் செய்யும் எங்களது கட்டுரைகளில் ஒன்றில் சகோதரக் கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் எங்களுக்கும் சோ.யூ.பொ.க.-க்கும் இடையில் இருந்த வேறுபாடுகளைப் பற்றிய உண்மையை நாங்கள் ஏன் அவர்களுக்கு தெரியப்படுத்தவில்லை என்பது பற்றியும் குருஷ்சேவிற்கு நாங்கள் ஏன் சலுகைகளைக் கொடுத்தோம் என்பது பற்றியும் கேட்பார்களேயானால் அவர்களது விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்திருந்தோம். எங்களைப் பொருத்தவரையில் திரிபுவாதத்திற்கு எதிரானப் போராட்டத்தில் இது ஒரு முக்கியமான வரலாற்றுப் பாடமாகும்.''
>
> (குருஷ்சேவ் திரிபுவாதத்திற்கெதிரானப் போராட்டத்தை இறுதிவரை எடுத்துச் செல்க! என்ற கட்டுரையில்......., சீனா விலகிப் போகிறதா? என்ற நூலிலிருந்து, பக்.123)

எனவே மாவோ தலைமையிலான சீ.பொ.க. அன்று குருஷ்சேவ் திரிபுவாதத்திற்கு எதிராக கடைப்பிடித்த அணுகுமுறை அவர்களது கணிப்பிற்கேற்ப இருந்தது என்பது தெளிவு. ஆனால், சீ.பொ.க.



படிப்பகம்

www.padippakam.com

உணர்ந்த வரலாற்றுப் பாடத்தைக் கற்கவோ அதற்கு தக நிற்கவோ ம.யு.கு.வினர். முன்வராதது மிகவும் வருந்தத்தக்கது தான்.

இன்னொரு எடுத்துக் காட்டாக, இன்றைய சீனத் தலைமை பற்றி மா.அ.க. திருத்தவே முடியாத திரிபுவாதத் தலைமையாக மாறிவிட்டது என்று கணிக்கிறது. அதற்கான ஆதாரபூர்வமான விளக்கத்தை இந்தக் கட்டுரையில் கொடுத்திருக்கிறது. எனவே, அது பகிரங்க விமர்சனத்தில் ஈடுபடுகிறது.

ஆனால் தனது கட்டுரையில் எங்குமே சீனத்தலைமை பற்றிய தனது கணிப்பை ம.யு.கு. கூறவில்லை. அதே சமயத்தில் பகிரங்கமாக விமர்சிக்கக்கூடாது; பரஸ்பரம் இரகசியமாக சீ.பொ.க. வுடன் எல்லோரும் கருத்துக்களை பரிமாறிக் கொள்ள வேண்டுமென்கிறது. என்ன கணிப்பு என்பதைப் பற்றி கவலைப்படாமல் இவ்வாறு சொல்கிறது. இது எவ்வாறு சரியாகும்? அதாவது யாருமே எந்தக் கணிப்புக்கும் வரக்கூடாது; ஆனால் இவர்கள் சொல்லும் அணுகுமுறையை மட்டும் எலலோரும் பின்பற்ற வேண்டும் என்று கூறுவது எவ்வாறு சரியாகும்? ஒரு வாதத்திற்கு இவர்கள் சொல்லும் அணுகுமுறையைப் பின்பற்றுவதாக வைத்துக் கொள்வோம். சீ. பொ.க.தான் இந்திய மார்க்சிய-லெனினிய குழுக்களிடம் தொடர்பே வைத்துக் கொள்வதில்லையே. பின் எவ்வாறு அதனுடன் கருத்துபரி -மாற்றம் செய்து கொள்வது? சித்தாந்தப் போராட்டம் நடத்துவது? இதன் வளர்ச்சிப்போக்கில் எவ்வாறு முடிவு காண்பது? இங்கே முக்கியமானது என்னவென்றால் எப்படிப்பட்ட கட்சிகளுடன் எந்த மாதி -ரியான உறவு வைத்துக் கொள்ள சீ.பொ.க. தயாராக இருக்கிறது என்பது தான். அதற்காக என்ன அளவுகோலை அது வைத்திருக்கி -றது என்பது தான். ரஷியாவை எதிர்க்க வேண்டும் அல்லது ரஷிய எதிர்ப்பிற்கு வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கை கொண்ட கட்சி -கள் எல்லாவற்றிடமும் தனது உறவுகளை சீ.பொ.க. புதுப்பிக்கின்றது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பகிங்கரமாக கைவிட்டு விட்ட யூரோ கம்யூனிஸ்ட் கட்சிகளிடமிருந்து கற்றுக் கொள்ளவேண் -டுமென்று கூறுகிறது. ஆனால் உண்மையான இ.பொ.க. (மா-லெ) -யாளர்களைப் புறக்கணிக்கின்றது. இந்த நிலையில் அதனுடன் பரஸ்பரம் கருத்துப் போராட்டம் நடத்த வேண்டும் என்று ம.யு.கு. சொல்வது விந்தையானதே.

ம.யு.கு. வினர் எந்தக் கணிப்புக்கும் வராமல் ஒரு மையவாத நிலைப்பாடு எடுத்திருக்கின்றனர் என்பதே உண்மை. ஒரு பக்கம் வினோத் மிஸ்ரா குழு போன்றோர் சீனத்தலைமையை கண்மூடித்தனமாக ஆதரிப்பதை தவறு என விமர்சிக்கும்போது சீனத்தலைமையில் தவறுகள் இருக்கலாம், அதைப் பரிசீலனை செய்ய வேண்டும்; அதற்காக போராட வேண்டும், அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடாது



படிப்பகம்

www.padippakam.com

என்கின்றனர். மற்றொரு பக்கம் புரைமைப்புக் கமிட்டி, அல்பேனி
யக் கட்சிகள் போன்றவைகள் எடுத்துள்ள நிலைப்பாடானஅப்படியே
எதிர்ப்பது என்பதை விமர்சிக்கும் போது சிலவற்றை மட்டும் வை,ந
துக்கொண்டு திரிபுவாதம் எனமுடிவுக்கு வந்து விட முடியுமா என
கேள்வி கேட்டு நிறுத்துகின்றனர். இவ்வாறு கண்மூடித்தனமாக
ஆதரிப்பது, கண்மூடித்தனமாக எதிர்ப்பது என்ற இரு கடைகோடி
நிலைகளை விமர்சித்து விட்டு, இவர்கள் எந்த நிலைப்பாடும் எடுக்
காமல் மையவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதனால் தான் இவர்கள் உபதேசம் செய்யும் 'பகிரங்க விமர்ச
-னத்தில் ஈடுபடக்கூடாது' என்ற அறிவுரையை அல்பேனிய தொழி
லாளர் கட்சக்குப் பிரயோகிக்கவில்லை. என்வர் ஹோக்சாவை ஒடு
காலிஎன அதேகட்டுரையில்வர்ணிக்கின்றனர். அடுத்து அதே'மக்கள்
யுத்தம்' இதழிலேயே வினோத் மிஸ்ரா குழுவின் மத்திய கமிட்டிக்கு
அவர்களை விமர்சித்து ஒரு பகிரங்க கடிதம் எழுதியுள்ளனர். சிலவரி
களிலேயே அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வேறுபாடு
பளிச்சென தெரிந்து விடுவதற்குக் காரணம் அவர்களது மையவாத
நிலைப்பாடு தான்.

மேலும் சீனத்தலைமை எடுத்து வருகின்ற திரிபுவாத நடவடிக்
கைகள் பற்றி எவ்வித கருத்தையும் தெரிவிக்காமல் தெளிவான மு
வெடுத்தவர்கள் மீது எதிர்க் கேள்விகள் கேட்டே தங்களது சந்தர்ப்-
பவாதத்தை மூடி மறைத்துவிட முயன்றுள்ளனர். பிற மார்க்சிய—
லெனினியக் குழுக்களைச் சேர்ந்த தோழர்கள் சீனத்தலைமை திரிபு
வாதமாக மாறி விட்டதாக முடிவெடுக்கும்படி உதவி செய்த நிகழ்ச்-
சிகள் என்று ஐந்தை சுட்டிக்காட்டியுள்ளனர். அவை பின்வருமாறு:

1. மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை இன்றைய சீனத்தலைமை மாபெரும் பேரழிவு என சித்தரிப்பது.
2. மாசேதுங் சித்தனையை சர்வவியாபகமானது என கடந்தகாலத்தில் சொல்லி வந்ததைத் திருத்தி அதை சீனத்தின் பருண்மையான நிலைமைகளுக்கு மட்டும் பிரயோகிக்கப்பட்ட மார்க்சியம் எனச் சொல்வது.
3. லியு-க்கு கட்சி தலைமையில் அரசியல் மறுவாழ்வளித்தது.
4. பிரதான முரண்பாட்டைப் பற்றி நேரெதிரான முடி-வெடுப்பது.
5. உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பது; வர்க்கத் போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

முக்கியமான நிகழ்ச்சிகள் என்று குறிப்பிட்டுள்ளதிலேயே கீழ்க்கண்ட இரு முதன்மையான விஷயங்களை விட்டுள்ளனர். அதன் மூலம் லியு—தெங் கும்பலின் முகத்தினுடைய மிகவும் கோரமான பகுதியை மறைத்துள்ளனர்.

1. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கைவிட்டு விட்டது
2. சீனாவில் வர்க்க நிலைமைகள் மாறியுள்ளன; பகைமையான வர்க்கங்களே கிடையாது; கொந்தளிப்பான, நாடுதழுவிய, பெரும் அளவிலான வர்க்கப் போராட்டங்கள் இனியில்லை.

இந்த ஐந்து விஷயங்களை வைத்துக் கொண்டு மட்டும் சீனத் தலைமையை திரிபுவாதத் தலைமையென சொல்லி விட முடியுமா என்று மற்றவர்களுக்கு ஒரு கேள்வியை எழுப்பியுள்ளனர். ஆனால் இந்த கேள்விக்கு இவர்கள் எங்குமே நேரடியாக பதிலளிக்கவில்லை. மறைமுகமாக, இவைகளை வைத்து கொண்டு திரிபுவாதமாக மாறி விட்டது என்ற முடிவுக்கு வர முடியாது என்று மட்டுமே தெரிவித்துள்ளனர். அப்படியானால் திரிபுவாதமாக மாறி விட்டது எனத் தீர்மானிப்பதற்கு இவர்கள் என்ன அளவுகோலை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லவும் இல்லை.

அடுத்ததாக, இன்யை சீனத்தலைமை மாசேதுங் சிந்தனை என்பதற்கான விளக்கத்தை மாற்றி விட்டதாலேயே அதைத் திரிபுவாதத் தலைமையென சொல்லி விட முடியுமா என்ற வினாவினைத் தொடுத்துள்ளனர். ''இந்த விஷயம்பற்றி மாவோவின் அபிப்பிராயம் என்ன? இன்றைய காலக்கட்டத்தின் மார்க்சியமாக மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொள்வது அல்லது ஏற்றுக் கொள்வதில்லை என்பதை ஒருகட்சி திரிபுவாதக்கட்சியா இல்லையா எனத் தீர்மானிப்பதற்கான வரையறையாகக் கொண்டால், மாசேதுங் சிந்தனை என்பதை எப்போதும் ஏற்றுக் கொள்ளாத அல்பேனிய தொழிலாளர் கட்சி அண்மைக்காலம் வரையில் எப்படி புரட்சியின் பக்கம் (திரிபுவாதத்தை எதிர்க்கின்ற பக்கம்) இருக்க முடியும்? இந்தஅடிப்படையில் தலைவர்மாவோவோ அல்லது சீ.பொ.க.வோ அல்பேனிய தொழிலாளர் கட்சியைக் கீழாகப் பார்த்ததில்லை. இது சம்பந்தமான மாவோவின் இந்தக் கண்ணோட்டத்தை சீனா என்ற பெயரைக்கேட்டாலே எரிச்சலடைகிற நண்பர்கள் மறுக்க முடியுமா?'' (மக்கள் யுத்தம், 1981. மே, பக்-53) இதன் மூலம் மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொள்ளாதவர்களை கூட புரட்சியாளர்கள், உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகள் என ஏற்றுக்கொள்ளலாம் என்ற ஆணித்தரமான முடிவிற்கு ம.யு.கு. வந்துள்ளது தெளிவாக தெரிகிறது. 'புரட்சியாளர்களிடையே ஐக்கியம் பற்றிய ஓர் அணுகுமுறை' என்று ம.யு.கு. தான் எழுதிய இன்னொரு கட்டுரை



படிப்பகம்

www.padippakam.com

யில் புரட்சியாளர்கள் என்று அளப்பதற்கு மா-லெ-மா சிந்தனையை ஏற்றுக் கொண்டாலே போதும் என்றும் தெரிவித்துள்ளனர். மாசேதுங் சிந்தனையின் ஒளியில் கறாரான, தெளிந்த முடிவை எடுப்பதற்கு மாறாக, மையவாத நிலைப்பாடு எடுப்பதின் மூலம் லியு தெங்கும்பலின் கோர ரூபத்தை சுந்தரவடிவாகக் காட்ட முயலும் இவர்களின் சந்தர்ப்பவாத நிலைப்பாடு இப்படி நேருக்கு நேர் முரண்பாடான முடிவுகளை அவர்களையறியாமலேயே எடுக்கச் செய்து விட்டது.

மேலும், லியு-தெங் கும்பல் மாசேதுங் சிந்தனையின் விளக்கத்தை மறுக்கிறது என்று இவர்கள் சொல்வது மாபெருந்தவறாகும். ஏனென்றால் இது பாதி உண்மை தான். அதன் சாரத்தையே, ஜீவனையே மறுக்கிறது என்பது தான் முழு உண்மை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது. அதற்கான வடிவமும் வழிமுறையுமான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி என்ற மாசேதுங் சிந்தனையின் பங்களிப்பை மாபெரும் பேரழிவு என்று லியு-தெங் கும்பல் சித்தரிக்கிறது. மக்கள் யுத்தப்பாதை பின்தங்கிய, ஏற்ற தாழ்வாக வளர்ச்சியுற்ற நாடுகளுக்கான பொதுப்பாதை என்ற மாசேதுங் சிந்தனையின் பங்களிப்பை அது மறுக்கிறது. 1957 க்குப் பின் மாசேதுங் பல தவறுகளைச் செய்துள்ளார்; நிலப்பிரபுத்துவ அடக்குமுறையை கட்சிக்குள் வைத்திருந்தார்; தனது தனிமனித புகழை நிலநாட்ட முயன்றார் என்றெல்லாம் அவரது புகழ்மிக்க வரலாற்றுப் பாத்திரத்தின் மீது கறை பூசுகின்றது. இவ்வாறு லியு-தெங் கும்பல் மாசேதுங் சிந்தனையின் ஜீவநாடியையே நெறிக்கிறது; மறுக்கிறது. இதை அப்படியே மூடி மறைத்து ஏதோ விளக்கத்தை மட்டும் மாற்றுவதாக (மாசேதுங் சிந்தனை என்பது சீன நிலைமைகளுக்குப் பிரயோகிக்கப்பட்ட மார்க்சியம் என்று மாற்றுவதாக) ம.யு.கு. மழுப்புகிறது.

அதே கட்டுரையில் சொல்கிறார்கள்; ''பாட்டாளி வர்க்க சர்வாதிகார காலகட்டத்தில் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரு வழிமுறையாக கலாச்சாரப் புரட்சியை அங்கீகரிப்பது ஒரு விஷயம்; சீனத்தில் எவ்வாறு உண்மையில் அது நடத்தப்பட்டது என்பது பற்றி விமர்சனம்-சுயவிமர்சனம் நடத்துவது வேறொரு விஷயம். உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் முதல் விஷயத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டும். இரண்டாவது விஷயம் முக்கியமாக சீனக் கம்யூனிஸ்டுகள் கவலைப்பட வேண்டியதாகும்.''

(ஷி, பக். 54 )

இதைப் பற்றி லியு-தெங் கும்பல் என்ன சொல்கிறது?

நடந்து முடிந்த கலாச்சாரப் புரட்சி ஒரு மாபெரும் பேரழிவு என்று மட்டும் லியு-தெங் கும்பல் சொல்லவில்லை. அதாவது அது தவறாக நடத்தப்பட்டது என்று மட்டும் சொல்லவில்லை. அதை



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பித்ததே தவறு எனச்சொல்கிறது: 'இது முதலாவது கலாச்சாரப் புரட்சி தான; இப்படிப்பட்ட புரட்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கான வடிவமும் வழிமுறையும் இதுவே- என்ற மாசேதுங் சிந்தனையை லியு-தெங் கும்பல் மறுக்கிறது; தூக்கியெறிந்து விட்டது. ஆனால் அது அவ்வாறு செய்யவில்லை எனவும் கலாச்சாரப் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒரு வழிமுறையாக லியு—தெங் கும்பல் ஏற்றுக்கொள்கிறது எனவும் நடந்து முடிந்த கலாச்சாரப் புரட்சி தான் தவறாக நடத்தப்பட்டு விட்டது எனவும் யு-தெங் கும்பல் சொல்வதாக ம.யு.கு.வினர் இட்டு கட்டுகின்றனர்.

இன்றைய சீனத்தலைமை எடுத்து வருகிற நடவடிக்கைகளுக்குக் காரணம் நவீன திரிபுவாத சித்தாந்தம் அல்லவென்று ம.யு.கு. சொல்கிறது. மாறாக, அது பிரச்சினைகளை சமாளிக்க முடியாமல் 'உள்நெருக்கடிகளுக்கு பலியாகிவிட்டது' என்று லியு-தெங் கும்பலின் துரோகத்தனத்திற்கு அப்பாவித்தனத்தையும் ஆற்றலின்மையையும் இயலாமையையும் சாக்கு காட்டுகின்றனர். அறியாமலோ அல்லது இயலாமலோ அல்ல. மாறாக, மாசேதுங்கின் புகழ்மிக்க வரலாற்றுப் பாத்திரத்தையும் மாசேதுங் சிந்தனையையும் சீரழிக்கும் நோக்கத்துடன் திட்டமிட்டு, உணர்வுபூர்வமாகத் தான் லியு-தெங் கும்பல் செயல்பட்டு வருகிறது. ஏனென்றால் இந்த கும்பலின் சித்தாந்த குருவான தெங் ஒரு முதலாளித்துவப்பாதையாளர்என்று இரண்டுதடவை இனங்காணப்பட்டு இப்பொழுது அரசியல் மறுவாழ்வு பெற்றிருப்பவர். அவருக்கு எதிரான சித்தாந்தப் போராட்டம் கட்சி முழுவதும் கடுமையாக நடத்திருக்கிறது. இத்தனைக்கும் பின் அவர் தலைமையில் உள்ள கும்பல் சரியான தீர்ப்புகளை மாற்றி எழுதி வருவது தெளிவான, திட்டவட்டமான மார்க்சிய விரோத கண்ணோட்டத்துடன்தான் என்பதில் ஐயமேயில்லை, இப்படிப்பட்ட கும்பலின் சுயரூபத்தை அம்பலப்படுத்தி எதிர்ப்பவர்களைப் பார்த்து நிதானமிழந்து தெருவில் நின்று கத்துவதாக ம.யு.கு. சாடுகின்றது. உண்மையில் நிதானமில்லாமல் தத்துவார்த்த தடுமாற்றத்தில் இருப்பவர்களும் சந்தர்ப்பவாதத்தின் இடுப்பில் உட்கார்ந்து கொண்டு சமரசத்தை போதித்துக் கொண்டிருப்பவர்களும் ம.யு.கு.வினர் தான்.

''கடந்த ஒரு பத்தாண்டு காலமாக நம்மோடு யார் வேறுபட்டாலும் அவர்களையெல்லாம் திரிபுவாதிகள் என்று சபித்து வந்தோம். வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பதை ஒரே பாதையாகக் கொண்டிருந்த காலத்தில் இதனுடன் ஒத்துப் போகாதவர்களை துரோகிகள் என முத்திரை குத்தினோம்'' (ஷி,பக்.52) என்று சுட்டிக்காட்டி லியு -தெங் கும்பலுக்கு வக்காலாத்து வாங்கியிருக்கிறார்கள். எவ்வித அடிப்படையும் வரையறையும் இல்லாமல் சில குழுக்களையும் தோழர்



படிப்பகம்

www.padippakam.com

களையும் திரிபுவாதிகள், துரோகிகள் என ஏசி வந்த பாரம்பரியத்திற்கு மிகவும் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் ம.யு.கு. வினர் தான்; இன்று எந்த வரையறையும் அடிப்படையும் இல்லாமல் எல்லோரையும் புரட்சியாளர்களாக ஏற்றுக் கொள்ளுங்கள் என வேண்டுகோள் விடுப்பதும் ம.யு.கு.வினர் தான். மார்க்சியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் இடையில் தெளிவான எல்லைக்கோட்டை வரையறுக்க அஞ்சி, எந்தப் பக்கம் சாய்ந்தாலும் வம்பு என 'மத்திய நிலை' எடுப்போம் என்பதே இவர்களின் வாடிக்கையாக உள்ளது, இப்படி மதில் மேல் நின்று கொண்டு மதிலுக்கு இருபுறமும் உள்ளவர்களை சாடுவதின் மூலமே தங்களைச் சரியானவர்கள் என்று காட்ட முயல்வது மார்க்சிய-லெனினிய அணுகுமுறையல்ல. தெளிவான திசைவழியில் அணிகளை நடத்திச் செல்லாமல் அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடும் இந்த அணுகுமுறை. அதன் மூலம புரட்சிக்கு பெருந்தீங்கு விளையும் என்பதை இவர்கள் உணர வேண்டும். 'புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகரமான கட்சி கிடையாது' என்ற லெனினின் கூற்று இவர்களின் சிந்தனையில் தைக்க வேண்டும்; தத்துவார்த்த நிலைப்பாடு எடுக்க தைரியம் பிறக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். 'தெருவில் நின்று' இந்த வேண்டுகோளை விட்டதற்காக அவர்கள் எம்மை மன்னிப்பார்களாக!

சீனப் பொதுவுடைமைக் கட்சி எதைச் செய்தாலும் அதற்கிணையாக இங்கே ஒரு நடவடிக்கையைத் தொடங்குவது அல்லது சீ. பொ. க.வின் எல்லா முடிவுகளையும் அப்படியேகுருட்டுத்தனமாக உயர்த்திப் பிடித்து இந்தியப் புரட்சியின் நலன்கள் கடமைகளை விட அதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பது வி.மி. குழுவினர் மற்றும் 'தவறே செய்யாத தனிப்பெருந்தலைவர்' என அவர்களால் போற்றப்படும் சாருவின் வழக்கம். 'சீனத்தின் தலைவரே நமது தலைவர்' என்ற முழக்கத்தை முன் வைத்தது, 'மக்கள் யுத்தத்தின் வெற்றி நீடூழி வாழ்க!' என்றகட்டுரையில் லின் பியௌ கூறியிருந்த வழிமுறைகளை இந்தியாவின் நிலைமைகளுக்கு அப்படியே பொருந்தக் கூடியதாக அமுல்படுத்த வலியுறுத்தியது, மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் ஒரு பகுதி தான் இந்தியப் புரட்சி என்று சொன்னது, திரிபுவாதம் தான் பிரதான அபாயம் என மாவோ சொன்னவுடன் தான் நாம் இங்கே திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தை நடத்தி இ.பொ.க. (மா-லெ) யைத் தொடங்கினோம் என்று கூறியது ஆகியவைகள் சீனத்தைப் பார்த்து எந்திர ரீதியில் காப்பியடித்த சாருவின் செயல்கள். சாருவின் நேரடி வாரிசு தாங்கள் மட்டுமே என உரிமை கொண்டாடி அதன் மூலம் தமது செல்வாக்கை நிலைநாட்ட முயலும் வினோத் மிஸ்ரா குழுவினர் சாருவின் பாதையை சீனத்தைக் காப்பி அடிப்பதிலும் அப்படியே பின்பற்றி வருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

நால்வர் கும்பலுக்கு எதிரான போராட்டதை கபடமாக பயன் படுத்தி தனது திரிபுவாதத் தலைமையை நிறுவியுள்ள லியு—தெங் கும்பல் 'சிந்தனையை விமோச்சனம் செய்தல' என்ற ஓர் இயக்கத்-தின் மூலம் தீய சிந்தனைகளிலிருந்து விடுபட்டதாகக் கூறியுள்ளது. தீய சிந்தனை எனக் குறிப்பிடுவது 'வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவது' 'மாவோவின் சொல்லப்படும் தனி மனித ஆதிக்கம்' போன்றவைகளைத் தான். லியு—தெங் கும்பலை காப்பி அடித்த வி.மி. குழுவினர் மகாதேவ் முகர்ஜி கும்பலை நால்வர் கும்பலோடு ஒப்பிட்டு அதன் தீய சிந்தனைகளிலிருந்து விடுபட 'சிந்தனையை விமோச்சனம் செய்யும்' இயக்கமொன்றை நடத்தியதாகவும் அதன் பின்னரே தாங்கள் புதிய நடைமுறையில் செல்வதாகவும் கூறி வருகின்றனர்.

அடுத்து, லியு—தெங் கும்பலின் நடவடிக்கைகள், அதன் திரிபுவா-தக் கோட்பாடுகள் அனைத்தையும் அப்படியே உயர்த்திப் பிடிக்கும் வி.மி. குழுவினர் அவைகளைப் பற்றி சரியா, தவறா என விவாதிப்பதே கூடாது என்று எச்சரிக்கின்றனர். யூரோ கம்யூனிஸ்ட் கட்சிகள், யுகோஸ்லேவியா, ருமேனிய கட்சிகளுடன் சீ.பொ.க. கவ்வாதா உறவு வைத்துக் கொள்ள முயற்சிப்பதை நியாயப்படுத்த வரும் வி.மி. குழுவினர் சொல்கின்றனர்: ''இந்த அல்லது அந்தக் கொள்-கையின் மீதோ அல்லது போர்த்தந்திரங்கள் மீதோ வர்ணனை செய்வதும் அவற்றை வாதங்களுக்குரிய பிரச்சினைகளாக ஆக்குவதும் மிகவும் அபாயகரமான எதிரிக்கு எதிரான சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு அனுகூலமாக இருக்காது'' (லிபரேஷன், தமிழ் பதிப்பு, வால்யூம் 13, இதழ் 1, அக். 1980, பக், 22) சர்வதேசியப் பாட்டாளி வர்க்க ஒற்றுமை என்பது உண்மையான மார்க்சிய—லெனினியவாதிகளின் ஒற்றுமை மட்டுமே. அது சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் கருத்தொற்றுமையின் அடிப்படையில் ஏற்-படுத்த வேண்டியதாகும். ஆனால், 'இந்த அல்லது அந்தக் கொள் கையின் மீது விவாதிப்பது பாட்டாளி வர்க்க ஒற்றுமைக்கு அனுகூல மாக இருக்காது' என்று சொல்வதன் மூலம் சித்தாந்தப் போராட்-டத்தையே மறுக்கின்றனர். இதனால் இவர்கள் குறிப்பிடும் பாட்-டாளி வர்க்க ஒற்றுமையில் திரிபுவாதிகளும் அடங்குவர். சீனத் தலைமையை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்க வேண்டும் என்-பதை ஆதாரமாகக் கொண்டதினால் சித்தாந்தப் போராட்டம் நடத்-தக் கூடாது; திரிபுவாதிகளும்பாட்டாளி வர்க்க இயக்கத்தின் சக்திக-ளாவர் போன்ற அப்பட்டமானசமரசநிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

அடுத்ததாக, சீனத்தில் நடந்து கொண்டிருக்கும் உள் மாற்-றங்களைப் பற்றி குறிப்பிடும்பொழுது சொல்கிறார்கள்: ''சோசலிசக் கட்டுமானப் பிரச்சினைகள் பற்றி நாம் முழுமையாகப் புரிந்து கொள்



படிப்பகம்

www.padippakam.com

ளவில்லை; புரிந்து கொள்ளவும் முடியாது. இருந்தபோதிலும், சீனத்தின் வளர்ச்சிகளை சில எந்திர ரீதியான முறையில் அல்லாமல் திறந்த மனதுடனும், சீனத்தைப்பற்றிய தமது சொந்த நேரடியான அல்லது மறைமுகமானபுரிதல்களுடன் பார்த்தோமானால், சீனத்தின் இன்றைய நடைமுறைகள் அனைத்தும் சோசலிசத்தை வலுப்படுத்துவதையே (குறைத்து மதிப்பிடுவதை அல்ல) நோக்கமாகக் கொண்டுள்ளதென்பதுடன் நாம் முழுமையாக உடன்படுகிறோம். எப்படியிருப்பினும் சீனாவில் உள்ள விஷயங்கள் பற்றி குறிப்பான சம்பவங்கள் பற்றியோ அல்லது கொள்கைகள் பற்றியோ நமக்குத் தெளிவில்லை. மேலும் இங்கு, இந்தியாவில் உட்கார்ந்து கொண்டு புதிய ஜனநாயகப் புரட்சியில் ஈடுபட்டிருக்கும் நமக்கு சீனாவில் நடக்கும் சம்பவங்கள் பற்றி பூரணமாக புரிந்து கொள்ள முடியாதென்பதுடன் மேலும் அங்குள்ள கொள்கைகளில் பலவும் இன்னும் சோதனைக் கட்டத்திலேயே இருப்பதாலும் இந்தியாவில் அந்த விஷயங்கள் பற்றிக் கூறுவதும் அல்லது வெட்டித்தனமான அறிவுஜீவித்தன வாதங்களில் ஈடுபடுவதும் சரியாக இருக்காது என்றும நாம் எண்ணுகிறோம். இத்தகைய வாதங்கள் ஒருபோதும் ஸ்தூலமான முடிவுகளுக்கு இட்டுச் செல்லாது ஏனென்றால், பிரதானமாக, இங்கு, இந்தியாவில் அவற்றைப் பற்றிய மேலோட்டமான வாதங்களை மட்டுமே நடத்தமுடியும் இத்தகைய வாதங்கள் நமது சக்தியை விணாக்கவும், இந்தியப்புரட்சி பறறிய நமது கவனத்தை திசை திருப்பவும் மட்டுமே உதவும். நமக்குள் உள்ள குழப்பங்களை எதிரி அவனுக்கு சாதகமாக்கிக் கொள்வதை அனுமதிக்காமல் இருப்பதற்கும், உலகப் புரட்சிகரப் போராட்டங்கள் மற்றும் இந்தியப் புரட்சியின் நலன்களுக்காக சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதும் சோசலிச சீனத்தை ஆதரிப்பதும் மட்டுமே நமக்குச் சரியானதாக இருக்கும்'' (டி, பக். 23)

ஆக, 'சோசலிசக் கட்டுமானப் பிரச்சினைகளை நாபுரிந்தும் கொள்ள முடியாது; ஆனால் சீனாவில் எந்த கொள்கை நடைமுறை மாற்றம் நடந்தாலும் சோசலிசமாகத்தான் இருக்கும்; அதன் மீதான விவாதங்கள் வெட்டித்தனமான, அறிவுஜீவித்தனமான வாதங்கள்; ஆகவே சோசலிச சீனத்தை ஆதரிப்பது மட்டுமே சரியானது' என்று வி.மி.குழு சொல்கிறது. சிந்தனைக்கு சீல்வைத்து விட்டு குருட்டுத்தனமாக சீனத்தலைமையை உயர்த்திப் பிடிக்க வேண்டுமென்று எவ்வளவு பட்டவர்த்தனமாக சொல்கிறது! மேலும் 'இங்கு இந்தியாவில் உட்கார்ந்து கொண்டு சீனத்தில் நடப்பவைகளை பூரணமாக புரிந்து கொள்ள முடியாதென்பதுடன் அங்குள்ள கொள்கைகள் பலவும் சோதனைக் கட்டத்தில் இருப்பதாலும்' அவைகளைப் பற்றிய விவாதங்களில் ஈடுபடுவது சக்தியை விரயமாக்குவது என்று கூறி சீனத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டுமென்று வேண்டுகிறது-ரஷியாவில் நடந்தவைகளை இந்தியாவில் உட்கார்ந்து கொண்டு தானே விவாதித்து



படிப்பகம்

www.padippakam.com

அதை சமூக ஏகாதிபத்தியம் என்ற முடிவுக்கு வந்தார்கள். அல்லது ரஷியாவிற்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் தீர விசாரித்து, குருஷ்சேவுடன் விவாதித்து முடிவெடுத்தார்களா? அந்த மட்டும் கொள்கைகள் சோதனைக் கட்டத்தில் இல்லாமல் போய் விட்டதா என்ன? சீனத்தலைமையை -அது எப்படி மாறி இருந்தாலும்-உயர்த்தி பிடிக்க வேண்டுமென்பது தான் இவர்களின் நோக்கமே தவிர கொள்கையோ, சித்தாந்தமோ இவர்களுக்கு வழிகாட்டவில்லை. மேலும் சொல்கிறார்கள் :

''கலாச்சாரப் புரட்சியைப் பொருத்தவரை அது திரிபுவாதத்தைத் தடுப்பதையும் எதிர்த்துப் போராடுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தது; ஆனால்அதுபல பிரச்சினைகளுக்குதீர்வுகாணாமல் விட்டுச் சென்றதுடன் பல புதிய பிரச்சினைகளையும் உருவாக்கியது என்பதை மறுக்க முடியாது. சோசலிசத்தைக் கட்டும் வரலாறு தொடங்கி 60ஆண்டுகள் தான் ஆகிறது. மேலும் ஒரு குறிப்பான கட்டத்தில், குறிப்பான கருத்துகள் ஆதிக்கம் வகித்தன என்பதையும் அதுபோலவே வேறொரு கட்டத்தில் வேறொரு வகையான கருத்துகள் ஆதிக்கம் வகித்தன என்பதையும் நாம் பார்க்க முடியும். குருஷ்சேவ் போன்ற நபர்களின் சதிச் செயல்களை ஒதுக்கித் தள்ளி விட்டு, மார்க்சிய—லெனினிய வாதிகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் காணும் சாத்தியப்பாட்டை வரையறுப்பதோ மேலும் சோதனைகளை அனுமதிப்பதின் சந்தர்ப்பங்களை வரையறுப்பதோ முடியாது'' (டி, பக்.22)

அதாவது, 'மாவோ இருந்தபோது, கலாச்சாரப் புரட்சி சமயத்தில் ஒரு வகையான கருத்து ஆதிக்கம் செலுத்தியது; இன்று ஒரு வகையான கருத்து ஆதிக்கம் வகிக்கிறது; சோசலிசத்தைக் கட்டுகின்ற அனுபவம் குறைவு; எனவே எது சரியானது, யார் சரியானவர் என்பதெல்லாம் தீர்மானிக்க முடியாது' என்பது தான் இதன் சாரம். இந்த அளவுகோலை இவர்கள் ரஷியாவுக்கு பிரயோகித்தால் அதையும் சமூக ஏகாதிபத்தியமா? சோசலிச நாடா? என்று தீர்மானிக்க முடியாது என்று தானே வரும். ஆனால் சமூக ஏகாதிபத்திய நாடு என்று எவ்வாறு தீர்மானித்தார்கள்? இவ்வாறு தீர்மானிக்க முடியாது என்று சொல்லி விட்டு ஒரு நாலு வரி தள்ளி, ''சீனத்தின் இன்றைய நடைமுறைகள் அனைத்தும் சோசலிசத்தை வலுப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளதென்பதுடன் நாம் முழுமையாக உடன்படுகிறோம்'' என ஒரு தீர்மானகரமான முடிவையும் தெரிவித்து உள்ளார்கள். மாசேதுங்கின் வரலாற்றுப் புகழ்மிக்க பாத்திரத்தையும் மாசேதுங் சிந்தனையையும் பாதுகாப்பதை விட அதை பலிகொடுத்தாவது லியு-தெங் கும்பலைப் பாதுகாப்பது தான் வி.மி குழுவினரின் நோக்கமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து.உலகறிந்த திரிபுவாத, புரட்டல் கட்சிகளை இன்றைய
சீனத்தலைமை புரட்சிகர கட்சி என்கிற அடிப்படையில் சகோதரத்
துவ உறவுகொள்ள முயல்வதை சரி என்று நியாயப்படுத் தவரும்
வி.மி. குழுவினர் சொல்கின்றனர். ''இரண்டாவதாக, இன்று உல
கில் சோசலிச முகாம் என்று எதுவுமில்லை; சோவியத், சீனக் கட்சி
களுக்கிடையிலான கம்யூனிஸ்ட் கட்சிகள் இருக்கின்றன என்ற
கண்ணோட்டத்திலிருந்து தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கி
யுள்ளது. சீனக் கட்சியுடன் முன்பு நெருக்கமான தொடர்பு கொண்
டிருந்த சிலகட்சிகள் அதாவது அல்பேனிய கட்சி, வியட்நாம் கட்சி
போன்றவைகள் சோவியத்திற்கு நெருக்கமாக சென்று விட்ட அதே
சமயத்தில் சோவியத்திற்கெதிராக பலகட்சிகளிலிருந்த முரண்பாடு
கள் தீவிரமடைந்து கொண்டிருக்கின்றன. மேலும் திரிபுவாதத்தை
மிகச் சாதாரணமாக மதிப்பிட்டதும் சோசலிசம் எல்லா நாடுகளிலும்
அவர்களது ஸ்தூலமான நிலைமைகளை அலட்சியப்படுத்தி சோசலி
சத்தைக் குறிக்கும் வடிவங்களாக எண்ணியதும் தவறானவைகளா
கும். இந்தக் கண்ணோட்டத்துடன் தான் வடகொரியா, ருமேனியா,
யுகோ, இத்தாலி, ஸ்பானிஷ் போன்ற மற்றும் பல கட்சிகளுடனும்
தன்னுடைய உறவை வளர்த்துக்கொள்ள சீனக் கம்யூனிஸ்ட் கட்சி
நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது'' (டை, பக். 21-22) மிகவும்
அபாயகரமான எதிரிக்கு எதிராக எல்லா எதிர்ப்பு சக்திகளையும்-பிற்
போக்குதிரிபுவாத சக்திகள் உள்ளிட்டு-இணைக்க வேண்டுமென்பது
சரியே. எனினும், அவ்வாறு நாம் இணைக்க முற்பட்டாலே பிற்-
போக்குசக்திகள் தன்மையில் முற்போக்காகிவிடுமா? பாட்டாளிவர்க்க
சர்வாதிகாரம் தேவையில்லை என்று மார்க்சியத்தை மிக பகிரங்கமா
கவே நிராகரித்த யூரோ கம்யூனிஸ்ட் கட்சிகள் ரஷியாவை எதிர்க்
கின்றன(இவர்கள் சொல்கிற அளவுகோலாகிய மூன்றுலகக் கோட்
பாட்டை இக்கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை; உலக யுத்தத்திற்கு
பிரதான அபாயம் என்ற அடிப்படையில் ரஷியாவை எதிர்க்க
வில்லை) என்ற ஒரே காரணத்திற்காக அவை மார்க்சிய-லெனி
னியக் கட்சிகளாக மாறி விடுமோ?

மேலும் ரஷியக் கட்சியின் பக்கமோ, சீனக் கட்சியின் பக்கமோ
சேராமல் இருந்த, இருக்கின்ற கட்சிகள் சித்தாந்தப் போராட்-
டத்தில் தெளிவான உறுதியான நிலைப்பாடு எடுக்காமல் சந்தர்ப்
பவாதமாக 'மத்திய நிலை' எடுத்திருப்பதனால் தான்; வேறு எக்-
காரணமும் கிடையாது. எனவே, 'சோவியத், சீனக் கட்சிகளுக்கிடை
யிலான கம்யூனிஸ்டு கட்சிகள் இருக்கின்றன' என்பதை புது
உறவுக்கு காரணமாகக் காட்டுவது சந்தர்ப்பவாதத்துடன் உறவு
கொள்வதற்கான சப்பைக்கட்டு தான்.

கடந்த காலத்தில், பருண்மையான நிலைமைகளைக்
கணக்கிலெடுக்காமல் எல்லா நாடுகளிலும் ஒரே வடிவிலான சோச



படிப்பகம்

www.padippakam.com

லிசத்தை கொண்டு வருவது தான் சரி என எண்ணினோம்; திரிபு-வாதத்தைப் பற்றி மிகவும் எளிமையாக்கி எடைபோட்டோம். இவைகள் தவறு; இப்படிப்பட்ட அடிப்படையில் இன்று அந்த கட்சிகளுடன் உறவை புதுப்பித்துக் கொள்வது சரி என்று வி.மி. குழுவினர் வாதிடுகின்றனர். சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் குறித்த கோட்பாட்டுமுடிவுகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை. அவைகளை அமுல்படுத்துவது பருண்மையான நிலைமைக்கேற்ப இருக்கும். "மலே குறிப்பிட்ட கட்சிகள் இந்த அனைத்தும் தழுவிய கோட்பாடு-களையே கைவிட்டு விட்டன; மறுக்கின்றன. மேலும் மார்க்சியத்திற்கும் திரிபுவாதத்திற்கும் இடையில் தெளிவான எல்லைக் கோட்டை வரையறுத்து அதனடிப்படையில் தான் அவைகளைத் திரிபுவாத கட்-சிகள் என கடந்தகாலத்தில் முடிவெடுத்தோம். அப்படி இல்லை என்று வி.மி. குழு சொல்கிறது. அப்படியானால் குருஷ்சேவின் திரிபுவாதத்தையொட்டி அதற்கெதிராக எழுந்த சிந்தாந்தப் போராட்டத்தில் திரிபுவாதத்தைப் பற்றி மிக எளிமையான வடிவில் புரிந்து அதன-டிப்படையில் தீர்மானித்து விட்டோம் — நாம் மட்டுமல்ல, மாசே-துங்கும் அவர் தலைமையிலான சீ. பொ. க.வும் உட்பட— என்று பொருள்படுகிறது. அதேபோல சோசலிச காலகட்டத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பொது கோட்பாடுகளோ, கொள்கைகளோ இல்லை என்று முடிவெடுத்தாகவும் அர்த்தம். இவ்வாறு வி.மி. குழு சொல்வதின் மூலம் வரலாற்றை மட்டுமல்ல, சர்வதேசிய நவீனதிரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தில் எடுத்த சரியான, திட்டவட்-டமான மா.-லெ.-மா. சிந்தனை அடிப்படையிலான முடிவுகளையும் திரித்துப் புரட்டுகிறது. லியு-தெங் கும்பலும் இதைத்தான் செய்திருக்கிறது. (இவ்வெளியீட்டின் பக். 118-119-களைப் பார்க்கவும்)

மேலும் அவர்கள் சொல்கிறார்கள்: "இருப்பினும், உலகந்-தழுவிய ரீதியில் சமூக ஏகாதிபத்தியமானது பிரதானமான, உடனடி இலக்காக இருக்கையில், இரண்டு வல்லரசுகளையுமே எதிர்ப்பது பொதுவான திசைவழியாக இருக்கிறது. இதன் காரணமாகத்தான் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியானது, அமெரிக்க ஏகாதிபத்தியத்தை பிரதான எதிரியாக எதிர்த்துப் போராடுகின்ற, ஆனால் அதே சமயத்தில் சோவியத்தின் சில நடவடிக்கைகளைக் கூட விமர்சனம் செய்து எதிர்க்கின்ற (பல விஷயங்களில் இது அதிகரித்து வருகிறது) அனைத்துக் கட்சிகளுடனும் அரசாங்கங்களுடனும் (உதாரணமாக வடகொரியா, ருமேனியா, இத்தாலி, ஸ்பெயின் போன்றவை) கூட தமது உறவுகளை வளர்த்துக் கொள்கிறது.........

"இவையனைத்தும் மேலாதிக்க எதிர்ப்பு உலக முன்னணியை கட்டுவது தற்போதைய கட்டத்தில் சர்வதேச கம்யூனிச இயக்-கத்தின் பொது வழிக்கான வழிகாட்டும் கோட்பாடாக எப்படி இருக்கிறது என்பதையும், எந்தக் கம்யூனிஸ்ட் கட்சியும் எந்த அளவிற்கு



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கோட்பாட்டை அமுலாக்குகிறதோ, அந்த அளவிற்கு சர்வ-தேச கம்யூனிச இயக்கத்தில் ஒரு சக்தியாக அது எப்படி ஆகின்றது என்பதையும் காட்டுகின்றன. எனவே, ஒரு புறம் திரிபுவாதத்-திற்கும் மார்க்சியத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை மறுக்காமலிருக்கையில், சர்வதேச கம்யூனிச இயக்கமானது, ஒரு பரந்த அர்த்தத்தில் இத்தகைய அனைத்துக் கட்சிகளுடைய நடவடிக்கைகளின் தொகுப்பாகக் கருதப்பட வேண்டும். இது தான் நாம் கூற வரும் முதல் விசயமாகும்.'' (லிபரேஷன், தமிழ்பதிப்பு, மே,1981, இதழ்1, பக். 74-75)

மேற்குறிப்பிட்ட மேற்கோளில் சர்வதேச கம்யூனிச இயக்கம் பற்றி இவர்களது வரையறையைக் கொடுத்திருக்கிறார்கள்: 'எந்த அளவிற்கு ஒரு கட்சி மூன்றுலகக் கோட்பாட்டை அமுலாக்குகிறதோ அந்த அளவிற்கு அது சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஒரு சக்தி-யாகும். இந்த வகையில் திரிபுவாத கட்சிகள் கூட சர்வதேசிய கம்யூனிச இயக்கத்தின் ஓர் அங்கமாகும்' உதாரணமாக ஒரு கட்சி 100·/. அமுல்படுத்தினால் அது சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் 100·/. அங்கமாகிறது. வேறொன்று 40·/. அமுல்படுத்தினால் அது 40 /. சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அங்கமாகிறது. இவ்வாறு ஒரு சதவிகிதம் அமுல்படுத்துகிற கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து 100·/. அமுல்படுத்துகிற கம்யூனிஸ்ட் கட்சி வரை பல்வேறு அளவுகளில் அமுல்படுத்துகிற பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளுடைய (அந்தக் கட்சிகள் மார்க்சிய—லெனினிய அடிப்படை நிலைப்பாடுகளை ஏற்றுக் கொண்டு அவைகளை நடைமுறையில் நாணயமாக அமுல் படுத்துகின்றனவா என்பதைப் பற்றி 0·0001·/.கூட கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது) நடவடிக்கைகளின் தொகுப்பு தான் சர்வதேச கம்யூனிச இயக்கமென்று வி.மி.குழு சொல்கிறது. ஆனால் சர்வதேச கம்யூனிச இயக்கமென்பது உலகிலுள்ள உண்மையான மார்க்சிய—லெனினியக் கட்சிகள் மற்றும் அவைகளின் நடவடிக்கைகளின் தொகுப்பாகத் தான் பார்க்க வேண்டும். மாறாக, திரிபுவாதக் கட்சிகளையும் உள்ளடக்கிய தொகுப்பாக யாராவது கருதினால் அவர்கள் சதுப்புக் குழிக்குள் இறங்க தயாராகி விட்டார்கள் என்று அர்த்தம்.

மேற்கூறிய வரையறுப்பின் அடிப்படையில் தான் வி.மி. குழுவினர் சீ.பொ.க. பச்சை திரிபுவாதக் கட்சிகளுடன் சகோதர உறவு வைத்துக் கொள்வதை சரி என்று சொல்கின்றனர். ஆனால் இவர்களா[illegible] சொல்லப்படும் கட்சிகள் 1)மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொள்ளாதவை; வன்மையாக எதிர்ப்பவை. 2) மூன்றுலகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாதவை 3)பிரதான எதிரியாக அவை[illegible]து அமெரிக்காவை; ரஷியாவையல்ல;



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு ஒரு பக்கம் மூன்றுலகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்
ளாவிட்டாலும ஒரு கட்சியை கம்யூனிஸ்ட் கட்சியென ஏற்று உறவு
கொள்ளலாம் எனச் சொல்கிறார்கள். இன்னொரு பக்கம் மூன்று-
லகக் கோட்பாட்டை எந்த அளவிற்கு ஒரு கட்சி அமுல்படுத்துகி
றதோ அந்த அளவிற்கு அது சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அங்
கமாகிறது என்றும் சொல்கிறார்கள். அதே சமயத்தில் இந்தக்
கட்சிகள் 'ரஷியாவின் சில நடவடிக்கைகளைக் கூட விமர்சனம்
செய்து எதிர்க்கின்றன' என்று வி. மி.குழு சொல்கிறது. எனவே,
இந்த 'தகுதியை' மட்டும் கொண்ட கட்சிகள் எல்லாம் வி. மி.
குழுவின் கண்ணோட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி
களாகி விடுகின்றன. லியு—தெங் கும்பலை உயர்த்திப் பிடிக்க
எவ்வளவு தாழ்ந்த நிலைக்கு அவர்கள் செல்ல வேண்டியதாகி
விட்டது!

மேலும் அவர்கள் சொல்கிறார்கள்: "வறட்டு மார்க்சிய வாதி-
களை அதாவது மார்க்சிய விரோதிகளைப் பொருத்தவரையில் அதில்
(கம்யூனிச இயக்கத்தில்-மா. அ.க) வெளிப்படும் சிக்கல்களும்
பலதரப்பட்ட தன்மைகளும், முரண்பாடுகளும் தான்
குழப்பங்களுக்கும் சந்தேகங்களுக்குமான
தோற்றுவாயாகும். ஆனால், நம்மைப் பொருத்தவரை இதில் தான்
அதன் மாபெரும் பலமும் செழுமையும் அடங்கியிருக்கிறது. மற்றெல்
-லாவற்றையும் போலவே, சோசலிசத்தைக் கட்டுவது என்பதையும்
உள்ளடக்கிய சர்வதேச கம்யூனிச இயக்கமும் கூட ஒரு புற நிலை
இயக்கப் போக்காகும். அதில் முரண்பாடுகள் இருப்பதால் தான் அது
முன்னேற்றமடைகிறது; அதுதான் நீண்ட வளர்ச்சியின் போக்கிலே
பல தலைமுறைகளில் தீர்க்கப்பட வேண்டிய நடைமுறை மற்றும் தத்
துவ பிரச்சினைகளின் ஒரு முடிவற்ற வரிசையை எழுப்பப்போவது நிச்
சயம். ஆனால், உலகத்தில் கம்யூனிஸ்டுகளாகிய நாம், முன்கூட்டியே
வகுக்கப்பட்ட சூத்திரங்களையோ அல்லது அகநிலை விருப்பங்க
ளையோ நமக்கு வழிகாட்டியாகக் கொள்ளாமல் எதார்த்த விவரங்களி
லிருந்து உண்மையைக் கண்டறிவதிலும், சர்வதேச கம்யூனிச இயக்
கத்தினுடைய புறநிலை வளர்ச்சியின் விதிகளை கிரகித்துக் கொள்வ
திலும், தத்துவத்தை நடைமுறையுடன் இணைப்பதிலும் சிறந்து
விளங்குவோமேயானால், நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்
கொள்வதிலும், தற்போதைய கட்டத்தில் மூன்றுலக தத்துவத்தின்
பொதுவான வழிகாட்டுதலின் கீழ் ஸ்தூலமான தேசிய நிலைமைக
ளின் அடிப்படையில் சோசலிசத்தை அடைவதற்கான ஸ்தூலமான
வழிகளைத் தேடுவதிலும் சிறந்து விளங்குவோமேயானால் நம்மி
டமிருந்து எதிர்பார்க்கப்படும் தலைமையின் பங்கை நம்மால் நிச்சயம்
வகிக்க முடியும். (ஷை, பக். 78)

சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் வேறுபாடுகள், முரண்பாடு



படிப்பகம்

www.padippakam.com

கள் நிச்சயம் இருக்கும்; ஆனால் அடிப்படை விஷயங்களில் அல்ல. மாசேதுங் சிந்தனையை ஏற்றுக் கொள்வதா இல்லையா, அமைதி வழி மாற்றமா, பலாத்கார மாற்றமா போன்ற அடிப்படை விஷயங்களில் இருவேறு நிலைப்பாடுகள் எழுந்தால் ஒரே இயக்கமாக-கம்யூனிச இயக்கமாக-இருக்க முடியாது. மார்க்சிய-லெனினியத்தை அடிப்படை விஷயங்களில் மறுக்கின்றவர்களை உதிர்த்து விட்டு சர்வதேச கம்யூனிச இயக்கம் தன்னை பரிசுத்தம் செய்து கொள்வதோடு பலமும் பெறுகிறது. அதே சமயத்தில் அடிப்படை விஷயங்கள் அல்லாத இரண்டாம் பட்ச விஷயங்களில் கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் இருந்தால் பரஸ்பரம் கருத்துப்பரிமாற்றம், சமத்துவ அடிப்படையில் சித்தாந்தப் போராட்டம், விமர்சனம்-சுயவிமர்சனம் ஆகியவைகள் மூலம் தீர்க்கப்படுகிறது. அடிப்படையான விஷயங்களில் மாறுபட்ட கருத்து கொள்பவர்கள் மார்க்சியத்தை விட்டு ஓடிய ஓடுகாலிகளாக, துரோகிகளாக கம்யூனிச இயக்கம் கணிக்கிறது. அதே சமயத்தில் இரண்டாம்பட்ச விஷயங்களில் கருத்து வேறுபாடுள்ளவர்கள் பரஸ்பரம் தோழர்களாகிறார்கள். இந்த அடிப்படையில்தான் காவுத்ஸ்கி தலைமை தாங்க இரண்டாவது அகிலத்தின் தலைமை ஓடுகாலிகளாக, துரோகிகளாக மாறியபொழுது லெனின் இவர்களை அம்பலப்படுத்தி, கடுமையாகச் சாடி, உதிர்த்துவிட்டு மூன்றாவது அகிலத்தை உருவாக்கினார். அதே சமயத்தில் மூன்றாவது அகிலத்தில் முரண்பாடுகள் இல்லாமலில்லை; அதற்கான விவாதங்கள் நடைபெறாமலில்லை.

லெனினின் இந்த நடைமுறையைத் தான் மேலே குறிப்பிட்ட மேற்கோளின் மூலம் வி.மி.குழு திட்டவட்டமாக மறுக்கிறது. இத்தாலி, ஸ்பெயின், பிரெஞ்சு. ஹங்கேரி, யுகோ நாட்டு கட்சிகள் போன்ற திரிபுவாத கட்சிகளையும் உண்மையான மார்க்சிய—லெனினியக் கட்சிகளையும் உள்ளடக்கியது தான் சர்வதேசிய கம்யூனிச இயக்கம் என்று வி.மி.குழு சொல்கிறது. இந்த இயக்கத்தில் இருக்கின்ற 'சிக்கல்கள் பலதரப்பட்ட தன்மைகள், முரண்பாடுகள்' ஆகியவைகளில் தான் அதன் 'மாபெரும் பலமும் செழுமையும்' அடங்கியிருக்கிறதாம்! 'திரிபுவாதிகளை தனது அணிகளிலிருந்து களையெடுப்பதின் மூலமே கட்சி பலமடங்கு பலம் பெறுகிறது' என்ற லெனினது கோட்பாட்டைத் தூக்கி வீசி விட்டு அடிப்படையிலேயே முரண்பட்டுள்ள மார்க்சிய மற்றும் திரிபுவாத சக்திகள் ஒன்றாக சேர்ந்திருப்பது தான் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் பலமென்றும் செழுமையென்றும் வி. மி. குழு சொல்கிறது. திரிபுவாதத்திற்கும் மார்க்சியத்திற்கும் இடையிலான 'முரண்பாடுகள், சிக்கல்கள், பலதரப்பட்ட தன்மைகளைப்' பார்த்து வறட்டுவாதிகள் சந்தேகமும் குழப்பமும் அடைகிறார்களாம்; கம்யூனிஸ்டுகளாகிய இவர்கள் 'முன் கூட்டியே வகுக்கப்பட்ட சூத்திரங்களையோ அல்லது அகநிலை விருப்பங்களையோ தமக்கு வழிகாட்டியாக கொள்ள மாட்டார்களாம்!' 'ஸ்தூலமான தேசிய நிலமை-



படிப்பகம்

www.padippakam.com

களின் அடிப்படையில் சோசலிசத்தை அடைவதற்கான ஸ்தூலமான வழிகளைத் தேடுவதில்' இவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்களாம்! ஆனால் எந்த நாடாக இருந்தாலும் எந்த ஸ்தூலமான நிலைமைகள் இருந்தாலும் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகள் அனைத்துக்கும் பொருந்துபவைகளாகும். லியு—தெங் கும்பல் இந்த பொதுக் கோட்பாடு களையே தான் மறுக்கிறது. இன்னும் ஒருபடி மேலே போய் குருஷ்சேவ் வகை நவீன திரிபுவாதத்தை எதிர்த்து மாவோ தலைமையில் நடத்தப்பட்ட சித்தாந்தப் போராட்டத்தையே கண்டனம் செய்கிறது லியு-தெங் கும்பல். (பக்கங்கள் 118-119-ஐ பார்க்கவும்). எனவே, முன்கூட்டியே வகுக்கப்பட்ட சூத்திரங்கள் என வி.மி. குழு சொல்வது மாசேதுங் சிந்தனையின் கோட்பாடு களைத் தான். அவைகளைத் தமக்கு வழிகாட்டியாகக் கொள்ளவில்லை என வாக்குமூலம் கொடுத்துள்ளனர் வி.மி.குழுவினர். 'ஸ்தூலமான நிலைமைகளுக்கு ஸ்தூலமாகப் பிரயோகிக்கப்படுகின்ற' லியு—தெங் கும்பலின் கோட்பாடுகளே வி.மி.குழுவினருக்கு வழிகாட்டும் கோட்பாடுகளாக இருக்கின்றன; வழிகாட்டும் கோட்பாடு மட்டுமல்ல, வழிபடும் தெய்வமாகவே அவர்களுக்கு இருக்கிறது.

இந்திய அரசாங்கத்துடன் தனது உறவுகளை சீனா சுமுகமாக்கிக்கொள்வதையும் இந்திய நவீனதிரிபுவாதிகளுடன் (இ.க.க.(மா) -வினருடன்) சீ.பொ.க. மேற்கொள்ளும் முயற்சிகளையும் இவர்கள் எதிர்க்கவில்லையாம். ஏன் என்பதற்கு பின்வரும் காரணங்களை சொல்கிறார்கள்.

1) 'மேலாதிக்க எதிர்ப்பு முன்னணி ஒன்றைக் கட்டமைக்க பல்வேறு வடிவங்களின் முன்முயற்சிகளை மேற்கொள்வதுடன் எல்லா வகையான பலன்களையும் கண்டுபிடிக்க வேண்டும்' (லிபரேஷன், தமிழ் பதிப்பு, வால்யூம 13, இதழ் 1, பக். 22)

2) 'நாம் யுத்த தந்திரம் மற்றும் சரியான தன்மை பற்றியும் கருதுகிறோம். அல்லது மாறாக இந்த அல்லது அந்த சக்தியின் தோற்றம் அல்லது மதிப்பீடு பற்றியும் காலப் போக்கில் தான் விசாரணை செய்ய முடியும்' (டி, பக். 22)

இந்திரா கும்பல் ஒரு பாசிச கும்பல் என்பதும் இ.க.-க.(மா)வினர் நவீன திரிபுவாதிகள் என்பதும் நன்கு நிரூபிக்கப்பட்ட உண்மை. இவர்களின் தோற்றம் அல்லது மதிப்பீடு பற்றி காலப் போக்கில் தான் விசாரணை செய்ய முடியும் என்று சொல்வது மார்க்சிய லெனினியக் கண்ணோட்டத்தை அப்பட்டமாக கைவிடுவதைத் தவிர வேறெதுவாகவும் இருக்கமுடியுமா? மேலும் அப்பட்டமான ரஷிய அடிவருடியான நவீன திரிபுவாதிகளையும் இன்னொரு அடிவருடி



படிப்பகம்

www.padippakam.com

-யான இந்திரா கும்பலின் தலைமையிலான அரசாங்கத்தையும் ரஷிய மேலாதிக்க எதிர்ப்பு முன்னணிக்குள் கொண்டு வர அவைகளுடன் சீ.பொ.க. உறவுகளை சுமுகப்படுத்திக் கொள்வதாக சொல்வது நேர் முரண்பாடாக உள்ளது. இதை வி.மி. குழுவினர் எதிர்க்க மாட்டார்களாம்! இதன் அர்த்தம் என்ன? நவீன திரிபுவாதிகளை ரஷிய மேலா-திக்க எதிர்ப்புச் சக்தியாக கொண்டு வரமுடியும் என வி.மி குழுவினர் நம்புகிறார்கள் என்பதாகும். ஆனால் இன்னொரு இடத்தில் பின்வருமாறு கூறுகிறார்கள். ''எனவே, இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு எதிராகவோ அல்லது சோவியத் மேலாதிக்கத்திற்கு எதிராகவோ அவர்களை நாம் எந்த அளவுக்கும் பயன்படுத்த தேசிய ரீதியில் முக்-கியத்துவமுடைய சக்தியாக நாம் கருதவில்லை. அதனுடைய பல வருட நடைமுறைகள் இதை உறுதிப்படுத்துகிறது'' (டி, பக்.23) அதாவது சர்வதேசிய ரீதியில் ரஷிய மேலாதிக்க எதிர்ப்பு முன்னணியில் ஒரு சக்தியாக நவீனதிரிபுவாதிகள் இருக்க முடியுமென்றும் ஆனால் தேசிய ரீதியில் ரஷிய மேலாதிக்க எதிர்ப்பு முன்னனிக்கு ஒரு சக்தியாக எந்த அளவுக்கும் பயன்படுத்த முடியாது என்றும் சொல்கின்றனர். அதாவது வி.மி குழுவினரின் சர்வதேசிய கண்ணோட்டத்தில் நவீன திரிபுவாதிகள் நட்பு சக்தியாக தெரிகிறார்கள்; ஆனால் அவர்களது தேசிய கண்ணோட்டத்தில் நவீன திரிபுவாதிகள் எதிர்ப்-புச் சக்தியாக மாறி விடுகிறார்கள். என்ன ஒரு ஒருங்கிணைந்த கண்ணோட்டம்! வான்கோழியாகிவிட்டஇன்றையசீனதலைமையை கானமயிலாக காட்டும் முயற்சியில் இறங்கிய வி.மி. குழுவினர் இறுதியில் அதன் தர்க்க ரீதியான முடிவின்படி, முரண்பாடுகளின் முற்றத்-தில் போய் நிற்கிறார்கள்.

எனவே எங்கு பார்த்தாலும் அவர்களுக்கு குழப்பமாகத் தெரிகிறது. அவர்கள் சொல்கிறார்கள் ''இப்படியாக சம்பவங்களின் தற்போதைய நிலைமைகள் அனைத்தும் குழப்பமாக இருந்தாலும், இந்தியப் புரட்சியின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப-தற்கு தமது சொந்த மூளையைப் பயன்படுத்தும்படி நிர்ப்பந்திக்-கப்பட்டிருக்கும் ஒரு சூழ்நிலையில் முதன்முறையாக நமக்கு அந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சீனக் கட்சியை சார்ந்து நிற்கும் இறுதிக் கண்ணியை உடைப்பதற்கும் பரஸ்பர மதிப்பு, சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகிய கோட்பாடுகளில் அவர்களுடன் நாம் ஸ்தூலமான சகோதரத்துவ உறவை வளர்த்துக் கொள்வதற்கான நேரம் இப்பொழுது வந்துவிட்டது'' (டி, பக். 23)

'சீனாவில் ஏற்படும் மாற்றங்கள் எல்லாம் சோசலிச நடவ-டிக்கைகள் தான்; சரி, தவறு என்றெல்லாம் ஆராயக்கூடாது; வெட்டித்தனமான அறிவுஜீவிததனமான விவாதங்களில் ஈடுபடாமல் சீனத்தலைமையை புரட்சிகரத் தலைமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஆணையிடுபவர்கள் வி.மி. குழுவினர் தான். சீனத்-



படிப்பகம்

www.padippakam.com

தலைமை செய்யும் நடவடிக்கைகளுக்கெல்லாம் ஓர் இணையான இயக்கத்தை இந்தியாவில் எந்திர கதியில் செய்வதும் வி.மி. குழுவினர் தான். மூன்றுலகக் கோட்பாட்டைப் புரிந்து கொள்வதிலும் நடைமுறைப்படுத்துவதிலும், சோசலிசப் புரட்சி, சோசலிச நிர்மாணம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதைக் கைவிடுவது ஆகியவைகளில் லியு-தெங் கும்பலின் சித்தாந்தத்தை அப்படியே வாந்தி எடுப்பதும் வி. மி. குழுவினர் தான். ஆனால் ஊரில் உள்ளவர்களுக்கெல்லாம் வாந்தி பேதி என்று சொல்லி அதற்காக பத்தியத்தையும் பச்சிலையையும் சிபாரிசு செய்வது மிகவும் வேடிக்கையானது தான்.

அண்மைக்காலம் வரை சீனத்தை சோசலிச நாடென்றும் மாவோவை மகத்தான தலைவர் என்றும் சொல்லி வந்த அல்பேனிய தொழிலாளர் கட்சி மாவோ மறைவுக்குப்பின் எவ்வித விளக்கமும் இல்லாமல் சீனா என்றுமே சோசலிச நாடாக இருந்ததேயில்லை; மாவோ ஒரு மார்க்சிய-லெனினியவாதியே அல்ல என்று கடைக்கோ-டித்தனமான நிலையில் நின்று வசைபாடி வருகிறது. அதுவும்அதன் வால் கட்சிகளும் சேர்ந்து மார்க்சிய-லெனினிய இயக்கத்தில் குழப்-பத்தை உருவாக்கி வருகின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது மற்றும் சோசலிச நிர்-மாணம் ஆகியவைகள் பற்றி ஓர் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டை முன்வைக்காமல்; ஓர் நவீன ட்ராட்ஸ்கிய கும்பலாகச் சீரழிந்துள்ள இவர்கள் மார்க்சியத்தின் எதிர் அணியில் நிற்கின்றனர்.

ஒரு நாட்டில் சோசலிசம் ஆட்சிக்கு வந்தவுடன் அது எப்போதும் சோசலிச நாடாகத்தான் இருக்க முடியும்—சொத்து பொதுவுடமையாக இருக்கும்வரை—முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப் பட முடியாது என்ற அப்பட்டமான மார்க்சிய—லெனினிய விரோதக் கருத்தை திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் கொண்டுள்ளார்-கள். ரஷ்யாவை சமூக ஏகாதிபத்தியம் என்று சொல்கிறீர்களே அங்கு தனியுடமை இருக்கிறதா? அந்த தனியுடமை முதலாளித்துவம் உச்சகட்டத்திற்கு வளர்ந்துள்ளதா? என்று சாமர்த்தியமான பதிலைத் தருகிறோம் என்ற திருப்தியுடன் கேட்கிறார்கள்; அங்கே நடப்பது முழுக்கவும் உங்களுக்குத் தெரியுமா? அப்படியிருக்கும்போது அதை ஏகாதிபத்திய நாடு என்ற முடிவுக்கு நீங்கள் வந்திருப்பது விவரங்களின் அடிப்படையிலானதல்ல என்றும் கூறுகிறார்கள்; சோசலிசம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியான பாதையில்தான் செல்ல வேண்டுமென மார்க்சிய ஆசான்கள் சொல்லவில்லை; அந்தந்த நாட்டின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப பல பாதைகள் இருக்க முடியும்; அதையொட்டி அவர்களது நாட்டிற்குப் பொருத்தமாக அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளை திரிபுவாதம்



படிப்பகம்

www.padippakam.com

என்று சொல்லக்கூடாது—போன்ற வாதங்களும் இவர்களால் முன் வைக்கப்படுகின்றன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், அதன் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது, சோசலிச நிர்மாணம், கம்யூனிசத்தை நோக்கிச் செல்வது ஆகிய அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமான மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளே குருஷ்சேவ்-பிரஷ்னேவ் கும்பல் முதல் லியு-தெங் கும்பல் வரை அனைத்துத் திரிபுவாதிகளாலும் திரித்துப் புரட்டப்படுகின்றன. இவர்கள் சொல்வதுபோல அந்தப் பொது கோட்பாடுகளை குருஷ்சேவ்-பிரஷ்னேவ் கும்பலோ, லியு-தெங் கும்பலோ ஏற்றுக்கொண்டுபருண்மையான நிலைமைகளுக்கேற்ப பருண்மையான பிரயோகத்தைச் செய்யவில்லை; மார்க்சிய—லெனினியத்திற்கே அடிப்படையிலேயே திருத்தம் செய்கிறார்கள் என்பதுதான் இவர்களின் சாராம்சம். இந்தியத் திரிபுவாதிகளாலும் நவீன திரிபுவாதிகளாலும், முன்வைக்கப்படும் போலித்தனமான மேற்சொன்ன வாதங்களுக்கெல்லாம் திட்டவட்டமான, அணித்தரமான மார்க்சிய-லெனினிய விளக்கங்கள் இந்தக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

## IV

உலகின் முதல் சோசலிச நாடு முதற்கொண்டு உலகப் புரட்சியின் நம்பிக்கை நட்சத்திரம் என சொல்லி வந்த சீனம் வரை சோசலிச நாடுகளே இல்லையென்று சொல்லுமளவிற்கு எல்லா சோசலிச நாடுகளிலும் முதலாளித்துவமீட்சி நடந்தேறி விட்டது; அல்லது அதன் பாதையில் சென்றுகொண்டிருக்கிறநிலை. அதையொட்டிஎழுந்திருக்கிற பல்வேறு தத்துவார்த்த குழப்பங்கள், ஊசலாட்டங்கள், அவநம்பிக்கைகள், உலக அளவிலும் இந்திய அளவிலும் மார்க்சிய-லெனினிய இயக்கங்கள் பிளவுண்டிருப்பது—அனைத்தும் சேர்ந்து மார்க்சியத்தின் மீதே ஓர் அவநம்பிக்கையை, தோல்வி மனப்பான்மையை தோற்றுவிக்கலாம். ஆனால் மார்க்சிய தத்துவம் அதிகாரப்பூர்வ அடக்குமுறையினாலோ அல்லது உள்ளிருக்கும் எதிரிகளாலோ, அழித்தொழிக்கப்படும்போதெல்லாம் அது ஃபீனிக்ஸ் பறவையாக உயிர்பெற்று புதிய பலத்துடனும். பொலிவுடனும். உறுதியுடனும் போர்முனைக்கு வருகிறது. மார்க்சிய தத்துவம் அதன் வாழ்நாள் முழுவதும் போராடியே ஒவ்வொரு அடியாக முன்னேறியிருக்கிறது. எனவே தோல்விகளும் மீண்டும் வெற்றியும் மார்க்சியத்திற்கு புதியதல்ல; தற்காலப் பின்னடைவுகள் தவிர்க்க முடியாதாயினும் இறுதி வெற்றி மார்க்சியத்திற்கே; ஆனால் அது தோல்விகளைக் கண்டு துவண்டு செயலற்று இருப்பதன் மூலமல்ல; சிக்கலான, சித்திரவதையான. நீண்ட போராட்டத்தின் மூலமாக அடையப்பட வேண்டிய ஒன்றாகும்.



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சியத்தின் விரோதிகள்-நேரிடையான, வெளிப்படையான எதிரிகளானாலும் சரி, மார்க்சியத்தை உச்சரித்துக் கொண்டிருப்பவர்களானாலும் சரி அவர்கள் சர்வதேசிய ரீதியில் இருக்கின்றனர். அவர்களுக்குள் பிரிவுகள் இருந்தாலும் வெவ்வேறு வர்ணங்களில் தங்களைஅலங்கரித்துக் கொண்டிருந்தாலும் மார்க்சியத்திற்கு சவக்குழி தோண்ட ஓரணியில் நிற்பவர்கள். எனவே அவர்களை முறியடிக்க வேண்டுமானால் இரண்டு தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

1) மார்க்சியத்திற்கும் பலவண்ண திரிபுகளுக்கும் இடையிலான ஒரு தெளிவான எல்லைக்கோட்டின் வழிகாட்டுதலில் உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டம், கோட்பாடு, யு.த., போ.த. ஆகியவைகளை உருவாக்குவது; முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச்செல்லும் ஒரு பொதுதிசை வழியைவகுப்பது.
2) மேற்கண்டவைகளைப் பிரயோகித்து சரியான கட்சியெது, திரிபுவாதக் கட்சியெது என்ற பாகுபாட்டைச் செய்யவேண்டும். சரியான கட்சிகள் அனைத்தும் ஓர் ஒருங்கிணைப்பை தங்களுக்குள் செய்து கொண்டு அதை நடைமுறைக்கு உதவுகின்ற ஸ்தாபன உறுப்பாகக் கொள்ள வேண்டும்.

இதில் முதல் தேவையைத் தான் இந்த வெளியீட்டில் உள்ள இரண்டு கட்டுரைகள் நிறைவு செய்கின்றன. அவைகளில் வகுக்கப்பட்டுள்ள கோட்பாட்டு முடிவுகளின் அடிப்படையில்,

அ) நமது நாட்டுப் புரட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளையும் வகுத்து அவைகளை அடிப்படையாகக் கொண்டு சித்தாந்தப் போராட்டம் நடத்தி பல்வேறு மார்க்சிய-லெனினிய குழுக்களை ஒரு கட்சியாக ஒற்றுமைப்படுத்த வேண்டியுள்ளது.
ஆ) அதே போல சர்வதேச ரீதியிலும் சித்தாந்தப் போராட்டத்தை எடுத்துச்சென்று ஒத்த நிலைப்பாடுள்ளவர்களை ஓரணியில் திரட்ட வேண்டியுள்ளது.

இந்த நோக்கில் தான் மாநிலஅமைப்புக் கமிட்டி, இ. பொ. க. (மா-லெ)-யின் மூன்றாவது பிளீனம் பின்வரும் கடமைகளை வகுத்துக் கொண்டுள்ளது.

1) சிதறுண்ட இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட்)-யை ஒன்றுபடுத்துவது.
2) சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தை ஓரணியில் ஒருங்கிணைப்பது.

இந்தக் கடமைகளைச் சாதிப்பது அவ்வளவு எளிதானதோ



படிப்பகம்

www.padippakam.com

அல்லது விரைவில் சாதித்து விடக்கூடிய ஒன்றோ அல்ல. ஆனால் இந்தக் கடமைகளை முடிக்காவிட்டால் புரட்சி முன்னெடுத்துச் செல்லப்படுவது கடினமாகும். தேசிய ரீதியில் ஆனாலும் சரி, சர்வதேசிய ரீதியில் ஆனாலும் சரி மார்க்சிய—லெனினிய இயக்கம் சிதறுண்டிருக்கும் இன்றைய நிலையில் அவைகளை ஒன்றுபடுத்த இந்தத் துறையில், இந்த திசையில் இருந்து தான் தொடங்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.

தேசிய ரீதியில் மார்க்சிய—லெனினியக் குழுக்களை ஒன்றுபடுத்தும் கடமையை முடிக்க வேண்டும் என்று ஆர்வத்துடன் இருப்பவர்கள் கூட சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தை ஒரணியில் ஒருங்கிணைப்பது சாத்தியமா என்று கருதலாம். ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது மா-லெ-மா சிந்தனையும் அதனடிப்படையிலான சரியான கோட்பாட்டு முடிவுகளும் தான். ஒரு கட்சி பெரியதாக உள்ளதா, சிறியதாக உள்ளதா என்பதல்ல. புகழ் பெற்றவர்களாக இருக்கிறோமோ, இல்லையா என்பதல்ல. வேறு சிலர் மூன்றாவது அகிலம் முடிவெடுத்தவாறு—உலக கம்யூனிச இயக்கம் மிகவும் பெரிதாகி விட்டது; பிரச்சனைகள் பன்முகமாகவும் பல்வேறு பருண்மையான நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் செயல்பட வேண்டியுள்ளது. பருண்மையான நிலைமைகளுக்கேற்ப பல்வேறு நாடுகளின் புரட்சிகள் பல்வேறு பாதைகளில் செல்கின்றன. எனவே, எல்லா நாட்டுப் புரட்சிகளையும் ஒரே மையத்தில் இருந்து கொண்டு இயக்குவதோ, ஒருங்கிணைப்பதோ சாத்தியமில்லை—இன்றும் ஒருங்கிணைப்பு தேவையில்லை என்று கருதலாம். ஆனால் 1943-ல் இருந்த நிலைமை இன்றிருக்கின்றதா? இன்று திரிபுவாதம் உலக அளவில் திட்டமிட்ட ஸ்தாபனமாக சோவியத் தலைமையில் ஓர் அணியாகவும், சீனத்தலைமையில் ஓர் அணியாகவும், அல்பேனிய-யத் தலைமையில் ஒரு குட்டி அணியாகவும் செயல்படுகின்றது. அதே சமயத்தில், உண்மையான மார்க்சிய-லெனினிய இயக்கத்திற்கென்று உலக அளவில் சக்தி வாய்ந்த ஒரு கட்சியோ, தலைமையோ கூட குறிப்பிட்ட கண்டத்தில், ஏன் ஒரு நாட்டில் கூட இல்லை; மாறாக, குழுக்களாக சிதறுண்டு கிடக்கின்றன. இரண்டாவது அகிலத்தின் புரட்டல்வாதத் தலைவர்களால் அன்று மார்க்சியத்திற்கு எப்படிப்பட்ட அபாயம் இருந்ததோ, அந்த அபாயத்தை விட இன்னும் அதிகரித்த அளவில் இன்று அபாயம் இருக்கிறது.

எனவே, இன்றைய நிலையில் சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தை ஒரணியில் ஒருங்கிணைப்பதும், மா-லெ-மா சிந்தனையை உயர்த்திப் பிடித்து பலவர்ண திரிபுகளை முறியடிக்க கூட்டாக இயங்குவதும் மிக மிக அவசியமானதாகும். ஓர் ஒருங்கிணைப்பு என்று சொல்லும்போது நாங்கள் ஓர் அகிலத்தை மனதில்வைத்துக்கொண்டு சொல்லவில்லை. அதே சமயத்தில் வெறும் தகவல் பரிமாறிக் கொள்



படிப்பகம்

ளும் அமைப்பாகவும் சொல்லவில்லை. ஓர் ஒருங்கிணைப்பாக (*Co-ordination*) செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் என திடமாக நம்புகிறோம். அப்படிப்பட்ட ஒரு கடமையையும் நமது நாட்டில் மா-லெ குழுக்களை ஒன்றிணைக்கும் கடமையையும் சாதிக்க இந்தக் கட்டுரைகள் கருவியாக—அடிப்படையாக அமையும் என உறுதியாக எண்ணுகிறோம்.

எனவே, இவ்வெளியீட்டில் உள்ள கட்டுரைகளை ஊன்றிப் படிக்கப்பட வேண்டும்; விவாதிக்கப்பட வேண்டும் என்று கருதுகிறோம். அப்படிப்பட்ட ஓர் ஆரோக்கியமான விவாதம் தொடங்கி, தெளிவான திசைவழியில் முன்னேறுவோம் என்ற நம்பிக்கையில் உங்கள் முன் இந்த வெளியீட்டை முன் வைக்கிறோம்.

*மாநில அமைப்புக் கமிட்டி,*
*இந்தியப் பொதுவுடைமைக் கட்சி,*
*(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)*
*தமிழ்நாடு.*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்

அ) சர்வதேசப் புரட்சியின் சக்தி வாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு.


| | | பக்கம் |
|---|---|---|
| I) | பிரம்மாண்டமான மாறுதல்கள் கோரும் அரசியல் சக்திகளின் புதிய வகைப்படுத்துதலே மூன்றுலகக் கோட்பாடு. | 3 |
| II) | நான்கு அடிப்படை முரண்பாடுகள் மற்றும் இரண்டு சமூக கட்டமைவுகளின் தோற்றமும், அவற்றின் தன்மைகளும் விதிகளும் பற்றி ஒரு தொகுப்பு. | 8 |
| III) | புரட்சியின் முன்னுள்ள தேசிய, சர்வ தேசியக் கடமைகள்—பாட்டாளி வர்க்கத்தின் தேசிய, சர்வதேசிய யுத்த தந்திரங்கள். | 19 |
| IV) | மார்க்ஸ் — எங்கெல்ஸ், லெனின் — ஸ்டாலின், மாவோ வெவ்வேறு காலகட்டங்களில் உலக அரசியல் சக்திகளைப் பிரித்து வழிகாட்டியிருக்கிறார்கள். | 28 |
| V) | சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் — சோசலிச நாடுகளின், ஒடுக்கப்பட்ட மக்கள் — நாடுகளின் சக்தி வாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு. | 38 |
| VI) | இரு மேல்நிலை வல்லரசுகளின் மேலாதிக்கம் மற்றும் யுத்தக் கொள்கைகளுக்கு எதிரானப் போராட்டத்தையும் ஐக்கியத்தையும் கட்டி வளர்ப்போம்! சமரச சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவோம். | 54 |


படிப்பகம்

www.padippakam.com

ஆ) மரம் ஓய்வை நாடினாலும் காற்று தணிந்து விடாது.

பக்கம்


| | | |
|---|---|---|
| I) | பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் — லெனினிசத்தின் அடிப்படைப் பிரச்சினை; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது—மாசேதுங் சிந்தனையின் மகத்தான பங்களிப்பு. | 69 |
| II) | மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளைத் திருத்தி எழுதுகிறது தெங் கும்பல்—முதலாளித்துவ மீட்சியும், ஏகாதிபத்தியத்திடம் சரணடைவுமே அதன் இறுதி நோக்கம். | 97 |
| III) | மாசேதுங் சிந்தனை பற்றிய வரையறுப்பை தெங் கும்பல் கொச்சைப் படுத்துகிறது; குருஷ்சேவ்—பிரஸ்நேவ் கும்பலின் நவீன திரிபுவாதத்தை கொல்லைப்புற வழியாக கடத்தி வருகிறது. | 113 |
| | 1) சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய பிரச்சினைகளில்...... | 118 |
| | 2) சர்வதேசியப் பிரச்சினைகள் குறித்து...... | 173 |
| IV) | சோசலிச சமுதாயத்தின் புறவயமான நிலைமைகள் பற்றிய லியு—தெங் கும்பலின் மதிப்பீடுகள் தவறானவை. | 183 |
| V) | சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய நியதிகளை லியு—தெங் கும்பல் திரித்துப் புரட்டுகிறது. | 220 |
| VI) | திரிபுவாதத்தின் வெற்றி தற்காலிகமானதே; இறுதி வெற்றி மார்க்சியத்திற்கே! | 284 |


படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசப் புரட்சியின்
சக்தி வாய்ந்த
போர் ஆயுதம்
மூன்றுலகக் கோட்பாடு.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பிரம்மாண்டமான மாறுதல்கள் கோரும் அரசியல் சக்திகளின் புதிய வகைப்படுத்துதலே மூன்றுலகக் கோட்பாடு

கடந்த முப்பது ஆண்டுகளில் உலகெங்கும் ஏற்பட்ட மாபெரும் எழுச்சி, மாபெரும் பிளவு, மாபெரும் மறுசேர்க்கை காரணமாக உலக அரசியல் சக்திகள் அனைத்துமே ஒரு புதிய வரலாற்றுச் சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றன. உலக பாட்டாளி வர்க்கத்திற்கும், ஒடுக்கப்பட்ட மக்கள்-தேசங்கள்-நாடுகளுக்கும் மிகமிகச் சாதகமாகவே இன்றைய சர்வதேசிய நிலைமைகள் விளங்குகின்றன. ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம், மேலாதிக்கம் ஆகியவற்றால் எழுப்பப்பட்டிருந்த பழைய கோட்டைகொத்தளங்கள் யாவும் அடித்து நொறுக்கப்படுகின்றன. அவற்றின் அடித்தளங்களே ஆட்டங்காணுகின்றன. உலகம் முழுவதுமே கொதித்துக்

படிப்பகம்

www.padippakam.com

கொந்தளித்துக் கொண்டிருக்கிறது; அமைதியற்றிருக்கிறது. இவை எல்லாம் நிகழ்கால உலகின் அடிப்படை முரண்பாடுகள் அனைத்தும் கூர்மையடைந்திருப்பதன் பிரதிபலிப்பேயாகும்.

★ இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின், ஏகாதிபத்தியம் மற்றும் காலனி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டங்களில் வீறுகொண்டெழுந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க புரட்சிகர மக்கள் உலகை அதிர வைக்கும் பல புரட்சிகர ஆயுதப் போராட்டங்களில் வெற்றி வாகை சூடி உலகத் தோற்றத்தையே மாற்றி அமைத்துள்ளனர்.

★ இரண்டாம் உலகப் போருக்குப் பின் சிலகாலம் நீடித்திருந்த சோசலிச முகாம், சோவியத்யூனியனில் முதலாளித்துவம் நிலை நாட்டப்பட்ட பின்— அது சீரழிந்து சமூக ஏகாதிபத்தியமாக மாறியபின் - கலைந்து விட்டது. சோசலிச முகாமிலிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்குசதை நாடுகளாக மாறின

★ முதலாளித்துவத்தின் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி காரணமாக மேற்கு ஏகாதிபத்திய முகாமிலும் கூட சிதைவு ஏற்பட்டது. ஆக்கிரமிப்புக் கொள்கையின் காரணமாக அமெரிக்க ஏகாதிபத்தியம் அடைந்த கடுமையான உலகு தழுவிய வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், அதன் ஆதிக்கம், கட்டுப்பாடு, அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டங்களின் மூலமும் முதலாளித்துவ முகாமிலிருந்த சில மேற்கு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆணைகளை ஏற்பதும் இல்லை. சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் நிற்கின்றன.

★ இன்று சிலவாக இருக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளில், சோவியத் யூனியன், மற்றும் அமெரிக்கா ஆகிய இரு மேல் நிலை வல்லரசுகள் மட்டுமே உலக மேலாதிக்கத்துக்காக போட்டியிடக் கூடிய ஆற்றலுடையதாக சுருங்கி விட்டன. மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் எல்லாம் இரண்டாம் தர அல்லது மூன்றாம் தர வல்லரசுகளின் நிலைக்குக் கீழே தள்ளப்பட்டு விட்டன.

★ இரண்டாம் உலகப் போருக்குப் பின், சிலகாலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டுமே உலக மக்களின் பரம எதிரியாக இருந்தது. பின்னர் அடுத்தடுத்து நிகழ்ந்த பல பாரதூரமான சம்பவங்களைத் தொடர்ந்து சோவியத் யூனியன், அமெரிக்கா உலகத்தை அச்சுறுத்



படிப்பகம்

www.padippakam.com

தியதைப் போலவே ஒரு ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசாக மாறியது மட்டு மல்ல, இன்னொரு உலக யுத்தத்துக்கான மிகவும் அபாயகரமான ஊற்றுக் கண்ணாகவும் மாறியுள்ளது.

★ சோவியத் சமூக ஏகாதிபத்திய ஆளும் திரிபுவாதக் கும்பலின் துரோகம் தவிர்க்க முடியாதபடி அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்திலும், உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிப் போராட்ட அணிகளிலும் பல்வேறு அளவு பிளவுகளை ஏற்படுத்தி, தற்காலிகமாக இடர்பாடுகளை விளைவித்துள்ளது.

★ நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன; தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன; மக்கள் புரட்சியை விரும்புகிறார்கள் என்ற வரலாற்றுப் பெருவெள்ளம் எந்தச் சக்தியாலும் அணைபோட்டுத் தடுக்க முடியாதவாறு பொங்கிப் பெருகுகிறது என்பதே அனைத்துலக நிலைமையின் பிரதானப் போக்காகும். அதே சமயம் புரட்சிக்கான கூறுகள் வளர்வதைப் போலவே யுத்தத்துக்கான கூறுகளும் வளர்கின்றன.

இவை எல்லாம் புரட்சிக்கு இட்டுச்செல்லும் முதலாளித்துவத்தின், ஏகாதிபத்தியத்தின் அனைத்து அடிப்படை முரண்பாடுகளினதும், திரிபுவாதம், நவீன திரிபுவாதம் இவற்றுக்கெதிரான உக்கிரமான போராட்டத்துக்கு இட்டுச்செல்லும் தொழிலாளர் இயக்கத்தின் அனைத்து அடிப்படை முரண்பாடுகளினதும் வளர்ச்சிப் போக்கில் எழுந்த மாற்றங்களின் விளைவாகும். சர்வதேச நிலைமைகளில் ஏற்பட்டுள்ள இப் பிருமாண்டமான மாற்றங்களும், பல்வேறு நாடுகளில் பெருகி வரும் மக்கள் பலமும், புரட்சியின் கூறுகளும் புதிய பிரச்சனைகளை, கடமைகளை முன்னிறுத்தியிருக்கின்றன. சர்வதேச பாட்டாளி வர்க்கம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள், நாடுகளை வழிநடத்திச் செல்ல தேவையான உலகுதழுவிய ஒரு புதிய யுத்ததந்திரம், போர்த்தந்திரத்தை வகுக்கும் வகையில் உலக அரசியல் சக்திகளில் புதியதொரு வகைப்படுத்துதலைக் கோருகின்றன. நமது காலத்தின் மாபெரும் ஆசானாகிய தோழர் மாவோ இன்றைய கால அரசியல் சக்திகளை மூன்று உலகங்களாக வகைப்படுத்தி வழிகாட்டியுள்ளார். இது உலகின் அடிப்படை முரண்பாடுகளின் வளர்ச்சியையும், மாறுதல்களையும் பல ஆண்டுகளாகத் தொகுத்தும், ஆய்ந்தும் ஆக்கபூர்வமாக பிரயோகித்ததின் வரலாற்றுச் சிறப்பு மிக்கப் படைப்பாகும்.

தோழர் மாவோவின் மூன்றுலகக் கோட்பாடு பிரதானமான புரட்



படிப்பகம்

www.padippakam.com

சிகர சக்திகளையும், வென்றெடுக்கப்படக்கூடிய இடைப்பட்ட சக்திகளையும், பிரதான எதிரிகளையும் தெளிவாக வகைப்படுத்துகிறது. உலக அரங்கில் பிரதான எதிரிகளுக்கு எதிரான வர்க்கப் போராட்டத்தில் அதிகபட்சம் சாத்தியமான சக்திகளின் பரந்து விரிந்த ஐக்கிய முன்னணியில் ஒன்றிணைய உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கு வழிகாட்டுகிறது. உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் ஒரு தரப்பிலும், இருமேல்நிலை வல்லரசுகள் எதிர்த்தரப்பிலும் நிற்கும் இன்றைய உலகின் மிகமிக முக்கியமான வர்க்கப் போராட்டம் பற்றிய யுத்ததந்திர நிலைமையை இக்கோட்பாடு தொகுத்தளிக்கிறது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள வர்க்கப் போராட்டங்கள் உண்மையில் உலகு தழுவிய வர்க்கப் போராட்டத்துடன் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்திருக்கின்றன. ஆகவே மூன்றுலகக் கோட்பாடு நிகழ்கால உலகில் நிலவும் அனைத்து அடிப்படை முரண்பாடுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பாகத் திகழ்கிறது. தோழர் மாவோவின் விஞ்ஞான பூர்வமான இவ்வாய்வுரை ஏகாதிபத்தியத்தின் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி மற்றும் தவிர்க்க முடியாதவாறு யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் பற்றியும், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சோசலிசப் புரட்சியின் முக்கிய அங்கமாக அமையும் ஒடுக்கப்பட்ட தேசங்களின் போராட்டம் பற்றியும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம், சோசலிச நாடுகள், தேசவிடுதலை இயக்கங்களுக்கிடையிலான பரஸ்பர உதவி பற்றியும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் யுத்த தந்திரம், போர்த்தந்திரம் பற்றியும் உள்ள கோட்பாடுகளை மேலும் செழுமைப்படுத்தியுள்ளது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின், ஒடுக்கப்பட்ட மக்கள் தேசங்களின் யுத்த தந்திர, போர்த்தந்திர தேவைகளை மட்டும் இவ்வாய்வுரை நிறைவு செய்யவில்லை; சோசலிசம் மற்றும் பொதுவுடமையின் வெற்றிக்கான போராட்டத் தேவைகளையும் நிறைவு செய்கிறது.

மார்க்சிய-லெனினியவாதிகள் மாறுபாடின்றி சர்வதேசப் பாட்டாளி வர்க்க நிலைப்பாடுகளை உறுதியாகப் பற்றி ஒழுகுகிறார்கள். சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் எல்லா நாடுகளது புரட்சிகர மக்களின் பொதுநலனை உயர்த்திப் பிடிக்கிறார்கள். முதலாளித்துவக் கட்டமைவை மாற்றி பொதுவுமைக் கட்டமைவை நிறுவுவதில் ஊன்றி நிற்கிறார்கள். ஆனால் உலகு தழுவிய இம்மாற்றம் நீண்ட நெடியதும், இடர்பாடுகள், வேதனை மிக்கதும் கொண்ட நிகழ்ச்சி போக்கு ஆகும்; சிக்கல் மிக்க போராட்டங்கள் நிறைந்ததாகும்; இந் நிகழ்ச்சிப் போக்கின் வெவ்வேறு காலகட்டங்களில் உலக அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

சக்திகளின் மறுசேர்க்கைகள் தவிர்க்க முடியாதவை. சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த நிலவரம் உலக அரசியல் சக்திகளின் வகைப்படுத்துதலைத் தீர்மானிக்கிறது. அதற்கேற்றபடி யுத்த தந்திரமும் போர்த் தந்திரமும் வகுக்கப்படுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

# நான்கு அடிப்படை முரண்பாடுகள் மற்றும் இரண்டு சமூகக் கட்டமைவு களின் தோற்றமும், அவற்றின் தன்மைகளும் விதிகளும் பற்றி ஒரு தொகுப்பு

**17-ம்** நூற்றாண்டில் உற்பத்தி முறையிலும், விநியோக முறையிலும் ஐரோப்பாவில் நிகழ்ந்த பல தொடர்ச்சியான சங்கிலி போன்ற புரட்சிகர மாறுதல்களின் விளைவாகத் தோன்றியதே முத-லாளித்து வர்க்கமாகும். அதே சமயம் முதலாளித்துவம நிலப்பிரபுத் துவத்தின் அழிவிலிருந்து தோன்றி வளர்ந்தது. 18, 19-ஆம் நூற்-றாண்டுகளில் நடந்தேறிய உலகைக் குலுக்கிய முதலாளித்துவப் புரட்சிகளில் பிரான்சில் மட்டுமே நிலப்பிரபுத்துவம் முற்றாக வேரும் வேரடி மண்ணோடும் தூக்கியெறியப்பட்டு முதலாளித்துவம் ஆட்சி யதிகாரத்தில் நிலைநாட்டப்பட்டது. நீண்டதும், இடர்ப்பாடுகள் மிக் கதாகவும் இருந்த ஆங்கிலேய முதலாளித்துவப் புரட்சி, பாட்டாளி வர்க்கம் ஒரு சக்தியாக பரிணமித்ததைத் தொடர்ந்து ஒருவகை சமர சமாக நடந்தேறியது.

ஐரோப்பாவில் தான் முதன் முதலில் ஆட்சி அதிகாரம் அனைத்தையும் வரித்துக் கொள்வதில் முதலாளித்துவ வர்க்கம் வெற்றி பெற்றது. அதன் வளர்ச்சிப் போக்கில் மிகச் சிறந்த புரட்சி கரமான பாத்திரத்தை அது ஆற்றியது. நவீன ஆலை உற்பத்தியில் மாபெரும் புதிய உற்பத்தி சக்திகளை நுழைத்தது. நவீன ஆலை உற்பத்தியைத் தோற்றுவித்ததின் மூலம் முதலாளித்துவ வர்க்கம் அதற்கே கல்லறையைத் தோண்டும் பாட்டாளி வர்க்கத்தையும் தோற்றுவித்தது.

படிப்பகம்

www.padippakam.com

18,19—ஆம் நூற்றாண்டுகளில் நடந்த எல்லா முதலாளித் துவப் புரட்சிகளின் உந்துசக்தியாக பாட்டாளி வர்க்கம் விளங்கியது. ஆனால் அப்புரட்சிகள் அனைத்தும் முதலாளித்துவ வர்க்கத்தையே ஆட்சியில் அமர்த்துவதாகவே அமைந்தன. பின்னர் முதலாளித்துவ வர்க்கம், பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராகத் திரும்பியது. அதைத் தனிமைப்படுத்தித் தோற்கடித்தது. ஆனால் இந்நடவடிக்கைகளின் மூலம் முதலாளித்துவ வர்க்கம் புரட்சிக்கு எதிராகவே திரும்பியது. புரட்சியைக் கைவிட்டது. நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சங்க ளுக்கு எதிரான போராட்டத்தில் உதவும்படி பாட்டாளி வர்க்கத்துக்கு அறைகூவல் விடுக்க வேண்டியிருந்த முதலாளித்துவ வர்க்கமே முதன் முதலில் பாட்டாளி வர்க்கத்தை அரசியல் அரங்கத்துக்கு இழுத்து வந்தது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி மற்றும் புரட்சியில் அதன் பாத்திரம் கண்டு அஞ்சியது. நிலப் பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொண்டு புரட்சியைக் காட்டிக் கொடுத்தது. முதலாளித்துவ வர்க்கம் நிலப்பிரபுத்துவத்தைப் பொ-ருத்தவரை புரட்சிகரமானதாகவும் பாட்டாளி வர்க்கத்தைப் பொருத் தவரை எதிர்ப்புரட்சிகரமானதாகவும் இரட்டைத் தன்மையுடைய தாக மாறியது.

ஆரம்பத்தில் பாட்டாளி வர்க்கம் ஒரு வர்க்கமாக முறைப் படுத்தப்படாமல் சிதறியிருந்தது. அது ஒரு வர்க்கமாக வளர்வது பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அது அமைப்பாக வளர்வதோடு பொருந்தியிருக்கிறது. திசைமாறிப் போகும் போக்-குகளுக்கு எதிரான போராட்டங்களினூடே யும், அரசியல் வளர்ச்சிப் போக்குகளினூடேயும் பல்வேறு கட்டங்களில் முதலாளித்துவத்திற் கெதிரான ஒருங்கிணைந்த ஒரு வர்க்கமாகவும், அதன் விளைவாக ஒரு அரசியல் சக்தியாகவும் பாட்டாளி வர்க்கம் தன்னை வளர்த்து அமைப்பாக்கிக் கொண்டது. நிலப்பிரபுத்துவத்தின் அனைத்து மிச்சசொச்சங்களுக்கெதிராகவும், முற்றும் முழுவதுமான ஜன நாயகத்தை அடைவதற்காகவும், பாட்டாளி வர்க்கம் போராடியது. அதே சமயம் ஆட்சியதிகாரத்தை வென்றெடுப்பதிலும் தன்னை ஆளும் வர்க்கமாக மாற்றுவதிலும் சென்று முடியக்கூடிய சோசலிசத் திற்கான போராட்டத்தையும் முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக பாட்டாளி வர்க்கம் நடத்தியது. முதலாளித்துவத்தின் தோற்றத்தை யும் வளர்ச்சியையும் தொடர்ந்து முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட் டாளி வர்க்கத்துக்குமிடையிலான அடிப்படை முரண்பாடுகள் எழுந்து வளர்வதையே இவை அனைத்தும் விளக்குகின்றன.

பிரதானமாக வளர்ச்சியுற்ற — 'முன்னேறிய' நாடுகளில் இம்



படிப்பகம்

www.padippakam.com

முரண்பாடு கூர்மையடைவதைத் தொடர்ந்து சோசலிசத்திற்கான கூறுகள் சமமாக முதிர்ச்சியுறுவதன் மூலம் புரட்சி வெடித்துப் பரவும் என்று முன்பு கருதப்பட்டது. கம்யூனிஸ்டு அறிக்கையில் அப்பொழுது மார்க்ஸ்-எங்கெல்ஸ் பின்வருமாறு எழுதினார்கள் :

*''கம்யூனிஸ்டுகள் ஜெர்மனியின் மீது தங்கள் முக்கிய கவனத்தைச் செலுத்துகின்றனர். ஏனென்றால் ஐரோப்பிய நாகரீகத்தின் அதிக முன்னேற்றம் வாய்ந்த நிலைமைகளில் பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சிலும் இருந்த பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் மிக அதிகமாக முன்னேறிய பாட்டாளி வர்க்கம் உள்ள நிலையில் ஜெர்மனியில் முதலாளித்துவப் புரட்சி நடைபெற இருக்கிறது என்பதும் ஜெர்மனியில் நடைபெறும் முதலாளித்துவ புரட்சி உடனடியாக அடுத்து வரவிருக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முன்னோடியாகவே இருக்கும் என்பதும் இதற்கான காரணங்களாகும்''*

ஆனால் புதிய கூறுகளின் தோற்றமானது உலகப் புரட்சியின் வளர்ச்சிப் பாதையை மேலும் சிக்கலும், நெளிவு சுழிவுகளும், ஏற்ற இறக்கங்களும், வளைவுகளும் திருப்பங்களும் கொண்டதாக மாற்றியது.

— முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான அடிப்படை முரண்பாடு தீர்க்கப்படாமல் நீடிக்கும் அதே சமயம் பூதாகரமான வளர்ச்சியின் காரணமாக முதலாளித்துவம் புதிய கட்டத்..த எட்டியது. முதலாளித்துவத்தின் ஏகபோக கட்டயாகிய—அதி உயர்ந்த இறுதிக் கட்டமாகிய ஏகாதிபத்தியக் கட்டத்தை அடைந்தது.

— மேற்கில் ஏகாதிபத்தியத்தின் தோற்றத்தைத் தொடர்ந்து, கச்சாப் பொருட்கள், சந்தை, மலிவான உழைப்புச் சக்தி இவற்றுக்கான தீராத தாகமும், மூலதனத்தின் ஏற்றுமதியும் காலனிகளைக் கைப்பற்றுவதற்கும், பலகோடி மக்களை அடிமைப்படுத்தவும், ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கும் வழி வகுத்தன. ஒடுக்கப்பட்ட நாடுகளையும், மக்களையும் விடுதலைப் போராட்டங்களில் கிளர்ந்தெழச் செய்தன.

— ஏகாதிபத்தியங்களிடையே உலகம் பங்கீடு செய்யப்பட்டது. ஆனால் உலகப் பங்கீடு அவற்றுக்கு எப்பொழுதும் திருப்தி



படிப்பகம்

www.padippakam.com

யளிப்பதில்லை. ஏற்றத் தாழ்வான வளர்ச்சி விதியின் காரணமாக சில ஏகாதிபத்தியங்கள் விரிவடைந்து மற்றவற்றைப் பின்தள்ளுகின்றன. புதிய சக்திகளின் பலாபலத்தைப் பொருத்து உலகை மறு பங்கீடு செய்யுமாறு நிர்பந்திக்கின்றன. எனவே ஏகாதிபத்திய யுத்தங்களிலிருந்து ஏகாதிபத்தியம் பிரிக்க முடியாதவாறு பிணைந்தது.

—தொழிலாளர் இயக்கத்தில் சந்தர்ப்பவாதம் எழுந்து பலம் [illegible]க் வளர முடிந்தது. ஏனெனில் முதலாளித்துவத்தின் செல்லப் பிள்ளையாகிய ஒரு 'தட்டு' ஒன்றை தோற்றுவிப்பதற்காக ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள ஒரு பகுதி தொழிலாளர்களுக்கு முதலாளித்துவ வர்க்கம் சலுகைகளை வழங்க முடிந்தது. அதாவது காலனி, அரைக்காலனி நாடுகளைக் கொள்ளையடித்து ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள ஒருபகுதித் தொழிலாளர்களின் உலையில் லஞ்ச ஊழலாகக் கொட்ட முடிந்தது. இது இரண்டாம் அகிலத்தின் தலைவர்கள் சந்தர்ப்பவாதிகளாகச் சீரழிவதில் போய் முடிந்தது.

இப்புதிய கூறுகள் அனைத்தும் புதிய அடிப்படை முரண்பாடுகளின், புதிய கட்டத்தின் தோற்றத்தையேக் காட்டுகின்றன. லெனின் ஏகாதிபத்தியத்தின் தன்மைகளையும், வளர்ச்சி விதிகளையும் தொகுத்துரைத்தார். ஏகாதிபத்தியம், முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை அவற்றின் இறுதி எல்லைக்கே — கடைக்கோடி வரம்புக்கே இட்டுச் செல்கிறது. அதற்கு அப்பால் முதலாளித்துவத்தின் அழிவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சகாப்தமும் தொடங்குகின்றன. இந்த அடிப்படையில் 1. முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கத்திற்கும், முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு 2. ஏகாதிபத்தியங்களுக்குள்ளே உள்ள முரண்பாடு 3. ஏகாதிபத்தியங்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் மற்றும் நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய மூன்று அடிப்படை முரண்பாடுகளின் வளர்ச்சி விதிகள் பற்றிய மூன்று அடிப்படை ஆய்வுரைகளை லெனின் தொகுத்தளித்தார். அவை.........

"முதலாவது ஆய்வுரை :

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் நிதி மூலதனத்தின் ஆதிக்கம்; பங்கு மார்க்கெட்டும், பத்திரங்களும் நிதி மூலதனத்தின் பிரதான செயல்பாடுகளில் ஒன்றாக இருப்பது; ஏகாதிபத்தியத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக கச்சாப் பொருட்களின் தோற்றுவாய்களுக்கு மூலதனத்தை ஏற்றுமதி செய்வது; நிதி மூலதனத்தின் ஆதிக்கம் காரணமாக ஒரு நிதி ஆதிக்கக் கும்பலின் செல்வாக்கு எங்கும் நிறைந்து காணப்படுவது—இவையெல்லாம் ஏகபோக மூலதனத்தின் அப்பட்டமான ஒட்டுண்ணித் தன்மையைக் காட்டுகின்றன; முதலாளித்துவ டிரஸ்டுகள், சிண்டிகேட்டுகளின்



படிப்பகம்

www.padippakam.com

சுரண்டல் நுகத்தடியை மேலும் நூறு மடங்கு அதிகச் சுமையாக
ஆக்குகின்றன; ஏகாதிபத்தியத்தின் அடித்தளங்கள் மீது உழைக்
கும் வர்க்கத்துக்குரிய வெறுப்புணர்வை தீவிரப்படுத்துகின்றன; தங்
களது ஒரே விமோசனம் பாட்டாளி வர்க்கப் புரட்சிதான் என்று
பரந்து பட்ட மக்களைப் புரட்சியின் பக்கம் கொண்டு வருகின்றன.

எனவே, இவைகளிலிருந்து பெறப்படுகின்ற முதல் முடிவு:
முதலாளித்துவ நாடுகளில் புரட்சிகர நெருக்கடி உக்கிரமடைதலும்
அந்நாடுகளுக்குள்ளேயே ஒரு முன்னணியில்—அதாவது பாட்டாளி
வர்க்கத்தின் முன்னணியில் எழுச்சிக்கான (வெடித்துக் கிளம்பு
வதற்கான) அம்சங்கள் வளர்தல்.

## இரண்டாவது ஆய்வுரை :

காலனிகள், சார்பு நாடுகளுக்கு ஏற்றுமதியாகிற மூலதனத்-
தின் அளவு அதிகரித்தல்; அகில உலகமும் ஆதிக்கத்தில்
கொண்டு வரப்படும் வரை 'செல்வாக்கு
மண்டலங்களும்' காலனிய அடிமைப்படுத்தலும் விரிவடைதல்; உல
கத்தின் பெரும்பான்மையான மக்களை விரல்விட்டு எண்ணக்கூடிய
சில 'முன்னேறிய' நாடுகள் நிதி மூலதனத்தின் அடிமைத் தனத்-
திற்கும் காலனி ஒடுக்கு முறைக்கும் உள்ளாகக் கூடிய உலகக்
கட்டமைவாக முதலாளித்துவம் மாற்றமடைதல்— இவைகள் எல்-
லாம் ஒரு புறம், தனித்தனியான தேசிய பொருளாதாரங்களையும்
தேசிய எல்லைகளையும் உலகப் பொருளாதாரம் என்றழைக்கப்படு
கின்ற ஒரே சங்கிலித் தொடரின் கண்ணிகளாக மாற்றின. மற்றொரு
புறம், உலகத்தின் மக்கள்தொகையை இரண்டு முகாம்களாகப் பிளவு
படுத்திவிட்டன. பரந்த காலனிகளையும் சார்புநாடுகளையும் அடக்கி
ஒடுக்கி சுரண்டுகிற ஒருசில விரல்விட்டு எண்ணக்கூடிய 'முன்னே
றிய' முதலாளித்துவ நாடுகள் என்றும். ஏகாதிபத்திய ஒடுக்குமு-
றையை எதிர்த்து தங்களது விடுதலைக்காக ஒரு போராட்டத்தைத்
தொடுக்கக் கூடிய நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள காலனிய
மற்றும் சார்பு நாடுகளில் உள்ள பெரும்பான்மை மக்கள் என்றும்
இரண்டு முகாம்களாக பிளவுபடுத்தி விட்டன.

எனவே, இவைகளிலிருந்து பெறப்படுகின்ற இரண்டாவது
முடிவு: காலனிய நாடுகளில் புரட்சி நெருக்கடி உக்கிரமடைதலும்,
ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கலகத்திற்கான அம்சங்கள் ஏகாதி
பத்திய நாடுகளுக்கு வெளியே ஒரு முன்னணியில் அதாவது காலனி
ஆதிக்க எதிர்ப்பு முன்னணியில் வளர்தலும்.

## மூன்றாவது ஆய்வுரை :

காலனிகளும், 'செல்வாக்கு மண்டலங்களும்' ஏகபோக உட-
மையாதல். முதலாளித்துவ நாடுகளுக்கு இடையில் ஏற்றத் தாழ்-



படிப்பகம்

www.padippakam.com

வான வளர்ச்சி ஏற்படுவதால் ஏற்கனவே பிரதேசங்களைக் கைப்பற்றி வைத்திருக்கும் நாடுகளுக்கும் புதிதாக 'பங்கு' கோரும் நாடுகளுக்கும் இடையில் உலகை மறுபங்கீடு செய்வதற்கான வெறித்தனமான போட்டிநிகழ்தல். ஏற்கனவே, 'குலைந்த'தை சமநிலைக்குக் கொண்டு வருவதற்கான ஒரே சாதனமாக ஏகாதிபத்திய யுத்தங்கள் மாறுவது இவையனைத்தும் மூன்றாவது முன்னணியில், முதலாளித்துவத்துக்குள்ளேயே, போராட்டத்தைத் தீவிரமாக்குகின்றன. இவை ஏகாதிபத்தியத்தையே பலவீனப்படுத்துகின்றன. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக முதல் இரண்டு முன்னணிகளும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க முன்னணியும், காலனி ஆதிக்க விடுதலை முன்னணியும் ஒன்றுபட வழிவகைகள் செய்கின்றன.

எனவே, இவைகளிலிருந்து பெறப்படுகின்ற மூன்றாவது முடிவு: ஏகாதிபத்தியத்தின் கீழ் யுத்தங்கள் தவிர்க்கப்படவே முடியாது. உலக ஏகாதிபத்திய முன்னணிக்கு எதிராக ஐரோப்பிய பாட்டாளி வர்க்கப் புரட்சியும், கிழக்கத்திய நாடுகளின் விடுதலைப் புரட்சியும் இணைந்து ஒரு கூட்டணி ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.''

(ஸ்டாலின், லெனினிசத்தின் பிரச்சினைகள்,
அயல்மொழி பதிப்பகம், பீகிங், 1976, பக்கம் 24-25)

இம்முடிவுகள் அனைத்தையும் தொகுத்து இது, ''ஏகாதிபத்தியம் மற்றும் சோசலிசப் புரட்சியின் சகாப்தம்'' என்று லெனின் தெரிந்த முடிவாக முன்வைத்தார். இதற்குத் தகுந்தாற் போல புரட்சியின் குணாம்சம், அதன் வரையறை, ஆழம், பொதுவான தன்மை உட்பட பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்த அணுகுமுறையே மாறியது. ஸ்டாலின், லெனினிசத்தின் அடிப்படை அம்சங்களில் தொகுத்தளித்தவாறு நான்கு மாறுதல்கள் ஏற்பட்டன. அவை......

> ''முன்பெல்லாம், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான முன்தேவைகளை ஆய்வு செய்யும்போது தனிப்பட்ட நாடுகளின் பொருளாதார நிலைமைகளின் கண்ணோட்டத்திலிருந்து ஆராயும் முறை வழக்கமாகக் கையாளப்பட்டது. இப்போது, இந்த அணுகுமுறை போதுமானதாக இல்லை. இப்போது பாட்டாளி வர்க்கப் புரட்சி என்ற விசயத்தை அனைத்து நாடுகளின் அல்லது பெரும்பான்மையான நாடுகளின் பொருளாதார நிலைமைகளைக் கணக்கிலெடுத்து ஆராய வேண்டியிருக்கிறது. ஏனெனில் தனிப்பட்ட நாடுகளும், தேசியப் பொருளாதாரங்களும் தன்னிறைவான அலகுகளாயிருந்த நிலைமை இப்போது இல்லாமற் போய்விட்டது. அவை உலகப் பொருளாதார அமைப்பு என்ற சங்கிலியின் கண்ணிகளாகி



படிப்பகம்

www.padippakam.com

விட்டன. ஏனெனில் பழைய 'நாகரீக' முதலாளித்துவ மானது ஏகாதிபத்தியமாக பரிணமித்துவிட்டது. உலகின் ஆகப் பெரும்பான்மையான மக்கள், விரல்விட்டு எண்ணக்கூடிய சில 'முன்னேறிய' நாடுகளால் நிதி மூலதன ஆதிக்கத்துக்கும் காலனிய ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கப்படும் ஒரு உலக அமைப்பே ஏகாதிபத்தியம்.

''முன்பெல்லாம், தனிப்பட்ட நாடுகளில் அல்லது மேலும் தெளிவாகக் கூறுவதானால் ஒன்று அல்லது மற்றொரு வளர்ச்சி அடைந்த நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான புற நிலைமைகள் இருக்கின்றனவா' அல்லது இல்லையா என்று பேசுவது சரியானதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்போது, இந்தக் கண்ணோட்டம் போதுமானதாக இல்லை. பிரிக்க முடியாத ஒட்டு மொத்தமான ஏகாதிபத்தியப் பொருளாதார அமைப்பு முறையில் புரட்சிக்கான புறச்சூழ்நிலைகள் இருப்பது பற்றியே இப்போது நாம் பேசியாக வேண்டும். ஒட்டு மொத்தமான கட்டமைவு புரட்சிக்குப் பக்குவப்பட்டிருக்குமானால், அல்லது இன்னும் சரியாகச் சொல்வதானால் ஒட்டு மொத்தக் கட்டமைவே புரட்சிக்குப் பக்குவப் பட்டிருப்பதால், இந்த உலக ஏகாதிபத்திய கட்டமைவுக்குள், சில நாடுகள் போதுமான அளவு தொழில் வளர்ச்சி அடையாமலிருப்பதானது புரட்சிக்குத் தடையான விசய மாக இல்லை.

''முன்பெல்லாம், மூலதனத்தின் ஒரு தனியான தேசீய அணியை எதிர்க்கும், அதன் எதிர்த்துருவமான, ஒன்று அல்லது மற்றொரு வளர்ச்சியுற்ற நாட்டின் பாட்டாளி வர்க்க புரட்சியைப் பற்றி தன்னந்தனியானதொரு சுயதேவையுடைய அடக்கமாகப் பேசுவது ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது இந்தக் கண்ணோட்டம் போதுமானதாக இல்லை. இப்போது, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிப் பேச வேண்டும். ஏனென்றால், மூலதனத்தின் தனித்தனியான தேசிய அணிகள் ஏகாதிபத்தியத்தின் உலக அணி என்று அழைக்கப்படுகின்ற சங்கிலியின் கண்ணிகளாக மாறிவிட்டன. அனைத்து நாடுகளின் புரட்சி இயக்கம் என்ற பொதுவான முன்னணியைக் கொண்டே இதை, இனி எதிர்க்க வேண்டும்.

''முன்பெல்லாம், பாட்டாளி வர்க்கப் புரட்சியானது குறிப்பிட்ட ஒரு நாட்டில் ஏற்படும் வளர்ச்சியின் விளை



படிப்பகம்

www.padippakam.com

வானதாக மட்டும் கருதப்பட்டது. இப்போது இந்தக் கண்ணோட்டம் போதுமானதாக இல்லை. இப்போது பாட்டாளி வர்க்கப் புரட்சியை உலக ஏகாதிபத்திய கட்டமைவுக்குள் உள்ள முரண்பாடுகளுடைய வளர்ச்சியின் விளைவாக ஒன்று அல்லது மற்றொரு நாட்டில் உலகஏகாதிபத்திய முன்னணி என்ற சங்கிலியின் கண்ணி நொறுக்கப்படுவதையே பிரதானமாகக் கருத வேண்டும்.''

எனவே, மார்க்ஸ்-எங்கெல்ஸ் காலத்தில்—ஏகாதிபத்திய கட்டத்திற்கு முன்—கருதியதைப்போல் அல்லாமல் முதலாளித்துவம் அதிகமாக வளர்ச்சியுறாத பின்தங்கிய நாடுகளிலேயே கூட, ஏகாதிபத்திய சங்கிலியின் கண்ணி எங்கு பலவீனமாக இருக்கிறதோ அந்த நாடுகளில்முதலாளித்துவ படைவரிசை முதலில் தகர்க்கப்படும். அனைத்து அல்லது பெரும்பான்மையான வளர்ச்சியுற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தின் ஒருங்கிணைந்த நடவடிக்கையின்றி ஒரு நாட்டில் புரட்சி வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்று முன்பு கருதப்பட்டது. இப்பொழுது, அது சாத்தியமாகிறது: ஏகாதிபத்திய நிலைமைகளின் கீழ் பல்வேறு நாடுகளின் ஏற்றத்தாழ்வான, விட்டு விட்டுத் தாவக்கூடிய தன்மையுடைய வளர்ச்சி, தவிர்க்க முடியாத யுத்தங்களுக்கு வழிவகுக்கும் பேரழிவுடைய முரண்பாடுகள், உலகிலுள்ள எல்லா நாடுகளின் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சி — ஆகியவை அனைத்தும் தனிப்பட்ட நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியைச் சாத்தியமாக்கியதோடு மிகவும் அவசியமுமாக்கின. அதாவது 1917ல் மற்ற எல்லா நாடுகளையும் விட உலக ஏகாதிபத்திய சங்கிலியின் படைவரிசை ருசியாவில் பலவீனமாக இருந்தது. ஏனெனில் ஏகாதிபத்தியத்தின் அனைத்து முரண்பாடுகளும் ருசியாவில் மையங்கொண்டிருந்தன. புரட்சி கருவுற்றிருந்தது. எனவே ருசியாவில் மட்டுமே அம்முரண்பாடுகளை புரட்சிகரமான முறையில் தீர்த்துக் கொள்ளும் நிலையில் இருந்தன. ருசியாவில் தான் முதன்முறையாக ஏகாதிபத்திய சங்கிலி உடைத்தெறியப்பட்டு பாட்டாளி வர்க்கப் புரட்சி நடந்தேறியது.

மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து உலகில் ஏற்கனவே நிலவிய மூன்று அடிப்படை முரண்பாடுகளையும் மேலும் கூர்மையாக்கிய சோசலிச கட்டமைவிற்கும், முதலாளித்துவ கட்டமைவிற்கும் இடையிலான புதியதொரு அடிப்படை முரண்பாடு தோன்றியது. உலகப் புரட்சி நிறைவு பெறுவது பற்றி ஸ்டாலின் பின்வருமாறு கூறுகிறார் :

''உலகப் புரட்சியின் வளர்ச்சிப்போக்கில், தனிப்பட்ட முதலாளித்துவ நாடுகளில் ஏகாதிபத்திய மையங்கள் மற்றும் இந்த நாடுகள் அடங்கிய உலகு தழுவிய ஏகாதிபத்திய கட்டமைவு ஆகியவற்றுடன்,



படிப்பகம்

www.padippakam.com

தனிப்பட்ட சோவியத் நாடுகளில் சோசலிச மையங்களும் மற்றும் இந்த நாடுகள் அடங்கிய உலகெங்கும் உள்ள சோசலிச கட்டமைவு தோற்றுவிக்கப்படும். கட்டவிழ்த்து விடப்படும். உலகப் புரட்சியின் வரலாற்றை இவ்விரு கட்டமைவுகளுக்கிடையிலான போராட்டமே நிரப்பும்; ஆகப் பெரும்பாலும் இவ்வாறுதான் தான் இருக்கும்.''

உலகப் புரட்சி இயக்கத்தின் ஒரு சக்திவாய்ந்த வெளிப்படையான முதல் மையமாக ஏகாதிபத்திய நாடுகள் என்னும் பெருங் கடலில் ஒரு தனித்தீவாக சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை தோற்றுவித்த மாபெரும் அக்டோபர் சோசலீசப் புரட்சி கிழக்கு நாடுகளில் எழுச்சியைத் தோற்றுவித்தது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான உலகு தழுவிய புரட்சிகர இயக்கத்தின் பொது நீரோட்டத்திற்கு, பொதுப்புரட்சிகர முன்னணிக்கு காலனி நாடுகளது மக்களை இழுத்து வந்தது. இப்பொதுப் புரட்சிகர முன்னணி சோசலீச ருசியாவின் தலைமையில் இரண்டாம் உலகப்போரில் பாசிசத்தை வெற்றி கண்டது. அதன் மூலம் கணிசமான அளவு ஏகாதிபத்தியத்தைப் பலவீனப்படுத்தியது அதேசமயம் சீனா மற்றும் சில கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மக்கள் ஜனநாயகப் புரட்சியில் வெற்றிபெற்று முதலாளித்துவ உலகக் கட்டமைவிலிருந்து அதன் படைவரிசையை—சங்கிலியை—உடைத்துக் கொண்டு வெளியேறின. உலக ஏகாதிபத்திய கட்டமைவிற்கு நேரெதிரான உலக சோசலிசக் கட்டமைவு சக்திவாய்ந்ததாகத் தோன்றியது. ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிராக காலனிய, அரைக்காலனிய நாடுகளது, மக்களது விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு நம்பகமான ஆதரவு சக்தியாக உலக சோசலிசக் கட்டமைவு விளங்கியது.

ருசியாவும், அதன் தொங்குசதை நாடுகளும் முதலாளித்துவத்தை நிலைநாட்டி துரோகமிழைத்ததானது, சர்வதேச பாட்டாளி வர்க்க இயக்கத்திலும், உலகத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகரப் போராட்டத்தின் முன்னணியிலும் வெவ்வேறு அளவுகளில் தவிர்க்க முடியாதபடி பிளவுகளையும். தற்காலிக பின்னடைவு மற்றும் கஷ்டங்களையும் ஏற்படுத்தியது. இருப்பினும் ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், நாடுகளுக்கும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்துக்கும் சாதகமான பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. பாட்டாளி வர்க்கத்தினது, பல்வேறு நாடுகள் மக்களது புரட்சிப் போராட்டங்கள் வெவ்வேறு கட்டங்களை எட்டியுள்ளன. அவை அனைத்தும் தமக்கே உரித்தான குணாம்சங்களைக் கொண்டிருப்பினும் உலக வரலாற்றின் வளர்ச்சி விதிகளை மாற்றியமைத்து விடவில்லை.

இன்றைய சகாப்தம் லெனினிச சகாப்தமாகவே — ஏகாதிபத்



படிப்பகம்

www.padippakam.com

தியமும், பாட்டாளி வர்க்கப் புரட்சியினதும் ஆன சகாப்தமாகவே—நீடிக்கிறது. லெனினிசத்தின் அடிப்படைக் கொள்கைகள் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின், ஒடுக்கப்பட்ட நாடுகள், மக்களின் போராட்டங்களை வழி நடத்தும் கோட்பாட்டு அடிப்படையாக விளங்குகின்றன. அதாவது இன்றைய உலகின் நான்கு அடிப்படை முரண்பாடுகளும் அவற்றின் அனைத்து குணாம்சங்களோடும் வளர்ச்சி விதிகளோடும் நீடிக்கின்றன.

முதலாளித்துவ கட்டமைவிலிருந்து சோசலிசக் கட்டமைவிற்கு உலகு தழுவிய அளவிலான மாற்றம் என்பது சிக்கல் மிக்க போராட்டங்களும், நீண்ட நெடியதும் வேதனையும் இடர்ப்பாடுகளும் நிறைந்த நிகழ்ச்சிப் போக்காகும். இன்றைய உலகின் அடிப்படை முரண்பாடுகளின் தீர்வே இம்மாற்றத்தை நிறைவு செய்யும். இம்மாற்றத்தை நிறைவு செய்யும் நிகழ்ச்சிப் போக்கில் புதிய முரண்பாடுகள் தோன்றுவதும், வெவ்வேறு காலகட்டங்களில் உலக அரசியல் சக்திகளின் வெவ்வேறு சேர்க்கை ஏற்படுவதும் தவிர்க்க முடியாதவையாகும். முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான அடிப்படை முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான சோசலிசப் புரட்சி என்னும் நிகழ்ச் போக்கில், ஏகாதிபத்தியத்திற்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள் மற்றும் மக்களுக்கும் 'இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியங்களுக்குள்ளே உள்ள முரண்பாடு ஆகிய புதிய அடிப்படை முரண்பாடுகள் தோன்றின. ஏகாதிபத்தியத்தின் சேமிப்பு சக்திகளாக இருந்த காலனிய மற்றும் சார்பு நாடுகளை, பாட்டாளி வர்க்கத்தின் சேமிப்பு சக்திகளாக மாற்றி உலக அரசியல் சக்திகளில் மறுசேர்க்கையை கொண்டு வந்தது. மூன்று அடிப்படை முரண்பாடுகளின் தீர்வுக்கான சோசலிசப் புரட்சி மற்றும் தேச விடுதலைப் போர்கள் என்னும் நிகழ்ச்சிப் போக்கில் சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்குமான புதிய அடிப்படை முரண்பாடு தோன்றியது. அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகள், மக்கள் மற்றும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தோடு சோசலிச நாடுகளும் சேர்ந்து புதிய மறு சேர்க்கையைக் கொண்டு வந்தது. ஆனால் அடிப்படை முரண்பாடுகள் நீடிக்கவே செய்தன.

எனவே, முதலாளித்துவ சமுதாயத்தில் சமுதாயமயமாகிவிட்ட பொருளுற்பத்திக்கும் முதலாளித்துவ கவீகரிப்புக்கும் இடையிலான முரண்பாடு பின்னர் தனிப்பட்ட தொழில் நிலையத்தில் பொருளுற்பத்தியின் ஒழுங்கமைப்புக்கும், பொதுவாழ்வில் சமுதாயத்தில் பொருளுற்பத்தியின் அராஜகத்துக்கும் இடையிலான முரண்பாடாக எவ்வாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறதோ அதே-போன்று இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் சாராம்சத்தில் நான்கு அடிப்படை முரண்பாடுகளும் தீர்க்கப்படாமல் இருக்கும் அதேசமயம், அவை புதிய முரண்பாடுளில் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அதாவது ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடு, 1. இருமேல்நிலை வல்லரசுகளுக்கும் இடையிலான முரண்பாடாக வும் 2. இரு மேல்நிலை வல்லரசுகளுக்கும் இரண்டாம் உலகநாடுக ளுக்கும் இடையிலான முரண்பாடாகவும் 3. இரண்டாம் உலக நாடு களுக்குள்ளே உள்ள முரண்பாடாகவும் வெளிப்படுகிறது.

ஏகாதிபத்தியங்களுக்கும் ஒடுக்கப்பட்ட நாடுகள் மற்றும் மக்-களுக்கும் இடையிலான முரண்பாடு, 1. இரு மேல்நிலை வல்லரசுக -ளுக்கும் ஒடுக்கப்பட்ட மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடாகவும் 2. இரண்டாம் உலக நாடுக-ளுக்கும் மூன்றாம் உலக நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடா கவும் வெளிப்படுகிறது.

மற்ற இரு அடிப்படை முரண்பாடுகளான சோசலிச அமைப் பிற்கும் முதலாளித்துவ அமைப்பிற்கும் இடையிலான முரண்பாடும், முதலாளித்துவ நாடுகளில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், பாட்-டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடும் தீர்க்கப்படாமல் நீடிக்கவே செய்கின்றன.

எனவே, உலக வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த உண்மை நிலவரம்தான் பாட்டாளி வர்க்கம் பின்பற்ற வேண்டிய உலக அர சியல் சக்திகளின் வகைப்படுத்துதலையும், அதற்கேற்றபடி யுத்த தந் திரம், போர்த்தந்திரத்தையும் தீர்மானிக்கிறது.

★★★
★★

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியின் முன்னுள்ள தேசிய, சர்வதேசிய கடமைகள் - பாட்டாளி வர்க்கத்தின் தேசிய, சர்வதேசிய யுத்த தந்திரங்கள்

ஏகாதிபத்திய உலகில் பிரதானமாக இரண்டு போக்குகள், இரண்டு சாரிகள் இருக்கின்றன. ஒன்று, ஏகாதிபத்திய விலங்கு களைத் தகர்த்தெறிந்து அரசியல் விடுதலைக்கும், சுதந்திரமான தேசிய அரசை நிறுவுவதற்குமான போக்கு—அதாவது ஏகாதிபத்திய ஒடுக்குமுறை மற்றும் காலனிய சுரண்டல் காரணமாக எழும் போக்கு. இரண்டு, ஒரு உலக சந்தையும், ஒரு உலகப் பொருளா தார அமைப்பும் தோன்றியதன் விளைவாய் எழுந்த தேசங்களுக்கு இடையிலான நெருக்கமான பொருளாதார உறவுகள். உலக முத- லாளித்துவப் பொருளாதார அமைப்பு பல்வேறு கட்டங்களினூடே உருவாகியது. 1. முதலாளித்துவம் தோன்றும் பொழுதிருந்த கால கட்டம் — சந்தை வியாபாரத் தன்மையுடைய முதலாளித்துவம். 2. தொழிற் புரட்சியின் காலகட்டம் — புதிய தொழில் மூலதனமும் போட்டி வடிவிலான முதலாளித்துவ சந்தையும் சாராம்சமாக ஆதிக் கம் செலுத்திய காலகட்டம். 3. இறுதியாக, ஏகபோக முதலாளித் துவ, ஏகாதிபத்திய காலகட்டம் ஆகிய மூன்று கட்டங்களை மிகத் தெளிவாகப் பிரித்தறிய முடியும்.

'தேசிய இனப் பிரச்சனை குறித்த விமர்சனவுரைகளில்' லெனின் பின்வருமாறு கூறுகிறார்; ''வளரும் முதலாளித்துவம் தேசிய இனப் பிரச்சனையில் இரு வரலாற்றுப் போக்குகளை அறியும். ஒன்று : தேசிய வாழ்விலும் தேசிய இயக்கத்திலும் வழிப்புறு வது. தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது. தேசிய அரசு களைத் தோற்றுவிப்பது. இரண்டு: தேசங்களுக்கிடையிலான எல்லா வகையான கலந்துறவாடுதல்களும் வளர்வதும் துரிதப்படுவதும். தேசியத் தடைகள் தகர்ந்துபோவது. மூலதனம், பொதுவில் பொருளாதார வாழ்வு, அரசியல், விஞ்ஞானம் இன்னும் பிறவற்றில் ர்வதேசிய ஐக்கியம் தோன்றுவது.



படிப்பகம்

www.padippakam.com

''இவ்விரண்டு போக்குகளும் முதாளித்துவத்தின் உலகு த ஒ- விய ஒரு விதியாகும். முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் ஆ ம பத்தில் முதற்போக்கு மேலோங்கி நிற்கிறது. இரண்டாவதுபோ ந முதிர்ந்த முதலாளித்துவத்தை கு ணா ம் ச ப் ப டு த் து கி ற து. அதாவது சோசலிச சமுதாயமாக மாறுவதை நோக்கி நக ும் போக்காகும்.''

இவ்விரு போக்குகளின்பால் ஏகாதிபத்தியவாதிகளும் பொது டைமை வாதிகளும் மேற்கொள்ளும் கண்ணோட்டம் குறித்து பின்வரு மாறு ஸ்டாலின் கூறுகிறார்: ''ஏகாதிபத்தியத்திற்கு இவ்விரண்டு போக்குகளும் இணக்கங்காணமுடியாத முரண்பாடுகளாகும்—ஏனெ ன- னில்,காலனிகளைக் கொள்ளையிடாமல், 'ஒருங்கிணைந்த மு ழு மை' என்னும் கட்டமைவிற்குள் பலவந்தமாக இருத்திக் கொள்ளா மல் ஏகாதிபத்தியம் நிலைத்திருக்கவே முடியாது. ஏனெனில், ஏகாதிபத்தியம் நாடு பறித்தல் மற்றும் காலனிய வெற்றி மூலம் மட்டுமே தேசங்களை ஒருங்கே கொண்டுவர முடியும். அதுவன்றி, பொதுவாக கூறுமிடத்து, ஏகாதிபத்தியம் என்பதை எண்ணியும் பார்க்க முடியாது.

''இதற்கு நேர்மாறாக பொதுவுடமை வாதத்திற்கு இவ்விரு போக்குகளும் ஒடுக்கப்பட்ட மக்களை ஏகாதிபத்திய நுகத்தடியி- லிருந்து மீட்பது என்ற ஒரே லட்சியத்தின் இருபக்கங்களைத் தவிர வேறில்லை. — ஏனெனில், பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் தாமே முன்வந்து விரும்பும் ஒப்பந்தம் அடிப்படையில் மட்டுமே ஒரே உலகப் பொருளாதார அமைப்பிற்குள் பல தேசிய இனங்களின் ம க் க ள் இணைவது சாத்தியமாகும் என்பதையும், காலனிகளை சு த ந் திரமான அரசுகளாக மாற்றுவதன் வழியாகவே 'ஒ ரு ங் கி ணை ந்த' ஏகாதிபத்திய 'முழுமை'யிலிருந்து காலனிகளைப் பிரிப்ப -தன் வழியாகவே பல தே சி ய இனங்களின், நாடுகளின் மக்கள் தாமே முன்வந்து விரும்பும் ஒரு ஐக்கியமாக அமைவதற்கான பாதை இருக்கிறது என்பதையும் பொதுவுடமைவாதம் அறியும்.''

எனவேதான் ஆளும் நாடுகளின் (ஏகாதிபத்திய நாடுகளின்) பாட்டாளி வர்க்கத்தின் முன்னும் ஆளப்படும் நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தின் முன்னும் இருவேறு கடமைகள் உள்ளன. ஏகாதிபத் தியத்தைத் தூக்கியெறிந்து, ஒடுக்கப்பட்ட மக்களையும் ,நாடுகளை- யும் விடுதலை செய்து அனைத்து தேசிய இனங்கள், நாடுகளது மக் களையும் ஒரே உலகப் பொருளாதார அமைப்பில் எதிர்காலத்தில் ஐக்கியப்படுத்தும் இலட்சியத்தை நோக்கியே இக்கடமைகள் இருக் கின்றன. ஆளும் நாடுகளில், தமது ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட விரும்பாத, அவற்றின் காலனிகளை ஒடுக்குமுறையிலி- ருந்து விடுவிப்பதற்கும், பிரிந்து போவதற்கும் போராடும் ஒடுக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட மக்களின் போராட்டங்களை ஆதரிக்க விரும்பாத திரிபுவாத, நவீன திரிபுவாத சமூக வெறித்தனத்திற்கு எதிராக தொடர்ச்சியாக, உறுதியாக, தீர்மானகரமாக போராட வேண்டியது அவசியமாகிறது. இப்போராட்டமின்றி ஆளும் நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தை, உண்மையான சர்வதேசிய உணர்விலும் ஒடுக்கப்பட்ட நாடுகள் தேசங்களது உழைக்கும் மக்களோடு நெருங்கிய உறவு என்னும் உணர்விலும், பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான உண்மையான தயாரிப்பு உணர்விலும் பயிற்றுவிப்பதை எண்ணியும் பார்க்க முடியாது.

ஒடுக்கப்பட்ட நாடுகளில், தேசிய குறுகிய வாதத்திற்கு மேல் சிறிதும் தலைதூக்க விரும்பாத, விடுதலை இயக்கத்திற்கும் ஆளும் நாடுகளின் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்குமுள்ள உறவுகளைப் புரிந்து கொள்ளாத திரிபுவாதம், நவீன திரிபுவாதம், சீர்திருத்தவாதங்களின் தேசிய தனிமைவாதம், குறுகிய மனப்போக்கு, ஒதுங்கும் மனப்போக்கு ஆகியவற்றிற்கு எதிராகப் போராட வேண்டியிருக்கிறது. இப்போராட்டமின்றி பொது எதிரியைத் தூக்கியெறியும், ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறியும் போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட நாடுகளது பாட்டாளி வர்க்கம் தனித்தன்மையையும், ஆளும் நாடுகளின் பாட்டாளி வர்க்கத்தோடு வர்க்க ஒற்றுமையையும் பாதுகாப்பது என்பதை எண்ணியும் பார்க்க முடியாது. இதுவன்றி சர்வதேசியமே சாத்தியமில்லை என்பதோடு, இவ்வாறுதான் ஒடுக்கப்படும் மற்றும் ஒடுக்கும் நாடுகளின் உழைக்கும் மக்கள் புரட்சிகரமான சர்வதேசிய உணர்வில் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

ஒடுக்கப்படும் மற்றும் ஒடுக்கும் நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துடன் கூடவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் தனது வரலாற்றுக் கடமைகளை தேசிய ரீதியாகவும் சர்வதேசிய ரீதியாகவும் நிறைவேற்றுவதற்கு லெனின்—ஸ்டாலின் தலைமையிலான மூன்றாம் பொதுவுடமை அகிலம் பெரிதும் உதவியிருக்கிறது. உலகப் புரட்சியாளர்களை இணைக்கும் அத்தகைய அமைப்பு ஒன்று தற்போது இல்லையாயினும்பாட்டாளி வர்க்க சர்வதேசியம் உலகப் புரட்சிக்கான உலகு தழுவிய ஒரு யுத்ததந்திரத்தைக் கோருகிறது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள பாட்டாளி வர்க்கமும் உலகு தழுவிய யுத்ததந்திரத்திற்குப் பொருந்தும்படி மட்டுமே தமது நாட்டுக்கான யுத்ததந்திரத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். உலகப் புரட்சியின் வெற்றிக்காக தூக்கியெறியப்பட வேண்டிய ஏகாதிபத்தியத்தின் சர்வதேசிய குணாம்சம் காரணமாக உலகு தழுவிய யுத்ததந்திரம் தேவையாகிறது. சர்வதேசிய குணாம்சமுடைய உலக ஏகாதிபத்தியத்திற்கெதிராக பொதுப்புரட்சிகர முன்னணி ஒன்றும் தேவைப்படுகிறது. 'லெனினிசத்தின் அடிப்படை அம்சங்களில்' ஸ்டாலின் பின்வருமாறு அதன் அவசியத்தை விளக்குகிறார்:



படிப்பகம்

www.padippakam.com

''1. உலகம் இரு முகாம்களாக பிரிந்துள்ளது. நிதி மூல தனத்தை வைத்துக் கொண்டு உலகின் ஆகப் பெரும்பான் மையான மக்களைச் சுரண்டும் விரல்விட்டு எண்ணக்கூடிய சில நாகரீகமடைந்த நாடுகள் ஒரு முகாம்; காலனிகளி- லும் சார்பு நாடுகளிலுமுள்ள அடக்கி ஒடுக்கிச் சுரண்டப் படும் பெரும்பான்மையான மக்கள் ஒரு முகாம்.

2. நிதி மூலதனத்தால் அடக்கி ஒடுக்கிச் சுரண்டப்படும் காலனிகள் மற்றும் சார்பு நாடுகள் ஏகாதிபத்தியத்துக்கு ஒரு பரந்து விரிந்த ஆதரவு சக்தியாகவும், அதன் பலத்துக் கான ஊற்று மூலமாகவும் திகழ்கின்றன.

3. காலனிகளிலும் சார்பு நாடுகளிலுமுள்ள ஒடுக்கப்படும் மக்களின், ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிப் போராட்டமே அவர்களை ஒடுக்குமுறையிலிருந்தும் சுரண் டலிலிருந்தும் விடுவித்துக் கொள்வதற்கான ஒரே பாதை.

4. மிகப் பெரிய காலனிகளும் சார்பு நாடுகளும் ஏற்கனவே தேசவிடுதலைப் பாதையை மேற்கொண்டு விட்டன. இது உலக முதலாளித்துவத்துக்கு நெருக்கடியைக் கொண்டு வந்தே தீரும்.

5. முன்னேறிய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்க இயக்- கம், ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுவித்துக் கொள்வ தற்கான காலனிகளின் தேச விடுதலை இயக்கம் ஆகியவற் றின் நலன்கள், புரட்சி இயக்கத்தின் இவ்விரு வடிவங்க -ளும் பொது எதிரியான ஏகாதிபத்தியத்துக்கு எதிராக பொது முன்னணி அமைக்கப்பட வேண்டுமெனக் கோரு கின்றன.

6. முன்னேறிய நாடுகளிலுள்ள தொழிலாளர் வர்க்கமும் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை இயக் -கமும் தமக்குள் பொதுவான புரட்சிகர முன்னணியை உரு வாக்கி உறுதிப்படுத்திக் கொண்டாலொழிய அவை வெற்றி பெறுவது சாத்தியமில்லை''.

உலக ஏகாதிபத்தியத்தினைத் தூக்கியெறிவதற்காக வகுக்கப் கடும் உலகு தழுவிய யுத்த தந்திரத்தின் பொதுப் புரட்சிகரமுன்னணி எத்தகையதாக இருக்கும், எந்த மாதிரியான சக்திகளை உள்ளடக்கி இருக்கும் என்பது யுத்த தந்திரத்தின் மிக முக்கியமான பிரச்சனை- யாகும். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான அரசுகளும், இயக்கங்களும் இப்போது புரட்சிகர முன்னணியின் அங்கமாகும் என் பது பிரச்சனைக்கிடமற்றது. பாட்டாளி வர்க்கம் தவிர பிற ஏகாதி பத்திய எதிர்ப்பு வர்க்கங்கள், சக்திகளின் தலைமையிலான தேச



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை இயக்கங்களும், சுதந்திரமான போராட்டங்களும் உலக தழுவிய யுத்த தந்திரத்தின் பொதுப் புரட்சிகர முன்னணியின் அங்கமா இல்லையா என்பதே பிரச்சனைக்குரியதாகும். ஏகாதிபத்திய எதிர்ப்புடையவை என்பதால் யதார்த்தமாகவே அவை புரட்சிகரமானவை. இம்மாதிரியான இயக்கங்களைப் பற்றி, ஒடுக்கப்பட்ட நாடுகளை சுதந்திரமான அரசுகளாக மாற்றுவதற்கும், உலக சோசலிசத்தின் வெற்றிக்கு பொருளாயத அடிப்படையாக அமையும் உலகப் பொருளாதார அமைப்பிற்கு இட்டுச் செல்வதாகவும், பொதுவாக ஏகாதிபத்தியத்தை பல்வேறு படிகளில் பலவீனப்படுத்துவதாகவும் பாட்டாளி வர்க்கம் கருத வேண்டும். பாட்டாளி வர்க்கம் அல்லாத மற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு வர்க்கங்களும் சக்திகளும் தலைமையேற்கும் தேசிய விடுதலை இயக்கங்களும், தேசிய சுதந்திரத்திற்கான இயக்கங்களும் வெற்றி பெற்ற பின்னர், அவை அரசு அமைத்த பின்னரும், அப்படிப்பட்ட நாடுகளும் தேசங்களும் கூட பொதுப் புரட்சிகர முன்னணியில் புரட்சிகர பாத்திரமாற்ற முடியும்.

மாபெரும் அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமையேற்று வழிநடத்தும் தகுதியை முதலாளித்துவ வர்க்கம் வரலாற்று ரீதியில் இழந்து விட்டது. முதலாளித்துவ வர்க்கம் தொடர்ச்சியான, உறுதியான ஜனநாயகத்திற்காக நிற்காது. பாட்டாளி வர்க்கம் மட்டுமே தொடர்ச்சியான, உறுதியான ஜனநாயகத்திற்காக நிற்கிறது. அது மட்டுமே முற்றும் முழுமையாக ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிக்க வல்லது என்பது நிலைநாட்டப்பட்டுவிட்டது என்று மார்க்சிய-லெனினிய ஆசான்கள் வரையறுத்துக் கூறியதை, 'இனிமேல் அனைத்து வகைப் புரட்சிகர இயக்கங்களையுமே பாட்டாளி வர்க்கம் மட்டுமே தலைமை ஏற்று நடத்த முடியும் அல்லது பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்கும் இயக்கங்கள் மட்டுமே புரட்சிகரமானது' என்று சிலர் வியாக்கியானம் செய்கின்றனர். ஆனால் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான தேசிய விடுதலை இயக்கங்களையும், சுதந்திரத்துக்கான இயக்கங்களையும் புரட்சிகரமான முறையில் மற்ற வர்க்கங்கள், சக்திகள் நடத்தவும் முடியும். அதில் வெற்றி பெற்று, அவை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும் முடியும். அல்ஜீரியா, இந்தோனேசியா, மொசாம்பிக் இன்னும் பல நாடுகளில் இவ்வாறு நடந்தேறியுள்ளது.

முதல் உலகப் போருக்கு பின் பல காலனிய, அரைக்காலனிய, சார்பு நாடுகளில் தேசிய விடுதலை இயக்கங்கள் பொங்கி எழுந்தன. போருக்குப் பின் தேசிய விடுதலை இயக்கங்கள் மேலும் வலுவடைந்தன. இரண்டாவது உலகப் போரின் போதும் அதன் பின்னும் விடுதலைப் போர்களாக அவை வடிவெடுத்தன. தேசிய விடுதலைப் போர்கள் வெற்றிகரமாக முடிவுற்ற நாடுகளில் பாட்டாளி வர்க்கத் தலை



படிப்பகம்

www.padippakam.com

மையிலானவற்றில் மக்கள் ஜனநாயக சர்வாதிகார அரசுகள் அமைந்தன. கொரியா, சீனா, வியட்நாம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறு நிகழ்ந்தது. பிறவற்றில் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, குட்டி முதலாளித்துவ அல்லது இவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட வர்க்கத் தன்மை கொண்ட தேசிய அரசுகள் அமைந்தன. அவற்றின் அரசுகள் மற்றும் தலைமைகளின் வர்க்கத் தன்மை காரணமாக பொருளாதாரம் மற்றும் அரசியல் சுதந்திரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்குக் கூட அவை பலவீனமானவை. அரசியல் விடுதலை பெற்ற இந்த தேசிய நாடுகள் ஏகாதிபத்திய சக்திகளை-யும் உள்நாட்டுப் பிற்போக்குவாதிகளையு முறியடித்து விவசாய மற்றும் பிற சமுதாயச் சீர்திருந்தங்களை நிறைவேற்றி தமது சுதந்திரத்தைக் காக்கும் வேதனையும், இடர்பாடும் மிக்க கடமைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இம்மாதிரியான சில நாடுகளில் தேசப்பற்று மிக்க தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியம், காலனிய வாதத்திற்கெதிரான போராட்டங்களில் பரந்துபட்ட மக்க-ளின் பக்கம் நின்றிருக்கிறது. சமுதாய முன்னேற்றத்திற்கான சில நடவடிக்கைகளைப் புகுத்தி இருக்கிறது.

பாட்டாளி வர்க்கமானது தேசப்பற்று மிக்க தேசிய முதலாளித்.துவ வர்க்கத்தைப் பற்றிய முழுமையான, சரியான மதிப்பீடு செய்து அதனுடன் ஐக்கியப்பட வேண்டும். உள்நாட்டு சமுதாய முரண்பாடுகள் மற்றும் சர்வதேசிய வர்க்கப் போராட்டம் கூர்மையடையும் போது முதலாளித்துவ வர்க்கம், குறிப்பாக, பெருமுதலாளித்துவ வர்க்கம் மேலும் மேலும் ஏகாதிபத்திய ஆதாவுடையதாக மாறி மக்கள் எதிர்ப்பு, பொதுவுடமைவாத எதிர்ப்பு, எதிர்ப்புரட்சி கொள்கைகளைப் பின்பற்றத் துவங்கும் பொழுது பாட்டாளிவர்க்கம் எச்சரிக்கையாக இருந்து உக்கிரமாக எதிர்க்க வேண்டும்.

பழைய காலனிய, அரைக்காலனிய நாடுகளின் அரசியல் சுதந்திரம், உண்மையான சுதந்திரத்திலிருந்து போலியான, பெய-ரளவிலான சுதந்திரம் வரை பல்வேறு அளவுகளில் இருக்கின்றது. அதேபோன்று அவற்றின் பொருளாதாரம் சாராம்சத்தில் தேசியப் பொருளாதாரத்திலிருந்து தாகு முதலாளித்துவப் பொருளாதாரம் வரை பல்வேறு அளவுகளில் இருக்கின்றது. அரசியலில் பல்வேறு அளவுகளில் பாராளுமன்ற ஜனநாயக அமைப்புகளும், குடியரசுத் தலைவர் ஆட்சி அமைப்புகளும், ஒரு கட்சி ஆட்சியும், ராணுவ சர்-வாதிகாரமும், மன்னராட்சி முறைகளும் என்று பலவாக இருக்கின்றன. இவ்வாட்சி முறைகளும் மாறிக் கொண்டிருக்கின்றன. தற்போது இருக்கும், இருந்த அரசுகளின் வர்க்கத் தன்மையை விரிவான அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிக்க முடியும். அவை ஏகாதிபத்திய ஆதரவு தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் தன்மையுடையவை மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய வர்க்கங்



படிப்பகம்

www.padippakam.com

களின் தன்மையுடையவை. ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய வர்க்கங்களின் தன்மையுடைய அரசுகள் பெரும்பாலும் காலனிய அரசு இயந்திரத்தை ஆயுதப் போராட்டத்தின் மூலம் தகர்த்தெறிந்து அதன் அடிப்படைகளின் மீது எழுப்பப்பட்டவையாகும். இவை அனைத்திலும் ஏற்படும் மாறுதல்களைக் கணக்கில் கொண்டு புரட்சிகர சக்திகள் அனைத்தையும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பொதுப் புரட்சிகர முன்னணியில் ஐக்கியப்படுத்த விரும்புவோர், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான சமுதாயப் புரட்சி மற்றும் போராட்டங்களை மட்டுமே பொருட்டாகக் கொள்ளக்கூடாது. ஏகாதிபத்தியத்திற்கெதிராக பயன்படக்கூடிய ஒரு சிறு துரும்பையும் கூட அதில் ஈடுபடுத்த தயங்கக் கூடாது. அவ்வாறு செய்யும் பொழுது பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியாக முழு வளர்ச்சிடைவதற்கு முன்பு நிகழக் கூடிய அரசியல் புரட்சி, அரசியல் மாற்றங்கள், உண்மையான ஜனநாயக மாற்றங்கள், ஆயுதந்தாங்கிய எழுச்சிகள், எதிர்ப்புரட்சிகள் இன்னும் பிறவற்றைப் புறக்கணிக்கக் கூடாது.

உலகின் அடிப்படை முரண்பாடுகள் நாளும் வளர்ந்து கூர்மையாகிக் கொண்டிருப்பதாலும் சுதந்திரம் மற்றும் தேசவிடுதலைக்குமான சக்திகள் உத்வேகத்தைப் பெறுகின்றன. அவை ஏதாவது ஒரு அளவு சுதந்திரத்துக்காக போராடும் ஆட்சிகளை எழுப்புகின்றன. எந்த நாட்டிலும் சுதந்திரம், விடுதலைக்காகப் போராடும் சக்திகள் தேங்கி இருப்பதில்லை. அவை ஓரொரு சமயம், ஏதோ ஒரு பகுதியில், நாடுகளில் தொடர்ந்து கிளர்ந்தெழுந்து போராடுகின்றன, பின்னடைவைச் சந்திக்கின்றன; மீண்டும் கிளர்ந்தெழுந்து போராடுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகளும் பிரதிபலிக்கின்றன. அந்நாடுகளில் நிலைமைகள் மாறுதலடைய அவையும் காரணமாக அமைகின்றன. எப்பொழுதும் பழைய காலனிய, அரைக்காலனிய, சார்பு நாடுகளில் மட்டுமல்லாது வளர்ச்சியுற்ற ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளிலும் சோசலிச நாடுகளிலும் கூட அரசியல் நிலைமைகள் மாறாமல் அப்படியே நிலைத்திருப்பதில்லை. சமுதாய மாற்றங்களைக் கொண்டு வராமலேயே புரட்சிகரமான முறையில் அல்லது எதிர்ப்புரட்சிகரமான முறையில் அரசியல் மாறுதல்கள் நடந்தேற முடியும்.

முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியில் மன்னராட்சி போய் ஜனநாயக குடியாட்சி வந்தது. பின்னர் நாசிசம் வந்தது. இரண்டாம் உலகப் போரில் தோற்கடிக்கப்பட்டு ஒரு பகுதியில் சோசலிசமும் மற்றொரு பகுதியில் ஜனநாயக குடியரசும் நிறுவப்பட்டது. இந்தோனேசியாவில் சுகர்ணோவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய ஆட்சி நிறுவிய பின் சுகார்த்தோ கும்பலின் ராணுவ ஆட்சி



படிப்பகம்

www.padippakam.com

கவிழ்ப்பு அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு ராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டு வந்தது. பல்வேறு ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் தேசிய விடுதலை அடைந்தன. சிலவற்றில் ராணுவ சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. சில ஏகாதிபத்திய ஆதரவு நாடுகளாயின. சிலவற்றில் குறிப்பிடத்தக்க அளவு ஜனநாயக மாறுதல்கள் நடந்தேறியுள்ளன. தாய்லாந்து மாணவர் எழுச்சி சர்வாதிகாரி கிட்டிகாச்சரனை தூக்கியெறிந்தது. ஓரளவு சுதந்திரம் பின்னர் நிலை நாட்டப்பட்டது. பின்னர் ராணுவ சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டுள்ளது. போர்ச்சுகலில் சர்வாதிகாரம் முடிவுற்றதானது ஜனநாயகத்தைக் கொண்டு வந்தது. அதன் ஆப்பிரிக்க காலனி நாடுகளின் விடுதலையைத் துரிதப்படுத்தியது. ஸ்பெயினில் பாசிச சர்வாதிகாரம் முடிவுற்றது ஜனநாயக மாறுதல்களுக்கு வழி வகுத்தது. மிகச் சமீபத்தில் ஈரானில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு பாசிச சர்வாதிகாரி ஷாவின் ஆட்சி தூக்கியெறியப்பட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு மதவெறி மற்றும் அஞ்ஞானவாத ஆட்சி நிறுவப்பட்டது. இவை போன்ற பல அரசியல் மாறுதல்களைப் புறக்கணிக்கவோ குறைத்து மதிப்பீடு செய்யவோ கூடாது. மாறாக, இவற்றைப் பயன்படுதத் தவறவே கூடாது.

எனவே தான் லெனின் பின்வருமாறு கூறினார்: ''உண்மையான ஜனநாயக இயல்புடைய அரசியல் மாற்றங்கள், அதிலும் குறிப்பாக அரசியல் புரட்சிகள், எந்தச் சூழ்நிலையிலும், எந்த விதத்திலும் சோசலிசப் புரட்சி என்ற முழக்கத்தை பலவீனப்படுத்தவோ சிறுமைப்படுத்தவோ செய்யாது. மாறாக, அவை எப்பொழுதும் சோசலிசப் புரட்சியை அண்மையில் கொண்டு வருகின்றன. அவை சோசலிசப் புரட்சிக்கான அடித்தளத்தை விரிவாக்குகின்றன. குட்டி முதலாளிகள் மற்றும் அரைப் பாட்டாளி மக்கள் திரளின் புதிய பிரிவுகளை சோசலிசத்திற்கான போராட்டத்தின்பால் ஈர்க்கின்றன. மற்றொருபுறம் அரசியல் புரட்சிகள் சோசலிசப் புரட்சியின் வளர்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாதவை. இந்த அரசியல் புரட்சிகளை தனிப்பட்ட நிகழ்ச்சிகளாக கருதக் கூடாது. ஆனால் அவைகளை மிகவும் உக்கிரமான வர்க்கப் போராட்டம், உள்நாட்டு யுத்தம், புரட்சிகள், எதிர்ப்புரட்சிகள் ஆகியவற்றைக் கொண்ட அரசியல் மற்றும் பொருளாதார கொந்தளிப்புகளின், எழுச்சிகளின் காலகட்டமாகக் கருத வேண்டும்''

இம்மாதிரியான அரசியல் புரட்சிகள், அரசியல் மாறுதல்கள், உண்மையான ஜனநாயக மாறுதல்கள், ஆயுதந்தாங்கிய பேரெழுச்சிகள், எதிர்ப்புரட்சிகள் இன்னும் பிறவும் ஒவ்வொரு தனிப்பட்ட நாட்டிலும் உலக அளவிலும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. வளர்ச்சியுற்ற நாடுகளின் பாட்டாளி வர்க்கப் புரட்சி



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களது விடுதலை ஆகியவற்றின் வெற்றிக்கும், உலகு தழுவிய அளவில் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவதற்கும் மிகவும் இன்றியமை- யாத பொதுப் புரட்சிகர முன்னணியிலும், அதன் எதிர் தரப்பிலும் மேற்கண்ட மாறுதல்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இதனா- லும், உலகம் பல்வேறு சமுதாய அரசியல் அமைப்புகளைக் கொண் -டதாக இருப்பதாலும், ஒவ்வொரு நாட்டிலும் புரட்சி பல்வேறு கட்- டங்களிலும், அதற்கேற்றவாறு வெவ்வேறு இடைக்கட்டங்களிலும் இருப்பதாலும், முதலாளித்துவம் ஏற்றத்தாழ்வான வளர்ச்சிப் போக்கு என்னும் விதிக்குட்பட்டு இயங்குவதாலும் உலக ஏகாதிபத்- தியத்தை ஒரே தாக்குதலில் தூக்கியெறிவது சாத்தியமில்லை. இக் காரணங்களினால் உலகப் புரட்சி பல இடைக்கட்டங்களினூடே முன் -னேற வேண்டியுள்ளது.

எனவே, பாட்டாளி வர்க்கம் குறிப்பிட்ட இடைக்கட்டத்திற்குத் தகுந்தாற் போல தேசிய சர்வதேசிய கடமைகளை வகுத்துக் கொள் கிறது. ஒவ்வொரு இடைக் கட்டத்திற்கும், உலக அரசியல் சக்தி- களின் சேர்க்கைக்கு ஏற்றாற்போல், ஏகாதிபத்தியத்தை பலவீனப் படுத்தி பொதுப் புரட்சிகர முன்னணியை பலப்படுத்தி உறுதிப்படுத் -தும் நோக்கத்தோடு உலகப் பாட்டாளி வர்க்கம் தன் கடமைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறுதான் முதலாம் உலகப் போருக்குப் பின் பாசிச எழுச்சியின் போது கம்யூனிச அகிலம் பாசிச எதிர்ப்பு அணி அமைக்க அறைகூவல் விடுத்தது. இந்த அணியின் உடனடி நோக்கம் பாசிசத்தைத் தூக்கியெறிவதன் மூலம்ஏகாதிபத்தி யத்தைப் பலவீனப்படுத்துவதாகும். உலகஏகாதிபத்தியத்தைத் தூக்கி யெறிவதல்ல அதன் உடனடி நோக்கம். இந்த அணுகுமுறையின் விளைவாக பாசிசம் தோற்கடிக்கப்பட்டது. உலக ஏகாதிபத்தியம் பலவீனப்படுத்தப்பட்டது. உலகப் புரட்சி கணிசமான அளவு முன்னேறியது. ஒவ்வொரு இடைக்கட்டத்திலும் சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்தின் ஒட்டுமொத்த நலன்களிலிருந்து தொடங்கி குறிப்பிட்ட தேசிய இயக்கங்களையும் அரசியல் சக்திகளையும் ஆய்ந் தறிய வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கடமைகள் எப்பொழுதும் உலக ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவதற்கான கடமைகளோடு பொருந்துவனவாகவும், கீழ்படிவதாகவும் இருக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# மார்க்ஸ்-எங்கெல்ஸ், லெனின்-ஸ்டாலின், மாவோ வெவ்வேறு காலகட்டங்களில் உலக அரசியல் சக்திகளைப் பிரித்து வழிகாட்டியிருக்கிறார்கள்

**பா**ட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உயர்த்திப் பிடிக்கும் அனைத்து மார்க்சிய—லெனினியவாதிகளும். சர்வதேசிய வர்க்கப் போராட்டத்தில் எல்லா நாடுகளின் புரட்சிகர மக்களது பொது நலனையே யாவற்றுக்கும் மேலாக உயர்த்திப் பிடித்திருக்கிறார்கள். அதிலிருந்து தொடங்கியே குறிப்பிட்ட தேசிய இயக்கங்களையும் அரசியல் சக்திகளையும் ஆய்ந்தறிந்திருக்கிறார்கள். முதலாளித்துவ கட்டமைவை சோசலிசம் மற்றும் இறுதியாக கம்யூனிச கட்டமைவாக மாற்றி அமைக்கும் அதிகபட்சத் திட்டத்தில் குறியாக ஊன்றி நிற்கிறார்கள். ஆனால் இதற்கான போராட்டம் சிக்கலும் குழுறலும் கொந்தளிப்பும் மிக்கது. சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் எப்பொழுதும் ஒரே முழுமையான வார்ப்பாக இருந்ததுமில்லை; இருக்கவும் முடியாது. சர்வதேச அரங்கில் போர் தொடுக்கும் பாட்டாளி வர்க்கம் வெவ்வேறு வரலாற்றுக் காலகட்டங்களில் மிகவும் இன்றியமையாத சாத்தியமான சக்திகளுடன் ஐக்கியப்பட வேண்டும். முற்போக்கு சக்திகளை வளர்க்கவும், இடைத்தட்டு சக்திகளை வென்றெடுக்கவும், கடைந்தெடுத்த பிற்போக்குவாதிகளைத் தனிமைப்படுத்தவுமான வகையில் அது இருக்க வேண்டும்.

மார்க்ஸ்—எங்கெல்ஸ் இருபெரும் அரிய படிப்பினைகளை நமக்கு போதித்துள்ளனர். ஒன்று : அனைத்து ஒடுக்கப்பட்ட நாடுகளையும் தழுவிய உலகைக் குலுக்கும் மாபெரும் தேசியப் புரட்சிகர இயக்கத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான முன்னிபந்தனையாகவும், நிச்சயமானதொரு உத்திரவாதமாகவும் அதைக கருத

படிப்பகம்

www.padippakam.com

வேண்டும். இரண்டு : முதலாளித்துவ நாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு தொடர்ந்து முக்கியத்துவமளித்து கவனம் செலுத்தி சர்வதேச தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் பரம எதிரியை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். இன்றைய உலகின் பிற்போக்கு சக்திகளின் மிகப்பெரும் கோட்டை கொத்தளத்திற்கு எதிராக தளராத, இடைவிடாத போராட்டத்தைத் தொடுக்க வேண்டும்.

இந்த அரிய படிப்பினைகளின் அடிப்படையிலேயே மார்க்சும்-எங்கெல்சும் போலந்து மற்றும் அயர்லாந்து போன்ற ஐரோப்பிய தேசங்களின் சுதந்திரப் போராட்டங்களைப் போலவே, ஐரோப்பாவிலிருந்து வெகுதொலைவிலிருக்கும் இந்தியா, சீனா மற்ற நாடுகள் தொடுத்த தேச விடுதலைப் போராட்டங்களுக்கும் அதி முக்கியத்துவமளித்தனர். அதே சமயம் ருசிய ஜாரிசப் பேரரசு ஐரோப்பாவின் மீது எப்பொழுதும் விஸ்தரிப்பு பேராசை கொண்டிருந்ததாலும் ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்தின் விடுதலையைச் சாத்தியமற்றதாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்ததாலும் ஐரோப்பிய பிற்போக்கு சக்திகளின் மிகப் பெரும் கோட்டை கொத்தளமாக விளங்கிய ருசிய ஜாரிசத்திற்கெதிராக தளராது, இடைவிடாது போரிடும்படி ஐரோப்பிய பாட்டாளி வர்க்கத்திற்கு அறைகூவல் விடுத்தனர். ஐரோப்பாவின் அரசியல் சக்திகளை வகைப்படுத்தவும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் ஐரோப்பாவில் எந்த தேசிய இயக்கத்தை ஆதரிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும் அளவுகோலாக அமைந்த ருஷ்ய ஜாரிசப் பேரரசின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளைத் தீர்மானகரமாக எதிர்க்க வேண்டும் என்றனர்.

மார்க்சும் - எங்கெல்சும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முந்திய காலகட்டத்தில், முதலாளித்துவப் புரட்சிக்கான காலகட்டத்தில், எழுச்சியுறும் முதலாளித்துவ காலகட்டத்திலும், பாட்டாளி வர்க்கம் புரட்சிக்கான தயாரிப்பில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சி இன்னும் உடனடி நடைமுறையில் தவிர்க்க முடியாததாக மாறாத காலகட்டத்தில் செயல்பட்டு வந்தனர். லெனின் வளர்ச்சியுற்ற ஏகாதிபத்திய காலகட்டத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சி கட்டவிழும் காலகட்டத்தில், முதலாளித்துவ ஜனநாயகம் நொறுக்கப்பட்டு, பாட்டாளி வர்க்கப் புரட்சி சகாப்தம், சோவியத் சகாப்தம் துவங்கி ஏற்கனவே ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றிக் கொடி நாட்டிய பொழுது செயல் பட்டு வந்தார்.

எனவே, இன்றைய உலகின் நான்கு அடிப்படை முரண்பாடுகளில் ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்களுக்கும் ஒடுக்கும் நாடுகளுக்கும் இடையிலான முரண்பாட்டிற்கும், ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையிலான முரண்பாட்டிற்கும் மிகமிக அதிகமான முக்கியத்துவமளித்து லெனின் உலக நாடுகளையும் அரசியல் சக்திகளையும்



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்திய உலகின் எல்லா
மூன்று வகைகளாகப் பிரித்தார். சர்வதேசப் பாட்டாளி வர்க்க
அடிப்படை முரண்பாடுகளுடனும் இந்தப் பிரி
இயக்கத்தின் எல்லா அடிப்படை முரண்பாடுகளுடனும் ஒடுக்கப்பட்ட நாடுகளின்
வினைகளை நெருக்கமாக இணைத்தார். இரண்டாம் அகி-
போராட்டத்தை எப்பொழுதும் தாழ்வாகக் கருதிய சோச
லத்தின் சந்தர்ப்ப வாதத்திற்கு இது நேர் எதிரானதாகும். வெறும் சோச
-லிசம், முதலாளித்துவம் என்று உலக நாடுகளை வெவ்
இரண்டு வகையாகப் பிரிக்காமல் முதலாளித்துவ உலகின் ஒடுக்கப்
வேறு நாடுகளை மூன்று வகையாகப் பிரித்தார். அதில் ருசியாவை
பட்ட தேசங்கள், நாடுகளின் வகையிலே சோசலிச
வைத்தார்.

அக்டோபர் புரட்சி ருசியாவில் வெற்றிபெறும் முன், 1916-ல்
ஏகாதிபத்தியத்துடன் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கும்
தேசிய இனப் பிரச்சனையின் சுயநிர்ணய உரிமை என்னும் பிரச்ச
னையைப் பற்றி எழுதுகையில் உலக நாடுகளையும் அரசியல் சக்தி
களையும் மூன்றாக வகைப்படுத்தியிருக்கிறார்.

"முதலில் வளர்ச்சியுற்ற மேற்கு ஐரோப்பாவும், அமெரிக்க
ஐக்கிய நாடுகளும் சேர்ந்த முதலாளித்துவ நாடுகள். அந்நாடுகளில்
முற்போக்கு முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் நீண்ட காலத்துக்கு
முன்பே முடிவுக்கு வந்துவிட்டன. இம் 'மாபெரும்' நாடுகள் ஒவ்
வொன்றும் காலனிகளிலும் உள்நாட்டிலும் பிற தேசிய இனங்களை
ஒடுக்குகின்றன. 19—ஆம் நூற்றாண்டில் அயர்லாந்தைப் பொருத்
தவரை இங்கிலாந்து பாட்டாளி வர்க்கத்திற்கு இருந்தது போன்
றதே ஆகும் இந்த தேசங்களின் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள்.

"இரண்டாவதாக, கிழக்கு ஐரோப்பா, ஆஸ்திரியா, பால்கன்
நாடுகள், குறிப்பாக ருசியா. இங்கு இருபதாம் நூற்றாண்டில்,
குறிப்பாக, முதலாளித்துவ ஜனநாயக தேசிய இயக்கங்கள் வளர்ச்
சியுற்றன. தேசியப் போராட்டங்களாக ஆழமடைந்தன. முதலாளித்
துவ ஜனநாயக சீர்திருத்தங்களை முடிப்பதிலும், மற்ற நாடுகளில்
சோசலிசப் புரட்சிக்கு உதவி செய்வதிலும் இந்நாடுகளில் உள்ள
பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளை தேசிய இனங்களின் சுயநிர்
ணய உரிமையை உயர்த்திப் பிடிக்காமல் நிறைவேற்ற முடியாது.
இதில் மிகவும் சிரமமும் முக்கியத்துவமும் உடைய கடமை, ஒடுக்கும்
தேசங்களது தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தை
ஒடுக்கப்படும் தேசங்களது தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்
துடன் இணைப்பதாகும்.

"மூன்றாவதாக, மொத்தம் 100 கோடி மக்கள் தொகையைக்
கொண்ட சீனா, பாரசீகம், துருக்கி போன்ற அரைக்காலனி நாடு
களும் காலனி நாடுகளும். இந்நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயக



படிப்பகம்

www.padippakam.com

இயக்கங்கள் இன்னும் தொடங்கவே இல்லை. அல்லது இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டி இருக்கின்றன. சோசலிஸ்டுகள் நஷ்டஈடு எதுவுமின்றி நிபந்தனை இன்றி உடனடியாக காலனிகளின் விடுதலையைக் கோரினால் மட்டும் போதாது — இக்கோரிக்கை தேசிய சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அரசியல் பிரகடனத்தை தவிர வேறெதையும் குறிப்பிடுவதில்லை. இந்நாடுகளில் உள்ள தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களின் மிகவும் புரட்சிகரமான சக்திகளுக்குத் தீர்மானகரமான ஆதரவு தரவும் வேண்டும். அவற்றை ஒடுக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக ஆயுதந்தாங்கிய எழுச்சிகளும், புரட்சி யுத்தங்களும் நடக்கும்போது உதவவும் வேண்டும்.''

இதில் முதல் இரண்டுவகை நாடுகளும் ஏற்றத்தாழ்வாக வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாடுகளாயினும் அரசியல் சக்திகளின் தன்மையைப் பொருத்து அவற்றை இரண்டாகப் பிரித்து கடமைகளை வரையறுத்தார். அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு, முதலாவது உலகப் போருக்குப் பிறகு 1920—ல் மூன்றாவது கம்யூனிச அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் உலகை மூன்றாக வகைப்படுத்தி அந்த அடிப்படையிலிருந்து சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தில் யுத்தநந்திரம் போர்த்தந்திரத்தை தீர்மானிக்க லெனின் வழி வகுத்தார்.

''இவ்வாறு ஏகாதிபத்திய யுத்தத்துக்குப் பின் நிலவிய உலகத் தோற்றத்தின் பிரதான வரை கோடுகளை நாம் பெறுகிறோம். காலனிகளில், அதாவது, துடிக்கத்துடிக்கத் துண்டாடப்படும் பாரசீகம், துருக்கி, சீனா போன்ற நாடுகளிலும், தோற்கடிக்கப்பட்டு காலனிகளின் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நாடுகளிலும் 125 கோடி மக்கள் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். (இங்கு லெனின் ஆஸ்திரிய — ஹங்கேரி, ஜெர்மனி, பல்கேரியா அதேபோல யுத்தத்தினால் ''காலனி நிலைக்கு சமமான நிலைக்கு'' தள்ளப்பட்ட சோவியத் ருசியா போன்ற நாடுகளைக் குறிப்பிடுகிறார், ஆ—ர்) தமது பழைய நிலகைளைட் பேணிக் கொண்ட. ஆனால் பொருளாதாரத்துக்காக அமெரிக்காவைச் சார்ந்துள்ள நாடுகளில் சுமார் 25 கோடி மக்கள் வாழ்கின்றனர். யுத்தகாலத்தில் இந்நாடுகள் எல்லாம் ஒரு ராணுவ சார்பு நிலையில் இருந்தன. காரணம், யுத்தமானது முழு உலகத்தையும் பாதித்தது. எந்த ஒரு நாட்டையும், உண்மையான நடுநிலையில் நிற்க அனுமதிக்கவில்லை. கடைசியாக உலகத்தின் பாகப்பிரிவினையால் மேல்வர்க்கத் தட்டு மட்டும், உண்மையில் முதலாளித்துவ வர்க்கம் மட்டும் நன்மை பெற்ற நாடுகளில் சுமார் 25 கோடி மக்கள் வசிக்கின்றனர்'' (இங்கு லெனின் அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகளைக் குறிப்பிடுகிறார், ஆ—ர்)



படிப்பகம்

www.padippakam.com

அதாவது, 1. அடக்கி ஒடுக்கப்படும் காலனி, அரைக்காலனி நாடுகளும், தோற்கடிக்கப்பட்ட நாடுகளும், சோவியத் ருசியாவும் 2. தமது பழைய அந்தஸ்த்தைப் பேணிக்கொண்ட நாடுகள் 3. யுத்தத்தில் வெற்றி பெற்று உலகின் பாகப்பிரிவினையால் நன்மை அடைந்த நாடுகள் என்று மூன்றாக உலக அரசியல் சக்திகளைப் பிரித்தார். அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்கள் நாடுகளின் வகையுள் சோவியத் ருசியாவச் சேர்த்ததோடு மட்டுமின்றி, இந்த உலக அரசியல் சக்திகளின் சேர்க்கை மீது அசாத்தியமான நம்பிக்கையயும் வைத்தார். ''இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், போராட்டத்தின் பெரும்பேறு உலக மக்கள் தொகையில் ஏகப்பெரும்பான்மை ருசியா, இந்தியா, சீனா முதலிய நாடுகளில் உள்ளது என்ற உண்மையால் நிர்ணயிக்கப்படும். குறிப்பாக, தெளிவாக, இந்தப் பெரும்பான்மை மக்கள் தான் கடந்த சில ஆண்டுகளில் விடுதலைக்கானப் போராட்டத்தில் அசாதாரணமான பெருவேகத்துடன் இழுக்கப்பட்டனர். இதிலிருந்து பார்த்தால் உலகப் போராட்டத்தின் இறுதி விளைவு எவ்வாறு இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது. இந்த அர்த்தத்தில் சோசலிசத்தின் பூரண வெற்றி முற்று முழுதாகவும், சம்பூரணமாகவும் உத்திரவாதம் செய்யப்படுகிறது.''

ஸ்டாலின், இரண்டாம் உலகப் போரின் போதும், அதற்குமுன்னும் பின்னும், சோதனையும் சிக்கலும் நிறைந்ததொரு காலகட்டத்தில், சொந்த நாட்டில் சோசலிசத்தை உறுதிப்படுத்தி காத்து, மற்ற நாடுகளில் விரிவுபடுத்திய காலகட்டத்தில், லெனினுக்குப் பிறகு, அவரது ஆய்வுரைகளில் ஊன்றி நின்று செயல்படுத்தினார். 1. பாட்டாளி வர்க்கம் அடக்கி ஒடுக்கப்பட்ட தேசங்களுடன ஐக்கியப்பட வேண்டும். தேச விடுதலை இயக்கமானது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்க்கும் சகல சக்திகளையும், அவற்றின் வர்க்க நிலை, அரசியல் மனோபாவம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், அவை எல்லாவற்றையும் உள்ளடக்க வேண்டும். 2. ''முதலாளித்துவத்துக்கும் சோசலிசத்துக்கும் இடையிலான முரண்பாடு, ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாட்டைப் பார்க்கிலும் பலம் வாய்ந்தவை என்று சொல்லப்படுகிறது. கோட்பாடு ரீதியில் இது உண்மை என்பது தெளிவு'', ஆனால்...'' சந்தைகளுக்காக முதலாளித்துவ நாடுகள் நடத்தும் போராட்டமும், தமது போட்டியாளர்களை நசுக்கும் அவர்களது நப்பாசையும், முதலாளித்துவ முகாமுக்கும் சோசலிச முகாமுக்கும் உள்ள முரண்பாடுகளை விட பலம் வாய்ந்தவை என்பது நடைமுறையில் நிரூபிக்கப்பட்டு விட்டது.'' இந்த இரண்டு மார்க்சிய—லெனினிய நிலைப்பாடுகளில் பற்றி நின்று ஸ்டாலின் உலக அளவில் அரசியல்சக்திகளை வகைப்படுத்தி உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கு மிகவும் முக்கியமான, அவசியமான காலகட்டத்தில் வழிகாட்டிச் சென்றார்.



படிப்பகம்

www.padippakam.com

உள் நாட்டில் ஆப்கானிஸ்தானின் எமிர் போன்றோ, எகிப்தின் சோசலிச எதிர்ப்பு முதலாளித்துவ தலைமை போன்றோ எத்தகைய பிற்போக்கு சக்திகளாயிருப்பினும் அவைகள் தேசிய சுதந்திரத்துக்காகத் தொடுக்கும் போராட்டங்களை, யதார்த்தத்தில் புரட்சிகரமான போராட்டங்களாயிருப்பதால் ஆதரிக்க வேண்டும் என்றார். ஏனெனில், அவை 'ஏகாதிபத்தியத்தை பலவீனப்படுத்தவும், சின்னாபின்னப்படுத்தவும், குழிபறிக்கவும்' வேலை செய்கின்றன. இவ்வாறுதான், இரண்டாம் அகிலத்தின் சந்தர்ப்பவாதிகளுக்கு எதிராக லெனின் போராடியதைப் போன்றே டிராட்ஸ்கியவாதிகளுக்கு எதிராக ஸ்டாலின் போராடினார். ''இங்கு எதிர்த் தரப்பின் குற்றம் என்னவென்றால் அது லெனினுடைய மார்க்கத்தை முற்றாக கைகழுவி விட்டது. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக காலனி நாடுகள் தொடுக்கும் புரட்சிப் போர்களை ஆதரிக்கும் யுத்தியை நிராகரிக்கின்ற இரண்டாவது அகிலத்தின் மார்க்கத்துக்குள் சறுக்கி விழுந்து விட்டது.'' என்று டிராட்ஸ்கியவாதத்தைத் தாக்கினார்.

முதலாளித்துவ, சோசலிச முகாம்களுக்கு இடையிலான முரண்பாடு கூர்மை அடைவதைப்பற்றி கவனம் செலுத்தி இருப்பினும், ஸ்டாலின், வெவ்வேறு காலகட்டங்களில் உலக அரசியல் சக்திகளைப் பருண்மையாக ஆய்வு செய்து மாறுகின்ற சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் ஒட்டுமொத்த நிலையிலிருந்து உலக மக்களையும் நாடுகளையும் வகைப்படுத்தினார். 1927-ல் அன்றைய உலகின் அரசியல் சக்திகள் பின்வருமாறு பிரிந்திருப்பதாக மதிப்பிட்டார்: ''நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். உலகம் முழுவதும் உள்ள 190.5 கோடி மக்களில் 133.4 கோடி மக்கள் காலனிகளிலும் சார்பு நாடுகளிலும் வசிக்கின்றனர். 14.3 கோடி மக்கள் சோவியத் யூனியனில் வசிக்கின்றனர். 26.4 கோடி மக்கள் இடைப்பட்ட நாடுகளில் உள்ளனர். காலனிகளையும் சார்பு நாடுகளையும் அடக்கி ஒடுக்கும் ஏகாதிபத்திய நாடுகளில் 36.3 கோடி பேர் மட்டுமே இருக்கின்றனர்.'' அதன்பின் 1939-ல் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றை ஆக்கிரமிப்பு நாடுகள் என்றும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவற்றை அனாக்கிரமிப்பு நாடுகள் என்றும் வருணித்தார். இட்லரின் ஜெர்மனி சோவியத்தைத் தாக்கியதைத் தொடர்ந்து, ''இட்லர் ஜெர்மனி இதர தேசங்கள் மீது திணித்த யுத்தத்தின் போக்கில், அரசியல் சக்திகளை அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டும் ஒரு எல்லைக் கோடும், எதிரும் புதிரும் ஆன இரு முகாம்களும் தோன்றியுள்ளன. இவை இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் கூட்டு முகாமும், சோவியத், ஆங்கில, அமெரிக்க கூட்டு முகாமும் ஆகும்'' என்று உலக அரசியல் சக்திகளின் புதிய சேர்க்கையை விவரித்தார்,

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்கள், நாடுகள் மேலும் மேலும் விழிப்புற்று புரட்சிகர விடுதலைப் போராட்டத்தில் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

வெற்றிகளை ஈட்டிய காலகட்டத்தில், சோசலிசப் புரட்சியும் மக்கள் ஜனநாயகப் புரட்சியும் மேலும் சில வெற்றி பெற்று சோசலிச முகாம் பலம் வாய்ந்ததாக மாறிய காலகட்டத்தில், பின்னர் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்ட காலகட்டத்தில், உலகப் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் நவீன திரிபுவாதம் பெரும் பிளவுகளை ஏற்படுத்தி தற்காலிக பின்னடைவை எட்டிய காலகட்டத்தில், சுருக்கமாக கூறினால் ஏகாதிபத்தியத்தின் எல்லா அடிப்படை முரண்பாடுகளும், சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் எல்லா அடிப்படை முரண்பாடுகளும், முன்னெப்போதும் கண்டிராதவாறு கூர்மையடைந்திருக்கும் காலகட்டத்தில், ஒவ்வொரு தேசிய விடுதலை இயக்கமும் உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதி என்ற லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கோட்பாடுகளை மாவோ காத்து வளர்த்தார். சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த உண்மைகளுக்கு இசைவானதாக ''ஒடுக்கப்பட்ட ஒரு தேசத்தில் புரட்சியில் சேருகிறவர்கள் எந்த வர்க்கத்தினர் அல்லது எந்தக் கட்சியினர் அல்லது எத்தகைய நபர்கள் என்பது பொருட்டல்ல. அவர்களது குறிக்கோளில் அவர்கள் உணர்வுபூர்வமாக இருக்கிறார்களா அல்லது அதைப் புரிந்து கொண்டிருக்கிறார்களா என்பதும் பொருட்டல்ல. ஏகாதிபத்தியத்தை அவர்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறவரை, அவர்களுடைய புரட்சி உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகி விடுகிறது. அவர்களும் அதன் நேச சக்திகளாய் விடுகின்றனர்'' என்று கூறினார்.

இரண்டாவது உலகப் போருக்குப் பிந்திய சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஜெர்மனி, இத்தாலி, ஜப்பானிய பாசிஸ்டுகளின் இடத்தைப் பிடித்துக் கொண்டது அமெரிக்க ஏகாதிபத்தியம். அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் சோசலிச முகாமுக்கும் இடையிலான பரந்து விரிந்த பகுதியைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்துவதும், ஒடுக்கப்பட்ட மக்கள், நாடுகளுடைய புரட்சியை ஒடுக்குவதும் சோசலிச நாடுகளை அழிப்பதை நோக்கி நடைபோடுவதும் அதன் மூலம் தனது கூட்டாளிகள் உட்பட உலகின் அனைத்து நாடுகளையும் பல்வேறு தேசிய இன மக்களையும் அமெரிக்க மூலதனத்தின் கீழ் சிறையிடவும் ஆதிக்கம் செலுத்தவும் அடிமைப்படுத்துவது என்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்த தந்திர நோக்கமாக இருந்தது. சுருக்கமாகக் கூறுவதானால், அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகப் பெரிய சர்வதேச சுரண்டல்காரனாகவும், காலனியாதிக்க வாதத்தின் கோட்டையாகவும், ஆக்கிரமிப்பு மற்றும் யுத்தத்தின் பிரதான சக்தியாகவும், உலகப் பிற்போக்கு சக்திகளின் தலைமைப் பாதுகாவலனாகவும் ஒரு சர்வதேச அதிரடிப்படையாகவும், உலகம் முழுவதிலுமுள்ள மக்களின் பொது எதிரியாகவும் விளங்கியது. எனவேதான் மாவோ அமெரிக்கா மற்றும் அனைத்து நாடுகள்,



படிப்பகம்

www.padippakam.com

தேசங்கள், மக்களையும் ஐக்கியப்பட்டு அமெரிக்க பிற்போக்குவாதிகளையும் அவர்களது அடிவருடிகளையும் எதிர்த்துத் தாக்குங்கள் என்று அறைகூவல் விடுத்தார்.

1956-ல் சூயஸ் கால்வாய் நிகழ்ச்சி ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடு கூர்மையடைந்திருப்பதைக் காட்டிய போது, அன்றைய சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் யதார்த்த உண்மைகளுக்குப் பொருந்தும்படி முரண்பாடுகள் மற்றும் உலக அரசியல் சக்திகளைப் பற்றி பின்வருமாறு கூறினார்: ''இந்த சம்பவத்திலிருந்து இன்று உலகத்தில் நடக்கிற போராட்டங்களின் குவிமையத்தை நாம் சுட்டிக்காட்ட முடியும். ஏகாதிபத்திய நாடுகளுக்கும் சோசலிச நாடுகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடு நிச்சயமாக மிகவும் தீவிரமடைந்திருக்கிறது. ஆனால் கம்யூனிச எதிர்ப்பு என்பதன் பெயரால் ஏகாதிபத்திய நாடுகள் பல்வேறு பகுதிகளைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன. மத்தியக் கிழக்கில் இரண்டு வகையான முரண்பாடுகளும், மூன்று வகையான சக்திகளும் மோதலில் இருக்கின்றன. இரண்டு வகையான முரண்பாடுகளாவன: முதலில் பல்வேறு ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையிலான முரண்பாடு. அதாவது, அமெரிக்காவிற்கும் பிரெஞ்சு நாட்டுக்கும் இடையிலானதும், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இடையிலானதும். இரண்டாவது, ஏகாதிபத்தியங்களுக்கும் ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கும் இடையிலானதுமாகும். மூன்று வகையான சக்திகளாவன: முதலாவது, மிகப் பெரிய ஏகாதிபத்திய அரசான அமெரிக்கா. இரண்டாவது, ஏகாதிபத்திய அரசுகளாக இருக்கின்ற பிரிட்டனும் பிரான்சும். மூன்றாவது, ஒடுக்கப்பட்ட தேசங்கள்.''

இதுவரை கண்ட அனைத்தும் பாட்டாளி வர்க்கத்தின் எல்லா ஆசான்களும் வரட்டுச் சூத்திரவாதத்தைப் பின்பற்றுவதற்குப் பதிலாக பல்வேறு காலங்களில் இருந்த சர்வதேச வர்க்கப் போராட்டத்தின் ஒட்டுமொத்தமான நிலைமைகளைச் சார்ந்து நின்று யதார்த்தமாக ஊடுருவி ஆய்வு செய்து உலக அரசியல் சக்திகளை வகைப்படுத்தினார்கள் என்பனதயே தெளிவாக்குகின்றன. ''தலைவர் மாவோ மார்க்சிய-லெனினியத்தின் அனைத்தும் தழுவிய உண்மைகளை, உலகப் புரட்சியின் பருண்மையான நடைமுறைகளோடு இணைத்தும் பல்வேறு காலகட்டங்களில் நிலவிய சர்வதேச நிலைமைகளை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தும் மிகத் தெளிவான முடிவுகளுக்கு வந்தார். இவ்வாறு பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான இலட்சியங்களையும், உலகம் முழுவதிலுமுள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலையையும் மிகப்பெரிய அளவிற்கு வளர்த்தார்.''

''தலைவர் மாவோவின் மூன்றுலகக் கோட்பாடு இன்றைய



படிப்பகம்

www.padippakam.com

உலக அரங்கின் வர்க்கப் போராட்டங்கள் பற்றிய புறவயமான யதார்த்தங்களை விஞ்ஞான பூர்வமாக சுருக்கித் தருகிறது, நீண்ட, தொடர்ச்சியான பலப்பரீட்சை போராட்டங்களினூடே இன்றைய உலக அரசியல் சக்திகள் படுவேகமான, தீவிரமான பிளவுகளுக்கும் சேர்க்கைக்கும் ஆளாகி இருக்கின்றன. அதாவது, பல ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை, சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் அவற்றின் பாத்திரம், சமூக ஏகாதிபத்தியத்தின் தோற்றம், சோசலிச முகாமின் சிதைவு, முதலாளித்துவத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி, மேற்கு ஏகாதிபத்திய முகாமின் சிதைவு ஆகிய மாறுதல்கள் இன்றைய உலகம் ஒன்றோடொன்று தொடர்புடைய, முரண்பாடுடைய மூன்று வகை உலகங்கள் அல்லது மூன்று வகை அரசியல் சக்திகள் இருப்பதையே நிதர்சனமாக்கி உள்ளன.''

மூன்றுலகக் கோட்பாடு பின்வருபனவற்றைத் தெளிவுபடுத்து -கிறது: ''சோவியத் யூனியனும் அமெரிக்காவும் முதல் உலகமாக அமைகின்றன. அவர்கள் ஆக மிகப் பெரிய சுரண்டலாளர்களாக-வும், ஒடுக்குபவர்களாகவும், ஆக்கிரமிப்பாளர்களாகவும், உலக மக்களின் பொது எதிரிகளாகவும் மாறியிருக்கிறார்கள். அவர்களுக் -கிடையிலான போட்டி ஒரு புதிய உலக யுத்தத்திற்கு வழிகோலுவ தாகவும் இருக்கிறது. உலகத் தலைமைக்கான இவ்விரு ஆதிக்க சக்திகளுக்கு இடையிலான போட்டியால் எல்லா நாடுகளிலும் ,உள்ள மக்களுக்கு இவர்கள் தரும் தொல்லையும், இவர்களுக்கு மக்கள் காட்டும் எதிர்ப்பும்தான் இன்றைய உலக அரசியலில் மையமான பிரச்சனையாக மாறி இருக்கிறது. சர்வதேச பாட்டாளி வர்க்கத் துக்கு மிக முக்கிய ஆதாரமாய் இருக்கின்ற சோசலிச நாடுகளும் உலக மக்கள் தொகையில் மிகப் பெரும்பான்மையாய் இருக்கிற சுரண்டப்பட்டும் ஒடுக்கப்பட்டும் வருகிற நாடுகளும் சேர்ந்து மூன்-றாவது உலகமாக அமைகின்றது. இந்த மூன்றாவது உலகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இரண்டு ஆதிக்க சக்திகளுக்கும் எதிரான உல -கம் தழுவிய பேராட்டத்தில் பிரதான சக்தியாகவும் இருக்கின்றனர். இவ்விரு உலகங்களுக்கும் இடையில் இருக்கின்ற வளர்ச்சியடைந்த நாடுகள் இரண்டாவது உலகமாக அமைகின்றது. இந்த நாடுகள் ஒடுக்கப்பட்ட நாடுகளை ஒடுக்கியும் சுரண்டியும் வருகின்றன. அதே சமயத்தில் மேல்நிலை வல்லரசுகளால் கட்டுப்படுத்தப்பட்டு அச்சு-றுத்தி அடக்கவும் படுகின்றன. இவை இரட்டைக் குணாம்சத்தைப் பெற்று முதல் உலகம் மூன்றாம் உலகம் ஆகிய இரண்டோடும் முரண்பட்டு நிற்கிறது. ஆனாலும் உலக ஆதிக்க சக்திகளுக்கு எதி -ரானப் போராட்டத்தில் மூன்றாம் உலகம் வென்றெடுக்கக் கூடிய அல்லது ஒன்றிணையக் கூடிய ஒரு சக்தியாகவே அவைகள் இன் னும் இருக்கின்றன. உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் ஒரு கட்சி



படிப்பகம்

www.padippakam.com

யாகவும் இரண்டு ஆதிக்க சக்திகளும் ஒரு கட்சியாகவும் உள்ள தற்கால உலகின் மிக முக்கியமான வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய யுத்ததந்திரத்தை இக்கோட்பாடு வகுத்துத் தருகிறது. பல்வேறு நாடுகளின் உள்நாட்டு வர்க்கப் போராட்டத்திலிருந்தும் பிரிக்க முடியாததாய் இது இருக்கிறது.''

''ஏற்கனவே பார்த்தபடி, 19—ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ருஷ்ய ஜாரிசப் பேரரசைப் பற்றி அவர்கள் கொண்டிருந்த கண்ணோட்டத்தை ஒட்டி ஐரோப்பிய அரசியல் சக்திகளைப் பகுத்து ஆராய்ந்ததில் மார்க்சும் எங்கெல்சும் கையாண்ட வரையறைகளுக்கு தலைவர் மாவோவின் மூன்றுலகக் கோட்பாடு முழுமையாக ஒத்திருக்கிறது. அதைப்போலவே முதலாம் உலகப் போருக்குப் பின்னால் உலகை மூன்று வகையாகப் பிரித்து ஆய்ந்த லெனினுடைய பாகுபாட்டுடனும், இரண்டாவது உலகப் போருக்கு முன்னால் உலகை ஆக்கிரமிக்கும் நாடுகள், அனாக்கிரமிப்பு நாடுகள் என்றும் போர் நடந்த காலத்தில் பாசிச முகாம், பாசிச எதிர்ப்பு முகாம் என்றும் பாகுபாடு செய்த ஸ்டாலினுடைய பாகுபாட்டோடும் இது ஒத்திருக்கிறது. இதைப்பற்றி மேலும் சொல்லுவதென்றால் உலக அரசியல் சக்திகளைப் பாகுபாடு செய்யும் அவர்களுடைய (மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின்) கோட்பாடுகளிலிருந்து வந்த தர்க்க ரீதியான வளர்ச்சியே எனலாம்.''

படிப்பகம்

www.padippakam.com

# சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின்- சோசலிச நாடுகளின், ஒடுக்கப்பட்ட மக்கள் - நாடுகளின் சக்தி வாய்ந்த போர் ஆயுதம் மூன்றுலகக் கோட்பாடு

★ இரு மேலாதிக்க வல்லரசுகளான ருசியாவும் அமெரிக்காவும் உலக மக்களின் பொது எதிரிகளாகும். ருசியா உலக யுத்தத்தின் மிகப் பயங்கரமான ஊற்றுக் கண்ணாகும்.

★ ஏகாதிபத்தியம், காலனிய ஆதிக்கம், மேலாதிக்கம் ஆகியவற்றிற்கு எதிரானப் போராட்டத்தில் மூன்றாவது உலக நாடுகளும் மக்களுமே பிரதான சக்திகளாகும்.

★ மேலாதிக்கத்திற்கெதிரானப் போராட்டத்தில் இரண்டாம் உலக நாடுகள ஐக்கியப் படுத்த வேண்டிய சக்தியாகும்.

இம்மூன்று அடிப்படைத் தொகுப்புகளே இன்றைய உலக அரங்கின் வர்க்கப் போராட்டத்தினுடைய வழி காட்டியாக அமையும் யுத்ததந்திரத்தையும் போர்த்தந்திரத்தையும் வகுப்பதற்கான மூலாதாரங்களாகும்.

காலனிய, அரைக்காலனிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள், தேசங்களைக் கொள்ளையிடாமல் உலக ஏகாதிபத்தியம் வளரவோ,

படிப்பகம்

www.padippakam.com

வாழவோ முடியாது. காலனிய மக்களின் விடுதலைப் போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தின் அடித்தளத்தையே ஆட்டங்காண வைத்தன. இறுதியாக அதை அழிக்கவும் செய்யும். தமது பழைய காலனிகளில் வீறுகொண்டெழுந்த விடுதலைப் போராட்டங்கள் கொடுத்த அடி தாங்க மாட்டாமல் பெரும்பான்மையான ஏகாதிபத்தியங்கள் பின் வாங்கிக் கொண்டன. அவற்றின் சுதந்திரத்தை அங்கீகரித்தன. ஆனால் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தமது செல்வாக்கைப் பாதுகாக்க எந்தவொரு தந்திரத்தையும் ஆயுதத்தையும் பயன்படுத்-தத் தயங்கியதில்லை; தயங்கவும் செய்யாது. மேலும் அவைகளது இடத்தைப் பிடிக்க புதிய ஏகாதிபத்தியவாதிகள் அல்லது மேலாதிக்க வாதிகள் தயாராகக் காத்திருக்கிறார்கள். பொருளாதார ரீதியில் ஏகாதிபத்தியங்கள், குறிப்பாக, மேல்நிலை வல்லரசுகள் மூன்றாவது உலக நாடுகளில் பரவலாக ஊடுருவுவதோடு மட்டுமல்லாமல் உலகச் சந்தையில் தமக்கிருக்கும் ஏகபோக செல்வாக்கைப் பயன்படுத்தி வளரும் நாடுகளின் உற்பத்தியை 'ஒரேவிதமான பொருளுற்பத்தி செய்யும் முறைக்கு' கட்டுப்படுத்தி உற்பத்திக்கு ஆதாரமான அவர்களுடைய பொருளின் விலையைக் கட்டாயப்படுத்திக் குறைத்து, தங்களால் தயாரிக்கப்பட்ட பொருள்களுக்கான விலையை உயர்த்தி சுரண்டலை நடத்துகிறார்கள்.

அரசியல் ரீதியாக, சுதந்திரம் பெற்ற நாடுகளை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்காக 'ஆட்சிக்கவிழ்ப்பு', 'தலையிடுதல்', 'பிறநாடுகளின் ஆதிபத்திய உரிமையில் கூசநாச்சமின்றி குறுக்கிடுதல்', 'காலாலிட்டதைத் தலையால் செய்யும் ''ஆமாம் சாமிகளை'' ஊட்டி வளர்த்தல்' போன்ற கயமையான முறைகளில் தங்களால் இயன்றதனைத்தையும் செய்கிறார்கள். ராணுவ ரீதியில், மூன்றாம் உலக நாடுகளைத் தங்களுக்கு அடங்கி ஒடுங்கி இருக்கும்படியாக வைத்துக் கொள்ளவும் அந்நாடுகளின் யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த வளங்களையும் யுத்த தந்திரக் குறியிடங்களையும் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த வழித்தடங்களையும் கைப்பற்றிக் கொள்ளவும் அந்நாடுகளுக்கு ஆயுதங்களைக் கொடுப்பது, அந்நாடுகளின் படைகளுக்குப் பயிற்சியளிப்பது, அப்-படைகளுக்கு கட்டளைப் பிறப்பிப்பது ஆகிய சாத்தியப்படுகின்ற எல்லா வழிகளையும் கையாள்கின்றனர். இதற்கு மேலும் ஒருபடி சென்று, படைபலத்தைப் பயன்படுத்துவோம் என்றும், ஆயுதங்-களைக் கொண்டு கைப்பற்றுவோம் என்றும், ஆக்கிரமிப்பு யுத்தங்-களைக்கூட அவிழ்த்து விடுவோம் என்றும் ஆணவத்தோடு அச்சு-றுத்துகிறார்கள்.

சுதந்திரமாக இருக்கவும், வாழவும், வளரவும் மூன்றாவது உலகத்தைச் சேர்ந்த மக்களுக்கு ஏகாதிபத்தியங்களின்—எல்லாவற்றிற்கும் மேலாக மேல்நிலை வல்லரசுகளின்-ஆக்கிரமிப்பு-விஸ்தரிப்பு



படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கைகளுக்கெதிராக ஒரு தொடர்ந்த தீவிரமான ஜீவமரணப் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு வழியே இல்லை. புதிய விடுதலைப் போர்கள் வெடித்தே தீரும். இன்று அமெரிக்க, ருசியா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளுமே தமது தனிப்பட்ட உலக மேலாதிக்கத்தையே இறுதிக் குறிக்கோளாகக் கொண்டு ஒரு புதிய உலக யுத்தத்திற்கான தயாரிப்புகளை வெறித்தனமாகச் செய்கின்றன.

★ *எனவேதான், இன்றைய உலக யுத்த தந்திரத்தின் குறிக்கோள் : ஏகாதிபத்தியம், காலனிய ஆதிக்கம், மற்றும் மேலாதிக்கத்தைத் தூக்கியெறிவதாகும்.*

''ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சி, வரலாற்றில் இரண்டு மேலாதிக்க வல்லரசுகளின் உதயம் ஒரு புதிய தோற்றப்பாடாகும். ஏகாதிபத்தியத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி தவிர்க்க முடியாதபடி மோதல்களுக்கும், யுத்தங்களுக்கும் வழிகோலுகின்றது. அவை திரும்பவும் இந்த ஏற்றத்தாழ்வான வளர்ச்சிக்கு பழுவேற்றி, தீவிரப்படுத்தி சக்கையாகிப் போன ஏகாதிபத்தியங்கள் மீது இரு மேல் நிலை வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்தும் நிலையை உருவாக்கும்.

''உலக மேலாண்மையைப் பெறுவதற்காக, இருபெரும் வல்லரசுகள் முயலுகின்ற பல நிகழ்ச்சிகளை ஏகாதிபத்தியத்தின் வரலாற்றில் காண முடியும். ஆனால் அவை ருசியாவும் அமெரிக்காவும் இன்றிருப்பது போன்றது மாதிரியானது அல்ல. இவ்விரு நாடுகளுக்கிடையிலான உலக மேலாதிக்கத்திற்கான நாய்ச்சண்டை இரண்டாவது உலகப் போரைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களின் ஒரு விசித்திரமான விளைவாகும். மிகச்சிலவான ஏகாதிபத்திய வல்லரசுகளில் உலக மேலாதிக்கத்திற்காக போட்டியிடும் தகுதி, பலம் வாய்ந்தவையாக அமெரிக்கா, ரசியா ஆகிய இரு மேல் நிலை வல்லரசுகளாக சுருங்கி விட்டன. மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகள் இரண்டாவது அல்லது மூன்றாவது அந்தஸ்திற்கு தள்ளப்பட்டு விட்டன. பின்வருவன மேல் நிலை வல்லரசின் தனிச்சிறப்பான குணாம்சங்களாகும்: இதனுடைய அரசு எந்திரம் மிகச்சிறந்த வடிவில ன ஏகபோக மூலதனக் குவியலால் கட்டுப்படுத்தப்படுகிறது. மற்றெந்த நாடுகளையும் விட பெரியதாய் இருக்கிற தன்னுடைய பொருளாதார—இராணுவ சக்திகளின் மீது நம்பிக்கை வைத்து பொருளாதாரச் சுரண்டலையும் அரசியல் ஒடுக்குமுறையையும் உலக அளவிலான இராணுவக் கட்டுப்பாட்டையும் செய்கிறது. இரு மேல்நிலை வல்லரசுகளும் உலக மேலாதிக்கத்தை நிறுவ வெறித்தனமாக யுத்த தயாரிப்புகளைச் செய்கின்றன. சுருக்கமாகக் கூறினால் அமெரிக்கா, ருசியா ஆகிய இரு ஏகாதிபத்திய மேல்



படிப்பகம்

www.padippakam.com

நிலை வல்லரசுகள் மிகப்பெரிய சர்வதேச சுரண்டலாளர்களும் ஒடுக்குமுறையாளர்களும் ஆவார்கள். யுத்தம் மற்றும் ஆக்கிரமிப்புக்கான மிகப்பெரிய சக்திகளாகும். உலகப் பிற்போக்குவாதத்தின் மிகப்பெரிய கோட்டைகளாகும். உலக மக்களின் பொது எதிரிகளாகும்''

★*எனவேதான், இன்றைய உலக யுத்ததந்திரத்தின் இலக்கு: அமெரிக்க மற்றும் ருசிய மேல்நிலை வல்லரசுகளாகும்.*

இரு மேல்நிலை வல்லரசுகளும் உலக யுத்ததந்திரத்தின் இலக்குகளாக இருக்கும் அதே வேளையில், அவை இரண்டையும் எவ்வித வித்தியாசமுமின்றி ஒரே அளவில் சமமாக வைத்துப் பார்க்கக் கூடாது உலகப் போரை தூண்டி விடுகிற மிகப் பயங்கரமான ஊற்றுக் கண்ணாக விளங்கும் ருசியாவைத் தனிமைப்படுத்தி தாக்கவில்லையெனில் உலக மக்களது புரட்சிகர விழிப்புணர்வை மழுங்கடிப்பதோடன்றி மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் பிரதான இலக்கை, பிரதான தாக்குதல் முனையைசிதறடித்து விடுவோம். பின்வரும் வரலாற்றுப் பூர்வமான சிறப்பம்சங்கள் அமெரிக்காவைவிட ருசியாவையே சந்தேகத்திற்கிடமின்றி உலகப் போரின் மிகப்பெரிய அபாயகரமான ஊற்றுக் கண்ணாகக் காட்டுகின்றன.

1. ''படைபலத்தால் காலனி நாடுகளை மறுபங்கீடு செய்யாமல் புதிய ஏகாதிபத்திய நாடுகளால் பழைய ஏகாதிபத்திய சக்திகள் அனுபவிக்கும் தனிச் சலுகைகளை அடைய முடியாது'' (லெனின்) ''அமெரிக்கா இவ்வுலகில் தன்னுடைய நலன்களைக் காப்பாற்றி கொள்ள விரும்புகிறது. ருசியா தன்னை விரிவு படுத்திக் கொள்ள விரும்புகிறது. இதை எப்படியும் மாற்ற முடியாது'' (மாவோ) ருசிய சமூக ஏகாதிபத்தியம் அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள பகுதிகளை பறித்துக் கொள்ள முயலுகிறது. எனவேதான், அது கூடுதலாக மூர்க்கத்தனமாகவும் சாகசமிக்கதாகவும் இருக்கிறது.

2. ஒப்பு நோக்குகையில் சமூக ஏகாதிபத்தியம் பொருளாதார பலத்தில் தாழ்வாக இருப்பதால், தன்னுடைய விஸ்தரிப்பு முயற்சிகளுக்கு இராணுவ பலத்தையும் யுத்த அச்சுறுத்தல்களையும் பிரதானமாக நம்பியிருக்கிறது. அதன் பொருளாதார கீழ்நிலையையீடுகட்ட மற்ற நாடுகளின் மூலப் பொருட்களையும் செல்வத்தையும் உழைப்புச் சக்தியையும் கொள்ளையிடும் பொருட்டு ஆயுதப் பெருக்கத்திலும் போர்த்தயாரிப்பிலும் வெறித்தனமாக ஈடுபட்டிருக்கிறது.

3. ''அதிஉயர்ந்த மையப்படுத்தப்பட்ட சோசலிச அரசுடைமைப் பொருளாதாரத்தை அரசு ஏகபோக முதலாளித்துவ பொருளாதாரமாக சோவியத் அதிகாரவர்க்க ஏகபோகக் கும்பல் மாற்றியிருக்கிறது. வேறெந்த ஏகாதிபத்திய நாடும் இதற்கிணையில்லை. மேலும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழிருந்த அரசு எந்தி



படிப்பகம்

www.padippakam.com

ரத்தை பாசிச சர்வாதிகாரத்தின் கீழான அரசு எந்திரமாக மாற்றியிருக்கிறது. எனவே, முழுப்பொருளாதாரத்தையும் இராணுவ நிலைப்பாட்டில் வைத்து அரசு எந்திரம் முழுவதையும் இராணுவமயமாக்கு வது ருசிய சமூக ஏகாதிபத்தியத்திற்கு எளிதானது''

4. உலகின் முதல் சோசலிச நாடு சீரழிந்து போனதின் விளைவாய் வந்தடைந்திருக்கிறது ருசிய சமூக ஏகாதிபத்தியம். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் ஆக்கிரமிப்புக் கொள்கைகள் நீண்டகாலமாகவே உலக மக்களால் எதிர்த்து, கண்டித்து, அம்பலப்பட்டுப் போயுள்ளன. ஆனால் சோசலிச முகமூடி அணிந்த ருசிய சமூக ஏகாதிபத்தியம் புதிய எழுச்சியுறும் வல்லரசாகும். அதன் ஆக்கிரமிப்பு, தலையீடு, கவிழ்ப்பு, விஸ்தரிப்புகளை ''சர்வதேசகடமை'' ''விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு'', ''பழைய, புதிய ஏகாதிபத்திய எதிர்ப்பு'' என்ற போர்வைகளில் இரட்டை வேடம் போடுவதால் பிரத்யேகமான அபாயமாக அது விளங்குகிறது.

இவையனைத்தும், தவிர்க்கமுடியாதபடி ருசியா தாக்குதல் யுத்ததந்திரத்தைப் பின்பற்றும் என்பதையும் உலக மேலாதிக்கத்திற்காக அமெரிக்காவுடனான போட்டியில் முதன்மையாக பலாத்காரம், பயமுறுத்தல்களை மேற்கொள்ளும் என்பதையுமே காட்டுகின்றன.

★*எனவேதான், இருமேல்நிலை வல்லரசுகளில் ருசிய சமூக ஏகாதிபத்தியம் உலகப் போருக்கான மிகப் பயங்கரமான ஊற்றுக் கண்ணாகும்.*

ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கத்தைத் தூக்கி எறிவதை குறிக்கோளாகவும் இருமேல் நிலை வல்லரசுகளைத் தாக்குதல் இலக்காகவும் கொண்ட இன்றைய உலக யுத்த தந்திரத்தை வகுக்க ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கம் இவற்றுக்கெதிரான தலைமை சக்தி, பிரதான சக்தி, நேரடி, மறைமுக சேமிப்பு சக்திகள், யுத்ததந்திரத்தின் பிரதான தாக்குதல் திசைவழி, அதற்கேற்றவாறு புரட்சிகர சக்திகளைப் போராட்ட அரங்குகளில் பிரித்தொதுக்கும், வியூகப்படுத்தும் திட்டம், இத்திட்டத்தை யுத்த தந்திர காலகட்டம் முழுவதும் நிறைவேற்றுவதற்கான போராட்டம் ஆகியவற்றையும் தீர்மானிக்க வேண்டும்.

இரண்டாவது உலகப் போரின் முடிவிலிருந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்ட படைவரிசையில் முன்னணியில் நின்று ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க மற்றும் பிற பிராந்தியங்களின் புரட்சிகர மக்கள் அடுத்தடுத்து பல புரட்சிகர ஆயுதப் போராட்டங்களைத் தொடுத்திருக்கிறார்கள். உலகத்தின்



படிப்பகம்

www.padippakam.com

தோற்றத்தையே மாற்றிய பல பிரம்மாண்டமான வெற்றிகளை வரி-சையாக ஈட்டினார்கள். இது சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்திற்கும் எல்லா நாடுகளின் மக்களுக்கும் அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிப் போராட்டத்தில் மிகச் சிறந்த உத்வேகத்தையும் ஆதரவை-யும் அளித்தது. இருமேல்நிலை வல்லரசுளின் மேலாதிக்கம், ஏகாதி பத்தியம், காலனி ஆதிக்கம் ஆகியவற்றிற்கு எதிரான உலகு தழுவிய போராட்டத்தில் மூன்றாம் உலக நாடுகளும் மக்களும் பிரதான சக்திகளாக அமைகிறார்கள்.

1. உலக மக்கள் தொகையில் ஆகப்பெரும்பான்மையாக விளங்கும் சுமார் 300 கோடி அடிமைப்பட்ட மக்கள் காலனி ஆதிக்க விலங்குகளை உதறியெறிந்து வருகிறார்கள். விடுதலை-யடைந்து வருகிறார்கள். மூன்றாம் உலக நாடுகள் பலவும் சொந்தப் படைகளை வைத்திருக்கின்றன. பல்வேறு அளவுகளில் காலனிய ஆதிக்கத்தின் செல்வாக்கை விட்டொழித்துள்ளன. அளவிலும்—ஆழத்திலும், சாதனையிலும்-அனுபவத்திலும் இன்றைய போராட்டம் கடந்த காலத்தைவிட மிதமிஞ்சி விட்டது. உலகு தழுவிய ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்தி என்கிற முறையில் அவை இன்று உலகப் புரட்சிப் போரட்டத்தின் பிரதான நீரோட்டமாகும்.

2. மிகவும் ஈவுஇரக்கமற்ற முறையில் ஒடுக்குமுறைக்குப் பலியாகி-யிருந்ததால் மூன்றாம் உலகின் நாடுகளும் மக்களும் போராட்டங்களில் மிகவும் உறுதியாக நிற்கிறார்கள். சுதந்திரம் அடைந்துவிட்டதாக அவர்கள் பிரகடனப்படுத்திக் கொண்டாலும் ஒரு முழுமையான அரசியல்—பொருளாதார விடுதலைக்காக கடுமையான போராட்டம் நடத்த வேண்டிய கடமையை எதிர்கொண்டுள்ளார்கள். மூன்றாம் உலக நாடுகள் ஒருபுறமும், ஏகாதிபத்தியமும் இருமேல்நிலை வல்ல-ரசுகளும் மற்றொரு புறமும் கொண்ட தவிர்க்க முடியாத முரண்பாடுகளும் போராட்டங்களும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கத்திற்கெதிரானப் போராட்டத்தில் பிரதான சக்தி என்கிற முறையில் மூன்றாம் உலகின் நீண்டகால பாத்திரத்தைத் தீர்மானிக்கின்றன.

3. மூன்றாவது உலக நாடுகளும் மக்களும் போராட்டங்-களின் மூலம் வெகுவாக அரசியல் விழிப்புணர்வு அடைந்துள்ளார்-கள். பல நாடுகளில் தொடர்த்து ஏகாதிபத்தியத்திற்கெதிராக தளராது கடுமையாகப் போராடியதன் விளைவாக ஒரு பலவீனமான நாடு பலமான நாட்டை வெல்ல முடியும். ஒரு சிறிய நாடு பெரிய நாட்டை வெல்ல முடியும் என்ற ஆழமான உண்மையை உணர்ந்-துள்ளார்கள். மூன்றாவது உலகம் முழுவதின் மனப்பாங்கைத் தப் போக்கி ஒரு உத்வேகத்தையும் அரசியல் பாய்ச்சலையும் அடைந்-திருப்பதை இது குறிக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு முன்



படிப்பகம்

www.padippakam.com

உலகு தழுவிய பலமான—உறுதியான ஆதரவின்றியிருந்த ஒடுக்கப்-பட்ட மக்களும் நாடுகளும் ஆக்கிரமிப்பு எதிர்ப்புச் சக்திகள், சோசலிச நாடுகள், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் உட்பட மூன்றாம் உலக நாடுகளின் பரஸ்பர ஆதரவைப் பெற்றுள்ளன. கடந்த காலத்தை விட கூடுதலான அரங்குகளிலும் பல்வேறு வழிகளிலும் இடைவிடாது போராடி விடுதலையடைந்த மூன்றாம் உலக நாடுகள் தம் கட்டுப்பாட்டில் உள்ள அரசு அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும். தங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை சீராக உயர்த்திக் கொள்ளவும் கூட்டுநடவடிக்கைகள் எடுக்கவும் முடியும். மிக முக்கியமான சர்வதேச அரங்குகளை பொது மக்களின் கருத்துக்காக வாதிடும் இடங்க-ளாக மூன்றாம் உலக நாடுகள் மாற்றியிருக்கின்றன. தமது பொது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கும் சக்திகளை இணைப்-பதற்காக பிரதேச ரீதியான நோக்கங்களுக்கானவை என்றோ, தனிவகை நிறுவனங்கள் என்றோ, சர்வதேச அமைப்புகளை நிறுவிக் கொண்டுள்ளன. ஏகாதிபத்திய எதிர்ப்பு, காலனியாதிக்க எதிர்ப்பு, மேலாதிக்க எதிர்ப்புப் போராட்டங்களை விரிவுபடுத்தவும், உயர்ந்த மட்டத்தில் தொடுக்கவும், மேலும் வியத்தகு பலன்களை ஈட்டவும், போராட்டங்களில் வளர்க்கப்படும் ஒற்றுமை மூன்றாம் உலக நாடுக-ளுக்கும் மக்களுக்கும் வாய்ப்பேற்படுத்தியிருக்கிறது.

4. ''ஒட்டுமொத்த கண்ணோட்டத்தில் பார்த்தால் மூன்றாம் உலகினுடைய 120 அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளை உள்ளடக்கிய அசிய, ஆப்பிரிக்க இலத்தீன் அமெரிக்கா, ஓசானியா ஆகிய-வற்றின் பரந்துபட்ட பகுதிகளில் அடக்குமுறை நடத்த ஏகாதிபத்-திய நாடுகளின் ஆற்றலுக்கு ஓர் எல்லைக்கோடு இருக்கிறது என்பதோடு மட்டுமின்றி இந்தப் பகுதிகளில் ஏதோ ஒரு வகையில் அவர்களுடைய நலன்கள் மோதிக் கொள்கின்றன. இது மூன்றாம் உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பு புரட்சிகர சக்திகளுக்கு நீண்ட காலத்திற்கு பலமாக வளர்வதற்கான சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. இருமேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான போட்-டியின் குவிமையமான ஐரோப்பா அவற்றினுடைய பலத்தின் பெரும்-பாகத்தை இழுத்துக் கிடத்தியிருக்கிறது. பல மூன்றாம் உலக நாடுகளின் மீது இறுக்கமான கட்டுப்பாடு செலுத்தப் போவதில்லை. ஏனெனில் தன்வசம் உள்ள ஒன்றை இழக்காமல் இன்னொன்றைக் கைப்பற்றுவது அவைகளால் முடியவில்லை என்பதே இப்பொழுது அடிக்கடி நிகழுகின்றது. இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து தங்களது அரசியல் விழிப்புணர்வை வளர்த்துக் கொண்டு நீடித்துப் போராடும் போராட்டத்தில் ஒற்றுமையை பலப்படுத்திக் கொண்டே மூன்றாம் உலக நாடுகளும் மக்களும் தங்களுடைய எதிரிகளின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொள்வதில் உணர்வோடும் இருக்கத் தொடங்கியுள்ளனர். இரண்டாம் உலக நாடுகளுக்கும் இரண்டு



படிப்பகம்

www.padippakam.com

மேல்நிலை வல்லரசுகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், இரண்டாம் உலக நாடுகளுக்கிடையிலான முரண்பாட்டையும், இரு மேல்நிலை வல்லரசுகளுக்குள்ளே உள்ள முரண்பாட்டையும் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய சொந்தபலமானவிசயங்களில் வென்று ஏவ்வொரு தடையையும் கடந்து, ஏகாதிபத்தியத்திற்கும் ஆதிக்க சக்திகளுக்கும் எதிரான புரட்சிகர இயக்கத்தைத் தொடர்ந்து முன்தள்ளுகிறார்கள்.''

★ *எனவே, இன்றைய உலக யுத்த தந்திரத்தின் பிரதான சக்திகள்: ஒடுக்கப்பட்ட தேசங்களும் நாடுகளும் சோசலிச நாடுகளும் அடங்கிய மூன்றாம் உலகமாகும்.*

முதலாவது, இரண்டாவது உலகின் தொழிலாளர் இயக்கமும் மூன்றாவது உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமும் ஒன்றையொன்று ஆதரித்து வருகின்றன. முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளர் இயக்கமும், புரட்சிகர மக்களும் தங்களுடைய தீரமிக்க போராட்டங்களில் குறிப்பிடத் தக்க வெற்றி பல ஈட்டியுள்ளனர். இரு மேல்நிலை வல்லரசுகளுக்கும் பலத்த அடிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரான உலக மக்களின் போராட்டத்திற்கு முழு ஆதரவையும் தருகிறார்கள். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் சோசலிச இயக்கத்தின் மிக அவசியமான அங்கமாய் உள்ள இரண்டு மேல்நிலை வல்லரசுகளுக்கும் எதிரான போராட்டமானது மிகவும் கடினமானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது. இந்தப் போராட்டமானது சரியான பாதை வழியாக முன்னேறி இறுதி வெற்றியை பெறும்படியாக இருப்பதற்கு எல்லா நாடுகளையும் சேர்ந்த பாட்டாளி மக்கள் மார்க்சிய-லெனினியத்தைக் கற்றுக் தேர்ந்து அதனைப் பரவச் செய்வதற்கான முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். முன்னணிப் பாத்திரமாற்ற வேண்டும். எல்லா நாடுகளையும் சேர்ந்த மக்களுக்கு எல்லா வகையிலும் ஆதரவையும் உதவிகளையும் செய்து தன்னுடைய சர்வதேசக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரானப் போராட்டத்தில் மூன்றாவது உலகம் பிரதான பாத்திரத்தை வகிக்கிறது என்ற உண்மை இப்போராட்டத்தில் சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் பங்கையும் பொறுப்பையும் எந்தவகையிலும் குறைத்துவிடவில்லை. சோசலிச நாடுகளும் உலகப் பாட்டாளி வர்க்கத்தோடு தோளோடு தோள் நின்று ஏகாதிபத்தியம், காலனி ஆதிக்கம், மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் மூன்றாம் உலக நாடுகளாக முன்னேறுகின்றன. இதுவும் சோசலிச ரசியாவை ஒடுக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் வைத்து உலக அரசியல் சக்திகளை வகைப்படுத்திய



படிப்பகம்

www.padippakam.com

லெனினிச கோட்பாடுகளின்படியே சரியானதாகும்.

★ *எனவேதான், இன்றைய உலக யுத்த தந்திரத்தின் தலைமைச் சக்தி : சர்வதேச பாட்டாளி வர்க்கமும், சோசலிச நாடுகளும் ஆகும்.*

கடந்த முப்பதாண்டுகளில் சர்வதேச அரசியல் பொருளாதார உறவுகளில் ஏற்பட்ட மாறுதல், சர்வதேசிய அரசியல் சக்திகளின் மறுசேர்க்கை இதுவரை உலக யுத்ததந்திரத்தின் நேரடி சேமிப்பு சக்தியாக இருந்த ஒடுக்கப்பட்ட நாடுகள், மக்களை ஏகாதிபத்தியம் காலனி ஆதிக்கம், மேலாதிக்கத்திற்கெதிரான இன்றைய உலக யுத்ததந்திரத்தில் பிரதான சக்தியாக்கிருக்கின்றன. எனவே, இன்றைய உலக யுத்த தந்திரத்தின் மறைமுக சேமிப்பு சக்தியான 1, இருமேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் போர்களும் 2. இருமேல்நிலை வல்லரசுகளுக்கும் இரண்டாம் உலக நாடுகளுக்கும் இடையிலான மோதல்களும் போர்களும் 3. இரண்டாம் உலக நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் - ஆகியவற்றை இயக்குவது மிக முக்கியமான பங்காற்றுகிறது. மறைமுக சேமிப்பு சக்திகளின் யதார்த்த நிலைமை பின்வருமாறு இருக்கின்றன.

1. ''அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்கு எதிராக 20, 30 ஆண்டு போராட்டங்களின் மூலமும் அதேசமயம் அமெரிக்கா அதன் ஆக்கிரமிப்பு கொள்கையால் அடைந்த உலகு தழுவிய கடுமையான வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் இரண்டாம் உலகப் போருக்குப் பின் சில காலம் அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு அடிபணிந்து போகும்படியாக இருந்த நிலைமையை வெற்றிகரமாக மாற்றி விட்டன. ஜப்பானும் கூட இதே நிலையில் இருக்கிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் இன்னும் பிற நாடுகளின் ஏகபோக முதலாளித்துவ வர்க்கம் அமெரிக்காவுடன் ஆயிரத்தொரு வழிகளில் தொடர்பு கொண்டுள்ளன என்பது உண்மையே. சோவியத் சமூக ஏகாதிபத்தியம் தரும் அபாயகரமான தொல்லையை எதிர்கொள்வதால், இந்நாடுகள் அமெரிக்காவின் 'பாதுகாப்புக்குடையையே' சார்ந்து நிற்க வேண்டியுள்ளது. ஆனால், அமெரிக்கா கட்டுப்படுத்தும் கொள்கையை எவ்வளவு காலம் நீடிக்கிறதோ அதுவரை அம்மாதிரியான கட்டுப்பாட்டிற்கு எதிராகவும் சம பங்குக்காகவும் அவை போராடுவதை நிறுத்தப் போவதில்லை.''

2. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சமூக ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டிற்கு எதிராக போராட்டங்கள் தொடுப்பதை எப்பொழுதுமே நிறுத்தியதில்லை. செக்கோஸ்லாவாக்கியாவை ஆக்கிரமித்த



படிப்பகம்

www.padippakam.com

-திலிருந்த அதன் மக்கள் எதிர்ப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. போலந்து—ருஷிய கூட்டை போலந்து அரசியல் நிர்ணய சட்டத்தில் புகுத்துவதை எதிர்த்து போலந்து மக்கள் மீண்டும் போராடியிருக்கி -றார்கள். தொழிலாளர்கள் 'வலை நிறுத்தப் ஆர்பாட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். சமூக ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டை சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்கள் தெளிவாகவே எதிர்த்துள்ளன. பல்கேரியா, ஹங்கேரி பத்திரிக்கைகளும சமூக ஏகாதிபத்தியத்தின் சுரண்டலையும் ஆதிக்கத்தையும் எதிர்த் துள்ளன. ருசியா தனது உலக மேலாதிக்கத்துக்கான போட்டி நட வடிக்கைகளைத் துரிதப்படுத்தும் போது மேற்கு ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் எதிராக அது தயார் செய்கிற யுத்தத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்தான் முன்னணித் தளமாக அமைகின்றன. வார்சா ஒப்பந்த அமைப்புகளின் மூலம் கிழக்கு ஐரோப்பிய நாடு -களில் ருசியாவின் கட்டுப்பாடும் தலையீடும் சகிக்க முடியாததாகி வருகிறது. இது கிழக்கு ஐரோப்பிய நாடுகள், மக்களது ஆத்திரத் தைத் தூண்டி சுதந்திரத்தையும் பாதுகாப்பையும், சம உரிமையையும் பாதுகாப்பதற்கான போராட்டத்தை வேகமாக்குகிறது.

3. இரு மேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான போட்டா போட்டியின் குவிமையம் ஐரோப்பா. ஐரோப்பாவை ஒரு கேந்திர மான முக்கிய புள்ளியாக அவை கருதுவதால் கிழக்கு—மேற்கு ஐரோப்பிய நாடுகள் இரண்டுமே அவற்றின் தாக்குதலின், எதிர்த் தாக்குதலின் கொடூரத்தைத் தாங்க வேண்டியிருக்கும். தங்களு -டைய தேசிய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய ஆழமான பிரச்சனை அவர்களை எதிர்கொண்டுள்ளது. ''இந்த ஏகாதிபத்திய காலகட்டத்தில், ஐரோப்பாவிலும் கூட தேசியப் போராட்டங்கள் சாத்தியமில்லை என்று கூறிவிட முடியாது. இந்த காலகட்டம் கிழக்கு ஐரோப்பாவில் பெரிய அளவிலான தேசிய இயக் -கங்கள் தோன்றுவதை எவ்வாறு தடுக்கவில்லையோ, அதைப் போலவே, சிறிய நாடுகள் (இணைத்துக் கொள்ளப்பட்ட அல்லது தேசிய ரீதியில் ஒடுக்கப்பட்ட) ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான தேசிய போராட்டங்கள் நடத்த முடியும். நடக்கும் என்பது மட்டு மல்ல அவை தவிர்க்கமுடியாதவையும், முற்போக்கானவையும் புரட்சிகரமானவையும் ஆகும்'' என்று கூறும் லெனின் மேலும் கூறி -யதாவது, ''ஏகாதிபத்தியம், விவசாயப் பிரதேசங்களை மட்டு -மின்றி மிக உயர்ந்த அளவில் தொழில் மயமான பகுதிகளையும் கபளீகரம் செய்ய முயற்சி செய்கிறது என்பதுதான் ஏகாதிபத்தியத் -தின் சிறப்பான குணாம்சம் ஆகும்.''

4. பல மூன்றாம் நாடுகள் மீதான கட்டுப்பாட்டையும் சுரண் -டலையும் அவ்வளவு சுலபமாக சில இரண்டாம் உலக நாடுகள் விட்டுக்கொடுக்காதது மட்டுமல்ல, புதிய சூழ்நிலைகளில் புதிய வடி



படிப்பகம்

www.padippakam.com

வங்களில் அரசியல், பொருளாதாரம் மற்றும் வேறு வழிகளில் நீடிக்கவும் முயலும். ஆனால் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது மூன்றாம் உலக நாடுகள் மீது ஆதிக்கமும் ஒடுக்குமுறையும் செலுத்தும் பிரதான சக்திகளாக இவை நீடிக்க முடியாது. மேலும் இரு மேல்நிலை வல்லரசுகளின் ஒடுக்குமுறைக்கும் தலையீட்டிற்கும் கொள்ளைக்கும், குறிப்பாக சமூக ஏகாதிபத்தியத்தின் யுத்த மிரட்டலுக்கும் அவை இலக்காகி இருக்கின்றன என்பது பயங்கரமான யதார்த்தமாக மாறி உள்ளது. மூன்றாம் உலக நாடுகளுக்கு சில சலுகைகள் தரும்படியோ, மேலாதிக்கத்திற்கெதிரான அவற்றின் போராட்டத்தில் ஆதரவு தரும்படியோ, அல்லது நடுநிலை வகிக்கும்படியோ இரண்டாம் உலக நாடுகளின் சொந்த நலன்கள் சில விவகாரங்களில் அவைகளை நிர்பந்தப்படுத்துகின்றன.

எனவே, தற்போதைய முதல் எதிரிகளான இரண்டு மேல்நிலை வல்லரசுகளுக்கும் இரண்டாம் உலக நாடுகளுக்கும் இடையில் ஒரு தெளிவான வேறுபாட்டை வரைந்து கொள்ள வேண்டும் என்பது மூன்றாம் உலக நாடுகளும் மக்களும் கணக்கில் கொள்ள வேண்டிய முக்கியமானதொரு பிரச்சினை ஆகும். குறிப்பிட்ட நிலைமைகளில் இரு மேல்நிலை வல்லரசுகளுக்கு எதிரான போராட்டத்தில் இரண்டாம் உலக நாடுகளோடு இணைய வேண்டியது அவசியமும் சாத்தியமும் ஆகிறது. இது ஆக்கிரமிப்பு மற்றும் விஸ்தரிப்பு கொள்கைகளுக்கும் நேரடியான அடியைக் கொடுக்கும். பகைவனுக்கு எதிரான சண்டையில் மத்தியதர சக்திகளை வென்றெடுப்பதின் மிகப்பெரிய அவசியத்தை மார்க்சியம்—லெனினியம் எப்பொழுதுமே வலியுறுத்தி வந்திருக்கிறது.

யுத்தத்தின் மூலம் உலகில் மேலாதிக்கம் பெறுவதே இரு மேல்நிலை வல்லரசுகளின் நோக்கமாக இருப்பது போலவே, அதை அடைவதற்கான அவர்களுடைய வழிவகையாகவும் அதுவே இருக்கிறது. ருசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான மேலாதிக்கத்திற்கான போட்டா போட்டி மேலும் கூர்மையடைந்து உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கும் பரவி அதன் விளைவாக எழுந்துள்ள யுத்த அபாயம் அனைத்துலக மக்களுக்கும் பேராபத்தை ஏற்படுத்துகிறது. இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிந்தைய மிக மோசமான, பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளில் இன்று முதலாளித்துவ உலகம் சிக்கிக் கொண்டுள்ளது. இச்சூழ்நிலைகளில் இரு மேல்நிலை வல்லரசுகளும் ஆயுதப் பெருக்கத்தையும் யுத்த தயாரிப்புகளையும் படிப்படியாக உயர்த்தி வருகின்றன. செல்வாக்கு மண்டலங்களுக்கான நாய்ச் சண்டையை ஆழப்படுத்துகின்றன. மேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான இப்போட்டி ஒருநாள் உலக யுத்தத்திற்கு இட்டுச் செல்லும். இது மனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட விதியாகும்.



படிப்பகம்

www.padippakam.com

★எனவேதான், இன்றைய உலக யுந்தாந்திரத்தின் மறைமுக சேமிப்பு சக்தி : 1. இருமேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் யுத்தங்களும் 2. இருமேல் நிலை வல்லரசுகளுக்கும் இரண்டாம் உலக நாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளும் மோதல்களும் யுத்தங்களும் 3. இரண்டாம் உலக நாடுகளுக்கு உள்ளேயிருக்கும் முரண்பாடுகளும் மோதல்களும் ஆகும்.

ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் பிரதான சக்தியான ஒடுக்கப்பட்ட நாடுகளையும் மக்களையும் தவறான பாதையில் இட்டுச்செ று ஏகாதிபத்தியத்துடனும் இருமேல்நிலை வல்லரசுகளுடனும் குறிப்பாக சமூக ஏகாதிபத்தியத்துடனும் சமரசப்படுத்தும் சக்திகளாக இருப்பவை எல்லாவகை திரிபுவாத, நவீன திரிபுவாத சக்திகளும் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் பல்வேறு வகையான சீர்திருத்த தேசியவாதமும் விட்டுக்கொடுத்து சமரசம் செய்பவர்களும் பாசிபிசவாதிகளும் ஆவர். வேகமாக மாறும் தேசிய, சர்வதேசிய நிலைமையின் சூழலில் சமீபத்திய மாறுதல்கள் மிகவும் பாரதூரமானவை. திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் மாறுதல்களையும் அதன் விளைவாக எழுந்த புதிய பிரச்சனைகளையும் உலக வர்க்கப் போராட்டத்தின் வழிகாட்டியாக மூன்றுலகக் கோட்பாடு அமைந்திருப்பதையும் என்றுமே அங்கீகரித்ததில்லை. ஏகாதிபத்தியத்திற்கு குறிப்பாக, சமூக ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்யும் சந்தர்ப்பவாதமே இதற்குக் காரணமாகும்.

திரிபுவாத, நவீன திரிபுவாத கும்பலோடு இன்று புதியதொரு நவீன டிராட்ஸ்க்கிய 'இடது' சந்தர்ப்பவாத கும்பலும் சேர்ந்து கொண்டுள்ளது. சோசலிச முகத்திரையை அணிந்து, லெனினது புகழைத் தனது கெட்ட நடத்தைக்குப் பயன்படுத்தி, சோசலிசப் பதாகையை வீசி வீம்படித்து உலக மக்களை ஏமாற்றித் திரியும் சமூக ஏகாதிபத்தியத்தை சோசலிச நாடு என்றும் அதன் ஆக்கிரமிப்பு தலையீடு, சதி, நாசவேலை, ஆட்சி கவிழ்ப்பு, விஸ்தரிப்புகளை ''சர்வதேசக் கடமைகளை நிறைவேற்றுவதாகவும்'', ''தேசிய விடுதலை இயக்கங்களை ஆதரிப்பதாகவும்'', ''பழைய,புதிய ஏகாதிபத்-தியங்களை முறியடிப்பதாகவும்'', ''சமாதானம் மற்றும் ஜனநாயகத்தின் நலன்களைக் காப்பதாகவும்'' வெட்கமின்றி வியாபாரம் செய்யும் கூட்டமே திரிபுவாத, நவீனதிரிபுவாதக் கும்பலாகும். ''பத்து விரல்களால் பத்து ஈக்களைப் பிடிக்கும் முயற்சி'' எப்படி ஏகாதிபத்தியத்தின் படைவரிசையை சிதறடிக்கிறதோ, அதைப்



படிப்பகம்

www.padippakam.com

போன்று, இருமேல்நிலை வல்லரசுகளுக்கு எதிராக, குறிப்பாக மூன்றாம் உலகப் போரின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் ருசிய சமூக ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்திற்குப் பதிலாக அனைத்து ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து ஏககாலத்தில் போராடும் உலக யுத்த தந்திரத்தை முன்வைக்கும் நவீன 'டிராட்ஸ்கிய' இடது திரிபுவாதக் கும்பலும் தாக்குதல் இலக்கைப் பரவலாக்கி தாக்குதல் முனையை சிதறடிக்கிறது.

சாராம்சத்தில் இத்திரிபுவாத போக்குகள் அனைத்துமே புரட்சியின் பிரதான சக்தியை தவறான திசைவழியில் இட்டுச் சென்று சமூக ஏகாதிபத்தியத்துடன் சமரசபடுத்துவதாகும். அதேசமயம் இரு மேல்நிலை வல்லரசுகளுக்கும் குறிப்பாக ருசிய சமூக ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான பரந்து விரிந்த ஐக்கிய முன்னணியைக் கட்டும்போது தேசிய துரோகம், சலுகைகளை விட்டுக் கொடுத்து சமரசம் செய்வது, நவீன காலனியாதிக்கம் ஆகியவற்றிற்கெதிரான போராட்டத்தின் ஊடேயும் முற்போக்கு சக்திகளுக்கு எதிராக பிற்போக்கு சக்திகளின் தாக்குதலின் ஊடேயும் ஐக்கியத்தை கட்டவில்லையானால் இதுவும் மற்றொரு வகை திரிபுவாதமாகும்; எதிரிகளுடன் சமரசம் செய்வதில் போய் முடியும்.

பலவர்ண திரிபுவாதிகளோடு சேர்ந்து வேறுசில சீர்திருத்த தேசியவாதிகளும் பாசிபிசவாதிகளும் இன்றைய உலகில் யதார்த்தத்தில் யுத்த அபாயமே இல்லை என்று நடித்து மக்களை ஏமாற்றுகிறார்கள்; சாந்தப்படுத்துகிறார்கள். அவர்கள் பரந்துபட்ட மக்களை நிராயுதபாணியாக்கி யுத்த வெறியர்களிடம் கருணைக்கு மன்றாடும்படி செய்கிறார்கள். ''ஆயுதம் மற்றும் படைபல குறைப்பு,'' ''யுத்த தந்திரம் முக்கியத்துவம் வாய்ந்த ஆயுதங்களுக்கு வரம்பிடும் ஒப்பந்தம்,'' ''பதட்டநிலை தணிப்பு'' ஆகிய போலி நடவடிக்கைகளின் மீது நம்பிக்கை வைக்குமாறு மக்களை திசை திருப்பி யுத்த தயாரிப்புக்களையும் ஆயுதப் பெருக்கத்தையும் மூடி மறைக்கிறார்கள். மாறாக, இவற்றை அம்பலப்படுத்தும் மார்க்சிய—லெனினியவாதிகளை ஆதிக்க வெறியர்கள் என்றும் அவதூறு செய்கின்றனர். ஏகாதிபத்தியவாதிகளுக்கு வக்காலாத்து வாங்கும் சிலர் ''சலுகைகளை விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் கொள்கையை தாங்கிப் பிடிக்கின்றனர். உண்மையில் ஐரோப்பாவில் சில ஏகாதிபத்தியவாதிகளும் அமெரிக்காவும் ருசியாவைப் பொருத்தவரையில் இக் கொள்கைகளையையே பின்பற்ற முயலுகின்றன. பொருளாதார ரீதியாக சமூக ஏகாதிபத்தியத்திற்கு பெரும் கடன், விரிவான வர்த்தகம், தொழில் நுட்ப பரிவர்த்தனை, மூலப் பொருட்களை கூட்டாக பயன்படுத்துவது ஆகியவற்றை வாரி வழங்கி, 'சமாதான சக ஒத்துழைப்பு,' 'யுத்தத்தடுப்பு' ஆகியவற்றுக்கு ''பொருளாயாத அடிப்படையைக்'' கட்டிக் கொள்ள முயல்கிறார்கள். இராணுவ ரீதியாக



படிப்பகம்

www.padippakam.com

..ாட வரம்பிடும் ஒப்பந்தம்', 'ஆயுதம் மற்றும் படை ..க குறைப்பு', ஒப்பந்தங்களின் மூலம் விட்டுக் கொடுத்து சாந்தப் படுத்த முயலுகிறார்கள். அரசியல் ரீதியாக, அங்கோலாவில் கியூ-பாவின் கூலிப்படைகள் மூலம் ஆக்கிரமித்திருப்பது சரியே என்றும், கிழக்கு ஐரோப்பாவில் சமூக ஏகாதிபத்திய மேலாதிக்கம் நியாயமா-னதே என்றும் ஆதரிக்கின்றனர். சமூக ஏகாதிபத்தியத்தின் ஆப்.. கான் ஆக்கிரமிப்பிற்கு கார்ட்டர் காட்டிய அடையாள எதிர்ப்பை.. ய கூட மிகையாக அலட்டிக் கொள்வதாக இவர்கள் கூறினர் இன்னும் சிலர் ருசிய அபாயத்திலிருந்து தாம் பாதுகாப்பாய் இருப் பதற்காக மற்ற நாடுகளின் பாதுகாப்புக்கு விலைபேசி சமூக ஏகாதி பத்தியத்தின் கவனத்தை கிழக்கு நாடுகளின் மீது திருப்பிவிட முடி-யும் என்று நம்புகின்றனர்.

★ *ஏனவேதான், இன்றைய உலக யுத்த தந்தி-ரத்தின் பிரதான தாக்குதல் திசைவழி எல்லா வகை திரிபுவாத சக்திகளையும் குட்டி முதலா-ளித்துவ ஜனநாயகவாதிகளையும் பல்வேறு வகையான சீர்திருத்த தேசியவாதிகளையும் பாசிபிசவாதிகளையும் விட்டுக்கொடுத்து சாந் தப்படுத்த முயலுபவர்களையும் அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவதாகும்.*

ருசியா, மற்றும் அமெரிக்கா ஆகிய இரு மேலாதிக்கவாதிக-ளுக்கு எதிரான ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை அமைத்து, உறு-தப்படுத்த, விரிவாக்க தன்னால் இயன்றதனைத்தையும் செய்வ-தோடு, அந்த ஐக்கிய முன்னணியின் உட்கருவாக விளங்கவேண்-டியது சர்வதேச பாட்டாளி வர்க்கமாகும். ''மேலாதிக்கத்திற்கெதி ராகப் போராடும் உலக சக்திகளின் பலம் பெருகி அது ஒரு பரந்து விரிந்த சர்வதேச ஐக்கிய முன்னணியாக வளரும். இந்த ஐக்கிய முன்னணியின் தலைமை அணியில் சர்வதேச பாட்டாளி வர்க்கத்து-டன் தோளோடு தோளாக சோசலிச நாடுகள் நிற்கும். இவர்கள், இரு மேல்நிலை வல்லரசுகளது ஆக்கிரமிப்புக் கொள்கைகளையும் யுத்தக் கொள்கைகளையும் அம்பலப்படுத்தி தீர்மானகரமாக எதிர்ப் பதோடு வல்லரசுகளின் மிரட்டலுக்கும் ஆக்கிரமிப்புக்கும் உள்ளான நாடுகளின், மக்களின் கூட்டான முயற்சிகளை ஆதரிக்கின்றனர். மூன்றாம் உலகநாடுகளும் மக்களும் தங்களது சுதந்திரத்தையும், ஆட்-சியையும், நாட்டுப் பாதுகாப்பையும் தற்காத்துக் கொள்ள வல்லரசு களுக்கு எதிராக பழிக்குப் பழி என்னும் போராட்டம் நடத்துகிறார்-கள். முதலாம், இரண்டாம் உலக நாடுகளிலுள்ள மக்களின் அரசியல் விழிப்புணர்வு வளர்ந்து கொண்டிருக்கிறது. இரண்டு மேலாதிக்க-



படிப்பகம்

www.padippakam.com

வாதிகளுக்கும் எதிராக பல்வகைப்பட்டப் போராட்ட... கள் கட்டவிழ்த்து விடுகிறார்கள். இரண்டாம் உல... அமெரிக்க, ருசிய கட்டுப்பாட்டுக்கு எதி... தங்களது போராட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டி -ருக்கின்றன. அத்துடன் தங்கள் மத்தியிலும் மூன்றாம் உலகோ -டும் ஒன்றிணைந்து கொள்வதற்கு மிக மிக பலமான போக்குகளை யும் காட்டி வருகிறார்கள். இரு மேலாதிக்க வல்லரசுகளுக்கும் எதிராக உலகிலுள்ள எல்லா சக்திகளுடைய போராட்டத்தையும் படிப்படியாக உயர்த்துவதற்கான ஐக்கியந்தான் இன்றைய சர்வ தேசிய நிலைமையின் வளர்ச்சியிலுள்ள முக்கியப் போக்காக இருக் -கிறது என்ற உண்மையைத்தான் இவைகளனைத்தும் சுட்டிக் காட்டுகின்றன.'' ''உலகந்தழுவிய புரட்சிகரப் போராட்டங்களில் தலைமையான எதிரியை அடித்து நொறுக்க சாத்தியமான ஒரு பரந்த ஐக்கிய முன்னணியைக் கட்ட வேண்டும் என்பதுதான் சர்வ தேச பாட்டாளி வர்க்கத்தின் உறுதியான புரட்சிகரக் கொள்கையாய் இருந்து வருகிறது.''

★ *எனவேதான், இன்றைய உலகின் அரசியல் சக்திகளை பிரித்தொதுக்கும் திட்டம், வியூகம் கீழ்க்கண்டவாறு இருக்கிறது:*

*யுத்ததந்திர கட்டம் முழுவதற்கும்* சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் மூன்றாம் உலக நாடுகளுடன் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், மேலாதிக்கத்திற்கெதிராக அமைக்கும் கூட்டணி.

*மேலாதிக்கத்தை வீழ்த்துகின்ற யுத்த தந்திர இடைக்கால கட்டம் வரைக்கும்* சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் மூன்றாம் உலக நாடுகளுடனும் இரண்டாம் உலக நாடுகளுடனும் மேலாதிக்கத்திற்கெதிராக அமைக்கும் பரந்து விரிந்த சர்வதேச ஐக்கிய முன்னணி.

''முதலாவதாக, இந்தக் கோட்பாடானது சர்வதேசப் பாட்டாளிகளுக்கு நம் சோசலிச நாடுகள், மக்களுக்கும் அதிகமான நம்பிக்கையை ஊட்டுவதோடு இன்றைய உலகில் நம்மவர்கள், நம்முடைய நண்பர்கள், நம்முடைய எதிரிகள் ஆகியோருக்கு இடையேயான அடிப்படையான உறவுகளை தெரிந்து கொள்ள உதவுகிறது. மேலும் ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரானப் போராட்டத்தில் அவர்கள் வெற்றி பெறப் போவதையும் இறுதியில்



படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிசம் வெற்றிகொள்ளப் போவதையும் இது அறிவுறுத்துகிறது. இரண்டாவதாக, மூன்றாம் உலக நாடுகளுக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் நம்பிக்கையூட்டி அவர்களுடைய உண்மையான மிகப் பெரும் பலத்தை அறிந்து கொள்ள துணை செய்கிறது. தம்முடைய போராட்டத்தில் தமக்கு சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினுடைய, சோசலிச நாடுகளினுடைய உறுதியான ஆதரவும் முதலாம் இரண்டாம் உலக மக்களின் நட்புறவும் கிடைப்பதன்றி ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இரண்டாம் உலகத்திடமிருந்து ஒத்துழைப்பையும் பெறமுடியும் என்பதையும் இருமேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான மோதல்களைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் இக்கோட்பாடு பார்க்கும்படி செய்கிறது. மூன்றாவதாக, இக்கோட்பாடு முதலாம், இரண்டாம் உலக மக்களுக்கு உயர்ந்த நம்பிக்கைகளை ஊட்டுவதோடு, இரண்டு மேல்நிலை வல்லரசுகளின் ஆக்கிரமிப்பு அபாயத்தின் முன் தேசிய வாழ்வையும் சுய ஆதிபத்திய உரிமையையும் பாதுகாக்கப் பாடுபடும் இரண்டாவது உலகத்தின் அரசியல் சக்திகளுக்கும் ஒரு முன்னேற்றப் பாதையைக் காட்டுகின்றது. சுருக்கமாகச் சொன்னால், இந்த தத்துவம் சக்தி வாய்ந்தது. ஏனென்றால், அது உலக அரசியலின் யதார்த்த நிலைமைகளுக்கு இசைவாக இருந்து, மனித குலத்தின் ஒளிமயமான எதிர்காலத்திற்கும் வெளிச்சம் காட்டுகின்றது.''

படிப்பகம்

www.padippakam.com

# இரு மேல்நிலை வல்லரசுகளின் மேலாதிக்கம் மற்றும் யுத்தக் கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தையும் ஐக்கியத்தையும் கட்டிவளர்ப்போம்! சமரச சக்திகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத்துவோம்!!

நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன; தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன; மக்கள் புரட்சியை விரும்புகிறார்கள் — இதுவே இன்றைய பிரதானப் போக்காகும். அதேசமயம், புரட்சிக்கான காரணிகளும் வளர்கின்றன. யுத்தத்திற்கான காரணிகளும் வளர்கின்றன. எவ்வாறாயினும், அதாவது, யுத்தம் புரட்சியின் எழுச்சிக்கு வழி வகுத்தாலும் அல்லது புரட்சி யுத்தத்தை தடுத்து நிறுத்தினாலும் ஒன்று அல்லது மற்றொரு மேல்நிலை வல்லரசு மனிதகுலத்தின் விதியைத் தீர்மானிக்கப் போவதில்லை. இறுதியில் அன்றாடம் விழிப்புணர்வு பெறும்கோடிக்கணக்கான உலக மக்களே தீர்மானிக்கப் போகிறார்கள். உலக மேலாதிக்கத்தைக் கைப்பற்றுவதற்கான இரு மேல்நிலை வல்லரசுகளின் மிருகத்தனமான வெறிக்கு எதிராக உலக புரட்சிகர மக்களின் போராட்டம் கடுமையான தாக்குதலைத் தொடுக்கிறது; உலக வரலாற்றின் முன்னேற்றத்திற்கு தொடர்ச்சியான உத்வேகத்தை கொடுக்கிறது. மேல்நிலை வல்லரசுகள் மேலும்மேலும் தனிமைப்படுத்தப்பட்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொல்லைகளில் சிக்கிக் கொண்டுள்ளனர் என்பதையே நிலவரங்கள் காட்டுகின்றன. பிளவுகளை விதைப்பது தொல்லைகளை

படிப்பகம்

www.padippakam.com

உருவாக்குவது, நாச வேலைகளைச் செய்வது போன்ற எல்லா முயற்சிகளையும் அவர்கள் மேற்கொண்டும் விடுபடவே முடியாத சுழலில் சிக்கிக் கொண்டனர். அவர்கள் விரித்த வலையில் அவர்-களே தப்ப முடியாதவாறு மாட்டிக் கொண்டனர்.

மேலாதிக்கம் மற்றும் யுத்தக் கொள்கைகளுக்கு எதிரான உலகு தழுவிய போராட்டத்தின் வெற்றி அடிப்படை நலன்களைப் பொருத்தவரை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தினுடைய சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்குமான போராட்டத்தின் பிரிக்க முடியாத அங்கமே ஆகும். மேலாதிக்கத்திற்கான ருசியா, அமெரிக்கா போட்டாபோட்டியின் விளைவாக எழும் யுத்த அபாயம் உலகம் முழுவதுமுள்ள மக்களுக்குப் பெருகி வரும் பேரபாயமாகும். உலக ஆதிக்கத்திற்காக வீணாக முயலும் சில யுத்த வெறியர்களைத் தவிர உலகம் முழுவதிலுமுள்ள புரட்சிகர மக்களு பெரும்பான்மையான நாடுகளும் அமைதியையே விரும்புகிறார்கள்; மனித குலத்திற்கு பேரழிவைத் தரும் புதிய உலக யுத்தத்தை வெறுக்கிறார்கள்; எதிர்க்கிறார்கள். மார்க்சிய — லெனினியவாதிகளைப் பொறுத்தவரை, "முதலில் நாம் அதற்கு எதிரானவர்கள். இரண்டாவது, நாம் அதற்கு அஞ்சுபவர்கள் அல்ல." மேலும் மனித இனம் நிச்சயம் யுத்தத்தை அழிக்குமேயல்லாது யுத்தம் மனித இனத்தை அழித்து விட முடியாது என்பதையும் ஏகாதிபத்திய யுத்தத்தை புரட்சிகர யுத்தத்தாலேயே ஒழிக்க முடியும் என்பதையும் நாம் உறுதியாக நம்புகிறோம். "ஏகாதிபத்திய அரசியலின் உள்ளடக்கம் மேலாதிக்க-மாகும். அந்த அரசியலின் தொடர்ச்சி ஏகாதிபத்திய யுத்தமாகும்', (லெனின்)

இறுதியில் யுத்தம் வெடிக்குமானால் அதன் விளைவு யுத்-தத்தைத் தூண்டுபவர்களின் விருப்பத்திற்கு நேர் எதிராகத்தான் நிச்ச-யம் திரும்பும். அவர்களது திட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாகும். யுத்தம் நீடிக்கும்போது அவர்களது கணக்குகளையும் கட்டுப்பாட்-டையும் மீறி பல மாறுதல்கள் நடந்தேறும். ஆக்கிரமிப்புக்கு எதிராக அனைத்து நாடுகளின் மக்களும் அணிதிரண்டு அடக்க முடியாத அளவுக்கு ஆர்த்தெழுந்து போர் தொடுப்பர். இறுதியில், உக்கிரமான, உறுதியான, நீடித்த போரில்,யுத்தத்தைத் தூண்டுபவர்களை மக்கள் நிச்சயம் துடைத்தெறிவார்கள். "ஒரு மூன்றாவது உலகப் போரைத் தொடுப்பதில் ஏகாதிபத்தியவாதிகள் வலிந்து நின்றால், பல நூற்றுக்கணக்கான இலட்சோபலட்ச மக்கள் சோசலிசத்திற்கு மாறி வருவார்கள் என்பதும், உலகத்தில் ஏகாதிபத்தியவாதிகள் இருக்க இடமே இருக்காது என்பதும் நிச்சயமாகும். ஏகாதிபத்தியத்தின் முழு அமைப்பும் சுத்தமாக தகர்ந்து போகும் என்பதும் நடக்கப் போகிறது" (மாவோ) இக்கண்ணோட்டத்திலிருந்து மூன்றுலகக் கோட்பாட்டின் ஒளியில் நமது தேசிய, சர்வதேசியப் பணி



படிப்பகம்

www.padippakam.com

களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச ரீதியில் முதலாவதாக, யுத்தப் பேரபாயத்தைப் பற்றி மக்களை நம் எச்சரிக்க வேண்டும். ஏகாதிபத்திய நாடுகளில் குறிப்பாக இரு மேல்நிலை வல்லரசு நாடுகளில் நடக்கும் சோசலிசப் புரட்சியின் மூலம் மட்டுமே ஏகாதிபத்தியத்தின் விளைபொருளான நவீன யுத்தத்தை ஒழிக்க முடியும். இன்னும் அப்படி ஒரு நிலை ஏற்படவில்லையாதலால் உலகப் போருக்கு எதிரான நமது விழிப் புணர்வை தளர்த்திக் கொள்ள யாதொரு காரணமும் இல்லை. இரு மேலாதிக்க வல்லரசுகளுக்குமிடையிலான போட்டி கடுமையாகி வருவதாலும், குறிப்பாக சமூக ஏகாதிபத்தியம் மூர்க்க வெறியுடன் தாக்கும் நிலையில் இருப்பதாலும் அவர்களுக்கிடையிலான தகராறை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்ளவோ மற்ற நாடுகளையும் உலக மக்களையும் யுத்தத்தில் இழுத்து விடாமலோ இருக்கப்போவதில்லை. ஏனெனில், அவர்களுக்கிடையிலான தகராறே உலக மக்களையும் நாடுகளையும் கூறுபோடுவது பற்றித்தான். இவர்களுடைய ஈவுஇரக்கமற்ற போட்டாபோட்டியின் போது சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக சில நேரங்களில் அவை சில உடன்பாடுகளுக்கு வரலாம். ''ஆனால் அது தோன்றி மறைவதோடு ஏமாற்றக்கூடியதும் ஆகும். சாராம்சத்தில் போட்டியே பிரதானமாய் இருக்கிறது'' (மாவோ) அது தவிர்க்க முடியாதபடி யுத்தத்திற்கு இட்டுச் செல்கிறது. இப்போதைய நிலையில் ஒரு யுத்தத்திற்கான கூறுகள் தெளிவாக வளர்ந்து நிற்கின்றன.

இரண்டாவதாக, ''மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தைப் படிப்படியாக உயர்த்துவதற்கான எல்லா முயற்சிகளையும் நாம் எடுத்தாக வேண்டும். அதாவது, யுத்தத்தை தடுத்து நிறுத்தப் போராடுவதோடு நிகழ்ச்சிப் போக்கில் எல்லா நாடுகளுடைய பாதுகாப்பு ஆற்றல்களையும் பலப்படுத்தியாக வேண்டும்.'' இரு மேல்நிலை வல்லரசுகளும் ஆயுத குவிப்பிற்காகவும் யுத்த தயாரிப்பிற்காகவும் உள்நாட்டு மக்களை ஒடுக்குவதையும் சுரண்டுவதையும் தீவிரமாக்கியிருப்பதாலும் ஆக்கிரமிப்பதில், எங்கெங்கும் விஸ்தரிப்பதில், உலகு தழுவிய யுத்த தந்திர ரீதியான படை வியூகம் அமைப்பதில் மற்ற நாடுகளின் ஆதிபத்திய உரிமையையும் நலன்களையும் அரித்தெடுப்பதாலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மீள முடியாத நெருக்கடிகளில் சிக்கியுள்ளன. இரு மேலாதிக்க வல்லரசுகளின் இடர்பாடுகளுக்கும் பின்னடைவுகளுக்கும் வழிவகுக்கும் இப்பிரகாசமான சாதகமான சூழ்நிலையில் உலக யுத்தம் தவிர்க்க முடியாதது; ஆனாலும் அதைத் தள்ளிப் போடுவதை சாத்தியமும் நடைமுறை ரீதியானதும் ஆக்குகிறது. யுத்தத்தை ஒத்திப்போடும் திறவுகோல் சில நபர்கள் தொண்டை கிழிய கத்துவதுபோல் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒப்பந்தங்களை முடிப்பதில் இல்லை. மாறாக, மேலாதிக்க



படிப்பகம்

www.padippakam.com

வாதத்திற்கு எதிராக அனைத்து நாடுகளின், மக்களினதும் ஐக்கியப்பட்ட போராட்டத்திலேயே இருக்கிறது. அதே சமயம், யுத்தத்தைத் தூண்டுகிறவர்களின் திடீர் தாக்குதலுக்கு எதிராய் கண்காணிப்போடு இருக்க உடனடியாகவோ அல்லது வெகு சீக்கிரத்திலோ ஒரு பெரிய யுத்தம் நடைபெறலாம் என்கிற அடிப்படையில் தயாராகிக் கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் கொள்கையை எதிர்க்க நமது முயற்சிகளை தீவிரமாக்க வேண்டும். ஏனெனில், அக்கொள்கை யுத்தத்தைதான் வெகு அருகாமையில் கொண்டு வரும். மேலாதிக்க வெறிபிடித்த புதிய உலக யுத்தத்தின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் சமூக ஏகாதிபத்தியத்திற்கு பொருளாதார, இராணுவ, அரசியல் ரீதியாக சலுகைகளை விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் ஏகாதிபத்தியங்களின் குறிப்பாக, அமெரிக்க மேல்நிலை வல்லரசின் அனைத்து முயற்சிகளையும் எதிர்க்க வேண்டும். ஏனெனில் யுத்த வெறியர்களுக்கு இரை போடுவது மேலும் அவர்களது பசியைத் தூண்டவே செய்யும். யுத்தத் தடுப்புக்கான பேச்சுவார்த்தை எவ்வளவுக்கு எவ்வளவு கூடுகிறதோ, சலுகைகளை விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் முயற்சிகள் எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாகிறதோ அதைவிட யுத்தத்திற்கான பேரபாயம் அதிகரிக்கும். இது மிகைப்படுத்தி அலறும் எச்சரிக்கைப் பேச்சல்ல. வரலாற்றால் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

''சகலநாட்டு மக்களும் போராட்டத்தில் உருவாக்கிய ஐக்கியம் தான் யுத்தத்தைத் தூண்டுபவர்களை தோற்கடிக்கும் பிரதான சக்தி என்பதை வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளது. அனைத்து நாடுகளின் மக்களும் கடினமான முயற்சிகளை மேற்கொண்டு ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கு எதிராக பொருளாயத ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் தமது தயார் நிலையை இருமடங்காக்கி, இரு மேலாதிக்க வல்லரசுகளினதும் ஆக்கிரமிப்பு, விரிவுபடுத்தும் நடவடிக்கைகளைக் கூர்மையாகக் கண்காணித்து அவற்றை உறுதியாக தோற்கடிக்க வேண்டும். இந்த இரு மேல்நிலை வல்லரசுகளும் தமது நாட்டின் அல்லது பிற நாட்டின் ஆதிபத்திய உரிமைகளை மீறாமல், தமது நாட்டின் அல்லது பிற நாடுகளின் ஆதிபத்திய உரிமையையும் பாரம்பரிய கடல் எல்லைகளையும் ஊடுருவாமல் அல்லது யுத்த முக்கியத்துவம் வாய்ந்த குறியிடங்களையும் அதிமுக்கிய போக்குவரத்து செய்தித் தொடர்புகளையும் மீறாமல், தமது நாட்டின் அல்லது பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட பலாத்காரத்தையோ அல்லது பலாத்கார அச்சுறுத்தல்களையோ அல்லது இதர சூழ்ச்சிகளையோ உபயோகிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இன்னும் இரு மேல்நிலை வல்லரசுகளும் கவிழ்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் தமது ராணுவ, அரசியல்,



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதார சூழ்ச்சிகளை முன்தள்ளிவிட ''உதவி''யை ஒரு கரு-
வியாகப் பாவிக்காமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். உலகின்
எந்தப் பகுதியிலும் செல்வாக்கு பிராந்தியங்களை உருவாக்க, விரிவு
படுத்த, வெட்டி எடுக்க, கவர்ந்து கொள்ள முடியாதவாறும் அவர்-
களைக் கண்காணிக்கவேண்டும். இவையனைத்தும் செய்யப்
படும்போது ஒரு உலக யுத்தத்தைத் தொடுப்பதற்கான இரு மேலா
திக்கவாதிகளினதும் காலக் கெடுவை ஒத்திப்போடுவது சாத்தியம்.
பின்னர் யுத்தம் வெடித்தாலும் உலக மக்கள் மேலும் தயாராகவும்
சாதகமான நிலையிலும் இருப்பர். இந்த இலட்சியத்திற்காக இரு
மேலாதிக்கவாதிகளாலும் அச்சுறுத்தப்படும் மூன்றாவது, இரண்
-வது உலக நாடுகளும் மக்களும் ஒரு சளையாத உணர்வைப் பேணி
வளர்க்க வேண்டும். மேல்நிலை வல்லரசுகள் எப்படித்தான் உருட்
-டினாலும் மிரட்டினாலும் அவை தோற்கடிக்கப்பட முடியும் என்ற
நம்பிக்கையை பலப்படுத்த வேண்டும். அவற்றின் அச்சுறுத்தலுக்கு
விட்டுக்கொடுக்கவோ அல்லது பலியாகி விடவோ கூடாது. அவை
பிரதானமாக தமது சொந்த பலத்தைச் சார்ந்து தமது சுதந்திரம்,
நலன்கள், பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் பாதுகாத்துக் கொள்
வதிலும் அழுத்தமாக ஊன்றி நின்று, சமத்துவ அடிப்படையில்
பரஸ்பரம் ஒருவரையொருவர் ஆதரிக்கும் முயற்சிகளை இரட்டிப்
பாக்கி, மேலாதிக்கத்திற்கு எதிரானப் போராட்டத்தை இறுதிவரை
நடத்துவதற்கு ஐக்கியப்படக் கூடிய சக்திகள் அனைத்துடனும் ஐக்
-கியப்பட வேண்டும்.''

சர்வதேச புரட்சிகர பாட்டாளி வர்க்கம் இன்றைய யதார்த்த
உலகின் வர்க்கப் போராட்ட நிலைமைகளையும் அரசியல் சக்தி
களின் சேர்க்கையையும் விஞ்ஞான பூர்வமாகவும் பருண்மையாகவும்
கணித்து அதனடிப்படையில் வகுக்கப்பட்ட மூன்றுலகக் கோட்பாடு,
உலக யுத்த தந்திரம், போர்த்தந்திரத்தின் ஒளியில் தனது தேசிய,
சர்வதேசிய கடமைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். இதுவே
உலகப் புரட்சியின் பிரிக்க முடியாத அங்கமும், முக்கியத்துவமும்
வாய்ந்த நமது நாட்டின் புரட்சிக்கும் அதைத் தலைமையேற்று
நடத்தும் பாட்டாளி வர்க்கத்திற்கும் பொருந்தும். தரகு-அதிகார
வர்க்க முதலாளிகளை, நிலப்பிரபுக்களை ஆளும் வர்க்கங்களாக
கொண்ட நமது நாட்டில் அமெரிக்கா, ருசியா ஆகிய இரு மேல்-
நிலை வல்லரசுகளை விட இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பான்,
பிரான்ஸ் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான இரண்டாம் உலக
நாடுகள், குறிப்பாக ஆங்கிலேய ஏகாதிபத்தியம் கூடுதலான மூலத
-னமிட்டு கொள்ளையிடுகின்றன. இருப்பினும் இந்த ஏகபோக
மூலதனங்கள் தமது அரைக்காலனிய சுரண்டலை நீடிக்க இரு மேல்
-நிலை வல்லரசுகளின் அரசியல், ராணுவ பலத்தைச் சார்ந்தே
நிற்கின்றன- இந்நிலை நமதுநாட்டைச் சுரண்டி அடக்கி ஒடுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

அனைத்து ஏகாதிபத்தியங்களுக்குள்ளும் அமெரிக்கா, ருசியா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளின் ஆதிக்கத்தைப் பிரதானமாக்கியிருக்கிறது. இரு மேல்நிலை வல்லரசுகளும் நமது நாட்டுப் பொருளாதாரத்தின் உயிரோட்டமான துறைகளைத் தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திருக்கின்றன. சமூக ஏகாதிபத்தியம் முக்கியமாக அரசுத் துறையிலுள்ள ஆலைகளைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துள்ளது. தனியார் மூலதனத்துடன் கூட்டுச் சேரத் துவங்கியிருக்கிறது. அதே வேளையில், அமெரிக்க ஏகாதிபத்தியம் முக்கியமாக தனியார் மூலதனத்துடன் கூட்டுச் சேருகிறது. அரசுத் துறையிலும் ஊடுருவி ஆதிக்கம் பெற முயல்கிறது.

இந்திய அரசு நமது நாட்டுப் பொருளாதாரத்தை இராணுவ மயமாக்குகிறது. படுவேகமாக யுத்த தயாரிப்பு செய்வதில், ஆயுதக் குவிப்பில் ஈடுபடுகிறது. ஆசியாவில் இந்தியாவைச் சுற்றிலுமுள்ள சிறுநாடுகளைப் பொருத்தவரை விஸ்தரிப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது. அவற்றைத் தனது சொந்த சார்பு நாடுகளாக அல்லது துணைநாடுகளாக மாற்றும் நோக்கத்துடன் அவற்றின் உள்விவகாரங்களில் தலையிடுகிறது. பிற்போக்கு இந்திய அரசு பாகிஸ்தானுக்கு எதிராக அப்பட்டமான ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடுத்து அந்நாட்டைத் துண்டாடியது. சிக்கிமை அபகரித்துக் கொண்டது. பூடானையும், நேபாளத்தையும், இலங்கையையும், வங்கதேசத்தையும் அச்சுறுத்துகிறது. தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் நாகர்களும், சீக்கியர்களும், மிஜோக்களும், காஷ்மீரிகளும் நடத்தும் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டங்களையும் விடுதலைப் போர்களையும் அடக்கி ஒடுக்குகிறது. இவை அனைத்தும் இந்தியா ஒரு துணை வல்லரசாக விளங்குவதையேக் காட்டுகின்றன. மூன்றாம் உலக நாடுகளில் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றாக இருப்பதும், யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ள பெரிய, மக்கள் தொகையில் உலகிலேயே இரண்டாவது நாடாக இருப்பதும் இதற்கான அடிப்படைகளைக் கொடுக்கின்றன.

உலகெங்கிலும் ஈடுபட்டிருப்பதைப் போலவே, நமது நாட்டின் மீதான மேலாதிக்கத்தை நிறுவும் போட்டியில் இரு மேல்நிலை வல்லரசுகளும் ஈடுபட்டுள்ளன. அவற்றுடன் நமது நாட்டில் சுரண்டலை நீடிக்கும் போட்டியில் இரண்டாம் உலக நாடுகளும் இறங்கியுள்ளன. எனவே, இரு மேல்நிலை வல்லரசுகளுக்கும் இரண்டாம் உலக நாடுகளுக்கும், இரு மேல்நிலை வல்லரசுகளுக்குள்ளும், இரண்டாம் உலக நாடுகளுக்குள்ளும் இருக்கும் முரண்பாடுகளும் அதாவது, சாராம்சத்தில் ஏகாதிபத்தியங்களுக்குள்ளே உள்ள முரண்பாடுகள் கூர்மையடைந்து வருவதைத் தொடர்ந்து இந்திய ஆளும் வர்க்கங்களுக்குள் பிளவும் முரண்பாடும் கூர்மையடைந்துள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்படையான ஆயுதந்தாங்கிய மோதலாக இன்னும் இந்த முரண்பாடும் பிளவும் வெடிக்கவில்லை. இருப்பினும், அமெரிக்க மேல்நிலை வல்லரசு ஆதரவு ஆளும் வர்க்கப் பிரிவின் அரசியல் பிரதிநிதியான ஜனதா கட்சியினர் சிலகாலம் ஆட்சியிலிருந்தது போக, நீண்டகாலமாகவே ருசிய சமூக ஏகாதிபத்திய ஆதரவு ஆளும் வர்க்கப் பிரிவின் அரசியல் பிரதிநிதியான காங்கிரசே ஆட்சியில் இருந்து வருகிறது. சாராம்சத்தில் யுத்தத்திற்கும் ஆக்கிரமிப்புக்குமான இராணுவ ஒப்பந்தமான இந்தோ—சோவியத் ஒப்பந்தத்தை செய்து கொண்டதின் மூலம் பாசிச இந்திரா கும்பல் நமது நாட்டை புதிய ஜார்களின் பேரரசு வட்டத்திற்குள் இழுத்துச் சென்றது. சமூக ஏகாதிபத்தியத்தின் போர்த்தேரில் பிணைத்தது. அது மட்டுமல்ல ருசிய சமூக ஏகாதிபத்தியத்தின் உலக தழுவிய இராணுவ யுத்த தந்திரத்தினதும் அதன் ஒரு பகுதியாகிய ஆசியாவுக்கான யுத்ததந்திரத்தினதும் முக்கியமான இடத்தில் இந்தியா அமைந்திருக்கிறது.

ஐரோப்பா, ருசிய-அமெரிக்க போட்டாபோட்டியின் குவிமையமாக இருக்கிறது. ஆனால் அங்கு சாராம்சத்தில் இருதரப்பும் இழுபறி நிலையில் இருக்கின்றன. எனவே, மேற்கு நாடுகளுக்கு உயிராதாரமான யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களின் ஊற்று மூலங்களைக் கைப்பற்றுவதையும், அதற்காக மேற்கு ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் இவற்றையும் ஆசியா ஆப்பிரிக்கா ஆகியவற்றையும் இணைக்கும் மிக முக்கியமான கடல் வழித்தடங்களைக் கட்டுப்படுத்துவதையும் பிரதானமான நோக்கமாகக் கொண்டு ருசிய சமூக ஏகாதிபத்தியம் மேற்கு ஐரோப்பாவைச் சுற்றி வளைப்பதற்காக பெரிய படைவரிசைகளை நகர்த்துகிறது. இது மேற்கு ஐரோப்பாவைத் தனிமைப்படுத்தும். தக்க சமயம் வருவதற்காக புதிய ஜார்கள் காத்திருக்கவும் முடியும். உலகு தழுவிய இந்த யுத்த தந்திரத்தின் ஒருபகுதியாக ஆசியாவில் தமது யுத்த தந்திரத்தை வகுத்துள்ளனர். மத்திய தரைக்கடலில் இருந்து செங்கடல், இந்துமாக்கடல், மலாக்கா நீர்ச்சந்திப்பு வழியாக கெய்சென்வை (விளாடி வாஸ்டாக்) வரை நீட்டி ஆசியக் கண்டம் முழுவதும் யுத்ததந்திர முற்றுகை இடுவதும் அதன் அடிவருடியான வியாட்நாமைக் கொண்டு இந்தோ-சீனா முழுவதையும் கைப்பற்றி தென்கிழக்கு ஆசியா, தெற்கு ஆசியா மீது ஆதிக்கம் செலுத்துவதும், இக்கண்டத்திலிருந்து அமெரிக்காவை உந்தி வெளித்தள்ளி விடுவதும்தான் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆசிய யுத்த தந்திரமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்துமாக்கடலில் டிகோகார்சியாவில் வெளிப்படையான இராணுவத் தளத்தையும், சென்டோ ஒப்பந்த நாடுகளில் இரகசிய இராணுவத் தளங்களையும் வைத்திருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறது. சமூக ஏகாதிபத்தியம் எத்தியோப்பியா, தெற்கு ஏமன், ஈராக் மற்றும் இந்தியாவில் 'கடற்படை நடமாட்டம்' என்கிற பெயரில் கடற்படைத் தளங்கள் வைத்துள்ளது. பிரச்சனைக்குப் பேச்சு-வார்த்தை மூலம் உடனடித் தீர்வு காண்பது என்றும் தீனக்குரல் எழுப்பி நடித்துக் கொண்டிருக்கும்போதே இரு மேல்நிலை வல்லரசுகளும் நாள்தோறும் இராணுவ பலத்தை அதிகரிக்கின்றனர். ஆசியா, ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சில அண்டை நாடுகள் இந்து-மாக்கடலை சமாதான மண்டலமாக்கப் போராடும்போதே இந்தியா உட்பட சில நாடுகள் இராணுவ கடற்படைத்தளம் அமைக்க உதவ-வும் செய்கின்றன. ''ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தம்'' என்னும் சமூக ஏகாதிபத்தியத்தின் இராணுவ ஒப்பந்தத்தை வெளிப்படையாக ஏற்கவில்லையெனினும் பாசிச இந்திரா கும்பல் இந்தோ-சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் அதை நேரடி நடைமுறைக்கானதாக மாற்றி யிருக்கிறது. சமூக ஏகாதிபத்திய ஆதரவு ஆளும் வர்க்கப் பிரிவின் அரசியல் பிரதிநிதியான பாசிச இந்திரா கும்பல் மீண்டும் ஆட்சி-யைக் கைப்பற்றியிருப்பதும், இந்தியப் பாட்டாளி வர்க்கத்தின் மீதுள்ள திரிபுவாதிகளின் செல்வாக்கும், ஏற்கனவே இந்தியாவில் நிலவி வரும் பாகிஸ்தான் எதிர்ப்பு, சீன எதிர்ப்பு தேசிய வெறியும் சமூக ஏகாதிபத்தியத்திற்கு ஒருபடி கூடுதலான சாதகமான செல்-வாக்கு அளிப்பதாக இருக்கிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்திய மக்கள் முன் ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயிருப்பது, கடந்த காலத்தில் அதன் அடிவருடி-கள் தூண்டி வந்திருக்கும் பாகிஸ்தான் எதிர்ப்பு, சீனஎதிர்ப்பு தேசிய வெறி ஆகியவைகாரணமாக, அமெரிக்கஏகாதிபத்திய ஆதரவுஆளும் வர்க்க அரசியல் பிரதிநிதிகளேகூட சமூக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கத் துணியாத நிலையே நிலவுகிறது. இந்தி யாவைப் பொருத்தவரை சமூக ஏகாதிபத்தியத்திற்கு அமெரிக்க ஏகா-திபத்தியத்துடன் போட்டியிடத் தளமாக அமைந்து பயன்படும் இந்-துமாக் கடலில் புழங்குவதற்கு வசதி வேண்டும். இந்திய-சீன உறவு சீரடைவதைத் தடுத்து சீனத்தைச் சுற்றி வளைப்பதை அதிகரிக்க வேண்டும். சிறு ஆயுதத்தளவாடங்களில் இந்தியா ஒரளவு சுய தேவையை அடைந்திருப்பினும் கனரகத் தளவாடங்கள், பெரும் போர் ஆயுதங்களுக்கு இன்னமும் சமூக ஏகாதிபத்தியத்தையேச் சார்ந்திருக்கிறது. தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு எதிராக மேலாதிக்கத்தை நிறுவுவதில் சமூக ஏகாதிபத்தியம் இந்தியா-விற்கே முதல் முக்கியத்துவமளிக்கிறது.

மற்றொரு உலகப் போர் தவிர்க்க முடியாததாகி இருக்கும் இந்தச் சூழ்நிலையில், உலகப் போரைத் தள்ளிப்போடும் மாபெரும் பணிக்காக உலக மக்களோடு அணிசேரும்படி இந்திய மக்கள் தட்டியெழுப் பப்பட வேண்டும். யுத்தம் வெடிக்கும் போது, ஆக்கிரமிப்புச் சக்தி



படிப்பகம்

www.padippakam.com

களுக்கு எதிராகப் போரிட வேண்டும். இந்தியப் பிற்போக்கு அரசு தொடுக்கும் எல்லாப் போர்களையும் கடந்த காலத்தில் சீனா, பாகிஸ்தான் போர்களையும், தற்போதைய நாகா, குக்கிகள், மிஜோக்களின் தேச விடுதலைப் போர்களின் மீதான அடக்குமுறைகளையும் —திரிபுவாதிகளும் நவீன திரிபுவாதிகளும் ஆதரித்து அவர்களது குறுகிய தேசிய—சமூக வெறியை இரங்காட்டிக் கொண்டார்கள் —திரிபுவாதிகளின், நவீன திரிபுவாதிகளின், நவீன டிராட்ஸ்கிய வாதிகளின் வர்க்க சமரசப் போக்குகளையும் இருமேல்நிலை வல்லரசுகளின், குறிப்பாக சமூக ஏகாதிபத்தியத்தின் போர்த் தயாரிப்புகளையும் நடமாட்டங்களையும் அம்பலப்படுத்த வேண்டும். இந்திய-சோவியத் ஒப்பந்தம், சமூக ஏகாதிபத்தியத்தின் கடற்படை நடமாட்டம், மேல்நிலை வல்லரசுகளுடனான சமனற்ற ஒப்பந்தங்கள், நேபாளம், பூடான், வங்கதேசம் ஆகியவற்றுடனான சமனற்ற ஒப்பந்தங்கள் போன்ற பிரச்சனைகளின் பேரிலும் இந்திய ஆளும் வர்க்கத்தின் விஸ்தரிப்பு, ஆக்கிரமிப்பு, துணைவல்லரசு நோக்கங்களையும், தேசிய இன விடுதலைப் போர்களை அடக்கி ஒடுக்குவதையும் எதிர்த்தும், பரந்துபட்ட மக்களைத் திரட்டிப் போராட வேண்டும்.

இருமேல்நிலை வல்லரசுகளின், குறிப்பாக, சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு எதிராகப் போராட வேண்டும். உலகப் போரின் தோற்றுவாயாக விளங்கும் சமூக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு சதித் திட்டங்களையும் அதன் அடிவருடிகளையும் எதிர்த்துப் போராட வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு சக்திகளின் மக்கள் விரோத, தேசவிரோத, ஜனநாயக விரோத கொள்கைகளை அம்பலப்படுத்தி எதிர்க்கும் அதே வேளையில், நமது இந்திய மண்ணில் தனி ஆதிக்கம் பெற முயலும் சமூக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தாக்குதல் முனை திருப்பப்பட வேண்டும். புதியதொரு உலகப் போருக்குத் தோற்றுவாயாக விளங்கும் சமூக ஏகாதிபத்தியத்திற்கு விட்டுக் கொடுத்து சாந்தப்படுத்தும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அனைத்து முயற்சிகளையும் எதிர்த்துப் போராட வேண்டும்.

உலக மக்களின் பேராபத்தாக விளங்கும், உலகப்போரின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் சமூக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மற்றொரு மேல்நிலை வல்லரசுடன் எந்தவொரு ஐக்கிய முன்னணிக்கோ, கூட்டு ஒப்பந்தத்திற்கோ தற்போது போவதும் கூட வர்க்க சமரசம் என்றே எதிர்க்கப்பட வேண்டும். ஆனால் சமூக ஏகாதிபத்தியத்தைத் தனிமைப்படுத்த, உலகப் போரைத் தள்ளிப் போடும் எல்லாவகையான போராட்டங்களிலும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு சக்தி உட்பட அனைத்து சமூக ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடனும் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

யுத்தம் ஒரு யதார்த்தமாகும் போது ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக தற்காப்புப் போருக்குத் தயாராக வேண்டும். ஆக்கிரமிப்பு சக்திகளுக்கு எதிராக பரந்து விரிந்த ஐக்கிய முன்னணி அமைக்கப்பட வேண்டும்.

இந்திய ஆளும் வர்க்கங்களின் விஸ்தரிப்பு, ஆக்கிரமிப்புக் கொள்கைகளையும் இரு மேல்நிலை வல்லரசுகளின், குறிப்பாக சமூக ஏகாதிபத்தியத்தின் போர்த்தேரில் இந்தியாவைப் பிணைத்து அழிவுக்கு இட்டுச் செல்லும் நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தி எதிர்த்துப் போராட வேண்டும். குறுகிய தேசிய வெறி, சமூகவெறி மதவெறிக்கெதிராகப் போராடி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை நிலைநாட்ட வேண்டிய தனிச்சிறப்பான கடமை நம்முன்னே உள்ளது. சோவியத் சமூக ஏகாதிபத்தியம், அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளுக்கெதிரானப் போராட்டத்தில் அனைத்து நாடுகளின் மக்களுக்கே வெற்றி உரித்தாகும்.

பின்குறிப்பு: இவ்வறிக்கையில் பெயர்கள், புத்தகங்கள் குறிப்பிடாமல் இருக்கும் மேற்கோள்கள் ''மூன்றுலகங்களை வகைப்படுத்தும் தலைவர் மாவோவின் தத்துவம் மார்க்சியம்-லெனினியத்திற்கு ஒரு மகத்தான பங்களிப்பு'' என்ற கட்டுரையிலிருந்து (பீகிங் அன்னிய மொழிகள் அச்சகத்தினரால் 1977 நவம்பரில் வெளியிடப்பட்டுள்ளது) எடுத்தாளப்பட்டதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

மரம்
ஒய்வை நாடினாலும்,
காற்று
தணிந்து விடாது!

- லியு-தெங் கும்பலின்
எதிர்ப்புரட்சி திரிபுவாதம்
ஓர் எதிர்மறை ஆசிரியன்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

புரட்சியின் வரலாறு ஏற்ற இறக்கங்களும், வளைவுகளும் திருப்பங்களும், நெளிவு சுழிவுகளும் மிக்கது; அது திருகு சுழல் பாதையினூடே முன்னேறுகிறது. சுரண்டும் எல்லா வர்க்க சமுதாயப் படிவங்களோடும் புரட்சிகளோடும் ஒப்பிடுகையில் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் சோசலிசமும் புதியவை, இளமையானவை. புதியவற்றுக்கும் இளமையானவற்றுக்கும் அவற்றுக்கே உரித்தான உத்வேகமும் எழுச்சியும் இருப்பதோடு அனுபவக்குறைவும் இடர்பாடுகளும் நிச்சயம் எதிர்கொள்ள வேண்டியவை. பாட்டாளி வர்க்கப் புரட்சியும் சோசலிசமும் இன்னமும் கற்றுத் தேற வேண்டியவையும் வென்றடக்க வேண்டியவையும் ஏராளம் உள்ளன.

எனவேதான், எங்கெல்ஸ் இறந்தபின் பெர்ன்ஸ்டைன்-காவுத்ஸ்கி திரிபுவாதம் தோன்றியதைப் போன்றே, ஸ்டாலின் இறந்த பின் குருஷ்ஷேவ்—பிரஷ்னேவ் திரிபுவாதம் தோன்றியதைப் போன்றே, மாவோ இறந்த பின் லியு—தெங் திரிபுவாதம் தோன்றியிருக்கியது. குருஷ்ஷேவ்—பிரஷ்னேவ் திரிபுவாதம் அரங்கத்திலிருந்து வெளியேறும் முன்னரே லியு—தெங் திரிபுவாதம் அரங்கேறியிருப்பதைக் காண்கிறோம். இன்றைய சர்வதேசியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் முன்னுள்ள கடமை லெனினும், ஸ்டாலினும், மாவோவும் காட்டிய துணிவோடும், தீர்க்க தரிசனத்தோடும் லியு—தெங் கும்ப

படிப்பகம்

www.padippakam.com

-லின் துரோகத்தனத்தை முற்றாக முறியடித்து மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனையைக் காத்து, வளர்த்து உயர்த்திப் பிடிப்பதாகும். இது வரை அது கண்டிருக்கும் எல்லா வகைத் திரிபுவாதப் போக்கிலும் பார்க்க லியு-தெங் திரிபுவாதம் மிகவும் அபாயகரமானது, நயவஞ்சகமானது, குள்ள நரித்தனமானது. எல்லா வகைத் திரிபுவாதங்களையும் போலவே இதுவும் சவக்குழிக்கு அனுப்பப்படும். எனினும், அது அவ்வளவு சுலபமானதோ, உக்கிரமான போராட்டமின்றி சாத்தியமானதோ அல்ல.

ஏனெனில், பதினான்கு தேசங்களின் படையெடுப்பு, வெண் காவலர் கலகம், நாஜிக்களின் வெறித்தாக்குதல், ஏகாதிபத்தியத்தின் நாசவேலை, சீர்குலைவு, தடைகள் மற்றும் எல்லா வகையான முற்றுகைகளுக்கும் எதிராக தாக்குப் பிடித்து நின்ற சோவியத் சோசலிசக் கோட்டையை இறுதியில் கைப்பிடியளவேயான துரோகிகளான பிரஷ்னேவும் குருஷ்ஷேவும் உள்ளிருந்தே கைப்பற்றினர். சர்வதேசப் பொது உடைமை இயக்க வரலாற்றின் மிகப்பெரிய கிரிமினல் குற்றவாளிகளும் துரோகிகளுமான இவர்களது எல்லா வகையான எத்தனிப்புகளையும் முறியடித்த சீன சோசலிசக் குடியரசை உள்ளிருந்தே கைப்பற்றத் துடிக்கிறது தெங் கும்பல். லின் மற்றும் நால்வர் கும்பல் மட்டுமல்ல அதன் குருவான லியுவும் தோல்வியுற்ற இடத்தில் தெங் கும்பல் தற்காலிகமாக வெற்றி பெற்றுள்ளது. குருஷ்ஷேவ்—பிரஸ்நேவ் கும்பலைப் போலவே எந்த ஏகாதிபத்தியமும் பிற்போக்கு சக்தியும் சாதிக்க முடியாத பாத்திரத்தை தெங் கும்பல் சாதிக்க முயலுகிறது. ''ஒரு கோட்டையை உள்ளிருந்தே கைப்பற்றுவது மிகவும் சுலபமான வழி'' என்று சரியாகவே சொன்னார் ஸ்டாலின். சீனத்தின் புதிய பெருஞ் சுவரைத் தகர்த்து ''புதிய விண்ணுலக சாம்ராஜ்யத்தை'' அடைய தெங் கும்பல் எத்தனிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# I

# பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்- லெனினிசத்தின் அடிப்படைப் பிரச்சினை; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடருவது - மாசேதுங் சிந்தனையின் மகத்தான பங்களிப்பு

★ *உற்பத்தியின் வளர்ச்சிப் போக்கில் வர்க்கங்களின் வாழ்வு நிலை குறிப்பிட்ட வரலாற்றுப் படிவங்களோடு மட்டுமே பிணைக்கப்பட்டுள்ளது.*

★ *வர்க்கப் போராட்டம் அவசியமாகவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்கிறது.*

★ *இந்த சர்வாதிகாரமே கூட அனைத்து வர்க்கங்களையும் இல்லாதொழிக்கவும் ஒரு வர்க்கபேதமற்ற சமுதாயத்திற்கு மாறிச் செல்லவும் இடைநிலையாக மட்டுமே அமைகிறது.*

—ஆகிய மூன்று அடிப்படை வரையறைகளையே புதிதாக மார்க்சும், எங்கெல்சும் நிரூபித்தனர். அவர்களுக்கு வெகு காலத்திற்கு முன்பே முதலாளித்துவ வரலாற்றாசிரியர்கள் வர்க்கங்களின் போராட்டம் பற்றிய வளர்ச்சிப் போக்கின் வரலாற்றைச் சித்தரித்துள்ளார்கள்; அதே போன்று முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் வர்க்கங்களின் பொருளாதாரக் கட்டுமானங்களைச் சித்தரித்துள்ளார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

வர்க்க வேறுபாடுகளை முற்றாகத் துடைத்தெறியவும், அவை நிலை கொண்டிருக்கும் எல்லா பொருளுற்பத்தி உறவுகளையும் துடைத்தெறியவும், இந்த உறவுகளுக்குப் பொருத்தமான எல்லா சமூக உறவுகளையும் துடைத்தெறியவும், அவற்றிலிருந்து எழும் எல்லா மரபு வழிக் கருத்துக்களையும் புரட்சிமயமாக்குவதற்கும் மாறிச் செல்லும் ஒரே வழியாக தொழிலாளர்களின் வர்க்க சர்வாதிகாரத்தை வரையறுத்ததின் மூலம் சோசலிசம் என்பதே புரட்சியின் நித்தியத்துவம்தான் என்று மார்க்சும் எங்கெல்சும் பிரகடனப்படுத்தினர். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், புரட்சியின் நித்தியத்துவம்—இந்தக் கோட்பாடு மட்டுமே கற்பனா உலகத்திலிருந்து விஞ்ஞான உலகத்திற்கு சோசலிசத்தைக் கொண்டு வந்தது. 'பரலோக மண்டலத்தை' பாட்டாளி வர்க்கத்திற்கு மண்ணில் படைக்க வழி காட்டியது. இந்தக் கோட்பாட்டிற்காகத் தான் தங்கள் வாழ்நாளெல்லாம் மார்க்சும் எங்கெல்சும் போராடினர்.

மார்க்சு-எங்கெல்சின் இறப்பிற்குப் பின் பெர்ன்ஸ்டைன்களும் காவுத்ஸ்கிகளும் தலைமை தாங்க இரண்டாவது அகிலத்தின் அனைத்துக் கட்சிகளும் இக்கோட்பாட்டிற்கு துரோகமிழைத்தன. ஆனால் லெனினும் அவரது தலைமையிலான போல்ஷிவிக் கட்சியுந்தான் சந்தர்ப்பவாதம் மற்றும் திரிபுவாதத்திற்கெதிராக மார்க்சியத்தை வரித்துக் கொண்டனர்; காத்து வளர்த்தனர். ஏகாதிபத்தியமும் பாட்டாளி வர்க்கப் புரட்சியுமாகிய சகாப்தத்தினதாக மார்க்சியத்தை லெனின் வளர்த்தெடுத்தார். அதாவது, ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகளையும் அவற்றை ஆளும் விதிகளையும் வெளிக் கொணர்ந்து ஏகாதிபத்திய சகாப்தத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் எல்லா பெரிய பிரச்சனைகளையும் தீர்த்து வைத்தார். ''ஒன்று அல்லது பல நாடுகளில் முதலில் புரட்சி வெற்றி பெற முடியுமென்ற'' சோசலிசப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டார். மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியை வழி நடத்திச் சென்று பழைய முதலாளித்துவ உலகத்தை புதிய சோசலிச உலகமாக அடிப்படையிலேயே மாற்றுவதற்கான புதிய சகாப்தத்தைத் திறந்து வைத்தார்.

லெனினால் வழி நடத்தப் பெற்ற அக்டோபர் சோசலிசப் புரட்சியின் வெற்றியானது பாட்டாளி வர்க்கப் புரட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் பற்றிய மார்க்சியக் கோட்பாட்டின் மாபெரும் வெற்றியாகும்.

எனவேதான், லெனினிசத்தின் அடிப்படையான அம்சம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகும். ஏகாதிபத்தியத்தின் அனைத்து அடிப்படை முரண்பாடுகளையும் அதே போன்று சர்வதேசியப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அனைத்து அடிப்படை முரண்பாடுகளையும் தீர்ப்பதற்கான வெற்றிகரமான சளையாத போராட்டத்தின் மூலம் உலகின் முதற்பெரும் சோசலிசப் புரட்சியையும் பாட்டாளி

படிப்பகம்

www.padippakam.com

வர்க்க சர்வாதிகாரத்தையும் வழி நடத்தியதன் மூலம் முதலாளித்துவத்தின் மீட்சிக்கான அபாயத்தையும், வ ர் க் க ப் போராட்டத்தின் நீடித்த தன்மையையும் தீர்க்க தரிசனத்தோடும், நிதர்சனமாகவும் லெனின் கண்டார்:

''அ). இழந்த 'சொர்க்கத்தை' மீட்டுப் பெறுவதற்-காகத் தூக்கியெறியப்பட்ட சுரண்டலாளர்கள் ஆயிரத்தொரு வழிகளிலும் எப்பொழுதும் முயலுகிறார்கள்.

ஆ). குட்டி முதலாளித்துவ சூ ழ லி ல் முதலாளித்துவத்தின் புதிய சக்திகள் அ ல் ல து நபர்கள் தொடர்ச்சியாகவும் தன்னியல்பாகவும் தோன்-றிக் கொண்டே இருக்கின்றனர்.

இ). குட்டி முதலாளித்துவத்தின் மாசுபடுத்தும் சூழலில் முதலாளித்துவ செல்வாக்கு மற்றும் அது எங்கும் விரவி நிற்பதன் விளைவாக, பாட்டாளி வர்க்கத்தின் அணி வரிசைகளிலும், அரசாங்க அலுவலர்கள் மத்தியிலும் அரசியல் ரீதியில் சீர-ழிந்து போனவர்களும் புதிய முதலாளித்துவ நபர்களும் அல்லது சக்திகளும் தோன்றக் கூடும்.

ஈ). சர்வ தேசிய முதலாளித்துவத்தின் முற்றுகை, ஆயுதந்தாங்கிய தலையீடு என்ற ஏகாதிபத்தியத்தின் அச்சுறுத்தல், அமைதி வழியில் சீரழிவைக் கொண்டு வருவதற்கான நாச வேலைகள் ஆகி-யவை ஒரு சோசலிச நாட்டில் வர்க்கப் போராட்-டம் தொடர்வதற்கான புறக்காரணிகளாகும்.

- என்று அக்டோபர் புரட்சிக்குப்பின் லெனின் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளார். லெனினது இந்த முடிவுகளை வாழ்க்கை உறுதிப் படுத்தியுள்ளது.''

('குருஷ்சேவின் போலிக் கம்யூனிசமும் உலகத்திற்கு அதன் வரலாற்றுப் படிப்பினையும்'...சீனப் பொதுவுடமைக் கட்சி (சீ.பொ.க)யின் 9-வது விம-ரிசனம், 196 , 'சீனா விலகிப் போகிறதா' என்ற நூலிலிருந்து, பக்கம் 54.)



படிப்பகம்

www.padippakam.com

மாபெரும் அக்டோபர் சோசலிசப் புரட்சியின் வெற்றி முழக்கம் மார்க்சிச—லெனினிசத்தின் சர்வமும் பொருந்திய உண்மையை உலகெங்கும் எதிரொலித்தது. அதன் தொடர்ச்சியாகவே கருதப்பட்ட சீனப் புரட்சியில் மார்க்சிச—லெனினிசக் கோட்பாடுகளை மாவோ ஆக்க பூர்வமாக பிரயோகித்தார். உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வரலாறு கண்ட அனைத்துப் புரட்சிகளிலும் போராட்டங்களிலும் யுத்தங்களிலும் மிகவும் நீண்ட நெடியதும், சித்திரவதையும், கொடூரமும், சிக்கலும் மிக்கதான சீனப் புரட்சியில் பெரும் வெற்றியீட்டி சீன மக்கள் சோசலிசக் குடியரசை நிறுவினார்; கிழக்கும் சிவந்தது; அதன் மூலம் கிழக்கிலும் மற்றும் உலக முழுவதுமான சூழலில் புரட்சிகரமான மாறுதலைத் தோற்றுவித்தார். ஒரு புதிய காலகட்டத்தில், புதிய சூழலில், சோசலிசப் புரட்சியிலும் சோசலிச நிர்மாணத்திலும் பழுத்த அனுபவங்களைத் தொகுத்து செறிவுபடுத்தினார். மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளை பிரமிக்கத்தக்க அளவு வளர்த்தெடுத்தார். அது சீன மக்களுக்கு மட்டுமின்றி சர்வதேசியப் பாட்டாளி வர்க்கத்துக்கும் உலகின் புரட்சிகர மக்கள் அனைவருக்குமான மதிப்பிட முடியாத சொத்தாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக மாவோவின் மகத்தான பங்களிப்பு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சி தொடர்வது பற்றிய ஆய்வுரைகளாகும். மார்க்சிய — லெனினியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஊன்றி நின்று, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுப் பூர்வமான அனுபவங்களைத் தொகுத்து, சோசலிச சமுதாயத்தில் வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய முறையான ஆய்வுகளையும் தெளிந்த முடிவுகளையும் முன்வைத்தார்; அதன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளை ஆக்க பூர்வமாக வளர்த்தெடுத்தார்.

இயங்கியல் மற்றும் வரலாற்றியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்திலிருந்து சோசலிச சமுதாயத்தை ஆளும் புறவயமான விதிகளை ஆய்ந்தறிந்த மாவோ, எதிரெதிரானவற்றின் ஒற்றுமையும் போராட்டமும் பற்றிய சர்வ வியாபகமான விதி இயற்கை உலகை ஆள்வதைப் போலவே, மனித சமுதாயத்திலும், சோசலிச சமுதாயத்திலும் இயங்குகிறது என்றார். சோசலிச சமுதாயத்தில் வர்க்க முரண்பாடுகள் இன்னமும் நிலவுகின்றன; உற்பத்திச் சாதனங்களின் உடமையை சோசலிசமாக மாற்றிய பிறகும் கூட வர்க்கப் போராட்டம் மறைந்து விடுவதில்லை. சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமிடையிலான போராட்டம் சோசலிசக் கட்டம் முழுவதும் நீடிக்கிறது. சோசலிசக் கட்டுமானத்தின் வெற்றியை உறுதி செய்யவும், முதலாளித்துவ மீட்சியைத் தடுக்கவும் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் மற்றும் கலாச்சாரம் ஆகிய



படிப்பகம்

www.padippakam.com

முனைகளில் இறுதிவரை சோசலிசப் புரட்சியை நடத்திச் செல்வது அவசியமாகும். சோசலிசத்தின் முழுமையான வெற்றி ஒன்று அல்லது இரண்டு தலைமுறையில் சாத்தியமில்லை. ஐந்து, அல்லது பத்து தலைமுறையில் அல்லது அதை விடவும் நீண்ட காலம் பிடிக்கலாம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமே சோசலிசத்தின் வளர்ச்சிக்கும் உறுதிப்பாட்டிற்கும் அடிப்படையான உத்திரவாதமளிக்கும்; முதலா-ளித்துவ வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்க வெற்றிக்கும் இரண்டு பாதைகளுக்கிடையிலானப் போராட்டத்தில் சோசலிசத்தின் வெற்றிக்கும் அடிப்படையான உத்திரவாதமளிக்கும்.

ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்கப் போராட்-டத்தின் முடிவல்ல; புதிய வடிவங்களில் அது தொடர்கிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதே வெற்றி வாகை சூடிய பாட்டாளி வர்க்கம்—அரசியல் அதிகாரத்தைத் தன் கரங்களில் ஏந்திச் சுழற்றும் பாட்டாளி வர்க்கம்—தோற்கடிக்கப்பட்ட ஆனால் துடைத்தொழிக்கப்படாத முதலாளித்துவ வர்க்கத்திற் கெதிராக—அழிந்து போகாத எதிர்ப்பைத் தருவதை நிறுத்தாத, ஆனால் தனது எதிர்ப்பில் மேலும் தீவிரமாகியுள்ள முதலாளித்துவ வர்க்-கத்திற் கெதிராக—நடத்தும் வர்க்கப் போராட்டம்தான்; மேலும் கூறுவதானால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதே இரத்தம் சிந்தியும் இரத்தம் சிந்தாமலும், வன்முறையாகவும்-அமைதி யாகவும், இராணுவத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், கல்வித்துறையிலும், நிர்வாகத் துறையிலும் பழைய சமுதாயத்தின் சக்திகளுக்கும் மரபுகளுக்கும் எதிரானஇடையறாத போராட்டம் தான்.

எனவே தான், சோசலிசப் புரட்சி 'ஆழமான வர்க்க மோதல் களின் ஒரு முழுமையான சகாப்தத்தை' உள்ளடக்கியது. *"இந்த சகாப்தம் முடிவுறும் வரையிலும் நிச்சயமாக சுரண்டலா ளர்கள் மீண்டும் நிலைநாட்டுதல் எனும் நம்பிக்கையில் திளைக்கிறார்கள்; மேலும் இந்த நம்பிக்கை மீண்டும் நிலை நாட்டுதலுக்கான முயற்சியாக மாற்றப்படுகிறது"* என்றார் லெனின்.

மார்க்சிச-லெனினிசத்தின் கண்ணோட்டத்திலிருந்து மேலும் குறிப்பாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது பற்றிய மாவோவின் கோட்பாட்டு ஒளியிலிருந்து ஆய்ந்தறியும் போது மட்டுமே சோவியத் யூனியனைப் போலவே சீனத்திலும் வர்க்கப் போராட்டத்தின் விளைபொருளாகவே லியு — தெங் திரிபுவாதம் எவ்வாறு சீனப் பொதுவுடமைக் கட்சி மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

சீன மக்கள் குடியரசு ஆகியவற்றின் தலைமையைக் கைப்பற்றியது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதற்கான புதிய வழி முறையாக மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை மாவோ வகுத்தளித்தார். மார்க்சிய-லெனினியக் கோட்பாடு மற்றும் நடைமுறைக்கான ஒரு புதிய மற்றும் மகத்தான பங்களிப்பான மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி எந்த வகையிலும் தற்செயலானதல்ல என்பதை அதன் பின்னணியையும் சீனத்தின் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாண வரலாற்றையும் தொகுத்தறியும் எவரும் அறிய முடியும். எனவேதான், ''தற்போதைய மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி முதலாளித்துவ மீட்சியைத் தடுக்கவும், சோசலிசத்தை நிர்மாணிக்கவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உறுதிப்படுத்தவும் முற்றாக அவசியமானதும் மிக மிகச் சரியான தருணத்தினதும் ஆகும்'' என்று கருதிய மாவோ தானே அதைத் தொடங்கி வைத்தார்.

1949 லேயே—ஏழாவது மத்தியக் கமிட்டியின் இரண்டாவது பிளீனவுரையிலேயே—மாவோ தெளிவாக வரையறுத்தார்: பாட்டாளி வர்க்கம் நாடு தழுவிய அளவில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு பிரதான உள் முரண்பாடு 'பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு', போராட்டத்தின் குவிமையம் அரசு அதிகாரத்துக்கான பிரச்சினையில் தங்கியிருக்கிறது என்றார். ''துப்பாக்கியுடன் உள்ள எதிரிகளைத் துடைத்தழித்த பிறகு இன்னமும் துப்பாக்கி இல்லாத எதிரிகள் இருக்கிறார்கள். அவர்கள் நமக்கெதிராக ஜீவமரணப் போராட்டத்தை நடத்தியே தீருவார்கள். இவ்வெதிரிகளை எளிதாக நாம் எப்பொழுதும் கருதக் கூடாது. இந்த வகையில் பிரச்சினையைப் புரிந்து கொண்டு தருணத்திற்கேற்றவாறு வளர்ந்து நிற்கவில்லையானால், நாம் பாரதூரமான பிழைகளை இழைக்க நேரிடும்'' என்று எச்சரித்தார்.

எனவேதான், அரசியல், சித்தாந்தம், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் ராஜாங்கத் துறை என அனைத்து துறைகளிலும் ஏகா-திபத்தியம், கோமிங்டாங் உளவாளிகள், முதலாளிகளுக்கெதிராக போராடும் நிலையில் கட்சி மற்றும் அரசின் கடமைகளை வகுத்தார். அதன் மூலம் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் நீண்ட, நெடிய மற்றும் சிக்-கலானத் தன்மையை கவனத்தில் கொண்டார். விவசாய சீர்திருத்தத்தை நடத்தும் பொழுது,

''விவசாய சீர்திருத்தத்தில் எமது எதிரிகள் அவர்களது சக்தி-யைப் போலவே எண்ணிக்கையிலும் கூடுதலானவர்கள்; நமக்கெதி



படிப்பகம்

www.padippakam.com

—ராக முதலாவதாக ஏகாதிபத்தியவாதிகள்; இரண்டாவதாக தாய்வான் மற்றும் திபேத்திலுள்ள பிற்போக்குவாதிகள்; மூன்றாவதாக கோமிங்டானின் மிஞ்சிய சக்திகள், இரகசிய உளவாளிகள் மற்றும் கொள்ளையர்கள்; நான்காவதாக நிலப்பிரபுத்துவ வர்க்கம்; ஐந்தாவதாக ஏகாதிபத்தியவாதிகளால் சீனத்தில் நிறுவப்பட்ட மிஷனரிப் பள்ளிகளிலும் மத வட்டாரங்களிலும் கோமிங்டானிடமிருந்து கைப்பற்றப்பட்ட கலாச்சார மற்றும் கல்வி நிறுவனங்களிலும் உள்ள பிற்போக்கு சக்திகள் என்ற அணி வரிசையே உள்ளது. அவர்கள் அனைவரையும் எதிர்த்து ஒருசேரப்போராடி இதற்கு முன்பிருந்ததை விடக் கூடுதலான பகுதியில் விவசாய சீர்திருத்தத்தைச் சாதிக்க வேண்டியுள்ளது. இது வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராததும் மிகவும் கூர்மையானதும் ஆன ஒரு போராட்டம்'' என்றார். (மாவோவின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி 5, பக். 34)

மாவோ எச்சரித்தவாறே விவசாய சீர்திருத்தத்தின் போது விவசாயத்தைக் கூட்டுறவு முறைக்கு மாற்றும் பேரியக்கத்திற்கெதிராக 1951-ல் லியு செள ஷி-யின் கடும் எதிர்ப்பை முறியடிக்க வேண்டியிருந்தது.

மத்தியக் கமிட்டிக்கும் மாவோவுக்கும் அறிவிக்காமல் இரகசிய சுற்றறிக்கையில் விவசாயத்தில் சோசலிச மாற்றம் செய்யும் மாவோவின் பாதையை ''பிழையானது, அபாயகரமானது, விவசாய சோசலிசம் குறித்த கற்பனா வாதக் கருத்துடையது'' என்று அவதூறு பரப்பினார். (மாவோ தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி 5, பக்.71) 1952ல் லியு செள ஷி அன்றைய போராட்ட எதார்த்தத்திற்கும் சோசலிச லட்சியத்தின் முன்னேற்றத்திற்கும் தடையாக '' புதிய ஜனநாயக சமூக ஒழுங்கு முறையை உறுதியாக நிறுவு'' என்ற முழக்கத்தை முன்வைத்தார். மூன்று தீமைகளுக்கு எதிராகவும் ஐந்து தீமைகளுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட பேரியக்கம் ஐம்பதுகளின் தொடக்கத்தில் கட்சியினுள்ளிருந்த முதலாளித்துவக் கருத்துக்களுக்குப் பேரிடியைக் கொடுத்தது. ''பொதுத்துறை மற்றும் தனியார் துறைக்குமிடையில் சமத்துவம்'' எனப் பெயரிட்ட வரி விதிப்பு முறையில் குறிப்பாக வலது திரிபுவாதப் போக்கு தலைதூக்கியபோது முறியடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து காவோ-ஜேவோ கட்சி விரோதக் கும்பல் முதலாளித்துவ மீட்சிக்கு முயன்ற போது மாவோ சொன்னார்,

''காவோ-ஜேவோவின் கட்சி விரோதக் கூட்டு தோன்றியது எந்த வகையிலும் தற்செயலானதல்ல; மாறாக தற்போதைய கட்டத்தில் நமது நாட்டில் நடக்கும் தீவிரமான வர்க்கப் போராட்டத்தின் ஒரு கூர்மையான வெளிப்பாடு என்பதை தோழர்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தக் கட்சி விரோதக் கூட்டின் கிரிமினல் நோக்கம் நமது



படிப்பகம்

www.padippakam.com

கட்சியைப் பிளப்பதும், கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தை சதிகார வழி முறைகளில் கைப்பற்றுவதும் இவ்வாறு ஓர் எதிர்ப்புரட்சி மீட்புக்கு பாதையமைப்பதுவுமாகும்.''

காவோ—ஜேவோ கும்பலும் அதன்பின் தோன்றிய ஹீஃபெங் கும்பலும் கூட முறியடிக்கப்பட்டது சோசலிச இலட்சியத்திற்கானப் போராட்டத்தில் மிகவும் முக்கியமான வெற்றிகளாகும். ஐம்பதுகளின் மத்தியில் நடந்த கூட்டுறவு இயக்கத்தையும் சீர்குலைக்க முதலாளித்துவப் பாதையாளர்கள் எத்தனித்தனர்.

''கட்சிக்குள் கிட்டத்தட்ட எங்கும் விரவியிருக்கும் வலது சந்தர்ப்பவாதிகள் நமது சமுதாயத்திலுள்ள முதலாளித்துவ சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஏழை மற்றும் கீழ் நிலை நடுத்தர விவசாயிகள் கூட்டுறவுப் பாதையை மேற்கொள்வதைத் தடுக்கிறார்கள்.''

''கூட்டுறவு இயக்கத்தை எதிர்ப் புரட்சியாளர்கள் நாசவேலை செய்து சீர் குலைப்பது குவை சௌ மாநிலத்தின் துயூன் குறிச்சியின் ஐந்தாவது மாவட்டத்தோடு மட்டும் நிற்கவில்லை; பொதுவாகவே நிலவுகிறது; ஆனால் பிற மாநிலங்களில் இம்மாதிரியான வெளியீடுகள் மிகக் குறைவாகவே எழுதப்படுகின்றன.''

''எழுச்சியைத் தடுத்து நிறுத்த சந்தர்ப்பவாதிகள் முயலுவதைக் கிட்டத்தட்ட எல்லாவிடங்களிலும் காணலாம்; ஆனால் எழுச்சியை எப்பொழுதும் தடுத்து நிறுத்த முடியாது; எல்லாத் தடைகளையும் துடைத்துக் கொண்டு சோசலிசம் எங்கெங்கும் வெற்றிகரமாக முன்னேறுகிறது''

—என்றார் மாவோ (மாவோ தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி 5, பக். 249-50)

இவ்வாறு சோசலிச மாற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் கட்சியின் பொதுப் பாதைக்கெதிராக அதை நாசப்படுத்தும், சீர் குலைக்கும் எல்லா முயற்சிகளையும் எதிர்கொண்டு முறியடிக்க வேண்டியிருந்தது. 1957 ல் முதலாளித்துவ வலதுசாரிகளுக்கெதிரானப் போராட்டத்திலிருந்து 1959 ல் லூஷான் கூட்டத்தில் பெங்டேஹீய் கட்சி விரோதக் கும்பலை அம்பலப்படுத்திய போராட்டம் வரை, சோசலிச நிர்மாணத்தில் கட்சியின் பொதுப் பாதைக்கான மாபெரும் விவாதத்திலிருந்து சோசலிசக் கல்வி இயக்கத்தில் இரு பாதைகளுக்கிடையிலான போராட்டம் வரை—போராட்டத்தின் குவிமையம் சோசலிசப் பாதையா, முதலாளித்துவப் பாதையா? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உயர்த்திப் பிடிப்பதா, முதலாளித்துவ சர்வாதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதா? என்பதே பிரச்சினையாக இருந்தது. 1956 லேயே விவசாயம், கைத்தொழில், முதலாளித்துவ ஆலை மற்றும் வர்த்தகம் ஆகியனவற்றில் பிரதானமாக உற்பத்திச் சாதனங்களின் உடமையில் சோசலிச மாற்றமென்னவோ நடந்து விட்டது உண்மையே. ஆனால் வர்க்கப் போராட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தை இது எந்த வகையிலும் குறைந்து விடவில்லை. எனவேதான்,

''சீனத்தில் உடமை முறையைப் பொருத்தவரை சோசலிச மாற்றம் பிரதானமாக முடிந்து விட்டிருப்பினும்.....தூக்கியெறியப் பட்ட நிலப்பிரபுத்துவம் மற்றும் தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் மிச்ச சொச்சங்கள் இன்னமும் இருக்கின்றன; இன்னமும் முதலாளித்-துவ வர்க்கம் இருக்கிறது; குட்டி முதலாளித்துவ வர்க்கத்தை மறு வார்ப்பு செய்வது இப்பொழுது தான் தொடங்கியிருக்கிறது'' என்றார் மாவோ. (சீ. பொ. க., ஒன்பதாவது காங்கிரசு அறிக்கை; 'சீனா விலகிப் போகிறதா' என்ற நூலிலிருந்து, பக். 154)

1956லேயே லியு செள ஷி-யின் பிதற்றலான, '''சீனத்தில், சோசலிசம் அல்லது முதலாளித்துவம் எது வெற்றியடையும் என்ற பிரச்சினை ஏற்கனவே தீர்க்கப்பட்டு விட்டது'' என்பதைக் குறிப் பாக மறுதலித்து,

''சோசலிசம் அல்லது முதலாளித்துவம் எது வெற்றி பெறும் என்ற பிரச்சினை உண்மையில் இன்னமும் தீர்க்கப்படவில்லை''

''பாட்டாளி வர்க்கத்துக்கும் வெவ்வேறு அரசியல் சக்திகளுக் குமிடையிலான வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமிடையிலான சித்தாந்தத் துறை யிலான வர்க்கப் போராட்டம் நீண்ட நெடியதாகவும், சித்திர-வதை மிக்கதாகவும் நீடிக்கும்; சமயங்களில் மேலும் கூர்மையான தாகவும் மாறக்கூடும்'' என்று வலியுறுத்தினார். (சீ. பொ. க., ஒன்பதாவது காங்கிரஸ் அறிக்கை; 'சீனா விலகிப் போகிறதா' என்ற நூலிலிருந்து. பக். 160)

உற்பத்திச் சாதனங்களின் உடமையில் சோசலிச மாற்றம் என்ற பொருளாதாரத் துறையிலான மாற்றத்தைத் தொடர்ந்து அரசியல் மற்றும் சித்தாந்த துறைகளிலும் புரட்சியைத் தொடர வேண்டியதின் அவசியத்தை மாவோ பலமாக உணர்ந்தார். குறிப் பாக ஹங்கேரியிலும், போலந்திலும் நடந்த முதலாளித்துவ மீட்-சிக்கான முயற்சிகள் காரணமாக அவற்றின் அனுபவத்தையும் தொகுத்து ஆழமாக உணர்ந்தார். மாபெரும் சோசலிசக் கல்வி இயக்கத்தைத் தொடங்கினார்.

''சமுதாய-பொருளாதார அமைப்பு மாற்றப்பட்டிருக்கிறது; தனி மனிதப் பொருளாதாரம் கூட்டுப் பொருளாதாரமாக மாற்றப்பட் -டிருக்கிறது; முதலாளித்துவத் தனி உடமை சோசலிச பொது மக்கள் உடமையாக மாற்றப்பட்டு வருகிறது. இவ்வளவு பெரும் மாறுதல் கள் மக்களது மனங்களில் பிரதிபலிக்கத்தான் செய்யும். மனிதனது சமூக வாழ்வு அவனது சிந்தனையைத் தீர்மானிக்கிறது. நமது சமுதாய அமைப்பில் ஏற்படும் இப் பெரும் மாற்றங்கள் வெவ்வேறு வர்க்கங்கள், தட்டுக்கள் மற்றும் சமூகக் குழுக்களைச் சேர்ந்த மக்களி -டையே வெவ்வேறானதாக பிரதிபலிக்கின்றன. பரந்து பட்ட மக்



படிப்பகம்

www.padippakam.com

கள் திரளினர் மிகவும் ஆர்வத்துடன் அதை வரவேற்கிறார்கள்; ஏனெனில் சீனத்தின் ஒரே விடிவுப் பாதை சோசலிசமே என்பதை வாழ்க்கையே உறுதி செய்து விட்டது. பழைய சமுதாய அமைப்பைத் தூக்கியெறிவது ஒரு புதியதை-சோசலிச அமைப்பை நிறுவுவது என்பதன் பொருள் ஒரு மாபெரும் போராட்டம்; சமுதாய அமைப்பில் பரஸ்பரம் மனிதர்களுக்கிடையிலான உறவுகளில் ஒரு மாபெரும் மாற்றம்; சூழ்நிலைமை அடிப்படையில் பிரகாசமாகவே இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் புதிய சமுதாய அமைப்பு இப்பொழுதுதான் நிறுவப்பட்டிருக்கிறது; அதன் உறுதிப்பாட்டிற்கு இன்னமும் அவகாசம் வேண்டியிருக்கிறது. அது நிறுவப்பட்ட அந்-தத் தருணத்திலேயே புதிய அமைப்பு முற்றிலுமாக உறுதிப்பட்டு விட்டதாகக் கொள்ளக்கூடாது. அது படிப்படியாக உறுதிப் படுத்தப்பட வேண்டியுள்ளது. அதன் இறுதி உறுதிப்பாட்டைச் சாதிப்பதற்கு நாட்டை சோசலிச தொழில் மயமாக்குவதற்குக் கொண்டுவந்து பொருளாதாரத்துறையில் சோசலிசப் புரட்சியைப் பேணிக்காத்-தால் மட்டும் போதாது; ஆனால் அவசியமாக அரசியல் மற்றும் சித்தாந்த முனைகளிலும் கூட சோசலிசக் கல்வி இயக்கத்தையும் சோசலிசப் புரட்சிகரப் போராட்டங்களையும் இடையறாதும் சளையாதும் நடத்த வேண்டும். மேலும், பல்வேறு சர்வ தேசியத் துணைக் காரணிகளும் அவசியமாயுள்ளன'' என்றார். (மா. தே. ப, தொகுதி 5, பக். 422-23)

சோசலிசப் புரட்சிகரப் போராட்டங்களையும், சோசலிசக் கல்வி இயக்கத்தையும் நடத்துவதில் மிக முக்கியமான பங்காற்றியது ''நூறு மலர்கள் மலரட்டும், நூறு கருத்தோட்டங்கள் முட்டி மோதட்டும்'' என்ற அறைக் கூவலைத் தொடர்ந்தெழுந்த போராட்டமாகும். கட்சிக்கு உள்ளும் வெளியேயும் இருந்த பாட்டாளி வர்க்க விரோத, சோசலிச விரோத சக்திகளை அம்பலப்படுத்தி, தனிமைப்படுத்தி முறியடிக்க இது வழி வகுத்தது. இந்த முழக்-கத்தைப் பற்றி, ''சீனத்தின் தனிச் சிறப்பான நிலைமைகளின் ஒளியில் சோசலிச சமுதாயத்தில் நிலவும் பல்வேறு முரண்பாடுகள் தொடர்ந்து நிலவுவதை அங்கீகரித்தும், நாட்டின் பொருளாதாரம் மற்றும் கலாச்சார வளர்ச்சியின் அவசர அவசியத்தின் பொருட்டும் அவை முன் வைக்கப்பட்டன. ஒரு நூறு மலர்களை மலர விடுவதும், ஒரு நூறு கருத்தோட்டங்களை முட்டி மோதவிடுவதும் கலைகளை-யும் விஞ்ஞானத்தையும் நமது நாட்டில் செழித்தோங்கும் சோசலிச கலாச்சாரத்தையும் முன்னேற்றகரமாக வளர்த்தெடுப்பதற்கான கொள்கையாகும்'' என்றார் மாவோ. (மா. தெ. ப, தொகுதி 5, பக். 408)

சோசலிசப் புரட்சியிலும் நிர்மாணத்திலும் மாவோவின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கப் பாதைக்கெதிராக ஒவ்வொரு முறை



படிப்பகம்

www.padippakam.com

-யும் லியு செள சி, லின் பியௌ, மற்றும் நால்வர் கும்பலின் எதிர்ப் புரட்சி சதி வேலைகளையும் நாச வேலைகளையும் காண்கிறோம். மாவோவின் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க வழியின் ஒவ்வொரு வெற்றியும், முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக கட்சி தொடுத்த ஒவ்வொரு பெரும் இயக்கத்தின் ஒவ்வொரு வெற்றியும் இவர்களால் பிரநிதித்துவப்படுத்தப்பட்ட வலது அல்லது வடிவத்தில் இடதும் சாராம்சத்தில் வலதுமான திரிபுவாத விலகல்களை முறியடித்த பின்னரே சாதிக்க முடிந்தது. சோசலிச சீன சமுதாயத்தில் பிரதான முரண்பாடு பற்றி மிகச் சரியாகவே ஏழாவது மத்தியக் கமிட்டியின் இரண்டாவது பிளீனம் வரையறுத்திருப்பினும் அதன் சரியான முடிவுகளை லியு செள ஷி கும்பல் எட்டாவது காங்கிரசில் திரித்துப் புரட்டியது. எட்டாவது மத்தியக் கமிட்டியின் விரிவாக்கப்பட்ட மூன்றாவது பிளீனத்தில் அதை மீண்டும் சரி செய்த மாவோ பின் வருமாறு கூறினார்.

''......இன்றைய சீன சமுதாயத்தின் பிரதான முரண்பாடு சந்தேகத்துக்கிடமின்றி பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமிடையிலானது; சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலானது. நமது நிகழ்காலக் கடமை கடந்த காலத்திலிருந்து மாறுபாடானது. முன்பு பாட்டாளி வர்க்கத்தின் பிரதான கடமை ஏகாதிபத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக பரந்து பட்ட மக்களை வழி நடத்துவதாகும்; இக்கடமை ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு விட்டது. பிறகு தற்போதைய பிரதான முரண்பாடு என்ன? தற்போது நாம் சோசலிசப் புரட்சியை நடத்துகிறோம்; அதன் தாக்குதல் முனை முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிரானது; அதே சமயம், இப்புரட்சி தனிநபர் உற்பத்தி அமைப்பை மாற்றியமைப்பதை நோக்கமாகக்கொண்டது; அதாவது கூட்டுறவைக் கொண்டு வருவதாகும்; அதன் விளைவாகத்தான் பிரதான முரண்பாடு சோசலிசத்துக்கும் முதலாளித்துவத்துக்குமிடையிலானது; கூட்டுத்துவத்துக்கும் தனித்துவத்துக்குமிடையிலானது; அல்லது ரத்தினச் சுருக்கமாகச் சொல்வதானால் சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப்பாதைக்குமிடையிலானது. எட்டாவது காங்கிரசின் தீர்மானம் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடவில்லை. முன்னேறிய சோசலிச அமைப்பிற்கும் பின்தங்கிய சமுதாய உற்பத்தி சக்திகளுக்குமிடையிலானதை பிரதான முரண்பாடாகப் பேசும் ஒரு பத்தி அதிலிருக்கிறது. இந்த வரையறுப்பு பிழையானது. ஏழாவது மத்தியக் கமிட்டியின் இரண்டாவது பிளீனத்தில் நாடு தழுவிய வெற்றிக்குப் பிறகு உள் நாட்டில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடும், வெளியில் சீனாவிற்கும் ஏகாதிபத்தியத்துக்குமிடையிலான முரண்பாடும் பிரதான முரண்பாடாக இருக்குமென்று சொன்னோம். இந்த அறிவிப்பு குறித்து அக்கூட்டத்திற்கு பின் பொதுப்படையாக குறிப்பிடவில்லை-



படிப்பகம்

www.padippakam.com

யெனினும் அப்போதிருந்து அந்த அடிப்படையிலேயே செயல்பட்டு வந்தோம்; ஏனெனில் நமது புரட்சி சோசலிசப் புரட்சியாக வளர்ந்து விட்டிருக்கிறது;அதில் தான் நாம் ஈடுபட்டிருந்தோம்'' (மா.தே.ப., தொகுதி 5, பக் 492-93)

லியு செள ஷியின் எதிர்ப் புரட்சித் திட்டங்களின் அபாயத்தை உணர்ந்த மாவோ மத்தியக் கமிட்டியின் திட்டம் வகுக்கும் மாநாட்டிலும், எட்டாவது மத்தியக் கமிட்டியின் பத்தாவது பிளீனத்திலும் சோசலிச காலகட்டம் முழுமைக்குமான தெளிவான அடிப்படைப் பாதையை 1962-லேயே வரையறுத்தார்: ''நாம் சோசலிசக் கல்வியை நடத்த வேண்டும். வர்க்க முரண்பாடுகளையும் வர்க்கப் போராட்டத்தையும் சரியாகப் புரிந்து கொண்டு கையாள வேண்டும்; நமக்கும் எதிரிக்கும் இடையிலான முரண்பாட்டை மக்கள் மத்தியிலான முரண்பாட்டிலிருந்து வேறுபடுத்தி அவற்றைச் சரியாகக் கையாள வேண்டும். இல்லையானல் நம்முடையதைப் போன்ற ஒரு சோசலிச நாடு அதன் எதிரிடையானதாக மாறும்; சீரழியும்; ஒரு முதலாளித்துவ மீட்சி நடந்தேறி விடும். இப்போதிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நாளும் இதை மனதில் இருத்திக் கொண்டு இந்தப் பிரச்சினையை மேலோட்டமாகக் கருதாது மார்க்சிய-லெனினியப் பாதையைப் பற்றி நிற்க வேண்டும்'' என்றார்.(சீ.பொ.க., ஒன்பதாவது காங்கிரசு அறிக்கை, 'சீனா விலகிப் போகிறதா' என்ற புத்தகம், பக், 165)மாவோ முன் வைத்த இந்தப் பாதையே சீனப் பொதுவுடமைக் கட்சியின் உயிர் நாடி.

இதைத் தொடர்ந்து சோசலிச கல்வி இயக்கத்துக்கான ஒரு 10 அம்சத் தீர்மானத்தைக் கட்சியின் கொள்கை மற்றும் கோட்பாடாக 1963-ல் முன் வைத்த போது மாவோ மீண்டும் எச்சரித்தார்; ''வர்க்கப் போராட்டத்தையும் வர்க்கங்களையும் மறந்து விட்டால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறந்து விட்டால், பிறகு நீண்ட காலம் பிடிக்காது; சில ஆண்டுகளில் மட்டுமே அல்லது ஒரு பத்து அல்லது அதிகம் போனால் சில பத்து ஆண்டுகளுக்கு முன்பே எதிர்ப் புரட்சி மீட்பு தேசிய அளவில் நடந்து விடும்; மார்க்சிய லெனினியக் கட்சி சந்தேகத்துக்கிடமின்றி ஒரு திரிபுவாதக் கட்சியாக அல்லது ஒரு பாசிசக் கட்சியாக மாறிவிடும்; சீனத்தின் மொத்த நிறமும் மாறிவிடும்; தோழர்களே இது பற்றி சிந்தியுங்கள்; இது எவ்வளவு அபாயகரமான நிலைமையாக இருக்கும்!'' (ஷ நூல், பக். 164)

இவ்வாறு மிகவும் தெட்டத் தெளிவாகவும் தீர்க்கமாகவும் எச்சரித்தும் இடையறாது, சளையாது போராடியும் லியு, லின் மற்றும் நால்வர் கும்பல் தமது எதிர்ப் புரட்சி வர்க்கத் தன்மைகளை மாற்றிக் கொள்ளவில்லை. குறிப்பாக, 1964 மாபெரும் சோசலிசக் கல்வி இயக்கத்தின் போது லியு பரந்துபட்ட மக்களை அடக்கி ஒடுக்



படிப்பகம்

www.padippakam.com

கியதோடு ஆட்சியிலிருந்த முதலாளித்துவப் பாதையாளர்களைக் காத்தார்; மாவோ தொடங்கி வைத்த சமுதாய நிலைமைகள் பற்றிய ஆய்வறிதலுக்கான மார்க்சிய விஞ்ஞான முறையை 'காலாவதியாகிப் போனதென்று' முத்திரை குத்தி வெளிப்படையாகவேத் தாக்கினார். லியுவின் பாதையை அமுலாக்காத அனைவரையும் தலைமைப் பொறுப்புகளில் நீடிக்கத் தகுதியற்றவர்கள் என்று ஆத்திரத்தோடு குற்றஞ் சாட்டினார். லியுவும் அவரது கும்பலும் முதலாளித்துவ மீட்சிக்காகவே காத்திருந்தது. 1964ல் மத்தியக் கமிட்டியின் திட்டம் வகுக்கும் மாநாட்டில் ''கிராமப் புறத்தில் சோசலிசக் கல்வி இயக்கத்தில் எழுப்பப்பட்ட சில உடனடிப் பிரச்சினைகள்'' மீதான 23 அம்ச அறிக்கையில் மாவோ லியு கும்பலின் இடது வடிவத்திலான வலது சாராம்சமான முதலாளித்துவப் பிற்போக்குப் பாதையை சாடி வீழ்த்தினார். ''கட்சிக்குள்ளும் வெளியிலுமுள்ள முரண்பாடுகள் பின்னிப் பிணைந்திருப்பது'', ''நான்கு சுத்தங்களுக்கும் நான்கு அசுத்தங்களுக்குமிடையிலான முரண்பாடு'' போன்ற லியுவின் பிதற்றல்களை முறியடித்தார். அப்போதுதான் முதன்முறையாக மாவோ ''தற்போதைய இயக்கத்தின் பிரதான தாக்குதல் இலக்கு முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் அதிகாரத்திலுள்ள கட்சி நபர்களாகும்'' (ஷ நூல்) என்று தெளிவாக சுட்டிக் காட்டினார். தேசிய, சர்வ தேசிய ரீதியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுப்பூர்வமான அனுபவங்களைத் தொகுத்து, அப்போது நெருங்கிக் கொண்டிருந்த மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் திசை வழியையும் சோசலிசக் கல்வி இயக்கத்தின் போக்கையும் சரியாக நிலை நிறுத்துவதாகும் மேற்கண்ட வரையறுப்பு.

எனவேதான், மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி என்னும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதற்கான வழிமுறை தற்செயலானதல்ல. மாறாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளையும் நடைமுறையையும் மேலும் உயர்ந்த கட்டத்திற்கு மாசேதுங் சிந்தனையாக வளர்த்தெடுத்ததன் விளைபொருளாகும். மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி, ''முதலாளித்துவ வர்க்கம் மற்றும் பிற அனைத்துச் சுரண்டல் வர்க்கங்களுக்கெதிராக பாட்டாளி வர்க்கம் நடத்திய ஒரு மாபெரும் அரசியல் புரட்சியாகும்; அது கோமிங்டாங் பிற்போக்குவாதிகளுக்கெதிராக சீனப் பொதுவுடமைக் கட்சியும் அதன் தலைமையில் பரந்து பட்ட புரட்சிகர மக்கள் திரளினரு தொடுத்த நீண்ட, நெடிய போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகும்; பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகும்.'' (ஷ நூல்)



படிப்பகம்

www.padippakam.com

மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியானது மாபெரும் தலைவர் மாவோ, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் நேரடியாகத் தொடங்கி வைத்த மாபெரும் அரசியல் புரட்சியா-கும். மேல்கட்டுமானமென்னும் அரங்கத்தில் நடந்தேறிய ஒரு மாபெரும் புரட்சியாகும். அதன் நோக்கம் திரிபுவாதத்தை முறிய-டிப்பது; முதலாளித்துவப் பாதையாளர்களால் கைப்பற்றப்பட்டி-ருக்கும் அரசியல் அதிகாரத்தின் பகுதியைத் திரும்பத் தட்டிப்பறிப்-பது; கலாச்சாரத்தின் சகல துறைகளும் உட்பட மேற்கட்டுமானத்தில் அனைத்தும் தழுவிய முறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது; சோசலிசப் பாதையில் பூதாகரமான பாய்ச்சல்களில் நாடு தொடர்ந்து முன்னேறும் வகையில் உறுதி செய்வதற்காக சோசலிசப் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதும் பேணிப் பாதுகாப்பதுமாகும்.

துரோகிகள். எதிரி உளவாளிகள், கட்சிக்குள் ஊடுருவியிருக்கும் அதிகாரத்திலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்கள் ஆகிய அனைவரையும் அம்பலப்படுத்தி, அவர்களின் முதலாளித்துவ மீட்-சிக்கான சதிகளை முறியடிப்பதற்கு மிகவும் பொருத்தமான வடிவமும் வழி முறையுமாக மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி அமைந்தது. கோடிக்கணக்கான பரந்து பட்ட மக்களைத் தட்டியெழுப்பி சுதந்திரமாக எல்லாவற்றையும் பேசுவது, அபிப்பி-ராயங்கள் அனைத்தையும் வெளியிடுவது, பெரும் அச்சாச் சுவ-ரொட்டிகளை எழுதுவது, பெரும் வாதப் பிரதிவாதங்களை நடத்துவது— இவற்றால மட்டுமே இதை சாதிக்க முடியும். எனவேதான் 1969லேயே மாவோ சொன்னார், ''கடந்த காலத்தில் கிராமப்புறப் பகுதிகளில், தொழிற்சாலைகளில், கலாச்சார அரங்குகளில் போராட்டங்களைத் தொடுத்தோம்; சோசலிசக் கல்வி இயக்கத்தை நடத்தினோம். ஆனால் இவையனைத்தும் பிரச்சினைகளை தீர்க்கத் தவறின; ஏனெனில் இருண்ட அம்சத்தை வெளிப்படையாகவும், அனைத்தும் தழுவிய வகையிலும் கீழிருந்தும் அம்பலப்படுத்தி பரந்து பட்ட மக்களைத் தட்டியெழுப்புவதற்கான ஒரு வடிவத்தை, ஒரு வழிமுறையை நாம் காணவில்லை'' (ஷ நூல்) மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி இந்த வடிவத்தை, வழிமுறையைக் கொடுத்தது. இவ்வாறுதான் பரந்து பட்ட மக்கள் பெருந்திரளினர் லியு செள ஷியை ஒரு பழமைவாதி, எதிர்ப்புரட்சிவாதி, ஓடுகாலி, மறைந்திருந்த துரோகி மற்றும் கருங்காலி என்று கண்டு கொண்டு-வெளிச்சம் போட்டுக் காட்டினர்; முறியடித்துத் தூக்கியெறிந்தனர். இது மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் முதற் பெரும் வெற்றியும் கட்சிக்குள் நடந்த ஒன்பதாவது இருவழிப் போராட்டத்தின் வெற்றியுமாகும்.

மாவோ நேரிடையாக இருந்து தொடங்கி வைத்து வழி



படிப்பகம்

www.padippakam.com

நடத்திய மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் ஒரு மாபெரும் வெற்றியை ஈட்டிய பிறகு சீனப் பொதுவுடைமைக் கட்சி-யின் ஒன்பதாவது காங்கிரசு கூடியது. பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற மார்க்சிய—லெனி னிய—மாசேதுங் சிந்தனையின் கோட்பாடுகளுக்கு பொருந்தியவாறு வரலாற்று அனுபவங்களையும், அதே போன்று மாபெரும் பாட்-டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் புதிய அனுபவங்களையும் தொகுத்து லியு செள ஷியின் திரிபுவாதப் பாதையை விமரிசித்த-தோடு ஒன்பதாவது காங்கிரசு சோசலிச காலகட்டம் முழுவதற்கு-மான கட்சியின் கொள்கையை உறுதி செய்தது.

ஆனால், ஒன்பதாவது காங்கிரசின் போதே லின் பியௌ சென் போடாவுடன் கள்ள உறவு பூண்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்-தின் கீழ் புரட்சியைத் தொடர்வதை எதிர்த்தார்; ஒன்பதாவது காங்-கிரசின் முன்னுள்ள கடமை உற்பத்தியைப் பெருக்குவதே என்றார். பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமிடையி-லானதல்ல, முன்னேறிய சோசலிச அமைப்புக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்குமிடையிலானதே பிரதான முரண்பாடு என்று லியு செள ஷியும் சென் போடாவும் எட்டாவது காங்கிரசு தீர்மானத்திற்கு கடத்தி வந்த அதே திரிபுவாதக் குப்பையைத்தான் லின் பியௌ உயர்த்திப் பிடித்தார். ஒன்பதாவது கட்சிக் காங்கிரசிலேயே இந்த குப்பைக் கூளங்கள் துடைத்தெறியப்பட்டு மாவோவின் நேரடி வழி காட்டுதலிலேயே அரசியல் தீர்மானம் வகுக்கப்பட்டது. இருப்பினும் ஒன்பதாவது காங்கிரசின் போதும், அதன் பின்னரும் லின் பியௌ கும்பலின் சதி வேலைகளையும், நாச வேலைகளையும் தொடர்ந்தது; ஒன்பதாவது மத்தியக் கமிட்டியின் இரண்டாவது பிளீனத்தில் லின் கும்பலின் எதிர்ப் புரட்சிக் குடைக்கவிழ்ப்பு எத்த னிப்புகள் முறியடிக்கப்பட்டன. மாவோவை படுகொலை செய்து போட்டி மத்தியக் கமிட்டியை நிறுவுவதற்கான எதிர்ப் புரட்சி குடைக் கவிழ்ப்பு திட்டத்தை 1971- மார்ச்சில் லின் வரைந்து செப்டம்பரில் தொடுத்தார். சதித்திட்டங்கள் அனைத்தும் தோல்வியுற்ற போது கள்ளத்தனமாக விமானமேறி சோவியத் திரிபுவாதிகளிடம் தஞ்சம் புகத் தப்பியோடிய போது விபத்து நேர்ந்து மாண்டு போனார்.

லின் பியௌ கட்சி விரோதக் கும்பலைத் தகர்த்ததானது ஒன் பதாவது காங்கிரசுக்குப் பிறகு கட்சியின் மகத்தான வெற்றியும் உள்-ளும் புறமுமிருந்த எதிரிகளுக்கு மிகப் பெரிய வீழ்ச்சியுமாகும். அதன் பின் முதலாளித்துவ பிழைப்புவாதியும், சதிகாரனும், இரட்டை வேடதாரியும், ஒடுகாலியும், துரோகியும் ஆன லின் பியௌவை விமர்-சிப்பதற்கும் கட்சியின் வேலை நடையை சீர்திருத்தவும் பேரியக்க-மொன்று நடத்தப்பட்டது. மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்-தனையை சிரத்தையுடன் கற்பதிலும் லின் பியௌ பற்றும் அவன்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற கொள்ளையர்களை புரட்சிகர வெகுஜன விமர்சனம் செய்வதிலும், சித்தாந்த ரீதியில், அரசியல் ரீதியில், ஸ்தாபன ரீதியில் எதிர்ப் புரட்சியாளர்களுடன் கணக்குத் தீர்த்ததிலும் மகத்தான சீனப் பாட்டாளி வர்க்கமும் மக்களும் வளர்த்தெடுக்கப்பட்டார்கள்.

லியு செள ஷி மற்றும் லின் பியௌ கட்சி விரோத கும்பல்களுக்கெதிரான போராட்டங்கள் உள்நாட்டிலும் சர்வ தேசிய ரீதியிலும் மேலும் மேலும் தீவிரப்பட்டு வரும் வர்க்கப் போராட்டத்தின் கூர்மையான வெளிப்பாடுகளே ஆகும். கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் கட்சியின் சோஷலிசப் பொதுப் பாதைக்கு துரோகமிழைப்பதும், அதை அடியோடு புரட்டிப் போடுவதும், மார்க்சிய—லெனினிய சீனப் பொதுவுடைமைக் கட்சியைத் திரிபுவாத பாசிசக் கட்சியாக மாற்றுவதும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை சீர்குலைத்து நாசப்படுத்தி முதலாளித்துவத்தை மீட்பதும் — இவையே அவர்கள் முன் தள்ளிய திரிபுவாதப் பாதை மற்றும் எதிர்ப்புரட்சிக் குடைக் கவிழ்ப்பு முயற்சிகளின் கிரிமினல் நோக்கங்களாகும். சீனத்திற்குள்ளே ஒரு நிலப்பிரபுத்துவதரகு முதலாளித்துவ பாசிச சர்வாதிகாரத்தை நிறுவுவதையும் சர்வ தேசிய ரீதியில் சோவியத் திரிபுவாதத்திற்கும் பிற்போக்கிற்கும் அடிமைப்பட்டுப் போவதையும் சீனப் புரட்சியை ஒழித்துக் கட்டுவதையுமே அவர்கள் விரும்பினார்கள்.

லின் பியௌ கட்சி விரோத கும்பலின் வீழ்ச்சி கட்சிக்குள் நடந்த இரு வழிப் போராட்டங்களின் முடிவல்ல; உள்ளும் புறமுமுள்ள எதிரிகள் ஒரு கோட்டையை உள்ளிருந்து கைப்பற்றுவதே எளிதான முறை என்பதை அறிந்திருந்தனர். இக்கட்டான நிலைக்கு ஏற்கனவே தள்ளப்பட்டு தூக்கியெறியப்பட்ட முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் கோட்டைக்குள் நுழைந்து தாக்குவதை விட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உள்ளிருந்தே நாசப்படுத்தும் வேலையை கட்சிக்குள் ஆழமாகச் சென்று அதிகாரத்திலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்கள் எளிதில் சாதிக்க முடியும் என்று நம்புகிறார்கள். எனவேதான், சீனப் பொதுவுடைமைக் கட்சியின் பத்தாவது காங்கிரசு சொன்னது, ''நீண்ட காலத்திற்கு ஆழமான முரண்பாடுகளைப் பிரதிபலிக்கும் இரு வழிப் போராட்டங்கள் கட்சிக்குள் இன்னமும் நீடிக்கும். இம்மாதிரியான போராட்டங்கள் 10, 20, அல்லது 30 தடவைகள் நிகழலாம். லின் பியௌ மீண்டும் தோன்றலாம்; அதே போன்று, வாங் மிங், லியு செள ஷி, பெங்டே ஹுய் மற்றும் காவோ காங் போன்ற நபர்களும் தோன்றலாம். அது மனித சித்தத்துக்கு அப்பாற்பட்டது'' என்று எச்சரித்தது. (ஷ நூல்)

பத்து இருவழிப் போராட்டங்களின் அனுபவங்களைத் தொகுத்து, குறிப்பாக லின் பியௌ கட்சி விரோத கும்பலுக்கெதி



படிப்பகம்

www.padippakam.com

ரானப் போராட்ட அனுபவங்களைத் தொகுத்து சரியான பாதையையும் பிழையான பாதையையும் பிரித்தறியும் அளவு கோலாக ''மார்க்-சியத்தை நடைமுறைப்படுத்து, திரிபுவாதத்தை அல்ல; ஒன்றுபடு, பிளவுபடுத்தாதே; வெளிப்படையாகவும் திறந்த மனதோடும் இரு; சதிவேலைகளில் ஈடுபடாதே,'' என்ற மூன்று கோட்பாடுகளை மாவோ முன் வைத்தார். அதையே பத்தாவது காங்கிரசு உயர்த்திப் பிடித்தது.

மாவோவால் தலைமை தாங்கப்பட்ட பத்தாவது கட்சிக் காங்கிரசின் அரசியல் அமைப்பு வழிகள் அனைத்தும் மிகச் சரியான-வையே. லியு—லின் கும்பல்களுக்கெதிரான மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் வெற்றிகளை உறுதிப்படுத்தி பத்-தாவது காங்கிரசு உயர்த்திப் பிடித்தது. ஆனால், மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் துவக்கத்திலிருந்தே நால்வர் கும்பல் லின் பியௌவுடன் கூடிக்குலாவி அதைச் சீர்குலைக்க முயன்றது. பத்தாவது காங்கிரசின் சரியான முடிவுகளுக்கெதிராக தனது அதி தீவிர வலதுசாரி எதிர்ப்புரட்சி திரிபுவாதப் பாதையை நால்வர் கும்பல் முன்தள்ளியது. மாவோவின் மூன்று அடிப்படைக் கட்சிக் கோட்பாடுகளுக்கெதிராக திரிபுவாதத்தையும், பிளவுவாதத்தையும். சதிகளையும் நால்வர் கும்பல் கட்டவிழ்த்து விட்டது. மாவோ தொடங்கிய ஒவ்வொரு அரசியல் இயக்கத்தையும் திசை திருப்பிவிட்டு கட்சியையும், படையையும், நாட்டையும் குழப்பத்தில் ஆழ்த்-தவே நால்வர் கும்பல் முயன்றது. மாவோவையும் மத்தியக் கமிட்டியையும் அவரது புரட்சிகரப் பாதையையும் எதிர்க்கவும், கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றவும் ,பாட்-டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளித்துவ பாசிச சர்வாதிகாரமாக மாற்றவும், சோசலிச சீனத்தை பழைய அரைக் காலனிய—அரை நிலப்பிரபுத்துவ நாடாக சீரழிக்கவும் தன்னால் இயன்ற அடிவெட்டு வேலைகளையெல்லாம் நால்வர் கும்பல் மேற்-கொண்டது. செஞ்சேனைக்கு எதிராக ஷாங்காயில் ஒரு தனி செங்காவலர் படையையும் மத்தியக் கமிட்டிக்கு எதிரான போட்டி மத்-தியக் கமிட்டியையும் தலைமையையும், அமைச்சரவைக்கு எதிரான நிழல் அமைச்சரவையையும் கட்டியதோடு, மாவோ இறந்த பின் வேறு வகையிலும் வேடிக்கையாக நடந்து கொண்டனர். மத்தியக் கமிட்டி அறியாமலேயே மாநிலங்கள், நகரவைகள், சுயாட்சி மண்டலங்களிலிருந்து அறிக்கைகள் பெறவும், அவற்றுக்கு உத்திரவுகள் பிறப்பிக்கவும் முனைந்தார்கள். அதன் மூலம் அதிகாரத்தைக் கையிலெடுக்க எத்தனித்தார்கள். இரகசியமான பிரச்சாரம், இரகசி[illegible] பித்தலாட்டங்கள் மூலம் சியாங் சிங்கிற்கு ஆதரவு தெரிவித்தும் அதி உயர் அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொள்ளும்படியும் கடிதங்கள் எழுதும்படி மக்களைத் தூண்டினர். ஆட்சி பீடமேறிய-



படிப்பகம்

www.padippakam.com

தும் பயன்படுத்துவதற்கான ''அதிகார பூர்வ நிழற்பட''மெடுத்துக் கொண்டார் வாங்-ஹெங் வென். மத்தியக் கமிட்டிக்கு எதிராக வதந்திகளைப் புனைவதிலும், அசுத்தக் காற்றை ஊதுவதிலும், வெறுக்கத்தக்க நெருப்பைக் கிண்டி விடுவதிலும், ஆட்சியைக் கைப்பற்றியதும் ''மாபெரும் விழா''வெடுப்பதற்காக தயாரிப்பதிலுமாக தீவிரமான வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். ''எதிர்ப் புரட்சியாளர்களை ஒடுக்கவும்'', ''அழித்தொழிக்கவும்'' 1976 அக்டோபரில் சாங் சுன் சியவோ தாக்கீது அனுப்பினார். ஷாங்காயில் அவசர அவசரமாக ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும், தளவாடங்களையும் கூட விநியோகித்தனர். இறுதியாக எதிர்ப் புரட்சிக் குடைக் கவிழ்ப்பிற்கும் உள் நாட்டுப் போரைத் தூண்டவும் கூட இறங்கி விட்ட நிலையில், நெருக்கடியான நிலையில் கட்சியின் மத்தியக் கமிட்டியின் அரசியல் தலைமைக் குழு சரியான முடிவெடுத்து ஒரே அடியில் நால்வர் கும்பலின் அனைத்து சதிகளையும் முறியடித்தது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது மற்றும் சோசலிச காலகட்டம் முழுவதுமான கட்சியின் அடிப்படை பாதை பற்றிய மாவோவின் மாபெரும் கோட்பாட்டை ''நால்வர் கும்பல்'' முற்றாக மாசுபடுத்தியது. அதிலும் குறிப்பாக கட்சியிலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்கள் பற்றிய மாவோவின் போதனையை வக்கிரப்படுத்தி மிகவும் குழப்பத்தைத் தோற்றுவித்தது. இந்தச் சிதைவின் மிக மிகத் தெளிவான வெளிப்பாடு என்னவென்றால் பழம்பெரும் அணிகளை ஜனநாயகவாதிகளாகவும், ஜனநாயகவாதிகளை முதலாளித்துவப் பாதையாளர்களாகவும் சமப்படுத்தி நால்வர் கும்பல் முன் தள்ளிய எதிர்ப் புரட்சி அரசியல் திட்டமாகும். முதலாளித்துவப் பாதையாளர்களுக்கெதிராகப் போராட வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியபோது ஒரு கையளவேயானவர்கள் தான் கட்சியின் அணிகள் மத்தியில் இருப்பதாக மாவோ தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

''நமது அணிகளில் ஆகப் பெரும்பான்மையானவர்கள் நல்லவர்கள்தான்; அற்பமான சிறுபான்மையானவர்கள் மட்டுமே அல்லாதவர்கள். முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் அதிகாரத்திலுள்ள கட்சி நபர்கள்தான் நமது தாக்குதல் இலக்கு என்பது உண்மையே; ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

**அத்தகையவர்கள் மிக மிகச் சிலரே, கட்சி மாறியவர்கள், ஓடுகாலிகளாக மாறியவர்கள், அல்லது எதிரியிடம் சரணடைந்தவர்கள் தவிர நமது அணிகளில் ஆகப் பெரும்பான்மையினர் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் அல்லது கடந்த சில பத்தாண்டுகளில் நிச்சயமாக நல்லவற்றையே செய்துள்ளார்கள். பெரும்பான்மையான அணிகளுடன் நாம் ஐக்கியப்பட வேண்டும்'' என்று 1967 லேயே மாவோ சொன்னார். (சீ. பொ. க. பதினோராவது காங்கிரஸ் அறிக்கை)**

முதலாளித்துவப் பாதையாளர்களுக்கெதிரான போராட்டத்தில் இரண்டு வகையான முரண்பாடுகளை வேறுபடுத்தும் இந்தக் கோட்பாட்டைப் பிரயோகித்து, ''முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் தவறிழைத்தவர்களில் அற்பமான மிகச் சிலரே முற்றாகத் திருந்தவே திருந்தாதவர்கள்; அதே சமயம் போதனையின் மூலம் பெரும்பான்மையினர் தமது தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியும். 'முதலாளித்துவப் பாதையாளன்' என்று அழைத்த மாத்திரத்திலேயே ஒரு நபரை மோசமானவரென்று கருதி விடாதீர்'' என்றார் மாவோ. (ஷ அறிக்கை) சோசலிச கால கட்டத்திற்கு உட்கட்சிப் போராட்டம் பற்றிய போதனை இதுவே. மக்கள் குடியரசு அமைத்தபின் கட்சிக்குள் கட்டவிழ்த்து விடப்பட்ட போராட்டங்கள் அனைத்தும் இரண்டு வகையானவர்கள் மத்தியிலிருந்து தோன்றுவதைக் கண்டோம். ஒன்று, கட்சிக்குள் ஊடுருவிய ஓடுகாலிகள், எதிரி உளவாளிகள், எதிர்ப் புரட்சியாளர்கள், மாற்று வர்க்க நபர்கள், சீரழிந்து போனவர்கள், புதிய முதலாளித்துவ நபர்கள் மற்றும் பிற வர்க்க எதிரிகள். இரண்டாவதாக, தமது முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தை மறுவார்ப்பு செய்து கொள்ளத் தவறிய கட்சி அங்கத்தினர்கள்; அதனால் சித்தாந் பூர்வமாக ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திலேயே இன்னமும் தங்கி விட்டவர்கள் உட்பட சோசலிசப் புரட்சியை அங்கீகரிக்காதவர்கள் அல்லது எதிர்க்கவும் செய்பவர்கள். முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் தவறிழைத்த இரண்டாவது வகையினரைப் பொருத்த வரை இரண்டு வாய்ப்புகளும் அதற்கேற்ற அணுகு முறையும் வேண்டும். முதலாவதாக, சிலர் எப்போதுமே முற்றிலும் திருந்தவே திருந்தாதவர்கள். இவர்கள் மிகச் சிலரே. இவர்களோடான முரண்பாடு மக்களுக்கும் எதிரிகளுக்குமிடையிலான முரண்பாடு; இரண்டாவதாக, பெரும்பான்மையினர் திருந்த விரும்புகிறவர்கள்; இவர்களது தவறும் திருத்தக் கூடியவை. இவர்களோடான முரண்பாடு மக்கள் மத்தியிலானது. இவர்களைத் திருத்த, எதிர்காலத்தில் தவறுகள் செய்யாதிருக்கவேண்டி கடந்த காலத் தவறுகளிலிருந்து கற்பதும்; நோயா



படிப்பகம்

www.padippakam.com

-ளியைக் காப்பாற்ற நோயைக் குணப்படுத்துவதும் என்ற கோட்-பாட்டைப் பிரயோகிக்க வேண்டும்.

புரட்சியைத் தொடர்வதற்கான முதல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையான யார் நண்பர்கள் யார் எதிரிகள் என்பதில்தான் பிரதானமான சோசலிசக் காலகட்டத்திலான மக்களுக்கும் எதிரிக்குமிடையிலான உறவை மொத்தமாக நால்வர் கும்பல் திரித்துப் புரட்டியது. முதலாளித்துவப் பாதையாளர்களை எதிர்க்-கும் முழக்கத்தைத் தமது சொந்த நலன்களுக்காக அபகரித்துக் கொள்வதன் மூலமும், கட்சிக்குள் உள்ள முதலாளித்துவப் பாதை யாளர்கள் பற்றிய மாவோவின் தெட்டத் தெளிவான ஆய்வு-ரையை மாசுபடுத்துவதன் மூலமும் இதைச் செய்தார்கள். பழம்பெரும் அணிகளை ஜனநாயகவாதிகளாகவும், ஜனநாயக-வாதிகளை முதலாளித்துவப் பாதையாளர்களாகவும் சித்தரித்த-தோடு பழம்பெரும் அணிகளை கட்சிக்குள்ளே இருக்கும் ஒரு முதலாளித்துவ வர்க்கமாகவே பாவித்தனர். அதன் மூலம் கட்சி-யின் குணாம்சத்தையும் வரலாற்றையும் வெட்கமின்றி களங்கப் படுத்தி தாக்கினர். கட்சிக்குள்ளயே முதலாளித்துவப் பிரதிநிதி கள் இருப்பதாக மாவோ சொன்ன போது ஒரு வர்க்கமாகவே இருப்பதாகச் சொல்லவில்லை. ''முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் அதி கையளவேயான நபர்கள் முதலா-ளித்துவ வர்க்கத்தைக் கட்சிக்குள் பிரதிநிதித்துவப் படுத்-துகிறார்கள்'' என்றார். சில பழம் பெரும் அணிகளும் அதே போன்று முதலாளித்துவ ஜனநாயகவாதிகளில் சிலரும் சோச-லிசப் புரட்சியையும் சோசலிச நிர்மாணத்தையும் ஏற்காமல் முதலாளித்துவப் பாதையாளர்களாக மாறினார்கள் என்பது உண்மையே. எனினும் ஆகப் பெரும்பான்மையினர் புரட்சிகர யுத்தத்திலும், போராட்டங்களிலும் பாட்டாளி வர்க்க போதனை-யிலும் புடம் போட்டு வளர்த்தெடுக்கப்பட்டவர்களாவர்.

ஜனநாயகப் புரட்சியில் பங்கேற்ற அனைவரையும் முதலா-ளித்துவ ஜனநாயக வாதிகள் என்றும், 'ஜனநாயகவாதிகள் முதலா ளித்துவப் பாதையாளர்களாவது தவிர்க்கவே முடியாத புறநிலை



படிப்பகம்

www.padippakam.com

விதியாகும்' என்றும், கட்சிக்குள் மட்டுமின்றி மக்கள் விடுதலைப் படையிலும் முதலாளித்துவப் பாதையாளர்கள் ஒரு முதலாளித்துவ வர்க்கமாக இருக்கிறார்கள் என்றும் நால்வர் கும்பல் சித்தரித்ததன் மூலம் அப்பொழுதே சீனப் பொதுவுடைமைக் கட்சியை முதலாளித்-துவக் கட்சி என்றும், வெற்றி பெற்ற புரட்சி பழைய முதலாளித்-துவ ஜனநாயகப் புரட்சி என்றும், சீனத்தில் நிறுவப்பட்டிருந்தது முதலாளித்துவ சர்வாதிகாரம் என்றும் திரித்துப் புரட்டியது. இது தற்போதைய நவீன திரிபுவாதிகளும், நவீன ட்ராட்ஸ்கீயவாதிகளும் பிதற்றுவதையே வாந்தி எடுப்பதாகும். கட்சி, படை, அரசு ஆகிய மூன்றின் வர்க்கத் தன்மையையே திரித்துப் புரட்டும் கடைகோடித் தனமான திரிபுவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செய்தித் துறை, கல்வி, கலாச்சாரத் துறை ஆகியவற்றிலும் ஊடுருவி எதிர்ப் புரட்சி கட்சி விரோத சதிகாரக் கும்பலை அமைத்தனர். தமது சொந்த முதலாளித்துவ பிளவுவாதக் கும்பலைக் கொண்டு குறைப் பிரசவமான கோட்பாடு, கொள்கை, சித்தாந்தம், பாதை, பிரச்சாரம், படை என்று ஆகப்பிற்போக்குத்தனமான எதிர்ப் புரட்சி மேற்கட்டுமானம் ஒன்றையே உருவாக்கினர். அஸ்திவாரமின்றி ஆகாயத்-தில் எழுப்பப்பட்ட இந்த மேற்கட்டுமானம் இடித்து நொறுக்கப் பட்டது.

கோமிங்டான் இரகசிய உளவாளி சாங், ஓடுகாலி சியாங், ஒரு மாற்று வர்க்க நபரான யோ, ஒரு புதிய முதலாளித்துவ நப-ரான வாங் ஆகிய நால்வர் கும்பல் கட்சிக்குள் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், சீரழிந்த நபர்கள் மற்றும் பழைய, புதிய முதலாளித்துவ வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தி சீனத்தில் முதலாளித்துவத்தை மீட்க முயன்ற உள்ளும் புறமும் இருக்கும் வர்க்க எதிரிகளை அங்கமாகக் கொண்டது. அவர்க-ளுக்கும் கட்சிக்குமிடையிலான முரண்பாடு எதிரிக்கும் மக்களுக்குமி-டையிலானது; நால்வர் கும்பலுக்கு எதிரானப் போராட்டம் கோமிங்-டான் பிற்போக்குவாதிகளுக்கெதிரானக் கட்சியின் நீண்ட, நெடிய போராட்டத்தின் தொடர்ச்சியாகும்; மார்க்சிய லெனினிய-மாசேதுங் சிந்தனைக்கும் திரிபுவாதத்திற்கும் இடையிலான இருவழிப் போராட்டத்தின் தொடர்ச்சியாகும். பத்தாவது மத்தியக் சமிட்டியின் மூன்றாவது பிளீனம் நால்வர் கும்பலை முறியடித்து அரசியல், சித்தாந்தம் மற்றும் ஸ்தாபன ரீதியாகக் கட்சியை உறுதிப்படுத்தியதைத் தொடர்ந்து கட்சியின் பதினோராவது காங்கிரசு கூடியது.

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் ஒன்பதாவது, பத்தாவது காங்கிரசுகளைப் போலவே பதினோராவது காங்கிரசும் சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய விதிகள், மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சர்வ வியாபக மற்றும் சர்வ தேசியத் தன்மை ஆகியவை பற்றிய மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்த



படிப்பகம்

www.padippakam.com

னையை உயர்த்திப் பிடித்தது. மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பற்றிய மாவோவின் ஆய்வுரைகளை சீனாவுக்கு மாத்திரமின்றி சர்வ தேசப் பாட்டாளி வர்க்கத்துக்கும் அதன் சோச -லிச நிர்மாண கால கட்டத்திற்குமான சித்தாந்த வழிகாட்டியாகப் பிரகடனப்படுத்தியது.

'' நாம் அனைவரும் அறிந்தபடி, மார்க்சிசத்தின் வளர்ச்சி-யாகிய வரலாற்றில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது என்ற தலைவர் மாவோவின் மகத்தான கோட்பாடு சிறப்பான முக்கியத்து வம் வாய்ந்த இடத்தினைப் பெற்றிருக்கிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கோட்பாட்டிற்கு லெனின் வழங்கிய அதிமகத் தான பங்களிப்பு என்னவென்றால், முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமான ஏகாதிபத்தியத்தின் விதிகளை அவர் வெளிப்படுத்தினார்; ஏகாதிபத்திய முன்னணியின் பல வீனமான கண்ணியாக விளங்கும் நாட்டில் பாட்டாளி வர்க் -கப் புரட்சி வெற்றியீட்டுவதும் சாத்தியம் என்ற மகத்தான கோட்பாட்டை படைத்தளித்தார். இதே துறையில் தலை -வர் மாவோவின் அதிமகத்தான பங்களிப்பு என்னவென் றால் லெனின் காலம் முதற்கொண்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைத் தொகுத்த ளித்தார்; மார்க்ஸ் மற்றும் லெனினுடைய போதனை களை கையேற்று, பாதுகாத்து வளர்த்தார்; சோசலிச சமு -தாயத்தின் வளர்ச்சி பற்றிய விதியைக் கண்டறிந்து பாட் -டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்தும் முறைப்படுத்தப்பட்ட மகத்தான கோட்பாட்டைப் படைத்தளித்து பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் வெற்றி பெற்ற நாடுகளில் பாட்டாளி வர்க்க சர்வா -திகாரத்தைக் கெட்டிப்படுத்துவதற்கும், முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்படுவதைத் தடுப்பதற்கும், சோசலி சத்தைக் கட்டியமைப்பதற்குமான உண்மையான பாதை -யைத் தெளிவாக வகுத்தளித்தார். இது நம் காலத்தில் மார்க்சியத்தின் அதிமுக்கியமான சாதனையாகும்'' (ஹுவா-குவோ பெங், சீ. பொ, க-வின் 11வது பேரவை ஆவணங்கள், பக் 26,27, பீகிங் வெளியீடு 1977)

சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய ஒரு பொது விதி யாக மாபெரும் பாட்டாளி வர்க்கச் கலாச்சார புரட்சி பற்றிய மாவோ வின் கோட்பாடுகளின் சித்தாந்த அவசியம் என்னவெனில், ''லெனின் கூறினார்: 'வரலாற்றின் இயங்கியல் என்ன-



படிப்பகம்

www.padippakam.com

)ால் மார்க்சியத்தின் கோட்பாடு ரீதியான வெற்றி அதன் எதிரிகளையே மார்க்சியவாதிகளைப் போன்று தாங்களும் வேடம் அணிந்து கொள்ளும்படி செய்து விட்ட -துதான்'' (பக்கம் 25, மேற்குறிப்பிட்டதில் கையாண்ட மேற்கோள்) அதாவது, அதன் சமுதாய, பொருளாதார, அரசியல் தேவை என்னவென்று பின் வருமாறு 11வது பேரவை மேலும் விளக்கியது:

''இந்தக் கோட்பாட்டில் தலைவர் மாவோ எதிர்மறைகளின் ஒற்றுமை என்ற இயங்கியல் பொருள் முதல் வாத விதியை சோசலிச சமுதாயம் பற்றி கற்கவும் ஆய்வு செய்ய -வும் பிரயோகிக்கிறார். சோசலிச சமுதாயம் கணிசமான அளவு வரலாற்றுக் காலத்தை உள்ளடக்கியிருக்கிறது. இக் காலத்தில் வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போராட்டங்கள், சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலான போராட்டங்கள் முதலாளித்து -வம் மீண்டும் நிலை நாட்டப்படுவதற்கான அபாயம் ஆகியவை தவிர்க்க முடியாதவாறு நீடிக்கின்றன; ஏகாதிபத்தியம் மற்றும் சமூக ஏகாதிபத்தியத்தின் சீர்குலைவு மற்றும் ஆக்கிரமிப்பு அபாயம் இருக்கிறது. எனவே, இந்த வர -லாற்றுக் காலத்தில் பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராகத் தொடர்ந்து போராட வேண்டும் என்பதையும், முதலாளித்துவ வர்க்கத்தின் மீது தனது சர்வாதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்பதையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ், புரட்சியைத் தொடர்ந்து நடத்துவதில் ஊன்றி நிற்க வேண்டும் என்பதையும் கூறவே வேண்டியதில்லை. எனவே இந்தக் கோட்பாடு ''வர்க்கப் போராட்டம் மடிந்து போவது'', ''அனைத்து மக்களுக்குமான கட்சி'', ''அனைத்து மக்க -ளுக்குமான அரசு'' போன்ற புரட்டல்வாத பொய்யுரைகளைத் தகர்க்கிறது.

''சமுதாயத்தில் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடும், பொருளாதார அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடும் சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளா -கும் என்ற மார்க்சிய ஆய்வுரையை இந்தக் கோட்பாட்டில் பிரயோகித்து சோசலிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுக -ளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும், மேற்கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடையில் இசைவும் அதேபோல் முரண்பாடும் இருக்கிறது என்று தலைவர் மாவோ சுட்டிக் காட்டுகிறார். எந்த அளவுக்கு உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளுக்கு பொருத்தமில்லாமல்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கின்றதோ. மேல் கட்டுமானம் பொருளாதா
தளத்திற்கு பொருத்தமில்லாமல் இருக்கின்றதோ
அளவுக்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி தடைப்படுத்த-
படுகிறது. எனவே மேல்கட்டுமானத் துறையில் புரட்சி
யைத் தொடர்ந்து நடத்துவதும், கலாச்சாரத்தின் அனைத்
-துக் கிளைகளும் உள்ளடங்கிய மேல்கட்டுமானத் துறை
யில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கெட்டிப்படுத்து
வதும் பலப்படுத்துவதும் அவசியமாகும்; இதனால் மேல்
கட்டுமானமானது சோசலிசப் பொருளாதார அடித்தளத்
திற்கு மேலும் இசைவானதாக இருக்கும். உற்பத்தி உற
-வுகள் தொடர்பான துறைகளில் புரட்சியைத் தொடர்ந்து
நடத்துவதும் சோசலிசப் பொதுவுடமை மற்றும் சோசலிச
உற்பத்தி உறவுகளின் பிற அம்சங்களையும் கெட்டிப்
படுத்தி வளர்க்க வேண்டியது அவசியம். இதனால் உற்
பத்தி உறவுகள் விரிவடைந்து வரும் உற்பத்தி சக்திகளுக்கு
இசைவானதாக இருக்கும். தொழில் நுட்பக் கண்டுபிடிப்
-புகளை புதிதாக அறிமுகப்படுத்தி தொழில் நுட்ப புரட்
சியை நடத்தி உற்பத்தி சக்திகளை வேகமாக வளர்ப்பது
அவசியம்; இதனால் சோசலிச கட்டமைப்புக்கு பொருளா
-யத அடித்தளத்தை விரிவாக்கி உற்பத்தி உறவுகள் மற்
-றும் மேல்கட்டுமானத்தில் மாற்றத்தையும் வளர்ச்சியை
யும் உயர்த்த முடியும். இவையனைத்தையும் செய்வதன்
மூலமே நாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கெட்டிப்
படுத்திப் பலப்படுத்த முடியும்; சோசலிச இலட்சியத்தை
விடாப்பிடியாக உந்தித் தள்ளிச் செல்ல முடியும்; எல்லா
வர்க்கங்களையும் இல்லாமல் செய்கின்ற பொதுவுடைமைச்
சமுதாயத்தை இறுதியில் அடைய முடியும்'' (மேற்குறிப்பிட்
-டது, பக். 27-29)

சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய விதிகளைத் தொகுத்து மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பற்றிய ஆய்வுகளை முன் வைத்த மாவோ அவைகளைப் பின்வரு-மாறு சீனச் சமுதாயத்திற்கு மிகச் சரியாக பிரயோகித்ததாக 11வது பேரவை ஒப்புக்கொண்டது :

''உற்பத்திச் சாதனங்களின் உடமையில் சோசலிச மாற்றம் அடிப்படையில் நடந்தேறியதைத் தொடர்ந்து சீன சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களை தலைவர் மாவோ விஞ்ஞான பூர்வமாக ஆய்ந்தறிந்து மக்களுக்கு இடையி-லான முரண்பாடுகளையும், நமக்கும் எதிரிக்கும் இடையி-லான முரண்பாடுகளையும் சரியாக வேறுபடுத்தி அறியவும் கையாளவும் வேண்டும் என்ற ஆய்வுரையை முன் வைத்-



படிப்பகம்

www.padippakam.com

தார். சோசலிசப் புரட்சியைப் பற்றி கூறுகையில் தலைவர் மாவோ கூறியதாவது : 'இந்தப் போராட்டத்தில் சம்மந்தப்பட்டுள்ள வர்க்கங்கள் எவை? பாட்டாளி வர்க்கம் உழைக்கும் மக்களுக்குத் தலைமை தாங்கி முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகத் தொடுக்கும் போராட்டமே இது' சோசலிச மாற்றத்தைத் தடைப்படுத்துகின்ற, சோசலிச நிர்மாணத்தை எதிர்க்கின்ற பிற்போக்கு வர்க்கங்கள் மற்றும் சக்திகள் அனைத்தின் மீதும் சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்காக தொழிலாளி வர்க்கம் தனது மிகவும் நம்பகமான கூட்டாளிகளான வறிய மற்றும் கீழ் மத்தியதர விவசாயிகளுடன் நெருக்கமாக ஒன்றுபட்டு அவர்களைச் சார்ந்து நிற்க வேண்டும்; புரட்சிகர அறிவாளிகளுடன் ஒன்றுபடவும் அவர்களைச் சார்ந்து நிற்கவும் வேண்டும்; பெரும்பான்மையான மேல்தட்டு குட்டி முதலாளித்தவர்களையும் முதலாளித்துவ அறிவாளிகளையும் வென்றெடுக்கவும் அவர்களுடன் ஒன்றுபடவும் வேண்டும்; நாட்டின் மொத்த மக்கட் தொகையில் 90 சதவிகிதத்தினர் சோசலிசத்தை ஆதரிப்பவர்களாக உள்ளனர்; சோசலிசத்தை மறுப்பவர்கள் அல்லது எதிர்ப்பவர்கள் 10 சத விகிதத்தினராக உள்ளனர்; இந்த 10 சதவிகிதத்தினரில் 8 சதவிகிதத்தினரை நமது முயற்சிகளின் மூலம் வென்றெடுக்க முடியும்; சோசலிசத்தைக் கடுமையாக எதிர்க்கும் விடாப்பிடியாளர்கள் 2 சதவிகிதத்தினர் மட்டுமே உள்ளனர்.

"1957-ல் தலைவர் மாவோ படைத்தளித்த மேதா விலாசமிக்க அடுத்தடுத்த கட்டுரைகளில் வர்க்க ஆய்வு பற்றிய இந்த விஞ்ஞான பூர்வமான அடித்தளத்தை அமைத்தார். சோசலிசப் புரட்சி ஆழமாக, ஆழமாக இந்த வர்க்க ஆய்வை தலைவர் மாவோ தொடர்ச்சியாக செழுமைப்படுத்தி வளர்த்தார். 95 சதவிகிதத்துக்கும் கூடுதலான ஊழியர்களுடனும் பரந்து பட்ட மக்களுடனும் ஒன்றுபடுவதன் அவசியத்தை மேலும் வலியுறுத்தி கட்சிக்குள் அதிகாரத்தில் இருந்து கொண்டே முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளுபவர்களுக்கு எதிரானப் போராட்டம் பற்றித் தெளிவாக வரையறுக்கப்பட்ட கோட்பாட்டை அவர் முன்வைத்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர்ந்து நடக்கும் இப்புரட்சியில், அதன் இயல்பு, உந்து சக்திகள், இலக்குகள் போன்ற கோட்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டுப் பிரச்சினைகளை தலைவர் மாவோவினுடைய சோசலிச சமுதாயத்தின் வர்க்க ஆய்வு முறையாகத் தீர்த்து உள்ளது'' (மேற்குறிப்பிட்டது, பக். 29-31, பாரா பிரித்தது —நாம்)

''கட்சிக்குள்ளேயே உள்ள முதலாளித்துவப் பாதையாளர்கள் பற்றிய தலைவர் மாவோவின் ஆய்வுரை சோசலிச சமுதாயத்தில் நடக்கும் வர்க்கப் போராட்டம் மற்றும் அப்போராட்டத்தின் பிரத்யேக இயல்பு பற்றிய ஆழ்ந்த தொலைநோக்கான ஆய்வை அடிப்படையாகக் கொண்டதாகும். சோசலிச சமுதாயத்தில் உள்ள பிரதான முரண்பாடு பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலானதாகும். இது ஆளும் பொதுவுடமைக் கட்சிக்குள் பிரதிபலித்தே தீரும். இதனாலேயே முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் அதிகாரத்திலுள்ள கட்சி நபர்கள் தோன்றுகிறார்கள். உற்பத்திச் சாதனங்களில் சோசலிச உடமை மாற்றம் பிரதானமாக நடந்தேறிய போதிலும், முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிரானப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் அரசியல் மற்றும் சித்தாந்தத் துறைகளில் பிரம்மாண்டமான வெற்றிகளை ஈட்டியுள்ள போதிலும் இன்னமும் பழைய முதலாளித்துவ வர்க்கத்தவர்கள் இருக்கின்றனர். பரந்து கிடக்கும் குட்டி முதலாளித்துவ வர்க்கம் முதலாளித்துவ சக்திகளை இடையறாது உருவாக்கிக் கொண்டே இருக்கிறது; புதிய முதலாளித்துவ சக்திகள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. பழைய மற்றும் புதிய முதலாளிகள் தில்லுமுல்லு நடத்துவதற்கான ஆற்றல், அவர்களுக்குள்ள செல்வாக்கு ஆகியவற்றைக் கணக்கிலெடுத்தால் அவர்கள் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் படைத்த சக்தியாக விளங்குகின்றனர். இவர்கள் தவிர்க்க இயலாதவாறு பொதுவுடமைக் கட்சிக்குள் ஏஜெண்ட்டுகளைக் கண்டுபிடிக்க முயற்சிக்கின்றனர்; கட்சிக்குள்ளேயே உள்ள முதலாளித்துவப் பாதையாளர்கள் மீது முதலாளித்துவத்தை மீட்பதற்கான தமது நம்பிக்கையை வைக்கின்றனர்

''இப்போதையை சோசலிசக் கல்வி மற்றும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் பிரதான இலக்கு 'முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் கட்சி நபர்களைத் தாக்குவதே' என்று தலைவர் மாவோ சுட்டிக் காட்டினார். மேலும் அவர் கூறியதாவது: 'நீங்கள் சோசலிசப் புரட்சியை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்;



படிப்பகம்

www.padippakam.com

இருப்பினும் முதலாளிகள் எங்கு இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறியவில்லை. அவர்கள் பொதுவுடமைக் கட்சிக்குள்ளேயே இருக்கிறார்கள். அதிகாரத்திலிருந்து கொண்டு முதலாளித்துவப் பாதையை மேற்கொள்கிறவர்கள். ட்ராட்ஸ்கி, ஜியனவியேவ், புகாரின் ஆகியோரை எதிர்த்து ஸ்டாலின் நடத்திய போராட்டத்தின் அனுபவம் சோவியத் யூனியனில் குருஷ்சேவ் மற்றும் பிரஸ்நேவ் முதலாளித்துவத்தை மீண்டும் நிலை நாட்டியதின் படிப்பினை, முதலாளித்துவப் பாதையாளர்களுக்கு எதிரான நமது கட்சியின் போராட்ட அனுபவம் ஆகியவற்றைப் படிப்படியாக தொகுத்ததன் மூலம் தலைவர் மாவோ உருவாக்கி வளர்த்தெடுத்ததே இந்த விஞ்ஞான ஆய்வுரையாகும். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சார புரட்சியின் போது அடித்து நொறுக்கப்பட்டட மூன்று முதலாளித்துவ தலைமையகங்களுக்கு எதிரானப் போராட்டங்கள் தெள்ளத் தெளிவாக நிரூபிப்பது என்னவென்றால், லியு சௌ ஷி, லின் பியௌ மற்றும் நால்வர் கும்பல் — வாங் ஹங் வென், சாங் சுன், சியாயோ, சியாங் சிங், மற்றும் ஹோ வென் யுவான்— போன்ற கட்சிக்குள் உள்ள முழுக்க முழுக்க திருந்த மறுக்கின்ற முதலாளித்துவப் பாதையாளர்களே முதலாளித்துவ மீட்சிக்கான தலையாய அபாயமாக விளங்குகின்றனர் என்பதே'' (டி பக். 31-33, பாரா பிரித்தது-நாம்.)

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற மகத்தான பங்களிப்பை கோட்பாடு ரீதியில் வழங்கியதோடு, மாவோ தானே முன் நின்று நடைமுறையில் மிகச் சரியாகப் பிரயோகித்ததாக சீனப் பொதுவுடமைக் கட்சியின் பதினோராவது பேரவை போற்றியது. நால்வர் கும்பலை முறியடித்ததும் கூட மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் வெற்றியென்று கூறியது:

''சோவியத் யூனியனில் முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டிருப்பதன் வரலாற்றுப் பாடம் மற்றும் சீனத்தில் அம்மாதிரியானதொரு மீட்சிக்கான உண்மையான அபாயம் ஆகியவற்றின் ஒளியில் தலைவர் மாவோ ஈடு இணையற்ற புரட்சிகரத் துணிவு மற்றும் தீர்க்க தரிசனத்தோடு மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை நேரிடையாக இருந்து தொடங்கி வைத்து வழி நடத்தினார்; அப்புரட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராததாகும். அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்த அரசியல் புரட்சியின் போக்கில், ஒன்பதாவது, பத்தாவது மற்றும் பதினோரா



படிப்பகம்

www.padippakam.com

வது இரு வழிப் போராட்டங்களில் நமது கட்சி வெற்றி
பெற்றுள்ளது. லியு செள ஷி, லின் பியெள மற்றும் நால்
வர் கும்பல் ஆகிய மூன்று முதலாளித்துவ தலைமையகங்-
களை தரைமட்டமாக்கியிருக்கின்றன. திரும்பத் திரும்ப
நிகழ்த்திய போரின் மூலம் அவர்கள் அபகரித்திருந்த அதி
-காரத்தின் அந்தப் பகுதிகளை மீட்டுப் பறித்தது......''
''......இந்த அரசியல் புரட்சியின் மூலம் மார்க்சிய—
லெனினிய-மாசேதுங் சிந்தனை பிரபலமாகப் பரவியது;
இந்த நடைமுறை என்னும் மாபெரும் களத்தில் பாட்டாளி
வர்க்க சர்வாதிகாரத்தின் புரட்சியைத் தொடர்வது என்ற
தலைவர் மாவோவின் கோட்பாடு மேலும் ஒன்று செறிக்-
கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டது; எண்ணிறந்த அணிக-
ளாலும் மக்களாலும் மேலும் நிதர்சனமாக கிரகிக்கப்பட்டது.
திரிபுவாதத்தைத் தாக்கி முறியடிப்பதும் அதற்கெதிராக
எச்சரிக்கையாக இருப்பதிலும், பாட்டாளி வர்க்க சர்வாதி
காரத்தை காத்து உறுதிப்படுத்துவதிலும் முதலாளித்துவ
மீட்சியைத் தடுப்பதிலும் சர்வ தேசிய பொதுவுடமை இயக்
கத்திற்குப் புதிய அனுபவத்தை சீனத்தின் மகத்தான
பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி அருளியிருக்கிறது.
சோசலிசத்திற்கும், கம்யூனிசத்திற்குமான அவர்களது
போராட்டத்தில் உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கு இன்னும்
மிகக் கூடுதலான நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது.
எந்த சந்தேகத்திற்கும் அப்பாற்பட்ட முறையில் பாட்டாளி
வர்க்க சர்வாதிகாரத்தின வரலாற்றில் ஒரு மகத்தான முக்
-கியத்துவம் வாய்ந்த புதிய பங்களிப்பு என்கிற முறையில்
இது இடம் பெறும்; காலச் சக்கரம் சுழலும்போது இந்த
புதிய பங்களிப்பு அதிகரிக்கும் பிரகாசத்துடன் மின்னும்.''
(ஷ நூல், பக். 49-51)

படிப்பகம்

www.padippakam.com

# II

# மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளைத் திருத்தி எழுதுகிறது தெங் கும்பல் - முதலாளித்துவ மீட்சியும், ஏகாதிபத்தியத்திடம் சரணடைவுமே அதன் இறுதி நோக்கம்.

*"உழைக்கும் மக்களுக்கு உடனடியாக வெறுப்-பூட்டும், அப்பட்டமான சந்தர்ப்பவாதம் மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதத்தைப் போன்று அபாயாகரமானதும் ஊறு விளைவிக்க கூடியதும் அல்ல. மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதம் தனது சந்தர்ப்பவாத நடைமுறைக்கு உரிய தருணம் வரவில்லை என்றும் இன்னபிறவாகும் நிருபிக்க அடுக்கடுக்காக மார்க்சிய சொற்றொடர்களைப் பயன் படுத்துகிறது''*

—என்று லெனின் எச்சரித்தவாறு மிகவும் மூடிமறைக்கப்பட்ட வலது சந்தர்ப்பவாதிதான் தெங் சியௌ பிங். முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் அதிகாரத்திலுள்ள கட்சி நபர்களிலேயே மிகவும் அபாயகரமான கபடவேடதாரியும், கலவைவாதியுமான தெங் தனது நீண்ட பெரிய வாலைச் சுருட்டி கால்களுக்கிடையே ஒளித்துக்கொள்வதன் மூலம் கொடிய ஓநாய் அல்ல, சாதுவான வீட்டு நாயாக வேடமிடுவதில் வல்லவர். உண்மையில் ஸ்தாபன ரீதியில் சீனத்துக் குருஷ்சேவான லியு கும்பலின் முக்கிய தலைவர்களுள் ஒருவரும், அரசியல் சித்தாந்த ரீதியில் அதன் கடைகோடித்த ளமான,

படிப்பகம்

www.padippakam.com

வலது சந்தர்ப்பவாதத்தை உயர்த்திப் பிடிப்பவருமான தெங் வெளித் தோற்றத்திற்கு அதன் அணிவரிசைகளில் ஒருவராக ஒளிந்து கொண்டு, கலவைவாதத்தை முன் தள்ளுவதன் மூலம் முதலாளித் துவ மீட்சிக்கான முயற்சிகள் முறியடிக்கப்படும் போதெல்லாம் புத்து -யிர் பெற்று மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளை திருத்தி எழுத இடையறாது முயன்று வருகிறார்.

எட்டாவது மத்தியக் கமிட்டியின் விரிவாக்கப்பட்ட பனிரெண் -டாவது பிளீனம் லியு செள ஷியை முற்றாகத் தோலுரித்துத் தூக்கி -யெறிந்த பின் தெங் சியெள பிங் தலைமையில் அத்திரிபுவாதக் கும் பலும் பல்வேறு இடங்களிலுமிருந்த அதன் ஏஜெண்டுகளும் நேரத் திற்கும் இடத்திற்குமேற்ப தமது தந்திரோபாயங்களை மாற்றினர். அதாவது, கையளவேயான தம்மையே காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு பலரையும் கடுமையாகத் தாக்கும் வீண் முயற்சியில் 'அனைவரையும் சந்தேகிப்பது' மற்றும் 'அனைத்தையும் தூக்கியெ றிவது' என்ற, சாராம்சத்தில் வலதும் வடிவத்தில் இடதுமானவை போன்ற முழக்கங்களை முன் தள்ளினர். புரட்சிகர மக்களிடையே பிளவுகளை விதைப்பதும் தங்களைப் பாதுகாக்க தில்லுமுல்லுகளை - யும் ஒரு பகுதி மக்களையும் தந்திரமாக ஏமாற்றித் திசை திருப்பி விடுவதும் ஆகிய இவர்களது சதிகள் முறியடிக்கப் பட்ட போது 1966 குளிர்காலத்திலிருந்து 1967 வசந்தகாலம் வரை நீடித்திருந்த பாத கமான நீரோட்டமாக இருந்த பலவந்தமான எதிர்த் தாக்குதலைத் தொடுத்தனர். மாவோவின் தலைமையிலான பாட்டாளி வர்க்கத் தலைமையகத்திற் கெதிராக தெங் கும்பலாகிய முதலாளித்துவ தலை மையகத்தின் பாதகமான நீரோட்டத்தின் பொதுத் திட்டம்: எட்டா வது மத்தியக் கமிட்டியின் பதினோராவது பிளீனத்தின் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் கொள்கைகளான 16அம்ச தீர்மானத்தைத் தூக்கியெறிவது, லியு செள ஷி தலைமையேந்திய முதலாளித்துவத் தலைமையகத்தைத் தூக்கியெறிந்த சரியான தீர்ப் பைத் திருத்தி மாற்றுவது, பரந்துபட்ட மக்களால் முற்றும் முழுதாக வெறுத்தொதுக்கி நிராகரிக்கப்பட்டு விட்ட முதலாளித்துவப் பிற் போக்குப் பாதையின் மீதான சரியான தீர்ப்பைத் திருத்தி மாற்றுவது புரட்சிகர வெகுஜன இயக்கத்தை அடக்கி ஒடுக்கி எதிர்த் தாக்குதல் தொடுப்பது ஆகியவற்றைக் கொண்டதாகும். எனினும் பொங்கிப் பாயும் புரட்சிகர வெகுஜன இயக்கத்தின் பிரதான நீரோட்டத்தைத் தடுக்க முடியவில்லை.

புரட்சிகர இயக்கத்தின் இந்த வளைவுகளும் திருப்பங்களும் முன் னேற்றங்களும் பின்னேற்றங்களும் அரசியல் அதிகாரத்தின் அதி முக்கியத்துவத்தை மேலும் உணர்த்திய போது முதலாளித்துவப் பாதையை மேற்கொள்ளும் கட்சியிலிருந்த நபர்கள் கைப்பற்றியிருக்



படிப்பகம்

www.padippakam.com

கும் அதிகாரத்தின் பகுதிகளைத் திரும்பக் கைப்பற்றுவதன் மூலம் மட்டுமே முதலாளித்துவப் பாதையாளர்களை முற்றாக முறியடிக்க முடிந்தது. மாவோ மற்றும் அவரால் தலைமை தாங்கப்பட்ட பாட்டாளி வர்க்கத் தலைமையகத்தின் ஆதரவிலும் தலைமையிலும் ஷாங்காயில் தொடங்கி பாட்டாளி வர்க்கம் பரந்து பட்ட மக்களின் புரட்சிகர அணிகளோடு ஒன்றுபட்டு கீழிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது. அதிலிருந்து மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலான அதிகாரத்தைக் கைப்பற்றுவதும் மீண்டும் எதிர்-கைப்பற்றுவதுமாகிய போராட்டம் ஒரு ஜீவமரணப் போராட்டமாகியது. இரு வர்க்கங்களுக்கும் இரு பாதைகளுக்கும் இடையிலான அரசியல் பலப்பரிட்சை திரும்பத் திரும்ப நிகழ்ந்து, மேலும் உக்கிரமடைந்து சிக்கலான ஒரு சூழ்நிலைமை தோன்றியது. இதைத்தான் மாவோ சொன்னார், ''கடந்த காலத்தில் நாம் வடக்கிலும் தெற்கிலும் போரிட்டோம். அம்மாதிரியான போர்களில் போரிடுவது எளிதாக இருந்தது. ஏனெனில், எதிரி வெளிப்படையாகத் தெரிந்தான். அந்த வகையான போரைக் காட்டிலும் தற்போதைய மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி இன்னும் கூடுதலான கஷ்டமானது. பிரச்சனை என்னவென்றால் எதிரிக்கும் நமக்கும் இடையிலான முரண்பாடு என்ற வகைப்பட்டதாக நம்முடன் முரண்பாடுடையவர்களோடு சித்தாந்தத் தவறிழைத்தவர்கள் ஒன்று கலந்திருக்கிறார்கள்; ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவர்களை வகைபிரிப்பது சிரமமாக இருக்கும்.'' இச்சிரமத்தைக் களையும் பொருட்டு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த பின்வரும் ஆணையை மாவோ இட்டபோது பரந்துபட்ட மக்கள், போராட்டத்தில் புடம் போடப்பட்டார்கள்; அதே சமயம் எதிரி மாபெரும் குழப்பத்தில் தள்ளப்பட்டான்; அதாவது, எதிரிக்கும் நமக்குமிடையிலான முரண்பாட்டை மக்களிடையேயான முரண்பாட்டிலிருந்து வேறுபடுத்துவது; மாபெரும் புரட்சிகர கூட்டணியையும் புரட்சிகரமான ஒன்றில் மூன்றும் உருவாக்குவது; குட்டி முதலாளித்துவ கருத்துடையவர்களை பாட்டாளி வர்க்கப் புரட்சியின் பாதைக்கு வழி நடத்துவது ஆகியவை.

இருப்பினும், கையளவேயிருந்த ஓடுகாலிகள், எதிரி உளவாளிகள், திருந்தாத நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், எதிர்ப் புரட்சியாளர்கள், கெட்ட சக்திகள் மற்றும் வலது சாரிகள், முதலாளித்துவ பிழைப்புவாதிகள், இரட்டை பம்மாத்துக்காரர்கள் ஆகிய மக்கள் மத்தியில் மறைந்து கொண்டிருப்பவர்கள் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலைமைகள் வரும்வரை உண்மை நிறத்தோடு வெளிவரவேயில்லை. 1967 கோடையிலும், 1968 வசந்தத்திலும் தெங் தலைமையிலான கும்பல் சரியான தீர்ப்புகளை திருத்தி மாற்றும் நோக்கத்தோடு வலதுசாரி நிலையிலிருந்தும் கடைக்கோடித்தன



படிப்பகம்

www.padippakam.com

மான 'இடது'சாரி நிலையிலிருந்தும் ஒரு பிற்போக்குத் தனமான கெட்ட காற்றை மீண்டும் கிளறிவிட்டது. இதன் தாக்குதல் முனையை மாவோ தலைமையிலான பாட்டாளி வர்க்கத் தலைமையகத்திற்கெதிராகவும், மக்கள் விடுதலைப் படைக்கெதிராகவும், புதிதாகப் பிறந்திருந்த புரட்சிகரக் கமிட்டிகளுக்கெதிராகவும் திருப்பியி-ருந்தது. அதே சமயம் பரந்துபட்ட மக்களை ஒருவருக்கெதிராக மற்றொருவரை தூண்டி விட்டது; பாட்டாளி வர்க்கத்திடமிருந்து அதிகாரத்தைத் திரும்பவும் கைப்பற்றுவதற்கு வீணான முயற்சியில் இறங்கியது. எனினும் அவர்களது ஆணையாளரான லியு செள ஷி-யைப் போலவே தெங் தலைமையிலிருந்த கையாளேயான இந்தக் கும்பலும் தூக்கியெறியப்பட்டது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் முதல் முதலாளித்துவத் தலைமையகத்திற்கெதிரான வெற்றியில் இதுவும் மிக முக்கியமானது.

'ஒரு போக்கு மற்றொன்றை மூடி மறைக்கிறது என்பதைக் கட்டாயம் கவனத்தில் கொள்ள வேண்டும்.' செந்தூசிபூவின் வலது சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டம் வாங் மிங்கின் இ–து சந்தர்ப்பவாதத்தை மறைத்திருந்தது; வாங் மிங்கின் இடது விலகலுக்கெதிரான போராட்டம் லியுசெளஷியின் வலது விலகலை மறைத்திருந்தது; லியு செளஷியின் திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டம் லின் பியெளவின் திரிபுவாதத்தை மறைத்திருந்தது. இவ்வாறுதான் லின் பியெளவின் திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டம் தெங் கும்பலின் திரிபுவாதத்தை மறைத்திருந்தது. லின் பியெளவின் எதிர்ப் புரட்சி கட்சி விரோத குடை கவிழ்ப்பு சதி வேலைகள் முறிய-டிக்கப்பட்டதைக் கபடமாகப் பயன்படுத்திக் கொண்டு தனது தவறுகளை உணர்ந்து திருந்தியவராக மோசடி செய்து தெங் சியெள பிங் முதல் அரசியல் மறுவாழ்வு பெற்றார்.

அரசியல் மறுவாழ்வு பெற்ற தெங் சியெள பிங் மீண்டும் கட்சி விரோத எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளில். ஈடுபட்டார்; மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளைத் திருத்தி, மறுக்க முற்பட்டார். ''கட்சி மற்றும் நாட்டின் அனைத்து வேலைக்குமான பொதுத் திட்டம் பற்றி'', ''விஞ்ஞானம், தொழில் நுட்பம் பற்றிய வேலை குறித்து சில பிரச்சினைகள்'' . ''ஆலைத் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் சில பிரச்சினைகள்'' - (அதாவது ஆலைத் தொழிலுக்கான விதிமுறைகள்) -ஆகிய மூன்று ஆவணங்கள் கட்சியிலிருக்கும் திருந்த மறுக்கும் முதலாளித்-துவப் பாதையாளர்களின் தலைவரான தெங் சியெள பிங்கின் வழி-காட்டுதல்களின் அடிப்படையில் தீட்டப்பட்டவை. இவை அவரது எதிர்ப் புரட்சி திரிபுவாதத்தின் கடைகோடித்தனமான வலதுசாரி சாராம்சத்தின் ஒன்று செறிந்த வெளிப்பாடும் ஒரு கிரமமான, முறையான திரிபுவாத கண்ணோட்டங்களின் பிரதிபலிப்புமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

''பொதுத்திட்டம் பற்றியது'' முதலாளித்துவ மீட்சிக்கான தெங் சியெள பிங்கினுடைய அரசியல் பிரகடனமாகும். 1975ல் அவர் வெளியிட்ட ஒரு அடுத்தடுத்த உரைகளை உள்ளடக்கியிருந்த இந்தக் கட்சி விரோத அறிக்கை ''வர்க்கப் போராட்டத்தை கேந்திரமான கண்ணியாகக் கொள்வதை'' வெட்கமின்றி மறுதலிக்கிறது. ''மூன்று ஆணைகளைக் கேந்திரமான கண்ணியாகக் கொள்வதை'' அப்பட்டமாக முன் தள்ளுகிறது; கட்சியின் அடிப்படைத் திட்டத்தையும் கட்சியின் அடிப்படைப் பாதையையும் சிதைக்கிறது. மாவோவின் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பாதையை சகல வழிகளிலும் தாக்கும் வகையிலான்தாக வர்க்கப் போராட்டத்தின் அழிவு பற்றிய கோட்பாட்டையும், உற்பத்தி சக்திகள் பற்றிய கோட்பாட்டையும் பிரச்சாரம் செய்கிறது. ''விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய வேலை குறித்து சில பிரச்சினைகள்'' என்ற அறிக்கை மேற்கட்டுமானம் முழுவதுமாக முதலாளித்துவ வர்க்கத்தின் மீது அனைத்தும் தழுவிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதை எதிர்க்கும் வகையில் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய நிலைப்பாடுகளில் ''அகலமானதொரு உடைப்பை ஏற்படுத்தும்'' தெங் சியெள பிங்கின் ஒரு திரிபுவாத 'மாடலா'கும்.

''தொழிற்சாலைகளுக்கான விதிமுறைகள்'' தெங் சியெள பிங்கின் அடிமைத்தனமான தரகு முதலாளித்துவ பொருளாதாரக் கருத்தோட்டங்களாகும்; நிறுவனங்களை நடத்துவதில் அனைத்தும் தழுவிய திரிபுவாதமாகும். ''தொழிற்சாலை வளர்ச்சியைத் துரிதப்படுத்துதல்'' என்ற பெயரில் உண்மையில் அது முதலாளித்துவ மீட்சியையே நோக்கமாகக் கொண்டிருந்தது. தெங் சியெள பிங் முதல் அரசியல் மறுவாழ்வு பெற்று மீண்டும் வேலைகளைத் துவங்கிய பிறகு மத்தியக் கமிட்டியின் அங்கீகாரம் பெறாமல், அது அறியாமலேயே ''நிறுவனங்களை அந்தந்த அமைச்சரகங்களே நேரடியாக முற்றும் முழுதாக கட்டுப்படுத்துவது'' என்ற ஒரு பொருளாதார நிர்வாகத்தைத் திணித்தார். இதன் பொருள், சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரவையிலுள்ள ஒரு சில மேல்மட்ட நபர்களே நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள நிறுவனங்களுக்கு உத்தரவுகளை நேரடியாகப் பிறப்பிக்கலாம்; அவற்றின் மீது ஆதிக்கம் வகிக்கலாம். ஒரே தொழிலுள்ள நிறுவனங்கள் தனியானதொரு அமைப்பாக இவ்வாறு அமைப்பதன் மூலம் பொருளாதாரத்தின் மீது கட்சியின் மத்தியக் கமிட்டி மற்றும் உள்ளூர் கட்சி கமிட்டிகளின் அதிகாரத்தை இல்லாதொழித்து, பல்வேறு மட்டங்களிலும் கட்சிக் கமிட்டிகளின் ஒருங்கிணைந்த தலைமையை மறுதலிப்பதாகும். சோசலிசப் பொருளாதாரத்தைப் பலப்படுத்தவும், உறுதியான சோசலிச நாட்டைக் கட்டியமைக்கவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பேணிக் காத்து கெட்டிப்படுத்தவும் மத்திய மற்றும் ஸ்தல அதிகாரங்களுக்கிடையிலான உறவைச் சரியாகக் கையாளுவது, ''ஒருங்கிணைந்த மத்தியத்



படிப்பகம்

www.padippakam.com

திட்டமிடுதலின் கீழ் ஸ்தல அமைப்புகள் கூடுதலான பணிகளை மேற்கொள்ள விடு'', ''மத்திய மற்றும் ஸ்தல உறுப்புகள் ஆகிய இரு மூலாதாரங்களிலிருந்தும் முன் முயற்சி வருவது ஒன்றை விடவும் மேலானது'' ஆகிய மாவோவின் கோட்பாடுகளுக்கெதிராக லியு-தெங் கும்பல் எப்பொழுதும் ஏகாதிபத்திய டிரஸ்டுகளையே வான-ளாவப் புகழ்ந்தது.

''சம்பந்தப்பட்ட அமைச்சரகங்களின் நேரடி மற்றும் முழு-தான கட்டுப்பாடு'' என்ற முறையின் மூலம் அனைத்து மக்களின் சோசலிசப் பொருளாதார உடைமையைத் தவிர்க்க முடியாமல் பிளவு படுத்தி அந்தந்த தொழில்களின் தனிச் சொத்துடைமையாக மாற்று வது; பல்வேறு தொழில்களையும் இலாகாக்களையும் கூர்மையாக எதிரெதிரே நிறுத்துவது; ஒவ்வொன்றின் வேலையைக் கீழ்மைப் படுத்தி, வெளிப்படையாக வேலைப் பிரிவினைக்கு இட்டுச் சென்று அவற்றுக்கிடையிலான உறவை முதலாளித்துவ போட்டியாக்குவது-இவ்வாறு பொருளாதாரத்தைத் 'திருத்தியமைப்பதில்' தெங் சியௌ பிங்கின் உள்நோக்கம் என்னவெனில், உற்பத்தியை ஒரு முதலாளித் துவ குவியலாக்கி ஏகபோகத்தைக் கொண்டு வருவது; தனித்திறன் படைத்தவர்களை மட்டும் சார்ந்து நின்று தொழிற்சாலைகளை நடத் தும் திரிபுவாத நடைமுறையைத் திணிப்பது; அதாவது இலாபத்தை ஆணையில் வைப்பது, பொருளாயத ஊக்கமளிப்பது, எல்லாவற்றுக் கும் மேலாக தொழில் நுட்பத்தை நிறுத்துவது இவற்றின் மூலம் இதைச் சாதிப்பது ஆகியவை. தெங் சியௌ பிங்கின் இக்கோட் பாடு மாவோவின் சோசலிசப் புரட்சி மற்றும் நிர்மாணம் குறித்த பாதையையும் கொள்கைகளையும் நிராகரித்து, முதலாளித்துவ உரிமையை விரிவாக்கி பலப்படுத்துவதையும் சோசலிச பொதுத்திசை வழியையும், அதற்கான திருவனங்களின் பாதையை யையும் மாற்றி சோசலிசப் பொருளாதாரத்திற்குப் பதிலாக அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கொண்டு வரு வதையும் நோக்கமாகக் கொண்டது. இத்துடன் சோவியத் திரிபுவாதி களின் நிர்வாகிகள் அமைப்பு முறையையும் தெங் சியௌ பிங் அறி முகப்படுத்தினர்; இவ்விரண்டு முறைகளின் மூலம் பாட்டாளி வர்க் கத்தின் மூலம் முதலாளித்துவ சர்வாதிகாரத்தை கொண்டு வரு-வதை ஏற்பாடு செய்தார்.

1964 லேயே நிர்வாகத்துறை பற்றி பின் வருமாறு மாவோ சொன்னார், ''நிர்வாகத்துறையே கூட சோசலிசக் கல்வியின் ஒரு விஷயம். நிர்வாகத் துறையின் அலுவலர்கள் தொழிலாளர்களோடு தொழிற் கூடங்களில் இணைவது; உணவு, வாழ்வு மற்றும் வேலை களில் இணைவது; தொழிலாளர்களிடமிருந்து ஒன்று அல்லது அதற்கு மேலான திறன்களை தன்னடக்கத்துடன் கற்றுக் கொள்வது ஆகியவற்றை மேற்கொள்ளாவிட்டால் பிறகு அவர்கள் து வாழ்வு



படிப்பகம்

www.padippakam.com

முழுவதும் தொழிலாளர் வர்க்கத்துடன் ஒரு கூர்மையான வர்க்கப் போராட்டத்தில் இருக்கக் காண்பார்கள்; இறுதியில் முதலாளித்துவ வர்க்கத்தைப் போன்றே பாட்டாளி வர்க்கத்தால் தூக்கியெறியப்படு வார்கள் என்பது நிச்சயம்''. முழுமனதோடு பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்து நிற்கவேண்டுமென்ற மாவோவின் இந்த ஆணைக்கு நேரெதிராக வெறுக்கத்தக்க முறையில் பாட்டாளி வர்க்கத்திற்கு பகைமையான திரிபுவாதத்தை தெங் முன் தள்ளினார். 'தொழிலாளர்-கள், விவசாயிகள் மற்றும் இராணுவ வீரர்களைச் சார்ந்து நிற்பது ஒப்பீட்டு வகையானது' என்று அப்பட்டமாகப் பிரகடனப்படுத்தியதோடு தொழிலாளர்கள், ஏழை, கீழ்மட்ட நடுத்தர விவசாயிகளை அரசின் எஜமானர்கள் என்பதையும் அவர்கள் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையையும் தீர்மானகரமாக தெங் மறுத்தார். மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் முதலாளித்துவ மற்றும் திரிபுவாத நிர்வாகத் துறைக் கோட்பாடுகள், நியதிகள் மற்றும் விதிமுறைகளை தொழிலாளர்கள் விமர்சித்து மேற்கொண்ட புரட்சிகரமான நடத்தையை தெங் வெறுத்ததோடு அரசியல் மறு-வாழ்வு பெற்றவுடன் வஞ்சம் தீர்க்கும் வகையில் எதிர்த் தாக்குதல் தொடுத்தார். தொழிலாளர்களைக் 'கட்டுப்படுத்தி, வெட்டிச் சுருக்கி அடக்கி ஒடுக்கும்' விதிமுறைகளின் தொகுப்பையே கொண்டுவந்த-தோடு மட்டுமின்றி தொழிலாளர்களை 'சாத்தியமான அளவு கறாராகக்' கையாளப்படுவதைப் பற்றியே பிதற்றினார். இவையனைத்தும் தொழிலாளர்களின் இரத்தத்தைக் குடிக்கும் முதலாளித்-துவ வர்க்கத்தின் பிரதிநிதியே தெங் சியொபிங் என்பதைத் தோலுரித்துக் காட்டுகின்றன.

ஏனெனில், ஒரு நிறுவனத்தில் எந்த அரசியல் பாதை பின்பற்றப்படுகிறது; எந்த வர்க்கம் தலைமையின் அதிகாரத்தைச் சுழற்று-கிறது என்ற காரணிகளே எந்த வர்க்கம் அதை உடைமையாகக் கொண்டிருக்கிறது என்பதைத் தீர்மானிக்கின்றன. தெங் சியொபிங்கின் திரிபுவாதப் பாதையை செயல்படுத்துவது நிறுவனங்களின் தலைமையை கட்சியிலுள்ள முதலாளித்துவ வர்க்கத்தினராகிய முதலாளித்துவப் பாதையாளர்கள் கைப்பற்றுவதை தவிர்க்க முடியாததாக்கும்; அவர்கள் தம் கரங்களிலிருக்கும் அதிகாரத்தைப் பயன்-படுத்திக் கொண்டு பாட்டாளி வர்க்கம் உருவாக்கிய பெருஞ் செல்-வத்தைச் சுருட்டிக் குவித்துக் கொள்வார்கள்; தொழிலாளர்கள் முதுகிலேறி சவாரி செய்வார்கள்; பெயருக்கே சோசலிச நிறுவனங்களாக இருக்க முடியும், உண்மையில் அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவ தொழில் நிறுவனங்களாக அவை மாற்றப்படும். இவ்வாறெல்லாம் தெங் முன் வைத்த நிலைப்பாடுகள் அனைத்தும் சோவியத் திரிபுவாதிகளின் 'பொருளாதாரச் சீர்திருத்தம்', 'புதிய பொருளாதாரக் கட்டமைவு' என்ற கடைகோடித்தனமான அதிகார



படிப்பகம்

www.padippakam.com

வர்க்க ஏகபோக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஈயடிச்சான் காப்பி தான்.

பொருளாதாரக் கட்டுமானத்தில் சொந்த மக்களின் பலத்தைச் சார்ந்து நிற்பதா அல்லது அந்நியத்துவமான அனைத்தையும் வழிபட்டு அந்நிய நாடுகளை முழுமையாகச் சார்ந்து நிற்பதா என்பது இரு நேரெதிரான பாதைகளாகும். மாவோ சொன்னார், ''அந்நிய உதவியை துணையானதாகக் கொள்ளும் அதே சமயம், நமது சொந்த முயற்சிகளைப் பிரதானமாகச் சார்ந்து நிற்க வேண்டும்; குருட்டுத்தனமான நம்பிக்கையை உடைத்தெறிந்து தொழிற்சாலைத் துறை, விவசாயம், தொழில் நுட்பம் மற்றும் கலாச்சாரம் ஆகிய புரட்சிகளில் சுயேச்சையாகச் செல்லுங்கள்; அடிமைப்பாட்டுத்துவத்தை விட்டொழியுங்கள்; வரட்டுக் கோட்பாட்டு வாதத்தைப் புதையுங்கள்; பிற நாடுகளின் நல்ல அனுபவங்களைச் சிரத்தையுடன் கற்றுக் கொள்ளுங்கள்; அவற்றிலிருந்து பாடங்களைக் கற்கும் பொருட்டு அவர்களது கெட்ட அனுபவங்களைப் படிப்பதையும் கூட நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்; இது நமது பாதை.'' மாவோ முன்வைத்த இந்தப் பாதையை முற்றாக தெங் சியெள பிங் காட்டிக் கொடுத்தார். அவரது சொல்லிக் கொள்ளும் 'பெரும் கொள்கை' என்பது சீன மக்களின் பலத்தை அடிப்படையாகக் கொண்டு சீனப் பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்கு எதிராக அப்பட்டமான, சுத்தமான சரணடைவுத்தனமானதும் தேசியத் துரோகத் தன்மை வாய்ந்ததுமாகும்.

முதலாளித்துவப் பாதையை மேற்கொள்வதை உடும்புப் பிடியாகத் தெரிந்தெடுப்பவர்க ''ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் அதிகார வர்க்க முதலாளித்துவத்திடம் சரணடையத் தயாராக இருக்கிறார்கள்'' என்று மாவோ சுட்டிக் காட்டினார். இது தெங் சியெள பிங்கைக் குறிக்கிறது. தெங்கின் கண்களுக்கு பொருளாதாரக் கட்டுமானத்தை நடத்துவதற்கும், அல்லது விவசாயம், தொழில், தேசியப் பாதுகாப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றில் நவீனமயப்படுத்துவதில் சீன மக்கள் சிறந்தவர்கள் அல்ல; விஷயம் என்னவென்றால் சோசலிச அமைப்பால் எந்தப் பயனுமில்லை; ''ஆலைகளின் தொழில் நுட்ப மாற்றத்தைத் துரிதப் படுத்தவும். உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும்'', ஒரே சாத்தியமான வழி ''அந்நிய தொழில் நுட்பத்தையும், இயந்திரங்களையும், சாதனங்களையும் இறக்குமதி செய்வது தான்; இந்த நோக்கத்திற்காக அந்நிய முதலாளிகள் புத்தம் புதிய மிகச் சிறந்த இயந்திரங்களையும், சாதனங்களையும் 'சப்ளை' செய்யும் வகையில் அந்நிய நாடுகளுடன் 'நீண்டகால ஒப்பந்தங்களை' சீனா கையொப்பமிட வேண்டும்'' என்பதே 'பெருங் கொள்கை' என்றழைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

சுதந்திரம், சுயசார்பு என்ற கோட்பாட்டின் கீ சமத்துவம் பரஸ்பர நன்மை மற்றும் நாட்டின், சோசலிசப் புரட்சியின் தேவைகளுக்கேற்ப அந்நிய தொழில்நுட்பம், இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்வது அவசியமே; எனினும் இறக்குமதிகளின் மீதே முற்றாக நம்பிக்கை வைத்து நான்கு நவீனமயமாக்குதலை ஈடேற்றக் கூடாது. சொந்த முயற்சிகளைப் பிரதானமாக சார்ந்து நில்லாது, தெங் சியௌ பிங் முன் வைப்பது போல் முழுக்க முழுக்க அந்நிய தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வது, அந்நிய வரைவுகளையும் ஆக்க முறை தொழில் நுட்பங்களையும் காப்பியடிப்பது, அந்நிய 'மாடல்'களின் மீது இயந்திரங்கள் சாதனங்களின் அமைவு முறைகளை வைப்பது ஆகியவற்றைச் சார்ந்து நிற்பது, அந்நியர்களை எப்பொழுதும் வால்பிடிக்கச் செய்து பின் தங்கச் செய்யும்; நாட்டின் தொழில் நுட்ப வளர்ச்சியை மட்டுமல்லாது அதன் முழுத் தேசியப் பொருளாதாரத்தையே அந்நிய ஏகபோக கட்டுப்பாட்டில் வைக்கும். ஏற்றுமதி, தொழில்நுட்ப மாற்றத்தை விருத்தி செய்வது, உழைப்புச் சக்தியை ஈர்த்துக் கொள்வது ஆகிய மூன்று வாய்ப்புகளை சீனத்திற்கு ஏற்படுத்தும் என்பதால் மூன்று 'சாதகங்கள்' இருப்பதாக தனது 'பெரும் கொள்கை'யைப் பற்றி வெட்கமின்றி தெங் சியௌ பிங் உறுதிப் படுத்தினார். இந்தச் சாதகங்களின் வகை எத்தகையன என்றால் அந்நிய ஏகபோக முதலாளிகள் பணத்தையும் சாதனங்களையும் இயந்திரங்களையும் தொழில் நுட்பங்களையும் வழங்குவர்; சீனா தேவையான உழைப்புச் சக்தியை வழங்கும்; இவ்வாறு சீனத்தின் இயற்கை வளங்களைக் கொள்ளையிடவும் சீன மக்களை உறிஞ்சிக் கொழுக்கவும் ஏகாதிபத்தியங்களுக்கு கதவை அகலத் திறந்து விடுவது. இந்தச் சரணடைவுக் கொள்கை பின்பற்றப்படின் சீனா, ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு கச்சாப் பொருள் 'சப்ளை' செய்யும் அடிநிலமாகவும், அவர்களது பண்டங்களுக்கான சந்தையாகவும் அவர்களது முதலீடுகளுக்கான வடிகால்லாகவும் படிப்படியாக மாற்றப்பட்டு விடும்; சோசலிசப் புரட்சியின் பலன்களை மட்டுமல்ல ஜனநாயகப் புரட்சியின் பலன்களையும் கூட இழந்து நிற்கும்; இவை தெங் சியௌ பிங் ஒரு தரகு முதலாளியாகவும், அந்நிய பெரும் முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும் வேலை செய்ததன் அசிங்கமான அம்சங்களைக் காட்டின.

''மூன்று ஆணைகளைக் கேந்திரமான கண்ணியாகக் கொள்வது'' என்ற திட்டத்தின் விளைபொருளான மூன்று ஆவணங்கள் சரியான தீர்ப்புகளைத் திருத்தி மாற்றுவது. முதலாளித்துவத்தை மீட்பது ஆகிய தெங் சியௌ பிங்கின் கிரிமினல் முயற்சிகளுக்கான சாட்சியங்களாகும். செங்கொடிக்கெதிராக செங்கொடியை ஏற்றி அசைப்பது மற்றும் மார்க்சிய-லெனினியத்தை சிதைத்து



படிப்பகம்

www.padippakam.com

அதன் வீரியத்தை ஒழிப்பத ாக மார்க்சிய-லெனினியப் பதாகையை ஏந்தி அசைப்பது ஆகியவற்றுக்கு இவையே கேடு கெட்ட உதா-ரணங்களாகும். தெங் சியௌ பிங்கின் திரிபுவாதப் பாதை லியு சௌஷி. லின் பியௌ ஆகியோரின் எதிர்ப்புரட்சித் திரிபுவாதப் பாதையின் தொடர்ச்சி என்பதை இவை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டின. ''முதலாளித்துவப் பாதையாளர்கள் இன்னமும் முதலாளித்துவப் பாதையிலேயே நடக்கிறார்கள்'' என்பதை ஆணித்தரமாக நிரூபிக்கும் தெங் சியௌ பிங்கின் இந்த மூன்று கட்சி விரோத, மார்க்சிய-லெனினிய விரோத நச்சுக் களைகளை எதி மறையி கற்பதற்கான பாடமாகக் கொண்டு ஆழமான விமர்சன இயக்கம் . டத்தப்பட்டது.

தெங் சியௌ பிங் மு ன்னடத்திய எதிர்ப் புரட்சி திரிபுவாத மார்க்கமும், கட்சிக்குள்ளேயும் வெளியேயும் இருந்த பழைய, புதிய முதலாளிகளினதும், சீர்திருந்தாத நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், தீய பிரகிருதிகள், வலதுசாரிகள் ஆகியோர்களினதும் நலன்களை செறிந்த முறையில் பிரதிநிதித்துவப்படுத்தியதாலும் எல்லா எதிர்ப் புரட்சியாளர்களும் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவ மீட்சிக்கான நம்பிக்கையை தெங் சியௌ பிங் மீது வைத்தார்கள் என்ப-தையே காட்டின. ஹங்கேரி எதிர்ப்புரட்சி குடைக்கவிழ்ப்பின் தலைவரான நாகியின், ருசிய எதிர்ப்புரட்சி குடைக் கவிழ்ப்பின் தலைவர்களான குருசேவ்—பிரஸ்நேவ் கும்பலின் பாத்திரத்தை சீனத்தில் ஆற்ற தெங் சியௌ பிங் மீது எதிர்ப் புரட்சியாளர்கள் நம்பிக்கை வைத்தார்கள். ஏன்? தெங் கட்சியினுள்ள திருந்த மறுக்கும் மிகப் பெரிய முதலாளித்துவப் பாதையாளராவார். சரியான தீர்ப்புகளை திருத்தி மாற்றுவதற்கான வலது சாரி பிறழ்வுவாத முயற்சியின் திரைக்குப் பின் தலைமை ஆதரவாளராவார். இதற்காக 1975 கோடையிலே மீண்டுமொருமுறை வலது சாரி திரிபுவாத நச்சுக் காற்றை வெறித்தனமாக கிளம்பிய போது எதிர்ப் புரட்சி பிரகிருதிகள் எவ்வளவோ எக்களிப்படைந்தார்கள். சரியான தீர்ப்புகளை திருத்தி மாற்றுவதற்கான இந்த நச்சுக்காற்றுக் கெதிரான போராட்டம் தொடங்கி தெங் சியௌ பிங் விமர்சிக்கப்பட்டபோது இந்தப் பிரகிருதிகள் அவருக்காக உக்கிரமாக முறையிட்டனர். எதிர்ப்புரட்சி சீர்குலைவு நடவடிக்கைகளைப் பகிரங்கமாக நடத்தினர். அவர்களின் உயிர்நிலையில் பலத்த அடி கொடுத்த போது சின் ஹுவா பல்கலைக் கழகத்திலிருந்து சிலநபர்கள் மூலம் மாவோவிற்கு எதி-ராக புனைந்து உருவாக்கிய குற்றச்சாட்டுகளை உடைய கடிதங்-களை எழுதினர். பின்னால் இருந்த சூத்திரதாரியான தெங் சியௌ பிங் பன்முகத் தாக்குதல் தொடுத்தார். சின் ஹுவாவில் அடிபடும் பிரச்சினை தற்போதைய இரண்டு மார்க்கங்களுக்கிடையிலான வர்க்கப் போராட்டத்தின் பிரதிபலிப்பாகும் என்ற உண்மையை மாவோ வெளிச்சம் போட்டுக் காட்டினார். அப்போதிலிருந்து



படிப்பகம்

www.padippakam.com

1976 ஏப்ரலில் நடந்த தியென் ஆன் மென் சதுக்கத்தில் நிகழ்ந்த எதிர்ப்புரட்சி அரசியல் சம்பவம் வரை ஒவ்வொரு சம்பவமும் தெங் சியௌ பிங்கை மூலமாகக் கொண்ட ஆழமான அரசியல் வர்க்க வேர்கள் உடையவை.

தியென் ஆன் மென் சதுக்கத்தில் நடைபெற்ற எதிர்ப்புரட்சி சம்பவத்திற்காக நீண்ட காலத்திற்கு முன்கூட்டியே திட்டமிட்டு தயாரித்திருந்தனர். புதிய, பழைய முதலாளித்துவ பிரகிருதிகள், சொற்களை வைத்து விளையாடும் கல்விமான்கள், சட்டத்தை மீறி தீயவைகளைச் செய்த மரணத்திற்கும் அஞ்சாத பாதகர்கள் அனைவரும் எக்களிப்புடன் அரங்கில் ஆடினார்கள். தெங்கின் எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தை ஏற்றிப் போற்றியதுடன் அவரை பிரதமராக்க வேண்டுமென்று மத்தியக் கமிட்டிக்கு கடிதங்கள் எழுதினார்கள். மறைமுகச் சதிகளில் இறங்கினர். பிற்போக்கு முழக்கங்களையும் கவிதைகளையும் புணைந்து பரப்பினர். வதந்திகளை விதைத்தனர். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் தியென் ஆன் மென் சதுக்கத்தில் எதிர்ப்புரட்சி கட்சி விரோத ஆர்ப்பாட்டத்தை அரங்கேற்றியபோது தெங் சியௌ பிங் கும்பல் இரண்டாவது முறையாகத் தூக்கி எறியப்பட்டது. தெங் சியௌ பிங் எதிர்ப்புரட்சிவாதிகளின் பொதுப் பிரதிநிதியாவார். கட்சியில் தெங் சியௌ பிங் போன்ற முதலாளித்துவப் பாதையாளர்கள் இருக்கும் வரை சமுதாயத்திலுள்ள பூதங்களும், பிசாசுகளும், ஆந்தைகளும், கோட்டான்களும் தொந்தரவு செய்து பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக தாக்குதல்களைத் தொடுக்கும்; ஏகாதிபத்திய வாதிகளும் திரிபுவாதிகளும், பிற்போக்கு வாதிகளும் அவைகளுடன் இசைவாக நடந்து கொள்வார்கள். நால்வர் கும்பலின் கட்சி விரோத எதிர்ப்புரட்சி குடைக் கவிழ்ப்பு சதிகளுக்கெதிரான போராட்டத்தின் நிழலில் ஒளிந்து கொண்டு இரண்டாவது அரசியல் புனர் வாழ்வு பெற்ற தெங் சியௌ பிங் கும்பல் மீண்டும் இதை நிரூபித்திருக்கிறது.

இரண்டு முறை தூக்கியெறியப்பட்டு இரண்டு முறை அரசியல் மறுவாழ்வு பெற்ற. கட்சியிலுள்ள திருந்தவே திருந்தாத பெரும் முதலாளித்துவப் பாதையாளரும், கபடவேடதாரியும், கலவை வாதியும், ஓடுகாலியும், துரோகியும், எதிர்ப்புரட்சித் திரிபுவாதியுமாகிய தெங் சியௌ பிங் தற்போதைய கட்சி விரோத எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை மாசேதுங் சிந்தனையின் பேரால் தான் நடத்த முடிகிறது; மாவோ தலைமை தாங்கி வழி நடத்திய மாபெரும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் பெயரால் தான் நடத்த முடிகிறது; மாவோ வகுத்தளித்த நான்கு நவீனமயமாக்குதலின் பெயரால் நான் நடத்த முடிகிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி உட்பட மாவோவின் மகத்தான பங்களிப்புகள் அனைத்தையும் உயர்த்திப் பிடிக்கும் கட்சியின் பதினோரா



படிப்பகம்

www.padippakam.com

வது காங்கிரசின் சரியான தீர்ப்புகளை அமுலாக்குவதன் பெயரால் தான் நடத்த முடிகிறது. இவை அனைத்தும் லெனின் கற்பித்த வாறு, ''வரலாற்றின் இயங்கியல் என்னவென்றால் மார்க்சியத்தின் கோட்பாடு ரீதியான வெற்றி அதன் எதிரிகளையே மார்க்சிய வாதி-களைப் போன்று தாங்களும் வேடமணிந்து கொள்ளும்படி செய்து விட்டதுதான்'' என்பதையே நிரூபிக்கின்றன.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரி-யான தீர்ப்புகளைத் திருத்தி மாற்றி எழுதுவது சோசலிச கால கட்-டம் முழுவதற்குமான மாவோவின் வழிகாட்டுதலின் அடிப்படையி லான கட்சியின் பாதையையும் திட்டத்தையும் அடியோடு புரட்டிப் போடுவது, முதலாளித்துவ மீட்சிக்கு முயலுவது ஆகிய தனது எதிர்ப் புரட்சி கட்சி விரோத நடவடிக்கைகள் அனைத்தையும் கட்சி யின் பதினோராவது காங்கிரசின் பெயராலேயே தெங் திரிபுவாதக் கும்பல் செய்கிறது. ஆனால் தெங் கும்பல் திரித்துப் புரட்டுவது போலன்றி அனைத்துப் பிரச்சினைகளிலும் கட்சியின் பதினோராவது காங்கிரசு சரியான முடிவுகளையே மேற்கொண்டிருக்கிறது. மகத் தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பற்றிய மாவோவின் ஆய்வுரைகள். அவற்றின் மிகச் சரியான பிரயோகம் ஆகியவற்றை உயர்த்திப் பிடித்த சீனப் பொதுவுடைமைக் கட்சியின் பதினோரா-வது காங்கிரசு 1966 தொடங்கி சீனாவில் நடந்த மகத்தான பாட்-டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை முதலாவதுதான் என்று கூறி அதை முடித்து வைப்பதாகப் பிரகடனப் படுத்தியது உண்மைதான். ஆனால் அது இறுதியானது அல்ல என்றும் வர்க்கப் போராட்டத் தின் முடிவு அல்லவென்றும், மீண்டும் மீண்டும் இத்தகு புரட்சி சம்-பவிக்கும் என்றுமே சித்தரிக்கிறது. ''கலாச்சாரப் புரட்சி துவங்கிய போது தலைவர் மாவோ கூறியதாவது 'நாடு முழுக்கவுமான மாபெ-ரும் குழப்பம் மாபெரும் ஒழுங்கமைவை ஏற்படுத்தும்'; கட்சியின் பத்தாவது காங்கிரசுக்குப்பின் ஒன்றுக்கு மேற்பட்டதடவைகள் அவர் கூறியதாவது: 'மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி துவங்கி எட்டு ஆண்டுகள் முடிந்து விட்டன; இனிமேல் ஸ்திர நிலை ஏற்படுத்துவது சிறப்பாக இருக்கும். கட்சி முழுவதும், இராணுவம் முழுவதும் ஒன்றுபட வேண்டும்' 'ஸ்திரமும் ஐக்கியமும் கொண்டு வருவது சிறப்பானது' ஆனரல் 'நால்வர் கும்பல்' நாசம் விளை விக்கவும் சீர்குலைக்கவும் பகீரத முயற்சி எடுத்தது. இப்பொழுது அந்தக் கும்பல் தூக்கியெறியப்பட்டு விட்டது. நாடு முழுவதும் ஸ்தி-ரமும் ஐக்கியமும் அடைந்து பெரும் ஒழுங்கமைவை தலைவர் மாவோவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப சாதிப்பது நமக்கு இயன்-றுள்ளது. இவ்வாறாக 'நால்வர் கும்பலை' ஒழித்துக் கட்டியதா னது பதினொரு ஆண்டுகளாக நடந்து வந்த மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

வரப்பட்டுள்ளதைக் குறிக்கிறது.

''ஸ்திரமும், ஐக்கியமும் என்பது வர்க்கப் போராட்டத்தை விட்டொழிப்பதாகி விடாது. முதல் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தது எந்த விதத்திலும் வர்க்கப் போராட்டம் முடிவுக்கு வந்து விட்டதாகவோ, அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது முடிவுக்கு வந்து விட்டதாகவோ பொருள்படாது. சோசலிச வரலாற்றுக் காலம் முழுவதும் இரு வர்க்கங்களுக்கு, பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டமும், இரு பாதைகளுக்கும்—சோசலிசம் மற்றும் முதலாளித்துவப் பாதைகள்—இடையிலான போராட்டமும் தொடர்ந்து நிலவுகின்றன. இப்போராட்டம் நீண்டு நெடியதாகவும் வேதனை மிக்கதாகவும் சில வேளைகளில் மிக மிகக் கூர்மையானதாகவும் இருக்கும். கலாச்சாரப் புரட்சியின் இயல்புடைய அரசியல் புரட்சிகள் எதிர்காலத்தில் பலமுறை நடக்கும். நாம் தலைவர் மாவோவின் போதனைகளைப் பின்பற்றி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து இறுதிவரை நடத்த வேண்டும். படிப்படியாக முதலாளித்துவ வர்க்கத்தையும் பிற சுரண்டும் வர்க்கங்களையும் இல்லாமற் செய்ய வேண்டும்; முதலாளித்துவத்தின் மீது சோசலிசத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டும். கடைசியாக நமது இறுதி இலட்சியமான பொதுவுடைமையை அடைய வேண்டும்'' (11வது காங்கிரசு ஆவணங்கள், பக். 51-52)

இந்தச் சரியான பாதையைப் பின்பற்றி கட்சியின் பதினோராவது காங்கிரசு பின்வருமாறு தனது அரசியல் நடத்தையையும் உடனடி எதிர்கால திட்டத்தையும் வகுத்துக் கொண்டது:

''முதலாவது மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வந்ததானது நமது நாட்டின் சோசலிசப் புரட்சியிலும், சோசலிச நிர்மாணத்திலும் ஒரு புதிய வளர்ச்சிக் காலத்தைத் துவக்கியுள்ளது. இந்த சிக்கலான தருணத்தில் மத்தியக் கமிட்டி யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்தமுடிவை எடுத்துள்ளது. வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணியை இறுகப் பற்றுவது, நாட்டை ஒன்றாக நடத்திச் செல்வது; அதாவது, ஸ்திரத்தையும், ஐக்கியத்தையும் சாதிப்பது; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பலப்படுத்துவது; மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சாதனைகளை கெட்டிப்படுத்துவது, விரிவுபடுத்துவது என்பதே அது.



படிப்பகம்

www.padippakam.com

இரு வர்க்கங்களுக்கும், இரு பாதைகளுக்கும் இடையிலான கூர்மையான மோதலின் மத்தியிலேயே இவற்றை நாம் ஆற்ற வேண்டும். நாடு முழுவதும் மாபெரும் ஒழுங்கமை வைக் கொண்டு வருவதற்காக இவற்றை நாம் செய்ய வேண்டும்'' (ஷ ஆவணங்கள், பக்கம் 53)

சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கின் விதிகளின் படியும் சீனத்தின் அன்றைய யதார்த்த நிலைமைகளுக்கேற்பவும் இரு மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சிகளின் இடைப் பட்ட காலத்தில், ஒப்பு நோக்கில் தற்காலிகமானதும் நீண்டகால நோக்கில் இரண்டாம் பட்சமானதும் ஆகிய காலக் கட்டத்தில் பாட்-டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பலப்படுத்தவும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சாதனைகளை உறுதிப்படுத்தவும் விரிவாக்கவும் இத்தகு தீர்மானம் அவசியமானதே. இந்த வகையில் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் பதினோராவது காங்கிரசு மிகச் சரியான முடிவுகளையே எடுத்திருக்கிறது. ஆனால் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மறுக்க முடியாத பொதுவிதி என்ன வென்றால், ஒவ்வொரு முறையும் இடது தீவிரவாதத்திற்கு எதி-ராகப் போராடும் போதும் அது முறியடிக்கப்படும் போதும் வலது சந்தர்ப்பவாத அபாயம் தலைதூக்குகிறது. அதே போன்று வலது சந்தர்ப்பவாதத்திற்கெதிராகப் போராடும் போதும் முறியடிக்கப் படும் போதும் இடது சந்தர்ப்பவாத அபாயம் தலைதூக்குகிறது. நமது நாட்டில் நாம் பார்க்கவில்லையா? திரிபுவாத, நவீன திரிபு வாத போக்குகளை முறியடித்த போது சாருவின் இடது சந்தர்ப்ப வாதமும், சாருவின் இடது சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்-டத்தின் போது வலது சந்தர்ப்பவாதமும் தலைதூக்கவில்லையா? இந்த அபாயங்களுக்கு எதிராக பாட்டாளி வர்க்கக் கட்சி உறுதியாக நின்று விழிப்போடிருந்து போராட வேண்டும்,

வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணியை இறுகப்பற்றுவது, நாடெங்கும் மாபெரும் ஒழுங்கமைவைக் கொண்டு வருவது என்ற யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவை சீனப் பொது-வுடைக் கட்சியின் பதினோராவது காங்கிரசு முன் வைத்தது. நாடெங்கும் மாபெரும் ஒழுங்கமைவைக் கொண்டுவர எட்டுத் தேவைகளைப் பிரதானப் போராடும் கடமைகளாக அது முன்னிறுத்-தியது. நால்வர் கும்பலை அம்பலப்படுத்தி விமர் சிக்கும் மாபெரும் போராட்டத்தை இறுதிவரை நடத்துவது இதுவே முதலாவது தேவையாகவும் வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணியாகவும், இரண்டு வர்க்கங்கள், இரண்டு பாதைகளுக்கிடை-யிலான போராட்டமாகவும் முன்வைக்கப்பட்டது. இத்துடன், இரண்டாவதாக, கட்சியைக் கெட்டிப்படுத்துவதும், தவறுகளைத்



படிப்பகம்

www.padippakam.com

திருத்துவதும் கட்சி கட்டுவதை பலப்படுத்துவதும் என்பவைகளில் சிறப்பாக வேலை செய்யவேண்டும்; மூன்றாவதாக, கட்சியின் எல்லா மட்டங்களிலும் உள்ள தலைமை உறுப்புகளைக் கெட்டிப்படுத்துவதும் கட்டியமைப்பதும் என்பதிலே சிறப்பாக வேலை செய்ய வேண்டும்; நான்காவதாக, புரட்சியை இறுகப்பற்றி, உற்பத்தியை முன்னேற்றி தேசியப் பொருளாதாரத்தை முன் தள்ள வேண்டும்; ஐந்தாவதாக, கலாச்சாரம், கல்வி ஆகிய துறைகளில் புரட்சியில் வெற்றியீட்டி சோசலிசக் கலாச்சாரத்தையும் கல்வியையும் வளர்க்க வேண்டும். ஆறாவதாக, மக்களது அரசு அமைப்பை பலப்படுத்த வேண்டும்; ஏழாவதாக, ஜனநாயகத்தை முன்னேற்றவும், ஜனநாயக மத்தியத்துவத்தை பலப்படுத்தவும் வேண்டும்; எட்டாவதாக முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொள்வதும் அனைத்தும் தழுவிய ஏற்பாடும் என்ற கொள்கையை அமுலாக்க வேண்டும்.

வர்க்கப் போராட்டத்தின் கேந்திரமான கண்ணியை இறுகப் பற்றுவது மற்றும் நாடெங்கும் மாபெரும் ஒழுங்கமைவைக் கொண்டு வருவது என்ற யுத்த தந்திர முக்கியத்துவம் வாய்ந்த முடிவை அமுலாக்க வகுக்கப்பட்ட எட்டு வேலைகளையும் அமுலாக்குவதற்கு மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் அடிப்படையிலான வழிகாட்டுதல்களையும் கொள்கைகளையும் பதினோராவது காங்கிரசு முன் வைத்தது. ஆனால் அவற்றை அமுலாக்குவதற்கான போராட்டத்தினை கபட வேடதாரியும், கலவை வாதியும், கட்சி விரோத எதிர்ப் புரட்சித் திரிபுவாதியுமான தெங் சியௌ பிங்கும் அவரது கும்பலும் திசைதிருப்பி எடுத்துச் சென்று கட்சியின் பதினோராவது காங்கிரசின் எல்லா சரியான முடிவுகளையும்,கட்சியின் அடிப்படை பாட்டாளி வர்க்கப் பாதையையும், எல்லாவற்றுக்கும் மேலாக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளையும் மாசேதுங் சிந்தனையையும் கூட திருத்தி மாற்றி எழுதுவதில் வெற்றி பெற்று விட்டது. குறிப்பாக பதினோராவது மத்தியக் கமிட்டியின் மூன்றாவது பிளீனத் தொடர் மற்றும் தேசிய மக்கள் காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடரிலிருந்தும் கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தையும் தலைமையையும் தெங் சியௌ பிங் கும்பல் கைப்பற்றியுள்ளது.

கட்சி விரோத எதிர்ப் புரட்சி திரிபுவாதப் பாதையை முன் தள்ளவும், கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தைக் கைப்பற்றவும், முதலாளித்துவ மீட்சிக்குமான நடத்தும் எதிர்ப் புரட்சி மோசடிகள் அனைத்தையும் கட்சியின் பதினோராவது காங்கிரசின் பெயராலேயே தெங் கும்பல் நடத்துகிறது. இந்த துரோகத்தனமான மோசடிகளையெல்லாம் நியாயப்படுத்த பதினோராவது காங்கிரசு பயன்படுத்தியுள்ள மாவோவின் சொற்றொடர்களான 'மன விலங்குகளிலிருந்து விடுதலை பெறுவது', 'பொதுவான அம்சங்களை நாடி பெரும்பான்மையுடன் ஐக்கியப்படும்', 'தவறு கண்ட



படிப்பகம்

www.padippakam.com

போது திருந்துக', 'யதார்த்த நிலவரங்களிலிருந்து உண்மையை நாடு', 'எல்லா நேர்முறைக் காரணிகளையும் பயன்படுத்து' ஆகிய வற்றை அதன் சாராம்சத்திலிருந்து குறிப்பாக வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து பிரித்தெடுத்து—உண்மையில் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து பிரித்தெடுத்து முதலாளித்துவக் கண்ணோட்டத்துடன்—வியாக்கியானம் செய்கிறது.

* * *
* * *
* * *

படிப்பகம்

www.padippakam.com

# III

# மாசேதுங் சிந்தனை பற்றிய வரையறுப்பை தெங் கும்பல் கொச்சைப்படுத்துகிறது;

# குருஷ்சேவ்-பிரஷ்னேவ் கும்பலின் நவீன திரிபுவாதத்தை கொல்லைப்புற வழியாக கடத்தி வருகிறது.

மாசேதுங் சிந்தனை என்னும் சித்தாந்தத்தையே தெங் சியெள பிங் கும்பல் சிறுமைப்படுத்தி கொச்சைப்படுத்துவதுடன், அதிலிருந்து மாவோவைப் பிரித்தெடுக்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் மாவோ தவறிழைத்ததாகப் புணைந்துரைக்கிறது. ''சீனப் புரட்சியில் பிரயோகித்து வளர்த்தெடுக்கப் பட்டது என்கிற முறையிலான மார்க்சிய—லெனினியமே மாசேதுங் சிந்தனை; மார்க்சிய—லெனினியத்தின் சர்வ வியாபகமான உண்மையை சீனத்தின் பருண்மையான நிலைமைகளுடன் பொருத்தியதன் விளைவு அது. தோழர் மாவோ ஒரு மாபெரும் மார்க்சியவாதி; ஒரு மாபெரும் புரட்சியாளர்; மற்றும் யுத்த தந்திரவாதி. சீனப் பொதுவுடமைக் கட்சியைத் தோற்றுவிப்பதிலும் எமது புதிய ஜனநாயகப் புரட்சியை வளர்ப்பதிலும் ஆரம்ப காலத்தில் மிக முக்கியமான பங்களிப்பு செய்தார். 1927 மாபெரும் புரட்சி தோல்வியுற்ற பிறகு மிகவும் இடர்ப்பாடான நிலைமைகளின்போது ஒரு சரஞ்

படிப்பகம்

www.padippakam.com

சரமான சீனப் புரட்சி பற்றிய அத்தியாவசியமான பிரச்சனைகளை அவர் ஆக்கப்பூர்வமாகத் தீர்த்தார். அதற்கான சரியான பாதையைக் கண்டார். வெறுமனே புத்தகங்களிலிருந்து மட்டுமல்ல, சீனத்தின் யதார்த்தத்திலிருந்து தொடங்கி இதைச் செய்தார். அவரும் அவருடன் தோளோடு தோள் நின்ற தோழர்களும் மக்கள் படையைக் கட்டி, புரட்சிகர தளப்பிரதேசங்களை நிறுவி ஒரு நீண்ட கால யுத்தத்தை வழி நடத்தினர். தோழர் மாவோ தலைமையிலான கட்சி, மத்தியக் கமிட்டியின் தலைமையின் கீழ் முன்னேற்றத்திற்கான எமது எண்ணற்ற இடர்ப்பாடுகளையும் தடைகளையும் நாங்கள் கடந்தோம். உள்நாட்டு, அந்நிய நாட்டு எதிரிகளைத் தோற்கடித்து புதிய ஜனநாயகப் புரட்சியில் முழு வெற்றி ஈட்டினோம்; பிறகு சோசலிசப் புரட்சியிலும் நிர்மாணத்திலும் மிகப் பெரிய வெற்றிகளைச் சாதித்தோம். சீனப் புரட்சியில் மார்க்சிய—லெனினியத்தின் இந்த வளர்ச்சியை சீனக் கம்யூனிஸ்டுகளும் சீன மக்களுமாகிய நாங்கள் மாசேதுங் சிந்தனை என்றழைக்கிறோம். மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டுதலின் கீழ் எமது எல்லா வெற்றிகளும் சாதிக்கப்பட்டன என்று நாங்கள் நம்புகிறோம். அதுவின்றி புதிய சீனம் இன்றிருக்காது; வரலாற்று உண்மைக்கு இது மிகவும் பொருந்துவதாகும். அது சரி, மாசேதுங் சிந்தனை என்பது மாசேதுங்கின் சொந்த அறிவாற்றலின் மட்டுமான விளைபொருளல்ல; அவரது தோளோடு தோள் நின்ற தோழர்கள், கட்சி மற்றும் புரட்சிகர மக்களின் அறிவாற்றலின் விளைபொருளும் கூட ஆகும். அவர் ஒரு முறை அதைச் சுட்டிக் காட்டியது போல, 'கட்சி மற்றும் மக்களது கூட்டுத்துவப் போராட்டங்களிலிருந்து' அது தோன்றியது. சீனத்தின் புரட்சிகர போராட்டங்களிலும் ஒரு புதிய சமுதாயத்தை அது கட்டியமைப்பதிலும் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேல் குவிக்கப்பட்ட அனுபவத்தின் வடித்தெடுத்த படிவம் அது; சீனப் பொதுவுடமைக் கட்சியின் கூட்டுத்துவ அறிவாற்றலின் வடித்தெடுத்த படிவம். மாபெரும் சீனப் பொதுவுடமைக் கட்சியின், மாபெரும் சீன மக்களின் மிகவும் நட்புயர்வற்ற பிரதிநிதி தோழர் மாசேதுங்; அவரது அழிவற்ற பங்களிப்புகளை சீன மக்கள் எப்பொழுதும் நினைவில் கொள்வர்; மாசேதுங் சிந்தனை என்னும் விஞ்ஞானக் கட்டமைவை தீர்மானகரமாகக் காத்து வளர்ப்பர்''. என்று 11வது மத்தியக்கமிட்டியின் நான்காவது பிளீனத்தில் நிறைவேற்றப்பட்ட சீன மக்கள் குடியரசின் முப்பதாண்டு நிறைவு விழா உரை கூறுகிறது. (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண், 40, பக்கம் 8)

மாசேதுங் சிந்தனை, அதன் சர்வ வியாபகத் தன்மை மற்றும் மாவோவின் பங்களிப்பு குறித்து மேற்கண்டவாறு புதிய வியாக்கியானம் மற்றும் வரையறை அளிப்பதன் மூலம் தெங் சியௌ பிங் கும்பல் மாசேதுங் சிந்தனையை உண்மையில் காத்து வளர்க்கப் போவதில்லை; ஆழ குழிதோண்டிப் புதைக்கப் போகிறது; அதைச்



படிப்பகம்

www.padippakam.com

சிதைத்து வீரியத்தை வெளியேற்றப் போகிறது; மாசேதுங்கின் மகத்தான பங்களிப்புகளை ஏற்றிப் போற்றவில்லை; சிறுமைப்படுத்துகிறது.

மாசேதுங் சிந்தனை அதன் சர்வவியாபகத் தன்மை மற்றும் மாவோவின் பங்களிப்பு ஆகியன குறித்து சீனப் பொதுவுடைமைக் கட்சியின் 11 வது காங்கிரசினுடைய அரசியல் தீர்மானத்தின் பின் வரும் பகுதிகள் தெளிவாக வரையறுக்கின்றன:

''ஒரு அரை நூற்றாண்டுக்கு மேலாக கட்சிக்குள் இடது மற்றும்வலது சந்தர்ப்பவாதங்களுக்கெதிராக சரியான பாதைக்கான கூர்மையான சிக்கலான போராட்டங்களில் பொருதிய அதே சமயம், எமது கட்சி, எமது படை மற்றும் எமது நாட்டின் அனைத்து தேசிய இனங்களின் மக்களையும் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் தரகு முதலாளித்துவத்திற்கெதிரான கடும் போராட்ட புரட்சிகர யுத்தங்களின் மூலம் புதிய ஜனநாயகப் புரட்சியில் முழுவெற்றிக்கு தலைவர் மாவோ வழி நடத்தினார்; பிறகு பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் திரும்பத் திரும்பவும் மூர்க்கத்தலமாகவும் நடந்த பலப்பரிட்சை காணும் மோதல்களின் ஊடாகவும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியினூடாகவும் எமது மாபெரும் வெற்றிகளிலும் அவர் வழி நடத்தினார். தலைவர் மாவோ மாபெரும் புகழ்மிக்க, சரியான சீனப் பொதுவுடமைக் கட்சியைத் தோற்றுவித்து பேணிவளர்த்தார்; வீரமிகு மக்கள் விடுதலைப் படையை உருவாக்கி எஃகுறுதிப்படுத்தினார்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தாலான ஒரு புதிய சோசலிச சீனத்தை தோற்றுவித்து கட்டி வளர்த்தார். தலைவர் மாவோவின் தலைமை மற்றும் அவரது புரட்சிகரப் பாதை ஆகியவற்றால் தான் எமது வெற்றிகளும் கிட்டின என்பதை ஒர் அரை நூற்றாண்டுக்கும் மேலான சீனப் புரட்சியின் வரலாறு சித்தரிக்கிறது. சீனமக்கள் புரட்சியின் வெற்றிப் பதாகை தலைவர் மாவோவின் பதாகை.

''நிகழ்காலத்திய சர்வதேசியப் பொதுவுடமை இயக்கத்தில், சோவியத் திரிபுவாத ஓடுகாலிக் கும்பலை அதன் மையமாகக் கொண்டிருக்கும் நவீனதிரிபுவாதத்திற்கெதிரான மாபெரும்போராட்டத்தை ஒரு பூரண பொருள் முதல்வாதியாக சளையாத புரட்சிகர உணர்வோடு பொருதி நடத்தினார். இவ்வாறு ஏகாதிபத்தியம் மற்றும் மேலாதிக்கத்திற்கெதிரான அனைத்து நாடுகளது மக்களின் இலட்சியத்திற்கும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்கும் தீவிரமான வளர்ச்சிக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்தார். அதன் விளைவாக, உலகமெங்குமுள்ள புரட்சிகர மக்கள் மற்றும் உண்மையான மார்க்சிய-லெனினியவாதிகளின் மரியாதையையும் அன்பையும் வென்றார். உலக மக்களின் புரட்சிகர வெற்றியின்



படிப்பகம்

www.padippakam.com

பதாகையும் அதே போன்று மாசேதுங் சிந்தனையின் பதாகை ஆகும்.

''நமது காலத்திய மிக மிகப் பெரும் மார்க்சியவாதி மாவோ. சீனப் புரட்சியின் பருண்மையான நடைமுறை மற்றும் உலகப் புரட்சி ஆகியவற்றோடு மார்க்சிய—லெனினியத்தின் சர்வவியாபகமான உண்மையை இணைத்தார்; மார்க்சிய-லெனினியத்தை வரித்துக் கொண்டு பேணிக்காத்தார்; தத்துவம், அரசியல், பொருளாதாரம், விஞ்ஞான சோசலிசம் ஆகிய துறைகளில் மார்க்சிய-லெனினியத்தை வளர்த்தெடுத்தார். சோசலிச காலகட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது என்ற கிரம முறையான கோட்பாடு மார்க்சியத்திற்கு தலைவர் மாவோவின் மிக மிகப் பெரும் பங்களிப்பாகும். புதிய ஜனநாயகப் புரட்சி, சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தில் சீனமக்களின் கலங்பரை விளக்கமாக மாசேதுங் சிந்தனை இருந்தது; இருந்து வருகிறது; ஏகாதிபத்தியம், சமூக ஏகாதிபத்தியம் மற்றும் அனைத்து பிற்போக்குவாதிகளுக்கும் எதிரான அவர்களது போராட்டத்தில் உலக மக்களுக்கு அது ஒரு சக்தி வாய்ந்த சித்தாந்த ஆயுதமாகும்; திரிபுவாதத்திற்கெதிராகவும், வரட்டுத்தத்துவம் மற்றும் அனுபவ வாதத்திற்கெதிராகவுமான அவர்களது போராட்டத்தில் கம்யூனிஸ்டுகளுக்கு அது ஒரு சக்தி வாய்ந்த சித்தாந்த ஆயுதமாகும். மாசேதுங் சிந்தனை மார்க்சிய-லெனினிய செல்வ மாளிகையை வளப்படுத்தும் ஒரு புதிய சேர்ப்பாகும்; அது நமது சகாப்தத்துக்கு தலைவர் மாவோவின் மகத்தான விலைமதிப்பற்ற சொத்தாகும்.

''சீனமக்கள், பாட்டாளி வர்க்கம் மற்றும் உலகப் புரட்சிகர மக்களுடைய நன்மைக்காக புரட்சியின் கோட்பாடு மற்றும் நடைமுறைக்கு தலைவர் மாவோவின் நினைவுச் சின்னமாகிய பங்களிப்புகள் அழிவற்றவை''

(11 வது காங்கிரசு ஆவணங்கள், பக்கம் 5,6)

சீனப் பொதுவுடைமைக் கட்சியின் 11 வது காங்சிரசின் அரசியல் தீர்மானம் சித்தரித்த மேற்கண்ட உண்மைகளை தெங் சியெளபிங் கும்பல் ஏன் திரித்துப் புரட்டி சிறுமைப்படுத்துகிறது? அதே அரசியல் தீர்மானம் மேற்கொண்ட பின்வரும் உறுதிமொழிகளுக்கு துரோகமிழைக்கத்தான்:

*''தலைவர் மாவோவின் மகத்தான பதாகையை நாம் உயர்த்திப் பிடித்து நாம் காக்க வேண்டும். இது அனைத்துக் கட்சியின், அனைத்துப் படையின், எமது நாட்டின அனைத்து தேசிய இனமக்களின் புனிதமான கடமை; போராட்டத்தில் ஐக்கியப்படவும் புரட்சியை தொடர்ந்து நடத்தவும் அரசியல் அடிப்படை; எமது சோச*



படிப்பகம்

www.padippakam.com

-லிச இலட்சியத்தையும், சர்வ தேசியப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்தையும் வெற்றிகரமாக முன்னடத்துவதற்கான உத்திரவாதம். இந்தக் கடமையை நமக்கு நாமாக எடுத்துக் கொள்வது மட்டுமல்ல, இனி வரும் தலைமுறைகளும் அவ்வாறு செய்யும்படி நாம் போதிக்க வேண்டும். எமது அரிய பாரம்பரியமாக தலைவர் மாவோவின் மகத்தான பதாகையை போற்றி வளர்க்க வேண்டும்; தலைமுறை தலைமுறைக்கும் மாற்-றிக் கொடுக்க வேண்டும்,''

(11வது காங்கிரசு ஆவணங்கள், பக்கம் 7)

இப்புனிதமான கடமைகளைக் காற்றில் பறக்க விட்டுத் துரோகமிழைக்கும் வகையில் மாசேதுங் சிந்தனை பற்றிய வரையறுப்பு, அதன் சர்வவியாபகத் தன்மை பற்றும் மாவோவின் மகத்தான பங்களிப்புகள் பற்றிய 11வது காங்கிரசின் நிலைப்பாடுகளை தெங் சுயியள பிங் கும்பல மறுதலிப்பது தற்செயலானது அல்ல. அனைத்து நாட்டு மக்களின் புரட்சிகர இலட்சியத்திற்காகவும், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்காகவும் சோவியத் திரிபு வாத ஓடுகால கும்பலை மையமாகக் கொண்டிருக்கும் நவீன திரிபு வாதத்திற்கெதிரான போராட்டங்களில் மாவோவின் மகத்தான பங்களிப்புகள் மற்றும் மாசேதுங் சித்தனையின் சர்வவியாபகத் தன்மையை மறுதலிப்பதன் மூலம் குருஷ்சேவ்—பிரஸ்நேவ் கும்பலின் 'சமாதான சக வாழ்வு', 'அமைதியான போட்டி', 'அமைதி வழி மாற்றம்' என்ற நவீன திருத்தல்வாதத்தினை கொல்லைப்புற வாயிலாக புகுத்துவதாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து நடத்துவது பற்றிய மாவோவின் கோட்பாடுகளை மறுதலிப்பதன் மூலம் மகத்தான பாட்டாளி வர்க்-கக் கலாச்சாரப் புரட்சியின் மிகச் சரியான முடிவுகளைத் திருத்தி மாற்றுவது, சோசலிச காலகட்டம் முழுவதற்குமான மாவோவின் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பாதையைக் கைவிடுவது, இறுதியில் கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றி சீனத்தில் முதலாளித்துவத்தை மீட்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. லியு—தெங் கும்பலின் கடந்தகால நடவடிக்கைகள் மட்டுமல்ல, நிக கால நடவடிக்கைகளும் இதையே காட்டுகின்-றன. கண்ணிருந்தும் குருடராயிராத எவரும் இதை அறிய முடியும். ஏனெனில் சீனத்துக்கு வெளியிலிருந்து லியு—தெங் கும்பலின் எதிர்ப் புரட்சித் திரிபுவாதத்தை நேரடியாகவோ அல்லது மையவாத நிலையெடுத்து மறைமுகமாகவோ ஆதரிப்பவர்களைப் போலன்றி அது தன்னை அப்பட்டமாக இனங்காட்டிக் கொண்டு விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# 1) சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய பிரச்சினைகளில்.......

சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் குறித்து ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் லியு—தெங் கும்பல் முன் தள்ளிய அரசியல், பொருளாதாரம், சமுதாயம், சித்தாந்தம் மற்றும் கலாச்சாரம் ஆகிய சகல துறைகளிலுமான அதன் கொள்கைகளும் நடவடிக்கைகளும் சரியானவை என்றும், விஞ்ஞான பூர்வமான மார்க்சியம் என்றும் தற்போதும் நியாயப்படுத்துகிறது. இவற்றை மீண்டும் அமுலாக்கும் பொருட்டு மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போதும் அதற்கு முன்னும் எடுக்கப்பட்ட எல்லா சரியான முடிவுகளையும் மாற்றி வருகின்றது. அதற்குப் பொருத்தமாக எட்டாவது கட்சிப் பேரவையின் போதும் அதன் பின்னரும் லியு—தெங் கும்பல் முன்வைத்த சந்தர்ப்பவாதத்திற்கெதிரான போராட்டங்கள் அனைத்தும் தவறானவை; மார்க்சியத்தையும் திரிபுவாதத்தையும் போட்டுக் குழப்பிக் கொண்டதால் எழுந்தவை என்று கூறுகிறது.

"1956ல் சோவியத் கட்சியின் 20வது காங்கிரசில் குருஷ்சேவ் முற்றாக ஸ்டாலினை மறுத்துரைத்து நிராகரித்ததானது சர்வதேசியப் பொதுவுடமை இயக்கத்தில் படுகுழப்பத்துக்குக் காரணமாக இருந்தது. இதனால் நமது கட்சியும் தோழர் மாசேதுங்கும் திரிபுவாதத்தைத் தடுப்பது மற்றும் எதிர்த்துத் தாக்குவது என்ற பிரச்சினையைக் கொண்டுவந்தார்கள். தோழர் யே ஜியன்யிங் அதிலிருந்து பாடங்களைத் தொகுத்தபோது குறிப்பிட்டவாறு, கலாச்சாரப் புரட்சி, திரிபுவாதத்தைத் தடுப்பது மற்றும் எதிர்த்துத் தாக்குவது என்ற நோக்கத்தோடு தொடுக்கப்பட்டது; ஆனால் அப்பொழுது திரிபுவாதத்தைப் பற்றி மிகக் கறாரான விஞ்ஞான பூர்வமான விளக்கம் தரப்படவில்லை. அதற்கு முன் பிரசுரிக்கப்பட்ட வீச்சுமிக்க சில வாதப் பிரதிவாதங்கள், திரிபுவாதத்தின் குணாம்சங்கள் மற்றும் ஆணிவேரான காரணம் பற்றி ஒரு கறாரற்ற சித்தரிப்பைக் கொடுத்தன; அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு சமூக உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்ற மார்க்சிய கண்ணோட்டம் திரிபுவாதமென்று தவறாக இந்தச் சில கட்டுரைகள் எடுத்துக் கொண்டன. மேலும் கலாச்சாரப் புரட்சியின் சமயத்தில், இந்த தவறான கருத்தோட்டம், வர்க்கப் போராட்டம் குறித்த தவறான கணிப்போடு இணைந்து கட்சிக்குள் திரிபுவாத அபாயம் பற்றிய ஒரு யதார்த்தத்துக்கு மாறான மதிப்பீடாக வளர்ந்தது. மேலும் இன்னும் பெரிய முட்டாள்தனமானது கட்சி மத்தியக் கமிட்டியின் சரியான பாதையை அமுலாக்கிய எல்லா மட்டத்திலும் இருந்த



படிப்பகம்

www.padippakam.com

தலைமை அணிகளை நாக்குதலின் இலக்காகவும், ஒரு மாபெரும் மார்க்சியவாதியான தோழர் லியு செள சியை திரிபுவாதத்தின் கர்த்தாவாகவும் போதகராகவும் கருதியதாகும். இந்தத் தவறைத் தான் பயன்படுத்திக் கொண்டு லின் பியௌ மற்றும் நால்வர் கும்பல் மார்க்சிய விரோத, அதி இடதுசாரி பாதையை முன் தள்ளினர்; வேண்டுமென்றே 'லியு செள சியின் எதிர்ப்புரட்சி திரிபுவாதப் பாதையை' விமர்சித்தனர்; கட்சி முழுவதும் அனைத்து மட்டங்களிலுமுள்ள அணிகளை இட்டுக்கட்டினர்; மொத்த மக்கள் தொகையினரையும் அவதிக்குள்ளாக்கினர்; இது மார்க்சியத்தை திரிபுவாதத்துடன் போட்டுக் குழப்புவதில் முடிந்தது.

''அப்படி என்னதான் 'லியு செள சியின் எதிர்ப்புரட்சி திரிபுவாதப் பாதை' உள்ளடக்கியிருந்ததாகக் கருதப்பட்டது? முதலாவதாக, சொல்லிக் கொள்ளப்படும் 'மடிந்து கொண்டிருக்கும் வர்க்கப் போராட்டம் என்ற கோட்பாடு' மற்றும 'உற்பத்தி சக்திகளின் ஈடு இணையற்ற முக்கியத்துவம் என்ற கோட்பாடு'—இவை இப்பாதையின் 'கோட்பாட்டு அடிப்படையாக' அமைந்திருந்தன என சொல்லப்பட்டன. உற்பத்திச் சாதனங்களின் உடைமைமுறை அடிப்படையில் முழுமையாக சோசலிச மாற்றமடைந்த பிறகு தோழர் லியு செள சி செய்த உரைகளை முக்கியமாக இவை குறிக்கின்றன; மற்றும் சீனப் பொதுவுடமைக் கட்சியின் எட்டாவது தேசிய பேரவையின் 1956 இன் தீர்மானங்களில் மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கையில் உள்ள ஒரு பகுதியையும் முக்கியமாக இவை குறிக்கின்றன. இந்த உரைகளில் தோழர் மாவோ சொன்னார்: 'நிலப்பிரபுத்துவ வர்க்கம் துடைத்தெறியப்பட்டு விட்டது, முதலாளித்துவ வர்க்கமும் கூட துடைத்தெறியப்பட்டு விட்டது', 'உள் நாட்டில் பிரதான வர்க்கப் போராட்டம் அடிப்படையில் முடிக்கப்பட்டு விட்டது', 'நமது நாட்டில் யார் வெற்றி பெறுகிறார்கள் சோசலிசமா அல்லது முதலாளித்துவமா என்ற பிரச்சனை இப்பொழுது தீர்க்கப்பட்டு விட்டது'; இப்போதிருந்து அரசின் மிக முக்கியப் பணி சமூக வாழ்வை ஸ்தாபனப்படுத்துவது'; 'கட்சியின் பிரதானப் பணி எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு விரைவில் உற்பத்தி சக்திகளை வளர்ப்பது.........' ஒரு பகுதி தீர்மானம் கூறுகிறது: 'நமது நாட்டில் பிரதான முரண்பாடாக ஏற்கனவே இருப்பது, ஒரு முன்னேறிய தொழில் நாடாக கட்டியமைக்க வேண்டுமென்ற மக்களது கோரிக்கைக்கும், ஒரு பின் தங்கிய விவசாய நாடாக இருக்கும் யதார்த்தத்துக்கும் இடையிலானது; துரிதமான பொருளாதார. கலாச்சார தேவை என்ற மக்களது தேவைக்கும், அத்தேவையை சந்திப்பதற்கு இயலாத நமது தற்போதைய பொருளாதாரம் பற்றும் கலாச்சாரம் ஆகியவற்றுக்கும் இடையிலானது; கட்சியும் மக்களும் தற்போது எதிர்கொள்ளும் தலையாயப் பணி இம்முரண்பாட்டைத் தீர்க்கவும்



படிப்பகம்

www.padippakam.com

எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு விரைவில் ஒரு பின் தங்கிய விவசாய நாடாக இருப்பதிலிருந்து ஒரு முன்னேறிய தொழில் நாடாக சீனத்தை மாற்றுவதற்கும் எல்லா முயற்சிகளையும் ஒன்று செறிப்பதாகும்.

''அப்பொழுது நோக்கினாலும் சரி, அல்லது தற்போது நோக்கினாலும் சரி இந்த முக்கியமான நிலைப்பாடுகள் சரியானவை மற்றும் மார்க்சியமானவை. மேலும், அவை நிச்சயமாக வெறுமனே லியு செள சியின் தனிப்பட்ட கருத்துக்களை மட்டும் பிரதிநிதித்துப்படுத்தவில்லை என்று அழுத்தந்திருத்தமாக இங்கே சுட்டிக் காட்டப்பட வேண்டும். உற்பத்திச் சாதனங்களின் உடைமைமுறை சோசலிச மாற்றமடைவது அடிப்படையில் பூர்த்தியான பிறகு உள்நாட்டில் வர்க்க நிலைமை, சமுதாயத்திலுள்ள முக்கிய முரண்பாடு, கட்சியினுடைய வேலையின் தற்போதைய குவிமையம் ஆகியன குறித்து மாறிய நிலைமையின் ஒளியில் நமது கட்சி செய்த ஒரு புதிய தொகுப்பே அவை; அவை விஞ்ஞான பூர்வமான யதார்த்தத்துக்கு மிகவும் பொருத்தமான மற்றும் வரலாற்றின் சோதனைக்கு தாங்கி நிற்கக் கூடியதுமான மார்க்சிய முடிவு'' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 16. பக்கம் 19-20) என்று லியு செள சி முன்தள்ளிய அனைத்து வலது சந்தர்ப்பவாத திரிபுகளையும் தற்போதைய அவரது சீடரான தெங் சியெள பிங் கும்பல் நியாயப்படுத்துகிறது.

லியு செள சி — தெங் சியெள பிங் கும்பலை சீனத்து குருஷ்சேவ்-பிரஷ்நேவ் என்று மதிப்பீடு செய்வது சாலப் பொருத்தமானது தான். ஏனெனில் சோவியத் யூனியனில் முதலாளித்துவ மீட்சியின் போது குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பல் முன்வைத்த அதே எதிர்ப் புரட்சித் திரிபுவாதங்களையே வேறு வடிவத்தில் அதன் சீனத்து சக-பாடி முன்வைக்கிறது. எனவேதான், ஐம்பதுகளின் இறுதியிலும், அறுபதுகளின் ஆரம்பத்திலும் குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பலின் நவீன திரிபுவாதத்திற்கெதிராக மார்க்சிய-லெனினியத்தைக் காத்து வளர்ப்பதற்காக நடந்த போராட்டத்தையும் லியு—தெங் கும்பல் இழிவுபடுத்துகிறது. சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் குறித்து சோவியத் நவீன திரிபுவாதங்களுக்கெதிரான வாதப்பிரதிவாதங்களில் திரிபுவாதம் பற்றி கறாரான வரையறுப்புகளை முன்வைக்கவில்லை; நவீன திரிபுவாதத்திற்கெதிராக நடந்த போராட்டத்தில் இழைத்த தவறின் தொடர்ச்சியாகவே சீனத்திலும் திரிபுவாதத்தைத் தடுக்கவும் எதிர்த்து முறியடிக்கவுமான நோக்கத்துடன் தொடங்கப்பட்ட கலாச்சாரப் புரட்சியிலும் இடது சந்தர்ப்பவாதத் தவறுகள் நேர்ந்ததாக லியு—தெங் கும்பல் கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

1956-ல் நடந்த சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் 20-வது காங்கிரசு - ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு முதல் காங்கிரசு-அக்கட்சியின் வரலாற்றில் போக்கில் ஒரு புதிய தீர்க்கமான முறிவைக் குறித்தது. அது மார்க்சிய-லெனினிய அடிப்படை நிலைப்பாடுகளுக்கு சவால் விடுவதாக இருந்தது. ஸ்டாலினும் உலகம் முழுவதுமிருந்த அனைத்துப் பொதுவுடைமைப் புரட்சியாளர்களும் உயர்த்திப் பிடித்து, போராடி அமுல்படுத்திய புரட்சிகர கருத்துக்கள் அனைத்தையும் நிராகரிப்பதாக இருந்தது. அப்போதிருந்து குருஷ்சேவால் தலைமை தாங்கப்பட்ட நவீன திரிபுவாதத்திற்கெதிராக சர்வதேசியப் பொது-வுடைமை இயக்கத்தில் மிகப்பெரும் சித்தாந்தப் போராட்டம் எழுந்தது. பொதுவுடைமை உலகம் முழுவதும், பொதுவுடைமை இயக்-கம் முழுவதும் பற்றிப்படர்ந்த மிகமோசமான நவீனதிரிபுவாதத்திற்-கெதிராக, 'ஆக்கபூர்வமான மார்க்சிய-லெனினியம்' என்று பவனி வந்த கோட்பாடாகிய 'சமாதன சகவாழ்வு', 'சமாதானப் போட்டி' மற்றும் 'அமைதி வழி மாற்றம்' ஆகியவற்றுக்கெதிராக, சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் கண்ணோட்டத்தை ஏற்க மறுப்பவர்களுக்கெதிராக, அதன் தலைமையின் வெளிப்படையான மிரட்டல்களுக்கெ-திராக மாவோவின் தலைமையில் சீனப் பொதுவுடைக்கட்சி புரட்சிகர மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடித்தது. பாட்டாளி வர்க்கம் மற்றும் சோசலிச இலட்சியத்திற்கு இழைக்கப்படும் துரோ-கத்தனத்துக்கு அடிபணிய மறுத்து அதன் விளைவுகளை வீரதீரமாக எதிர் கொண்டது. ஃபிரான்சின் மாரிஸ் தோரஸ், இத்தாலியின் டோக்லியாட்டி, சோவியத் திரிபுவாத தலைமை மற்றும் அவர்களது சகபயணிகளின் மார்க்சிய—லெனினிய விரோத வரையறுப்புகளுக்-கெதிராக புரட்சிகர கோட்பாடுகளை பேணிக்காத்து பல கட்டுரை-களை சீனப் பொதுவுடைக் கட்சி வெளியிட்டது. இவற்றின் தொடர்ச்சியாக '25 அம்சங்களை'க் கொண்ட 'சர்வதேசியப் பொது-வுடைமை இயக்கத்தின் பொதுப்பாதை குறித்து ஒரு பிரேரணை' என்ற பெயரில் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் கமிட்டி சோவியத் நவீனதிரிபுவாதிகளின் மத்தியக் கமிட்டிக்கு பதில் அளித்-தது. உலகநிலைமை மற்றும் பொதுவுடமை இயக்கம் குறித்து முதன்முதலாக இரத்தினச் சுருக்கமான, தெட்டத் தெளிவான, ஒன்று செறிந்த தனது அடிப்படை நிலைப்பாடுகளை அதில் தொகுத்-துளித்திருந்தது.

1963ல் '25 அம்சங்களை'க் கொண்ட 'பொதுப்பாதையை' பிர-சுரித்தபின் அதன் தொடர்ச்சியாக அவற்றை விரிவாக விளக்கும் ஒன்-பது விமர்சனக் கட்டுரைகளை சீனப் பொதுவுடமைக்கட்சி வெளி-யிட்டது. இவை அனைத்தும் திரிபுவாதத்தை எதிர்த்துத் தாக்குவது, நிகழ்கால உலகப் பிரச்சினைகளுக்கு மார்க்சிய-லெனினியத்-தின் புரட்சிகரமான கோட்பாடுகளைப் பிரயோகிப்பது, தேசிய, சர்



படிப்பகம்

www.padippakam.com

-வதேசிய பாட்டாளி வர்க்க இயக்கங்களை வழிநடத்துவது, சோசலி-சத்தின் சாதனைகளைக் கெட்டிப்படுத்துவது, பாட்டாளி வர்க்க சர்-வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வது ஆகியன குறித்து பருண்மையான வழிகாட்டுதல்கள் மற்றும் ஆய்வுரைகள் கொடுக்கின்றன. மார்க்சிய-லெனினிய கோட்பாடுகளை சிதைக்கும் திரிபுவாதத்திற்கெதிரான கூர்மையான தாக்குதல் ஆயுதங்களாகிய இவற்றை உலக முழுவதிலும் உள்ள பொதுவுடைப் புரட்சியாளர்கள் எல்லா வண்-ணத் திரிபுகளுக்கும் எதிராகவும் தேசிய சர்வதேசிய அரசியல், ஸ்தா-பனம் மற்றும் நடைமுறையில் அதன் வெளிப்பாடுகளுக்கு எதிராக-வும் ஏந்திப் போரிடத் தொடங்கினர். சுருங்கக் கூறின், பொதுவு-டமையாளர்களுக்கு உலகம் முழுவதுமுள்ள புரட்சியாளர்களுக்கு 'இப்பொதுப்பாதையும்' பிற ஆவணங்களும் சர்வதேசிய, தேசிய வழிகாட்டுதல்களாக இருந்து வருகின்றன, இவையே இந்திய திரிபுவாதிகள் மற்றும் நவீன திரிபுவாதிகளுக்கெதிராகவும் பொதுவுடைமை இயக்கத்தின் அணிகள் மற்றும் முன்வரிசையினர் விழிப்பு-ணர்வு பெறவும் போராடவும் பெருமளவு உதவின. ஆனால் நவீன திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தில் மாவோவும் சீனப் பொதுவுடைக் கட்சியும் இழைத்த தவறுகளும், திரிபுவாதம் பற்றிய கறாரற்ற வரையறுப்புகளின் தொடர்ச்சியாகவே மகத்தான பாட்-டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் தவறுகள் என்று லியு-தெங் கும்பல் கூறுகிறது.

சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் குறித்து, நவீன திரிபுவாதம் குறித்து சீனப் பொதுவுடைமைக் கட்சி பின்வரும் கறாரான வரையறுப்பைக் கொடுத்திருந்தது: ''பாட்டாளி வர்க்கப் புரட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கோட்பாடுகள் மார்க்சிய—லெனினியத்தின் சாரத்திரட்டாகும். புரட்சி உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டுமா அல்லது எதிர்க்கப்பட வேண்டுமா, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் உயர்த்திப் பிடிக்கப்பட வேண்டுமா அல்லது எதிர்க்கப்பட வேண்டுமா என்ற பிரச்சினைகள் மார்க்சிய—லெனினியத்திற்கும் எல்லா...ண்ண திரிபுக்கும் இடையிலான போராட்டத்தின் குவிமையமாக எப்பொழுதும் இருந்திருக்கின்றன; உலகெங்கும் உள்ள மார்க்சிய—லெனினியவாதிக-ளுக்கும் திரிபுவாதி குருஷ்சேவ் கும்பலுக்கும் இடையிலான போராட்டத்தின் குவிமையமாக தற்போது அவை இருக்கின்றன.

''சோவியத் யூனியனின் பொதுவுடமைக் கட்சியின் 22வது காங்கிரசில் 'சமாதான சக வாழ்வு', 'அமைதியான போட்டி' மற்-றும் 'அமைதி வழி மாற்றம்' ஆகிய அவர்களது எதிர்ப்புரட்சி கோட்பாடுகளை செழுமைப்படுத்திக் கொண்டது மட்டுமல்ல, சோவியத் யூனியனில் இனியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமில்லை



படிப்பகம்

www.padippakam.com

..றிவித்தாலும், 'அனைத்து மக்களின் அரசு' 'அனைத்து ...ன் கட்சி' என்ற மூடத்தனமான கோட்பாடுகளை முன்தள்ளி ...தாலும் திரிபுவாத குருஷ்சேவ் கும்பல் அவர்களது திரிபுவாதத்தை ஒரு முழுமையான கட்டமைவாக வளர்த்துள்ளார்கள்.

''சோவியத் யூனியனின் பொதுவுடைமைக் கட்சியின் 22 வது காங்கிரசில் திரிபுவாத குருஷ்சேவ் கும்பல் முன்வைத்த திட்டம் ஒரு போலிக் கம்யூனிசத் திட்டம்; பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கெதிரான ...தும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் பாட்டாளி வர்க்கக் கட்சி ஆகியவைகளை ஒழிப்பதற்கும் ஆன ஒரு திரிபுவாதத் திட்டம்.

''திரிபுவாத குருஷ்சேவ் கும்பல் 'அனைத்து மக்களின் அரசு' என்ற மா...வேடத்தின் பின்னே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒழித்துக் கட்டுகிறது; 'அனைத்து மக்களின் கட்சி' என்ற மாறுவேட...மணிந்து சோவியத் யூனியனின் பொதுவுடைமைக் கட்சியின் பாட்டாளி வர்க்கத் தன்மையை மாற்றுகிறது; 'முழு அளவு கம்யூனிச நிர்மாணம்' என்பதற்குப் பின்னே முதலாளித்துவ மீட்சிக்கு பாதை ...யமைக்கிறது''

— இவ்வாறு சோவியத் கட்சியின் மத்தியக் கமிட்டியின் திறந்த மடல் மீதான தனது விமர்சனத்தில் சீனப் பொதுவுடைமைக் கட்சி எழுதியுள்ளது. ('குருஷ்சேவின போலிக் கம்யூனிசமும் உலகத்திற்கு அதன் வரலாற்றுப் படிப்பினைகளும்', சீனப் பொதுவுடமைக் கட்சியின் ஒன்பதாவது விமர்சனக் கட்டுரை, 1964. 'சீனா விலகிப் போகிறதா?' என்ற நூலிலிருந்து, பக்கம் 50-51)

குருஷ்சேவ் கும்பலின் நவீன திரிபுவாதம் குறித்து இவ்வளவு கறாரான வரையறுப்பு இருந்தும், லியு—தெங் கும்பல் இதைக் கறாரற்ற வரையறுப்பிருந்ததாகக் கூறுகிறது. ''அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு சமூக உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்...டும் என்ற மார்க்சிய கண்ணோட்டத்தை திரிபுவாதமென்று இந்தச் சில கட்டுரைகள் எடுத்துக் கொண்டன'' என்று லியு—தெங் கும்பல் குறை கூறுகிறது. இப்பிரச்சினையில் நவீன திரிபுவாதத்தின் நிலைகுறித்து அதே விமர்சனக் கட்டுரையில் சீனப் பொதுவுடைமைக் கட்சி பின்வருமாறு கூறுகிறது: ''ஒரு 'அனைத்து மக்கள் கட்சி' பற்றி ஒரு பெரும் ஆர்ப்பரிப்பை செய்வதோடு நிற்கவில்லை; 'உற்பத்திக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்சியைக் கட்டுவதாகப்' பாவனை செய்வதன் மூலம் ஒரு தொழிற்சாலை கட்சி மற்றும் ஒரு 'விவசாயக் கட்சி' என்று கட்சியையும் கூட பிரிக்கிறது.

''திரிபுவாத குருஷ்சேவ் கும்பல் அவ்வாறு செய்தது ஏனென்றால், 'சோசலிசத்தின் கீழ் அரசியலின் மீது பொருளாதாரத்தின் முதன்மையானது' ஏனென்றால் 'கம்யூனிச நிர்மாணத்தின் முழுவதுமான போக்கினால் முன்வரிசைக்குத் தள்ளப்பட்டுள்ள பொருளாதார



படிப்பகம்

www.padippakam.com

ஸ்தாபனங்களின் ந...
மற்றும் உற்பத்திப் பிரச்சனைகளை கட்சி ஸ்தாபனங்களின் வேலை-
-டிக்கைகளது மையத்தில் வைக்கவும், 'அவர்களது எல்லா
யின் மூலைக் கல்லாக அவற்றை மாற்றவும் அவர்கள் விரும்புகின்
-றனர் என்று கூறுகின்றனர். குருஷேசேவ் சொன்னார், 'கட்சி
உறுப்புகளின் வேலையின் முக்கிய விஷயம் உற்பத்தி என்று நாங்-
கள் அடித்துச் சொல்கிறோம்'. மேலும் அதைவிட என்னவென்
றால் லெனினது கோட்பாடுகளுக்கு பொருத்தமாக நடப்பதாக
உரிமை கொண்டாடி இந்தக் கருத்துக்களை லெனின் மீது இட்டுக்
கட்டினர்.

''இருப்பினும், சோவியத் யூனியனது பொதுவுடைமைக் கட்
சியின் வரலாற்றோடு பரிச்சயமான எவரும் இவை லெனினிய
விரோதக் கருத்துக்கள், டிராட்ஸ்கி கொண்டிருந்த கருத்துக்கள் என்
பதையும் இவற்றிலிருந்து லெனினது கருத்துக்கள் முற்றிலும்
வேறானவை என்பதையும் அறிவர். இந்தப் பிரச்சினையிலும் கூட
குருஷ்சேவ் டிராட்ஸ்கியின் மதிப்புமிக்க சீடன்.

''டிராட்ஸ்கியையும், புகாரினையும் விமர்சித்து, லெனின்
சொன்னார்: பொருளாதாரத்தின் ஒன்று செறிந்த வெளிப்பாடு
அரசியல்.........பொருளாதாரத்தின் மீது அரசியல் முதன்மை
பெறாமல் இருக்க முடியாது. வேறு விதமாக வாதிப்பதன் பொருள்
மார்க்சியத்தின் அரிச்சுவடியை மறப்பதாகும்.

அவர் தொடர்ந்து சொன்னார்:

''.........விஷயத்திற்கு ஒரு பொருத்தமான அரசியல் அணுகுமுறை
யின்றி எடுத்துக் கொண்டு வர்க்கம் அதன் வர்க்க ஆட்சியை பரிபா-
லிக்க முடியாது; அதன் விளைவாக அதன் சொந்த உற்பத்திப் பிரச்-
சினைகளைத் தீர்க்க முடியாது'' (ஷை நூல் பக். 87-88)

—இவ்வாறு குருஷ்சேவ் கும்பலின் நவீன திரிபுவாதம் குறித்து
சீனப் பொதுவுடைமைக் கட்சி வரையுறுத்திருக்கிறது. ஐம்பதுகளின்
இறுதியிலும் அறுபதுகளின் ஆரம்பத்திலும் நடந்த சித்தாந்தப்
போராட்டத்தின்போது மேலும் ஆழமாகவும் விரிவாகவும் ஒவ்வொரு
பிரச்சினையிலும் அதன் குணாம்சங்களை அக்குவேறு ஆணிவேராக
பிரித்து, அலசி ஆராய்ந்து, சுட்டி வீழ்த்தியிருக்கிறது. நவீனத்
திரிபுவாதத்தின் ஆணிவேரான அடிப்படையையும் தோலுரித்துக்
காட்டியிருக்கிறது. இருப்பினும் குருஷ்சேவ் கும்பலின் நவீனத்
திரிபுவாதத்தை என் லியு-தெங் கும்பல் மறைமுகமாக ஆதரிக்கிறது;
அதற்கெதிரான போராட்டத்தைத் தடை கூறுகிறது. ...
திய சர்வதேசியப் பொதுவுடைமை இயக்கத்தில் சோவியத் ...
குழுவை மையமாகக் கொண்ட நவீன திரிபுவாதத்திற்கெதிரான



படிப்பகம்

www.padippakam.com

...வோடு போராடி ஏகாதிபத்தியம் மற்றும்
...ன அனைத்து நாடுகளது. மக்களது இலட்
...ட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்-
...அளித்த மாசேதுங் சிந்தனையின் இந்தப்
கும்பல் ஏன் மூடி மறைக்கிறது? சொந்த நாட்
...தொகுத்தும், சோவியத் ஓடுகாலிக் கும்பலின்
...மீட்சியின் எதிர்மறை அனுபவத்தைத் தொகுத்தும்
...க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்ந்து
என்ற மாசேதுங் சிந்தனையின் இந்தப் பகுதியை மறுத்
...காகத்தான்.

குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பலின் நவீன திரிபுவாதக் கோட்பாடுகளான 'சமாதான சக வாழ்வு', 'அமைதியான போட்டி', மற்றும் 'அமைதி வழி மாற்றம்' ஆகியவற்றை லியு—தெங் எதிர்ப்-புரட்சித் திரிபுவாதக் கும்பல் இன்னும் வெளிப்படையாக உயர்த்திப் பிடிக்கவில்லைதான். தற்போதைக்கு மூன்றுலகக் கோட்பாட்டை பெயரளவுக்காவது ஏற்றுள்ளது உண்மைதான். இருப்பினும் அதை அமுலாக்குவதற்கு துரும்பையும் எடுத்துப் போடாத நிலையில், குறுகிய தேசிய உணர்வில் மட்டுமே மூன்றுலகக் கோட்பாட்டை ஏற்கிறது. 'யூரோ-கம்யூனிசம்' எனப்படும் நவீன திருத்தல்வாதத்தை உயர்ந்த மட்டத்தில் பகிரங்கமாக ஆதரிப்பதும், அதன் மூல-வர்களான ஐரோப்பிய திரிபுவாதிகளை பகிரங்கமாக, அதிகாரபூர்வ பொதுவுடமைக் கட்சியினராக அங்கீகரித்திருப்பதும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கைவிட்டிருப்பதும், லியு—தெங் கும்பல் குருஷ்சேவின் நவீன திரிபுவாதத்தை மேலும் உயர்ந்த நிலையில் அப்பட்டமாக உயர்த்திப் பிடிக்கத் தயங்காது என்பதையே காட்டு-கின்றன.

அதிகார வர்க்க அரசு—முதலாளித்துவ அமைப்பு ஒன்றில் புதிய முதலாளித்துவ வர்க்கத்தை ஆளும் வர்க்கமாக நிறுவி முதலாளித்துவத்தை மீட்பதே குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பலின் நோக்கமாக இருந்தது. ஆனால் இவ்வாறு, இந்தச் சொற்களில் அது தனது கொள்கைகளை வெளிப்படையாகப் பிரகடனப்படுத்தவில்லை. மாறாக பெர்ன்ஸ்டின், காவுத்ஸ்கி ஆகியோரின் எடுத்துக்காட்டுகளைப் பின்பற்றி மார்க்சிய-லெனினியத்துக்கு ஒரு ஒருங்கிணைந்த கட்டமைவாக சரஞ்சரமான திருத்தங்கள் கொடுத்தனர். சோவியத் யூனியனில் இனியும் பகைமையான வர்க்கங்கள், பகைமையான வர்க்கமுரண்பாடுகள், பகைமையான வர்க்கப் போராட்-டங்கள் இல்லை; சோசலிச நிர்மாணம் பூர்த்தியாகி விட்டது—கம்யூனிசத்தின் முதலாவது கட்டத்தைக் கடந்தாகி விட்டது. கம்யூனிச நிர்மாணம் தொடங்கி விட்டது; இருபது ஆண்டுகளில் அதைச் சாதித்தாக வேண்டும் என்று குருஷ்சேவ்—பிரஸ்நேவ் கும்பல் பிரகடனப்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தியது. எனவே பாட்டாளி வர்
அவசியமில்லை, 'அனைத்து மக்களின்
மக்களின் கட்சி' என்ற மாற்றங்களைத்
கொண்டது. இதைத்தான் மார்க்சிய—லெ
மான பிரயோகம் என்று பீற்றிக் கொண்டது.

சீனத்தில் முதலாளித்துவ மீட்சியும், ஏகாதிபத்த
டைவுமே அதன் இறுதி நோக்கமெனினும், தனது மு
சோவியத் ஓடுகாலிக் கும்பலின் அதே வார்த்தைகளி
கும்பல் தனது எதிர்ப் புரட்சி திரிபுவாதத்தை முன்வைக்கவில்
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒழித்துக்கட்டுவத
'அனைத்து மக்களின் அரசாக' மாற்றுவதாக லியு—தெங் கும்
பிரகடனப்படுத்தவில்லைதான். ஆனால் ஒரு வர்க்கம் என்கிற ரீதி
யில் வர்க்க எதிரிகளுக்குக்கெதிரான சர்வாதிகாரம் அல்லவென்று
புதிய வியாக்கியானம் தருகிறது. 'அனைத்து மக்களின் கட்சி'
என்ற கோட்பாட்டை வெளிப்படையாக பிரகடனப்படுத்தவில்லை-
தான். ஆனால் சிறந்த வல்லுநர்கள், நிர்வாகிகள், சிறப்புத்
தன்மை வாய்ந்தவர்களை தலைமை அணிக்கு உயர்த்தி கட்சி
அமைப்பை நவீனமயமாக்குதலுக்கு பொருத்தமாக கட்டியமைக்கும்
கோட்பாட்டை அமுலாக்குகிறது. சீனத்தில் வர்க்கங்கள் இல்லை
-யென்று கூறவில்லை; மக்கள் பிரிவினர் மட்டுமே வர்க்கங்களாக
இருப்பதாகக் கூறுகிறது. வர்க்க முரண்பாடுகள் இல்லையென்று
கூறவில்லை; மக்கள் மத்தியிலான முரண்பாடுகளும், வர்க்கம் என்
-கிற ரீதியில் இல்லாத எதிரிக்கும் மக்களுக்குமிடையிலான முரண்
பாடுமே இருப்பதாக கூறுகிறது. வர்க்கப் போராட்டங்கள் இல்-
லையென்று கூறவில்லை; மக்கள் மத்தியிலான வர்க்கப் போராட்-
டங்களும், வர்க்கம் என்கிற ரீதியில் இல்லாத எதிரிக்கு எதிரான
வர்க்கப் போராட்டங்களும் இருப்பதாகக் கூறுகிறது.

ஆனால் சாரம்சத்தில் குருஷ்சேவ்-பிரஸ்நேவ் கும்பல் முன் வைத்த
அதே வாதங்களையும் அதே பிரச்சினைகளையும் தான் லியு-தெங்
கும்பல் முன் வைக்கிறது. அதாவது, உற்பத்திச் சாதனங்களில்
உடைமைமுறையில் சோசலிச மாற்றம் அடிப்படையில் பூர்த்தியான
-பின் சோசலிச சமுதாயத்தின் வர்க்க நிலைமைகளில் குணரீதியான
மாற்றம் நிகழ்ந்து விட்டதாகக் கூறுகின்றது 'மீன்களின் விழிகளை
முத்துக்களாக நம்பச் சொல்லும்' மதிப்பீடுகளை இன்றைய சோசலிச
சமுதாய வர்க்க நிலைமைகள் என்று அக்கும்பல் வாதிடுகின்றது
சொல்லிக் கொள்ளப்படும் வர்க்க நிலைமைகளிலான மாற்றத்தைக்
காட்டி சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் குறித்து
மார்க்சிய—லெனினிய—மாசேதுங் சிந்தனையைத் திரித்துப் புரட்டு
கிறது. மக்களையும், நாட்டையும், கட்சியையும் அதற்கேற்ப
வழி நடத்துவது வடக்கு நோக்கி ரதத்தை ஓட்டிக் கொண்டே தெற்கு
நோக்கிப் போவதாகக் கூறுவதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

''சோவியத் பத்திரிக்கைகளே இவர்களை 'சோவியத் முதலாளிகள்', 'புதிதாகப் பிறந்த தொழிலதிபர்கள்', 'தனியார் தொழிலதிபர்கள்', 'புதிதாக தோன்றிய குலக்குகள்', 'வர்த்தக சூதாடிகள், சுரண்டலாளர்கள்' என்றழைக்கின்றன. சோவியத் யூனியனில் பகைமையான வர்க்கங்கள் நிலவுகின்றன என்று அவர்கள் உறுதிப்படுத்தும்போது குருஷ்சேவ் கும்பல் தானே முரண்படவில்லையா?''

இந்த நிலைமைகள் சோவியத் யூனியனில் மட்டுமல்ல, விதிவிலக்கின்றி எல்லா சோசலிச நாடுகளிலும் பகைமையான வர்க்கங்களும், பகைமையான வர்க்கமுரண்பாடுகளும், பகைமையான வர்க்க போராட்டங்களும், சோசலிசம் மற்றும் முதலாளித்துவ பாதைகளுக்குமிடையிலான போராட்டங்களும், சோசலிசப் புரட்சியை இறுதி வரை நடத்திச் செல்லும் பிரச்சினையும், முதலாளித்துவ மீட்சியைத் தடுக்கும் பிரச்சினையும் நிலவும் என்று காட்டுகின்றன.

ஆனால், லியு—தெங் திரிபுவாதம் இன்றைய சீனத்தில் பழைய நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகளில் சீர்திருந்தாத சிலர் உட்பட சுரண்டும் வர்க்கங்களின் மிச்சசொச்சங்கள் மற்றும் லஞ்ச ஊழல்காரர்கள், சுருட்டிக் கொள்பவர்கள், வர்த்தக சூதாடிகள் போன்ற புதிய சுரண்டாலாளர்கள் இருப்பதாகக் கூறுகின்றது. ஆனால் இவர்களை ஒரு வர்க்கமாகக் கருத முடியாது; உற்பத்திச் சாதனங்களின் உடமை மாற்றத்திற்குப் பிறகு சுரண்டுவதற்கான வாய்ப்புகள் இல்லாமற் போய் விடுகின்றன என்கிறது. உண்மை என்ன? சுரண்டும் வர்க்க சமுதாய அமைப்பிலிருந்து தோன்றியதும் கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டமுமான சோசலிச சமுதாயத்தில், சோசலிச அமைப்பு முறை, பொருளாதாரம், அரசியல், கலாச்சாரம் இன்னும் பிற துறைகளில் முற்றாக முதிர்ச்சியுறவில்லை.

சோசலிச சமுதாயத்தைப் பற்றி விளக்கிய மார்க்ஸ் சொன்னார், *''இங்கு நாம் கையாள வேண்டியது அதன் சொந்த அடித்தளத்தின் மீது வளர்ச்சியுற்ற என்கிற முறையிலான கம்யூனிச சமுதாயத்தைப் பற்றி அல்ல; ஆனால் மாறாக, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து இப்பொழுதுதான் உதிக்கும் சமுதாயத்தைப்பற்றி; அது பொருளாதார ரீதியில், தார்மீக ரீதியில், அறிவுத்துறை ரீதியில் இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் இன்னமும் அது உதிக்கும் கருப்பையான பழைய சமுதாயத்தின் பிறப்புச் சின்னங்களால் முத்திரைக் குத்தப்பட்டிருக்கிறது''*

(கோதா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம், மார்க்ஸ்)



படிப்பகம்

www.padippakam.com

உண்மையில் லியு—தெங் கும்பல் இந்தப் பிரச்சினைகளை சிறுமைப்படுத்தியே முன்னிறுத்துகின்றது. மீண்ட சொர்க்கத்தை திரும்பப் பெறுவதற்கும் தூக்கியெறியப்பட்ட சுரண்டலாளர்களின் சக்திகளையும் முயற்சிகளையும் யுத்த முறைகளோடு உள்ளிருந்தே அதன் வழியில் முதலாளித்துவ மீட்சிக்கான சிந்தனை கொண்டு வருவதில் ஏகாதிபத்தியம் மற்றும் பிற அந்நிய சக்திகளின் முயற்சிகளையும், முதலாளித்துவ சூழ்நிலையில் புதிய முதலாளித்துவ சக்திகளின் தன்னியல்பான தோற்றத்தையும் குறைத்து மதிப்பிடுகின்றது.

"சோசலிச சமுதாயத்தில, தூக்கியெறியப்பட்ட முதலாளித்துவ வர்க்கம் மற்றும் பிற பிற்போக்கு வர்க்கங்கள் கணிசமான ஒரு நீண்ட காலத்திற்கு பலமாக நீடிக்கின்றன; உண்மையில் சில வகைகளில் மிகவும் சக்திவாய்ந்தவையாக இருக்கின்றன. சர்வதேசிய முதலாளித்துவ வர்க்கத்துடன் ஆயிரத்தொரு பிணைப்புகளைக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களது தோல்விக்கு அவர்கள் மனம் ஒப்பவில்லை; பாட்டாளி வர்க்கத்தோடு பலப்பரிட்சையில் ஈடுபடுவதில் உடும்புப்பிடியாக நீடிக்கிறார்கள். பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக ஒவ்வொருகளத்திலும் வெளிப்படையான மற்றும் இரகசியமான போராட்டங்களை அவர்கள் நடத்துகிறார்கள். சோசலிசத்தை, சோவியத் அமைப்புமுறையை, பொதுவுடமைக் கட்சியை, மார்க்சிய லெனினியத்தை ஆதரிப்பது என்ற அடையாளச் சின்னங்கள் போன்றவற்றோடு இடையராது பவனி வந்து கொண்டே சோசலிசத்தைக் கழுத்துப் போடவும், முதலாளித்துவத்தை மீட்கவும் அவர்கள் வேலை செய்கிறார்கள். அரசியல் ரீதியில், ஒரு நீண்ட காலத்திற்கு பட்டாளி வர்க்கத்துக்கு விரோதமான ஒரு சக்தியாக அழுந்தி நிற்கிறார்கள்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தூக்கி யெறிய இடையராது முயற்சிக்கிறார்கள். பாட்டாளிவர்க்கத் தலைமையை எதிர்ப்பது அல்லது கைப்பற்றுவது என்பதில் குறிக்கொண்டு அரசாங்க உறுப்புகள், பொது ஸ்தாபனங்கள், பொருளாதார இலாக்காக்கள் மற்றும் கல்வி-கலாச்சார நிறுவனங்களில் ஊடுருவுகிறார்கள். பொருளாதார ரீதியில் மொத்த மக்களின் சோசலிச உடமையையும், சோசலிச கூட்டுத்துவ உடமையையும் நாசப்படுத்தவும், முதலாளித்துவ சக்திகளை வளர்க்கவும் அவர்கள் எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்துகிறார்கள். கலாச்சாரம், சித்தாந்தம், கல்வித்துறைகளில், பாட்டாளி வர்க்க உலகப்பார்வைக்கு எதிராக முதலாளித்துவ உலகப் பார்வையை அவர்கள் நிறுத்துகிறார்கள்; பாட்டாளிவர்க்கம் மற்றும்பிற உழைக்கும் மக்களை முதலாளித்துவ சித்தாந்தத்தால் மாசுபடுத்த முயலுகிறார்கள்.

"விவசாயத்தை கூட்டுத்துவமயமாக்குவது தனிப்பட்டவர்களை கூட்டுத்துவ விவசாயிகளாக மாற்றுகிறது. விவசாயிகளை முற்றும் முழுதாக மறுவார்ப்பு செய்ய சாதகமான நிலைமைகளைத் தருகிறது. இருப்பினும், கூட்டுத்துவ உடமைமுறை மொத்த



படிப்பகம்

www.padippakam.com

மக்களின் உடமைமுறையாக முன்னேறாதவரை, தனியார் பொருளாதாரத்தின் மிச்சசொச்சங்கள் முற்றாக மறையாதவரை, விவசாயிகள் சிறு உற்பத்தியாளர்களது சில உள்ளார்ந்த அம்சங்களை தவிர்க்க முடியாமல் தக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழலில் தன்னியல்பான முதலாளித்துவ விழைவுகள் தவிர்க்க முடியாதவை. புதிய பணக்கார விவசாயிகளின் வளர்ச்சிக்கான விளைநிலம் இன்னமும் நிலவுகிறது, விவசாயிகள் மத்தியில் பாகுபடுவது இன்னும் நிகழக்கூடும்.

''மேலே விவரித்தவாறான முதலாளித்துவ வர்க்க நடவடிக்கைகள், அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் மற்றும் கலாச்சார—கல்வி துறைகளில் அதன் மாசுபடுத்தும் பாதிப்புகள், நகர்ப்புற, கிராமப்புற சிறு உற்பத்தியாளர்களின் மத்தியில் முதலாளித்துவ விழைவுகள் தன்னியல்பாக நிலவுவது, இன்னும் எஞ்சியிருக்கும் முதலாளித்துவ உரிமைகளின் செல்வாக்கு மற்றும் பழைய சமுதாயத்தின் பழக்கவழக்கங்களின் வீச்சு, இவை அனைத்தும் தொழிலாளர் வர்க்கத்தின் அணிவரிசைகளிலும், கட்சி மற்றும் அரசாங்க ஸ்தாபனங்களிலும் அரசியல் சீரழிவுக்காரர்களை உருவாக்குகின்றன; புதிய முதலாளித்துவ நபர்கள் மொத்த மக்களது உடமையான அரசு நிறுவனங்களில் சுருட்டிக் கொளபவர்களையும் ஊழல்காரர்களையும் உருவாக்குகின்றனர்; கலாச்சார—கல்வி நிறுவனங்களிலும் கலாச்சார வட்டாரங்களிலும் புதிய முதலாளித்துவ அறிவுஜீவிகளை உருவாக்குகின்றனர்; இந்தப் புதிய முதலாளித்துவ நபர்களும், இந்த அரசியல் சீரழிவுக்காரர்களும் தூக்கியெறியப்பட்ட, ஆனால் ஒழித்துக்கட்டப்படாத பிற்போக்கு வர்க்கங்களின் நபர்கள்; மற்றும் பழைய முதலாளித்துவ நபர்களோடு கூட்டுச் சேர்ந்து சோசலிசத்தைத் தாக்குகின்றனர். தலைமை உறுப்புகளில் பொதிந்திருக்கும் அரசியல் சீரழிவுக்காரர்கள் குறிப்பாக அபாயகரமானவர்கள். ஏனெனில் கீழ்மட்ட உறுப்புகளில் உள்ள முதலாளித்துவ நபர்களை அவர்கள் ஆதரித்து கவசமளிக்கின்றனர்.

''ஏகாதிபத்தியம் இருக்கும்வரை, உள்நாட்டில் முதலாளித்துவ வர்க்கம் மற்றும் சர்வதேசிய ஏகாதிபத்தியம் ஆகிய இரண்டிற்கும் எதிராக சோசலிச நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கம் போராட வேண்டியிருக்கிறது. சோசலிச நாடுகளுக்கெதிரான ஆயுதந்தாங்கிய தலையீடுகளை மேற்கொள்ளவோ அல்லது அமைதிவழி சிதைவைக் கொண்டுவரவோ ஏகாதிபத்தியம் ஒவ்வொரு வாய்ப்பையும் எடுத்துக் கொண்டு பயன்படுத்தும். சோசலிச நாடுகளை அழிப்பதற்கோ முதலாளித்துவ நாடுகளாகச் சீரழிக்கவோ தன்னால் இயன்றதனைத்தையும் அது செய்யும். சர்வதேசிய வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாமல் அதன் பிரதிபலிப்புகளை சோசலிச நாடுகளில் காணும்'' ('சீனா விலகிப் போகிறதா?' நூல், பக்-55)



படிப்பகம்

www.padippakam.com

சோவியத் யூனியனது பத்திரிக்கைகள் மற்றும் பிரசங்கனின் தொகுப்பே அந்நாட்டில் பகைமையான வர்க்கங்கள் இல்லாமற் போய்விடவில்லை என்பதை நிரூபித்திருக்கின்றன. இவற்றை அடிப்படையாகக் கொண்டுதான் சீனப்பொதுவுடமைக் கட்சி சொன்னது: ''சோசலிச கட்டம் முழுவதும் அரசியல், சித்தாந்தம், பொருளாதாரம் மற்றும் கல்வி-கலாச்சாரம் ஆகிய துறைகளில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளிவர்க்கத்துக்கும் இடையிலான போராட்டம் நிறுத்தப்பட முடியாதது. இது ஒரு நீண்ட நெடியது; திரும்பத்திரும்ப நிகழ்ந்து கூடியது; வேதனைகளும் இடர்ப்பாடுகளும் மிக்கதும் மற்றும் சிக்கலானதுமான போராட்டம்; கடலலை போன்று சில சமயங்களில் உயர்ந்தோங்குகிறது. சில சமயங்களில் தணிந்து போகிறது; ஒருபோது கணிசமான அமைதியாக இருக்கிறது, மற்றொருபோது மிகவும் கொந்தளிப்பாக இருக்கிறது. ஒரு சோசலிச சமுதாயத்தின் விதியை இந்த ஒரு போராட்டம் தீர்மானிக்கிறது; ஒரு சோசலிச சமுதாயம் கம்யூனிசத்திற்கு முன்னேறுவது அல்லது முதலாளித்துவத்துக்கு திரும்புவது இந்த நீண்ட நெடிய போராட்டத்தின் இறுதி முடிவைச் சார்ந்திருக்கிறது.

''சோசலிச சமுதாயத்தில் உள்ள வர்க்கப் போராட்டம் தவிர்க்க இயலாமல் பொதுவுடமைக் கட்சியிலும் பிரதிபலிக்கிறது. ஒரு சோசலிச நாட்டை முதலாளித்துவ நாடாக சீரழிப்பதற்கு, பொதுவுடமைக் கட்சியை ஒரு திரிபுவாதக் கட்சியாக செய்வது முதலாவதாக அவசியமென்பதை முதலாளித்துவ வர்க்கம் மற்றும் சர்வதேசிய ஏகாதிபத்தியம் இரண்டும் புரிந்து கொண்டுள்ளன. பழைய, புதிய முதலாளித்துவ நபர்கள், பழைய, புதிய பணக்கார விவசாயிகள், எல்லா வகையான சீரழிந்த நபர்கள் ஆகியோர் திரிபுவாதத்தின் சமூக அடிப்படையாக அமைகிறார்கள்; பொதுவுடமைக் கட்சிக்குள் ஏஜென்டுகளைக் காண்பதற்கு எல்லா சாத்தியமான சாதனங்களையும் பயன்படுத்துகிறார்கள். முதலாளித்துவ செல்வாக்கு நிலவுவது திரிபுவாதத்தின் உள்மூலம்; ஏகாதிபத்திய நிர்பந்தத்திற்கு சரணடைவது வெளிமூலம். சோசலிச நாடுகளின் பொதுவுடமைக் கட்சியில் மார்க்சிய-லெனினியத்துக்கும் வெவ்வேறு வகைகளிலான சந்தர்ப்பவாதத்திற்கும்—பிரதானமாக திரிபுவாதத்திற்கும்—இடையிலான போராட்டம் சோசலிச கட்டம் முழுவதும் தவிர்க்க முடியாதது. இந்த திரிபுவாதத்தின் குணாம்சம்; வர்க்கங்கள் மற்றும் வர்க்கப் போராட்டம் நிலவுவதை மறுப்பது; இது பாட்டாளி வர்க்கத்தைத் தாக்குவதில் முதலாளித்துவ வர்க்கத்தின் பக்கம் நிற்கிறது; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை முதலாளித்துவ சர்வாதிகாரமாக மாற்றுகிறது'' (மேற்குறிப்பிட்டது, பக். 56-57)

ஒரு சோசலிச நாட்டில் சோசலிசத்தின் மீது உள்நாட்டு, வெளிநாட்டு பழைய, புதிய முதலாளித்துவ வாதிகளாலும், ஏகாதிபத்திய வாதிகளாலும் தாக்குதல் தொடுக்கப்படுவது புதியதோ, ஆச்சரியத்-



படிப்பகம்

www.padippakam.com

படத்தக்கதோ இல்லை. பொதுவுடமைக் கட்சித் தலைமையும் அரசும் மார்க்சிய-லெனினியத்தில் ஊன்றி நிற்குமவரை பயப்பீதி அடைய ஒன்றுமில்லை. திரிபுவாத குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பலைப் போன்று கட்சி மற்றும் அரசின் தலைமையைக் கைப்பற்றி விடுவதிலும் அதன் பின்பலமாக ஒரு சலுகை பெற்ற முதலாளித்துவத் தட்டு தோன்றி விடுவதிலும் தான் அபாயகரமான விஷயம் தங்கியிருக்கிறது. இச்சமூகத் தட்டு தோன்றி வளர்ந்து எவ்வாறு சோவியத் கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றியது என்று சீனப் பொதுவுடமைக் கட்சி விவரித்திருக்கிறது.

லெனின் மற்றும் ஸ்டாலினது தலைமையின் கீழ் பழைய, புதிய முதலாளித்துவ நபர்கள், பழைய, புதிய பணக்கார விவசாயிகள், எல்லா வகை சீரழிவுக்காரார்களும் தோன்றுவதற்கான வாய்ப்புகளைத் தடுப்பதற்கான அரசியல், சித்தாந்தத் துறைகளில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தலைமை அணியினர் தங்களது அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் மற்றும் தார்மீக ரீதியில் சீரழிந்து போவது எல்லாத் துறைகளிலும் தடுக்கப்பட்டது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலும், சோசலிசப் பாதையிலும் ஊன்றி நின்று முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராக ஓர் உறுதியான போராட்டம் நடத்தப்பட்டது. கட்சிக்குள் இப்போராட்டத்தின் பிரதிபலிப்பே சாராம்சத்தில் டிராட்ஸ்கியவாதிகள் ஜினோவைவாதிகள் மற்றும் புகாரினியவாதிகளுக்கு எதிரான ஸ்டாலினது போராட்டமாகும்; முதலாளித்துவ பாதைக்கும் சோசலிசப் பாதைக்குமிடையிலான இப்போராட்டங்களின் வெற்றி சோவியத் யூனியனில் முதலாளித்துவ மீட்புக்கான சதிகளை முறியடித்தது. இருப்பினும் ஸ்டாலினது இறப்பிற்கு சற்று முன்யிருந்தே உயர் ஊதியங்கள் மற்றும் சலுகைகள் பெற்று வந்த சில அணியினர் சீரழிந்து முதலாளித்துவ நபர்களாயினர்.

1952-ல் நடந்த 19-வது சோவியத் கட்சிக் காங்கிரசில் சில கட்சி அமைப்புகளில் சீரழிவும், ஊழலும் தோன்றியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. 'கட்சி மற்றும் அரசின் நலனுக்கு மேல் உயர்ந்ததாக தமது சொந்த குழு நலனை அமைத்துக் கொண்ட' தமது சொந்த ஆட்களைக் கொண்ட சிறு சமூகங்களாக இந்த ஸ்தாபனங்கள் மாறின. சில நிர்வாகிகள் 'அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட நிறுவனங்கள் என்பதை மறந்து தமது சொந்த ஆதிக்க புரிகளாக' மாற்றிக் கொண்டனர். 'கூட்டுத்துவ பண்ணைகளை பொது வளர்ப்பிடங்களாக காப்பதற்குப் பதில்' கட்சி மற்றும் சோவியத் பொறுப்புகளில் இருந்த சிலர் விவசாய இலாக்காக்களை 'உறுஞ்சுவதற்கான கூட்டுத்துவப் பண்ணைச் சொத்துடைமையாக பயன்படுத்தினர்'. கலாச்சாரம், கலை மற்றும் விஞ்ஞான அரங்குகளில் கூட சோசலிச கட்டமைவை தூக்கி சிதறடிக்கும் செயல்பாடுகளும் விஞ்ஞானிகள் மத்தியில் ஓர் ஏகபோக 'ஆராகச்சேயேவ்



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சி' தோன்றியது. குருஷ்சேவ் கும்பல் கட்சி மற்றும் அரசின் தலைமையைக் கைப்பற்றி ஒரு வரிசை வரிசையான திரிபுவாதக் கொள்கைகளை அமுலாக்கியதன் மூலம் சோவியத் யூனியனில் முதலாளித்துவ சக்திகள் விரைவாக ஊதிப்பெருகின.

தனி மனித வழிபாட்டை எதிர்த்துத் தாக்குவது என்ற பெயரில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை இழிவுபடுத்தி முதலாளித்துவ மீட்சிக்கு குருஷ்சேவ் கும்பல் பாதை அமைத்தது. சந்தைப் பொருளாதாரத்தையும், பொருளாயத ஊக்கமளிப்பையும் சோசலிசப் பொருளாதாரத்தினிடத்தில் புகுத்தியது. சோசலிசத் திட்டப் பொருளாதாரத்தை நாசமாக்கி முதலாளித்துவ லாபம் என்ற கோட்பாட்டை பிரயோகித்து முதலாளித்துவப் போட்டியை வளர்ப்பதன் மூலம் அனைத்து மக்களின் சோசலிச உடமை முறையை கீழே தள்ளியது. சோசலிச விவசாயத் திட்டத்தை அதிகார வர்க்கப் பாணியிலானது, தேவையற்றது என்று தாக்கி, அமெரிக்கப் பெரும் பண்ணைகளிலிருந்து கற்பதாகக் கூறிக் கொண்டு முதலாளித்துவ நிர்வாகத்தை ஊக்குவித்து ஒரு 'குலக்குப்' பொருளாதாரத்தைத் திணித்து சோசலிச கூட்டுத்துவப் பொருளாதாரத்தைக் கீழே தள்ளியது. முதலாளித்துவ சித்தாந்தம், முதலாளித்துவ சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், மனிதாபிமானம் ஆகியவற்றை கடத்தி வந்து சோவியத் மக்கள் மத்தியில் முதலாளித்துவ தனி மனிதப் போக்குகளை, மனிதாபிமான வாதத்தை, பாசிசத்தை பரப்பியது; சோசலிச தார்மீக உணர்வுகளை கிள்ளி எறிந்தது. பொதுவுடமைக் கட்சியிலும் மார்க்சிய—லெனினியவாதிகளையும், புரட்சிகர அணிகளையும் பெருமளவு களையெடுத்தது. இவை அனைத்தின் மூலம் சலுகை பெற்ற முதலாளித்துவத் தட்டு ஒன்று கட்சி, அரசு மற்றும் பிற முக்கிய ஸ்தாபனங்களில் ஆதிக்கம் பெற்றது.

இவையனைத்தையும் தொகுத்தளித்து சீனப் பொதுவுடமைக் கட்சி சொன்னது:

''சோவியத் கட்சி மற்றும் அரசின் தலைமையைக் கைப்பற்றிய குருஷ்சேவ் கும்பல் புகழ்பெற்ற வரலாறுடைய சோவியத் யூனியனின் மார்க்சிய—லெனினியப் பொதுவுடமைக் கட்சியை திரிபுவாதக் கட்சியாக மாற்றுகிறது; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழுள்ள சோவியத் அரசை திரிபுவாத குருஷ்சேவ் கும்பலின் சர்வாதிகாரத்தின் கீழானதாக அவர்கள் மாற்றுகிறார்கள்; மேலும் படிப்படியாக, அனைத்து மக்களின் சோசலிச உடமை முறையையும், சோசலிச கூட்டுத்துவ உடமை முறையையும், சலுகை பெற்ற தட்டின் உடமை முறையாக அவர்கள் மாற்றுகிறார்கள்.

''சோவியத் மக்களுக்கெதிரான ஈவிரக்கமற்ற அவர்களது வர்க்கப் போராட்டம் பற்றிய உண்மையை மூடிமறைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

பொருட்டு 'சோவியத் யூனியனில் பகைமையான வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் இனியும் இல்லை' என்ற கதையை குருஷ்சேவ் கும்பல் பரப்புகிறது''

எனவேதான்:

''சோவியத் மக்களுக்கும் இந்த சலுகை பெற்ற (முதலாளித்துவ)தட்டினருக்கும் இடையிலான முரண்பாடு தற்போது சோவியத் யூனியனில் பிரதான முரண்பாடாகும்; இது இணக்கங்காண முடியாத பகைமையான வர்க்க முரண்பாடாகும்'' (மேற் குறிப்பிட்ட நூல்......பக்: 74-75)

சோசலிச சமுதாயத்திலும் விதிவிலக்கின்றி பகைமையான வர்க்கங்கள், பகைமையான வர்க்க முரண்பாடுகள் மற்றும் பகைமையான வர்க்கப்போராட்டங்கள் நீடிக்கின்றன என்கிற அடிப்படையிலிருந்து குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பலின் 'அனைத்து மக்கள் அரசு' மற்றும் 'அனைத்து மக்கள் கட்சி' ஆகிய நவீன திரிபுவாதத்தை சீனப் பொதுவுடைமைக் கட்சி தோலுரித்துக் காட்டியது. முதலாளித்துவ மீட்சி என்ற பாதையினூடாக பயணம் செய்து கொண்டே 'இருபது ஆண்டுகளில், முக்கியமாக ஒரு கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியமைக்கப் போவதாக, குருஷ்சேவ் கும்பல் மோசடி செய்தது. 1981—ஓடு குருஷ்சேவ்—பிரஷ்நேவ் கும்பல் வாக்குறுதி அளித்த 20 ஆண்டுகள் முடிந்து விட்டன. வரலாறு இன்று அவர்களது கபடத்தனமான மோசடியை அம்பலப்படுத்திவிட்டது. அதுவே மாவோ தலைமையிலான சீனப் பொதுவுடமைக் கட்சியின் தீர்க்க தரிசனத்துக்கு சாட்சியம் கூறுகிறது.

''குருஷ்சேவின் திரிபுவாதம் ஒரு சில தனி நபர்களின் காரணமாகவும், ஒரு விபத்து என்ற விஷயமாகவும் எழுந்தது அல்ல; மாறாக, ஆழமான சமூக வேர்களைக் கொண்டிருக்கிறது என்பதை நீண்ட காலத்திற்கு முன்பே மார்க்சிய—லெனினியவாதிகள் சுட்டிக் காட்டினர். இது, உள்நாட்டு முதலாளித்துவ சக்திகளினாலான பெருக்கெடுப்பு மற்றும் ஏகாதிபத்தியவாதிகள் பின்பற்றிய கொள்கைகள் ஆகிய இரண்டினதுமான ஒரு விளைபொருளாகும்'' (மேற் குறிப்பிட்டது...பக். 117)

இதுவரை தொகுத்தளித்தவையனைத்தும் சோவியத் ஓடுகாலிக் கும்பலின் நவீன திரிவாதத்தின் குணாம்சங்கள் மற்றும் அவற்றுக்கான அடிப்படைக் காரணங்களை சரியாக மாவோ தலைமையிலான சீனப் பொதுவுடமைக் கட்சி வரையறுத்திருந்ததையே காட்டுகின்றன. இருப்பினும் லியு—தெங் கும்பல் இவற்றை சராசரியற்ற வரையறுப்பென்று ஏன் கூறுகின்றது? தனது எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தை நியாயப்படுத்த தனது முன்னோடிகளின் நவீன



படிப்பகம்

www.padippakam.com

திரிபுவாதத்தையும் காக்க வேண்டியுள்ளது. அதற்கெதிரான போராட்டத்தையும் சிறுமைப்படுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் திரிபுவாதத்தைத் தடுக்கவும் எதிர்த்துத் தாக்கவும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி தொடுக்கப்பட்டது; லியு—தெங் கும்பலின் முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சிகளுக்கெதிராக தொடுக்கப்பட்டது.

திரிபுவாதத்தைத் தடுக்கவும் எதிர்த்துத் தாக்கவும், முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சிகளை முறியடிக்கவுமான கோட்பாடுகளையும் கொள்கைகளையும்—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்வதற்கான என்ற வடிவத்தையும் வழிமுறைகளையும்—நவீன திரிபுவாதத்திற்கெதிராக நடந்த வாதப் பிரதிவாதங்களில் மாவோ தலைமையிலான சீனப் பொதுவுடமைக் கட்சி தொகுத்தளித்துள்ளது. ஆனால் அவை சோவியத் யூனியனது அனுபவம் மட்டுமல்ல. ''முதலாளித்துவ மீட்சியை எவ்வாறு தடுக்க முடியும்? சீனத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நடைமுறை அனுபவத்தைத் தொகுத்த பிறகு, பிறநாடுகளது, முக்கியமாக சோவியத் யூனியனது, நேர்மறை எதிர்மறை அனுபவங்களை படித்தாய்ந்த பிறகு இந்தப் பிரச்சினை குறித்து தோழர் மாசேதுங், மார்க்சிய-லெனினியத்தின் அடிப்படை நியதிகளுக்குப் பொருத்தமாக ஒரு தொகுதி கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்துள்ளார்; அதனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய-லெனினிய கோட்பாட்டை செழுமைப்படுத்தி வளர்த்தெடுத்துள்ளார்.'' என்று கூறி மாவோ முன்வைத்த கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளில் முக்கியமான பதினைந்து அம்சங்களை தனது ஒன்பதாவது விமர்சனக் கட்டுரையில் சீனப் பொதுவுடமைக் கட்சி தொகுத்தளித்துள்ளது. லியு-தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபு வாதத்திற்கெதிரான கூர்மையான மார்க்சிய லெனினிய ஆயுதமாக—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டின் சாராதிரட்டாக—இருப்பதால் அதை லியு-தெங் கும்பல் சாடுகிறது.

சோவியத் ஒடுகாலி கும்பலின் நவீன திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தல் செய்த தவறின் தொடர்ச்சியாகவும்—மார்க்சிய கண்ணோட்டத்தை திரிபுவாதமாக கருதிய தன் தொடர்ச்சியாகவும்—அத்துடன் சீனத்தில் வர்க்கப் போராட்டத்தின் நிலைமை குறித்து தவறான மதிப்பீடு காரணமாகவும் சீனப் பொதுவுடமைக் கட்சிக்குள் திரிபுவாத அபாயம் குறித்து யதார்த்தத்துக்குப் புறம்பாக மதிப்பீடு செய்ததாக லியு—தெங் கும்பல் கூறுகிறது. இதற்கு நேர்மாறாக சோவியத் யூனியனில் முதலாளித்துவ மீட்சியின் தொடர்ச்சியாக, அதனால் ஊக்குவிக்கப்பட்டு சீ.கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தைக் கைப்பற்றி சீனத்திலும் முதலாளித்



படிப்பகம்

www.padippakam.com

துவத்தை மீட்கும் காட்சியை அரங்கேற்ற லியு—தெங் கும்பல் முயன்றது என்பதே உண்மை.

ஆனால் தெங் சியௌ பிங் கும்பல் கூறுகிறது, ''இந்த கால கட்டத்தில் தோழர் லியு சௌ சி, கட்சி செய்ததைப் போன்றே சில தவறுகளைச் செய்திருப்பினும் கூட, இந்தத் தவறுகள் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டிற்குப் பொருத்தமாக விமர்சனம்-சுயவிமர்சனம் மூலமாக கிட்டத்தட்டப் பெரும்பாலும் கட்சி மத்தியக் கமிட்டியால் சரிசெய்யப்பட்டுவிட்டன; மேலும் தோழர் லியு சௌ சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரு 'எதிர்ப்புரட்சி திரிபுவாதப் பாதையோ', தோழர் லியு சௌ சியை 'கூட்டுத்தலைவ'னாக கொண்ட ஒரு 'எதிர்ப்புரட்சிக் கும்பலே' அவரால் தலைமை தாங்கப்பட்ட ஒரு 'முதலாளித்துவ தலைமையகமே' அல்லது தோழர் லியு சௌ சியை 'மிகப்பெரிய முதலாளித்துவப் பாதையாளரா'கக் கொண்ட 'அதிகாரத்திலுள்ள உட்கட்சி முதலாளித்துவ பாதையாளர்களின்' ஒரு குழுவோ எப்போதும் இருந்ததில்லை'' (பீஜிங் ரிவ்யு தொகுதி23 எண் 21, பக்-5)

லியு சௌ சி தலைமையிலான எதிர்ப்புரட்சி திரிபுவாத கும்பலும், முதலாளித்துவப் பாதையாளர்களின் முதலாளித்துவ தலைமையகமும் இருந்ததை, இருந்து வருவதை தெங் சியௌ பிங் கும்பல் எவ்வாறு மறுக்கிறது? அதன் சொந்த வாக்குமூலமே பின்வருமாறுதான் இருக்கிறது; ''லியு சௌ சியின் தலைமையிலான 'ஒரு முதலாளித்துவத் தலைமையகம்' இருந்ததா இல்லையா, அல்லது 'லியு சௌ சியின் எதிர்ப்புரட்சி திரிபுவாதபாதை, இருந்ததா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அவ்வளவு கடினமானதாக இருக்கவில்லை, நால்வர் கும்பல் நொறுக்கப்பட்டு கலாச்சாரப் புரட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது; அதனால் கடந்த மூன்று பத்தாண்டுகளாக பல்வேறு துறைகளில் பணியாற்றிய பெரும் எண்ணிக்கையிலான அணிகளும் மக்கள் திரளினரும், குறிப்பாக குற்றச்சாட்டுகளில் சேர்க்கப்பட்டு தண்டிக்கப்பட்டிருந்தவர்களும் அவற்றிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்; தோழர் லியு சௌ சிக்காக தாமே முன்வந்து பேசுவது அவர்களுக்கு கடினமாக இல்லை; அவர்கள் அந்தக் குற்றச்சாட்டுகளின் பொய்மைக்கு சாட்சியமாக இருந்தனர்'' (பிஜிங் ரிவ்யு, தொகுதி 23, எண் 21, பக்-15). எப்படி இருக்கிறது பாருங்கள்! லியு சௌ சியால் தலைமை தாங்கப்பட்ட எதிர்ப்புரட்சி திரிபுவாதக் கும்பலின், முதலாளித்துவ தலைமையகத்தின் உறுப்பினர்களையும், அவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட எதிர்ப்புரட்சி திரிபுவாதப்பாதையை ஏற்று வழி நடந்த முதலாளித்துவப் பாதையாளர்களையும் அவர்களது குற்றங்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து விடுவித்து, அரசியல் மறுவாழ்வளித்து, அத்தகையவர்களின் சாட்சியங்களைக் கொண்டுதான் லியு சௌ சியின் தலைமையிலான எதிர்ப்



படிப்பகம்

www.padippakam.com

புரட்சித் திரிபுவாதப்பாதையும். கும்பலும், முதலாளித்துவ தலைமையகமும் எப்போதும் இருந்ததே இல்லை என்று தெங் கும்பல் நிருபிக்க எத்தனிக்கிறது.

சித்தாந்தம், அரசியல், பொருளாதாரம் மற்றும் ஸ்தாபன ரீதியில் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையைக் கைவிட்டு தமது எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தை முன்நிறுத்தியும், மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சரியான தீர்ப்புகளை திருத்தி மாற்றியும் மேற்கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் சூழலில்தான் லியு செள சியின் தவறுகளை மூடிமறைத்து அவரை ஒரு மகத்தான பாட்டாளி வர்க்கப் புரட்சியாளராகவும், மிகப்பெரும் மார்க்சிய வாதியாகவும் தெங் கும்பல் சித்தரிக்கிறது. முதலாவதாக, லியு செள சி பிரதிநிதித்துவப் படுத்திய எதிர்ப்புரட்சித் திரிபுவாதப் பாதையைத் தமதாகக் கொண்டிருப்பதுதான் தெங் கும்பல் என்பதைப் பார்க்கத் தவறக் கூடாது; அப்பாதையைத்தான் லியு செள சியால் விற்க முடியாத, விலை போகாததைத்தான்—சோசலிசப் புரட்சிக்கும் சோசலிச நிர்மாணத்திற்குமான பாதையாக தெங் கும்பல் உயர்த்திப் பிடிக்கிறது. முன்பகுதிகளில் தொகுத்துரைக்கப் பட்டவாறு மாசேதுங் சிந்தனை பற்றிய சரியான வரையறை, அதன் சர்வவியாபகத் தன்மை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின்கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற மாவோவின் மகத்தான பங்களிப்பு, சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய விதிகள், சோசலிச சமுதாயத்தில் வர்க்க நிலைமைகள் அதாவது வர்க்கங்கள் வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போராட்டங்கள் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகிய அனைத்திலும் லியு—தெங் கும்பலின் எதிர்ப்புரட்சித் திரிபுவாத நிலைப்பாடுகளில் இருந்தே லியு செள சி தலைமையில் அவ்வாறு ஒரு எதிர்ப்புரட்சி திரிபுவாதப் பாதை இருந்-ததை மறுக்கின்றது.

இதற்கு அடிப்படையாக, ‘‘கலாச்சாரப் புரட்சியின் சமயத்தில் கட்சியிலும், நாட்டிலும் இருந்த நிலைமைகள் பற்றிய மதிப்பீடு உண்மைக்கும் முரணானதாக இருந்ததால் தோழர் லியு செள சியால் தலைமை தாங்கப்பட்டதாகச் சொல்லிக் கொள்ளப்பட்ட ஒரு முதலாளித்துவ தலைமையகம் மற்றும் ஒரு எதிர்ப்புரட்சித் திரிபுவாதப்பாதை ஆகியன கட்சிக்குள் இருந்ததாக உறுதிசெய்த முற்றிலும் தவறான, ஆதாரமற்ற முடிவு எடுக்கப்பட்டது’’ (பீஜிங் ரிவ்யு தொகுதி 23, எண் 10, பக். 9) என்று தெங் கும்பல் தற்போது கூறுகிறது. தெங் கும்பலின் இந்த அடிப்படை வாதத்தைத் தகர்க்கும் பொழுதுதான் எதிர்ப்புரட்சித் திரிபுவாதப் பாதையை முற்றாகத் தோலுரித்துக் காட்ட முடியும். சீனத்தின் அன்றைய வர்க்க நிலைமைகள் குறித்து மாவோவின் தலைமையிலான சீனப் பொதுவுடமைக் கட்சியின் மதிப்பீடுதான் என்ன?



படிப்பகம்

www.padippakam.com

''முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் அதன் தன்மையில் ஒரு புரட்சிகரமான பகுதியும் அதேபோல ஒரு சமரசப் பகுதியும் இருந்தன. சோசலிசப் புரட்சிக் கட்டத்தில் லாபத்துக்காகப் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவது என்பது தேசிய முதலாளித்-துவ வர்க்கத்தின் தன்மையில் உள்ள ஒரு பகுதியாக அமைகிறது. அரசியல் சட்டத்துக்கு அது தரும் ஆதரவும் சோசலிச உருமாற்றத்திற்கு அது காட்டும் விருப்பமும் மற்றொரு பகுதியாக அமைகின்-றன. தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுத்துவ வர்க்கம், அதிகார வர்க்க முதலாளித்துவ வர்க்கம் ஆகியோரிடமிருந்து வேறுபடுகிறது. தேசிய முதலாளித்துவ வர்க்கத்துக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு சுரண்டுவோருக்கும், சுரண்டப்படுவோருக்கும் இடையிலான முரண்பாடாகும்; எனவே பகைத் தன்மை உடையது. ஆனால், சீனாவின் பருண்மையான நிலைமைகளில் இந்தப் பகைத் தன்மை உள்ள முரண்பாடு முறையாகக் கையாளப்படுமானால் ஒரு பகைத்தன்மையற்ற முரண்பாடாக அதை உருமாற்ற முடியும்; உருமாற்ற முடியும் அமைதியான வழிமுறைகளைக் கொண்டு தீர்க்கப்படவும் முடியும்; ஆயினும் நாம் முரண்பாட்டை சரியாகக் கையாளாமல் தேசிய முத-லாளித்துவ வர்க்கத்துடன் ஐக்கியப்படுதல், விமர்சித்தல், போதித்தல் என்ற கொள்கையைப் பின்பற்றாமல் இருந்தாலோ அல்லது நமது கொள்கையை தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஏற்றுக் கொள்ளாமல் போனாலோ, இந்த முரண்பாடு நமக்கும் பகைவனுக்கும் உள்ள முரண்பாடாக மாறும்'' (மாவோ, தொகுதி 5)

புரட்சிக்குப்பின் இம் முரண்பாட்டைச் சரியாகக் கையாண்டு தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் பெரும்பான்மையினர் வென்-றெடுக்கப்பட்டனர். ஆனால், சீனத்தில் முதலாளித்துவ சர்வாதிகாரத்தை விரும்பிய சிலர் சோசலிசப் புரட்சியையும், சோசலிச நிர்-மாணத்தையும் எதிர்த்து எதிர்ப்புரட்சி சக்திகளுடன் இணைந்து கொண்டனர். மாவோவின் தலைமையிலான பாட்டாளி வர்க்கப் பாதைக்கெதிராக தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் இந்தப் பகுதியினரின் நலனுக்குச் சேவை செய்வதே லியு செள சியின் எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தின் நோக்கமாக இருந்தது. சீனத்தில் ஒரு முதலாளித்துவ சர்வாதிகாரத்தை நிறுவ முயற்சிக்கும் தேசிய முத-லாளித்துவப் பிரிவினருக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு ஆரம்பம் முதலே நிலவி வந்ததுதான். 1945-ல் ஜப்பானுக்கு எதிரான போர் முடிந்ததும் இம்முரண்பாடு கூர்மையா-கியது. 1949-ல் புரட்சியின் வெற்றிக்குப் பிறகும், ஜனநாயகப் புரட்சி சோசலிசப் புரட்சியாக மாறிய போதும் இம்முரண்பாடு மேலும் கூர்மையாகியது. சோசலிசப் புரட்சியிலும், சோசலிச நிர்-மாணத்திலும் கட்சிக்குள் எழும் இருவழிப் போராட்டங்கள் இம் முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகும். மவோவின் பாட்டாளி வர்க்கப்



படிப்பகம்

www.padippakam.com

பாதைக்கு எதிராக தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு பிரிவின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய ஒருசிறு கும்பலுக்குத்தான் லியு செள சி தலைமை தாங்கினார்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போதும் அதற்கு முன்னும் லியு செள சி முன் தள்ளிய எதிர்ப்புரட்சி திரிபுவாதம் வடிவத்தில் சிலசமயம் வலதாகவும், வேறு சில சமயம் இடதாகவும் இருந்திருப்பினும் அது முரணற்ற சந்தர்ப்பவாதமாகும். முதலாளிய, குட்டி முதலாளிய சித்தாந்தத்துக்கே உரிய ஊசலாட்டப் போக்கு அவர்களது நடைமுறையில் பிரதிபலித்ததே மேற்கண்ட வடிவத்தில் இருந்த வேறுபாடுகள் ஆகும். மற்ற டி துவக்கம் முதலே கட்சிக்குள், அதன் விளைவாக அரசுக்குள் மாசேதுங்கால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பாட்டாளி வர்க்கப் பாதைக்கும், லியு செள சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலான முரண்பாடுகளும், போராட்டங்களும் நிலவி வந்திருக்கின்றன. கட்சி மற்றும் அரசின் கொள்கைகளிலும், நடைமுறையிலும் லியு செள சியால் தலைமை தாங்கப்பட்ட முதலாளித்துவப்பாதை எவ்வாறு வெளிப்பட்டது, எவ்வாறு அதற்கெதிரான போராட்டம் தொடங்கி நடத்தப்பட்டது என்பதை விரிவாக முன்பே பார்த்தோம்.

சோவியத் யூனியனின் குருஷ்சேவ் மற்றும் பிற நவீன திருத்தல்வாதிகளின் முன் உதாரணத்தால் ஊக்குவிக்கப்பட்ட லியு செளசி தலைமையிலான முதலாளித்துவப் பாதையாளர்கள் சீனத்தில் முதலாளித்துவத்தை மீட்பதை நோக்கமாகக் கொண்டு கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான சதிகளில் இறங்கினர். அவர்கள் பெரிய எண்ணிக்கையில் இல்லை; ஆயினும் கட்சி மற்றும் அரசின் தலைமையில் சில முக்கியமான பதவிகளை வகித்து முதலாளித்துவ தலைமையகமாக இயங்கினர். எனவே அவற்றின் மூலம் கணிசமான அளவு பரந்து விரிந்த செல்வாக்கைச் செலுத்தவும், அணிகளுக்குத் தவறாக வழிகாட்டவும், அவர்களைக் குழப்பவும் முடிந்தது. இது குணரீதியான மாற்றத்தை எட்டிய போது, கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சிகளில் தீர்க்கமாக இறங்க அவர்கள் எத்தனித்த போது, 1966ம் ஆண்டு வசந்த காலத்தில், மே 16ல் மாவோ வரையறுத்த சீ. பொ.க. வின் மத்தியக் குழுவில் நிறைவேற்றப் பட்ட சுற்றறிக்கை பின்வருமாறு எச்சரித்தது:

''முதலாளித்துவ வர்க்கத்தின் இந்தப் பிரதிநிதிகள், மத்தியக் கமிட்டி, கட்சி, மத்திய, மாநில, நகராட்சி, சுயாட்சிப்பிரதேசங்கள் ஆகிய மட்டங்களில் உள்ள அரசாங்கம் மற்றும் பிற துறைகள் ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

''முழுக்கட்சியும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்



படிப்பகம்

www.padippakam.com

மாபெரும் பதாகையை உயர்த்திப் பிடிக்க வேண்டும், கட்சியையும், சோசலிசத்தையும் எதிர்க்கிற 'கற்றறிந்த பண்டிதர்கள்' எனக் கூறப்படுபவர்களின் பிற்போக்கு முதலாளித்துவ நிலைப்பாட்டை முற்றிலும் அம்பலப்படுத்த வேண்டும். நடைமுறைசாரா ஆராய்ச்சிப்பணி, கல்வி, பத்திரிக்கைத்துறை, இலக்கியம் மற்றும் கலைப் பிரசுரம் ஆகிய துறைகளில் உள்ள பிற்போக்கு முதலாளித்துவக் கருத்துக்களை முற்றிலுமாக மறுதலிக்க வேண்டும். இந்தக் கலாச்சாரத் துறைகளில் தலைமையைக் கைப்பற்ற வேண்டும். இதைச் சாதிக்க கட்சிக்குள்ளும், அரசாங்கத்துக்குள்ளும், இராணுவத்துக்குள்ளும், கலாச்சாரத்துறைகள் அனைத்துக்குள்ளும் நுழைந்து கொண்டுள்ள முதலாளித்துவ வர்க்கப்பிரதிநிதிகளை விமர்சிப்பதும், மறுதலிப்பதும், அவர்களை அப்புறப்படுத்துவதோ அல்லது அவர்களில் சிலரை வேறு நிலைகளுக்கு மாற்றுவதுமோ அவசியமானதாகும்.

''கட்சி, அரசாங்கம், இராணுவம் மற்றும் பல்வேறு கலாச்சார வட்டாரங்கள் ஆகியவற்றுக்குள் நுழைந்து கொண்டுள்ள அந்த முதலாளித்துவ வர்க்கப் பிரதிநிதிகள் எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கும்பலாவர். நிலைமைகள் முதிருமானால் அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரமாக மாற்றி விடுவார்கள். சிலரை நாம் ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளோம்; சிலர் இன்னும நமது நம்பிக்கைக்கு உரியவர்களாக இருக்கிறார்கள்; நமது வாரிசுகளாகப் பயிற்சியளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள். எடுத்துக்காட்டுக்கு குருஷ்சேவைப் போன்றவர்கள் நம்மருகே இன்னும் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா மட்டங்களிலும் உள்ள கட்சிக் குழுக்கள் இவ்விஷயத்தில் முழுக்கவனம் செலுத்த வேண்டும்.''

(பீகிங் ரிவ்யு. 67, தொகுதி 21, எண் 10)

ஆனால், அப்போது கட்சியினுள்ளும், அரசிலும் இருந்த நிலைமைகள் பற்றிய கணிப்பே யதார்த்தத்துக்கு முரணாவது, தவறான ஆதாரங்களின் அடிப்படையிலானது என்று லியு—டெங் கும்பல் வாதிடுகிறது. கட்சியிலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்களது நோக்கங்களை சரியாக மதிப்பீடு செய்து, பொதுவுடமைக் கட்சிக்கு உள்ளும், வெளியேயும் இவர்களது நடவடிக்கைகளைத் தொடர்ந்து கூர்ந்து கவனித்து, அவ்வப்பொழுது கட்சியையும், மக்களையும் மாவோ எச்சரித்து வந்திருக்கிறார்.

சோசலிச உடமை மாற்றத்தின்போது கட்சிக் கமிட்டி செயலர்களின் மாநாட்டில் மாவோ கூறினார்:

''பீகிங்கில் செய்த ஒரு சர்வேயின்... பெரும்பாலான கல்லூரி



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்கள், நிலப்பிரபுக்கள் பணக்கார விவசாயிகள், முதலாளிகள் மற்றும் வசதிமிக்க நடுத்தர விவசாயிகளது குழந்தைகள் அதே சமயம் தொழிலாளர் வர்க்கம் மற்றும் வறிய, கீழ்மட்ட உழவர்களின் குடும்பங்களிலிருந்து 20 சதவிகிதத்திற்கும் குறைவான மாணவர்கள் அடங்கினர். இது ஏறத்தாழ நாட்டின் பிற பகுதிகளிலுமான நிலைமையாகும். இந்த நிலைமை மாற வேண்டும்; ஆனால் அதற்கு அவகாசம் வேண்டும். கோமுல்கா எண்ணிறந்த நமது கல்லூரி மாணவர்களிடையே பிரபலமானவர்; அதே போன்று டிட்டோ மற்றும் கார்தேவ்ஜி. ஆனால் மற்றொரு புறம் நாட்டுப் புறத்திலுள்ள நிலப்பிரபுக்கள் பணக்கார விவசாயிகள் மற்றும் நகர்ப்புறத்திலிருக்கும் முதலாளிகள், ஜனநாயகக் கட்சிகளின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் போலந்திலும், ஹங்கேரியிலும் கலவரங்கள் நடந்த சமயத்தில் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். தொல்லைகளைக் கிளப்பிவிட அவர்கள் முயலவில்லை; அல்லது ஆயிரக்கணக்கான, பத்தாயிரக்கணக்கான, மக்களைக் கொல்லும் அச்சுறுத்தல்களுடன் வெளிவர முயலவில்லை. ஆனால், ஒருவர் அவர்களது நடத்தை குறித்து பகுப்பாய்வுக் கண்ணோட்டம் கொள்ள வேண்டும். அவர்களுக்கு எந்த அரசியல் மூலதனமும் இனியும் இல்லையாதலால், தொழிலாளர்கள், வறிய மற்றும் கீழ்நடுத்தர விவசாயிகள் அவர்களுக்கு செவி கொடுக்க மாட்டார்கள் ஆதலால், அவர்கள் எழுந்து நிற்பதற்கு அடித்தளமில்லாமல் இருக்கிறார்கள். பீகிங்கிலும், ஷாங்காயிலும் அணுகுண்டுகள் வெடிப்பது போன்ற விஷயங்கள் ஏதாவது நடந்தால் இத்தகையவர்கள் மாறமாட்டார்களா? அவர்கள் மாறமாட்டார்கள் என்று நீங்கள் நிச்சயமாக இருக்க முடியாது. அம்மாதிரி நிகழ்ந்தால், நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், முதலாளிகள், ஜனநாயகக் கட்சிகளின் உறுப்பினர்கள் ஆகியோரிடைய மறுசேர்க்கையின் ஒரு நிகழ்வு இருக்கும். அவர்களுக்கு உலகாயத நோக்கமிருக்கிறது. அவர்களில் பலர் பதுங்கி இருக்ன்றகினர்.''

(மாசேதுங் தொகுதி 5. பக் 353)

இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் ''மக்களிடையிலான முரண்பாடுகளைக் கையாள்வது'' மற்றும் ''பத்துப் பெரும் உறவு முறைகள்'' குறித்து மாவோ எழுதிய கட்டுரைகளில் சில மேற்கோள்களை முறைகேடாக லியு—தெங் கும்பல் எடுத்தாள்கிறது. அக்கட்டுரைகளிலே கூட முதலாளித்துவ மீட்சிக்காக எத்தனிப்பவர்களைக் குறித்து மாவோ எச்சரித்துள்ளார்.

''நமது நாட்டில் சிலர் ஹங்கேரியன் நிகழ்ச்சியில் பெரும் மகிழ்வுற்றனர். சீனத்திலும் அம்மாதிரி நிகழும்; ஆயிரமாயிரம் மக்கள் தெருக்களுக்கு வந்து மக்கள் அரசாங்கத்திற்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள் என்று நம்பினர். அவர்களது நம்பிக்கைகள்



படிப்பகம்

www.padippakam.com

பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களுக்கு எதிராகச் சென்றது; எனவே அவர்களது ஆதரவை வென்றெடுக்க இயலாமல் போனது'' (மா. தே. நூல். தொகுதி 5, பக். 388). சோசலிச உடைமை மாற்றத்தின் போது இவ்வாறு பதுங்கியிருந்த வர்க்க எதிரிகள் அதன் பின்னர் தமது கோரப் பற்களையும், உண்மை சொரூபத்தையும் காட்டத் தொடங்கினர். 'விஷயங்கள் மாறத் தொடங்குகின்றன', 'வலதுசாரிகளின் வெறித்தாக்குதலை எதிர்த்து முறியடிக்க சக்திகளை அணி திரட்டுக', 'முதலாளித்துவ வலதுசாரிகளின் தாக்குதல்களை எதிர்த்துத் தாக்குக', 'புரட்சியை முன்னேற்றும் செயல் வீரர்களாக இருங்கள்', 'பெரும்பான்மையின் உறுதியான நம்பிக்கை வை' என்ற சாஞ்சரமான தனது கட்டுரைகளில் மாவோ வர்க்க எதிரிகள் மற்றும் கட்சியிலுள்ள அவர்களது கூட்டாளிகளுக்கெதிரான, போராட்டத்தைத் தொடங்கி நடத்தும்படி தொடர்ந்து எச்சரித்து வந்திருக்கிறார்.

''மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்திற்கும், மக்கள் அரசாங்கத்திற்கும், சோசலிசத்திற்கும், பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக்கும் ஆதரவு தருவதாக வலதுசாரிகளினுடைய உறுதிமொழிகள் அனைத்தும் போலியானவை; எந்தக் கணக்கிலும் அவற்றிற்கு மதிப்பளிக்கவே கூடாது. அவர்கள் ஜனநாயகக் கட்சிகளில் இருந்தாலும், கல்வி, கலை—இலக்கியம், பத்திரிக்கை, விஞ்ஞானம்—தொழில்நுட்பம் அல்லது தொழிற்சாலை மற்றும் வணிக வட்டாரங்கள் என்ற எந்தத் துறைகளில் இருந்தாலும் எல்லா வலதுசாரிகளிக்கும் இது பொருந்தும். இரண்டு வகையான மக்கள் தீர்க்கமாக இருக்கிறார்கள். இடதுசாரிகள் மற்றும் வலதுசாரிகள் இரு சாரரும் நடுத்தர சக்திகளை வென்றெடுக்கவும் தலைமையைக் கைப்பற்றவும் முயலுகிறார்கள். வலதுசாரிகள் முதலில் பகுதியையும் பிறகு முழுமையையும் கைப்பற்ற முயலுகிறார்கள். தொடக்கமாக அவர்கள் பத்திரிக்கை, கல்வி, கலை—இலக்கியம் மற்றும் விஞ்ஞானம்—தொழில் நுட்பத்தில் தலைமையை நிறுவ முயலுகிறார்கள். இந்தத் துறைகளில் பொதுவுடைமையாளர்கள் அவர்களைப் போன்று அவ்வளவு பலமானவர்கள் இல்லை என்பதை அவர்கள் அறிவார்கள்; அதுவே உண்மை நிலவரமும் கூட'' (மா. தே. நூல். தொகுதி 5, பக். 442).

வலதுசாரிகளின் இந்த முயற்சிகள் அனைத்தும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கே ஆகும் என்றும், அவை வர்க்க போராட்டமாக வெடிப்பதாகவும் மாவோ முன்னறிவித்தார்: ''தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வர்க்க எதிரிகள் எவ்வித மாறுபாடுமின்றி நிச்சயமாக வாய்ப்புகளைத் தேடுவர். அரசு அதிகாரத்தை இழப்பதற்கும், பறிமுதல் செய்யப்படுவதற்கும் ஒரு போதும் அவர்கள் ஒப்பவே மாட்டார்கள். பொதுவுடைமைக் கட்சி அதன் எதிரிகளை எவ்வளவு



படிப்பகம்

www.padippakam.com

தான் முன் எச்சரித்தாலும், அதன் அடிப்படை யுத்ததந்திரத்தை வெளிப்படையாக தெரியப்படுத்தினாலும் அவர்கள் இன்னமும் தமது தாக்குதலைத் தொடுப்பார்கள். வர்க்கப் போராட்டம் ஒரு யதார்த்த உண்மை, மனித சித்தத்திற்கு அப்பாற்பட்டது. அதாவது சொல்லப்போனால் வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாதது; மக்கள் தவிர்க்க விரும்பினாலும் அதைத் தவிர்க்க இயலாது. ஒரே விஷயம் நிலைமையை மிகச் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொண்டு போராட்டத்தின் வெற்றிக்கு வழிகாட்டுவதுதான். பிற்போக்கு வர்க்க எதிரிகள் ஏன் தூண்டிலைக் கடிக்கின்றனர்? பிற்போக்கு சமூகக் குழுக்கள் லாப வெறியால் குருடர்களாக்கப்படுவதால் பாட்டாளி வர்க்கத்தின் முற்றும் முழுதான மேலாண்மையை, முற்றும் முழுதான தாழ்மையாகக் கொள்கின்றன. எங்கெங்கும் தீமையை ஊதிவிடுவதுதானது, தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் மாணவர்களது கொட்டை எழுத்து சுவரொட்டிகளைக் கிளப்பி விடும்; பள்ளிகளைக் கைப்பற்றவும், சுதந்திரமாகக் கருத்துக்களை வெளிப்படுத்தவும் வழிவகுக்கும்; ஒரு வெடித்துச் சிதறும் சூழ்நிலையை எய்தும். எங்கெங்கும் திடீர் குழப்பங்கள் நிலவும்; உடனடியாக பொதுவுடமைக் கட்சி வெடிப்புறும்—இவ்வாறு தான் பீகிங்கின் ஆறு பேராசிரியர்களுக்காக ஜூன் 6வது நாளைய நிலைமையை சாங்போசுன் கருதியது. இது லாப வெறியால் குருடாக்கப்பட்ட ஒரு விவகாரம் அல்லவா? 'லாபம்' என்பதன் பொருள் 'அதிகாரத்தைக் கைப்பற்றுவது' (மா.தே.நூல் தொகுதி 5, பக். 454)

'முதலாளித்துவ வலதுசாரிகள்' என்று யாரைக் குறிப்பிடுவதாக மாவோ வரையறுத்தார்? ''இப்பொழுது 'முதலாளித்துவ வலதுசாரிகள்' என்ற பதத்திற்கு திரும்பவும் வருவோம், முதலாளித்துவ வலதுசாரிகள் என்பவர்கள் பொதுவுடமைக் கட்சி, மக்கள் மற்றும் சோசலிசத்தை எதிர்க்கும் மேலேகுறிப்பிடப்பட்ட முதலாளித்துவ பிற்போக்குவாதிகள் ஆவர். இந்த வரையறுப்பு விஞ்ஞான பூர்வமானது; யதார்த்த நிலவரத்துக்கு உண்மையானது. ஒரு கை-யளவானவர்கள் மட்டுமே, அவர்களை ஜனநாயகக் கட்சிகளிலும் புத்தி ஜீவிகள், முதலாளிகள் மற்றும் மாணவர்கள் மத்தியிலும், பொதுவுடமைக் கட்சி மற்றும் இளைஞர் இணைக் குழுவிலும் கூட காணலாம்; அவர்கள் இன்றைய மிகப்பெரிய சூறாவளியில் மேற்பரபிற்கு வந்தவர்கள்; அவர்கள் எண்ணிக்கையில் மிகச் சிறியவர்களே; ஆனால் ஜனநாயகக் கட்சிகளில் குறிப்பாக இந்த சில கட்சிகளில் அவர்கள் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்கள்; அவர்களை 'லேசாக' எடுத்துக் கொள்ளக்கூடாது'' (மா. தே. நூல், தொகுதி 5, பக். 455)

பிற்போக்கு எதிர்ப்புரட்சியாளர்கள் தமது நம்பிக்கைகளை அதிகாரத்திலுள்ள கட்சி நபர்களின் மீது தான் வைத்திருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

''பொதுவுடமைக் கட்சி உறுப்பினர்களின் 'பேரெழுச்சியை'க் காணவும் பொதுவுடமைக் கட்சியின் நிச்சயமான 'வீழ்ச்சியை'க் காணவும் வெகு மகிழ்வுடன் இருந்தார்கள். இந்தச் சமயத்தில் எவ்வளவு கட்சி உறுப்பினர்கள் வீழ்ந்து பட்டார்கள்? ஷங்காய் பற்றி எனக்குத் தெளிவில்லை பீகிங்கில் பல்கலைக்கழகத்தில் கட்சி உறுப்பினர்களில் 5 சதவிகிதத்தினர் வீழ்ந்திருக்கக் கூடும் இளைஞர் இணைக்குழுவில் இன்னும கூடுதலான சதவிகிதத்தினர் ஒரு வேளை 10 சதவிகிதம் அல்லது அதற்குமேல் வீழ்ந்திருக்கக்கூடும். எனது கண்ணோட்டத்தில் அவர்களது வீழ்ச்சி எவ்வளவு இருக்க வேண்டுமோ சரியாக அவ்வளவே இருக்கிறது. சுருங்கக் கூறின் அது 10, 20 30, அல்லது 40 சதவிகிதத்தினர் ஆயினும் அவர்கள் வீழ்ச்சி குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்களது சிந்தனை முதலாளித்துவ கருத்துக்களாலும், கருத்து முதல் வாதத்தாலும் நிரப்பப்பட்டுள்ளது. அவர்கள் பொதுவுடமைக்கட்சி அல்லது இளைஞர் இணைக் குழுவில் ஊடுருவிப் புகுந்துள்ளனர். அவர்கள் பெயரளவே பொதுவுடமைக்காக நிற்கிறார்கள் ஆனால் உண்மையில் அவர்கள் பொதுவுடமை எதிர்ப்பாளர்கள் அல்லது ஊசலாட்டக்காரர்கள் (மா. தே நூ. தொகுதி 5, பக்கம் 461)

சோசலிச உடமை மாற்றத்தைத் தொடர்ந்து சிறிது காலம் பதுங்கியிருந்த கட்சிக்குள்ளும் வெளியேயும இருந்த இந்த வர்க்க எதிரிகள்தான் முதலில் லியு-செள சி தலைமையிலும் பின்னர் லின மற்றும் நால்வர் கும்பலின் தலைமையிலும் இறுதியாக தெங்-சியெள பிங் தலைமையிலும் அடுத்தடுத்து முதலாளித்துவ தலைமையகங்களை நிறுவி கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளிததுவத்தை மீட்க முயன்றனர்; முயலுகின்றனர். இந்த நச்சுக்களைக் கெல்லியெறிந்து சோசலிசப் புரட்சியைத் தொடரவும், சோசலிச நிர்மாணத்தை கொண்டு செலுத்தவும பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கெட்டிப்படுத்தி பாதுகாக்கவும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சி இன்றியமையாததானது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை முழுமையாக நோக்கினால் அது ஒருபுறம் லியு-செளசியால் தலைமை தாங்கப்பட்டதும் தெங்-சியெள பிங்கால் தலைமை தாங்கப்படுவதுமான முதலாளித்துவ தலைமையகங்கள், மற்றொரு புறம் லின் பியெள மற்றும் நால்வர் கும்பல் தலைமை தாங்கிய முதலாளித்துவ தலைமையகங்கள் ஆகிய அனைத்து எதிர்ப்புரட்சி முதலாளித்துவப் பாதையாளர்களுக்கும் எதிரானதுதான். வலது சந்தர்ப்பவாதத்தையும் இடது சந்தர்ப்பவாதத்தையும் பிரதிநிதித்துவப் படுத்திய இவ்விருவகைக் முதலாளித்துவ தலைமையகங்கள். இவ்விருவகை போக்குகள் ஒன்றுக்கொன்று எதிராக இருந்தாலும்,



படிப்பகம்

www.padippakam.com

மார்க்சிய–லெனினிய–மாசேதுங் சிந்தனையை எதிர்ப்பதில் ஒன்று படுகின்றன. சோசலிசப் பாதையினூடாக கம்யூனிசத்தை அடைவதற்கு ஒரே ஒரு பாதைதான் உள்ளது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதுதான் அப்பாதை. மாற்றுப் பாதையாக முன் வைக்கப்படுகின்ற சந்தர்ப்பவாதப் பாதை. அது வலதானாலும் சரி அல்லது இடதானாலும் சரி உண்மையில் முதலாளித்துவப் பாதையுடன் இணைந்ததாகும்; முதலாளித்துவ மீட்சிக்காக நிற்பதாகும்.

கட்சிக்குள் சந்தர்ப்பவாதப் போக்குகள் எதிரியை மிகை மதிப்பீடு செய்வதால் எழும் கோழைத்தனம் அல்லது வால்பிடிக்கும் தன்மையால் வலது சந்தர்ப்பவாதமாக எழுகிறது; அல்லது எதிரியைக் குறைத்து மதிப்பீடு செய்வதால் எழும் கட்டுக்கடங்காத தன்மை அல்லது 'துணிச்சல் கொள்கை'யால் இடது சந்தர்ப்பவாதமாக எழுகிறது. எவ்வாறாயினும் இரண்டு போக்குகளும் பாட்டாளி வர்க்கப் பாதைக்கு எதிராக எழுபவையே. இடது, வலது சந்தர்ப்பவாதங்களுக்கு எதிரான சமரசமற்ற போராட்டம நடத்துவதை பெயரளவிற்கு ஒப்புக்கொண்டாலும் இரு சந்தர்ப்பவாதப் போக்குகளும குட்டி முதலாளித்துவ போக்குகளே; அதாவது குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதால் இடது சந்தர்ப்பவாதப் போக்கும், குட்டி முதலாளித்துவ மிதவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் வலது சந்தர்ப்பவாதப் போக்கும் எழுகின்றன; எவ்வாறாயினும் குட்டி முதலாளித்துவப் போக்குகளே என்பதால் அவற்றை வர்க்கப் போராட்டமாகக் கருதிக் கையாண்டு இடது தீவிரவாதத் தவறுகளை இழைத்ததாக மாவோவின் மீது தெங் சியௌ பிங் கும்பல் குற்றஞ்சாட்டுகிறது. இருவழிப் போராட்டம் குறித்து தவறான கோட்பாடும் நடைமுறையும் கொண்டிருந்ததாக சாடுகிறது. எனவே 'பொதுவாகக் கூறுவதானால், உட்கட்சிப் போராட்டங்கள் கட்சி உறுப்பினர்களுக்கிடையிலான ஒரு சித்தாந்தப் போராட்டத் தன்மையுடையவை. ஒரு மிகப்பெரிய கோட்பாட்டுப் பிரச்சனையில் வேறுபாடுகள் எழுகின்ற போதுகூட (அம்மாதிரியான வேறுபாடுகளின் மிக உயர்ந்த வடிவம் பாதை பற்றியவை) அவை இன்னமும் தோழர்கள் மத்தியிலான பகைமையற்ற முரண்பாடுகளாகும்' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 22 பக் 14); அவ்வாறு கருதிக்கையாளபபட வேண்டும் என்கிறது லியு தெங் கும்பல்

ஆனால், சோசலிச கால கட்டத்தில் இருவழிப்போராட்டம் ஒரு விசேசமான தன்மையெடுக்கிறது. ஏனெனில் ''நீங்கள் சோசலிசப் புரட்சியை செய்கிறீர்கள்; முதலாளித்துவ வர்க்கத்தினர் எங்கிருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறியவில்லை. பொதுவுடமைக் கட்சிக்குள்ளேயே நேரிடையாக இருக்கிறார்கள்–அதாவது அதிகாரத்திலுள்ள கட்சி நபர்கள்'' என்றார் மாவோ. ''கட்சி அ



படிப்பகம்

www.padippakam.com

சாங்கம், படை மற்றும் பல்வேறு கலாச்சாரத் துறைகளில் ஊடுருவியுள்ள முதலாளித்துவ வர்க்கத்தின் அந்தப் பிரதிநிதிகள் ஒரு எதிர்ப்புரட்சித் திரிபுவாதிகளின் கும்பலாகும். நிலைமைகள் முதிர்ச்சியுறும் போது அவர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள். பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரமாக மாற்றிவிடுவர்'' என்றும் எச்சரித்தார் மாவோ. எனவேதான் ''மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் தாக்குதல் இலக்கு அதிகாரத்தில் உள்ள கட்சி நபர்களாகும்'' என்றும் மாவோ வரையறுத்தார். இது இடது சந்தர்ப்பவாதப் பிழையா? இல்லை. கட்சிக்குள் நடக்கும் இருவழிப் போராட்டம் குறித்து இதுவொன்றும் இடது தீவிரவாதப் போக்கில்லை.

இருவழிப் போராட்டம் குறித்து மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் வரையறுப்புகள் என்ன? ''வர்க்கங்கள் நிலவும் வரை பொதுவுடமைக் கட்சிக்குள் சரியான கருத்துகளுக்கும், தவறான கருத்துக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள், கட்சிக்குள் வர்க்க முரண்பாடுகள் ஏற்படுத்துகிற எதிரொலிப்பாகும். முதலாவதாக சில பிரச்சினைகளைப் பொருத்தவரை இத்தகைய முரண்பாடுகள் பகைத்தன்மையுள்ள முரண்பாடுகளாகப் புலப்படாமல் இருக்கலாம். ஆனால் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் அவை வளர்ச்சி பெற்று பகைத்தன்மையுள்ளவையாக மாறும். சோவியத் யூனியனின் பொதுவுடமைக்கட்சி காட்டுவது என்னவென்றால், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் சரியான சிந்தனைக்கும் டிராட்ஸ்கி, புகாரின் முதலிய வர்களின் தவறான சிந்தனைக்கும் இடையிலான முரண்பாடு முதலில் ஒரு பகைத் தன்மையுள்ள வடிவத்தில் தன்னைப் புலப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் பிறகுதான் அது பகையாக வளர்ச்சி பெற்றது. சீனப் பொதுவுடமைக் கட்சியிலும் இதேபோன்று நிகழ்வுகள் உள்ளன ... தற்போது நமது கட்சியில் உள்ள சரியான சிந்தனைக்கும் தவறான சிந்தனைக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஒரு பகைத் தன்மையுள்ள வடிவத்தில் தன்னைப் புலப்படுத்தவில்லை. தவறுகளை இழைத்துள்ள தோழர்கள் அவற்றைத் திருத்திக்கொள்ள முடியுமென்றால், அம்முரண்பாடுகள் பகையாக மாறா. எனவே கட்சியானது ஒரு புறம் தவறான சிந்தனைக்கு எதிரான தீவிரமான போராட்டமொன்றை நடத்த வேண்டும். மற்றொருபுறம், தவறு இழைத்துள்ள தோழர்கள் விழித்தெழுவதற்கு நிறைய வாய்ப்புகளைத் தரவேண்டும். இப்படியிருக்கும் போது, பகையான போராட்டம் பொருத்தமற்றது என்பது வெளிப்படை. ஆனால் தவறுகளைச் செய்துள்ளவர்கள் அவற்றில் விடாப்பிடியாக இருந்து அவற்றை மேலும் தீவிரப்படுத்தினால் இந்த முரண்பாடு பகையாக வளர்வதற்கான



படிப்பகம்

www.padippakam.com

சாத்தியப்பாடு இருக்கிறது. (மா தெ நூல், தொகுதி 1, பக்கம் 344) என்று 1937-ல் மாவோ எழுதினார்

இருவழிப் போராட்டம் குறித்து மாவோவின் மேற்கண்ட வரையறுப்புகளை கோட்பாடு ரீதியில் தெங் சியௌ பிங் கும்பல் அங்கீகரிக்கிறது ''அதுசரி, விஷயங்கள் மாறுகின்றன, வளர்கின்றன. தவறு செய்தவர்கள் தமது தவறுகளில் அழுந்தி நின்று, தவறுகளோடு தொடர்வதும், கட்சியின் ஸ்தாபனக் கட்டுப்பாடுகளை மீறுவதும் அல்லது சதி நடவடிக்கைகளை செய்வதும் என்றிருப்பார்களேயானால், அவ்வாறு செய்யும்பொழுது ஆதிமுதலில தன்மையில் பகைமையற்றதாகக் கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகள் பகைமையானவைகளாக மாறும்'' என்பதை தெங் கும்பல் ஒப்புக்கொள்கிறது (பீஜிங் ரிவ்யூ தொகுதி 22, எண் 22, பக் 14) இந்த வரையறுப்புகளைப் பிரயோகித்து புரட்சிக்கு முன்பு சென் தூசியுவுடனான முரண்பாடு அவரது கட்சி விரோத நடவடிக்கைகளால் பகைமையானதாக மாறியது என்றும், இறுதியாக அவர் கட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டார் என்றும் உதாரணம் கூறுகிறது மற்றொரு உதாரணமாக, லின், நால்வர் கும்பலை எடுத்துக்கொண்டு கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அதற்கான 'இடது' திரிபுவாத சித்தாந்த அரசியல் மற்றும் ஸ்தாபனத்திட்டம், கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் நபர்களுடன் கூடிய எதிர்ப்புரட்சிச் சதிகார கூட்டமாக அமைந்தது; எனவே லின் மற்றும் நால்வர் கும்பலுக்கெதிரான இருவழிப் போராட்டம் தமக்கும் எதிரிக்கும் இடையிலான ஒரு ஜீவமரணப் போராட்டமாக இருந்தது; முரண்பாடு பகைமையானதாக இருந்தது என்று தெங் கும்பல் கூறுகிறது ஆனால் இருவழிப் போராட்டம் குறித்த தனது வரையறுப்புகளையே கூட யதார்த்த பூர்வமாக அது பிரயோகிக்க மறுக்கிறது; சந்தர்ப்பவாதமான வியாக்கியானம் தருகிறது. தமக்கு எதிராக மாவோ தலைமையில் நடந்த இருவழிப் போராட்டத்திற்கு ஒருவகையிலும், ஒருபுறம் மாவோவின் பாட்டாளி வர்க்கப் பாதைக்கெதிராக தாம் முதலாளித்துவப் பாதையை உயர்த்திப் பிடித்து நடத்திய, நடத்திவரும் இருவழிப்போராட்டம், மற்றொரு புறம் தமது சகபாடிகளும் தமது திரிபுவாதத்தின் மறுபக்கமுமான லின் மற்றும் நால்வர் கும்பலுக்கெதிரான போராட்டத்திற்கு வேறொரு வகையிலும் சந்தர்ப்பவாதமாக பேசுகிறது

''பொதுவாகப் பேசினால். ஒரு அரசியல் வழிபற்றிய கட்சிக்குள் உள்ள பிரச்சினைகள் சரி எது, தவறு எது என்ற ஒரு தெளிவைப் பெறுவதற்கானவை. அவை விமர்சனம் மற்றும் சுயவிமர்சனம் என்ற உட்கட்சிப் போராட்ட முறையால் தீர்க்கப்படவேண்



படிப்பகம்

www.padippakam.com

ும்; எதிரியுடன், எதிர்ப்புரட்சியாளருடன் கையாளும் முறையால் அல்ல,'' தமக்கு எதிரான போராட்டத்தை இவ்வாறுதான் நடத்தியிருக்க வேண்டும் என்று லியு தெங் கும்பல் கூறுகிறது. ''சில சமயங்களில் ஒரு அநரயல் வழிபற்றிய கட்சிக்குள் உள்ள பிரச்சினைகள் எதிர்ப்புரட்சிப் பிரச்சினைகளாக வளர்வது சாத்தியம்; ஆனால் அப்பொழுது கட்சிக்குள் உள்ள பிரச்சினைகளாக இனியும் அவை இல்லை. அதாவது சொல்வதானால், அரசியல் வழியின் ஆதிமுதல் பிரச்சினைகள் எதிர்ப்புரட்சியாகக் கருதப்படக்கூடாது; பிறகு எதிர்ப்புரட்சிப் பிரச்சினைகளை அரசியல் வழியின் பிரச்சினைகளாக இனியும் நடத்தக்கூடாது'' லின் மற்றும் நால்வர் கும்பலுக்கெதிரான போராட்டத்தை இவ்வாறு தான் நடத்தியிருக்கவேண்டும் என்று லியு-தெங் கும்பல் கூறுகிறது. அதாவது கட்சியை உடைத்து தலைமையைக் கைப்பற்றும் எதிர்ப்புரட்சி நோக்கங்கள் லின் மற்றும் நால்வர் குப்பலிடம் மட்டும் இருந்ததாகவும், லியு-தெங் கும்பலின் உட்கட்சிப் போராட்டமெல்லாம் ஒரு அரசியல் வழியின் சரி அல்லது தவறுக்கான சித்தாந்தப்போராட்டம் மட்டுமே என்றும் கூறுகிறது.

அதுமட்டுமல்ல, கணிசமான அளவு நீண்டகாலத்திற்கு 'வலதை' விட 'இடதை'த் தாங்குவது சிறந்தது என்ற கருத்தோட்டம் நிலவியது; வலது விலகல் மட்டுமே இருக்கிறது, இடது திரிபுவாதமே இல்லை என்ற பொய்யான தோற்றம் உருவாக்கப்பட்டது என்று லியு தெங் கும்பல் குற்றஞ்சாட்டுகிறது ''பிறகு, விஷயங்கள் சிறிது சிறிதாக மாறத்தொடங்கின; தாக்குதல் வலது வாதத்திற்கெதிராக ...டும் திருப்பப்பட்டிருந்து; எப்பொழுது 'இடது வாதத்'திற்கு எதிராக இல்லை; வலது வாதத்திற்கு எதிரான போராட்டம் புரட்சியில் ஒரு தொடர்ச்சியான அம்சமாக மாறியது; அதே போன்று சரியான விஷயங்களும் வலதுசாரியாகவும், இடதுசாரி விஷயங்களும் கூட வலதுசாரியாகவும் பார்க்கப்பட்டது''. ''கலாச்சாரப் புரட்சியின் ஆண்டுகளில், அதீத இடது போக்கின் சிந்தனையும், அதீத இடது பாதையும் அதன் உயர் முகட்டிற்கே சென்றது; அவற்றை எதிர்ப்பதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை 'இடதுவாத'த்திற்கு எதிர்ப்பிருக்கும் பொழுதெல்லாம் 'வலது விலகலின் ஒரு மறு எழுச்சி' அல்லது 'சரியான தீர்ப்புகளைத் திருத்தி மாற்றுவதற்கான ஒரு வலது விலகல்' என்று சித்தரிக்கப்படும்''. ''இவ்வாறு, 'தொடர்ந்த புரட்சி'யின் பொருள் வலது வாதத்தை இடைவெளியின்றி போரிடுவது மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையின் அடிப்படையிலான எல்லா சரியான விஷயங்களும் கொள்கைகள், பாதைகளும் 'வலது திரிபுவாதம்' என்று நிராகரிக்கப்பட்டன. 'இடது' திரிபுவாதத்தை மூடி மறைப்பதற்காக அப்படியே விமர்சிக்கப்பட்டன. பத்தாண்டு 'புரட்சிகர மக்கள் திரள்



படிப்பகம்

www.padippakam.com

விமர்சனத்தின்' முக்கியமான அம்சம் இதுவாக இருந்தது'' (பீஜிங் ரிவ்யு, தொகுதி 23, எண் 16, பக்: 21–22) என்று தெங் கும்பல் அப்பட்டமாகப் புளுகுகிறது

உண்மை என்ன? மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி லியு செள சி கும்பலுக்கெதிராக 1966-ல் தொடங்கப்பட்டு 1976-ல் நால்வர் கும்பல் முறியடிக்கப்பட்டபின் நடந்த சீனப் பொதுவுடமைக் கட்சியின் பதினோராவது பேரவையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 1966-76 ஆகிய கலாச்சாரப்புரட்சி நான்கு இடது மற்றும் வலது திரிபுகளுக்கெதிராக நடத்தப்பட்டது அவற்றில் இரண்டு முதலாளித்துவ தலைமையகங்களான லின் மற்றும் நால்வர் கும்பலுக்கெதிரான போராட்டங்கள் அதீத இடது திரிபுவாதத்திற் கெதிராக வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்படவில்லையா? உண்மையில் முதல் சுற்றில் லியு-தெங் கும்பலின் வலது திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தில் மறைந்திருந்து தலைதூக்கியவுடனே 1969-ம் ஆண்டு ஒன்பதாவது கட்சிக் காங்கிரசிலேயே லின் பியௌ வின் இடது திரிபுவாதம் தாக்குதலுக்குள்ளானது. சென்போடாவுடன் கள்ளக் கூட்டுக்கொண்டு லின் பியௌ முன்வைத்த ஒன்பதாவது பேரவைக்கான அரசியல் அறிக்கை நிராகரிக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட அரசியல் அறிக்கைக்கு சென்போடா தெரிவித்த எதிர்ப்பிற்கு லின் பியௌ வின் மறைமுக ஆதரவும் அம்பலப் படுத்தப்பட்டு முறியடிக்கப்பட்டது லின் பியௌ வின் எதிர்ப்புரட்சி ஆட்சிக் கவிழ்ப்பிற்கான முயற்சிகளை ஒன்பதாவது மத்திய கமிட்டியின் இரண்டாவது பிளீன கூட்டத்தொடர் 1970 ஆகஸ்டில் தாக்கித் தகர்த்தது. லின் பியௌ கட்சி விரோத கும்பல் தகர்க்கப்பட்ட பின் வெற்றிகரமாகக் கூடிய பத்தாவது பேரவை பின்வருமாறு கூறுகிறது

''லின் பியௌ வை விமர்சிக்கவும் வேலைப்பாணியை சீர் செய்யவும் ஒரு இயக்கம் நாடுமுழுவதும் தொடங்கப்பட்டது. மொத்தக் கட்சியும், படையும், மக்களும் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை சிரத்தையுடன் கற்று லின் பியௌ மற்றும் அவர் போன்ற பிற மோசடிப் பேர்வழிகளுக்கெதிராக புரட்சிகர மக்கள் திரள் விமர்சனத்தை நடத்துகிறார்கள்; பிறமோசடிப் பேர்வழிகளின் எதிர்ப்புரட்சி குற்றங்களுக்கு சித்தாந்த ரீதியாக, அரசியல் ரீதியாக மற்றும் ஸ்தாபன ரீதியாக கணக்குத் தீர்க்கப் பட்டது; இவை உண்மையான மார்க்சியவாதிகளை போலிகளிடமிருந்து வேறுபடுத்துவதற்கான ஒரு பொது தன்மையை உயர்த்தியது'' லின் பியௌ, கன்ஃபூசியஸ் மற்றும் மென்சியஸை விமர்சிக்கும் இயக்கம் தெங் சியௌ பிங் கும்பல் மீண்டும் தனது வலது சந்தர்ப்பவாத 'வாலை' ஆட்டத் தொடங்கும் வரை நீடித்திருந்



படிப்பகம்

www.padippakam.com

சது' இவ்வியக்கத்தைத் திசைதிருப்பிவிட நால்வர் கும்பல் எத்தனித்தபோது மாவோ கண்டித்து 'மாறாநிலை வாதம் தலைவிரித்தாடுவதாகக்' கூறி ஒரு ஆவனத்தையும் சுற்றுக்கு விட்டார்; அதன்மூலம் லின் பியெள விற்கெதிரான புரட்சிகர மக்கள் திரள் விமர்சன இயக்கத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார் அதேபோன்று ஆரம்பம் முதலே நால்வர் கும்பலின் அதீத இடது சந்தர்ப்பவாதங்களையும், எதிர்ப்புரட்சி சதிகளை யும் விமர்சித்து முறியடித்து வந்திருக்கிறார். இவற்றையும். நால் வர் கும்பலுக்கெதிராக நடந்த போராட்டத்தையும் பதினோரா வது பேரவை அதிகார பூர்வமாக விவரித்துள்ளது.

உண்மைக்கு மாறாக, லின் மற்றும் நால்வர் கும்பலுக் கெதிராக நடந்த போராட்டங்களை மூடிமறைத்து மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சியின் போது இடது திரிபு வாதத்திற்கெதிரான போராட்டமே நடக்கவில்லை; ஆனால் அதுதான் உண்மையில் பிரதானப் போக்காக இருந்ததென்று தெங் கும்பல் கூறுகிறது. "நமது கட்சிக்குள் 1966 க்கு முன்பு வலது திரிபுவாத அபாயம் தோன்றவே இல்லை என்பது எக் கச்சக்கமாக தற்போது தெளிவாக உள்ளது நிச்சயம் அதற்கு மாறாக, நமது கட்சியையும் புரட்சி இலட்சியத்தையும் கீழறுத் துப் போட்டும் 'இடது வாதம்' நீண்டகாலத்திற்கு பிரதான போக்காக இருந்தது" (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 16 பக் 22) இவ்வாறு கூறுவதன் மூலம் தனது வலது திரிபுவாதத்தை மூடிமறைக்க எத்தனிக்கிறது. ஆனால் அரசியல் வழியில வலது திரிபுவாத அபாயத்திலும், ஸ்தாபன ரீதியில் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளிலும் லியு-தெங் கும்பல் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்திருக்கிறது. இதை முன்பே பார்த்தோம்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போதும் அதற்கு முன்னரும் வலது வாதத்தை மட்டுமே எதிர்த்ததாகவும், 'இடது வாதம்' தாக்குதலுக்குள்ளாகவில்லை அது சிறந்ததாகக் கருதப்பட்டது என்றும் லியு-தெங் கும்பல் குறை கூறுகிறது. இடது மற்றும் வலது திசை விலகல்கள் இரண்டையும் ஏககாலத் தில் அல்லது சம அளவு தாக்கவேண்டும் என்பதல்ல இருவழிப் போராட்டத்தை நடத்துவதற்கான முறை மாறாக குறிப்பிட்ட தருணத்தில் பாட்டாளி வர்க்க இயக்கத்தில் எந்தத் திசைவிலகல் பிரதான அபாயமாக இருக்கிறதோ அதற்கெதிரான போராட் டத்தை சமரசமின்றி மார்க்சிய லெனினிய மாசேதுங் சிந்தனை யின் ஒளியில் நடத்தவேண்டியதே மிகச்சரியான. முறையாகும் தொடர்ந்து மூன்றாண்டுகள் வரட்சி காரணமாக கடும் அறுவடை வீழ்ச்சி மற்றும் சோவியத் உதவியை விலக்கிக்கொண்டது ஆகிய வற்றாலும், 'மாபெரும் முன்னோக்கிப் பாய்ச்சில்' இயக்கத்தில்



படிப்பகம்

www.padippakam.com

மூல 'இடது' தவறுகளாலும் பின்னடைவுகள் நிகழ்ந்தபோது மத்தியக்கமிட்டியின் தலைவர் என்கிறமுறையில் கூட்டுத்துவ உணர்வோடு 1962 ல் மத்தியக்கமிட்டி ப்லீனத்தொடரில் மாவோ பொறுப்புக்களை ஒப்புக்கொண்டு சுயவிமர்சனம் செய்து கொண்டார். இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்திலிருந்த கட்சி நபர்கள் வலது சந்தர்ப்பவாதத் திசையிலிருந்து தாக்குதல் தொடுத்தனர். சித்தாந்த அரங்கத்திலான இத்தாக்குதலுக்கு அதன்மூலம் முதலாளித்துவமட்சிக்கான பிரச்சாரத்திற்கு வானொலியையும் பத்திரிக்கையையும் பயன்படுத்தினர். பொருளாதார ஊக்கம், தனியார் உற்பத்தி, இன்னும் பிற பொருளாதார சீர்திருத்தங்களுக்கும், மற்றும் அரசியல் சீர்திருத்தங்களுக்குமான கருத்துக்களை முன் வைத்தனர். இக்காரணங்களால் 1959, 60, 61, ஆண்டுகளில் வலது சந்தர்ப்பவாதம் பிரதான அபாயமாக எழுந்து பெங்கேஹுவாய்யால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டபோது எதிர்த்து முறியடிக்கப்பட்டது.

ஆனால் லியு செள சி வலது சந்தர்ப்பவாதத்தை அப்பொழுது ஆதரித்து மல்லுக்கட்டினார் என்பதை தற்போதும் லியு–தெங் கும்பல் ஒப்புதல் வாக்குமூலமளிக்கிறது. ''1959–ல் சொல்லிக் கொள்ளப்பட்ட வலது திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தை பொருத்தமற்றது; ஒரு 'இடது' தவறு என்றுகூட (லியு) குறிப்பிட்டார். அவர் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டினார்: 'லூஷான் மாநாட்டில் ஒரு தவறு இருந்தது. அந்த சமயத்தில் வலது வாதத்திற்கெதிராக அல்ல, 'இடது வாத'த்திற்கெதிரான போராட்டமாக தொடர்ந்து இருந்திருக்கவேண்டும்; ஆனால் அதுபோய் முடிகையில் வலது வாதத்திற்கெதிரான ஒரு போராட்டமாக திசைதிருப்பப்பட்டது,' 'லூஷான் மாநாட்டில் வலது வாதத்தை எதிர்த்தது தவறு,' 'கட்சிமையம் இதற்கு பொறுப்பாக்கப்படவேண்டும்.' இன்னும் பிற (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23 எண் 16 பக் 22)'' இங்கு லியு செள சி குறிப்பிடுவது பெங்டேஹுவாய்-இன் வலது சந்தர்ப்பவாதம் முறியடிக்கப்பட்டது தவறென்கிறார்.

இதைத் தொடர்ந்து லியு-தெங் கும்பல் வலது திரிபுவாதிகளாக முற்றாக சீரழிந்தது மட்டுமல்ல எதிர்ப்புரட்சி சதிவேலைகளிலும் இறங்கினர். லியு-தெங் கும்பலின் பிரமுகர்களில் ஒருவரும் மாவோவின் பாட்டாளி வர்க்கப்பாதையைத் தொடர்ந்து தாக்கி எழுதிவருபவருமான பீஜிங் துணை மேயர் வூஹான் என்பவர் லூஷான் மாநாட்டில் சோவியத் ஆதரவாளர் பெங்டேஹுவாய் இன் வலது சந்தர்ப்பவாதம் முறியடிக்கப்பட்டு அவர் தூக்கியெறியப் பட்டதை உருவகித்து 'ஹாய் ஜீய் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்' என்ற நாடகத்தை அரங்கேற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆஹறானின் தாக்குதல்களை முறியடிக்கும் விமர்சனங்களை வெளியிடுவதையும், புரட்சிகரமான புதிய 'கூத்து' களையும் லியு - தெங் கும்பலின் மற்றொரு தலைவரும், தற்போது தெங் கும்பலின் தலைவர்களில் ஒருவராக அரசியல் மறுவாழ்வு பெற்றிருப்பவரும் அன்றைய மத்தியக் கமிட்டியின் செயலக அரசியல் தலைமைக் குழுவின் உறுப்பினருமான பீகிங் மேயர் பெங் செங் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தித் தடுத்தார். உண்மையில் ஓர் எதிர்ப்புரட்சி திரிபுவாத சதிக் கும்பலாக இவர்கள் இயங்கினர். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை அதிகார பூர்வமாக தொடங்கி வைக்குமாறு தூண்டியதே இக்கும்பலின் கட்சி விரோத ஜனநாயக விரோத கள்ளத்தனமான நடவடிக்கை ஒன்று அம்பலப்பட்டுப் போனதுதான்.

மத்தியக்கமிட்டி 'கலாச்சாரப் புரட்சிக்குப் பொறுப்பாக ஐவர் குழு' ஒன்றை அமைத்திருந்தது. ஐவர் குழுவில் பங்கேற்றிருந்த பெங் செங் அதன் உறுப்பினர்களைக் கலக்காமல், அவர்களது முதுகுக்குப் பின்னே 'தற்போதைய அறிவார்ந்த விவாதம் பற்றிய தொகுப்பறிக்கை' என்ற ஆவணத்தைத் தயாரித்து உள்ளூர்க் கட்சிக் கமிட்டியின் கருத்தையோ, மத்தியக் கமிட்டித் தலைவர் மாவோவின் ஒப்புதலோ இல்லாது மத்திய கமிட்டியின் அதிகார பூர்வமான ஆய்வுக்கு அனுப்பினார். இந்த ஆவணம் லியு - தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தை ஒன்று செறித்ததாக உள்ளடக்கியிருப்பதுடன், அந்த வழியில் கட்சியையும், மக்களையும், அரசையும் வழி நடத்துவதற்கான முயற்சியாகவும் இருந்தது. இது மிக மிக நேர்மையற்றதும், முறை கேடானதும், அதிகாரத்தை கேடாகப் பயன்படுத்துவதும் ஆகும். மத்தியக் கமிட்டியின் பெயரால் அவசர கோலமாக அந்த ஆவணம் கட்சி முழுவதும் சுற்றுக்கு விடப்பட்டது. இதை வன்மையாகக் கண்டித்து, வெளிப்படையாக விமர்சித்து மத்தியக்கமிட்டி ஒரு சுற்றறிக்கையை கட்சி முழுவதும் அனுப்பியது. கட்சி விரோத, மக்கள் விரோத, சோசலிச விரோத முதலாளித்துவப் பாதையை லியு - தெங் கும்பலின் அந்த ஆவணம் உயர்த்திப் பிடிப்பதாக வெளிப்படையாக அம்பலப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து கட்சியின் மத்தியக் கமிட்டி மற்றும் மாவோவின் பாட்டாளிவர்க்க பாதையையும், கொள்கைகளையும் வழிகாட்டுதல்களையும் அமுல்படுத்த லியு - தெங் கும்பல் மறுத்து தமது சொந்த முதலாளித்துவப்பாதையையும், கொள்கைகளையும் தாம் கைப்பற்றியிருந்த அதிகாரத்தின் பகுதிகளைப் பயன்படுத்தி அமுலாக்கியது. பொங்கியெழும் கலாச்சாரப் புரட்சியையும், புரட்சிகர செங்காவலர்கள் மற்றும் மக்களையும் ஒடுக்குவதற்கும் அதிகாரத்தைப்



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்தியது. எனவே தான் கலாச்சாரத் துறையில் தொடங்கிய புரட்சி சகல துறைகளுக்குமானதாக விரிந்து அரசியல் அதிகாரத்துக்கான புரட்சியாக வளர்ந்தது

லியு - தெங் கும்பலின் வலது சந்தர்ப்பவாதம் மற்றும் லின் - நால்வர் கும்பலின் இடது சந்தர்ப்ப வாதத்திற்கான சமூக அடிப்படைகள் என்ன ?

சோசலிசப் புரட்சியிலும், நிர்மாணத்திலும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் நடக்கும் போராட்டம் இடைநிலைச் சக்திகளை வென்றெடுப்பதற்காக நடக்கும் போராட்டமாகும்.

> " பல இடைத்தட்டு சக்திகள் ஊசலாடுகிறார்கள் ; இதுவும் நல்லதுதான். அவர்களது ஊசலாட்டத்திலிருந்து அவர்கள் பாடங்களைப் பெறுவர். இது இடைத்தட்டு சக்திகளின் உரைகல்தான் ; இல்லையானால் அவர்கள் அவ்வாறு கருதப்படுவார்களா ? ஒரு கோடியில் பாட்டாளி வர்க்கம். மறுகோடியில் முதலாளித்துவ வர்க்கம் ; அத்துடன் அவற்றுக்கிடையே பெரும் அளவில் இடைத்தட்டு சக்திகள் ; இரு கோடியிலும் சிறு எண்ணிக்கை மற்றும் இடையில் பெரும் எண்ணிக்கை என்கிற ஒரு விவகாரம். ஆனால், இறுதி ஆய்வில் இடைத்தட்டு சக்திகள் நல்ல மக்கள் ; பாட்டாளி வர்க்கத்தின் கூட்டாளிகள். முதலாளித்துவ வர்க்கமும் கூட அவர்களை கூட்டாளிகளாக வென்றெடுக்க விரும்பினார்கள்; ஒரு சமயம் அவர்கள் அவ்வாறு தோற்றமளித்தார்கள். ஏனெனில் இந்த இடைத்தட்டு சக்திகளும் கூட நம்மை விமர்சித்தார்கள் ; ஆனால் அவர்களது விமர்சனங்கள் நல்ல நோக்கமுடையவை. அவர்கள் நம்மை விமர்சிப்பதைக் கண்ணுற்ற போது வலதுசாரிகள் வெளிப்பட்டுத் தொல்லைகள் தந்தார்கள் " என்றார் மாவோ (மா. தே. நூ., தொகுதி 5, பக். 465)

எனவே, இந்த இடைத்தட்டு சக்திகளை வென்றெடுக்க ஏதுவான சித்தாந்த, அரசியல் மற்றும் பிற துறைகளிலான கொள்கைகளை - பாதையை எவ்வாறு ஒருவர் முன் வைத்து வழிநடத்துகின்றார் என்பதைப் பொருத்தே இடது அல்லது வலது சந்தர்ப்பவாதப் பாதைக்கும், மார்க்சிய - லெனினியப் பாதைக்கும் இடையிலான வேறுபாடு அமைகிறது. இடது அல்லது வலது சந்தர்ப்பவாதப் போக்குகள் இந்த இடைத் தட்டு சக்திகளின் தீவிரவாத அல்லது மிதவாத



படிப்பகம்

www.padippakam.com

ஊசலாட்டப் போக்குகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் நடைமுறைத் தந்திரங்களை முதலாளித்துவ வர்க்கம் பின்பற்றுவதையேக் காட்டுகின்றன. கட்சியின் இருவழிப் போராட்டத்தில் இடது அல்லது வலது சந்தர்ப்பவாத போக்குகளை முன்வைத்து மார்க்சிய - லெனினியப் பாதையை எதிர்ப்பதன் மூலம் இடைத்தட்டு சக்திகளின் ஆதரவைப் பொதுவுடமைக் கட்சியும், பாட்டாளி வர்க்கமும் இழப்பதற்கும், முதலாளித்துவ மீட்சிக்கும் அதிகாரத்திலுள்ள கட்சி நபர்கள் வழி வகுக்கின்றனர்.

சோசலிசப் புரட்சியும், சோசலிச நிர்மாணமும் இடைத்தட்டு சக்திகளை. குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரை படிப்படியாக இல்லாதொழிக்கிறது. பாட்டாளி வர்க்கத்தினராக மாறும்படி நிர்ப்பந்திக்கிறது. எனவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் 'ஆட்சியை' அதனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவர்கள் தமது அழிவைத் தவிர்த்துக் கொள்வதற்காக 'ஒரே தாண்டில் சோசலிசத்திற்குள் குதித்துவிடவோ [இதனால்தான் கொள்கையில் **துணிச்சல்** வாதமும் வெறியுணர்வும் தோன்றுகின்றன], அல்லது அது சாத்தியப்படவில்லை என்றால் சிந்தனைக்குப் படுகிற ஒவ்வொரு சலுகையையும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு வழங்கவோ [இதனால் தான் சரணாகதிக் கொள்கை உருவாகிறது] இவ்வர்க்கம் கடும் முயற்சி செய்கிறது.' [ஸ்டாலின் தொகுப்பு நூல், தொகுதி 12, பக். 364] ஊசலாடும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரின் இப் போக்குகளை கட்சியின் பாதையாக முன் தள்ளும் போக்கையே இடது சந்தர்ப்பவாதம் முன் வைக்கிறது. நடைமுறையில் சரணடைவு என்பதுதான் அதன் உள்ளடக்கம். 'இடது' சொற்றொடர்கள், புரட்சிகர துணிச்சல் வாதப் பாவனைகள் ஆகியவை அதன் வடிவம். லின் பியௌ மற்றும் நால்வர் கும்பல் இத்தகு சந்தர்ப்பவாதப் பாதையை முன் வைத்து அதற்கே உரிய முறைகளில் அமுலாக்க முயன்றது. அதன் மூலம் முதலாளித்துவ வர்க்க நலன்களை கட்சிக்குள் பிரதிநிதித்துவப்படுத்தியது.

குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரின் மிதவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வலதுசந்தர்ப்பவாதப்பாதை சோசலிசப் புரட்சியும், சோசலிச நிர்மாணமும் அமைதியாகவே, தானாகவே, வர்க்கப்போராட்டம் இல்லாமலேயே சாதிக்கப்படமுடியும் என்கிறது; சந்தையின் ஆதாரச் சக்திகளை விடுவித்தல், சந்தைக்குச் 'சுதந்திரம்' வழங்குதல், நாட்டுப்புறத்தில் உள்ள



படிப்பகம்

www.padippakam.com

முதலாளிகள் மற்றும் தனியார் பண்ணைகளுக்குள்ள தடைகளை அகற்றுதல் ஆகிய வழிகள் மூலம் புதிய கிராமப்புற முதலாளிகளை ஆயுதபாணியாக்க வேண்டும் என்றது. இவற்றினால் எல்லாம் சோசலிசப் புரட்சியையும், சோசலிச நிர்மாணத்தையும் நிராகரிக்கும் வலது சந்தர்ப்பவாதப் பாதையை லியு-தெங் கும்பல் முன்வைத்தது. இன்னொரு கட்சியை அமைக்க முடியவில்லை எனினும் அதற்கே உரியமுறையில் குட்டி முதலாளியவர்க்கத்தின் ஆதார சக்திகளின் வலிமையிலும், கட்சி மீது பொதுவாக முதலாளித்துவச் சக்திகளும், கிராமப்புற புதிய பண்ணை முதலாளிகளும் செலுத்தும் நிர்ப்பந்தத்திலும் நம்பிக்கை வைத்து செயலாற்றியது.

சாராம்சத்தில் இடது, வலது ஆகிய இரண்டு திசை விலகல்களும் எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தையும், முதலாளித்துவ மீட்சியையும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால், லியு - தெங் கும்பல் தனது சகபாடியும் மற்றொரு கடைக்கோடித் தனமான போக்குமான லின் மற்றும் நால்வர் கும்பலின் தவறுகளைச் சுட்டிக்காட்டி தனது எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தை மூடி மறைக்க எத்தனிக்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் கட்சியின் தவறுகளைப் பயன்படுத்திக்கொண்டு லின் பியௌ மற்றும் நால்வர் கும்பல் ஆகிய எதிர்ப்புரட்சி இடது திரிபுவாதிகள் கட்சி, அரசு மற்றும் மக்களது வாழ்வில் பெரும் நாசத்தை விளைவித்தனர் என்று தெங் சியௌ பிங் கும்பல் கூறுகிறது. உண்மை என்ன? யாவரும் அறிந்த உட்கட்சிப் போராட்டம் பற்றிய சர்வவியாபகமான மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் விதியையும் கூட தெங் சியௌ பிங் கும்பல் திரித்துப் புரட்டுகிறது. ஒரு தவறான போக்குக்கெதிரான போராட்டம் மற்றொரு தவறான போக்கை மறைத்திருக்கிறது என்ற சாதாரண உண்மை விதியை வளைத்துத் திரிக்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியை தொடுத்ததையும் ,பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற மாவோவின் கோட்பாட்டையும் தவறென நிராகரிக்கவே இந்த வாதத்தை முன் வைக்கிறது.

'' 'ஒரு போக்கு மற்றொரு போக்கை மறைக்கிறது என்பதை அவசியமாகக் கருத்தில் கொள்ள வேண்டும்' 'எல்லாம் கூட்டு, போராட்டமே இல்லை' என்பதை முன்வைத்த சென் து சியூவின் வலது சந்தர்ப்பவாதத்தை எதிர்த்ததானது 'எல்லாம் போராட்டம், கூட்டே இல்லை' என்பதை முன் வைத்த வாங் மிங்கின் இடது சந்தர்ப்பவாதத்தை



படிப்பகம்

www.padippakam.com

மறைத்தது. வாங் மிங்கின் இடது விலகலை திருத்தியதானது வாங்மிங்கின் வலது விலகலை மறைத்தது. லியு சௌ சியின் திரிபுவாதத்திற்கெதிரான போராட்டம் லின் பியௌவின் திரிபு வாதத்தை மறைத்தது. கடந்த காலத்தில் ஒரு போக்கு மற்றொரு போக்கை மறைத்திருந்த பல சம்பவங்கள் இருக்கின் றன; அவை ஓங்கி வீசியபோது பெரும்பான்மையினர் அதோடு அடித்துச் செல்லப்பட்டனர்! அச்சமயத்தில் ஒரு சிலர் மட்டுமே தாக்குப்பிடித்து நின்றனர். இன்றைய சர்வதேசிய, உள் நாட்டுப் போராட்டங்கள் இரண்டிலும் கடந்த காலத்தை ஒத்த போக்கு கள் இன்னமும் நிகழலாம்; அதாவது முதலாளிகளுடன் ஒரு கூட்டுக் கொள்கையில் அவசியமான போராட்டத்தை மறந்து விடுவது; முதலாளிகளுடனானமோதல்களின்போது அந்நிலைமை களிலும் ஒரு கூட்டிற்கான வாய்ப்பை மறந்து விடுவது; சரியான காலத்தில் சரியான நேரத்தில் இம்மாதிரியான போக்குகளை காப்பதிலும், திருத்துவதிலும் (தவறான போக்கிற்கெதிரான போராட்டத்தைக் காப்பதிலும், இப்போராட்டம் மறைத்திருக் கும் தவறான போக்குகளைத் திருத்துவதிலும் - மா. அ. க) மிகச்சிறந்த ஆற்றலை நம்மிடம் கோருகின்றன; ஒரு எழுச்சி யுறும் அலையாக ஒரு தவறான போக்கு நம்மை நோக்கிப் பாயும் போது தனிமைகளிருக்கக் கூடாது; ஓங்கும் அலைக்கு எதிராக எதிர் நீச்சல் போட அஞ்சக் கூடாது; உண்மையைச் சந்திக்க அஞ்சக் கூடாது.

> " தலைவர் மாவோ சொல்கிறார் 'எதிர் நீச்சல் போடுவது ஒரு மார்க்சிய - லெனினிய நியதி' " (சீனா விலகிப் போகி றதா? என்ற நூலிலிருந்து —— பத்தாவது சீ. பொ. க. காங்கிரசு அறிக்கை, பக். 241)

ஒரு தவறான போக்கிற்கெதிரான போராட்டத்தின் போது மற்றொரு தவறான போக்கு எழுவதும், எதிர் நீச்சல் போடு வதும் சமுதாயத்தில் முரண்பாடுகள் இருக்கும் வரை நீடிக்கும். இது சமுதாயத்திலிருந்து கட்சிக்குள் பிரதிபலிப்பதும் தவிர்க்க இயலாதது. சோசலிசக் கல்வி, சோசலிச உடமை மாற்றத்திற் காக முதலாளிகளை வாங்கி விடுவது என்ற முதலாளிகளுடனான கூட்டின் போது போராட்டத்தை மறந்ததால் லியு கும்பலின் வலது திரிபுவாதம் எழுந்தது. முதலாளிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய அதிகாரத்திலிருந்த கட்சி நபர்களான லியு கும்பலின் வலது திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தின் போது - சாராம் சத்தில் முதலாளிகளுடனான மோதலின் போது - கூட்டை மறந்த தால் - லின் பியௌ கும்பலின் எதிர்ப்புரட்சி இடது திரிபுவாத



படிப்பகம்

www.padippakam.com

அலை எழுந்தது. லியு கும்பலின் வலது திரிபுவாதமும் லின் கும்பலின் இடது திரிபுவாதமும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள். உண்மையில் லியு - தெங் கும்பலின் வலது திரிபுவாதத்திற்கெதிராக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியொன்று தொடுக்கப்படாதிருந்தால் லின் - நால்வர் கும்பலின் இடதுதிரிபுவாதப் பாதை அம்பலப்பட்டு முறியடிக்கப்பட்டிருக்காது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் வெற்றிகரமான சாதனைகளில் ஒன்று தான் லியு, லின் மற்றும் நால்வர் கும்பல் ஆகிய மூன்று பாட்டாளி வர்க்க விரோதத் தலைமையகங்களில் இரண்டான பின்னிரண்டும் முறியடிக்கப்பட்டதாகும்.

ஒரு கடைக் கோடித்தனமான போக்கைக் காட்டித்தான் மற்றொரு கடைகோடித்தனமான போக்கு தன்னை நிலைநாட்ட, நியாயப்படுத்த முயலுகிறது. ஒரு கடைகோடித்தனமான போக்குக்கெதிரான போராட்டத்தின் நிழலில்தான் வளர்ந்து அதன் அலையில்தான் மற்றொரு கடைக்கோடித்தனமான தவறுக்கு கட்சியையும் மக்களையும் இட்டுச் செல்ல எத்தனிக்கிறது. ஆனால் இன்னொரு போக்கு எழும்போது எதிர் நீச்சல் போடுவதற்குக் கண்டஞ்சுபவர்களான, முதலில் சொன்ன போக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தெங் கும்பல் இரண்டாவது போக்கின் நிழலில் வளர்ந்து அரசியல் பாதுகாப்பு பெற்று நிலைநாட்டிக்கொள்ள முயலுகின்றது என்பதே இன்றைய இருவழிப் போராட்டத்தின் நிலை.

உண்மையைச் சந்திப்பதற்கும் எதிர்நீச்சல் போடுவதற்கும் மட்டுமல்ல புரட்சியையும் கண்டஞ்சுவதுதான் இந்த லியு - தெங் கும்பல். எனவே, புரட்சியின் விளைவுகளைக் கண்டு - 'இழப்புகளைக் கண்டு' பெரும் நாசமென்றும் புரட்சியையே பெரும் பேரழிவென்றும் சித்தரிக்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி அரசியலதிகாரத்திற்கான மாபெரும் புரட்சியாகும். பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும், சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமிடையில் நடக்கும் இப்புரட்சி இரத்தம் சிந்தியும் — இரத்தம் சிந்தாமலும், வெளிப்படையாகவும் — மறைமுகமாகவும், ஆயுதந்தாங்கியும் — ஆயுதமின்றியும், வன்முறையோடும் — வன்முறையின்றியும் நடக்கும் மிகவும் உக்கிரமான ஜீவமரணப் போராட்டமாகும். இத்தகு கண்ணோட்டத்திலிருந்து அணுகினால் மட்டுமே, அதன் மகத்துவத்தை உணர முடியும். அல்லாதவர்களுக்கு, அதுவும் அதன் விரோதியான லியு - தெங்



படிப்பகம்

www.padippakam.com

கும்பலுக்கு அது பெரும் நாசமாகவும்பெரும் பேரழிவுமாகவே தோன்றும்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியால் விளைந்த பெரும் நாசம் - பெரும் பேரழிவு என்று தெங் சியௌ பிங் கும்பல் எதைச் சித்தரிக்கிறது?

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் விளைவாக சித்தாந்தம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் கட்சி ஸ்தாபனம் ஆகிய அனைத்துத்துறைகளிலும் இடது சந்தர்ப்பவாதத் தவறு நிகழ்ந்ததாக தெங் சியௌ பிங் கும்பல் கூறுகிறது. குறிப்பாக,

> "மையத்திலிருந்து அடிமட்ட ஆணிவேர் வரை கிட்டத்தட்ட அனைத்துத் தலைமை அணிகள் மற்றும் பிற அணிகள், ஒவ்வொரு அரங்கிலும் இருந்த புகழ் பெற்ற 'மாடல்' தொழிலாளர்கள் இன்னும் பிற தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் புரட்சிகர இராணுவ வீரர்கள் பல்வேறு அளவுகளில் பொய் வழக்குகள், தாக்குதல்கள் மற்றும் தண்டனைகளால் அவதிப்பட்டார்கள்; அதே சமயம் அவர்களது குடும்பங்களும் உறவினர்களும் உறவுமுறையின் குற்றத்தால் அவதிப்பட்டார்கள். கல்வி நிறுவனங்களின் கிட்டத்தட்ட அனைத்து தலைமையினர், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள், மருத்துவர்கள், சமூக விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், பத்திரிக்கையாளர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான அறிவுஜீவிகள், பல சிறுபான்மை தேசிய இன அணிகள் மற்றும் மக்கள், கட்சியோடு நீண்டகாலமாக ஒத்துழைத்து வந்த தேசபக்த ஜனநாயகப் பிரமுகர்கள், பழைய தொழிலதிபர்கள் மற்றும் வணிகர்கள் மற்றும் தாய்நாட்டை நேசிக்கும் நாடு திரும்பிய கடல் கடந்த சீனர்கள் ஆகியோருக்கும் இதே கதி தான் நேர்ந்தது. இது நமது அனைத்து மக்களும் அவதிப்பட்ட ஒரு கொடூரமான பெரும் பேரழிவாகும்"
> (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 40, பக். 19)

என்று தெங் சியௌ பிங் கும்பல் சித்தரிக்கிறது.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போது அங்குமிங்குமாக சில தவறுகள் நேர்ந்திருக்கக் கூடும்.

> "இம்மாதிரியான ஒரு மகத்தானப் புரட்சிகர இயக்கத்தில் ஒன்று அல்லது மற்றொரு வகைப்பட்ட குறைபாடுகள் எழுவதைத் தவிர்ப்பது கடினமானது; ஆனால், ஆரம்பத்திருந்தே அதன் பிரதான புரட்சிகர திசைமார்க்கம் சரியாகவே இருந்தது."



படிப்பகம்

www.padippakam.com

என்று எட்டாவது மத்தியக் கமிட்டியின் பதினோராவது பிளீனத்தில் கலாச்சாரப் புரட்சியின் கொள்கைத் தீர்மானம் ஒப்புக்கொள்கிறது. ஆனால் தவறுகள் நேராதிருக்கும்படி உரிய அறிவுறுத்தல் தரப்பட்டிருப்பதை இதே தீர்மானம் நிரூபிக்கிறது.

"கட்சிவிரோத, சோசலிச விரோதவலது சாரிகளுக்கும், கட்சியையும் சோசலிசத்தையும் ஆதரிப்பவர்களுக்கும் — அவர்கள் சில தவறானவற்றைச் சொன்னார்கள் அல்லது செய்தார்கள் அல்லது மோசமான கட்டுரைகள் அல்லது வேறு படைப்புகளை எழுதியிருப்பினும் - இடையில் கறாராக வேறுபடுத்திக் கொள்ள வேண்டும்"

"ஒரு புறம் பிற்போக்கு முதலாளித்துவப் பண்டிதக் கொடுங்கோலர்கள் மற்றும் 'அதிகாரத்துவர்கள்' ('Authorities') ஆகியோருக்கும் மற்றொரு புறம் சாதாரண முதலாளித்துவ அறிஞர்களுக்கும் இடையில் கறாராக வேறுபடுத்திக் கொள்ள கவனமாக இருக்க வேண்டும்" (விடுதலை, தொகுதி 1, எண் 12, பக்; 38) என்று அதே தீர்மானம் வலிறுத்தியிருக்கிறது.

பரந்துபட்ட மக்களை எதிர்ப்புரட்சியாளர்கள் என்று முத்திரை குத்தும் சோசலிச விரோத வலதுசாரிகளுக்கெதிராக எச்சரிக்கையாக இருக்கும்படி வலியுறுத்தும் அத்தீர்மானம் கொலை, கொள்ளை, கலவரம், நச்சிடுவது, நாசவேலை செய்வது, அரசு இரகசியங்களைத் திருடுவது ஆகிய கிரிமினல் குற்றங்களில் போதிய தடயம் இருப்பவர்களைத் தவிர யாரையும் தண்டிக்கக்கூடாது ; அவர்களையும் சட்டப்படியே கையாள வேண்டும் என்கிறது.

"நிரூபிக்கப்பட்ட வலதுசாரிகளைக் கூட தகுதி அடிப்படையில் ஒவ்வொரு விவகாரமாக இயக்கத்தின் பிந்திய கட்டத்தில் கையாளப்பட வேண்டும்"

"கட்சி விரோத, சோசலிச விரோத வலதுசாரிகளை முழுமையாக அம்பலப்படுத்தி, கடுமையாகத் தாக்கி கீழிழுத்துப்போட்டு முற்றாக சிறுமைப்படுத்தி அவர்களது செல்வாக்கைத் துடைத்தெறிய வேண்டும். அதே சமயம் அவர்கள் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதற்கு, திரும்புவதற்கு ஒரு வழி விடப்பட வேண்டும்."

"விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுனர்கள், உழைக்கும் பணியாளர்களின் சாதாரண உறுப்பினர்களைக் பொருத்தவரை அவர்கள் தேசபக்தர்களாக இருந்து, ஊக்கத்துடன் உழைத்து கட்சிக்கும் சோசலிசத்திற்கும் எதிராக



படிப்பகம்

www.padippakam.com

இல்லாது, எந்த அந்நிய நாட்டுடனும் கள்ள உறவு கொள்ளாது இருக்கும் வரை இந்த இயக்கத்தில் 'ஐக்கியம், விமர்சனம், ஐக்கியம்' என்ற கொள்கையை நாம் பிரயோகிக்க வேண்டும். விஞ்ஞானிகள், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப வல்லுனர்கள் ஆகிய சிறப்புப் பங்களிப்புகள் செய்தவர்கள் பால் சிறப்புக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும், அவர்களது உலகக் கண்ணோட்டத்தையும், அவர்களது வேலைப் பாணியையும் சிறிது சிறிதாக மாற்றிக் கொள்ள உதவுவதற்கு நாம் முயல வேண்டும்''

''பத்திரிக்கைகளில் எவர் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு விமர்சிப்பதற்கும் அதே மட்ட கட்சிக் கமிட்டியால் விவாதத்திற்குப்பின் தீர்மானிக்க வேண்டும்; சில விவகாரங்களில் மேல் மட்டக் கட்சிக் கமிட்டியின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்''

இவ்வாறு மத்தியக் கமிட்டியின் கலாச்சாரப் புரட்சியில் பின்பற்ற வேண்டிய கொள்கைத் தீர்மானத்தில் போதிய எச்சரிக்கையும், வழிகாட்டுதலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி எக்காரணத்தாலும், எந்தச் சூழ்நிலையிலும் தவறானவர்களுக்கெதிராக தீங்கிழைப்பதாக இருக்கக் கூடாது என்பதில் பொதுவுடமைக் கட்சியும் மாவோவும் மிகுந்தஅக்கறையுடன்இருந்தனர். இதையேஒன்பதாவது பத்தாவதுமற்றும்பதினோராவதுகாங்கிரசுகள்வலியுறுத்தின.

தவறிழைத்தவர்களிடம் கூட பின்வரும் கொள்கையைக் கடைப்பிடிக்கும் படியே ஒன்பதாவது காங்கிரசு வலியுறுத்தியது:

''தவறிழைத்த நபர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு போதனையும், மறுபோதனையும் அளிப்பதற்கும், பொறுமையான, கவனமான சித்தாந்த, அரசியல் வேலை செய்வதற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும். சித்தாந்தத்தில் தெளிவு மற்றும் தோழர்களிடையே ஐக்கியம் ஆகிய இரட்டை நோக்கத்தைச் சாதிக்கும் பொருட்டு 'எதிர்காலத் தவறுகளைத் தவிர்க்கும் பொருட்டு கடந்த கால தவறுகளிலிருந்து கற்றுக் கொள்வது' மற்றும் 'நோயாளியைக் காக்கும் பொருட்டு நோய்க்கு நிவாரணம் செய்வது' என்ற கோட்பாட்டிற்கு நேர்மையாக நடப்பது வேண்டும். அதிகாரத்திலுள்ள முதலாளித்துவ பாதையாளர்களுக்கே உரித்தான குணாம்சமுடைய தவறிழைத்து விட்டு ஆனால் இப்பொழுது அரசியல் உணர்வை உயர்த்திக் கொண்டு பரந்து பட்ட மக்களது புரிதலைப் பெற்றவர்களைப் பொருத்தவரை அவர்கள் முறையாக 'விடுவிக்கப்பட' வேண்டும். பொருத்தமான வேலைகள் ஒதுக்கப்பட வேண்டும்; பரந்து பட்ட மக்கள் திரளி



படிப்பகம்

www.padippakam.com

னரான தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் சென்று தமது உலகக் கண்ணோட்டத்தை மறு வார்ப்பு செய்யவும் ஊக்கப்படுத்த வேண்டும்'' (ஒன்பதாவது காங்கிரசு அறிக்கை; சீனா விலகிப் போகிறதா? என்ற நூலிலிருந்து, பக். 178)

எதிரியுடனான போராட்டத்தில் கூட எச்சரிக்கையாக இருக்கும்படியே ஒன்பதாவது காங்கிரசு வழிகாட்டியுள்ளது; பாட்டாளி வர்க்கம் மிகவும் முன்னேறிய மகத்தான வர்க்கம மற்றும் சித்தாந்த ரீதியில் சக்தி வாய்ந்தது என்கிற முறையில் சாத்தியமான அளவு பெரும்பான்மை மக்களை வென்றெடுக்கவும் கையளவேயான எதிரிகளைத் தனிமைப் படுத்தித் தாக்கும் கொள்கையையே கடைப்பிடிக்க வேண்டுமென்றது. '' 'சாட்சியம், புலனாய்வு மற்றும் படிப்பின் மீது மதிப்பளித்து அழுத்தம் தர வேண்டும்; நிர்ப்பந்தத்திலான வாக்கு மூலங்கள் பெறுவதற்கும் அவற்றுக்கு மதிப்பளிப்பதற்கும் கறாராக தடையிட வேண்டும்' 'அவர்களது குற்றங்களை ஒப்புக் கொள்பவர்களின் பால் நெளிவு சுளிவு காட்டுவது, மறுப்பவர்களைக் கடுமையாக தண்டிப்பது' மற்றும் 'அவர்களுக்கு ஒரு வழியை ஏற்படுத்துவது' என்ற தலைவர் மாவோவின் கொள்கைகளை நாம் அமுலாக்க வேண்டும். எதிரியின் மீது சர்வாதிகாரத்தைச் செலுத்துவதற்கு பிரதானமாக நாம் பரந்துபட்ட மக்களைச் சார்ந்து நிற்கிறோம். வர்க்க அணிகளைத் தூய்மைப் படுத்தும் இயக்கத்தின் புலனாய்வின் மூலம் பொறியிற்பட்ட கெட்ட நபர்கள் அல்லது சந்தேகத்துக்குரியவர்களைப் பொறுத்த வரை, கொலை, கொள்ளை, அல்லது நச்சிடுவது போன்ற குற்றங்கள் புரிந்ததாக தீர்க்கமான சாட்சியம் உடைய வீரிய மிக்க எதிர்ப்புரட்சியாளர்கள் தவிர அனைவர் பாலும் 'யாரையும் கொல்லாதே; பலரைக் கைது செய்யாதே' என்ற கொள்கை பிரயோகிக்கப்பட வேண்டும்; அவர்களும் சட்டப்படியே கையாளப்பட வேண்டும்.

'' முதலாளித்துவப் பிற்போக்கு படிப்புத் துறை அதிகாரத்தினரைப் பொறுத்தவரை நாம் அவர்களை விமர்சித்து கவனிக்க வேண்டும்; அல்லது விமர்சித்து பணி புரிய வேலை தர வேண்டும்; அல்லது விமர்சித்து அவர்களது ஜீவனத்துக்குப் பொருத்தமானதைத் தர வேண்டும். சுருங்கக் கூறின் அவர்களது சித்தாந்தத்தை நாம் விமர்சிக்க வேண்டும்; அதே சமயம் அவர்களுக்கு ஒரு வழியும் விட வேண்டும். எதிரிக்கும் நமக்குமிடையிலான முரண்பாட்டின் இந்தப் பகு



படிப்பகம்

www.padippakam.com

தியை மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைக் கையாளும் முறையில் கையாள்வது பாட்டாளி வர்க்கச சர்வாதிகாரத்தைக் கெட்டிப்படுத்துவதிலும் எதிரியின் அணிகளை சிதைவுறச் செய்வதிலும் நன்மை பயக்கும்'' (மேற்படி நூல், பக்கம் 179)

எனவே மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் கட்சி, அரசு மற்றும் பிற மக்கள் பிரிவினர் பால் மிகச் சரியான அணுகுமுறையே கடைப்பிடிக்க வழிகாட்டப்பட்டது. ஆனால் எல்லா புரட்சிகர இயக்கத்திலும் இருப்பது போல் குறிப்பாக பரந்துபட்ட மக்கள் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கும் இம்மாதிரியான மிகப் பெரும் புரட்சியில், செங்கொடி ஏந்தி செங்கொடியை எதிர்ப்போருக்கு எதிரான இம்மாதிரியான மிகப்பெரும் புரட்சியில் இடது மற்றும் வலது சந்தர்ப்பவாதிகள் தமது எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தை முன் தள்ளும் நோக்குடன் கேடாக நிலைமைகளைப் பயன்படுத்திக் கொள்ள எத்தனிப்பது இயற்கையே. லின் பியௌ மற்றும் நால்வர் கும்பலைப்போலவே புரட்சிகர மக்களையும் அணிகளையும் எதிர்ப்புரட்சியாளர்கள் என்று முத்திரை குத்தி புரட்சியைத் திசை திருப்பி விடவும் பாதகமான நச்சுக் காற்றைக் கிளப்பி விடவும் லியு - தெங் கும்பல் முயன்று வந்திருக்கிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போக்கில் 1966 குளிர்காலத்திலிருந்து 1967 வசந்த காலம் வரை நீடித்திருந்த பாதகமான போக்கு - லியு சௌசியின் வீழ்ச்சிக்குப் பிறகு அவரது கூட்டாளிகள் தமது தந்திரோபாயங்களை அடிக்கடி மாற்றி வடிவத்தில் இடதும் சாராம்சத்தில் வலதுமான முழக்கங்களை முன்வைத்து அனைவரையும் சந்தேகிப்பது, அனைவரையும் தூக்கியெறிவது என்று கடுமையாகத்தாக்கி மக்களைப் பிளவுபடுத்துவதன் மூலம் புரட்சியைத் திசை திருப்பிவிடும் போக்கு-இதையேக்காட்டியது. இவையனைத்தும் மாவோவின் தலைமையிலான பாட்டாளி வர்க்கத் தலைமையைத் தனிமைப்படுத்தி, சீரழித்து இறுதியிற் தாக்கி வீழ்த்துவதற்காக லின் - நால்வர் கும்பலைப் போலவே லியு - தெங் கும்பல் மேற்கொண்ட நடவடிக்கைகள் தான். எனவே சொல்லிக் கொள்ளப்படும் பெரும் நாசம் பேரழிவெல்லாம் புரட்சியின் நோக்கத்திற்கெதிராக இடது, வலது சந்தர்ப்பவாதத் தலைமையகங்கள் கிளப்பி விட்ட நச்சுக்காற்றே.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போராட்ட முறைகளும் கொள்கைகளும் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலானவை அல்ல என்று லியு - தெங் கும்



படிப்பகம்

www.padippakam.com

பல் வாதிடுகிறது. இது ஒரு மாபெரும் புரட்சி; கலாச்சாரத் துறையில் தொடங்கி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்கிற முறையில் சகல துறைகளிலு மான புரட்சியாக விரிவடைந்தது; இறுதியில் முதலாளித்துவப் பாதைக்கும் சோசலிசப் பாதைக்கும் இடையிலான முதலாளித் துவ வர்க்கத்திற்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான ஜீவ மரணப் போராட்டமாக, அரசியல் அதிகாரத்திற்கான புரட் சியாக வளர்ந்தது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போதே மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போராட்டமுறைகள் மற்றும் கொள்கைகளைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

> "ஒரே ஒருபதில்; கட்சியினுள் அரசியல்வாழ்வு இவ்வாண் டுகளில் அசாதாரனமானதாக இருந்தது; கட்சியினுள் ஜன நாயக மில்லாதிருந்தது. இவை சமூகம் முழுவதும் ஜனநாயக மில்லாத ஒருநிலைக்கு வழிவிட்டன"

என்று மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சி ஆண்டு கள் குறித்து லியு-தெங் கும்பல் சித்தரிக்கிறது. (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 8, பக் 19) இதற்கு நேர் மாறாக கட்சியி னுள்ளும் வெளியேயும் பூரண ஜனநாயகமும் மக்கள் திரள் பாதை யுமே பின்பற்றப்பட்டன.

> "இரண்டுவெவ்வேறுவகையான முரண்பாடுகளிடையேஒரு கறாரானவேறுபாடுகொள்ளவேண்டும்: அதாவதுஎதிரிக்கும் நமக்கும் இடையிலானது; மக்கள் மத்தியிலானது ஆகிய முரண்பாடுகள். எதிரிக்கும் நமக்கும் இடையிலான முரண் பாட்டை மக்கள் மத்தியிலான முரண்பாடாக மாற்றக் கூடாது. மக்கள் மத்தியிலான முரண்பாட்டை எதிரிக்கும் நமக்கும் இடையிலான முரண்பாடாக மாற்றக்கூடாது.
>
> "பரந்து பட்ட மக்கள் வெவ்வேறு பார்வைகளைக் கொண் டிருப்பது சாதாரணமாக இருக்கும். வெவ்வேறு பார்வை களுக்கிடையிலான மோதல் தவிர்க்க முடியாதது, அவசிய மானது, நன்மையுடையது; இயல்பான, முழுமையான விவாதத்தின் போக்கில் பரந்துபட்ட மக்கள் எது சரியானது, நேரானது, எது தவறானது என்பதை உறுதி செய்து ஒரு மனதானதை சிறிதுசிறிதாக அடைவர்.
>
> "விவாதத்தில் பயன்படுத்தப்பட்ட வேண்டிய முறை உண் மையை வைப்பது, காரண காரியங்களைப் பரிசீலிப்பது,



படிப்பகம்

www.padippakam.com

காரண காரியங்கள் மூலம் ஏற்க வைப்பது.வேறு பட்ட பார்வைகளைக் கொண்டுள்ள ஒரு சிறுபான்மையினரைப் பணியும்படி நிர்ப்பந்திக்கும் எந்த முறையும் அனுமதிக்க முடியாது. சிறுபான்மையோர் பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் உண்மை சில சமயம் சிறுபான்மையினரோடு இருக்கிறது. சிறு பான்மை தவறாக இருப்பினும் கூட அவர்களது நிலைப்பாடுகளை விவாதிக்கவும், அவர்களது பார்வைகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

"ஒரு விவாதத்தின் போது, நிர்ப்பந்தம் அல்லது பலவந்தத்தின் மூலமாக அன்றி அது காரண காரியங்களை அலசுவதன் மூலம் நடத்தப்பட வேண்டும்" (8 வது மத்தியக் கமிட்டியின் 11 வது பிளீனத்தீர்மானம், விடுதலை, தொகுதி எண் 12, பக் 38-39)

இவ்வாறு முற்றிலும் ஜனநாயக பூர்வமான முறைகளையேகடைப் பிடிக்கும் படி வழிகாட்டி அமுலாக்கப்பட்டன. இதற்கு மாறாக லியு - தெங் கும்பலின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவரும் கலாச்சாரப் புரட்சியின் போதைய பீகிங் மேயரும், கட்சி அரசியல் தலைமைக்குழு உறுப்பினரும் இன்று அரசியல் மறுவாழ்வு பெற்றிருப்பவருமான பெங்செங் என்பவர்தான் மத்தியக்கமிட்டியின் மற்றும் தலைவர்மாவோவின் அங்கீகாரமின்றிபுறக்கடைவழியாக 'மத்தியக்கமிட்டியின் ஐவர் கலாச்சாரக்குழு' வின் பெயரால் மோசடி செய்து ஒரு ஆவணத்தைச் சுற்றுக்கு விட்டார். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் துவக்கமே இந்த ஜனநாயக விரோத முறையில் சுற்றுக்கு விடப்பட்ட எதிர்ப் புரட்சி ஆவணத்திற்கு மறுப்பாக மத்தியக்கமிட்டியின் தீர்மானம் சுற்றுக்கு விட்டதில் தான் இருந்தது.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் நோக்கமே முதலாளித்துவப் பிற்போக்கு வாதிகள், நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், மோசமான பேர்வழிகள், எதிர்ப் புரட்சியாளர்கள் மற்றும் வலதுசாரிகள் ஆகிய நச்சுக்களைகளுக் கெதிராக தீர்க்கமாகப் போராடி வேரோடுக் களைவதை நோக்கமாகக் கொண்டதுதான். பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் நோக்கம் கறாராகக் கூறுவதானால் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது மேலாண்மை செலுத்துவதுதான். எனவே முதலாளித்துவ வர்க்கத்துடன் சமத்துவம், ஜனநாயகம்என்றபேச்சிற்கே இடமில்லை. எனவே தான் மாவோ கலாச்சாரப் புரட்சி குறித்த சுற்றறிக்கையில் சொன்னார் :



படிப்பகம்

www.padippakam.com

"முதலாளித்துவ வர்க்கத்துக்கெதிரான பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம், கலாச்சாரத்தின் பல்வேறு துறைகள் அனைத்தும் உட்பட மேற்கட்டுமானத்தில் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் மற்றும் பொதுவுடமைக் கட்சிக்குள் ஊடுருவி செங்கொடிக்கெதிராக செங்கொடியை வீசும் முதலாளித்துவப் பிரதிநிதிகளைக் களையெடுக்கும் பாட்டாளி வர்க்கத்தின் தொடர்ந்த முயற்சிகள் ஆகிய இம்மாதிரியான அடிப்படைப் பிரச்சனைகளில் சமத்துவத்தை அனுமதிக்க முடியுமா?"

இதே போன்றுதான் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சியின் போராட்ட முறைகள், கொள்கைகள் குறித்த லியு - தெங் கும்பலின் குற்றச்சாட்டுகளும் பிழையானவை; எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கண்ணோட்டமுடையவை. வரலாற்றில் முன்னெப்போதும் கண்டிராத அளவு பரந்து பட்ட மக்கள் பங்கேற்கும் விரிவானதும் ஆழமானதுமான வர்க்கப் போராட்டம் தான் இப்புரட்சி. அது லியு - தெங் கும்பல் எதிர்பார்த்தது போல் அவ்வளவு மென்மையானதாக, அமைதியானதாக சமாதான பூர்வமானதாக இருக்காது.

பொங்கும் கடலலையென மிகப்பெரும் அளவிலான புரட்சிகர மக்கள் திரளினரது பேரியக்கம் கலாச்சாரப் புரட்சி. அது எதிர்ப் புரட்சியாளர்களுக்கெதிரான மிகவும் கூர்மையான, சிக்கலான ஜீவமரணப் போராட்டம். கடந்த காலப் புரட்சியைப் போன்றே புதிய வரலாற்று நிலைமைகளிலும் முதலாளிகள் மற்றும் பிற பிற்போக்காளர்களுக்கெதிரான இம்மகத்தான அரசியல் புரட்சியிலும் பரந்து பட்ட புரட்சிகர மக்களைச் சார்ந்து நின்று கட்சி வழி நடத்தியது. பலபத்து லட்சக்கணக்கான செங்காவலர் போராளிகள் திரட்டப்பட்டு வர்க்க எதிரிகளுக்கெதிரான மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மக்கள் திரள் இயக்கம் புரட்சிகர மக்கள் திரள் விமர்சனமாக மாறி கையளவேயான வர்க்க எதிரிகளுக்கெதிராக அகலமாக, ஆழமாக வரலாற்றில் ஈடு இணையற்ற முறையில் நடத்தப்பட்டது. பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர்களும், புரட்சிகர மக்கள் திரளினரும் புரட்சிகர விமர்சனப் பதாகையை உயர்த்திப் பிடித்து முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றும் அதிகாரத்திலுள்ள கட்சி நபர்களின் அவர்களது தரகர்களின் கட்சி விரோத, சோசலிச விரோத குற்றங்களனைத்தையும் ஈவிரக்கமற்ற முறையில் தோலுரித்தனர்; அவர்களது எதிர்ப்புரட்சி பாதையையும் பழம் கருத்துக்கள், கலாச்சார,



படிப்பகம்

www.padippakam.com

பழக்க வழக்கங்கள் அனைத்தையும் தீர்க்கமாக விமர்சித்து முறியடித்தனர்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மக்கள்திரள் விமர்சனமும், மறுத்துரைத்தலும் பரந்து விரிந்த அளவில் மாவோ சிந்தனையைக் கிரகிக்கவும், அதை ஆக்கபூர்வமாக கற்றுப் பிரயோகிக்கவும், இந்த நிகழ்ச்சிப் போக்கில், பரந்துபட்ட மக்களது சிந்தனையில் பிரம்மாண்டமான மாற்றத்தைக் கொண்டு வந்து பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியத்திற்கு புதிய வாரிசுகளை உருவாக்கவும் வழி வகுத்தன; பாட்டாளி வர்க்கம் சித்தாந்த பூர்வமாக இன்னுமோர் உயர்ந்த நிலையை எய்தவும் வழி வகுத்தன. அவை கட்சியிலுள்ள கையளவேயான முதலாளித்துவப் பாதையாளர்களை ஸ்தாபன ரீதியில் மட்டுமல்ல முற்றும் முழுதான வகையில் அரசியல், சித்தாந்த மற்றும் கோட்பாட்டு ரீதியில் தூக்கியெறியவும் அரசியல் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்துறைகளில் பாட்டாளி வர்க்கத்தின் மேலாண்மை நிலையைக் கெட்டிப்படுத்தவும் உதவின.

> " தலைவர் மாவோ அடிக்கடி சொல்கிறார் அழிவின்றி நிர்மாணமில்லை. அழிவு என்பதன் பொருள் விமர்சனம் மற்றும் மறுத்துரைத்தல்; அதன் பொருள் புரட்சி. இது காரண காரியங்களை அலசுவது; அதாவது நிர்மாணத்தைச் சம்பந்தபடுத்தியது. அழிவை முதலில் வை; நிகழ்ச்சிப் போக்கில் நீங்கள் நிர்மாணத்தைப் பெறுவீர்கள் " (மேற்குறிப்பிட்டது பக் 51 )

இம்மாபெரும் இலட்சியத்தை ஈடேற்ற முன்வைத்த வழி முறையும் வடிவமுமே மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியாகும் இதில் கைக்கொண்ட போராட்ட முறை முற்றிலும் புரட்சிகரமானதும் மக்கள் திரள் தன்மையுடையதும் ஆகும். எனவே ஜனநாயக பூர்வமானதுமாகும்.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி குறித்து 8வது மத்தியக் கமிட்டித் தீர்மானம் கூறுகிறது,

> " மகத்தான பாட்டாளி வர்க்கக்கலாச்சாரப் புரட்சியில் ஒரே வடிவமுறை பரந்துபட்ட மக்கள் திரளினர் தம்மைத் தாமே விடுவித்துக் கொள்வதாகும்; அவர்களுக்காக செய்யப்படும் வேறு எந்த வடிவ முறையும் பயன்படுத்தக் கூடாது.
> " மக்களை நம்புங்கள், அவர்களைச் சார்ந்து நில்லுங்கள், அவர்களது முன் முயற்சியை மதியுங்கள், பயத்தை விட்டொழியுங்கள்; ஒழுங்கு முறை சீர்கேடடைவதைப் பற்றி



படிப்பகம்

www.padippakam.com

அஞ்சாதீர்கள் ; புரட்சி அவ்வளவு மென்மையானதாக, நாகரீகமானதாக, விரும்பத்தக்கதாக, இனிமையானதாக, கருணைமிக்கதாக, கட்டுப்பாடுமிக்கதாக, பெருந்தன்மை வாய்ந்ததாக இருக்காது என்று தலைவர் மாவோ நமக்கு அடிக்கடி சொல்லியிருக்கிறார். இந்த மாபெரும் புரட்சிகர இயக்கத்தில் பரந்து பட்ட மக்கள் தாமாகவே போதனை பெற விடுங்கள் ; விஷயங்களை சரியான முறையில் மற்றும் தவறான முறையில் செய்வதற்கிடையில், திருத்தமான முறையில் மற்றும் பிழையான முறையில் செய்வதற்கும் இடையில் வேறுபடுத்துவதை கற்பதற்கும் விடுங்கள்.

"பரந்து பட்ட மக்கள் திரளினர் சரியான கண்ணோட்டங்களில் தெளிவு படவும், தவறான கண்ணோட்டங்களை விமர்சிக்கவும், சாத்தான்களையும், வேதாளங்களையும் அம்பலப்படுத்தவும் முடியும் வகையில் பெரும் அச்சரச் சுவரொட்டிகளையும் விஷயங்களை விவாதித்துத் தீர்க்கும் மாபெரும் வாதப்பிரதிவாதங்களையும் முழுமையாக பயன்படுத்துங்கள். இந்த வழி முறையில் பரந்து பட்ட மக்கள் திரளினர் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் தங்களது அரசியல் உணர்வை உயர்த்திக் கொள்ள முடியும் ; தங்களது திறமையையும் ஆற்றலையும் செழுமைப் படுத்திக் கொள்ள முடியும் ; சரிக்கும் தவறுக்கும் இடையில் வேறுபடுத்த முடியும் ; எதிரிக்கும் நமக்குமிடையில் ஒரு தெளிவான கோடுவரைய முடியும்" (மேற்குறிப்பிட்டது, பக். 37)

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட போராட்ட வடிவ முறை இதுதான். சோசலிச உடமை மாற்றத்தைத் தொடர்ந்து பரந்து பட்ட மக்கள் திரளினர் புரட்சியைத்தொடர்வதற்கான புதியதொருவடிவத்தைத் தோற்றுவித்தனர். மக்கள் திரள் போராட்டத்தைத் தொடுத்து நடத்துவதற்கான அந்த வடிவ முறைதான், சுதந்திரமாகப் பேசுவது, கருத்துக்களை முழுமையாக வெளியிடுவது, மாபெரும் வாதப் பிரதிவாதங்களை நடத்துவது மற்றும் பெரும் அச்சரச் சுவரொட்டிகளை எழுதுவது ஆகியவை. பரந்து பட்ட மக்களின் போராட்ட உள்ளடக்கத்திற்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதற்கு, வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு, மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான வடிவ முறைதான் இது. யேனான் காலத்து சீனப் பொதுவுடமையாகக் கட்சியின் ஜனநாயக மரபுகளைக்காத்து வளர்த்து புதிய உள்ளடக்கத்திற்



படிப்பகம்

www.padippakam.com

கேற்ப வளர்த்தெடுக்கப்பட்ட வடிவ முறைதான் இது. சரிக்கும் தவறுக்கும் இடையிலான பெரிய சிறிய பிரச்சினைகள், அதே போன்று புரட்சி மற்றும் நிர்மாணம் பற்றிய பிரச்சினைகள் மிக எளிதாகவும், விரைவாகவும் இந்த வடிவ முறையால் தீர்க்கப் படும்; இது பரந்துபட்ட மக்களது முன் முயற்சியையும், பொறுப் புணர்வையும் உயர்த்துகின்றது.

பெரும் அச்சரச் சுவரொட்டிகள் ஒரு வடிவ முறை பற்றிய பிரச்சினை; போராட்டத்தில் எந்த வடிவ முறையைப் பயன் படுத்த வேண்டும் என்ற பிரச்சினை. துப்பாக்கி, கைத்துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி போன்ற ஒரு சிறு ஆயுதமாக இருந்து போரிடும் கருவிதான் பெரும் அச்சரச் சுவரொட்டி; எனவே தான் பெரும் அச்சரச் சுவரொட்டி ஒரு நல்ல விஷயம், எதிர் காலச் சந்ததியினர்க்கு வரித்துக் கொடுக்க வேண்டும் என்றார் மாவோ. எதிர்காலத்தில் சீர் செய்யும் இயக்கத்திற்கெல்லாம் இந்த வடிவ முறையைப் பின்பற்ற வேண்டும் என்றார். மொழி யைப் போன்று இந்த வடிவ முறைக்கும் வர்க்கத் தன்மையில்லை என்றார்.

> "மொழியைப் பாட்டாளி வர்க்கம் பயன்படுத்த முடியும்; அதேபோன்று முதலாளித்துவ வர்க்கம் கூட பயன்படுத்த முடியும். பெரும் அச்சரச் சுவரொட்டியும் பாட்டாளி வர்க்கத் தைப் போலவே முதலாளித்துவ வர்க்கத்தாலும் பயன் படுத்த முடியும். பெரும்பான்மையான மக்கள் பாட்டாளி வர்க்கத் தின் பக்கமிருக்கிறார்கள் என நம்புகிறோம். எனவே பெரும் அச்சரச் சுவரொட்டி ஒரு கருவி என்கிற முறையில் பாட்டாளி வர்க்கத்திற்கே சாதகமானது. முதலாளித்துவ வர்க்கத்திற்கல்ல'' (மா. தே. ப. தொகுதி 5, பக்கம் 464)

இவ்வளவு சிறப்புகள் மிக்க மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போராட்ட முறையான 'சி-தா'வை ஜனநாயகமானதல்லவென்று அது முதலாளி வர்க்கத்துக்குச் சாதகமான கருவி அல்ல, பாட்டாளி வர்க்கத்திற்கே சாதகமானது என்பதால்தான் — வியு-தெங் கும்பல் பின்வரும் விளக்கத்துடன் தடை செய்து விட்டது. 'சி-தா-வை (சுதந்திரமாகப் பேசுவது, கருத்துக்களை முழுமையாக வெளியிடுவது, மாபெரும் வாதப் பிரதிவாதங்களை நடத்துவது மற்றும் பெரும் அச்சரச் சுவரொட்டி



படிப்பகம்

www.padippakam.com

களை எழுதுவதென்பனவற்றின் சீனச்சுருக்கம்) அரசியல் சட்டத்தில் எழுதுவதால் கையளவேயான மோசமான சிலர் அதைத் தமது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்த வாய்ப்பளிக்கிறது. பொதுவுடைமைக் கட்சியின் தலைமையைத் தூக்கியெறியும் வீண் முயற்சியில் பாட்டாளி வர்க்கத்தைத் தாக்கவும் தொல்லைகள் ஏற்படுத்தவும் தமது உள்நோக்கத்துடன் சிலர் சி-தா-வின் பதாகையை வீசுகின்றனர். குழுவாதத்தில் ஈடுபடவும் தொந்தரவுகளைத் தோற்றுவிக்கவும், வேலையிலும், உற்பத்தியிலும் இயல்பான ஒழுங்குமுறையைச் சீர்குலைக்கவும் சிலர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அவை நவீனமயமாக்குதலுக்குத் தடையாக நிற்கின்றன. கட்சி மற்றும் அரசின் அதிஇரகசியமானவைகளை அம்பலப்படுத்தி விடுவதற்கு சி-தா-வை நடைமுறைப்படுத்துவது உதவும்' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 17, பக். 3)

சி-தா-வைக் குறித்து யார் பயப்படுவார்கள் என்று மாவோ முன்னமேயே கூறிவிட்டார்:

> "சுதந்திரமாகப் பேசுவது, கருத்துக்களை முழுமையாக வெளியிடுவது, மாபெரும் வாதப் பிரதிவாதங்களை நடத்துவது, பெரும் அச்சரச் சுவரொட்டி எழுதுவது ஆகியவற்றுக்கு வரும் போது பிரதானமாக இரண்டு அச்சங்கள் இருக்கின்றன. ஒன்று சீர்குலைவு பற்றிய அச்சம். சீர்குலைவு பற்றி நீங்கள் அஞ்சுகிறீர்களா? நான் நினைக்கிறேன் பலர். மற்றொரு அச்சம் ஒருவர் தமது இக்கட்டான நிலையிலிருந்து வெளிப்பட முடியாது என்ற அச்சம்" (மா. தே. ப. தொகுதி 5, பக்க. 498)

உண்மையில் இத்தகு அச்சத்தையே வெளிப்படுத்தி லியு - தெங் கும்பல் சி - தா - வை தடை செய்துள்ளது. ஆனால் ஜனநாயகம் பற்றி பெரிதாகப் பீற்றிக் கொள்கிறது.

சோசலிச ஜனநாயகத்தை முழுமையாக்குவதாக சொல்லிக் கொண்டு மாவோ உயர்த்திப் பிடித்த பரந்துபட்ட மக்களது மிகச் சிறந்த போராட்ட வடிவ முறையைப் பற்றி லியு-தெங் கும்பல் நேரெதிரான கருத்தையேக் கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

" கலாச்சாரப் புரட்சியின் பத்தாண்டுகளின் (1966 - 76) போது சோசலிச ஜனநாயகத்தையும் சட்ட முறையையும் காற்றில் வீசுவதற்கு பெரும் அச்சரச் சுவரொட்டி (சி - தா - வின் பிரதானமான வடிவம்) தராதரமின்றி பயன்படுத்தப் பட்டது " (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 17, பக். 2)

இதற்கு மாறாக மாவோ சொன்னார் :

சி-தா- " சோசலிச ஜனநாயகத்துக்கு முழு வீச்சளிக்கிறது. இவ்வகையான ஜனநாயகம் சோசலிச நாடுகளில் மட்டுமே சாத்தியம் ; முதலாளித்துவ நாடுகளில் அல்ல. இம்மாதிரி யான ஜனநாயகத்தின் அடிப்படையில் மத்தியத்துவம் பலவீனப் பட்டு விடாது, ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தைப் போன்று மேலும் பலப்படும் " (மா. தே. ப. தொகுதி 5, பக். 485)

எனவே மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி குறித்து லியு - தெங் கும்பலது மதிப்பீடுகள், கருத்துக்கள் அனைத்துமே பிழையானவை. அன்றைய சீனத்து வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள் மற்றும் வர்க்கப் போராட்டங்கள் ஆகிய நிலைமைகளை குறித்த மாவோ மற்றும் சீனப் பொதுவுடமைக் கட்சியின் பகுப்பாய்வும், கணிப்பும் யதார்த்த நிலைமைக்கு முற்றிலும் பொருத்தமானதாகவே இருந்தது. சோசலிசப் புரட்சியையும் சோசலிச நிர்மாணத்தையும் முற்றிலும் சரியான பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு மிகச்சரியான பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டையும், மிகப் பொருத்தமான வடிவமும் வழி முறையுமாக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியையும் மாவோ பங்களித்தார்.

## 2] சர்வதேசியப் பிரச்சினைகள் குறித்து.......

புரட்சியை ஏற்றுமதி செய்ய முடியாது; எல்லாப் பொதுவுடமைக் கட்சிகளும் சுதந்திரமானவை, சமமானவை, தமது சொந்த முடிவுகளை எடுக்கத்தக்கவை; அந்தந்த நாட்டின் புரட்சிக்கு அவற்றின் பருண்மையான நிலைமைகளுடன் மார்க்சிய - லெனினியத்தின் சர்வ வியாபக உண்மையை



படிப்பகம்

www.padippakam.com

இணைத்து தமது சொந்த மக்களை வெற்றிக்கு வழி நடத்துவது
அந்தந்த நாட்டின் பொதுவுடமைக் கட்சியைப் பொருத்தது;
சோசலிச நாடுகள் பிறநாடுகளின் உள் உறவுகளில் தலையிட
முடியாது; எனினும் அரசுகளுக்கிடையிலான உறவு வேறாகவும்
கட்சிகளுக்கிடையிலான உறவு வேறாகவும் கொண்டு
பொதுவுடமைக் கட்சிகள் மற்றும் பாட்டாளி வர்க்கத்துடன்
உறவுகளைக் கெட்டிப்படுத்தி, அனைத்து நாடுகளிலும் புரட்சி
யின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்காக உதவவேண்டியது வாய்ப்பும்
வசதியும் மிக்க அதிகாரத்திலுள்ள, அனுபவமிக்க பொதுவுடமைக்
கட்சி மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கடமையாகும்.
இதையே சீனப் பொதுவுடமைக் கட்சியின்பதினோராவது
காங்கிரசு உறுதிப் படுத்தியது.

'' தமது சொந்தப் புரட்சியில் வெற்றி பெற்றிருக்கும் மக்கள்,
விடுதலைக்காக இன்றும் போராடும் மக்களுக்கு உதவ
வேண்டும் என்று இடையறாது தலைவர் மாவோ போதித்
தார். ' எல்லா நாட்டுப் பொதுவுடமைக் கட்சிகளையும்
நாங்கள் ஆதரிக்கிறோம்; ஆனால் திரிபுவாதத்தை அல்ல '
அது சரி, கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எல்லா நாடுகளது
பொதுவுடமைக் கட்சிகளின் புரட்சிகரப் போராட்டங்களை
யும் ஆதரிக்கிறோம்.'' (11வது காங்கிரசு ஆவணங்கள்,
பக்கம் 61)

'எந்த நாட்டுப் பொதுவுடமைக் கட்சியையும் அவற்றின்
புரட்சிகரப் போராட்டங்களையும் நாங்கள் ஆதரிப்பதில்லை;
எந்தநாட்டு மக்களது விடுதலைப், போராட்டங்களையும் நாங்கள்
ஆதரிக்கப் போவதில்லை. அவற்றின் திரிபுவாதக் கட்சிகளை
யும், பிற்போக்கு வாதிகளையுமே ஆதரிப்போம்' என்று கங்க
ணம் கட்டிக் கொண்டிருக்கிறது தெங்-சியௌ பிங் திரிபுவாதக்
கும்பல். இந்தத் துரோகத்தனமான நிலைப்பாடுகளை மூடி
மறைக்க பல்வேறு நாடுகளின் பொதுவுடமைக் கட்சிகளுக்கிடை
யிலான உறவில் தனித்துவம் என்ற கோட்பாட்டைக் கடைக்
கோடிக்கு இட்டுச் செல்கின்றனர். உலகப் புரட்சிக்கு அவற்றிற்
கிடையிலான ஒருங்கிணைப்பின் அவசியத்தைப் புறக்கணிக்
கின்றனர். பல்வேறு நாடுகளின் அரசியல், பொருளாதார, சமூ
தாய மற்றும் கலாச்சார அமைப்புகள் மற்றும் புரட்சியின் வளர்ச்
சிப் போக்குகள் வேறுவேறானவை, சிறப்புத் தன்மைகள் வாய்ந்



படிப்பகம்

www.padippakam.com

தவை. புரட்சி ஒரே வார்ப்பாக ஒரே பாதையில் யந்திர ரீதியாக முன்னேறாது என்பதன் பொருள் அவற்றுக்கிடையே பொதுத் தன்மைகள் இல்லை, பிற நாட்டுப் புரட்சியாளர்கள் மற்றும் பொதுவுடமைக் கட்சிகள் அவற்றை ஆய்ந்து அறிந்து சரியான கருத்துக்களை முன் வைக்க முடியாது என்பதல்ல. கட்சிகளுக் கிடையிலான உறவுகள் சமத்துவமானவை, சுதந்திரமானவை; ஒன்றின் மீது மற்றொன்று பெரிய கட்சி சிறிய கட்சி உறவு கொள்ளவோ, ஆதிக்கம் செலுத்தவோ, அதிகாரத் தோரணையில் உத்தரவுகள் பிறப்பிக்கவோ கூடாது என்பதன் பொருள் கருத்துக்கள் கூறவோ, விமர்சிக்கவோ கூடாது என்பதல்ல. ஸ்டாலின் தொகுத்தளித்தவாறு வெற்றி பெற்ற பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியக் கடமையைப் பற்றி நிற்கவே மேற்கண்ட அணுகுமுறை அவசியமாயிருக்கிறது.

" ஒரு நாட்டில் புரட்சி வெற்றியடைந்ததும், அதனை தன்னைத்தானே நிறைவு செய்து கொள்ளும் தனிப்பட்ட விஷயமாகக் கருதாமல் மற்றெல்லா நாடுகளிலும் பாட்டாளி வர்க்க வெற்றியை துரிதப் படுத்துவதற்கு உதவியாகவும் ஒருசாதனமாகவும் கருத வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டில் புரட்சியின் வெற்றி, தற்போதைக்கு ரஷயாவில் அடைந்திருக்கும் வெற்றி, ஏகாதிபத்தியத்தின் மேன்மேலான அழிவின் ஏற்றத் தாழ்வான வளர்ச்சியில் ஒரு விளைவாக மட்டுமல்லாமல் அதே சமயம் உலகப் புரட்சியின் தொடக்கமாகவும் முன்னிபந்தனையாகவும் இருக்கிறது." (லெனினிசத்தின் பிரச்சினைகள் - ஸ்டாலின், அயல் மொழி பதிப்பகம், பீஜிங் 1976, ஆங்கிலம், பக்கம் 155)

" ஆனால் அதே சமயம் சோசலிசம் எவ்வளவுக் கெவ்வளவு கூடுதலான செழுமையாக முதலாவது வெற்றியடைந்த நாட்டில் கெட்டிப் படுத்தப்படுகிறதோ, இந்த நாடு ஏகாதிபத்தியத்தை மேலும் சிதைவுறச் செய்வதற்கு ஒரு நெம்புகோலாக, உலகப் புரட்சியை மேலும் அருகில் கொண்டு வருவதற்கு ஒரு தளப் பிரதேசமாக எவ்வளவுக் கெவ்வளவு வேகமாக மாற்றப்படுகிறதோ, அந்த அளவுக்கு உலகப் புரட்சியின் வளர்ச்சியே, பல்வேறு புதிய நாடுகள் ஏகாதி



படிப்பகம்

www.padippakam.com

பத்தியத்திடமிருந்து அறுத்துக் கொண்டு போகும் நிகழ்ச்சிப் போக்கே மிகவும் துரிதமாகவும் செழுமையாகவும் இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

"பல்வேறு நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்கங்களின் ஒன்று சேர்ந்த முயற்சிகள் இல்லாமல், தனி ஒரு நாட்டில் அதனை விடுதலை செய்யும் சோசலிசத்தின் இறுதி வெற்றி சாத்தியமானதே அல்ல என்பது உண்மையே. ஆனால், அதே சமயம் இதர எல்லா நாடுகளின் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் மக்களுக்கும் முதல் சோசலிச நாடு தரும் உதவி எவ்வளவு அதிகமாக பயனுள்ளதாக இருக்கிறதோ, அந்தளவு உலகப் புரட்சியை அருகில் கொண்டு வருவதும் மிகவும் துரிதமானதாகவும் செழுமையானதாகவும் இருக்கும் என்பதும் உண்மையே" (மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 157)

ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சர்வ தேசியக் கடமையை கைவிட்டு துரோகமிழைப்பதில் இந்திய நவீன திருத்தல் வாதிகளின் நிலைக்குத் தாழ்ந்து போய் சமத்துவம், சுதந்திரம் பற்றி தெங் சியௌ பிங் கும்பல் பிதற்றுவது மட்டுமல்ல, நடைமுறையிலும் இதுவரை தென் கிழக்காசிய மற்றும் ஆஃபிரிக்க நாடுகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு அளித்து வந்த ஆதரவை நிறுத்திக் கொண்டுள்ளது. ஒலிபரப்பு, ஆயுதங்கள் மற்றும் பிற உதவிகளையும், தார்மீக ஆதரவுகளையும் கூட விலக்கிக் கொண்டுள்ளது. தங்களது பத்திரிக்கைகள், வானொலி ஆகியவற்றில் புரட்சிகர இயக்கங்கள் பற்றிய மார்க்சிய - லெனினிய பார்வையுடன் கூடிய கணிப்பின்றி, சர்வதேசிய நிகழ்ச்சிகளை வர்க்கப் பார்வையிலிருந்து விமர்சிப்பது இல்லாது முதலாளித்துவ பத்திரிக்கைகள், வானொலிகளாகவே செயல்படுகின்றன. கட்சிகளுக்கிடையிலான உறவில் உள்ள சமத்துவம் மற்றும் தனித்துவம் பற்றிய கோட்பாடுகளை கடைக் கோடிக்கு இட்டுச் செல்வதன் மூலம் மார்க்சிய — லெனினிய ஆசான்களைத்தான் தெங் சியௌ பிங் கும்பல் இழிவு படுத்துகிறது.

பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியக் கடமையைத் தட்டிக் கழித்து குறுகிய தேசிய வெறி மற்றும் நலன்களுக்குள் மூழ்கும்



படிப்பகம்

www.padippakam.com

திரிபுவாதப் போக்கில் தான், மாவோ சிந்தனை மூன்றாம் உலக நாடுகளுக்கு வகுத்தளித்த மக்கள் யுத்தப் பாதையின் பொதுத் தன்மைகளை சிறுமைப்படுத்த தெங் கும்பல் முயலுகிறது.

" 'கலாச்சாரப் புரட்சி' மற்றும் அவர்களது அதீத இடது பாதை பற்றிய பிற கட்சி களின் கண்ணோட்டத்தைப் பொறுத்து மார்க்சிய வாதிகளா, திரிபுவாதிகளா என்று பிற கட்சிகளைக் கணிப்பதற்கான அளவு கோலாக அவர்கள் (லின், சியாங்சிங் மற்றும் காங் ஷெங்) கொண்டார்கள். 'சிங்காங் மலைப்பாதை எல்லா நாடுகளுக்கும் பிரயோகிக் முடியும்' கிராமப்புறங்களிலிருந்து நகரங்களைச் சுற்றி வளைப்பது 'சர்வ வியாபகமான விதி' யாக எங்கும் பிர யோகிக்க முடியும் என்றார்கள் — ......" (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 46)

என்று குற்றஞ் சாட்டுகிறது தெங் கும்பல். லின் மற்றும் நால்வர் கும்பலின் தவறான வியாக்கியானம் ஒரு புறமிருக்கட்டும்; சிங் காங் மலைப்பாதை மூன்றாம் உலக நாடுகளுக்கான ஒரு பொதுத் தன்மையுடைய பாதையா, இல்லையா? மார்க்சிய-லெனினியத் தின் வளர்த்தெடுக்கப்பட்ட கோட்பாடாக பாட்டாளி வர்க்க சர் வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற மாவோ சிந் தனையின் மகத்தான பங்களிப்பான மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சி பற்றிய கண்ணோட்டம் ஒரு கட்சியை மார்க்சிய-லெனினியக் கட்சியா, திரிபு வாதக் கட்சியா என்பதை கணிக்கும் அளவு கோலாகாதா?

இல்லை என்று மறுத்துத்தான் தெங் சியௌ பிங் கட்சி விரோத எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கும்பல் அப்பட்டமான பொய் சொல்கிறது,

" எமது கட்சிக்கும் உலகம் முழுவதிலுமுள்ள பிற மார்க்சிய-லெனினிய கட்சிகளுக்குமிடையிலான ஒற்றுமை பூரண சமத் துவம், தனித்துவம் மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப் படையில் பலப்பட்டிருக்கிறது" (பீஜிங் ரிவ்யூ, தொகுதி23, பக்கம் 46)

ஆனால் உண்மை என்ன? மூன்றுலகக் கோட்பாட்டையும்



படிப்பகம்

www.padippakam.com

மாசேதுங் சிந்தனையையும் நிராகரித்து நவீன டிராட்ஸ்கிய வாதி
களாகச் சீரழிந்து போயுள்ள கனடா, அல்பேனியா போன்ற நாடு
களின் பொதுவுடமைக் கட்சிகளை விட்டுத் தள்ளுங்கள்;
மாசேதுங் சிந்தனையையும் மூன்றுலகக் கோட்பாட்டையும் ஏற்
கும், ஆயுதப் போராட்டத்தில் அழுந்தி நிற்கும் உண்மையான
மார்க்சிய - லெனினியக் கட்சிகளும் கூட தெங் சியௌ பிங் கும்ப
லின் திரிபுவாதத்தை நிராகரித்துள்ளன. இதற்கு மாறாக சோவி
யத் திரிபுவாத ஒடுகாலிகளை மையமாகக் கொண்டு நவீன திரிபு
வாதத்தை உயர்த்திப் பிடித்த, அதை ஒரு கடைக் கோடிக்கே
எடுத்துச் சென்று 'யூரோ கம்யூனிசம்' என்ற பெயரில் லெனினி
சத்தையும் அதன் சாராம்சமான பாட்டாளி வர்க்க புரட்சி மற்றும்
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் நிராகரிக்கும் இத்தாலி,
ஸ்பெயின், ஜப்பானியத் திரிபுவாதக் கட்சிகளையும், உலக
மறிந்த எதிர்ப்புரட்சி திரிபுவாத யுகோஸ்லாவிய, ருமேனிய கட்சி
களையும் அங்கீகரித்து கூடிக் குலாவுகிறது தெங் கும்பல். இந்தக்
கட்சிகளுடன் தான் ஒற்றுமையை ஏற்படுத்திப் பலப்படுத்திக்
கொண்டிருக்கின்றது.

"கடந்த ஆண்டில், உலக அரங்கில் பல சூறாவளிகள்
வீசின. சோவியத் பொதுவுடமைக் கட்சியின் இருபதாவது
காங்கிரசில் ஸ்டாலினுக்கு எதிராக பெரிய அளவில் அவர்கள்
சென்றார்கள். தொடர்ந்து ஏகாதிபத்திய வாதிகள் கம்யூனி
சத்திற்கெதிராக சூறாவளிகளைக் கிளப்பி விட்டனர்; சர்வ
தேசிய கம்யூனிச இயக்கத்தில் இரு சூறாவளி வாதப் பிரதி
வாதங்கள் நடந்தன. இச்சூறாவளிகளுக்கு மத்தியில் ஐரோப்
பிய மற்றும் அமெரிக்க நாடுகளது பொதுவுடமைக் கட்சி
களின் விஷயத்தில் பெரும் தாக்கமும் இழப்பும் நேர்ந்தன.
கிழக்கத்திய பொதுவுடமைக் கட்சிகளின் விஷயத்தில் சிறிய
அளவே நடந்தது" (மா. தே. ப; தொகுதி 5, பக், 354)

என்று நவீன திரிபுவாதத்திற்கெதிரான போராட்டத்தின்
போக்கை மாவோ கணித்தார்.

நவீன திரிபுவாதத்திற்கு மிகப் பெரிய அளவில் பலியாகி
விட்ட எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கட்சிகளைத் தான் இப்பொழுது
அங்கீகரித்து தெங் கும்பல் அரவணைத்துக் கொண்டிருக்கிறது.
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பாட்டாளி வர்க்கப் புரட்



படிப்பகம்

www.padippakam.com

சியையும் கை விடுவது, அவற்றை அடிப்படை அம்சமாகக் கொண்ட லெனினிசத்தை நிராகரிப்பது ; ஜனநாயக சமாதான பூர்வமாகவே - புரட்சியின்றி பாராளுமன்றப் பாதையின் மூலமா கவே - ஆட்சியைக் கைப்பற்றுவது — இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ள ''யூரோ கம்யூனிசத்'' தைப் பற்றி ஒரு பேட்டி யில் ஹுவா சொல்கிறார் :

''ஐரோப்பிய கம்யூனிசம் என்ற பிரச்சினை மிக மிக அதிக மாக பேசப்பட்டுகிறது ; ஒரு சில வார்த்தைகளில் முடிக்க முடியாத சிக்கலான பிரச்சினை இது. மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகார பூர்வப் பயணம் போகிறேன். எனவே இந்தத் தலைப்பைப் பற்றி நான் பேசுவதாக இல்லை'' (பீஜிங் ரிவ்யூ தொகுதி 22, எண் 41, பக்கம் 11)

என்று மழுப்புகிறார். இத்தாலிய நிருபர்களுக்கு தெங் சியெள பிங் அளித்த பேட்டியில்,

'' இந்தப் பிரச்சினை (யூரோ கம்யூனிசம்) தற்போது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது ; ஐரோப்பிய கம்யூனிஸ்டு கட்சி களும் கூட படித்தாய்கின்றன. ஐரோப்பாவிலிருந்து வெகு தொலைவில் ஆசியாவில் நாங்கள் இருக்கிறோம். எங் களது புரிதலின் ஆழம் போதுமானதல்ல; ஆனால் புதிய விஷயங்களைப் படிப்பதிலும் ஆய்வு செய்வதிலும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம். எதுவும் நடைமுறையில் சோதித்த றியப்பட வேண்டும். '' என்றார். (பீஜிங் ரிவ்யூ, தொகுதி23 எண் 17, பக்கம் 16)

கம்யூனிஸ்டுகளாக இருந்தால் அல்லவா, கருத்துக்களை மூடி மறைக்காமல் இருப்பார்கள். எதிர்ப்புரட்சி திரிபுவாதிகளல்லவா, எனவே தான் உலகமறிந்த விஷயத்தில் ஒன்று மறியாதவர் களாக வேடம் போடுகிறார்கள்.

ஆனால் சோவியத் திரிபுவாத ஓடுகாலிகளோடு தோளோடு தோள் நின்று நவீன திரிபுவாதத்தை உயர்த்திப் பிடித்த, அதை மேலும் ஒரு படி வளர்த்தெடுத்த இத்தாலிய கம்யூனிஸ்டு கட்சி குறித்து தெங் திரிபுவாத கும்பல் சொல்கிறது:



படிப்பகம்

www.padippakam.com

" புகழ்மிக்க போராட்ட வரலாறும், பரந்துபட்ட மக்கள் மத்தியில் பலமான செல்வாக்கும், போராட்டத்தில் செறிந்த அனுபவமும் மிக்க ஒரு கட்சி ; மாபெரும் சர்வதேச செல்வாக்கு நிலையைக் கொண்டாடும் ஒரு கட்சி " ; " அதன் நீண்ட நெடிய போராட்டத்தில் இத்தாலியத் தொழிலாளர் வர்க்கம் மற்றும் பரந்து பட்ட மக்கள் பெருந்திரளிடையே விரிவான நெருக்கமான பிணைப்புகளை நிறுவி இத்தாலியின் அரசியலில் ஒரு சிறப்புமிக்க செல்வாக்கு செலுத்துவதோடன்றி, அதன் சுதந்திரமான அரசியல் நிலைப்பாடு மற்றும் சர்வதேசிய தொழிலாளர் வர்க்கத்தின் விரிவான ஐக்கியத்திற்கான நீண்ட நெடிய முயற்சிகளினால் சர்வ தேசியப் பொதுவுடமை இயக்கத்தில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது "

சர்வ தேசிய எதிர்ப்புரட்சி திரிபுவாதக் கட்சியை இவ்வாறு ஏற்றிப் போற்றுவதுடன் அதன் பொதுச் செயலாளரான என்ரிகோ பெர்லிங்கர் குறித்து தெங்கின் வாரிசு ஹூ சொல்கிறார் :

" பெர்லிங்கரின் சிந்தனையும் நடைமுறையும், அவர் இத்தாலிய மக்களின் ஒரு உன்னதமான மகன், சர்வ தேசப் பொதுவுடமை இயக்கத்தின் மிகச்சிறந்த ஒரு போராளி; அதே போன்று சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையை முன்னேற்றி, மனித இனத்திற்கேபான நீதியையும் முற்போக்கையும் வென்று உலக சமாதானத்தைப்பாதுகாப்பதில் ஒரு செயல் வீரர் மற்றும் ராஜ தந்திரி என்பதை நிரூபிக்கின்றன. "

இத்தாலிய திரிபுவாதக் கட்சி மற்றும் அதன் தலைமையை மட்டுமல்ல 'யூரோகம்யூனிசத்தின்' தாயகமும், தந்தையுமானஸ்பெயின் கட்சி மற்றும் அதன் தலைவர் காரில்லோ உட்பட சர்வதேச எதிர்ப்புரட்சி திரிபுவாதக் கட்சிகளையும் இவ்வாறே தாங்கிப் பிடித்துஅங்கீகரிப்பதில் இறங்கியுள்ளனர்.

(பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 17)

இந்த உறவுக்குப் பிரகடனப்படுத்தப்பட்ட அடிப்படை என்னவென்றால் உலக சமாதானத்திற்கான இலட்சியம், சர்வ தேசியப்பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள், பரஸ்பரம் இரு நாடுகளுடைய கட்சிகளின் நலன்கள் ஆகியவற்றுக்காக பூரணசமத்துவம், சுதந்திரம் மற்றும் பரஸ்பரம் மரியாதை ஆகியவை ஆகும். மற்றப்



படிப்பகம்

www.padippakam.com

படி மூன்றுலகக் கோட்பாடு உட்பட எந்த அரசியல் சித்தாந்தப் பிரச்சினையிலும் ஒற்றுமையும் பொது நோக்கும் இருப்பதாக அறிவிக்கவில்லை. உண்மை என்ன? மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை நிராகரிப்பது, குறிப்பாக பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் அதன் கீழ் புரட்சியைத் தொடர்வது ஆகியவற்றைக் கைவிட்டு எதிர்ப் புரட்சித் திரிபுவாதத்தில் இவர்களிடையே ஒற்றுமை உண்டு. அதே போன்று யுகோஸ்லாவியா மற்றும் ருமேனியா நாடுகளை சோசலிச நாடுகளென்றும் அக்கட்சிகளையும் மார்க்சிய - லெனினியக் கட்சிகள் என்றும் அங்கீகரித்துள்ளது தெங் கும்பல். 50களிலும் 60 களிலும் சர்வதேசப் பொதுவுடமை இயக்கத்தில் நடந்த மாபெரும் வாதப் பிரதிவாதங்களில், சோவியத் திரிபுவாத ஓடுகாலிகளை விட உக்கிரமாக ஒரு படி மேலே சென்று நவீன திரிபுவாதத்தை இந்த யூரோ கம்யூனிஸ்டுகள் உயர்த்திப் பிடித்தனர்; யுகோஸ்லாவியாவை ஒரு சோசலிச நாடாக அங்கீகரிப்பதும்கூட நவீன திரிபுவாதத்தின் தவறான போக்காக இருந்தது.

**கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பற்றி மாவோ என்ன சொன்னார்?**

"வர்க்கப் போராட்டத்தை தொடுத்து நடத்தும் ஒரு நல்லப் பணியை அவர்கள் நடத்தவில்லை என்பது சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அடிப்படைப் பிரச்சினை; அநேக எதிர்ப்புரட்சியாளர்களை சுதந்திரமாக அலைய விட்டு விட்டார்கள்; எதிரிக்கும் மக்களுக்கும் இடையிலும், சரிக்கும் தவறுக்கும் இடையிலும், பொருள் முதல் வாதத்துக்கும் கருத்து முதல் வாதத்துக்கும் இடையிலும் ஒரு தெளிவான வேறுபாட்டை எப்படி வகுப்பது என்பதை அவர்கள் கற்றுக் கொள்ள உதவுவதற்காக அவர்களது பாட்டாளி வர்க்கத்தை வர்க்கப் போராட்டத்தில் பயிற்றுவிக்கவுமில்லை. மேலும் அவர்கள் என்ன விதைத்தார்களோ அதையே அறுவடை செய்கிறார்கள்; அவர்கள் தங்கள் தலைகளுக்கு மேலே தாங்களே நெருப்பை வைத்துக் கொண்டார்கள்." (மா. தே. ப., தொகுதி 5, பக். 342)

"இரண்டாவது உலகப்போருக்குப் பின் சோவியத் பொதுவுடமைக் கட்சியும், சில கிழக்கு ஐரோப்பியக் கட்சிகளும் இனியும் மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை



படிப்பகம்

www.padippakam.com

பொருட்டாகக் கொள்ளவில்லை. வர்க்கப் போராட்டம்,
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், கட்சித் தலைமை, ஜன
நாயக மத்தியத்துவம் மற்றும் கட்சிக்கும் பரந்து பட்ட மக்க
ளுக்கும் இடையிலான பிணைப்புகள் ஆகியவற்றை இனியும்
பொருட்டாகக் கொள்ளவில்லை ; ஒரு அரசியல் சூழல்
கூட அதிகமாக இல்லை. ஹங்கேரியன் நிகழ்ச்சி அதன்
விளைவு '' (மா. தே. ப. தொகுதி 5, பக். 378)

என்று மாவோ ஹங்கேரியில் நடந்த கோமுல்காவின் எதிர்ப்
புரட்சிக் கலகத்தைக் குறிப்பிட்டார். முந்தைய போலந்து காலத்
திற்கும் இது பொருந்தும். இதற்கு மேலே சென்று இந்தக் கட்சி
களிடம் பாட்டாளி வர்க்க புரட்சிகர தார்மீக நேர்மை கூட
இல்லை என்றார் மாவோ.

'' எனது கண்ணோட்டத்தில், இந்த நபர்கள் மார்க்சிய —
லெனினியத்தை பற்றி ஒழுகவில்லை. விஷயங்களின்
பால் ஒரு பகுத்தாய்வு செய்யும் அணுகுமுறையை அவர்கள்
கொள்ளவில்லை ; புரட்சிகர தார்மீக நேர்மை அவர்களிட
மில்லை. மார்க்சிசம் - லெனினிசம் பாட்டாளி வர்க்கத்தின்
புரட்சிகர தார்மீக நேர்மையைத் தழுவி நிற்கிறது. 'முன்பு
நீங்கள் எல்லாவற்றுக்கும் ஸ்டாலின் என்றிருந்தீர்கள் என்ப
தால் ஒரு திடீர் திருப்பம் எடுக்கும்போது குறைந்த பட்சம்
சில காரணங்கள் இருக்க வேண்டும். ஆனால் உங்கள்
வாழ்க்கையில் எப்பொழுதுமே ஸ்டாலினை ஆதரித்ததே
இல்லை என்பதுபோல இந்த திடீர் 'பல்டி' க்கு நீங்கள்
எந்தக்காரணமும் அளிக்கவில்லை; இருப்பினும் உண்மை
யில் முன்பு நீங்கள் முழுமையாக ஆதரித்தீர்கள்' ஸ்டாலின்
பற்றிய பிரச்சினை சர்வதேசப் பொதுவுடமை இயக்கம் முழு
வதும் பொருத்த விஷயம் ; எல்லா நாடுகளின் பொதுவுட
மைக் கட்சிகளும் சம்பந்தப்பட்டது '' (மா. தே. ப. தொகுதி
5, பக் 354)

பாட்டாளி வர்க்க புரட்சிகர தார்மீக நேர்மை கூட இல்லாதவை
யான இந்த நவீன திரிபுவாதக் கட்சிகளின் பாலான கண்ணோட்
டத்தை மாற்றிக் கொள்வதற்கான - 'பல்டி' அடித்ததற்கான -
எந்தக் காரணமும் அளிக்காத தெங் கும்பலும் புரட்சிகர தார்மீக
நேர்மையற்றது என்பதை நிரூபித்துக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# IV

# சோசலிச சமுதாயத்தின் புறவயமான நிலைமைகள் பற்றிய லியு-தெங் கும்பலின் மதிப்பீடுகள் தவறானவை.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலர்ச்சார புரட்சியின் சரியான தீர்ப்புகளைத் திருத்தி மாற்றவும், கட்சி மற்றும் அரசின் அதிஉயர் அதிகாரத்தைக் கைப்பற்றி முதலாளித்துவத்தை மீட்கவும் வேண்டித்தான் மார்க்சிச-லெனினிசத்திற்கு மாவோவின் மகத்தான பங்களிப்பான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற விஞ்ஞான பூர்வமான கோட்பாட்டை தெங் சியௌ பிங் கும்பல் நிராகரிக்கிறது. அதற்கு மாற்றாக, அடிப்படையாக ஒரு ஒருங்கிணைந்த தொகுப்பான எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தை முன்தள்ளுகிறது. சோசலிச சமுதாயத்தின் புறவயமான நிலைமைகள், மற்றும் அவற்றை

படிப்பகம்

www.padippakam.com

ஆளும் விதிகள் குறித்து லியு-தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபு வாதத்தை அதன் உயிர் நிலையில் தாக்கி வேரொடு சாய்க்க வேண்டுமானால், அதன் சிந்தாந்த, அரசியல், பொருளாதார மற்றும் ஸ்தாபன கோட்பாடுகளை ஆய்ந்து எதிர்மறைப் பாடங் களைக் கற்க வேண்டியுள்ளது.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி குறித்து பின்வருமாறு தெங் கும்பல் சித்தரிக்கிறது.

" 1966ல் தொடங்கிய கலாச்சாரப் புரட்சியின் பத்தாண்டு களில் புரட்சிக்கும், எதிர்புரட்சிக்கும் இடையில் ஒரு கடும் போராட்டத்தினூடே எமது நாடு சென்றது. திரிபுவாதத்தைத் தடுக்கவும், அதைத்தாக்கி தகர்க்கவுமான நோக்கத்துடன் கலாச்சாரப் புரட்சி தொடங்கப்பட்டது. உள்நாட்டில் மக்களை ஒடுக்குவது மற்றும் வெளியில் மேலாதிக்கத்தைப் பின்பற்றுவது ஆகியவற்றால் குணாம்சப்படுத்தப்படும் திரிபுவாதப் பாதையில் பயணப்படுவதற்கெதிராக இடையறாது எச்சரிக்கையாக இருக்க வேண்டுவது அவசியம் என்பது அதிகாரத்திலுள்ள ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு சரியானதே. ஆனால், விஷயம் என்ன வென்றால், கலாச்சாரப் புரட்சி தொடுக்கப்பட்ட சமயத்தின் போது கட்சிக்குள்ளும், நாட்டிலும் இருந்த நிலைமை பற்றி செய்யப்பட்ட மதிப்பீடு யதார்த்தத்திற்கு எதிராகப் போய்விட்டது; திரிபுவாதத்திற்கு கறாரான விளக்கமில்லை; ஜனநாயக மத்தியத் துவத்திலிருந்துவிலகிச்செல்லும் தவறான போராட்டமுறைமற்றும் கொள்கை கைக்கொள்ளப்பட்டது. இத்தவறுகளைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டு லின்பியௌ, நால்வர் கும்பல் மற்றும்பிற சதிகாரர்களும் பிழைப்புவாதிகளும் எதிர்ப்புரட்சி உள்நோக்கங் களால் உந்தப்பட்டு விஷயங்களை கடைகோடிக்கு உந்தித் தள்ள ஒரு அதீத இடது பாதையை வகுத்து வழிநடத்தினார்கள். அவர்கள் கட்சித்தலைமையைக் கைப்பற்றிக் கொண்டு 'எதையும் தூக்கி எறிவதிலும், ஒரு முற்றும் முழுதான உள்நாட்டு யுத்தத் தை தொடுப்பதிலும்', அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு குடைக் கவிழ்ப்பை அரங்கேற்றுவதிலும் ஈடுபட்டனர். எமது சோசலிச கட்டமைவின் அடித்தளத்தை தகர்க்கவும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நாசப்படுத்தவும், கட்சியின் தலைமையை ஒழித்துக்கட்டவும் மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை மாசுபடுத்தவும், மக்கள் வெறுத்தொதுக்கும் பிளவிலும், குழப்பத் திலும் எமது நாட்டை மீண்டும் ஆழ்த்தவும், குருதிக்குளியல் களிலும், பயங்கரத்திலும் எமது நாட்டை மீண்டும் ஆழ்த்தவும்



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் முயன்றார்கள். எதிர்ப்புரட்சி கும்பலின் அடாத செயலால் விளைந்து பத்து நீண்ட ஆண்டுகள் நீடித்திருந்த பெரும் பேரழிவு நமது மக்களுக்கும் பெரும் நாசத்தைக் கொண்டு வந்தது; மக்கள் குடியரசு நிறுவப்பட்டதிலிருந்து எமது சோசலிச இலட்சியத்திற்கு கடுமையான பின்னடைவாக அமைந்தது. அவர்களது சதிவேலைகள் எமது கட்சி இழைத்த தவறுகளின் தன்மையிலிருந்து முழுவதுமாக வேறுபட்டது. அவர்கள் மக்களனைவருக்கும் மிக மிகக் கொடூரமான எதிரிகள்; அவர்களது வழக்குகளை உட்கட்சிப் போராட்டத்தின் மூலம் தீர்க்கமுடியாது''.

(பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் : 40, பக்கம் 15)

திரிபுவாதத்தைத் தடுக்கவும், அதைத் தாக்கித் தகர்க்கவுமான நோக்கத்துடன் கலாச்சாரப் புரட்சி தொடங்கப்பட்டதாக சீன மக்கள் குடியரசின் முப்பதாவது ஆண்டுவிழா உரையில் 1979 அக்டோபரில் தெங் சியௌ பிங் கும்பல் கூறியது. ஆனால் 1981 மத்தியில் நடந்த 11-வது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளினத் தொடரில் கட்சி வரலாற்றைத் தொகுக்கும் தீர்மானத்தில் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைத் தொடங்கியதே முற்றிலும் தவறானது என்று கூறுகிறது. சோசலிச நிர்மாணம் குறித்து அனுபவக் குறைவு, சித்தாந்த தெளிவின்மை காரணமாக, கட்சி வளரும் வரலாற்றுச் சூழ்நிலைமைகள் காரணமாக, சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப்போக்கில் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் பிற துறைகளில் புதிய முரண்பாடுகளும் பிரச்சினைகளும் எழுவதைக் கவனித்து கையாளும் போதும், யதார்த்தமான வர்க்கப் போராட்டத்தை புதிய நிலைமைகளில் எதிர்கொள்ளும் போதும் வழமையான நாடு தழுவிய கொந்தளிப்பான மக்கள் திரள் போராட்டங்களாகக் கருதி வர்க்கப் போராட்டத்தை நடத்தியது; மார்க்சிய-லெனினிய ஆசான்களது போதனைகளில் – 'முதலாளித்துவ உரிமை', 'முதலாளித்துவ அபாயம்' போன்றவற்றை தவறாக, வரட்டுத்தனமாகப் புரிந்து கொண்டு அதற்கு கோட்பாட்டு அடிப்படைகளிருப்பதாகக் கருதியது; இதனால் பொருளாதாரத்திலும், வர்க்கப் போராட்டத்திலும் 'இடது' தவறுகள் இழைக்கப்பட்டது; சமூக ஏகாதிபத்தியத்தின் தோற்றமும், துரோகமும் சீனத்து அரசியல், பொருளாதார, இராணுவத் துறைகளின் மீது ஏற்படுத்திய தாக்கம்; இவை அனைத்தின் காரணமாக கட்சிக்குள்



படிப்பகம்

www.padippakam.com

நெருக்கடிகள் எழுந்து மாவோ தவறான 'இடது' கருத்துக்களை முன் தள்ளியபோது அவற்றைத் தடுக்க இயலாமல் போனதாக தெங்சியெள பிங் கும்பல் கூறுகிறது.

மாவோவின் செல்வாக்கு மலை உச்சியை எட்டியதாகவும், கட்சி மற்றும் அரசின் வேலையின் குவிமையத்தை சோசலிச நிர்மாணத்திற்கு மாற்றும் வேலையை எதிர்கொள்கையில் அவர் செறுக்குடையவராக மாறினார் என்றும, மக்களிடமிருந்தும், நடைமுறையிலிருந்தும் விலகிட் போனார் என்றும் தனி நபர்களது ஆதிக்கமும், தனிநபர் வழிபாடும் ஓங்கியது என்றும், கட்சியின் ஜனநாயக வாழ்வு சீர்குலைந்தது என்றும், இதற்குத் தனிநபர் அல்லது ஒரு சிலரை மட்டும் காரணமாகக் கூறமுடியாது, வரலாற்றுக் காரணங்களின் விளைபொருளே இவை என்றும் தெங்சியெள பிங் கும்பல் கூறுகிறது. சரியான நோக்கத்துடன் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி தொடங்கப்பட்டதாக 1979 ல் கூறிய தெங்சியெள பிங் கும்பல் அதைத் தொடங்கியதே தவறு என்று 1981-ல் முற்றாக நிராகரித்து விட்டது. மேற்சொன்ன காரணங்களைத் தொகுத்து " இவ்வாறு 'கலாச்சாரப்புரட்சியைத்' தொடங்குவதை தடுத்து நிறுத்தவும் அல்லது அதன் வளர்ச்சிக்குத் தடைபோடவும் கட்சி மற்றும் அரசுக்கு கடினமாக இருந்தது. [11-வது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளீன அறிக்கையிலிருந்து... , ஃபிராண்டியர், தொகுதி 14, எண் 2, பக் 9] என்றது.

கலாச்சாரப் புரட்சியின் பாதிப்புகள் அனைத்திற்கும் லின்பியெள மற்றும் நால்வர் கும்பலே காரணமென்று 1979-ல் தெங்சியெள பிங் கும்பல் கூறியது; ஆனால் ' ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து மனிதனையே கடிக்கும் குள்ளநரியான' தெங் கும்பல் 'இடது' தவறுகளுக்கெல்லாம் பிரதான காரணம் மாவோதானென்று 1981-ல் கூறுகிறது. ''கலாச்சாரப் புரட்சியின் கடுமையான 'இடது' தவறுக்கு - காலத்தால் நீண்ட நெடியதும், அளவால் விசாலமானதுமான தவறுக்கு - தலையாய பொறுப்பு நிச்சயமாக தோழர் மாசேதுங்கிடமிருக்கிறது. ஆனால் என்னதான் இருப்பினும் அது ஒரு மாபெரும் பாட்டாளி வர்க்கப்புரட்சியாளரது தவறுகள் [ஷ, பக். 6]

ஆக, மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைத் தொடங்கி நடத்தியதில் பின்வரும் தவறுகள் நேர்ந்ததாக தெங்சியெள பிங் கும்பல் கூறுகிறது :



படிப்பகம்

www.padippakam.com

'1. கட்சிக்குள்ளும் நாட்டிலும் இருந்த யதார்த்தத்திற்கு எதிராக சூழ்நிலை பற்றிய மதிப்பீடு செய்தது.

2. திரிபுவாதம் பற்றிய கறாரான விளக்கமளிக்கத் தவறியது.

3. ஜனநாயகமத்தியத்துவத்திலிருந்துவிலகிச் செல்லும் தவறான போராட்ட முறையும் கொள்கையும் கைக் கொண்டது ஆகிய தவறுகளை கட்சி இழைத்தது. இதற்குத் தலையாய பொறுப்பு மாவோவின் தலைமையாகும்.

1 கட்சியின் தவறுகளை லின் மற்றும் நால்வர் கும்பல் பயன்படுத்திக் கொண்டு எதிர்ப்புரட்சி இடது திரிபு வாத நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

2 கட்சி, அரசு மற்றும் மக்களின் வாழ்வில் பெரும் நாசம் விளைவித்த பேரழிவைக்கட்டவிழ்த்துவிட்டது ஆகிய தவறுகளை லின், நால்வர் கும்பல் மற்றும் பிற பிழைப்பு வாதிகளும், சதிகாரர்களும் இழைத்தனர். இவ்விரு வகையான தவறுகளும் தன்மையில் வேறானவை. கட்சியின் தவறுகள் உட்கட்சிப் போராட்டத்தால் தீர்க்கப்படும். லின் - நால்வர் கும்பல் ஆகிய எதிர்ப்புரட்சி, இடது திரிபு வாதிகளின் தவறுகள் எதிரிகளின் தவறுதலாகக் கருதி தண்டிக்கப்படும். மொத்தத்தில் கலாச்சாரப் புரட்சி ஒருபெரும்பேரழிவு-தெங்சியௌ பிங் கும்பலின் அதிகார பூர்வமான அறிவிப்புகளை இவ்வாறு தான் தொகுக்க முடியும்.

பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற கோட்பாட்டையே ஏற்காத லியு-தெங்கும்பல், மகத்தான பாட்டாளி வர்க்க கலாச்சாரப் புரட்சியின் எதிரிகளான, இலக்கான லியு—தெங் கும்பல் அதைத் தொடங்கி நடத்தியதில் கட்சி தவறிழைத்ததாக இழித்துக் கூறுவதில் வியப்பில்லை. முதலாவதாக, மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியைத் தொடங்கிய போது கட்சிக்குள்ளும் நாட்டிலும் இருந்த நிலைமைகள் பற்றிய மதிப்பீடு உண்மைக்கு புறம்பானது என்று தெங் கும்பல் கூறுகிறது. இங்கு நிலைமைகள் என்கிற போது லியு-தெங் கும்பல் எதைக் குறிக்கிறது? மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் சமயத்தில் சீனத்திலிருந்த வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள் மற்றும் வர்க்கப் போராட்ட நிலைமைகள்; கட்சியில் அவற்றின் பிரதிபலிப்புகளால் எழுந்த போக்குகள்; இந்த நிலைமைகள் பற்றிய மதிப்பீடு உண்மை நிலைமைக்குப் புறம்பானது என்கின்



படிப்பகம்

www.padippakam.com

றனர். இது ஒரு அடிப்படைப் பிரச்சினை. நிகழ் காலத்தில் லியு-தெங் கும்பலை பூரணமாக வெளிப்படையாக ஆதரித்து நிற்பவர்களிலிருந்து மையவாத நிலையெடுத்து மறைமுகமாக ஆதரிப்பவர்கள் வரையிலான எல்லா வண்ணத் திரிபுவாதிகளையும் மட்டுமல்ல, கடந்த கால மற்றும் எதிர்காலத்திய எல்லா வண்ணத் திரிபுவாதிகளையும் மார்க்சிய-லெனினிய வாதிகளையும் பிரிக்கும் எல்லைக்கோடு இங்கே தான் தொடங்கு கிறது; அவர்களை உரசிப்பார்க்கும் அடிப்படைகள் இங்கே தான் இருக்கின்றன. இதைப் பற்றிக்கொண்டு இவர்களது திரிபு வாதப்போக்குகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

சீனத்தின் வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், மற்றும் வர்க்கப் போராட்டங்களின் யதார்த்தமான நிலைமைக்குப் பொருத்தமான மதிப்பீடு என்னவென்று லியு-தெங் கும்பலின் நிலைப்பாடுகளை, நீண்டதாக இருப்பினும் அவர்களது சொந்த ஆதாரங்களிலிருந்தே கீழே தருகிறோம்:

ஐந்தாவது தேசிய மக்கள் காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடருக்கு சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசாங்க வேலை மீதான அறிக்கையில் பிரதமர் ஹீவா கோஃபெங் சுட்டிக் காட்டினார். '' எமது நாட்டில் (தாய்வான் தவிர) நிலப்பிரபுத் துவ மற்றும் முதலாளித்துவ சுரண்டல் அமைப்பு முறைகள் ஒழிக் கப்பட்டு விட்டன; பரந்து விரிந்த பெரும்பான்மையான மக்க ளால் விரும்பப்பட்ட சரியான நியாயமான நடவடிக்கைகள் மூலம் சிறு திறத்தினதான உற்பத்தி முறை மாற்றி அமைக்கப்பட்டு விட்டது. கடுமையான சோதனைகளினூடாகச் சென்ற சோசலிச அமைப்பு முறை இறுதியிவ் உறுதியாக நிறுவப்பட்டு விட்டது. நிலப்பிரபுக்களும் பணக்கார விவசாயிகளும் வர்க்கங்கள் என்கிற முறையில் இல்லாமல் போனார்கள். வரலாற்றுக் காரணங்களால் எமது நாட்டின் முதலாளிகள் மக்களின் ஒரு பகுதியாக அமைகி றார்கள். அவர்களை விலைக்கு வாங்கி விடும் ஒரு சரியான கொள்கையை எமது அரசாங்கம் கடைப்பிடித்தது; முதலாளித் துவ தொழிலையும், வர்த்தகத்தையும் வெற்றிகரமாக மாற்றி விட்டது. முதலாளிகள் ஒரு வர்க்கமாக இனியும் இல்லை. முப் பதாண்டுப் போராட்டம் மற்றும் கல்விக்குப்பிறகு வேலை செய்ய முடிந்த இவ்வர்க்கங்களின் பெரும்பாலானவர்கள் சோசலிச சமு தாயத்தில் தமது சொந்த ஜீவனத்திற்கானவற்றை சம்பாதிக்கும் உழைக்கும் மக்களாகி விட்டனர் '' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் : 27, பக்கம் 9)



படிப்பகம்

www.padippakam.com

இதை எவ்வாறு விளக்குகின்றனர்? "ஒரு வர்க்கத்தின் கரங்களில் இனியும் உற்பத்திச் சாதனங்கள் இல்லாதபோது, மக்களின் ஒரு பிரிவு மற்றொன்றின் உழைப்பை இனியும் சுவீகரிக்க முடியாத போது, அது சரி, இந்த வர்க்கமும் இல்லாது போகிறது.

"வர்க்கங்களைப் பாகுபடுத்துவதற்கான மார்க்சிய அளவுகோலை இன்றைய நமது நாட்டின் யதார்த்தத்திற்கு நாம் பிரயோகிப்பின், அதன் அதிகார பூர்வமான வரலாற்று முழுமையில் நிலப்பிரபு, பணக்கார விவசாயி மற்றும் தேசிய முதலாளிகள் ஆகிய வர்க்கங்கள் இனியும் இல்லை.

"நாளும் ஆளப்பட்டு வரும் சோசலிசப் புரட்சியின் இந்த வர்க்கங்கள் சிறுகச் சிறுக இல்லாதொழிந்து போகின்றன. பரஸ்பர உதவிக் குழுக்கள், ஆரம்ப நிலைக் கூட்டுறவுகள், பிறகு முன்னேறிய கூட்டுறவுகள் ஆகிய படி நிலைகள் மூலம் எமது நாட்டில் விவசாயம் சோசலிச மாற்றத்தை அடைந்தது. அரசுக்குப் பொருட்களைப் படைத்திடுதல், அரசின் தேவைகளை ஏற்பது, இணைந்த கொள்முதல் மற்றும் விநியோகம் மற்றும் அரசு தனியார் கூட்டு நிர்வாகங்கள் ஆகிய படி நிலைகள் மூலம் எமது நாட்டில் முதலாளிகளது தொழிலும் வர்த்தகமும் கூட சோசலிச மாற்றத்தை அடைந்தது. விவசாயக் கூட்டுறவின் தேசந் தழுவிய அலையின் எழுச்சி 1955 இலையுதிர் மற்றும் குளிர் காலத்தில் முதலாளித்துவத் தொழில் மற்றும் வர்த்தகத்தை மொத்தத் தொழிலையும் அரசு – தனியார் கூட்டு நிர்வாகத்திற்கு மாற்றி விடுவதில் வேகத்தைக் கொண்டு வந்தது. அது தனியார் கைவினையாளர்களை கைவினை கூட்டுறவுகளில் இணைவதில் ஒரு அலையாக எழுச்சியுறுவதில் கூட முன்னேற்றத்தைக் கொடுத்தது; அதன் மூலம் பிரதானமாக உற்பத்திச்சாதனங்களின் உடமையில் சோசலிசப் புரட்சியை முழுமையாக்கியது. 1958-ல் அனைத்தும் தழுவிய முறையில் கிராமப்புற மக்களின் கம்யூன்கள் நிறுவப்பட்டன.

"இந்த மாற்றத்தின் போக்கில் நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகளது – பிற மக்களைச் சுரண்டுவதற்கு அவர்கள் பயன்படுத்தும் உற்பத்திச் சாதனங்களை பறிமுதல் செய்யும் அதே வேளையில் உற்பத்திக்கான உழைப்பின் மூலம் சீர்திருத்துவது மற்றும் அவர்களை மேற்பார்வையின் கீழ் வைப்



படிப்பகம்

www.padippakam.com

பது என்ற கொள்கையை எமது கட்சி கையாண்டது. முதலாளி களின் பால் எமது கட்சியின் கொள்கை அவர்களை விலைக்கு வாங்குவது, அவர்களோடு இணைவது, போதிப்பது மற்றும் அவர்களை மறு வார்ப்பு செய்வது, இந்தக் கொள்கைகள் மிகவும் வெற்றிகரமானவை என்பதை நடைமுறை காட்டுகின்றது. 20 ஆண்டுகளுக்கு மேலான போராட்டம், போதனை மற்றும் மறு வார்ப்பிற்குப் பிறகு நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகளில் ஆகப் பெரும்பான்மையினர் சட்டத்திற்குப் பணியும் மற்றும் நன்னடத்தையுள்ள மக்களாக மாறியிருக்கிறார் கள்; முதலாளிகளில் ஆகப் பெரும்பான்மையினர் பொதுவுடைமைக் கட்சியைப் பின்பற்றவும் சோசலிசப் பாதையை மேற்கொள்ளவும் தங்களது விருப்பத்தைக் காட்டியுள்ளனர். இவர்களில் உழைக் கத் தகுதியான மிகப் பெரும்பான்மையினர் ஏற்கெனவே எமது சோசலிச சமுதாயத்தில் தங்களது ஜீவனத்துக்காக சம்பாதிக்கும் உழைப்பாளர்களாக மாற்றப்பட்டு விட்டார்கள் ''.

(பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் : 46, பக் 10)

' தற்போது மீண்டும் முதலாளித்துவ வங்கி சேமிப்புகள் திருப்பித் தரப்பட்டது மற்றும் உயர் ஊதியம் பெற அனுமதிக்கப் பட்டதை முதலாளிகள் சுரண்டுவதையும் முதலாளித்துவ வர்க்கம் இருப்பதையும் குறிப்பதாக எண்ணுபவர்கள் முதலாளிகளை விலைக்கு வாங்கும் கொள்கையைப் புரிந்துகொள்ளவில்லை ' என்று கூறுகிறது தெங் கும்பல்

'' அதன்படி, 1956-க்கு முன்பு அரசு -முதலாளிகள் நிறுவனங்கள் பால் எமது கொள்கை அவற்றின் மொத்த இலாபத் தில் கிட்டத்தட்ட ஒரு கால் பகுதி முதலாளிகளுக்கு ஒதுக்கு வதாகும். மொத்தத் தொழில்களையும் 1956-ல் அரசு தனியார் கூட்டு நிர்வாகத்திற்கு தேசந்தழுவிய முறையில் மாற்றிய பிறகு, ஆண்டிற்கு 5% என்கிற விகிதத்தில் நிறுவனங் களில் உறுதி செய்யப்பட்ட அவர்களது பங்குகளுக்கு நிர்ண யிக்கப்பட்ட வட்டியாக முதலாளிகளுக்கு செலுத்தத் துவங்கி னோம். ஆதி முதலில், தொகையளிப்பது ஏழாண்டுகளுக்கு நீடிக்குமென்று தீர்மானிக்கப்பட்டது; ஆனால் பிறகு, அவை மேலும் மூன்று ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டன; 1966 செப்டம்ப ரில் நிறுத்தப்பட்டன. இந்த நிர்ணயிக்கப்பட்ட வட்டித்தொகை யளிப்புகளோடு அவர்களது பழைய உயர் ஊதியத்தை தக்க வைத்துக் கொள்ள முதலாளிகளை அரசு அனுமதித்தது.



படிப்பகம்

www.padippakam.com

“ பொருளாதார ரீதியில், தேசிய முதலாளிகள் அவர்
களது தொழில் நிறுவனங்களை ஒப்படைத்து, சோசலிச மாற்ற
மாகிய உடமை முறையை ஏற்றுக்கொள்ளும்படி செய்யவும்,
அரசியல் ரீதியில், மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதிருக்க காரண
மில்லாமல் செய்வதற்காக அவர்களது அரசியல் அடிப்படையை
துடைத்து விடவும் ஆகியவற்றின் பொருட்டு தேசிய முதலாளித்
துவ வர்க்கத்திற்கு பாட்டாளி வர்க்கம் ஒரு கணிசமான அளவு
நஷ்ட ஈடு தருகிறது. இந்தக் கொள்கையை சரியாக அமுலாக்
கியதன் பலனாக சுரண்டலின் மூலம் பெற்ற ஒரு வருவாயான
அவர்களுக்கு செலுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட வட்டியை
பெரும் பாகமாகக் கொண்ட வங்கி சேமிப்பை (கலாச்சாரப்புரட்சி
யின் போது பறிமுதல் செய்யப்பட்டது, மொ. ர்) சமீபத்தில்
திருப்பிக் கொடுத்தோம் என்பது உண்மையே. ஆனால் இது
1966 - ல் நிறுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட வட்டித் தொகை
யளிப்பிற்கு முன்பு அவர்களை விலைக்கு வாங்கி விடுவது என்ற
அரசின் நிலைநாட்டப்பட்ட கொள்கையின் படி செலுத்தப்
பட்டது. எனவே இந்த வருவாய் சட்டப் பூர்வமானது; சட்டத்
தால் பாதுகாக்கப்படுகிறது.” “மேலும் திருப்பித் தரப்பட்ட
இந்தப் பணம் நுகர்வதற்கு மட்டுமே பயன்படுத்த முடியும்;
மேலும் சுரண்டுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.”

“முதலாளிகளுக்கு உயர் ஊதியங்கள் கூட அவர்களை
விலைக்கு வாங்கி விடுவது என்ற கொள்கையின் பகுதிதான்.
கடந்த காலத்தில் அவர்களது மறு வார்ப்புக்கு சாதகமாக நாம்
உயர் ஊதியங்களை தொகையளித்தோம்; இன்று வரலாற்றுக்
காரணிகளின்படி இந்தத் தொகையை குறைக்காமல் இருப்பது
நல்லது ” (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் : 46, பக்கம் 10-13)

நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள் மற்றும் முதலா
ளிகள் ஆகிய சுரண்டும் வர்க்கங்கள் எப்பொழுதும் மாறாது என்
பது இயக்க மறுப்பியல் என்று கூறி மாவோவின் மேற்கோளை
காட்டுகின்றனர். அதே போன்று அந்த வர்க்கங்களைச் சேர்ந்த
வர்கள் இன்னும் இருப்பதையும் அவர்களை போதனை செய்து
மறுவார்ப்பு செய்ய வேண்டும் என்ற இயங்கியல் அணுகு முறை
யில் பார்க்க வேண்டும் என்கின்றனர். சீனத்தின் வர்க்க நிலை
மைகளில் சுரண்டும் வர்க்கங்கள் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டன
என்ற அடிப்படை மாற்றத்தை இன்னும் சிலர் எற்காமலிருப்பத
ற்கு பாரதூரமான விஷத்தன்மை வாய்ந்த லின்-நால்வர் கும்ப



படிப்பகம்

www.padippakam.com

லின் தொடர்ந்த கருத்து முதல்வாத வர்க்க ஆய்வின் ஆதிக்கம்
காரணமாக அவர்கள் சிந்தனை விலங்கிடப்பட்டிருக்கிறது என்
கின்றனர். (ஆதாரம் ஷெ, பக்கம் 10-11)

"எமது நாட்டின் வர்க்க நிலைமைகளில் அடிப்படை
மாற்றம் என்பது எமது கட்சி வேலையின் குவிமையத்தை
சோசலிச நவீன மயமாக்குதலுக்கு மாற்றுவதற்கான யதார்த்த
மான ஆதாரமாகும்.

"பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று பூர்வ
மான அனுபவத்தின் கண்ணோட்டத்தின்படி, பாட்டாளி வர்க்கம்
அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி சுரண்டும் வர்க்கங்களின்
எதிர்ப்பை ஒடுக்கும் அதன் பணியை அடிப்படையில் சாதித்த
வுடன் அதனுடைய வேலையின் குவிமையத்தை பொருளாதாரக்
கட்டுமானத்திற்கு துரிதமாக மாற்றிவிட வேண்டும் என்பதாகும்.
ஜனநாயகப் புரட்சியை முடித்த பிறகு சாத்தியமான அளவு துரித
மாக எமது நாட்டை ஒரு நவீன சக்தி வாய்ந்த சோசலிச அரசாக
கட்டியமைக்கும் இலக்கிற்காக எமது கட்சி வேலை செய்ய
ஆரம்பித்தது."

குடியரசின் ஆரம்ப ஆண்டுகளிலேயே, குறிப்பாக
உற்பத்திச் சாதனங்களின் உடைமை சோசலிச மாற்றம் அடைந்த
பிறகு மாவோ மீண்டும்மீண்டும் கட்சியின் வேலைபொருளாதாரக்
கட்டுமானத்திற்கு மாற வேண்டும் என்று சொன்னதாக மேற்
கோள் காட்டுகின்றனர். "நான்கு நவீன மயமாக்குதலை -
எமது தேசியப் பொருளாதாரத்தை உலகின் முன்னணி வரிசை
யில் நிறுத்தும் அற்புதமான திட்டத்தை - இந்த நூற்றாண்டின்
இறுதிக்குள் சாதிக்க வேண்டுமென்று, 1964 - ன் இறுதியில்
மூன்றாவது மக்கள் தேசியக் காங்கிரசுக்கான அரசாங்க வேலை
அறிக்கையில் கட்சியின் மத்தியக் கமிட்டி, மற்றும் தலைவர்
மாவோவின் கருத்துக்கேற்ப முதன் முதலாக அதிகார பூர்வமான
சீன மக்களுக்கு பிரதமர் சௌ என்லாய் அறிவித்தார். 1975
நான்காவது மக்கள் தேசிய காங்கிரசில் மீண்டும் இந்தத்
திட்டத்தைக் கொண்டு வந்தார்.

"எமது நாட்டின் வர்க்க நிலைமையில் மாற்றம் மற்றும்
உள்நாட்டிலும் உலக நிலைமையிலும் ஆக இரண்டிலுமான
வளர்ச்சி ஆகியவற்றின் விளைவாக எமது கட்சி அதன்வேலை
யின் குவிமையத்தை சோசலிச நவீனமயமாக்குதலுக்கு துரித



படிப்பகம்

www.padippakam.com

மாக மாற்றும் நெறிமுறையைத் தொடர்ந்து பின்பற்றி வருவதை இவை காட்டுகின்றன.

“ஆனால் இந்த மாற்றத்தை அமுலாக்க ஏன் இவ்வளவு காலம் தாமதப்பட்டது? காரணங்கள் பன்முகமானவை, மற்றும் சிக்கலானவை. ஒரு முக்கிய பெரும் காரணம் எமது நாட்டில் வர்க்க நிலைமை பற்றிய மதிப்பீடு ஒரு கால கட்டத்திற்கு யதார்த்தத்திற்கு பொருத்தமாக இல்லை; வர்க்கப் போராட்டம் யதார்த்தமாக இருந்ததைவிட, கடுமையாக இருந்ததாகப் பார்த்தது பொருத்தமாக இல்லை. எனவே தான் அடுத்தடுத்த அரசியல் இயக்கங்களிருந்தன.

“இந்தச் சூழ்நிலைகளில் மாற்றம் சாத்தியமில்லாமல் போனது. நால்வர் கும்பல் தூக்கியெறியப்பட்ட பிறகு மட்டுமே, அவர்களது எதிர்ப்புரட்சி சக்தி தகர்க்கப்பட்ட பின்னர் மட்டுமே, அவர்களது அதீத இடதுபாதை விமர்சிக்கப்பட்ட பின்னர் மட்டுமே, நாடு தழுவிய பெரும் அளவிலான அரசியல் இயக்கங்களுக்கு முடிவுகட்டுவது சாத்தியமானது; மொத்தக் கட்சியினுடைய வேலையின் குவிமையத்தை சோசலிச நவீனமயமாக்குதலுக்கு மாற்றுவது எங்களுக்குச் சாத்தியமானது.

“எமது நாட்டின் வர்க்க நிலைமையில் அடிப்படையான மாற்றம் பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வின் அடிப்படையில் எமது வேலையின் குவிமையத்தை மாற்றுவது என்ற முன்மொழிதலின் பொருள் தற்போதைய கட்டத்தில் தீர்க்க வேண்டிய பிரதான முரண்பாடாக வர்க்கப் போராட்டம் இனிமேல்இருக்காது.” (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் : 47, பக்கம் 15-16)

“சோசலிசத் தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகள் மற்றும் சோசலிசத்தை ஆதரிக்கும் பிற தேச பக்தர்கள் ஆகியோர் எமது சோசலிச சமுதாயத்தின் நாயகர்கள். அவர்கள் மத்தியில் ஒருவகை அல்லது மற்றொருவகை முரண்பாடுகள் இருக்கின்றன; ஆனால் அடிப்படை நலன்களில் மோதல் இல்லை. சோசலிசத்தினைக் கட்டியமைப்பதும் அதன் வளர்ச்சியும் அவர்களது பொது நலன்களுக்கே. இவை அனைத்தும் யாம் வென்ற வரலாற்று பூர்வமான வெற்றி; இது கேள்விக்கிடமற்றது; யதார்த்த உண்மை. அதுசரி, சோசலிசப் பொது ஒழுங்கமைவைப் பாரதூரமாக சீர்குலைக்கும் எதிர்ப்புரட்சியாளர்



படிப்பகம்

www.padippakam.com

களும், எதிரி உளவாளிகளும், கிரிமினல் குற்றவாளிகளும், அரசியலில் சீரழிந்து போனவர்களும், மற்றும் இலஞ்ச ஊழல் காரர்கள், பொதுச் சொத்தைச் சுருட்டிக் கொள்பவர்கள், வர்த்தக சூதாடிகள் போன்ற புதிய சுரண்டலாளர்களும் இன்னமும் இருக்கிறார்கள். நால்வர் கும்பல் மற்றும் சீர்திருந்தாத சில நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகள் உட்பட பழைய சுரண்டும் வர்க்கங்களின் மிச்ச சொச்சங்கள் அவர்களது பிற்போக்கு நிலைப்பாடுகளில் ஊன்றி நிற்பவர்கள்; அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் சோசலிச விரோத நடவடிக்கைகளை நடத்துபவர்கள். மேலும் என்னவென்றால் உள்நாட்டின் வர்க்கப் போராட்டம் வெளிநாட்டின் வர்க்கப் போராட்டத்தோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது. இக்காரணங்களால் சீனத்தில் இனி வரும் நீண்டகாலத்திற்கு எல்லா வகையான வர்க்க எதிரிகளும் இன்றும் இருக்கிறார்கள்; அவர்கள் மீது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நாம் பிரயோகிக்க வேண்டும். அவர்கள் எண்ணிக்கையில் சிலரே எனினும் எந்தச் சூழ்நிலையிலும் எமது எச்சரிக்கையை தளர்த்தக்கூடாது. அல்லது பாதுகாப்பைத் தாழ்த்தக்கூடாது. மக்களது அணிவரிசைகளிலும் முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சித்தாந்தங்களின் செல்வாக்கு ஒரு நீண்ட காலத்திற்கு நீடிக்கும். இந்த செல்வாக்குகளை எதிர் கொண்டு நீண்ட காலப் போராட்டம் மற்றும் போதனையில் நாம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். உற்பத்திகளைப் பெருக்கி, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தி நான்கு நவீன மயமாக்குதலை நடத்தும் அதே சமயம் ‘முதலாளி வர்க்கம் இருப்பது அல்லது ஒரு புதிய முதலாளி வர்க்கம் தோன்றுவது சாத்தியமில்லாதவாறு’ சரியான வழிமுறைகளில் பொருளாதார ரீதியில், அரசியல் மற்றும் சித்தாந்த ரீதியில் வர்க்கப் போராட்டத்தை நடத்துவதை நாம் தொடர வேண்டும். இதுவும் கூட ஒரு கேள்விக்கிடமற்றது, யதார்த்த உண்மை. இந்த இரு அடிப்படை உண்மைகளிலிருந்து தொடங்கி பின்வரும் நெறிமுறைகளை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

‘‘ முதலாவதாக, வர்க்கப் போராட்டம் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை, அதே சமயம் பரந்துபட்ட மக்களால் நடத்தப்படும் பெரும் அளவிலான - கொந்தளிப்பான வர்க்கப் போராட்டம் எதுவும் இனி மேலும் அவசியமில்லை ஆகிய இரண்டையும் அங்கீகரிக்கிறோம்; எனவே அம்மாதிரியான ஒரு



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தை தொடுக்க எதிர்காலத்தில் நாம் முயற்சிக்கக்
கூடாது. வர்க்கப் போராட்டம் மறைந்து விட்டது என்ற பார்வை
அது பெரிதுபடுத்தப்பட வேண்டும் என்ற பார்வை இரண்டும் தற்
போதைய கட்டத்தில் புறநிலை யதார்த்தத்திற்குப் பொருந்தா
தவை. அதன் விளைவுகள் மொத்த நாட்டு மக்களின் விருப்பத்
துக்கு எதிராகப் போகின்றன. தோழர் மாசேதுங்கின் போதனை
யின்படி சோசலிச சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடுகள் இன்
னமும் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடை
யிலானது மற்றும் மேல்கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்
தளத்துக்கும் இடையிலானது ஆகியவை. இருப்பினும், அவை
பழைய சமுதாயங்களில் நிலவிய உற்பத்தி உறவுகளுக்கும்
உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான மற்றும் மேல்கட்டுமானத்
திற்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடையிலான முரண்
பாடுகளிலிருந்து தன்மையில் அடிப்படையாக மாறுபட்டவை;
மாறுபாடான அம்சங்களைக் கொண்டிருப்பவை. சோசலிசத்
தின் கீழ் எமது அடிப்படைப் பணி உற்பத்தி சக்திகளை விடுவிப்ப
திலிருந்து புதிய உற்பத்தி உறவுகளின் கீழ் அவற்றைக் காத்து
வளர்ப்பதாக மாறியுள்ளது. நவீன விவசாயம், தொழில், தேசிய
பாதுகாப்பு மற்றும் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் சீனத்தை ஒரு
சக்தி வாய்ந்த சோசலிச நாடாக்குவதற்கு அவர்கள் விழைவ
தால் எமது மக்களது அமைதியான உழைப்பை பாதுகாப்பது
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் நோக்கமாகும். எமது உற்
பத்தி சக்திகளின் தற்போதைய மட்டம் மிகமிகக் குறைவானது;
மக்கள் மற்றும் நாட்டின் தேவைக்குப் பற்றாக்குறையானவை.
நூற்றாண்டின் இறுதிக்குள் நான்கு நவீனமயமாக்குதலை சாதிப்
பது, உற்பத்தி திறனின் தற்போதைய குறைந்த மட்டத்தை ஒரு
நவீனதேசத்திற்குப் பொருத்தமாக உயர்த்துவது ; விளைவாக
நவீன மயமாக்குதலுக்குத் தடையாக இருக்கும் எமது தற்
போதைய உற்பத்தி உறவுகள் மற்றும் மேல்கட்டுமானத்தின்
அந்தப்பகுதிகளை மாற்றுவது ; மற்றும் அதற்குத் தடைக்கல்
லாக உள்ள எல்லா பழக்க வழக்கங்களையும் ஒழித்துக்கட்டுவது
இவையே தற்போதைய கட்டத்தில் எமது எல்லா மக்களும்
தீர்க்க வேண்டிய முரண்பாடாகவும் செய்து முடிக்க வேண்டிய
மையப்பணியாகவும் அமைகின்றன. இந்த மையப்பணியைச்
செய்வதற்கு நாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் வர்க்கப்
போராட்டத்தில் அழுந்தி நிற்க வேண்டும். ஆனால் எமது சமு
தாயத்தில் வர்க்கப் போராட்டம் பிரதான முரண்பாடாக இனிமேல்
இல்லை ; அதைத் தொடுப்பதில் சோசலிச நவீனமயமாக்கு



படிப்பகம்

www.padippakam.com

தலை மையமாகச் சுற்றியும் அந்த மையப்பணிக்கு சேவை செய்வதாகவும் இருக்க வேண்டும். அது சரி, 'ஒவ்வொருவரிடமிருந்து அவரவர் சக்திக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப' என்ற மாபெரும் பொதுவுடமை இலட்சியத்தை அடைவது சோசலிசத்தை முன்னேற்றுவதின் இறுதி நோக்கம் . ...

'' இரண்டாவதாக, சோசலிச சமுதாயத்தில் எதிரிக்கும் மக்களுக்கும் இடையிலானது அதே போன்று மக்கள் மத்தியிலானது ஆகிய முரண்பாடுகள் இருக்கின்றன ; இவ்விரு வகை முரண்பாடுகளும் கறாராக வேறுபடுத்தப்பட்டு சரியாக கையாளப்பட வேண்டும் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். எதிரிக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் சர்வாதிகாரத்தின் மூலம் தீர்க்கப்படுகின்றன ; அதே சமயம் மக்களின் அணி வரிசையிலான முரண்பாடுகள் ஜனநாயக முறைகளில், ஒற்றுமை - விமர்சனம் - ஒற்றுமை மூலம் தீர்க்கப்படுகின்றன. இரண்டு வகை முரண்பாடுகளையும் கையாள்வதில் நாம் பரந்துபட்ட மக்களை முற்றாக சார்ந்து நிற்க வேண்டும்; சோசலிச சட்ட முறையை கறாராக கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறு புரட்சிகர ஒழுங்கமைவில் — ஸ்திரமும் ஐக்கியமும் - நீண்ட காலத்திற்கு நாம் அழுந்தி நிற்கவும், சோசலிச நவீனமயமாக்குதலை தடுத்து பாதிக்கும் குழப்பங்களைத் தடுக்கவும் முடியும். சிறப்பான, உள்ளூர் அளவிலான, தற்காலிகமான சம்பவங்களில் தவிர சோசலிச சமுதாயத்தில் முதலாளித்துவ சமுதாயத்தை போல முரண்பாடுகள் இருக்காது ; கடும் பகைமைகளிலும் மோதல்களிலும் அவை வெளிப்படாது ; மாறாக சோசலிச அமைப்பு முறையிலேயே தீர்க்க முடியும் என்று தோழர் மாவோ கருதினார். சோசலிச அமைப்பு முறையின் மேலாண்மையை முழு வீச்சோடு கொண்டுவர மக்களின் மற்றும் குறிப்பாக இளைஞர்களின் அரசியல் உணர்வை உயர்த்த வேண்டும்; சோசலிச ஜனநாயகத்தை முன்னேற்ற வேண்டும், சோசலிச சட்ட முறையைப் பலப்படுத்த வேண்டும்''. (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண்:27, பக்கம் 9-10)

''தற்போதைய கட்டத்தில் வர்க்கப் போராட்டம் ஒரு சிறப்பான வடிவத்தையும் புதிய சிறப்பான அம்சங்களையும் கொண்டிருக்கிறது. கடந்த காலத்தில் வர்க்கப் போராட்டம் பாட்டாளி வர்க்கத்துக்கும் பிற சுரண்டும் வர்க்கங்களுக்கும் இடையிலானதாக பிரதானமாக ஒரு ஜீவ மரண வர்க்கப் போராட்டத்தை, மோதலைக் கொண்டிருந்தது: இன்று, பகைமையான வர்க்கங்கள்



படிப்பகம்

www.padippakam.com

இல்லாமற் போய்விட்டன; அவை சக்தி வாய்ந்த பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு முழுமையான வளர்ந்த பிற்போக்கு வர்க்கமாக இனிமேலும் வளர முடியாது. எனவே வர்க்கப் போராட்டம் இனிவரும் நாட்களில் வரலாற்று பூர்வமாக இருந்தது போன்று மொத்தமாக வர்க்கங்களுக்கிடையிலான ஒரு போராட்டமாக இராது. எனவேதான் அவர்களுக்கு எதிரான எமது போராட்டத்தில் நாடு தழுவிய வெகு ஜன வர்க்கப் போராட்டத்தின் ஒரு வடிவத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் இனிமேல் இல்லை.

''அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்புவர்களுக்கும் அதிகாரத்தின் மீது தமது பிடியை தக்க வைத்துக்கொள்ள விரும்புவர்களுக்கும் இடையிலான, எடுத்துக் கொள்ள முயலுபவர்களுக்கும் அதற்கு எ தி ர ா க போரிடுபவர்களுக்கும் இடையிலான போராட்டத்தில் கடந்த காலத்தில் வர்க்கப் போராட்டம் வழக்கமாக நேரிடையாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. எதிர் காலத்தில் வர்க்கப் போராட்டம் பிரதானமாக சோசலிச நவீன மயமாக்குதலைச் சுற்றியதாக இருக்கும்; சோசலிச நவீனமயமாக்குதலுக்கு சேவைசெய்யும்படியானதாக ஆக்கப்படும்; நான்கு நவீனமயமாக்குதல்களைக் காட்டவர்களுக்கும் இந்த நவீனமயமாக்குதல்களை அடைவதை சிதைக்க முயல்பவர்களுக்கும் இடையிலான போராட்டமாக பிரதானமாக அதன் வெளிப்பாடு இருக்கும். அதே சமயம், நான்கு நவீனமயமாக்குதல்களுக்கான எமது கட்டுமானங்கள் ஏகாதிபத்தியம் மற்றும் மேலாதிக்கம் சர்வதேசிய ரீதியில் நிலவும்போது நடக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். எதிரி படையெடுப்புகள், சிறிய அளவிலான போர்கள் மற்றும் ஒரு உலக யுத்தமும் உட்பட பல பாரதூரமான மோதல்களும் போராட்டங்களும் எதிர்கொள்வது தொடரும். இவைகள் நடக்கும் போது, பிற்போக்கு வர்க்கங்களின் மிச்ச சொச்சங்கள் நாசவேலையில் ஈடுபடவும், தொந்தரவுகள் விளைவிக்கவும் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளும். எனவே, நான்கு நவீனமயமாக்குதல்களின் போக்கில் எமது அரசியல் விழிப்புணர்வை தளர்த்தக் கூடாது''.

(பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண்: 47, பக்கம் 17)

சீனப் பொதுவுடமைக் கட்சியின் 11-வது கட்சிக் காங்கிரசிலிருந்து சிறிது சிறிதாக, படிப்படியாக எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தைப் புகுத்தி வந்த தெங் சியௌபிங் கும்பல், 1981 ல் 11-வது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளீனத்தில் அப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

மாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டு விட்டது. மாவோ சிந்தனையின் பெயரால், மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் பெயரால், 11-வது கட்சிக் காங்கிரசின் பெயரால் மூடி மறைக்கப்பட்ட வடிவத்திலேயே தனது எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தை அது முன் தள்ளியது. ஆனால் ஆறாவது பிளீனத் தொடரில் இவை அனைத்தையும் கலைந்துவிட்டு நிர்வாணமாக நிற்கிறது. 11-வது கட்சிக் காங்கிரசு பற்றியே கூட பின்வருமாறு தற்போது கூறுகிறது. "நால்வர் கும்பலை அம்பலப் படுத்தி நிராகரிப்பதிலும். சீனத்தை ஒரு பலம் வாய்ந்த நவீன சோசலிச அரசாசக் கட்டியமைக்க கட்சி முழுவதையும் அணி திரட்டுவதிலும் ஒரு நேர்மறைப் பாத்திரத்தை ஆகஸ்டு 1976 ல் கூட்டப்பட்ட சீனப் பொதுவுடமைக்கட்சியின் தேசியக் காங்கிரசு ஆற்றியது. இருப்பினும் தோழர் ஹீவா கோஃபெங்கினுடைய தவறுகளின் செல்வாக்கு என்ற அப்போதைய வரலாற்றுக் காரணங்கள் புகுத்திய வரம்பீடுகளின் காரணமாக 'கலாச்சாரப் புரட்சி யின் தவறான கோட்பாடுகள், கொள்கைகள், மற்றும் முழக்கங்களை அது திருத்துவதற்குப் பதில் மறுவுறுதி செய்தது." (11-வது மத்திய கமிட்டியின் ஆறாவது பிளீன அறிக்கையிலிருந்து ...., ஃபிராண்டியர், தொகுதி,14, எண் 14, எண் பக் 11)

மேற்குறிப்பிட்ட நீண்ட மேற்கோள்களிலிருந்தும், வர்க்கங்களிலிருந்தும், மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சிக்கு முன்பிருந்தே சீனத்தின் வர்க்க நிலைமைகள் குறித்தும, கைக்கொண்டிருக்க வேண்டிய கொள்கைகள் குறித்தும் லியு - தெங் கும்பலின் நிலைப்பாடுகளை சாராம்சமாக தொகுப்பதானால் ;

(1) உற்பத்திச் சாதனங்களின் உடமை அடிப்படையில் சோசலிச மாற்றம் செய்யப்பட்டபின் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள் மற்றும் முதலாளிகள் ஆகிய சுரண்டும் வர்க்கங்கள் இனிமேலும் சீனத்தில் இல்லாமற் போய்விட்டன. இந்த வர்க்கங்களின் ஆகப்பெரும்பான்மையினர் தங்களது ஜீவனத்துக்கு உழைத்து சம்பாதிப்பவர்களாக மாற்றப்பட்டு விட்டார்கள்.

(2) சீனத்து வர்க்க நிலைமைகளில் இந்த அடிப்படையான மாற்றம் எற்பட்டதால் வர்க்கப் போராட்டம் - பாட்டாளி வர்க்கத்துக்கும் பிற சுரண்டும், வர்க்கங்களுக்கும் இடையிலானது -



படிப்பகம்

www.padippakam.com

இன்றைய கட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய பிரதான முரண்பாடாக இனிமேலும் இல்லை. நான்கு நவீனமயமாக்குதல்களை இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் அடைவது, அதற்காக உற்பத்தித் திறனை உயர்த்துவது, நவீனமயமாக்குதல்களுக்குத் தடையாகவுள்ள தற்போதைய உற்பத்தி உறவுகள் மற்றும் மேல் கட்டுமானத்தின் அந்தப் பகுதிகளை மாற்றுவது, அதற்கு தடையாகவுள்ள எல்லா பழைய பழக்க வழக்கங்களையும் ஒழிப்பது இவையே இன்றைய கட்டத்தின் பிரதான முரண்பாடாக அமைகின்றன. (தெங் கும்பலின் இந்தக் கருத்தும் 11-வது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளினத்தில் மாற்றப்பட்டு விட்டது. மக்களது வளரும் பொருளாயத மற்றும் கலாச்சார தேவைகளுக்கும் பின்தங்கிய சமூக உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதே என்று தற்போது கூறுகிறது.)

(3) இருப்பினும் இன்னும் எதிர்ப்புரட்சியாளர்கள் மற்றும் பிற பகைமையான நபர்கள் இருக்கின்றனர்; மக்கள் மத்தியிலும் முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ சித்தாந்தங்கள் நீடிக்கின்றன. உள்நாட்டு வர்க்கப் போராட்டம் வெளி நாட்டினதோடும் பிணைந்திருக்கிறது. எனவே இருவகை முரண்பாடுகளும் அவற்றால் எழும் வர்க்கப்போராட்டங்களும் நீடிக்கின்றன. வர்க்கப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது என்பதும், அதே போன்று போராட்டத்தை பரந்துபட்ட மக்களால் நடத்தப்படும் கொந்தளிப்பான, நாடு தழுவிய, பெரும் அளவினதாக பெரிதுபடுத்த வேண்டும் என்பதும் இரண்டுமே தவறானவை. எதிரிக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் சர்வாதிகார முறையாலும் மக்கள் மத்தியிலான முரண்பாடுகள் ஜனநாயக முறையாலும் தீர்க்கப்படும். இரண்டு வகை முரண்பாடுகளும் பரந்துபட்ட மக்களைச் சார்ந்தும் சோசலிச ஜனநாயகம் மற்றும் சோசலிச சட்ட அமைப்பு முறைகளின் கட்டமைவுக்குள்ளேயே கையாளப்பட்டு தீர்க்கப்படும்.

(4) அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஜீவமரண வர்க்கப் போராட்டம் பிரதானமாக இருக்காது. எனவே, நாடுதழுவிய, பெரும் அளவினதான, கொந்தளிப்பான வெகுஜன அரசியல்இயக்கங்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்; கட்சி மற்றும் அரசினுடைய வேலையின் குவிமையம் சோசலிச நவீனமயமாக்குதலுக்கு - பொருளாதார கட்டுமானப்பணிக்கு - மாற்றப்பட்ட வேண்டும். சோசலிச நவீனமயமாக்குதலைச் சுற்றி



படிப்பகம்

www.padippakam.com

அதற்கு சேவை செய்வதாக - பிரதானமாக வர்க்கப்போராட்டம் நடத்தப்படும். அதன் பிரதான வெளிப்பாடு நான்கு நவீனமய மாக்குதல்களைக் காட்பவர்களுக்கும் அதைத் தடுத்து சீர்குலைப் பவர்களுக்கும் இடையிலானதாக வெளிப்படும்.,

எதிர்ப்புரட்சியாளர்கள், எதிரி உளவாளிகள், கிரிமினல் குற்றவாளிகள், அரசியல் சீரழிவுக்காரர்கள் மற்றும் லஞ்ச ஊழல் பேர்வழிகள், சுருட்டிக் கொள்பவர்கள், வர்த்தகச் சூதாடிகள் போன்ற புதிய சுரண்டலாளர்களும், இன்னும் திருந்தவே திருந்தாத நிலப்பிரபுக்கள் மற்றும் பணக்கார விவசாயிகளில் சிலர் உட்பட பழைய சுரண்டும் வர்க்கங்களின் மிச்ச சொச்சங் களும், நால்வர் கும்பலின் மிச்ச சொச்சங்களும் இருப்பதாகவும், அவர்கள் தான் வர்க்க எதிரிகள் என்றும், அவர்களுக்கும் மக்க ளுக்கும் இடையிலான முரண்பாடுகள் கூட இருப்பதாகவும், ஏகாதிபத்திய ஆயுதந்தாங்கிய தலையீடுக்கான அபாயம் நீடிப்ப தாகவும், மக்கள் மத்தியில் கூட முதலாளித்துவ, நிலப்பிரபுத் துவ சித்தாந்தங்களின் செல்வாக்கு இருப்பதாகவும் லியு - தெங் கும்பல் ஒப்புக் கொள்கிறது. எனினும்,(1) புதிய முதலாளித்துவ நபர்கள் மற்றும் புதிய கிராமிய முதலாளிகளாகிய புதிய குலாக்கு கள் ஆகியோர் தொடர்ந்து சோசலிச அமைப்பிலும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள்; (2) இவர்கள் அனைவரும் பகைமை வர்க்கங்களாக அமைகிறார்கள். (3)இவர்களுடனான முரண்பாடு முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு இடையி லான முரண்பாடு- பகைமையானது, சோசலிச காலகட்டம் முழு வதும் பிரதானமானது (4) இதன் விளைவாக அவை முதலாளித் துவ மீட்சிக்கு முயலும். (5) ஏகாதிபத்தியங்கள் ஆயுதந்தாங்கிய தலையீடு செய்வது மட்டுமின்றி, உள்ளிருந்தே அமைதி வழி சீரழிவிற்கும் முதலாளித்துவ மீட்சிக்கும் முயலும் (6) இக்கார ணங்களால் நாடுதழுவிய, பெரும் அளவிலான, கொந்தளிப்டான, பகைமையான வர்க்கப்போராட்டங்களும் எழும் என்ற மார்க்சிய- லெனினிய - மாசேதுங் சிந்தனையின் அடிப்படையிலான முடிவு களை லியு - தெங் கும்பல் மறுக்கிறது.

லியு - தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தின் ஆணிவேர் எங்கே இருக்கிறது? 'சோசலிச உடமை மாற்றத் திற்குப்பின் சீனத்திலுள்ள வர்க்க எதிரிகளை வர்க்கம் என்கிற ரீதியில் அணுகக் கூடாது; தனி நபர்களாகவும், மிச்ச சொச் சங்களாகவும் மட்டுமே கருத முடியும்; சக்தி வாய்ந்த பாட் டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு முழுமையான' வளர்ச்சி



படிப்பகம்

www.padippakam.com

யுற்ற பிற்போக்கு வர்க்கமாக வர்க்க எதிரி வளர முடியாது; வெளிப்படையாக பாட்டாளி வர்க்கத்துடன் மோதவும் முடியாது; பகைமையான வர்க்கங்கள் இல்லை. எனவே, வர்க்கப் போராட்டம் ஜீவமரணப் போராட்டமாக, வரலாற்று பூர்வமாக இருந்தது போன்று இனிமேல் இருக்காது., லியு - தெங் கும்பல் தனது இந்த எதிர்ப்புரட்சி திரிபுவாதங்களை பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் முன்வைக்கின்றது.

" உற்பத்தியின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட வரலாற்றுப் படி நிலையில் மட்டுமே வர்க்கங்கள் நிலவுகின்றன என்று மார்க்சியம் கருதுகிறது. சமுதாய உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட அமைப்புமுறையில்-உற்பத்திச் சாதனங்களுடனான உறவுகளில் மக்கள் ஒரே மாதிரியாக இல்லாதவகையில் - வெவ்வேறு நிலைகளை மக்கள் கொண்டிருக்கும் பொழுது வர்க்கங்கள் தோன்றின. மேலும் மக்கள் சமூக உழைப்பு ஸ்தாபனத்தில் வெவ்வேறு பாத்திரங்களாற்றுவதன் விளைவாக அவர்களது சொந்தப் பற்றில் உள்ள சமூக செல்வத்தின் அளவும், அதை அவர்கள் அடையும் விதமும் ஒன்றாக இருப்பதில்லை. எனவே அவர்கள் வெவ்வேறு சமூகக்குழுக்களில் பிரிந்து விட்டார்கள். லெனின் சொன்னார் : 'வர்க்கங்கள் மக்களது குழுக்களாகும். அவற்றில் ஒரு குழு நிச்சயமான சமூக பொருளாதார அமைப்பு முறையில் மக்கள் வெவ்வேறு இடங்களை எடுத்துக் கொண்டிருப்பதால் மற்றொன்றின் உழைப்பை சுவீகரிக்க முடிவதாக இருக்கிறது'. (ஒரு மகத்தான தொடக்கம்) உற்பத்திச் சாதனங்கள் ஒரு வர்க்கத்தின் கரங்களில் இனிமேலும் இல்லாதபோது, மக்களது ஒரு குழு மற்றொன்றின் உழைப்பை சுவீகரிக்க முடியாதபோது, அது சரி, இந்த வர்க்கம் கூட இல்லாமல் போய்விடுகிறது." இந்த அடிப்படைக் கோட்பாட்டைப் பிரயோகித்து லியு-தெங் கும்பல் கூறுகிறது: " இன்று நமது நாட்டின் யதார்த்தத்திற்கு வர்க்கங்களைப் பாகுபடுத்தும் மார்க்சிய அளவுகோலை நாம் பிரயோகித்தால் நிலப்பிரபு, பணக்கார விவசாயி மற்றும் முதலாளித்துவ வர்க்கங்கள் அவற்றின் அதிகாரப்பூர்வமான வரலாற்று முழுமையில் இனிமேலும் இல்லை என்பதைக் காண்கிறோம்". (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 46, பக்கம்9)

லியு - தெங் கும்பல் முன் வைத்துள்ள இதே அளவுகோலைப் பிரயோகிப்பின் கூட எந்தவொரு சோசலிச நாட்டிலும் விதி விலக்கின்றி பகைமையான வர்க்ககள், பகைமையான



படிப்பகம்

www.padippakam.com

வர்க்க முரண்பாடுகள் மற்றும் பகைமையான வர்க்கப்போராட்டங்கள் நீடிக்கவே செய்கின்றன என்பதை அறிய முடியும். ஆனால் அதே அளவுகோலை லியு- தெங் கும்பல் எந்திர ரீதியில் பிரயோகித்து சோசலிச உடமை மாற்றத்திற்குப்பின் இவை இல்லாமற் போவதாகக் கூறுகிறது. சோசலிச உற்பத்தி முறையிலேயே கூட அவை நீடிப்பதற்கான அடிப்படைகள் நிலவுகின்றன. சோசலிச உற்பத்திமுறை, சோசலிசப்புரட்சி, சோசலிச நிர்மாண ஆகியவற்றின் வளர்ச்சிப்போக்கு பற்றிய புறவயமான விதிகளைப் புரிந்திருப்போருக்கு இதுவொன்றும் வியப்புக்குரியதல்ல.

சொல்லிக் கொள்ளப்படும் சோசலிச உடமை மாற்றம் உட்பட சோசலிசப் பொருளாதாரத்தில் இவை எவ்வாறு நிலவுகின்றன என்பதைப் பார்ப்போம். சோசலிச உற்பத்தி முறையில் (1) சிறு அளவிலான உற்பத்தி நீடிக்கிறது. (2) பரிவர்த்தனை ட்பண்ட உற்பத்தி நீடிக்கிறது, (3) மதிப்பின் மாற்றத்திற்கான வடிவமாகப் பணம் நீடிக்கிறது. (4) சமனற்ற விநியோக முறை நீடிக்கிறது. இந்நான்கு அம்சங்களும் சோசலிச உற்பத்திமுறையிலேயே கூட முதளாளித்துவ அம்சங்களாகவும், புதிய முதலாளித்துவ கூறுகளை உருவாக்குவதற்கான அடிப்படைகளாகவும் நீடிக்கின்றன.

சிறு உற்பத்தி எவ்வாறு முதலாளித்துவத்தை உயிர்ப்பிப்பதற்கான அபாயகரமான அடிப்படையாக இருக்கிறதென்றும், சிறு அளவில் அல்ல. பெரும் அளவில் முதலாளித்துவ வர்க்கத்துக்கான ஊற்று மூலமாக இருக்கிறதெனுறும் லெனின் விளக்குகிறார் "(ஒரே ஒரு நாட்டில் கூட) தூக்கியெறியப்படுவதால் அதன் எதிர்ப்பை **பத்து மடங்கு** அதிகரித்திருக்கும் ஒரு **சக்தி வாய்ந்த எதிரியாகிய** முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக புதிய வர்க்கம் நடத்தும் மிகவும் தீர்மானகரமான, மிகவும் ஈவிரக்கமற்ற ஒரு யுத்தம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும். முதலாளித்துவ வர்க்கத்தின் சக்தி அதன் சர்வதேசிய மூலதனத்தில் மட்டுமல்ல, முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வதேசிய தொடர்புகளின் பலத்திலும் நம்பகமான தன்மையிலும் மட்டுமல்ல **பழக்க வழக்கங்களின சக்தி வாய்ந்த** பிடிபபிலும், **சிறுஉற்பத்தியின்** பலத்திலும்கூட இருக்கிறது. ஏனெனில் துரதிருஷ்ட வசமாக உலகில் இன்னும் மிகமிகப் பரந்த அளவினதாக சிறு உற்புத்தி இருக்கிறது. இடையராதும், தினந்தோறும், மணிதோறும், தன்னியல்பாகவும் ஒரு திரளான அளவிலும் முதலா



படிப்பகம்

www.padippakam.com

ளித்துவம் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்துக்கான தோற்று வாய்க்குக் காரணமாக சிறு உற்பத்தி இருக்கிறது. இந்தக் காரணங்களினால் எல்லாம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் "இன்றியமையாததாகஇருக்கிறது;சளையாத,கட்டுப்பாடானஉறுதியான, வெல்லற்க மற்றும் திடசித்தம் ஆகியவற்றைக் கோரும் ஒரு யுத்தமின்றி, நீண்ட உடும்புப்பிடியான மற்றும் ஜீவமரண யுத்தமின்றி முதலாளித்துவத்தின் மீதுவெற்றி சாத்தியமில்லை.''

(லெனின் : இடதுசாரி கம்யூனிசம்......)

உழைப்புக்கேற்ற ஊதியம் என்ற பங்கீடுமுறை செல்வத்தை ஏற்றத்தாழ்வாகப் பகிர்வதையும், முதலாளித்துவ உரிமையையும் குறிக்கிறது. மார்க்ஸ் மதிப்பின்விதி சோசலிச சமுதாயத்திலும் எவ்வாறு முதலாளித்துவ உரிமையை வழங்குவதாக இன்னமும் நீடிக்கிறது என்பதைப் பின்வருமாறு விளக்குகிறார்: ''நாம் இங்கு பரிசீலிக்க வேண்டியது என்னவென்றால் கம்யூனிச சமுதாயம் அதன் சொந்த அடித்தளத்தின்மீது வளர்ந்தது என்கிறமுறையில் அல்ல; ஆனால், மாறாக, இப்பொழுதுதான் முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து **தோன்றியது** என்கிற முறையில்; அதன்மீது பொருளாதாரம், தார்மீகம் மற்றும் அறிவார்ந்த துறை ஆகிய ஒவ்வொரு ரீதியிலும், எதன் கருப்பையிலிருந்து தோன்றியதோ அந்தப் பழைய சமுதாயத்தின் பிறப்புச் சின்னங்கள் இன்னமும் குறியிடப்பட்டிருக்கின்றன. அதன்படி தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் சமூகத்திடமிருந்து மீண்டும் பெறுவது— பிடித்தங்கள் கழிக்கப்பட்டபின் – மிகச்சரியாக சமூகத்திற்கு அவர் கொடுத்தது தான்.அதற்கு அவர் கொடுத்தது என்னவென்றால் அவரது தனிப்பட்ட அளவு உழைப்பு உதாரணமாக, சமூக உழைப்பு நாள் என்பது தனிப்பட்ட வேலையின் மணிகளின் தொகுப்பைப் பெற்றிருந்தது. தனிப்பட்ட உற்பத்தியாளரின் தனிப்பட்ட உழைப்புநேரம் அவரது பங்காக அவரால் பங்களிக்கப்பட்ட சமூக வேலை நாள். (பொது நிதிக்கான அவரது உழைப்பைக் கழித்தது போக) இவ்வளவு உழைப்பை செலுத்தினார் என்பதாக சமூகத்திடமிருந்து ஒரு அத்தாட்சியைப் பெற்றுக்கொள்கிறார்; இந்த அத்தாட்சியைக்கொண்டு உழைப்பின் அளவினுடைய விலைக்கு சமமான அதே அளவு நுகர்வுக்கான சாதனங்களை சமூக சேமிப்பிலிருந்து பெற்றுக் கொள்கிறார். சமூகத்துக்கு ஒரு வடிவத்தில் அவர் கொடுத்த அதே உழைப்பின் அளவை மீண்டும் மற்றொரு வடிவத்தில் பெறுகிறார்.

''இங்கு, இந்த சமமான மதிப்புகளை பறிமாறிக்கொள்வதைப் பொறுத்தவரை, பரிவர்த்தனைப் பண்டங்களை ஒழுங்கு முறைப்



படிப்பகம்

www.padippakam.com

படுத்தும் அதே நியதி ஆளுமைசெலுத்துகிறது என்பது வெளிப்படை. உள்ளடக்கமும், வடிவமும் மாறியிருக்கின்றன; ஏனெனில் மாறிய சூழ்நிலைமைகளின்கீழ் அவரது உழைப்பைத்தவிர வேறெதையும் ஒருவரும் தரமுடியாது; ஏனெனில் மற்றொரு புறம் தனிப்பட்ட நுகர்வுச் சாதனங்கள் தவிர எதுவும் தனிப்பட்டவர்களது உடமை முறையாக போகமுடியாது. ஆனால் தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் மத்தியிலான தனிப்பட்ட நுகர்வுச்சாதனங்களின் பங்கீட்டைப் பொறுத்தவரை சமமான மதிப்பையுடைய பண்டங்களின் பரிவர்த்தனையில் உள்ள அதே நியதி நிலவுகிறது; ஒரு வடிவத்தில் கொடுக்கப்பட்ட உழைப்பின் ஒரு அளவு மற்றொரு வடிவத்தில் ஒரு சமமான அளவு உழைப்புக்கு பரிவர்த்தனைசெய்யப்படுகிறது.

''எனவே கோட்பாடும் நடைமுறையும் மோதும் முனைகளாக இனியும் இல்லை என்றாலும், **சம உரிமை** இங்கு இன்னமும் கோட்பாடு ரீதியில் — **முதலாளித்துவ** உரிமையாக இருக்கிறது. அதேசமயம் பண்டப் பரிவர்த்தனையில் சமமானவற்றின் பரிவர்த்தனை சராசரியின் அடிப்படையிலேயே நிலவுகிறது; தனிப்பட்ட விவகாரத்தில் அல்ல.

''இந்த சாதகமான அம்சம் இருப்பினும் இந்த **சம உரிமை** இன்னும் முற்றாக ஒரு முதலாளித்துவ வரம்பினால் அழுத்தப்பட்டிருக்கிறது— உழைப்பாளர்களின் உரிமை அவர்கள் செலுத்தும் உழைப்புக்கு நேர் **விகிதமாக** இருக்கிறது; உழைப்பாகிய ஒரு **சம நிர்ணயப்பால்** அளவிடப்படுகிறது என்கிற உண்மையை சமத்துவம் கொண்டிருக்கிறது.

''ஆனால் ஒரு மனிதன் மற்றொருவனைவிட உடல் பலம் அல்லது மூளையால் மேலான்வனாக இருக்கிறான்; எனவே அவன் ஒரே நேர அளவில் கூடுதலான உழைப்பைச் செலுத்துகிறான், அல்லது ஒரு நீண்டநேரம் வேலைசெய்ய முடியும்; ஒரு அலகாக பயன்படுத்த வேண்டுமானால், காலத்தாலோ, தன்மையாலோ உழைப்பு வரையறுக்கப்பட்ட வேண்டும். இல்லையானால் ஒரு நிர்ணயிப்புக்கான அளவீடாக அது இல்லாமல்போகும். இந்த **சம உரிமை** சமனற்ற உழைப்புக்கான சமனற்ற உரிமையாக இருக்கிறது. இது வர்க்க வேறுபாடுகள் எதையும் அங்கீகரிப்பதில்லை; ஏனெனில் ஒவ்வொருவரும் வேறு ஒவ்வொருவரைப் போல் ஒரு தொழிலாளி மட்டுமே; ஆனால் இது சமனற்ற தனிப்பட்ட சொத்தாக மறைமுகமாக அங்கீகரிக்கிறது; இவ்வாறு தொழிலாளியின் உற்பத்தித் திறனை ஒரு இயற்கையான அந்தஸ்தாக அங்கீகரிக்கிறது. எனவே, **இது அதன் உள்ளடக்கத்தில ஒவ்வொரு உரிமையையும் போலவே சமனற்ற**



படிப்பகம்

www.padippakam.com

உரிமையாக இருக்கிறது. உரிமை அதன் தன்மையிலேயே ஒரு சமமான நிர்ணயிப்பின் பிரயோகத்தில் மட்டுமே அடங்கியிருக்க முடியும்; ஆனால் சமனற்ற தனிப்பட்டவர்கள் (அவர்கள் சமனற்றவர்களாக இல்லையானால் வெவ்வேறான தனிப்பட்டவர்களாக இருக்க மாட்டார்கள்), அவர்கள் ஒரு நிச்சயமான பக்கத்திலிருந்து மட்டுமே, உதாரணமாக இதே விவகாரத்தில், அவர்கள் தொழிலாளர்கள் என்கிற முறையில் மட்டுமே கருதப்படுகிறார்கள்; மேற்கொண்டு அவர்களிடம் எதுவும் பார்ப்பதில்லை; மற்ற அனைத்தும் புறக்கணிக்கப்படும் என்ற ஒரே கண்ணோட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவதைப் பொருத்த மட்டில் ஒரு நிர்ணயிப்பால் மட்டுமே அளக்கப்பட முடியும். மேலும், ஒரு தொழிலாளி திருமணமானவர், மற்றொருவர் இல்லை; ஒருவருக்கு மற்றொருவரை விட அதிகமான குழந்தைகள்; இவையும் பிறவும் இன்னும் பிறவும் இருக்கும். இவ்வாறு உழைப்பைச் சமமாக செய்வதோடும், அதன் மூலம் சமூக நுகர்வு நிதியிலிருந்து ஒரு சமமான பங்கோடும், உண்மையில் ஒருவர் மற்றொருவரை விட கூடுதலாகப் பெறுவார்; ஒருவர் மற்றொருவரை விட பணக்காரராக இருப்பார் மற்றும் இன்னும் பிறவும் இருக்கும். இந்த எல்லா குறைபாடுகளையும் தவிர்க்கவேண்டுமானால் உரிமை சமமாக இருப்பதற்குப் பதிலாக றதாக இருக்க வேண்டும்.

"ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தின் நீண்ட பிறப்பு வேதனைக்குப் பிறகு இப்பொழுதுதான் தோன்றியிருக்கும் போது கம்யூனிச சமுதாயத்தின்முதல்படி நிலையில் இந்தக்குறைபாடுகள் தற்போது இருப்பவை போன்றே தவிர்க்க இயலாதவை. சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டுமானம் மற்றும் அதனால் கட்டுப்படுத்தப்படும் கலாச்சார வளர்ச்சி மேலானதாக எப்பொழுதும் இருக்க முடியாது."

(கார்ல் மார்க்ஸ்: கோதா வேலைத்திட்டத்தின்மீதான விமர்சனம்)

பங்கீடு முறையில் இன்னும் நீடிக்கும் முதலாளித்துவ உரிமை பற்றி மேலும் பின்வருமாறு லெனின் கூறுகிறார், "கம்யூனிச சமுதாயத்தின் முதல்படி நிலையில் (வழக்கமாக சோசலிசம் என்றழைக்கப்படுவது) 'முதலாளித்துவ உரிமை' அதன் முழுமையில் ஒழிக்கப்படவில்லை; ஆனால், ஒரு பகுதி மட்டுமே; எதுவரை பொருளாதாரப் புரட்சி எட்டியிருக்கிறதோ அதற்கு நேர்விகிதத்தில் மட்டுமே; அதாவது, உற்பத்திச் சாதனங்களைப் பொறுத்த மட்டுமே ஒழிக்கப்பட்டிருக்கிறது. 'முதலாளித்துவ உரிமை' அவற்றைத் தனி நபர்களது சொத்து



படிப்பகம்

www.padippakam.com

டமையாக அங்கீகரிக்கிறது. சோசலிசம் அவற்றைப்பொதுச் சொத்துடமையாக மாற்றுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவு - மேலும் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டுமே - 'முதலாளித்துவ உரிமை' வீழ்ந்து டடுகிறது''

'' எவ்வாறாயினும், மற்றொரு பகுதியைப் பொருத்தவரை அது தொடர்ந்து நிலவுகிறது; உற்பத்திப் பொருட்களைப் பங்கீடு செய்வதிலும், சமூகத்தின் உறுப்பினர்களிடையே உழைப்பை ஒதுக்கீடு செய்வதிலும் ஒழுங்குமுறை (தீர்மானிக்கும் காரணி) என்கிற தோரணையில் அது தொடர்ந்து நிலவுகிறது. சோசலிச நெறிமுறையாகிய 'உழைக்காத எவரும் உண்ணவும் முடியாது' என்பது ஏற்கனவே சாதிக்கப்பட்டுவிட்டது. மற்றொரு சோசலிச நெறிமுறையாகிய 'ஒரு சமமான அளவு உழைப்புக்கு ஒரு சமமான அளவு கொண்டு செய்த பொருட்கள்' என்பதும் கூட ஏற்கனவே சாதிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இது இன்னமும் கம்யூனிசம் இல்லை; மேலும் இது இன்னமும் 'முதலாளித்துவ உரிமையை' ஒழித்துக் கட்டவில்லை; இது சமமற்ற தனி நபர்களுக்கு, சமனற்ற அளவு (உண்மையில் சமனற்ற) உழைப்புக்கு சமனற்ற அளவு பொருட்களைத் திருப்பித் தருகிறது.''

(லெனின்: அரசும் புரட்சியும்)

உற்பத்திச் சாதனங்களின் உடமை மாற்றத்தை அடுத்து உடனடியாக சமத்துவத்தைக் கொண்டு வந்துவிட முடியுமென்று மார்க்ஸ் கனவு காணவில்லை யதார்த்த பூர்வமான மாறுதலையே அதில் 'முதலாளித்துவ உரிமை' தொடர்வதையும் உள்ளிட்டு மார்க்ஸ் வரையறுத்தார் இது பற்றிய மார்க்சியக் கோட்பாடுகளைப் பின்வருமாறு லெனின் கூறினார்: ''மனிதரிடையே—தவிர்க்க முடியாமல் இருக்கிற ஏற்ற தாழ்வுகளின் வரையறுப்பை மட்டுமே மார்க்ஸ் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அத்துடன் உற்பத்திச் சாதனங்களின் பொதுச் சொத்தாக வெறுமனே மாற்றுவது ('சோசலிசம்' என்று பொதுவாக சொல்லப்படுவது) மட்டும் பங்கீடுகளில் உள்ள குறைபாடுகளை **நீக்கி விடுவதில்லை** என்பதையும் 'வேலைக்குத் தகுந்தவாறு' உற்பத்திப் பொருட்கள் பங்கீடு செய்யப்படும்வரை 'முதலாளித்துவ உரிமை'யின் ஏற்ற தாழ்வு **மேலாதிக்கம் செலுத்துவது தொடர்வதையும்** கணக்கில் எடுத்துக் கொள்கிறார்'' (வி.ஐ. லெனின்: அரசும் புரட்சியும்)

சோசலிச உற்பத்தி முறையிலும் கூட, விநியோக முறையில் தொடர்ந்து முதலாளித்துவ அம்சம் நிலவுவதை மேற்கண்டவை நிரூபிக்கின்றன. அத்துடன் விநியோக மதிப்பின் வடிவமாக பணம் நீடிப்பதானது முதலாளித்துவ அம்சங்களை



படிப்பகம்

www.padippakam.com

மேலும் உறுதிப்படுத்துவதாகவேஇருக்கிறது.என்றார் எங்கெல்ஸ்.

"'அளவு ரீதியான சம நுகர்வுக்கான' ஒரு உரிமையை ஒவ்வொருவருக்கும் ஹெர் டூரிங் வழங்குகிறார்; ஆனால் அதைப் பிரயோகிக்குமாறு யாரையும் அவர் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. மாறாக, அவருடைய உலகத்தில் ஒவ்வொருவனும் தனது பணத்தைக்கொண்டு அவன் என்னவெல்லாம் விரும்புகிறானோ அதையெல்லாம் செய்ய முடியும் என்று பெருமைப்பட்டுக் கொள் கிறார். ஆகவே ஒரு சிலர் தங்களுக்கு அளிக்கப்பட்ட கூலியிலிருந்து சிறிதளவான பணத்தை பதுக்கி வைப்பதையும் மறுபுறம் ஒருசிலர் தங்களுக்கு அளிக்கப்பட்ட கூலியைக்கொண்டு வாழ்க்கையை ஓட்டவே இயலாமல் போவதையும் அவரால் தடுக்க முடியாது. பரம்பரை உரிமையாக குடும்பத்தின் பொதுச் சொத்தை அவர் மிகவும் வெளிப்படையாக அங்கீகரித்ததின் மூலம் அதன் காரணமாக குழந்தையைப் பராமரிக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது என்பதாலும் இதை மேலும் தவிர்க்க முடியாததாக்குகிறார். தனக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கக்கூடிய 8 அல்லது 12 ஷில்லிங்குகளை வைத்துக் கொண்டு ஒரு பிரம்மச் சாரி பிரபுபோல் குதூகலமாக வாழ்கிறார். அதே சமயத்தில் மனைவியை இழந்த ஒரு கணவன் இதே தொகையை வைத்துக் கொண்டு தனது எட்டு இளம் பிராய குழந்தைகளுடன் மிகவும் மோசமாக வாழ்க்கையை ஓட்டுகிறார். மறுபக்கம் எவ்விதக் கேள்வியுமின்றி கூலிப் பட்டுவாடாவை பணமாகக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டதின் மூலம் தனி ஒருவர் தனது சொந்த உழைப்பு அல்லாத பிற வழிகளில் பணத்தை அடைவதற்கான கதவை கம்யூன் திறந்து விடுகிறது. அந்தப் பணம் நாறுவதில்லை. அந்தப் பணம் எங்கிருந்து வருகிறது என்று கம்யூனுக்குத் தெரியாது. ஆனால் இந்த வழியில் இதுகாறும் வெறும் உழைப்புச் சான்றித ழாக பயன்பட்டுவந்த உலோகப் பணம் தனது உண்மையான பண வேலையை காட்டுவதற்கு (Exercise) எல்லா நிலைமை களும் வழங்கப்பட்டுகின்றன. பணத்தைப்பதுக்குவதற்கும் கடனாக கொடுப்பதற்குமான வாய்ப்பும் உந்துதலும் நிலவுகின்றன. தேவைப்படுகின்ற தனி மனிதர் பதுக்கல்காரனிடமிருந்து கடனாகப் பெறுகிறார். வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுவதற் காக கம்யூனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பட்டுவாடா செய்யப்பட்ட இந்தக் கடனாகப் பெற்ற பணம், மனித உழைப்பின் சமூக அவ தாரம், உழைப்பின் உண்மையான அளவு கோல், புழக்கத்திற் கான பொது ஊடகம் என்றெல்லாம் இன்றைய சமுதாயத்தில் சொல்லப்படுவது போல மீண்டுமொரு முறை ஆகிறது. பெருக்கல்



படிப்பகம்

www.padippakam.com

வகுத்தல் அட்டவணை அல்லது தண்ணீரின் இராசயன சேர்மானத்திற்கு முன் உலகத்தில் உள்ள எல்லா '' சட்டங்களும் நிர்வாக நெறி முறைகளும் '' எவ்வாறு சக்தியற்றதாக இருக்கிறதோ அதே போல இதன் முன்னும் சக்தியற்றதாக இருக்கிறது. தேவையில் இருக்கின்ற மக்களிடம் பதுக்கல்காரர்கள் வட்டி வசூலிக்கின்ற நிலையில் இருப்பதால் உலோகப் பணம் பணமாக செயல் படுவதின் மூலமாக கந்து வட்டி மேற்கொள்ளப்படுகிறது ''

(ஃபிரடரிக் எங்கெல்ஸ : டூரிங்குக்கு மறுப்பு,)

பரிவர்த்தனைப் பண்டத்தின் மதிப்பைப் பொதுமைப்படுத்துவதின் மூலம் பணப் பொருளாதாரம் சமூக உறவுகளை சின்னா பின்னாப்படுத்தி தனிப்பட்ட உற்பத்தியாளர்களால் ஆனதாக அதை சிதைத்து விடுகிறது என்ற பின்வரும் எங்கெல்சின் வரையறுப்புகள் சோசலிச உற்பத்தி முறையிலும் நீடிக்கிறது. ''பண்டங்களில் இயல்பாகவே உள்ளார்த்தமாக நிலவும் மதிப்பின் வடிவத்தை பண்ட உற்பத்தி சமுதாயம் ஒரு முறை மதிப்பின் வடிவத்தை பண வடிவமாக மேலும் வளர்த்து விடுமானால் மதிப்பில்இன்னமும் ஒளிந்து கொண்டிருக்கும் பல்வேறு வித்துக்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறது. முதலும் மிகவும் முக்கியத்துவமும் வாய்ந்த பாதிப்பு பண்டவடிவத்தைப் பொதுமைப் படுத்துவதாகும். சுய நுகர்வுக்காக இதுவரை நேரடியாக உற்பத்தி செய்யப்பட்டு வந்த பொருட்களின் மீது கூட பண்டவடிவத்தைப் பணம் திணித்து பரிவர்த்தனையில் இழுத்து விடுகிறது. அதன் விளைவாக, உற்பத்திக்காக நேரடியாக ஒன்று குழுமியிருக்கும் சமூகங்களின் உட்பொருளாதாரத்திலும் பண்ட வடிவமும், பணமும் ஊடுருவுகிறது; அவை அடுத்தடுத்து சமூக உறவுகளை உடைத்தெறிகின்றன ; சமூகத்தை ஒரு பெருந்திரளான தனியார் உற்பத்தியாளர்களாக கரைந்து போக வைக்கின்றன.''

(ஃபிரடரிக் எங்கல்ஸ் : டூரிங்குக்கு மறுப்பு)

பற்றுவரவுச் சுதந்திரம் சோசலிச சமுதாயத்தில் நீடிக்கும் வரை முதலாளித்துவ அம்சங்களும் சோசலிச உற்பத்திமுறையில் நீடிக்கின்றன என்றார் லெனின். '' பற்று வரவுச்சுதந்திரம் என்றால் என்ன ? பற்று வரவுச்சுதந்திரம் என்பது வர்த்தகச் சுதந்திரம் ; மேலும் வர்த்தகச் சுதந்திரத்தின் பொருள் முதலாளித்துவத்திற்கு திரும்பிப் போவதாகும். பற்றுவரவுச் சுதந்திரம், வர்த்தகச் சுதந்திரம் என்பதின் பொருள் தனிநபர், சிறு உடமையாளர்களிடையேயான பண்டப் பரிவர்த்தனை ஆகும். குறைந்த பட்சம் மார்க்சிசத்தின் அரிச்சுவடியைக் கற்றறிந்துள்ள நாம்



படிப்பகம்

www.padippakam.com

அனைவரும் இந்தப்பற்று வரவு மற்றும் வர்த்தக சுதந்திரம் தவிர்க்க இயலாமல் பண்ட உற்பத்தியாளர்களை மூலதனத்தின் உடமையாளர்களாகவும், உழைப்புச் சக்தியின் உற்பத்தியாளர்களாகவும் பிரிவதற்கு இட்டுச் செல்வதை, அதாவது முதலாளித்துவ கூலி அடிமைத் தனத்தை மீட்பதை அறிவோம்; அது வானத்திலிருந்து வீழ்வதில்லை, மாறாக, உலக முழுவதும் மிகவும் குறிப்பாக பரிவர்த்தனைப் பண்ட விவசாயத்திலிருந்து வளர்கிறது. கோட்பாடு ரீதியில் நாம் அனைவரும் இதைத் தெட்டத் தெளிவாக அறிவோம்; மேலும் ருசியாவில் சிறு சாகுபடியாளரது வாழ்வையும் பொருளாதார நிலைமைகளையும் கவனிக்கும் எவரும் இதை அறியத் தவற மாட்டார்கள் ''

(லெனின் : பத்தாவது காங்கிரசு அறிக்கை...—)

இந்தத் தெளிவான லெனினது வரையறுப்புக்கு நேரெதிராக லியு - தெங் திரிபுவாதம் சந்தைப் பொருளாதாரத்தை —குறிப் விவசாய உற்பத்தியில் - பற்று வரவையும், வர்த்தகச் சுதந்திரம் பற்றிய முதலாளித்துவப் பொருளாதாரக் கோட்பாடுகளையும் உயர்த்திப் பிடிக்கிறது. பண்ட உற்பத்தியில் ஈடுபடும் விவசாயியே கூட ஒரு முதலாளித்துவ வர்க்கத்தினன் தான் என்பதை மறுக்கிறது. லெனின் சொன்னார், '' பண்ட உற்பத்தி நிலைமைகளின் கீழ் நூற்றுக்கணக்கான கூடைகள் தானியங்களை உபரியாகக் கொண்டுள்ளவரும், அதைத் தனது குடும்பத்திற்கு தேவையில்லாதவரும் பட்டினி கிடக்கும் தொழிலாளிக்கு உதவுவதற்கு கடனாக தொழிலாளர்களின் அரசுக்குத் தராமல், லாபமடிப்பவர்களுக்கு விற்பவருமான விவசாயி - அவர் எந்த வகையானவர்? அவர் ஒரு முதலாளி அல்லவா? இந்த வகையில் முதலாளி பிறப்பதில்லையா? ''

(லெனின் : சோவியத்துக்களின் ஏழாவது காங்கிரசு அறிக்கை—)

முதலாளித்துவ வர்க்கத்தின் ஒரு தலைமுறையை ஒழித்துக் கட்டினாலும், உடமைகளைப் பறிமுதல் செய்தாலும் முதலாளித்துவ வர்க்கத்தின் புதிய தலைமுறை தோன்றுவதற்கான சமூகப் பொருளாதார அடிப்படைகள் நீடிப்பதாக லெனின் எச்சரித்துள்ளார். ''ஆம், நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் தூக்கியெறிவதின் மூலம் பாதையைச் சுத்தப்படுத்தியிருக்கிறோம்; ஆனால் சோசலிசத்தின் பிரம்மாண்டமான கோட்டையை கட்டி விடவில்லை. ஒரு முதலாளித்துவ தலைமுறையைச் சுத்தம் செய்த இடத்தில் அந்த இடம் அதற்கான வாய்ப்பளிக்கும் வரை, புதிய தலைமுறை வரலாற்றில் தொடர்ந்து தோன்றிக்கொண்டே



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும் ; மேலும் அது எவ்வளவு எண்ணிக்கையிலான முதலாளிகளுக்கும் இடமளிக்கிறது. 'பிடுங்கிக் கொண்டாலும் பரவாயில்லை; என்னைப் போக விடுங்கள்' என்று சிறு உடமையாளர்கள் பார்ப்பது போன்ற வகையில் முதலாளிகள் மீதான வெற்றியைப் பார்ப்பவர்களில், அவசியமாக அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு புதிய முதலாளித்துவ தலைமுறைக்கான ஊற்று மூலமாவர்.''

(லெனின் : சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் மீதான அறிக்கை)

புதிய முதலாளிகளின் தோற்றத்திற்கான இந்த ஊற்று மூலத்தைத்தான் குறிப்பாக லியு தெங் கும்பல் மறுக்கிறது. ஆனால் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி நீடிக்கும் வரை முதலாளித்துவ சமுதாயத்தைப்போலவே இது நீடிக்கிறதுஎன்றார் லெனின். "பொருளாதாரத் துறையில் விவரங்களை நன்கறிந்தவரான தோழர் ரைகோவ் நமது நாட்டில் புதிய முதலாளி வர்க்கம் இருப்பதாகச் சொன்னார். அது உண்மை. சோவியத் அரசாங்கப் பணியாளர்கள் மத்தியில் இருந்து மட்டும் அது எழவில்லை — அவர்களிடமிருந்தும் கூட ஓர் அற்பமான அளவு எழலாம் — அது முதலாளித்துவ வங்கிகளின் நுகத்தடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள, ரயில்வேப் போக்குவரத்திலிருந்து துண்டிக்கப்பட்டுள்ள கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியிலிருந்தும் எழலாம். இது ஓர் உண்மை. இந்த உண்மையைத் தவிர்ப்பதை எவ்வாறு எதிர்பார்க்கிறீர்கள்? உங்களது பிரமைகளை போலியாக மெச்சிக் கொள்கிறீர்கள், அல்லது மிக மோசமாக ஜீரணித்த புத்தகப் படிப்பை யதார்த்தமாக அறிமுகப்படுத்துகிறீர்கள்; ஆனால் அது மிகவும் சிக்கலானது. ருசியாவில் பண்ட உற்பத்தி ஒவ்வொரு முதலாளித்துவ சமுதாயத்தையும் போலவேதான் வாழ்கிறது, வளர்கிறது, இயங்குகிறது, ஒரு முதலாளித்துவ வர்க்கத்தின் பிறப்பிற்கு இடமளிக்கிறது என்பதைக் காட்டுகிறது''

(லெனின் : எட்டாவது காங்கிரசு அறிக்கை......)

இதுவரை தொகுத்தளிக்கப்பட்ட மார்க்சிய - லெனினிய ஆசான்களது போதனைகளிலிருந்து நாம் காண்பது: சிறு அளவினதான உற்பத்தி, பண்ட உற்பத்தி, பணவடிவிலான மதிப்பின் மாற்றம், மற்றும் சமனற்ற பங்கீடு முறையின் காரணமாக முதலாளித்துவ உரிமை ஆகிய காரணிகள் முதலாளித்துவம்



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தின் உயிர்ப்புக்கான ஊற்று மூலங்களாக சோசலிச உடமை மாற்றத்திற்குப் பின்னும், சோசலிச உற்பத்தி முறையிலும் நீடிக்கின்றன. சொல்லிக் கொள்ளப்படும் சோஷலிச உடமை மாற்றமே அதன் பூரணப் பொருளில் இன்னும் முதலாளித்துவ அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

"எந்த சோசலிச சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தை நோக்கினாலும் விதிவிலக்கின்றி எல்லா சோசலிச நாடுகளிலும் மொத்த மக்களின் உடமை முறைக்கும், கூட்டுத்துவ உடமை முறைக்கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றது; தனிப்பட்ட உடமை முறையும் கூட இருப்பதையும் பார்க்கிறோம். மொத்த மக்களின் உடமை முறையும், கூட்டுத்துவ உடமை முறையும் சோசலிச சமுதாயத்திலுள்ள இரண்டு வகைகளான உடமை முறைகள், இரண்டு வகைகளான உற்பத்தி உறவுகள் ஆகும். மொத்த மக்களது உடமையான நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களும், பண்ணைகள் மீது கூட்டுத்துவ உடமை முறை கொண்டுள்ள விவசாயிகளும் சோசலிச சமுதாயத்திலுள்ள இரண்டு வெவ்வேறு வகையான உழைப்பாளர்கள். எனவே விதிவிலக்கின்றி எல்லா சோசலிச நாடுகளிலும் தொழிலாளர் மற்றும் விவசாயிக்கும் இடையே வேறுபாடு நிலவுகின்றது. கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்திற்கு மாற்றம் சாதிக்கப்படும் வரை இந்த வேறுபாடு மறையாது. அவர்களது இன்றைய பொருளாதார வளர்ச்சி 'ஒவ்வொருவரும் அவரவர் திறமைக்கேற்றவாறு, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்றவாறும்' என்பதை நடைமுறையில் கொண்டுள்ள கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்திலிருந்து இன்னும் மிகமிக பின்தங்கி இருக்கிறது. எனவே, தொழிலாளி மற்றும் விவசாயிக்குமிடையிலான வர்க்க வேறுபாட்டை களைவதற்கு ஒரு நீண்ட நெடிய காலம் பிடிக்கும். இந்த வேறுபாடு களையப்படும் வரை சமுதாயம் வர்க்கமற்றது என்றோ அல்லது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இனியும் தேவையில்லை என்றோ சொல்வது முடியாது" (சர்வதேசக் கம்யூனிச இயக்கத்தின் பொதுப்பாதை குறித்து சீ. பொ. க. யின் பிரேரணை 1963). மொத்த மக்களின் உடமை முறை மற்றும் கூட்டுத்துவ உடமை முறை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளோடு, தொழிலாளர் விவசாயிக்கிடையிலான வேறுபாடுகள், நகரம், கிராமத்திற்கு இடையிலான வேறுபாடுகள், உடல் உழைப்பு, மூளை உழைப்பிற்கு இடையிலான வேறுபாடுகள், பங்கீடு முறையில் முதலாளித்துவ உரி



படிப்பகம்

www.padippakam.com

மைகள் நீட்டிப்பால் எழும் வேறுபாடுகள் இவை அனைத்தும் சேர்ந்து சோசலிச சமுதாயத்திலும் செல்வத்தைப் பகிர்வதிலும் வேறுபாடுகளை உருவாக்குகின்றன.

எனவே சோசலிச உடைமை மாற்றத்திற்குப்பின் சீனத்தின் வர்க்கப்பாகுபாடுகளை ஆய்வு செய்வதற்காக லியு - தெங் கும்பல் எடுத்தாண்டிருக்கும் அதே அடிப்படை அளவுகோலைப் பிரயோகித்தால் கூட இன்றும் பகைமையான வர்க்கங்கள், பகைமையான வர்க்க முரண்பாடுகள், பகைமையான வர்க்கப்போராட்டங்கள் நீடிப்பதை நிரூபிக்க முடியும். ''உற்பத்தியின் ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையில் உற்பத்திச் சாதனங்களுடனான உறவில் மக்கள் ஒரே மாதிரியாக இல்லாத வகையில் வெவ்வேறு நிலைகளை மக்கள் கொண்டிருக்கும் பொழுது வர்க்கங்கள் தோன்றுகின்றன.'' என்று லியு - தெங் கும்பலி னுடைய அளவுகோலின் ஒரு அம்சம் வரையறுக்கிறது. இது சோசலிச சமுதாயத்திற்கும் பொருந்தும், ஏனெனில் மொத்த மக்களின் உடைமை முறை, கூட்டுத்துவ உடைமைமுறை, சிறு துண்டு நிலங்களின் உடைமை முறை, சிறு மற்றும் பண்ட உற்பத்தியை அனுமதிப்பது ஆகியவற்றின் காரணமாக சோசலிச அமைப்பு முறையில் உற்பத்திச் சாதனங்களுடனான உறவில் மக்கள் ஒரே மாதிரியாக இல்லாத வகையில் வெவ்வேறு நிலைகளைக் கொண்டிருக்கிறார்கள் ''மேலும், மக்கள் சமூக உழைப்பு ஸ்தாபனத்தில் வெவ்வேறு பாத்திரங்கள் ஆற்றுவதன் விளைவாக அவர்களது சொந்தப் பற்றில் உள்ள சமூகச் செல்வத்தின் அளவும், அதை அவர்கள் அடையும் விதமும் ஒன்றாக இருப்பதில்லை. எனவே அவர்கள் வெவ்வேறு சமூகக் குழுக்களாகப் பிரிந்து விட்டார்கள்'' என்ற லியு - தெங் கும்பலது அளவுகோலின் மற்றொரு அம்சமும் கூட சோசலிச சமுதாயத்திற்குப் பொருந்தும். சிறு அளவினதான உற்பத்தி, பண்ட உற்பத்தி, பணவடிவிலான மதிப்பின் மாற்றம் மற்றும்சமமற்றபங்கீடுமுறையின் காரணமான முதலாளித்துவ உரிமை ஆகியன நீடிப்பதானது, செல்வத்தை சமமற்ற முறையில் பகிர்ந்து கொள்வதே இன்னமும் சோசலிச நாடுகள் அனைத்திலும் நிலவுவதை நிரூபிக்கின்றன. பொருளாதாய ஊக்கமளிப்பு, சந்தை வியாபாரத்தைத் தொடர்வது, சமமற்ற பங்கீடு என்னும் முதலாளித்துவ உரிமை, துண்டு நிலங்களில் பயிரிடுவது, கோழி, பன்றி, ஆடு போன்றவற்றை தனியார் வளர்க்கவும், சந்தை வியாபாரமும், இவை அனைத்தும் செல்வத்தை பகிர்ந்து கொள்ளும் வெவ்வேறு வழிமுறைகள் நிலவுவதை நிரூபிக்



படிப்பகம்

www.padippakam.com

கின்றன. இனி அவர்கள் காட்டியுள்ள லெனினது மேற்கோளைப் பார்ப்போம். "லெனின் சொன்னார்: வர்க்கங்கள் மக்களது குழுக்களாகும் - அவற்றில் ஒரு குழு ஒரு நிச்சயமான சமூகப் பொருளாதார அமைப்பு முறையில் மக்கள் வெவ்வேறு இடங்களைக் கொண்டிருப்பதால் மற்றொன்றின் உழைப்பை சுவீகரிக்க முடிவதாக இருக்கிறது" இந்த வரையறுப்பும்கூட சோசலிச சமுதாயத்திற்குப் பொருந்துகிறது. முதலில் சொன்ன காரணங்களிலாயே ஒரு குழு மற்றொரு குழுவின் உழைப்பை இன்னமும் சுவீகரிக்க முடிகிறது.

தேவைக்கேற்ற ஊதியமல்ல, உழைப்புக்கேற்ற ஊதியம் என்கிற பங்கீடு முறை நிலவுவதால் ஒருவர் தேவையில் பற்றாக் குறையும் மற்றொருவரிடம் உபரியும் குவிவதற்கான வாய்ப்பு நிலவுகிறது. அத்துடன் பரிமாற்றத்தின் மதிப்பு வடிவமாக பணம் நீடிப்பதால் பதுக்கல் ஆக்குவதற்கும், கடனாளி ஆவதற் கும் ஆகிய இரண்டுக்குமான வாய்ப்பும் நோக்கமும் நீடிக்கின்றன. தேவையான ஒருவர் உபரியான ஒருவரிடம் கடன்வாங்குவதும் நுகர்வுக்காக சமூகப்பங்கீடு அமைப்பு அதை ஏற்றுக்கொள்வதும் ஒருவர் உழைப்பை மற்றொருவர் சுவீகரிப்பதற்கான அடிப்படை யைக் கொண்டிருக்கிறது. குறைவாக ஊதியம் பெறுபவர் கூடு தலான உழைப்பில் ஈடுபடுவதும், சிறு உற்பத்தி, பண்ட உற்பத்தி, சந்தை நீடிப்பதால் செல்வம் சமனற்ற முறையில் பகிர்ந்து கொள்ளப்படுவதால் ஒருவர் உழைப்பை மற்றொருவர் சுவீகரிப்பதற்கான அடிப்படை நிலவுகிறது. இத்துடன் மொத்த மக்களின் உடமை முறைக்கும் கூட்டுத்துவ உடமை முறைக்கும் இடையிலான, தொழிலாளர், விவசாயிக்குமிடையிலான நகர, கிராமத்துக்குமிடையிலான, மற்றும் உடல் உழைப்பு மூளை உழைப்புக்குமிடையிலான வேறுபாடுகள் நீடிப்பதனாலும் ஒருவர் மற்றொருவரது உழைப்பைச் சுவீகரிக்க முடியும்.

இறுதியாக வர்க்க ஆய்வுக்காக லியு - தெங் கும்பல் பிர யோகத்திருக்கும் அப்பட்டமான எதிர்ப்புரட்சி திரிபுவாத அளவு கோலைப் பரிசீலிப்போம். "உற்பத்திச் சாதனங்கள் ஒரு வர்க் கத்தின் கரங்களில் இனிமேலும் இல்லாத போது மக்களது ஒரு குழு மற்றொன்றின் உழைப்பைச் சுவீகரிக்க முடியாதபோது, அதுசரி, இந்தவர்க்கம் கூட இல்லாமல் போய்விடுகிறது" என்கிறது லியு - தெங் கும்பல். உற்பத்திச் சாதனங்களைப் 'பொதுஉடமை' அல்லது 'கூட்டு உடமை' ஆக்குவதின் மூலமாக 'அரசுடமை'



படிப்பகம்

www.padippakam.com

அல்லது 'தேசிய உடைமை' ஆக்குவதின் மூலமாக, வேறு வகையில் சொன்னால் ஒரு வர்க்கத்தின் தனிப்பட்ட உடைமை முறையை மாற்றுவதினால் மக்களின் ஒரு குழு மற்றொன்றின் உழைப்பைச் சுவீகரிப்பது இயலாமல் போகுமா? இம்மாதிரியான முதலாளித்துவ சோசலிசக் கருத்துக்களை மார்க்ஸ் – எங்கெல்ஸ் முதற்கொண்டு புரட்சியாளர்கள் எதிர்கொண்டு முறியடித்து வந்திருக்கிறார்கள். ஆசிய சொத்துடமை வடிவத்திலும், சோவியத் யூனியனிலும், உலகில் பல நாடுகளில் பிற்போக்கு ஆளும் வர்க்கங்கள் மேற்கொண்டுள்ள அரசுஏகபோக முதலாளித்துவத்திலும் கூட உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்ட உடைமை முறையன்றி அரசுச் சொத்துடமை முறைகளையும் காணுகிறோம். அதிலெல்லாம் ஒரு குழு மற்றொன்றின் உழைப்பைச் சுவீகரிப்பது இல்லாமல் போய்விட்டனவா? இந்தச் சொத்துடமை வடிவத்திலெல்லாம் உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்டவர்களது உடைமையாக இல்லாவிட்டாலும் ஆளும் வர்க்கம் என்கிற முறையில் ஒரு பிரிவு மக்களது அனுபோக உரிமையைப் பெற்றிருப்பதைக் காண்கிறோம்; அல்லது உற்பத்திச்சாதனங்களின் உடமை இல்லாமலேயே அவற்றின் மீது ஆதிக்கமும், கட்டுப்பாடும் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இதனால் பிறரது உழைப்பைச் சுவீகரிக்கும் வர்க்கம் நிலவுவதையும் காண்கிறோம். உடமை முறையில் மாற்றமடைந்திருப்பதாலேயே பிறரது உழைப்பைச் சுவீகரிப்பதோ, அதைச் செய்யும் வர்க்கமோ இல்லாமற்போகுமென்பது சரியெனில் அதிகார வர்க்கமும், அதிகாரவர்க்க மூலதனமும் எந்த வகையில் சேரும்?

முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச்செல்லும் சோசலிச நிகழ்ச்சிப் போக்கை உருவாக்கும் முரண்பாட்டின் ஒரு அம்சமாக, அங்கமாக இன்னமும் முதலாளித்துவ கூறுகள் நீடிப்பதானது சுரண்டும் வர்க்கங்களின் எல்லா வகை பழைய, புதிய கூறுகள் தனி நபர்களாகவோ, மிச்ச சொச்சங்களாகவோ அல்ல, வர்க்க ரீதியிலும் அவற்றை அனுகும்படி நிர்ப்பந்திக்கின்றன. ஏனெனில் இந்த முதலாளித்துவ கூறுகள் சோசலிச சமுதாயத்தின் வர்க்க கட்டுமானத்தின் பிரிக்கமுடியாத, தவிர்க்கமுடியாத அங்கங்களாக நீடிக்கின்றன. பகைமையான வர்க்கங்கள், பகைமையான முரண்பாடுகள், பகைமையான வர்க்கப் போராட்டங்கள் நீடிக்கின்றன. இவற்றை மறுப்பதென்பது முரண்பாட்டின் ஒரு அம்சத்தை மறுப்பதாகும். முரண்பாடே இல்லாமல் போய் விடுகிறது என்பதாகும். அது உருவாக்கும்



படிப்பகம்

www.padippakam.com

சோசலிச நிகழ்ச்சிப் போக்கே சோசலிசப் புரட்சியே முடிவுக்கு வந்து விட்டது என்பதாகும். பூரணமான கம்யூனிச சமுதாயம் நிறுவப்பட்டு விட்டதாகச் சொல்வதாகும். இவ்வாறு வாதிப்பது விதிவிலக்கின்றி எல்லா சோசலிச நாடுகளின் யதார்த்த நிலைக்கு நூற்றுக்கு நூறு புறம்பானதாகும்; பொய்யானதாகும்.

அதிகாரவர்க்க மூலதனம் என்பது முதலாளித்துவச் சொத்துடமை வடிவத்தையே குறிக்கிறது. எனவேதான் ருசியா மற்றும் கிழக்கு ஐரோப்பா போன்ற சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதை நாடுகளில் தனிச் சொத்துடமையும், அதன் அடிப்படையிலான சுரண்டலும், ஒடுக்குமுறையும் பிற முதலாளித்துவ நாடுகளைப் போலில்லை. எனினும், அவற்றை அதிகார வர்க்க முதலாளித்துவமாகவே கருதுகிறோம்; அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவமாகவே கருதுகிறோம், அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவ பாசிசமாகவே கருதுகிறோம்.

"திரிபுவாதம் அதிகாரத்திற்கு உயர்வதன் பொருள் முதலாளித்துவ வர்க்கம் அதிகாரத்துக்கு உயர்வதாகும்", "சோவியத் யூனியன் இன்று முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் கீழுள்ளது; அது ஒரு பெருமுதலாளித்துவ சர்வாதிகாரம் ஜெர்மன் வகைப்பட்ட ஒரு பாசிச சர்வாதிகாரம், ஹிட்லர் வகைப்பட்ட ஒரு சர்வாதிகாரம்" (லெனினிசமா - சமூக ஏகாதிபத்தியமா ?......, சீனா விலகிப் போகிறதா என்ற நூலிலிருந்து, பக் 208)

என்று மாவோ வரையறுத்ததன் பொருள் இதுவே. இதை ஒப்புக் கொள்ளவில்லையானால் சோவியத் யூனியனில் இன்று நிலவும் அதிகார வர்க்க ஏகபோக முதலாளித்துவ வகைப்பட்ட பாசிச சர்வாதிகாரத்தையும், சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையையும், அந்நிய நாடுகளில் அதன் சமூக ஏகாதிபத்திய பாத்திரத்தையும் வேறு எந்த வகையிலும் விளக்க முடியாது.

மேற்கண்ட மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் அணுகும்போது விதிவிலக்கின்றி எல்லா சோசலிச சமுதாயத்திலும், திரிபுவாதத்திற்கான மற்றும் முதலாளித்துவ மீட்புக்கான அபாயத்தின் சமூக அடிப்படையாக சோசலிச உற்பத்திமுறையிலும் கூட முதலாளித்துவக் கூறுகள் நீடிக்கின்றன என்பதை அறிய முடியும். அவை தனிநபர்களாகவோ மிச்ச சொச்சங்களாகவோ அல்ல வர்க்க ரீதியிலேயே நீடிக்கின்றன; சோசலிச சமுதாயத்தின் வர்க்க கட்டுமானத்தின்



படிப்பகம்

www.padippakam.com

பிரிக்கமுடியாத அங்கங்களாக நீடிக்கின்றன. சோசலிச சமுதாயத்தின் உற்பத்திமுறையில் - பொருளாதாரத் துறையில் - வர்க்க ரீதியில் முதலாளித்துவ கூறுகள் நீடிப்பதனாலேயேதான் அவை அரசியல், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் போன்ற மேற்கட்டுமானத்தின் சகல துறைகளிலும் பிரதிபலிக்கின்றன.

“ அதுசரி, நுகர்வுக்கான பொருட்களை பங்கீடு செய்வதைப் பொருத்தவரை முதலாளித்துவ அரசு இருப்பதைத் முதலாளித்துவ உரிமை முன் அனுமானிக்கிறது; ஏனெனில் உரிமையின் நிர்ணயிப்புகளை கடைப்பிடிப்பதை அமுலாக்கும் திறனுடைய ஒரு கருவியின்றி உரிமை என்பது ஒன்றுமேயில்லை

“ இதிலிருந்து தொடர்வது : ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கம்யூனிசத்தின் கீழ் முதலாளித்துவ உரிமை நீடிப்பது மட்டுமல்ல, மாறாக முதலாளித்துவ அரசும் கூட நீடிக்கிறது - முதலாளித்துவ வர்க்கமின்றி!” (லெனின் : அரசும் புரட்சியும்)

என்று அரசியல் துறையில் முதலாளித்துவ கூறுகள் நீடிப்பதை லெனின் வரையறுத்தார்.

இதேபோன்று பிறதுறைகளிலும் முதலாளித்துவக் கூறுகள் நீடிப்பதைப் பின்வருமாறு மாவோ விளக்கினார் :

“ சோசலிச மாற்றம் இரண்டு மடிப்புகளிலான கடமைகளை உடையது; ஒன்று அமைப்பு முறையை மாற்றுவதற்கானது; மற்றது மனிதனை மாற்றுவதற்கானது. அமைப்புமுறை கடமையை மட்டும் உள்ளடக்கியதல்ல; அது மேற்கட்டுமானத்தை, முதன்மையாக அரசு என்ற கருவியையும், சிந்தாந்தத்தையும் கூட உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக, பத்திரிக்கைத் துறை சித்தாந்தப் பரிமாணத்தின் கீழ் வருகிறது. பத்திரிகைத்துறைக்கு வர்க்கத்தன்மை கிடையாது, வர்க்கப் போராட்டத்தின் ஒரு கருவி அல்ல என்று சிலர் சொல்கிறார்கள். அவர்கள் தவறாகக் கொண்டுள்ளார்கள். குறைந்தது ஏகாதிபத்தியம் மறைந்தொழியும்வரை பத்திரிகைத்துறை மற்றும் சித்தாந்த அரங்கத்திலான பிற துறைகளும் வர்க்க உறவுகளையே பிரதிபலிக்கும். பள்ளிக் கல்வி, இலக்கியம் மற்றும் கலை ஆகிய அனைத்தும் சித்தாந்த பரிமாணத்தின் கீழ் விழுகின்றன, மேற்கட்டுமானத்தைச் சேர்ந்தவை, ஒரு வர்க்கத் தன்மையுடையவை. இயற்கை விஞ்ஞானத்தைப் பொருத்தவரை, அவை



படிப்பகம்

www.padippakam.com

இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. அப்படியே எடுத்துக்கொண்டால் இயற்கை விஞ்ஞானத்திற்கு வர்க்கத் தன்மை இல்லை – எனினும் யார் படிக்கிறார்கள், அவற்றை யார் பயன்படுத்துகிறார்கள் என்ற பிரச்சினைக்கு வர்க்கத் தன்மை உண்டு.'' (மாவோ, தேர்ந்தெடுத்த படைப்புகள், தொகுதி 5, பக். 460).

சமூகம், பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் ஆகிய சகல துறைகளிலும் முதலாளித்துவ கூறுகள் நீடிப்பதனால் இந்த எல்லாத் துறைகளிலும் அவை வர்க்கப் போராட்டங்களாக வெடிப்பதற்கான அடிப்படையை சோசலிச சமுதாயத்திலும் கொண்டுள்ளன.

''பாட்டாளிவர்க்கத்தின் கீழ் சுரண்டும் வர்க்கத்தினர், அதாவது முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் மறைந்து விடவில்லை ; எல்லோரும் ஒரே சமயத்தில் மறைந்து விடவும்முடியாது, சுரண்டலாளர்கள் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒழிக்கப்படவில்லை. அதன் ஒரு கிளையாக இருந்துஅவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச மூலதனத்தின் வடிவத்திலான ஒரு சர்வதேச தளத்தை அவர்கள் இன்னமும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இன்னமும் உற்பத்திச் சாதனங்களின் கணிசமான ஒரு பகுதியை வைத்திருக்கிறார்கள், இன்னமும் பணத்தை வைத்திருக்கிறார்கள்; இன்னமும் விசாலமான சமூகத் தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாலேயே அவர்களது எதிர்ப்பின் சக்தி ஒரு நூறு மடங்கு, ஆயிரம் மடங்கு அதிகரித்திருக்கிறது. மக்கள் தொகையில் இருக்க வேண்டியதில் அவர்களது எண்ணிக்கையை விட ஒப்பிட முடியாத அளவு மிகப்பெரும் முக்கியத்துவமுடையதான வகையில் அரசு, இராணுவம், மற்றும் பொருளாதார நிர்வாகத்தின் 'கலை' அவர்களுக்கு மேலாண்மையை, ஒரு மிகப்பெரிய அளவிலான மேலாண்மையைக் கொடுக்கிறது. வென்ற சுரண்டப்படுபவர்களின் முன்னணிக்கு அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக தூக்கியெறியப்பட்ட சுரண்டலாளர்கள் தொடுக்கும் வர்க்கப் போராட்டம் ஒப்பிட முடியாதவாறு கசப்பானது. மேலும் ஒரு புரட்சியைப் பற்றிப் பேசுகையில், இந்தக்கருத்தோட்டம் (இரண்டாவது அகிலத்தின் எல்லா நாயகர்களாலும் போல) சீர்திருத்த மாயைகளால் இடமாற்றம் செய்யப்படவில்லை



படிப்பகம்

www.padippakam.com

இது வேறானதாக இருக்க முடியாது ''
யானால், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அரசி
என்றார் லெனின் (பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் அரசி
யலும் பொருளாதாரமும்).

பொருளாதார நிர்
எனவே அரசு, இராணுவம் மற்றும் மேலாண்
வாகத்தின் 'கலை' யால் மிகப்பெரிய அளவிலான சுரண்ட
மையைப் பெற்றிருக்கும் பழைய புதிய முதலாளித்துவ வர்க்கப்
லாளர்கள் பாட்டாளி வர்க்கத்திற்கெதிராக தொடுக்கும் தீர்மானிக்
போராட்டமே அதன் வீச்சையும் தன்மையையும் விருப்பமல்ல,
கின்றது; பாட்டாளி வர்க்கக் கட்சியின் அகநிலை ஆனால் மூடி
புறநிலை யதார்த்தமே அதைத் தீர்மானிக்கிறது. கும்ப
மறைக்கப்பட்ட எதிர்ப்புரட்சி திரிபுவாதமாகிய லியு - தெங் விட்டதாகக்
லின் வாதமெல்லாம் வர்க்கப் போராட்டம் மறைந்து வாதிடுகிறது.
கூறுவதில்லை; மாறாக மிகவும் கபடத்தனமாக கும்பலின்
நவீன திரிபுவாதிகளாகிய குருஷ்சேவ் - பிரஷ்னேவ் காட்டவும்,
நவீன திரிபுவாதத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் ஏமாற்றி
சீன மக்கள் மற்றும் உலகப் பாட்டாளி வர்க்கத்தை வர்க்கப்
மோசடி செய்யவும் ஏதுவாக வாதிடுகிறது. அதாவது தொடர்கிறது;
போராட்டம் இன்னமும் முடிவுக்கு வரவில்லை, லியு-
பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமானது என்பதை மாறாக.
தெங் எதிர்ப்புரட்சித் திரிபுவாதம் மறுப்பதில்லை. போதனை
இவை பற்றிய மார்க்சிய - லெனினிய ஆசான்களது திரித்
களை அதன் சரியான பொருளிலிருந்து சிறுமைப்படுத்தி சுரண்
துப் புரட்டுகிறது. சோசலிச உடமை மாற்றத்திற்குப் பிறகு வரலாற்றுப்
டும் வர்க்கங்கள் இல்லாமற் போய் விட்டதால் அதன் இருக்
பூர்வமான பொருளில் இனிமேலும் வர்க்கப்போராட்டம் தழுவிய
காது; கொந்தளிப்பான, பெரும் அளவினதாக, நாடு உள்ள
தாக, அதிகாரத்திற்கான ஜீவமரணப் போராட்டத்தை தடுக்கப்பட்டு
டக்கியதாக இருக்காது. பெரிதுபடுத்தப்படுவது தீர்க்கப்படும்;
சட்ட கட்டமைவுக்குட்பட்டதாகவே கையாண்டு மிச்ச
ஏனெனில் ஒரு புறம் பழைய சுரண்டும் வர்க்கங்களின் நபர்கள்
சொச்சங்கள் மற்றும் பிற விரோதிகளுக்கெதிராக தனி வர்க்
என்கிற ரீதியிலும், மற்றொரு புறம் மக்கள் மத்தியிலான ஏகாதிபத்திய
கப்போராட்டமாகவும் நடத்தப்படும்; இத்துடன் கண்ணோட்டத்திலிருந்து
சக்திகளின் அபாயம் நீடிப்பது ஆகிய நீடிப்ப
வர்க்கப் போராட்டமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்
தாக லியு - தெங் கும்பல் கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் மார்க்சிய - லெனினிய ஆசான்களின் போதனைகளிலிருந்து விதி விலக்கின்றி எல்லா சோசலிச சமுதாயத்திலும் பகைமையான வர்க்கங்களும், பகைமையான வர்க்கப்போராட்டங்களும் நீடிக்கின்றன என்பதே புறநிலை யதார்த்தமாக உள்ளது என்பதை அறிகிறோம்.

'' வர்க்கங்களை ஒழிப்பது ஒரு நீண்ட, இடர்பாடுகள் மிக்க மற்றும் உறுதியான வர்க்கப்போராட்டத்தைக் கோருகிறது. மூலதனத்தின் அதிகாரம் தூக்கியெறியப்பட்ட பிறகு முதலாளித்துவ அரசு நொறுக்கப்பட்ட பிறகு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பிறகு (பழைய சோசலிசம், மற்றும் பழைய சமூக ஜனநாயகம் ஆகியவற்றின் ஆபாசமான பிரதிநிதிகள் கற்பனை செய்வது போல) வர்க்கப்போராட்டம் மறைந்து விடுவதில்லை; மாறாக வெறுமனே அதன் வடிவங்களில் மாறுதலடைகிறது ; மேலும் பல விவகாரங்களில் மிகவும் கடுமையானதாக மாறுகிறது'' என்கிறார் லெனின்.

மார்க்சிய - லெனினிய வாதிகளது இந்த வரையறையைத்தான் அடிப்படையிலேயே லியு - தெங் கும்பல் திரித்துப் புரட்டுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# IV

## சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றிய நியதிகளை லியு-தெங் கும்பல் திரித்துப் புரட்டுகிறது.

மெய்யானதும், பிழையற்றதும், முரணற்றதும், முழுமையானதுமான வரலாற்றுப் பொருள் முதல்வாதப் பார்வையிலிருந்து. எல்லாச் சுரண்டும் வர்க்க சமுதாயங்களிலும், குறிப்பாக முதலாளித்துவ சமுதாயத்தினது கோட்பாடுகளையும் எதிர்க்கோட்பாடு

படிப்பகம்

www.padippakam.com

களையும் வரையறுத்து சமூதாயத்தின் புறவயமான விதிகளையும், அவற்றிலிருந்தும் ருசிய, சீன மற்றும் பிற நாடுகளின் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தின் எதிர்மறை நேர்மறை அனுபவங்களையும் படிப்பினைகளையும் தொகுத்து சோசலிசப்புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்துக்கான பொது நியதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் மார்க்சிய - லெனினிய ஆசான்கள் வழங்கியுள்ளனர். நடைமுறையிலிருந்து தொகுத்தறியப்பட்டதும், சோதித்தறியப்பட்டதுமான இவையே முற்றிலும் சரியானவை ; விஞ்ஞான பூர்வமானவை.

வெவ்வேறு நாடுகளினது புரட்சியும் நிர்மாணமும் ஒரே வார்ப்பாகவோ, திரும்பத் திரும்ப அட்டியே நிகழ்வதாகவோ இராது; பருண்மையான நிலைமைகளுக்கேற்பவே பொதுவான நியதிகளும், வழிகாட்டும் நெறிமுறைகளும் பிரயோகிக்கப்பட வேண்டும். ஆனால் பருண்மையான நிலைமைகளுக்குப்பிரயோகிப்பதாகக் கூறிக் கொண்டு ஒரு புறம் அவை முற்றாக நிராகரிக்கப்படுகின்றன. டான்ஜானிமாவிலே 'உஜாமா'வாகவும், நிகாராகுவாவிலே 'சாந்தனிதா'வாகவும், ஐரோப்பாவிலே 'யூரோகம்யூனிசமாக'வும் சிலவகைத் திரிபுகள் தம்மை வெளிப்படுத்துவதைக்காண்கிறோம். அல்லது யந்திர ரீதியில் வரட்டுக் கோட்பாடாக அவை பிரயோகிக்கப்படுகின்றன. அல்பேனியாவில் நவீன டிராட்ஸ்கியமாகவும், இந்தியாவில் சாரு மற்றும் சீனத்தில் லின் - நால்வர் கும்பலின் அதீத 'இடது' வாகவும் சிலவகைத் திரிபுகள் தம்மை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

முதலாளித்துவ மீட்புக்கான தனது எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தையும், எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தும் லியு - தெங் கும்பலும் சோசலிச கட்டமைவின் புறவயமான விதிகளை ஆய்ந்தறிந்து கண்டுபிடிக்க முயலுவதாகவும் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்துக்கான நியதிகளையும், வழிகாட்டும் நெறிமுறைகளையும் மிகவும் யதார்த்த பூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக வகுப்பதாகவும், அவற்றுக்குப் பொருத்தமாக கட்சி மற்றும் அரசில் திருத்தியமைக்கும் பணிகளில் இறங்கியுள்ளதாகவும் பசப்புகிறது. இதன் காரணமாகவே சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்துக்கான மார்க்சிய - லெனினிய ஆசான்களது மகத்தான பங்களிப்புகளை மூடி மறைக்கவும் திரித்துப் புரட்டவும் எத்தனிக்கிறது. இதை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டுமானால் சோசலிச சமுதா



படிப்பகம்

www.padippakam.com

சோசலிசப் புரட்சி
யத்தில் நிலவும் புறவயமான விதிகளையும்,
மற்றும் சோசலிச நிர்மாணத்துக்கான பொதுவான நியதிகளையும்
வழிகாட்டும் நெறிமுறைகளையும் பற்றிய மார்க்சிய - லெனினிய
ஆசான்களது போதனைகளைத் தொகுத்தறிய வேண்டும்.

சர்வ
வர்க்கப் போராட்டத்தின் புறவயமான விதி மற்றும்
தேசப்பாட்டாளி வர்க்க அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையி
லிருந்து சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தை உள்
ளடக்கிய சோசலிச சமுதாயம் என்பது முதலாளித்துவ சமுதாயத்
திலிருந்து கம்யூனிச சமுதாயத்திற்கு, வர்க்க சமுதாயத்திலி
ருந்து வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கு மாறிச் செல்லும் இடைக்
கட்டமாகவே மார்க்சிய - லெனினிய ஆசான்கள் கருதினார்கள்.
அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் இன்னும் பிற துறை
களிலும் தொடர்ந்து மாறிக்கொண்டிருக்கும் இயங்கியல் போக்கு
டைய இடைக்கட்டமாகவே கருதினார்கள்.

சோசலிசப் பிரச்சினை குறித்து ஒட்டோ போயினிக்கு எழு
தியகடிதத்தில் எங்கல்ஸ் குறிப்பிட்டார்: "எனதுகருத்தில் சொல்
லிக் கொள்ளப்படும் 'சோசலிச சமுதாயம்' என்பது ஒரே மூச்சில்
சாதித்து விடக்கூடிய விஷயம் அல்ல, மாறாக மற்றெந்த சமூக
ஒழுங்கு முறையையும் போலவே அது மாற்றம் மற்றும் மாறுதலா
கும் ஒரு நிரந்தரமான நிகழ்ச்சிப் போக்காக புரிந்து கொள்ள
வேண்டும்."

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி பாட்டாளி வர்க்க
சர்வாதிகாரத்தை நிறுவுவது புரட்சியின் நித்தியத்துவத்தைப்
பிரகடனப்படுத்தும் ஒரு செயலே; புரட்சியின் தொடக்கம்
மட்டுமே. சோசலிச உடைமைமுறையில் மாற்றம் செய்வது மாறிக்
கொண்டிருக்கும் சோசலிச கட்டத்தில் முக்கியமான மற்றொரு
நடவடிக்கையே. இவ்விரு நடவடிக்கைகளையும் தொடர்ந்து
எழும் இடையறாத புரட்சியின் ஒரு நிகழ்ச்சிப் போக்கு தான்
சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்காகும். அதை அரசி
யல் துறையில் தொடங்கி வைப்பதற்கான பிரகடனமே பாட்டாளி
வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்படுவது; பொருளாதாரத் துறை
யில் தொடங்கி வைப்பதற்கான பிரகடனமே சோசலிச
உடமை முறை மாற்றமடைவது; ஆனால் லியு - தெங்
கும்பல் இவற்றை மறுக்கிறது; மாறாக இப்பிரகடனங்
களையே, தொடக்கத்தையே வர்க்கப் போராட்டத்தின்,
அரசியல் போராட்டத்தின், புரட்சியின் முடிவாகவும் அதன்



படிப்பகம்

www.padippakam.com

பின் உற்பத்திப் பெருக்கமே கட்சி மற்றும் அரசின் பிரதான நோக்கமென்றும் சித்தரிக்கிறது. ஆனால் இந்த வாதத்தை லியு - தெங் கும்பல் நேரடியாக வைக்காது வேறு வார்த்தைகளில் கூறுகிறது. உற்பத்திப் பெருக்கத்துக்கான நான்கு நவீனமய மாக்குதலையே வர்க்கப் போராட்டமென்றும், அரசியல் என்றும் புரட்சி என்றும் சித்தரிக்கிறது.

சொல்லிக் கொள்ளப் படும் சோசலிச உடமை முறை மாற்றம் உட்பட அனைத்துத் துறைகளிலும் மாறிக்கொண்டிருக்கும் புரட்சியின் நிகழ்ச்சிப் போக்காகிய சோசலிச சமுதாயம் தனது மாற்றத்தில் எதையெல்லாம் உள்ளடக்கியிருக்கிறது ? எதுவரை இந்தப் புரட்சியின் நிகழ்ச்சிப் போக்கு நீடிக்கிறது ? பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்ட பின்னும், சோசலிச உடமை மாற்றத்திற்குப் பின்னும் மொத்த மக்களின் உடமை முறைக்கும் கூட்டுத்துவ உடமை முறைக்கும் இடையிலான வேறுபாடுகள் நீடிக்கின்றன; தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் நீடிக்கின்றன; நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் நீடிக்கின்றன; உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகள் நீடிக்கின்றன; தேவைக்கேற்றவாறு இல்லாது உழைப்புக்கேற்றவாறு ஊதியமும் விநியோகமும் இருக்கும் வரை செல்வத்தை பகிர்ந்து கொள்வதில் வேறுபாடுகள் நீடிக்கின்றன. இவை நீடிக்கும் வரை வர்க்கங்களும், வர்க்க முரண்பாடுகளும், வர்க்கப்போராட்டங்களும் நீடிக்கின்றன. இவ்வேறுபாடுகளை களைந்து 'திறமைக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம்' என்ற கம்யூனிசக் கோட்பாடு நிலை நாட்டப்படும் வரை சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு நீடிக்கிறது. இவ்வேறுபாடுகளைக் களைவதற்கான சோசலிசப் புரட்சியும், சோசலிச நிர்மாணமும் உள்ளடங்கியதே சோசலிச நிகழ்ச்சிப் போக்கு.

முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டமான ஏகாதிபத்தியத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய விதியைக் கண்டறிந்து, ஏகாதிபத்திய அணிவரிசையில் பலவீனமான கண்ணியான நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றியடைந்து சோசலிசத்தைக் கட்டியமைக்க முடியும் என்ற மகத்தான கோட்பாட்டை லெனின் அளித்தார். அதே துறையில், லெனினுக்குப் பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அனுபவங்களைத் தொகுத்து, லெனின் மற்றும் மார்க்சின் போதனைகளை வரித்துக் கொண்டு, காத்து வளர்த்து சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய



படிப்பகம்

www.padippakam.com

விதியை மாவோ கண்டறிந்தார்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ்ப்புரட்சியைத் தொடர்வது என்ற மகத்தான கோட்பாட்டை அளித்தார்; பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெற்ற நாடுகளில் முதலாளித்துவ மீட்பைத் தடுத்து சோசலிசத்தை கட்டியமைத்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கெட்டிப் படுத்துவதற்கான உண்மையான பாதையை தெளிவாக வகுத்தார். மாவோ வரையறுத்த இந்த புறவயமான விதியும், சோசலிசப் புரட்சிக்கும் சோசலிச நிர்மாணத்துக்குமான இந்த நியதிகளையும் வழிகாட்டும் நெறிமுறைகளையும் தான் லியு – தெங் கும்பல் மறுத்துரைக்கிறது.

எதிரெதிரானவற்றின் ஒற்றுமையும் போராட்டமும் என்ற சர்வ வியாபகமான விதி இயற்கை உலகம் மற்றும் மனித சமுதாயம் இரண்டிலும் இயங்குகிறது. இந்த இயக்கவியல் பொருள்முதல்வாத விதியைப் பிரயோகித்து சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கை பகுத்தாய்வு செய்யும் போது, சோசலிச சமுதாயம் கணிசமான அளவு நீண்டதாக இருப்பதையும், வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போராட்டங்களை உள்ளடக்கியிருப்பதையும் அறிய முடியும். முதலாளித்துவப் பாதைக்கும், சோசலிசப் பாதைக்கும் இடையிலான போராட்டமும், முதலாளித்துவ மீட்புக்கான அபாயமும் வேறுபாடின்றி நிலவுவதையும், ஏகாதிபத்திய மற்றும் சமூக ஏகாதிபத்திய நாசவேலை மற்றும் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் நிலவுவதையும் அறியமுடியும்.

வர்க்க சமுதாயத்திலிருந்து வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கு, முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து கம்யூனிச சமுதாயத்திற்கு மாறிச் செல்லும் கட்டமாகிய சோசலிச சமுதாயத்தில் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் மற்றும் கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் முதலாளித்துவம் கம்யூனிசம் ஆகிய இரு அம்சங்களுக்கிடையிலான ஒற்றுமையும் போராட்டமும் நிலவுகின்றன என்ற விதி இயங்குகின்றது. முதலாளித்துவம், கம்யூனிசம் ஆகிய இரு அம்சங்களுக்கிடையிலான ஒற்றுமையும் போராட்டமும் அடங்கிய முரண்பாட்டினால் எழும் நிகழ்ச்சிதான் சோசலிச சமுதாய வளர்ச்சிப் போக்கு என்கிற இயங்கியல் பொருள் முதல்வாத பார்வையில் அணுகும்போதுதான் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தில் கம்யூனிச சமுதாயத்திற்கு மாறிச்செல்லும் சாதகமான அம்சங்கள் இருக்கும்



படிப்பகம்

www.padippakam.com

போதே அதைத் தடுத்து நிறுத்தி முதலாளித்துவ மீட்புக்கு முயற்சிக்கும் பாதகமான அம்சங்களும் இருக்கின்றன என்பதை அறியமுடியும். அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் சித்தாந்தம் போன்ற சகல துறைகளிலும் இந்த சாதக - பாதக அம்சங்கள் நிலவுகின்றன. இந்த புறவயமான விதியிலிருந்து மிகவும் அடிப்படையான நியதியும் வழிகாட்டும் நெறிமுறையும் பிறக்கிறது. அதாவது சோசலிச நிகழ்ச்சிப் போக்கு முடியும் வரை முதலாளித்துவ வர்க்கத்துக் கெதிரான போராட்டத்தில், முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிரான சர்வாதிகாரத்தில், பாட்டாளி வர்க்கம் அழுந்தி நிற்க வேண்டுவது மிகவும் அவசியம்; அந்த சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதில் அழுந்தி நிற்க வேண்டும்.

முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து கம்யூனிச சமுதாயத்திற்கு மாறிக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிப் போக்கில் - அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் முதலாளித்துவ அம்சங்களுக்கும் கம்யூனிச அம்சங்களுக்கும் இடையிலான ஒற்றுமை மற்றும் போராட்டத்தைக் கொண்ட முரண்பாட்டில் - பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டிருப்பதும் சோசலிச உடமை மாற்றமும் கம்யூனிச அம்சங்கள் பிரதானமாகியிருப்பதையே காட்டுகின்றன. கம்யூனிச அம்சங்களை விரிவடையச்செய்து, உறுதிப்படுத்தி, வளர்த்தெடுத்து, பலப்படுத்தி முதலாளித்துவ அம்சங்களை முற்றாகத் துடைத்தொழித்து பூரணமான கம்யூனிசத்தை நிர்மாணிப்பதற்கு கம்யூனிச திசைவழியை பிறழாமல் பற்றி ஒழுகவேண்டும்.

பூரண கம்யூனிசத்தை நோக்கிச் செல்லும் திசைவழி அதன்கறாரான பொருளில் ஊதியமின்றி சேவை உழைப்பில் மக்கள் ஈடுபடுவது, ஊதியமின்றி அரசுப் பணிகளில் மக்கள் ஈடுபடுவது - ஆகியவற்றிலிருந்து தொடங்குகிறது. விஞ்ஞான கம்யூனிசம் திட்டத் தெளிவான, கறாரான பொருளைக் கொண்டிருக்கிறது. மார்க்சிய லெனினிய அகராதியில் அதன் பொருள் : கம்யூனிச சமுதாயம் என்பது வர்க்கங்கள், வர்க்க வேறுபாடுகள் முற்றாக ஒழிக்கப்பட்ட சமுதாயம்; அதில் மக்கள் அனைவரும் கம்யூனிச உணர்விலும் தார்மீக உணர்விலும் ஒரு அதிஉயர்ந்த மட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும்; அதேபோன்று உழைப்புக்கு எல்லையற்ற ஆர்வமும் முன்முயற்சியும் பெற்றிருக்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும்; சமூகப் பொருட்கள் மிகப் பெரும் அளவில் மிதமிஞ்சி யிருக்கும்; 'ஒவ்வொருவரும் அவரவர் திறமைக்கேற்ப', ஒவ்வொரு வருக்கும் அவரவர் தேவைக்கேற்ப' என்ற நியதி பிரயோகிக்கப் படும்; அரசு உலர்த்து உதிர்ந்துவிடும். இந்த கம்யூனிச இலட் சியங்களைச் சாதிப்பதே - அடைவதே பாட்டாளிவர்க்கம் மற்றும் அதன் கட்சியின் வரலாற்றுப் பூர்வமான கடமையாகும். இக் கடமையை பூர்த்தி செய்வதோடு அவை வர்க்கமாகவும் கட்சி யாகவும் இருப்பதையுமே முடிவுக்குக் கொண்டு வருகின்றன.

இந்த உன்னதமான இலட்சியங்கள் — முதலாளித்துவத் திலிருந்து கம்யூனிசத்திற்கு, வர்க்க சமுதாயத்திலிருந்து வர்க் கங்களற்ற சமுதாயத்திற்கு, சுரண்டும் அமைப்பு முறையிலிருந்து சுரண்டலற்ற அமைப்பு முறைக்கு மாறிச்செல்கையில் உண்மை யான, பூரணமான பொருளில் கம்யூனிசக் கோட்பாடுகள் – எங்கிருந்து தொடங்குகின்றன?

பொருளாதாரத்துறையில் சேவை உழைப்பிலிருந்து (சப் போத்னிக்குகளில் இருந்து) தொடங்குகின்றன.

"'கம்யூனிசமாக'வுள்ள விஷயங்கள் சேவை உழைப்பு (சப்போத்னிக்குகள்)தோன்றுவதிலிருந்து தொடங்குகின்றன; அதாவது எந்த அதிகாரமும் அல்லது அரசாலும் நிர்ணயிக் கப்படாத அளவானதோடு ஊதியம் பெறாத உழைப்பு; பொதுமக்களின் நன்மைக்காக ஒரு விசாலமான அளவுக்கு தனிநபர்களால் செய்யப்படும் உழைப்பு. கிராமப்புறத்தில் எப்பொழுதும் நடைமுறையிலுள்ளதைப் போல அண்டை அயலாருக்கு உதவியளிப்பதைப் போன்றதல்ல இது; இது அரசின் பொதுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, மிகப் பரந்த விரிந்த அளவுக்கு ஸ்தாபனப்படுத்தப்பட்டு ஊதியம் பெறாத உழைப்பு. எனவே கட்சியின் பெயரில் மட்டும் கம்யூனிஸ்டு என்கிற வார்த்தையைப் பிரயோகிப்பது மட்டு மின்றி, உண்மையில் கம்யூனிஸ்டு என்கிற முறையில் நமது சமூக வாழ்விலுள்ள இம்மாதிரி விஷயத்திலும் அதற்கே உரித்தான முறையில் பிரயோகிப்பதும் கூட இன்னும் கூடு தலாக சரியாக இருக்கும். ருசியாவில் தற்போது உள்ள நமது அமைப்பு முறையில் கம்யூனிசத் தன்மையுடையது ஏதாவது இருக்குமானால் அது சேவை உழைப்புகள் (சப்போத்னிக்குகள்); சேவை உழைப்புகள் (சப்போத்னிக் குகள்) மட்டுமே; மற்றெதுவும் சோசலிசத்தை உறுதிப்படுத்



படிப்பகம்

www.padippakam.com

துவதற்காக முதலாளித்துவத்திற்கெதிரான ஒரு போரம் தவிர வேறில்லை; சோசலிசத்திலிருந்து, அதன் பூரண வெற்றிக்குப் பிறகு சேவை உழைப்புகளில் (சப்போத்னிக்குகளில்)- புத்தகங்களில் உள்ள ஏதாவது ஒன்று என்பதாக அல்ல, உண்மை வாழ்க்கையில் - நாம் காணும் கம்யூனிசமாக அது வளர வேண்டும்'' (ரு. பொ. கட்சி (போ) - கின் மாஸ்கோ மாநாட்டில் சப்போத்னிக்குகள் பற்றி அறிக்கை : லெனின்.)

அரசியல் துறையில் ஊதியமின்றி உழைக்கும் மக்கள் அரசுப் பணிகளை மேற்கோள்வதிலிருந்து உண்மையான கம்யூனிசத்தன்மைகள் தொடங்குகின்றன.

'எமது நோக்கம் **ஏழை மக்களனைவரையும்** நிர்வாகத்தின் நடைமுறை வேலைகளில் ஈர்ப்பதாகும்; இந்தத் திசையில் எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு அடியும்-எவ்வாறு பல்வேறு வகையினதாக இருக்கிறதோ அவ்வளவுக்கு சிறந்தது - கவனமாக பதிவு செய்யப்பட்டு, படித்தாய்வு செய்யப்பட்டு, கிரமமாக முறைப்படுத்தப்பட்டு விசாலமான அனுபவத்தால் சோதித்தறியப்பட்டு சட்டத்தில் அங்கமாக்கப்பட வேண்டும். நமது நோக்கம் ஒவ்வொரு உழைப்பாளரும் உற்பத்திக்கான உழைப்பில் எட்டு மணி நேரப் 'பணியை' முடித்த பிறகு, **ஊதியமின்றி** அரசுப் பணிகள் ஆற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும்; இதற்கான மாறுதல் குறிப்பாக இடர்ப்பாடுகள் நிறைந்தது. ஆனால் இந்த மாறுதல் மட்டுமே சோசலிசத்தின் இறுதி உறுதிப்படுத்தலை உத்திரவாதம் செய்ய முடியும்'' (சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் : லெனின்)

சேவை உழைப்பாலும், அரசுப் பணிகளை உழைக்கும் மக்கள் ஊதியமின்றி செய்வதாலும் தொடங்கி வைக்கப்படும் கம்யூனிச இலட்சியம் முற்றாக எய்தி விட்டதாக எப்பொழுது கூற முடியும்?

'' கம்யூனிச சமுதாயத்தின் ஓர் உயர்ந்த படி நிலையில், தனிநபர் உழைப்புப் பிரிவினைக்குக் கீழ்ப்படிந்து அடிமைப்படுவது, அத்துடன் உடல் உழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான எதிர்க்கோட்பாடும் கூட மறைந்தொழிந்த பிறகு; உழைப்பு வாழ்க்கையின் ஒரு சாதனமாக மட்டுமின்றி, அதுவே வாழ்க்கையின் பிரதான தேவையாக மாறிய பிறகு; தனிநபரது அனைத்தும் தழுவிய



படிப்பகம்

www.padippakam.com

வளர்ச்சியோடு உற்பத்தி சக்திகளும் கூட அதிகரித்த பிறகு மற்றும் கூட்டுறவுச் செல்வத்தின் அனைத்து ஊற்றுக்களும் மிகவும் மிதமிஞ்சி சுரக்கும் பொழுது – அப்பொழுது மட்டுமே முதலாளித்துவ உரிமையின் குறுகிய எல்லையை அதன் முழுமையில் கடக்க முடியும் ; சமுதாயம் அதன் பதாகையில் பொறிக்க முடியும் : ஒவ்வொருவரிடம் இருந்து அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப !'' (மார்க்ஸ் : கோதா வேலைத் திட்டத்தின் மீதான விமர்சனம் )

அரசே இல்லாது உலர்ந்து உதிர்வது என்ற நிலையை அரசியல் துறையில் அடைய வேண்டும். இதற்கு முன் நிபந்தகளை எல்லா சுரண்டும் வர்க்கப்பிரதிநிதிகளுக்கும் பதிலாக எல்லா அரசாங்கத் துறைகளிலும், எல்லா அரசாங்க விவகாரங்களிலும் கீழிருந்து மேல்வரை புதிய வாழ்வை வழி நடத்தும் பொறுப்பை முற்றாக உழைக்கும் மக்கள் ஏற்க வேண்டும். அந்த அளவுக்கு உழைக்கும் மக்கள் தமது கல்வி அளவையும், கலாச்சார அளவையும் உயர்த்திக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் மற்றும் சகல துறைகளிலும் சோசலிச சமுதாயம் அதன் பிறப்புக்குறியீட்டுச் சின்னங்களான முதலாளித்துவ அம்சங்களை துடைத்தெறிவதன் மூலமாகத் தான் முதலாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்த்து, முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்த்து வர்க்க முரண்பாடுகளற்ற கம்யூனிச சமுதாயத்தை அடைய முடியும்.

எனினும் அதுவொன்றும் அவ்வளவு எளிதானதோ, சமநீர்ப் பயணமோ அல்ல. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, சுரண்டும் வர்க்கங்களை வீழ்த்துவதற்கு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கு, சோசலிச உடமை மாற்றத்திற்கு நிகழ்த்தியதை விட கடுமையான, சளையாத பல போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. ஏனெனில் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் என்னும் நிகழ்ச்சிப் போக்கினை உருவாக்கும் முரண்பாட்டின் ஒரு அம்சமாகிய கம்யூனிசத்தை பிரதான அம்சமாகத் தக்கவைத்துக் கொள்ளவும் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற சகல துறைகளிலும் அதை விரிவடையச் செய்து, உறுதிப்படுத்தி, வளர்த்தெடுத்து, பலப்படுத்தி முதலாளித்துவ அம்சத்தை முற்றாக துடைத்தொழிக்க - முரண்பாட்டிற்கு கம்யூனிச திசை வழியில் அதற்கு சாதகமாக தீர்வு காண - பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் போராடுவது போலவே அவற்றுக்கெதிராக முதலாளித்துவ அம்சத்தை பிரதான அம்சமாக மாற்றவும், சகல துறைகளிலும் அதன் மேலாண்மையை மீண்டும் நிலைநாட்டவும் இறுதியில் முதலாளித்துவ மீட்புக்கும், பழைய, புதிய சுரண்டலாளர்கள் தங்களால் இயன்றதனைத்தையும் முன்னிலும் பன்மடங்கு ஆக்ரோசத்துடன் முழுச்சக்தியையும் திரட்டிப் போராடுகின்றனர். இவ்விரு போக்குகளுக்கிடையிலான போராட்டமே முதலாளித்துவப் பாதைக்கும் சோசலிசப்பாதைக்கும் இடையிலான போராட்டமாகும் -முதலாளித்துவப் பாதையை பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், சோசலிசப் பாதையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாட்டாளி வர்க்கத்தக்கும் இடையிலான போராட்டமாகும்.

பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, அதற்கு முந்திய கட்டத்தை விட ஆழமானதாகவும், புதிய வடிவங்களை எடுப்பதாகவும் மாறியிருப்பதைக் காணத் தவறக்கூடாது. ஏனெனில் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், மற்றும் கல்வி - கலாச்சாரம் போன்ற பிற துறைகளிலும் முதலாளித்துவத்தின் பிடிப்புகள், செல்வாக்குகள் குறிப்பாக குட்டி முதலாளித்துவ சூழலில் பாட்டாளி வர்க்கம், அரசு மற்றும் கட்சியில் பிரதிபலித்து, அவற்றை மாசுபடுத்தி உருக்குலைக்கவும் செய்கின்றன.

''ருசியாவிலுள்ள நாங்கள் முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு அல்லது கம்யூனிசத்தின் முதல் கட்டத்திற்கு மாறுவதில் முதல் படிகளின் வழியாகப் போகிறோம். (முதலாளித்துவ வர்க்கம் தூக்கியெறியப்பட்டதிலிருந்து மூன்றாவது ஆண்டில்) வர்க்கங்கள் நீடிக்கின்றன : பாட்டாளி வர்க்கத்தால் அதிகாரம் வெல்லப்பட்ட பிறகு பல ஆண்டுகளாக எங்கெங்கும் அவை நீடிக்கும் ஒரு வேளை இங்கிலாந்தில், அங்குதான் விவசாயிகள் இல்லை (ஆனால் அங்கும் சிறு உடமையாளர்கள் இருக்கிறார்கள்) இந்த காலகட்டம் குறுகியதாக இருக்கலாம். வர்க்கங்களை ஒழிப்பதன் பொருள் நிலப்பிரபுக்கள், முதலாளிகளை விரட்டியடிப்



படிப்பகம்

www.padippakam.com

பது மட்டுமல்ல - அதை ஒப்பீட்டு வகையில் எளிதில் சாதித்து விட்டோம். அதன் பொருள் சிறு பண்ட உற்பத்தியாளர்களை ஒழித்து கட்டுவதும் கூட ஆகும். அவர்களை **விரட்டியடிக்க முடியாது** அல்லது நசுக்க முடியாது; அவர்களோடும் இணக்கமாக நாம் வாழவேண்டும்; மிகவும் நீண்ட, நெடிய, மெதுவான, எச்சரிக்கையான ஸ்தாபன வேலையால் மட்டுமே மறுவார்ப்பும், மறுபோதனையும் செய்யமுடியும்; (செய்யவேண்டும்) அவர்கள் குட்டி முதலாளித்துவ தன்னியல்போடு ஒவ்வொரு பக்கமும் முற்றுகையிடுகிறார்கள்; அதனால் பாட்டாளி வர்க்கத்துக்குள் ஊடுருவி மாசுபடுத்துகிறார்கள்; அவர்களின் குட்டி முதலாளித்துவ முதுகெலும்பற்ற நிலை, ஒற்றுமையின்மை, தனிமனிதப்போக்கு, எக்களிப்பு அல்லது சோர்வு என்ற மாறும் மனோநிலை ஆகியவற்றுக்கு பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் பின்னிழுத்துத்தள்ள இடையராது காரணமாக இருக்கிறார்கள். இதற்கு எதிர்வினையாற்றும் பொருட்டும், பாட்டாளி வர்க்கத்தின் ஸ்தாபனப்படுத்தும் பாத்திரத்தை (மேலும் அது பிரதான பாத்திரம்) சரியாகவும், வெற்றிகரமாகவும், வெல்லத்தக்கவாறும் செலுத்தும் பொருட்டும், பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் கட்சிக்குள் கறாரான மையப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு தேவையாயிருக்கிறது. பழைய சமுதாயத்தின் சக்திகள் மற்றும் மரபுகளுக்கெதிரான இரத்தம் சிந்தியும் இரத்தம் சிந்தாமலும், வன்முறையாகவும் அமைதியாகவும், இராணுவ ரீதியிலும், பொருளாதார ரீதியிலும், கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும் ஒரு இடையராத போராட்டம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். பத்து லட்சம் பல பத்துலட்சங்களின் பழக்கவழக்கங்களின் சக்தி ஒரு மிகப்பெரும் பயங்கரமான சக்தி. போராட்டத்தில் எஃகுறுதியாக்கப்பட்ட கட்சியின்றி, கொடுக்கப்பட்ட வர்க்கத்தில் நேர்மையான அனைத்திடமும் நம்பிக்கையைப் பூரணமாகப் பெற்ற ஒரு கட்சியின்றி, பரந்துபட்ட மக்களின் மனோநிலையை கூர்ந்து நோக்கி செல்வாக்கு செலுத்தும் வல்லமையுடைய ஒரு கட்சியின்றி இம்மாதிரியான ஒரு போராட்டத்தை வெற்றிகரமாக நடத்துவது சாத்தியமில்லை. லட்சோப லட்சம் சிறு உற்பத்தியாளர்களை வெல்வதை விட மத்தியத்துவப்படுத்தப்பட்ட பெரு முதலாளிகளை வென்றடக்குவது ஓராயிரம் மடங்கு எளிதானது; இருப்பினும் அவர்கள் தங்களது சாதாரணமான, தினசரி புலனறிவுக்கு உட்படாத, நழுவக்கூடிய மனோதைரியத்தை இழக்கச் செய்யும் நடவடிக்கையின் மூலம் முதலாளிகளுக்குத் தேவையான



படிப்பகம்

www.padippakam.com

முதலாளித்துவ வர்க்கத்தை திரும்ப நிலை நாட்டுவதற்கு விழையும் அதே விளைவைச் சாதிக்கிறார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சியின் எஃகுறுதி வாய்ந்த கட்டுப்பாட்டை எவரொருவர் சிறுமைப்படுத்துகிறாரோ (குறிப்பாக அதன் சர்வாதிகார காலங்களின் போது) அவர் உண்மையில் பாட்டாளி வர்க்கத்திற்கெதிராக முதலாளித்துவ வர்க்கத்திற்கு உதவுகிறார்.''

(லெனின் – இடது சாரி கம்யூனிசம் ...)

சிறு உற்பத்தியாளர்களது பழக்க வழக்கங்களின் வீச்சு இவ்வளவு கடும் பாதிப்பை ஏன் விளைவிக்கிறது ?

'' ஆ! தொழிலாளர் வர்க்கம் பழைய முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து ஒரு இனட்பெருஞ் சுவற்றால் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒரு தனி நபர் இறந்து போகும் விவகாரத்தில், இறந்தவர் சாதாரணமாகத் தூக்கிச் சென்று விடப்படுவதைப்போல புரட்சியின் போது நடப்பதில்லை. பழைய சமுதாயம் சிதைவுறும் போது அதன் பிணத்தை சவப்பெட்டியில் வைத்து ஆணியடித்து சவக்குழியில் புதைத்து விட முடியாது நமது மத்தியிலேயே அது உருக்குலைகிறது; பிணம் அழுகுகிறது; நமக்கு நச்சிடுகிறது.''

(லெனின் : பஞ்சத்தை முறியடிப்பதன் மீதான அறிக்கை)

சோசலிச சமுதாயத்திலுள்ள அரசு அலுவலர்களையும், பாட்டாளி வர்க்கத்தையும் மாசுபடுத்தும் இத்தகைய போக்குகள் தொடர்ந்து நீடிக்கின்றன என்று பின்வருமாறு லெனின் எச்சரித்தது, முதலில் யூகோஸ்லாவியா, சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் தற்போது சீனத்திலும் நிரூபிக்கப்படவில்லையா ?

'' சோவியத் பொறியியலாளர்கள், சோவியத் ஆசிரியர்கள் சலுகை பெற்றவர்கள் அதாவது மிகவும் அதி உயர் திறனும், மிகச்சிறந்த அந்தஸ்தும் உள்ளவர்கள் மத்தியிலும், சோவியத் ஆலைகளில் உள்ள தொழிலாளர்கள் மத்தியிலும் முதலாளித்துவ நாடாளுமன்றவாதத்திற்கே உரித்தான முற்றும் முழுதான எல்லா எதிர்மறைத் தன்மைகளும் இடையிராது உயிர்ப்பிப்பதைக் காண்கிறோம் ; களைப்புறாத, நீண்ட, நெடிய, விடாப்பிடியான மற்றும் மீண்டும் மீண்டும் நடத்தும் போராட்டத்தில் பாட்டாளி வர்க்க ஸ்தாபனம் கட்டுப்பாட்டில் மட்டுமே சிறுக, சிறுக இந்தச் சனியனை வெற்றி கொள்கிறோம். (லெனின்: இடது சாரிக் கம்யூனிசம் .. )

சோசலிசக் கட்டமைவில் இந்த முதலாளித்துவ அம்சங்கள் கிடை



படிப்பகம்

www.padippakam.com

யாதென்றும், இவை மிச்ச சொச்சங்களாக மட்டுமே நீடிக்கமுடியும் என்றும் லியு - தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதம் பிதற்றுகிறது. உண்மையில் இடையிராது இந்த முதலாளித்துவ அம்சம் உயிர்ப்பிப்பதற்கான அடிப்படை தொடர்ந்து சோசலிச சமுதாயத்தில் நிலவுவதைக் காண மறுக்கிறது.

"சோவியத்துக்களின் உறுப்பினர்களை 'நாடாளுமன்றவாதிகளாக, அல்லது அதிகார வர்க்கத்தினராக மாற்றும் குட்டி முதலாளித்துவப் போக்கு இருக்கிறது. இந்தப்போக்கை முறியடிக்க சோவியத்துக்களின் எல்லா உறுப்பினர்களையும் நிர்வாக நடைமுறை வேலைகளில் இழுக்க வேண்டும்,'' (சோவியத் அரசாங்கத்தின் உடனடிப்பணிகள் - லெனின்.)

இவ்வாறு பாட்டாளி வர்க்கம், அதன் கட்சி மற்றும் அரசினை மாசுபடுத்துவதன்மூலம் முதலாளித்துவ அம்சங்களைத் தக்க வைத்துக் கொள்வதோடு, சமுதாயத்தில் அவற்றைப் பிரதானமாக்கவும், சகல துறைகளிலும் அவற்றின் மேலாண்மையை மீண்டும் நிலை நாட்டவும், இறுதியில் முதலாளித்துவ மீட்புக்கும் பழைய, புதிய சுரண்டலாளர்கள் தங்களை இயன்றதனைத்தையும் செய்வர். எனவே தான் லெனின் சொன்னார்:

"முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச்செல்லுவது ஒரு முழுமையான வரலாற்றுச் சகாப்தத்தையே குறிக்கிறது. இந்தச் சகாப்தம் முடிவுறும் வரை சுரண்டலாளர்கள் தவிர்க்க முடியாமல் மீட்புக்கான நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்; இந்த நம்பிக்கை மீட்சிக்கான முயற்சிகளாக மாற்றப்படுகின்றன'' (பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுட்ஸ்கியும் : லெனின்)

ஏகாதிபத்திய ஆயுதமேந்திய ஆக்கிரமிப்பால் மட்டுமே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு அபாயமிருப்பதாக லியு - தெங் கும்பல் வாதிடுகிறது. லியு - தெங் கும்பலைப் போன்ற எதிர்ப்புரட்சி திரிபுவாதக் கும்பலை விலைக்கு வாங்குவதன் மூலம் உள்ளிருந்து அமைதி வழியில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருக்குலைப்பதற்கு ஏகாதிபத்தியம் மற்றும் சமூக ஏகாதிபத்தியத்தின் முயற்சிகளையும் பழைய, புதிய சுரண்டலாளர்களது முதலாளித்துவ மீட்சிக்கான நம்பிக்கை மற்றும் முயற்சிகளையும் பற்றிலியு - தெங் கும்பல் மூச்சு விடுவதே இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

சோசலிசத்தின் இறுதி வெற்றிக்கு உத்திரவாதம் செய்ய வேண்டுமானால் மாறிக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிப் போக்காகிய சோசலிச கட்டம் முழுவதும் ஏகாதிபத்தியத் தலையீடு மற்றும் முதலாளித்துவ மீட்புக்கான நம்பிக்கைகளையும் முயற்சிகளையும்முறியடிக்க வேண்டும். அதற்கு மிகப் பொருத்தமான, சரியான அரசியல் வழிமுறைதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும். இதைத்தான் மார்க்ஸ் தமது புகழ் பெற்ற கோதா வேலைத் திட்டத்தின் மீதான விமர்சனத்தில் கூறுகிறார்,

"முதலாளித்துவ சமுதாயத்திற்கும், கம்யூனிச சமுதாயத்திற்கும் இடையில் ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறிச்செல்லும் புரட்சிகர மாற்றமாகிய காலகட்டம் நிலவுகிறது. இதற்குப் பொருத்தமாக ஒரு அரசியல் மாறுதலாகிய காலகட்டம் கூட இருக்கிறது; இதில் அரசு என்பது புரட்சிகரப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தவிர வேறெதுவும் இருக்க முடியாது"

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சின் கோட்பாடுகளை லெனின் அடிக்கடி வலியுறுத்தி, பகுப்பாய்வு செய்து வளர்த்தெடுத்தார்.

"ஒரு கம்யூனிச சமுதாயத்திற்கு முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து மாற்றமடைவது, கம்யூனிசத்தை நோக்கி அது வளர்வது ஒரு அரசியல் ரீதியிலான மாறுதலடையும் காலகட்டமின்றிச் சாத்தியமில்லை. இந்த காலகட்டத்தில் அரசு புரட்சிகர பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக மட்டுமே இருக்க முடியும்" (அரசும் புரட்சியும்: லெனின்)

பழைய சுரண்டும் வர்க்கத்தைத் தூக்கியெறிந்து அடக்கி ஒடுக்குவதற்கு மட்டுமின்றி பாட்டாளி வர்க்கத்தின் ஊசலாட்டத்தைக் களைந்து பிறவர்க்கங்களின் தன்மையால் எழும் சீர்குலைவுச் சக்திகளை முறியடித்து அடக்கி ஒடுக்கவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமாகிறது. ஆனால் சுரண்டும் வர்க்கங்களைத் தூக்கியெறியும் ஒரே செயலை மட்டுமே பிரதானமானதாக லியு - தெங் கும்பல் வலியுறுத்துகிறது.

"முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கான ஒவ்வொரு மாறுதலின் போதும் இரண்டு முக்கிய காரணங்களுக்காக அல்லது இரண்டு முக்கிய வழிகளில் பாட்டாளி வர்க்க



படிப்பகம்

www.padippakam.com

சர்வாதிகாரம் அவசியம். முதலாவதாக சுரண்டலாளர்களின் எதிர்ப்புகளை இரக்கமற்ற முறையில் நசுக்குவதுஇன்றி முதலாளித்துவம் வீழ்த்தப்படவும் ஒழித்துக்கட்டப்படவும் முடியாது. சுரண்டலாளர்களிடமிருந்து அவர்களது செல்வத்தை அறிவிலும் அமைப்புத் துறையிலும் அவர்களுக்கு உள்ள சாதகத்தை உடனடியாகப் பறித்துவிட முடியாது. அதன் பயனாய் அவர்கள் வறியவர்களின் வெறுக்கத்தக்க ஆட்சியை (ஒரு நீண்ட காலத்திற்கு) தூக்கியெறிவதற்குத் தவிர்க்க முடியாமல் முயன்று கொண்டிருப்பார்கள். இரண்டாவதாக ஒவ்வொரு மாபெரும் புரட்சியும் குறிப்பாக ஒரு சோசலிசப் புரட்சியும் உள் நாட்டு யுத்தம் இல்லாமல் நினைத்துப்பார்க்கமுடியாது(Inconcenivable);வெளிநாட்டுடனான யுத்தம் இல்லாவிட்டாலும்கூட இம்மாதிரி தான் இருக்கும். அதாவது இந்த உள்நாட்டு யுத்தம் வெளிநாட்டுடனான யுத்தத்தை விட அதிக அழிவை உண்டாக்கக் கூடியதாகும். ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஊசலாட்டங்களையும் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு ஓடுகின்ற உதாரணங்களையும் உள்ளடக்கியதாகும். மிகுந்த அளவிலான (Extreme) நிச்சயமின்மை ''சமநிலை இழந்த, குழப்பத்தைக்கொண்ட நிலைமை''யாகும். தவிர்க்க முடியாமல் மிகுந்த எண்ணிக்கையிலும் முக்கியமாக குட்டி முதலாளிகளுடனும் (ஏனென்றால் ஒவ்வொரு யுத்தமும் ஒவ்வொரு நெருக்கடியும் இந்த குட்டி முதலாளிகளைத்தான் முதலில் ஒழிக்கின்றது) இணைந்துள்ள பழைய சமுதாயத்தின் அனைத்து உருக்குலைக்கும் (dis integrating) கூறுகளும் இப்படிப்பட்ட ஒரு மகத்தான (profound) புரட்சியின் போதுதங்களை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருக்க முடியாது. மேலும் இந்த உருக்குலைக்கும் கூறுகள் எத்தனை வகை உண்டோ அத்தனை வகையிலான கொடூரம், கொள்ளைலாபமடித்தல், ஊழல், சீர்குலைவு குற்றங்கள் ஆகியவைகளின் அதிகரித்த அளவிலான வடிவில் தவிர வேறு வடிவத்தில் '' தங்களை வெளிப்படுத்திக் '' கொள்ள முடியாது. இவைகளை அடக்குவதற்காக காலமும் ஒரு இரும்புக்கரமும் தேவையாகிறது. '' இதைத் தங்கள் உள்ளத்திலிருந்தே உணராத மக்களும் ஸ்தலத்திலேயே திருடர்களைச் சுட்டுக் கொள்வதின் மூலம் தங்களது உறுதியினையும் (Statutory Firmness) வெளிப்படுத்தாத மக்களும் பங்கெடுத்துக் கொண்ட ஒரு புரட்சி கூட



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றில் இல்லை. முந்தைய புரட்சிகளின் துரதிர்ஷ்டம் என்னவென்றால் உருக்குலைக்கும் கூறுகளை ஈவு இரக்கமின்றி நசுக்க மக்களுக்கு பலத்தைக் கொடுக்கவும், அவர்களை ஒரு இறுக்கமான நிலையில் வைத்திருக்கவுமான புரட்சிகர உற்சாகம் நீண்ட காலத்திற்கு நீடிக்காதுதான். சுரண்டப்பட்ட மக்களின் இந்த புரட்சிகர உற்சாகத்தின் நிலையின்மைக்கான சமுதாய அதாவது வர்க்கக் காரணம் பாட்டாளி வர்க்கத்தின் பலவீனம்தான்.

"பாட்டாளி வர்க்கம் மட்டுமே உழைக்கின்ற சுரண்டப்பட்ட மக்களின் பெரும்பான்மையினரை (அது போதுமான அளவிற்கு எண்ணிக்கையோடும், வர்க்க உணர்வோடும் கட்டுப்பாட்டோடும் இருந்தால்) தனது பக்கம் வென்றெடுக்க வல்லது. அதுமட்டுமே எல்லா சுரண்டலாளர்களையும் மற்றும் உருக்குலைவுகளின் எல்லாக் கூறுகளையும் முற்றாக நசுக்கப் போதுமான காலம் வரை அதிகாரத்தைத் தக்க வைக்க வேண்டும்.

"எல்லாப் புரட்சிகளின் இந்த வரலாற்று அனுபவத்தைத் தான், இந்த உலக - வரலாற்றுப் பொருளாதார, அரசியல் படிப்பினையைத்தான் மார்க்ஸ் தனது இரத்தினச் சுருக்கமான, கூர்மையான, தெளிவான, வரையறுக்கப்பட்ட சூத்திரமாகத் தொகுத்ததுதான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்"

(லெனின் - சோவியத் அரசாங்கத்தின் உடனடிக் கடமைகள்

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஏதோ முதலாளித்துவ அரசின் சட்டபூர்வ நடவடிக்கைகளை ஒத்ததாகவும் அரசு அலுவலர்களின் பங்கேற்பு மட்டுமே கொண்டதாகவும் கருதக்கூடாது. முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து கம்யூனிச சமுதாயத்திற்கு மாறிச் செல்லும் நிகழ்ச்சிப் போக்கின் தொடக்கத்தை சோசலிசப் புரட்சிப் போராட்டங்களின் தொடக்கத்தைப் பிரகடனப்படுத்துவதாகும்.

"பொதுவாக வர்க்க வேறுபாடுகளை ஒழித்துக் கட்டுவதற்கு அவை தங்கியிருக்கும் எல்லா உற்பத்தி உறவுகளையும் ஒழித்துக்கட்டுவதற்கு இந்த உற்பத்தி உறவுகளுக்குப் பொருத்தமான எல்லா சமூக உறவுகளையும் ஒழித்துக் கட்டுவதற்கு, இந்த சமூக உறவுகளில் இருந்து விளையும் எல்லாக் கருத்துக்களையும் புரட்சிமயமாக்குவதற்கு அவசியமான மாறுதலுக்கான முறை என்கிற வகையில்



படிப்பகம்

www.padippakam.com

**பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை, புரட்சியின் நித்தியத்துவத்தைப் பிரகடனப்படுத்துவது** சோசலிசம்.'' (மார்க்ஸ்: பிரான்சில் வர்க்கப் போராட்டம்)

மார்க்சின் இக்கோட்பாட்டை ஆக்க பூர்வமாக வளர்த்தெடுத்த லெனின் சொன்னார்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வர்க்கப் போராட்டத்தின் முடிவல்ல; ஆனால் புதிய வடிவங்களில் இதன் தொடர்ச்சியாகும். தோற்கடிக்கப்பட்ட ஆனால் துடைத்தொழிக்கப் படாத ஒரு முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக, மறைந்து போகாத, எதிர்ப்பைத் தருவதை நிறுத்தாத, ஆனால் எதிர்ப்பை மேலும் ஆழப்படுத்தியுள்ள ஒரு முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக வெற்றி பெற்று அரசியல் அதிகாரத்தை கரங்களில் எடுத்துக் கொண்ட பாட்டாளி வர்க்கத்தால் தொடுக்கப்படும் வர்க்கப் போராட்டமே பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமாகும்'' (லெனின்: சுதந்திரம், சமத்துவம் என்ற முழக்கங்களால் மக்களை ஏமாற்றுவது பற்றிய உரைக்கு முன்னுரை)

கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டம் உதயமாவதற்கு முந்தைய கால கட்டம் முழுவதும் நீடிக்கும், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் காலகட்டம் முழுவதும் நீடிக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் கூட இந்த கால கட்டத்தில் நிலை நாட்டப்படுதல் உறுதிப்படுதல், பலப்படுத்தப் படுதல் மற்றும் உலர்ந்து உதிர்தல் ஆகிய இயங்கியல் வளர்ச்சிப் போக்கைக் கொண்டிருக்கிறது. எனவே தான் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டத்திற்கு மாறுதலடையும் இந்த கால கட்டம் முழுவதும் அரசின் வடிவமே கூட மாறுதலடைகிறது என்றார் லெனின்.

''சோசலிசம் மற்றும் அரசியல் போராட்டம் ஆகியவற்றின் மொத்த வரலாற்றிலிருந்தும் சாரமாக, அரசு நிச்சயம் மறையப் போகிறது. அதன் மறைவிற்கான மாறுதலடையும் வடிவம் (அரசிலிருந்து அரசு இல்லாமைக்கு மாறுதலடைவது) நிச்சயமாக பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கம் என்கிற ரீதியில் ஸ்தாபனப்படுத்தியதாகும் என்று மார்க்ஸ் தொகுத்தார்.'' (அரசும் புரட்சியும் - லெனின்)

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது, உறுதிப்படுத்துவது, பலப்படுத்துகிறது, உலர்ந்து உதிர்வது ஆகிய இயங்கி



படிப்பகம்

www.padippakam.com

யல் வளர்ச்சிப் போக்கில் வரலாறு பூர்வமாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நாட்டுக்கு நாடு காலகட்டத்திற்கு காலகட்டம் வெவ்வேறு வடிவங்கள் எடுக்கிறது ; ஆனால் சாராம்சத்தில் ஒரே மாதிரியாயிருக்கிறது.

"முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுதலடைவது நிச்சயம் ஒரு பிரம்மாண்டமான மிதமிஞ்சிய மற்றும் பல்வேறு வகையான அரசியல் வடிவங்களை பெற்றுத் தராமலிருக்க முடியாது ; ஆனால் சாராம்சத்தில் தவிர்க்க முடியாமல் ஒன்றாகவே இருக்கும் : **பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்** (அரசுப்புரட்சியும் - லெனின்)

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி பெற்றுத் தந்த சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடுவது, மாபெரும் விவாதங்களை நடத்துவது, பெரும் அச்சரச் சுவரொட்டிகள் எழுதுவது என்றபுகழ்பெற்ற '**சிதா**' பெரும்ஜன நாயகம் (அரசியல் வடிவங்களையும்) புரட்சிகர கலாச்சாரக் கமிட்டிகள், செங்காவலர் அமைப்புகள்போன்றவற்றை(புதியபாட்டாளிவர்க்கச் சர்வாதிகார) ஒழித்துக்கட்டியது லியு - தெங் கும்பல். பொருளாதாரத் துறையைப் போலவே, அரசியல் துறையிலும் முதலாளித்துவ அம்சங்களுக்கும், கம்யூனிச அம்சங்களுக்குமிடையிலான ஒற்றுமையும் போராட்டமும் என்ற முரண்பாட்டில் அரசியல் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்கிறது லியு - தெங் கும்டல். டார்க்கப் பன்மடங்கு சக்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கும் தூக்கியெறியப்பட்ட சுரண்டும் வர்க்கங்கள் அரசியல் துறையில் நடத்தும் வர்க்கப் போராட்டங்களையும், கட்சி, அரசு, மற்றும் மக்கள் மத்தியில் அவற்றின் பிரதிபலிப்புகெதிரான வர்க்கப் போராட்டங்களையும் பெரிதுபடுத்தக் கூடாது என்கிறது லியு - தெங் கும்பல். ஆனால் அரசியல் துறையில் நடக்கும் இவ்வர்க்கப் போராட்டங்கள் மனித சித்தத்திற்கு அப்பாற்பட்டவை.

இதுவரை விவரிக்கப்பட்டதிலிருந்து, பொருளாதாரம், அரசியல், சித்தாந்தம், கல்வி – கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் கம்யூனிசம் மற்றும் முதலாளித்துவம் ஆகிய இரு அம்சங்கள் நிலவுவதையும், அவற்றுக்கிடையிலான ஒற்றுமையும் போராட்டமும் என்கிற முரண்பாட்டால் எழும் நிகழ்ச்சிப் போக்கே மாறிக்கொண்டிருக்கும் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் என்ற சோசலிசக் கட்டமாகும் என்பதையும்



படிப்பகம்

www.padippakam.com

காண்கிறோம். கம்யூனிசம் மற்றும் முதலாளித்துவம் இவ்விரு போக்குகளுக்கிடையே, இவ்விரு பாதைகளுக்கிடையே நிலவும் முரண்பாட்டில் கம்யூனிசம் பிரதான அம்சமாக மாறியிருப்பதையே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிறுவப்பட்டதும் சோசலிச உடமை மாற்றமும் குறிக்கின்றன. இரண்டாம் பட்ச அம்சமாக முதலாளித்துவப் பாதை, போக்கு நீடிப்பதை மறுப்பதும், முரண்பாடு தீர்ந்து போய் விட்டதாகக் கூறுவது சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய யதார்த்த பூர்வமான இயங்கியல் விதியை மறுப்பதாகும். சோசலிச சமுதாயம் என்பது முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் ஒரு நிகழ்ச்சிப் போக்கு என்பதையும் மறுப்பதாகும்.

எனவே கம்யூனிச சமுதாயத்தின் உயர்ந்த கட்டத்தை அடையும்வரை, மாறிச்செல்லும் கட்டமாகிய சோசலிசகட்டம் முழுவதும் ஒருபக்கம் கம்யூனிசஅம்சங்களை உறுதிப்படுத்துவதற்கும், வளர்த்தெடுப்பதற்கும் மற்றொருபக்கம் முதலாளித்துவத்தைமீட்பதற்கும் ஆகிய இரு போக்குகளுக்கிடையிலான போராட்டம், முதலாளித்துவம்மற்றும் சோசலிசம் ஆகிய இருபாதைகளுக்கிடையிலான போராட்டம், முதலாளி மற்றும் தொழிலாளி ஆகிய இருவர்க்கங்களுக்கிடையிலான போராட்டம் நிற்காது; அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் நிற்காது. ஒரு சோசலிச சமுதாயத்தின் தலைவிதியை இப்போராட்டமே தீர்மானிக்கிறது. ஒரு சோசலிச சமுதாயம் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுமா ? அல்லது முதலாளித்துவத்திற்குத் திரும்பிச் செல்லுமா? என்ற கேள்விக்கு இந்த நீண்ட, நெடிய போராட்டத்தின் முடிவே பதிலாக இருக்கும். எனவே தான் முதலாளித்துவப் பாதையா சோசலிசப் பாதையா எது வெற்றிபெறும் என்ற கேள்வி இன்னும் தீர்வுகாணாத பிரச்சினையாகவே இருக்கிறது; வர்க்கப் போராட்டம் தொடர்கிறது; அது நீண்ட நெடியது; திரும்பத்திரும்ப, ஆனால் அடுத்தடுத்த உயர்ந்த நிலையில் நிகழக் கூடியது; வேதனைகளும் இடர்ப்பாடுகளும் சிக்கலும்மிக் கதானது; கடலலைகளைப்போன்று அப்போராட்டம் சில சமயம் உயர்ந்தோங்கும்; சில சமயம் தணியும். சமயத்தில் கனிசமான அளவு சாந்தமாக இருக்கும்; சமயத்தில் மிகவும் கொந்தளிப்பானதாக இருக்கும். அதன் பரிமாணமும், வீச்சும் மனித சித்தத்துக்கு அப்பாற்பட்டது; சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தின் வளர்ச்சிப் போக்கினுடைய புறவயமான விதிகளுக்குட்பட்டது. **மரம் ஒய்வை நாடினாலும் காற்று தணிந்து விடாது.**



படிப்பகம்

www.padippakam.com

அதன் வரலாற்று பூர்வமான பூரணமான பொருளில் வர்க்கப் போராட்டம் தொடர்வதை ஒப்புக்கொள்ளாத அதே வேளையில் சுரண்டும் வர்க்கங்களின் மிச்ச சொச்சங்களுக் கெதிரானதாகவும், தனிநபர்களுக்கெதிரானதாகவும் மக்கள் மத்தியிலானதாகவும் வர்க்கப் போராட்டம் தொடர்வதாக லியு - தெங் கும்பல் கூறுகிறது. அது பிரதானமாக்கப்படக் கூடாது; பெரிதுபடுத்தப்படக் கூடாது; நாடுதழுவிய, பெரும் அளவினதாக, பரந்துபட்ட மக்கள் பங்கேற்பதாக நடத்தப்படக் கூடாது; மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி போன்ற பெரும் நாசம், பெரும் பேரழிவு விளைவிக்கக் கூடிய பெருங்குழப்பமானதாக இனியும் தொடுக்கப்படக்கூடாது என்கிறது லியு - தெங் கும்பல். ஆனால் வர்க்கப் போராட்டத் தின் பரிமாணத்தையும் வீச்சையும் பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் - வேறு எவரும் வேறு எதுவும் கூட - தீர்மானிப்பதற் கில்லை. அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் கம்யூனிச அம்சங்களை வரிவடையச்செய்து, உறுதிப்படுத்தி, வளர்த்தெடுத்து, பலப் படுத்தி முதலாளித்துவ அம்சங்களை முற்றாகத் துடைத்தொழிப் பதற்கான ஒவ்வொரு நடவடிக்கையையும், கம்யூனிசத்தை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் பழைய, புதிய சுரண்டலாளர்களும் அவற்றின் சர்வதேசக் கூட்டாளிகளும் ஆயிரமாயிரம் மடங்கு கூடுதலான பலத்துடன், ஆக்ரோசத் துடன் எதிர்ப்பர். இதை முறியடித்து கம்யூனிசப் பாதையில், கம்யூனிச திசைவழியில் பயணத்தைத் தொடரவும் எதிர்க்கும் எல்லா சக்திகளையும் நிலைகுலையச் செய்யவும் சகல துறை களிலும் வர்க்கப் போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

பழைய, புதிய சுரண்டலாளர்களும் அவர்களது சர்வதேச கூட்டாளிகளும் முதலாளித்துவ மீட்சிக்கு முயலும்போது அவர்களது நம்பிக்கைகளையும் முயற்சிகளையும் முறியடிக்க வேண்டுமானால் பரந்துபட்ட மக்களது கொந்தளிப்பான, நாடு தழுவிய, பெரும் அளவினதான வர்க்கப் போராட்டம் தவிர்க்க முடியாததாகவும், அவசியமானதாகவும் ஆகிவிடுகிறது. மாறாக அவற்றை முறியடிப்பது ஒரு சில கட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர்மட்டத் தலைவர்களது சட்டபூர்வ வரம்புக்குட்பட்ட செயல்களோடு குறுக்கிச் சுறுக்கி விடக்கூடாது; இயலாது. பரந்துபட்ட மக்களது பங்கேற்புடன் நடக்கும் கொந்தளிப்பான, நாடு தழுவிய பெரும் அளவிலான வர்க்கப் போராட்டங்களின்



படிப்பகம்

www.padippakam.com

மூலம் மட்டுமே அவை முறியடிக்கப்படும்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாதுகாத்து உறுதிப்படுத்தப்படும். பாட்டாளி வர்க்கம் உட்பட உழைக்கும் மக்களிடம் தொடர்ந்து நிலவும் பலவீனங்களைக் களைந்து புரட்சிகர உத்வேகத்தை ஆழமாகவும், விசாலமாகவும் தக்கவைத்துக் கொள்ள முடியும். இவற்றாலேயே பரந்து பட்ட மக்களது சித்தாந்த உணர்வும் எச்சரிக்கையும் வளர்த்தெடுக்கப்படுகிறது. சோசலிசப் புரட்சி மட்டுமல்ல சோசலிச நிர்மாணத்திற்கும் இது அவசியம்.

பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் இதுவரை விவரிக்கப்பட்டதிலிருந்து, அவற்றின் மகத்தான வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சகல துறைகளிலும் வர்க்கப் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது என்பதை அறிகிறோம். ஆனால் வர்க்கப் போராட்டத்தையும் சோசலிசப் பொருளாதார நிர்மாணத்தையும் நடத்துவதை தனித்தனியே பிரித்தெடுத்து கட்சி மற்றும் அரசின் வேலையின் குவிமையம் சோசலிசப் பொருளாதார நிர்மாணம் மட்டுமே என்று லியு - தெங் கும்பல் கூறுகிறது. சோசலிசப்புரட்சியின் நோக்கமே உற்பத்தி சக்திகளை விரி-வாக்குவதுதான் என்று கூறுகிறது. லின் பியௌ மற்றும் நால்வர் கும்பலின் கடை கோடித்தனமான இடது திரிபுவாத நிலைப்பாடுகளைசாக்காக முன்னிறுத்தி அதன் மறுபக்கமும் மற்றொரு கடைகோடித்தனமுமான எதிர்ப்புரட்சித் திரிபுவாதத்தை லியு -தெங் கும்பல் முன் தள்ளுகிறது.

> " பல ஆண்டுகளாக, லின் பியௌ மற்றும் நால்வர் கும்பல் மிகப்பெரும் அளவு ' வர்க்கப் போராட்டத்திற்கே அனைத்தும் ' என்று பேசி மக்களிடம் பொய்யான எண்ணத்தை பதிய வைத்தன; அதாவது சோசலிச காலகட்டம் முழுவதும் வர்க்கப் போராட்டமே கருவானது, அதே சமயம் பொருளாதார நிர்மாணம் ஒரு கீழ்நிலையான இரண்டாம் பட்சமான இடத்தை மட்டுமே எடுக்கிறது; மேலும் வர்க்கப் போராட்டத்தைத் தொடுப்பதே கம்யூனிஸ்டுகளின் ஒரே பணி; வர்க்கப் போராட்டம் இனி மேலும் பிரதான முரண்பாடாக இல்லாத ஒரு காலமிருக்குமானால், அது சோசலிசப் புரட்சியைக் கைகழுவி விடுவதாகும்; கம்யூனிஸ்டுகளின் இலட்சியத்தை மறந்து போவதேயாகும் என்றனர். இந்தக் கண்ணோட்டம் பிழையானது."

(பிஜிங் ரிவ்யூ தொகுதி 22, எண் 47, பக். 16);



படிப்பகம்

www.padippakam.com

"சோசலிச மாற்றம், அடிப்படையில் பூர்த்தி அடைந்த பிறகு நமது நாட்டில் தீர்க்கவேண்டியிருந்த பிரதான முரண்பாடு மக்களது வளரும் பொருளாதாய மற்றும் கலாச்சாரத் தேவைகளுக்கும் சமூகப் பொருளுற்பத்தியின் பின் தங்கிய நிலைக்கும் இடையிலானது. கட்சி மற்றும் அரசாங்க வேலையின் குவிமையம் சோசலிச நிர்மாணத்தை மையமாகக் கொண்ட சோசலிச நவீனமயமாக்குதலுக்கு மாற்றப்பட வேண்டியது அவசியம்; உற்பத்திச் சக்திகளின் விரிவாக்கத்தை மிகப் பெரிய அளவு செய்வதன் மூலம் மக்களது பொருளாதாய மற்றும் கலாச்சார வாழ்வை சிறிது சிறிதாக அபிவிருத்தி செய்வது அவசியம். இறுதி ஆய்வில் கடந்த காலத்தில் நாம் செய்த தவறு இந்த யுத்த தந்திர ரீதியான மாற்றத்தைச் செய்வதில் அழுந்தி நிற்கத் தவறி விட்டோம்." (சீ. பொ. க. ஆறாவது பிளீன அறிக்கை, ஃபிரான்டியர் தொகுதி 14, எண் 4, பக். 8).

என்று கூறும் லியு-தெங் கும்பல் அந்நியத்தலையீடுவந்தாலொழிய இதிலிருந்து விலகக் கூடாது என்றும், அப்பொழுதும் யுத்தகாலப் பொருளுற்பத்தியிலேயே குவிமையம் கிடத்தப்படவேண்டும் என்றும் வாதாடுகிறது.

உற்பத்திச் சக்திகளின் விரிவாக்கத்தைப் பெரிய அளவுக்கு சாதிப்பதினால் மட்டுமே மக்களது பொருளாதாய மற்றும் கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது; வர்க்கப் போராட்டத்தைத் தொடர்வது, அதையே கேந்திரமான கண்ணியாகப் பற்றுவதும் உற்பத்திச் சக்திகளின் விரிவாக்கத்திற்கு தடையானது அல்ல என்பதை லியு-தெங் கும்பல் மறுக்கிறது. சோசலிசப் புரட்சியிலும் சோசலிச நிர்மாணத்திலும் பாட்டாளி வர்க்கத்தின் கடமை புரட்சியை இறுகப்பற்றுவதும் உற்பத்தியைப் பெருக்குவதும் தேசியப் பொருளாதாரத்தைமுன் தள்ளுவது மாகும். அதாவது சோசலிசத் தன்மையில் ஊன்றி நிற்கும் அதேசமயம் சோசலிச நிர்மாணத்துக்கான உற்பத்திச்சக்திகளை வளர்த்தெடுப்பதைத் துரிதப்படுத்துவதானது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான பொருளாதார அடித்தளத்தை மேலும் வலுவூட்டுவதற்கும், முதலாளித்துவ சக்திகளை முற்றாக முறியடிப்பதற்குமான தேவைகளை அளிக்கிறது. சோசலிச நாட்டின் தேசியப் பாதுகாப்புத் திறனை அதிகரித்து ஏகாதிபத்தியம் அல்லது சமூக ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பிற்கெதிரான



படிப்பகம்

www.padippakam.com

தயாரிப்புக்கான தேவைகளை அளிக்கிறது. பரந்துபட்ட மக்களின் பொருளாதாய மற்றும் கலாச்சாரத் தேவைகளைப் படிப்படியாக பூர்த்தி செய்கிறது. இவை மட்டுமல்ல நீண்ட காலப்போக்கில் கிராமத்திற்கும் நகரத்திற்குமிடையிலான, தொழிலுக்கும் விவசாயத்திற்குமிடையிலான மற்றும் மூளை உழைப்பிற்கும் உடலுழைப்பிற்குமிடையிலான வேறுபாடுகளைச் சிறுகச் சிறுக களைந்து கம்யூனிச சமுதாயத்தினுடைய மாற்றத்திற்கான பொருளாதாயத் தேவைகளைத் தோற்றுவிக்கிறது. ஆனால் லியு - தெங் எதிர்ப்புரட்சி திரிபுவாதக் கும்பல் வாதிடுவது போல உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதும் பொருளாதாய நிலைமைகளை உருவாக்குவதும் மட்டுமே புரட்சியின், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இலட்சியமாகுமா ? இல்லை.

" ஒரு பலம் வாய்ந்த சோசலிச நாட்டைக் கட்டியமைப்பதில் முப்பெரும் புரட்சிகர இயக்கங்களாக வர்க்கப் போராட்டமும் உற்பத்தி மற்றும் விஞ்ஞான பரிசோதனைக்கான போராட்டமும் திகழ்கின்றன " என்றார் மாவோ. " கம்யூனிஸ்டுகள் அதிகாரவர்க்கத் தன்மை, திரிபுவாதம் மற்றும் வரட்டுக் கோட்பாட்டுவாதம் ஆகியவற்றுக்கு பலியாவது என்பதிலிருந்து விடுபட்டவர்களாக இருக்கவும், எப்பொழுதும் வெல்லப்பட முடியாதவர்களாக இருக்கவும் இந்த இயக்கங்கள் நிச்சயமான உத்திரவாதமளிக்கின்றன. பாட்டாளி வர்க்கம் பரந்துபட்ட உழைக்கும் மக்களுடன் ஐக்கியப்படவும், ஒரு ஜனநாயக சர்வாதிகாரத்தை அடையவும் இவை ஒரு நம்பகமான உத்திரவாதமாகும் " (5-வது தேசிய மக்கள் காங்கிரசு அறிக்கை, பக். 182)

இம்முப்பெரும் புரட்சிகர இயக்கங்களையும் கூட சமமுக்கியத்துவமளிப்பது என்கிற முறையில் எழுபதுகளின் மத்தியில் தெங் சியௌ பிங் கும்பல் கலவைவாதத்தை முன்வைத்தது. அதன் மூலம் வர்க்கப் போராட்டமே கேந்திரமான கண்ணி என்பதை மறுதலித்தது. ஆனால் பாட்டாளி வர்க்க திசை மாற்றத்தை - சோசலிசப் பாதையை உயர்த்திப் பிடித்த மாவோ 'புரட்சியை இறுகப் பற்று; உற்பத்தியைப் பெருக்கு' என்ற முழக்கத்தில் சோசலிசப் புரட்சியையும் சோசலிச நிர்மாணத்தையும் இணைத்தார்.

வர்க்கப் போராட்டம், உற்பத்தி மற்றும் விஞ்ஞான பரிசோதனைக்கான போராட்டம் ஆகிய முப்பெரும் இயக்கங்களை



படிப்பகம்

www.padippakam.com

ஏககாலத்தில் வலியுறுத்தி அமுலாக்க வேண்டும். உற்பத்தி மற்றும் விஞ்ஞான பரிசோதனைக்கான போராட்டம் ஆகிய இரு இயக்கங்களையும் நடத்தாமல் வெறுமனே வர்க்கப் போராட்டத்தை மட்டுமே தொடர்வது உண்மையில் புரட்சியை யும் நிர்மாணத்தையும் புறக்கணிப்பதும் வெற்றுச் சவடாலும் கட்சி மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் பாதையைப் பற்றி நிற்காததும் ஆகும். அதே போன்று வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தாது உற்பத்தி மற்றும் விஞ்ஞான பரிசோதனைக்கானப் போராட்டத்தை நடத்துவது பின்னிரண்டின் வெற்றிக்கு இட்டுச் செல்லாதது மட்டுமல்ல, சோசலிச திசை மார்க்கத்தைப் பற்றி நிற்கவும், ஸ்திரத்தையும் ஐக்கியத்தையும் வளர்க்கவும், நவீனமயமாக்குதல் மற்றும் சோசலிச நிர்மாணத்துக்கான தடை களைத் துடைத்தொழிக்கவும், பரந்துபட்ட மக்களின் புரட்சிகர, ஆன்மிக, உணர்வைத் தட்டியெழுப்பவும் சாத்தியமில்லாமல் போய்விடும். முப்பெரும் புரட்சிகர இயக்கத்தையும் ஏககாலத் தில் வலியுறுத்தி அமுலாக்க வேண்டுமென்பதின் பொருள் அவை மூன்றும் சமமான முக்கியத்துவமுடையன என்பதாகாது; மூன் றையும் கேந்திரமான கண்ணிகளாக கருதுவதாகாது; இரண்டு வகைகளிலும் வர்க்கப் போராட்டமே கேந்திரமான கண்ணியாக இருக்கிறது.

அதாவது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப் படுத்துவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின், புரட்சியின் அடிப்படையிலான பணிகளில் ஒன்றாக இருக்கிறது என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது உற்பத்திச் சக்திகளை மிக மிகப் புரட்சிகரமான காரணியாகும்; உற்பத்திச் சக்திகளிலும் உழைப்புச் சக்தியைப் பெற்றுள்ள ஜீவிதமான மக்கள் தான் பிர தானமான, அதிபுரட்சிகரமான காரணியாகும்; எனவே, உற் பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது பரந்துபட்ட மக்களைச் சார்ந்து நிற்பதின் மூலமே சாத்தியம். அதை எவ் வாறு சாதிப்பது? பொருளாதாய ஊக்கமளிப்பின் மூலமா, அரசியல், சித்தாந்த, ஆன்மீக ஊக்கமளிப்பின் மூலமா? பரந்துபட்ட மக்கள் மீது பூரண நம்பிக்கை வைத்து, புரட்சியின் மீதான அவர்களது பொறுப்புணர்ச்சியை மதிப்பது, அவர்களது உணர்வைப் பகிர்ந்து விமர்சனங்களுக்கு முக்கியத்துவமளிப்பது; யாவற்றிற்கும் மேலாக சோசலிச ஆர்வத்தையும் முன் முயற்சி யையும் பாதுகாத்து வளர்க்க வேண்டும். உற்பத்திச் சக்தி களின் பெருக்கத்திற்கான கொள்கை, அரசியல், சித்தாந்தப்



படிப்பகம்

www.padippakam.com

போதனையை ஆணையில் வைப்பதும் அதை ஆதிக்கத்திலும்
தலைமையிலும் வைப்பதும் அவசியமாகும். பாட்டாளி வர்க்க
அரசியலுக்குப் பதிலாக போனசு மற்றும் பிற பொருளாதாய ஊக்க
மளிப்புகளை ஆணையில் வைப்பதை எதிர்க்க வேண்டும். முழு
மையானதாகவும் நுணுக்கமானதாகவும் நமது அரசியல்,
சித்தாந்தப் பணியைத் தொடர்வதன் மூலம் உழைக்கும் மக்க
ளின் அரசியல் உணர்வை உயர்த்துவதைப் பேணுவதோடு
உழைப்பின் பால் கம்யூனிசப் பாங்கைக் கற்பதற்கு அவர்களுக்கு
உதவ வேண்டும். கடின உழைப்பையும் மரணத்தையும் கண்டு
அஞ்சாமை, புகழ் மற்றும் சுயநலனை வெறுத்தொதுக்குவது,
ஒருவரது திறமையை சோசலிசத்திற்கு மேலும் மேலும் அதிகமாக
உவந்தளிப்பது என்ற வேட்கையைப் பெறுவதற்கும் உதவ
வேண்டும். உழைப்புத் திறனுக்கு உரிய பொருளாதாய
ஊக்கமளிப்பது அவசியம். ஆனால் தனிச் சிறப்பான பணி
களுக்குப் பொருத்தமான பரிசுகளும் போற்றுதல்களும் என்ற
கொள்கைக்கேற்ப தார்மீக ஊக்கமளிப்புகளையும் பொரு
ளாதாய பரிசுகளையும் இணைக்க வேண்டும். ஆனால் எப்
போதுமே தார்மீக ஊக்கமளிப்புக்கானவற்றிற்கும் பாட்டாளி
வர்க்க அரசியலை ஆணையில் வைப்பதற்குமே அழுத்தம்
அளிக்க வேண்டும். எனவே, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்
சியைத் துரிதப்படுத்துவதற்கும் சோசலிசப் புரட்சிகர உத்
வேகத்தையும் சோசலிச திசை மார்க்கத்தையும் தக்க வைப்ப
தற்கு என்கிற முறையில் வர்க்கப் போராட்டம் கேந்திரமான
கண்ணியாக இருக்கிறது.

வேறொரு கோணத்திலிருந்து பார்ட்போம். உற்பத்திச்
சக்திகளின் விரிவாக்கம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ்
மேல் கட்டுமானம் மற்றும் உற்பத்தி உறவுகள் ஆகிய துறை
களில் புரட்சியைத் தொடரும்படி நிர்ப்பந்திக்கிறது. பொருளாதார
அடித்தளத்திற்கேற்ப மேற்கட்டுமானத்திலும், உற்பத்திச் சக்தி
களின் வளர்ச்சிக்குப் பொருத்தமாக உற்பத்தி உறவுகளையும்
புரட்சிகரமாக மாற்றியமைக்க வேண்டியுள்ளது. மேற்கட்டு
மானத்திலும் உற்பத்தி உறவுகளிலுமான மாற்றங்கள் மீண்டும்
உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் புதிய வழிகளைத் திறந்து
விடுகின்றன. இந்த மாற்றங்கள் அனைத்திலும் கம்யூனிச திசை
மார்க்கத்தில் ஊன்றி நிற்க வேண்டுமானால் வர்க்கப் போராட்
டத்தைக் கேந்திரமான கண்ணியாக இறுகப் பற்றிக் கொள்ள
வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

எனவே, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது மற்றும் அவற்றுக்குப் பொருத்தமாக மேல்கட்டுமானம் மற்றும் உற்பத்தி உறவுகளில் மாற்றம் செய்வது ஆகிய இரு கோணங்களிலிருந்து அணுகும்போதும் கம்யூனிச திசை மார்க்கத்திலிருந்து பிறழாத எவரும் வர்க்கப் போராட்டமே கேந்திரமான கண்ணியாக இருப்பதைக் காண முடியும். வெறுமனே உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவது, அவற்றுக்குப் பொருத்தமாக மேல்கட்டுமானம் மற்றும் உற்பத்தி உறவுகளில் மாற்றம் செய்வது, மக்களின் பொருளாதாய மற்றும் கலாச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்று ஒன்று எப்போதுமே இருக்க முடியாது. இவற்றை எந்த திசை மார்க்கத்தில், எந்தப் போக்கில், எந்தப்பாதையில், எந்த வர்க்க நோக்கில் சாதிப்பது என்பதற்கான இரு போக்குகளுக்கிடையிலான போராட்டம், முதலாளித்துவம் மற்றும் கம்யூனிசம் ஆகிய இரு பாதைகளுக்கிடையிலான போராட்டம், தொழிலாளர் மற்றும் முதலாளி ஆகிய இரு வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் மற்றும் கல்வி-கலாச்சாரம் ஆகிய சகல துறைகளிலும் அவசியமாக வர்க்கப் போராட்டமாகவே வெடிக்கின்றது. அவற்றின் துறைகளும் வடிவங்களும் மட்டுமே வேறுவேறானவை; சாராம்சம் வர்க்கப் போராட்டமே. முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிச சமுதாய அமைப்பிற்கு மாறிச் செல்லும் சோசலிச காலகட்டத்தில் அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி-கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் கம்யூனிச அம்சங்களை விரிவடையச் செய்து, உறுதிப்படுத்தி, வளர்த்தெடுத்து, பலப்படுத்தி முதலாளித்துவ அம்சங்களை முற்றாக துடைத்தொழிப்பதற்கும், இறுதி இலட்சியமான கம்யூனிசத்தை அடைவதற்கும் பாட்டாளிவர்க்கம் இடையராது போராடிக் கொண்டிருப்பதைப் போலவே அம்முயற்சிகளை முறியடிக்கவும் முதலாளித்துவத்தை மீட்கவும் பழைய, புதிய முதலாளித்துவ வர்க்கம் பன்மடங்கு ஆவேசத்துடன் எதிர்போராட்டத்தை நடத்திக் கொண்டிருப்பதால் நீண்ட, நெடியதான இக்காலகட்டம் முழுவதும் வர்க்கப் போராட்டம் வெவ்வேறு படிநிலைகளில், வெவ்வேறு துறைகளில் பிரதான வடிவமெடுக்கிறது. ஆனால் சோசலிச காலகட்டம் முழுவதும் வர்க்கப் போராட்டம் கேந்திரமான கண்ணியாகவே இருக்கிறது. இதை மறப்பதும் மறுப்பதும் கம்யூனிச திசை மார்க்கத்தை விட்டு, கம்யூனிசப் பாதையை விட்டு பிறழ்வதாகும்; முதலாளித்துவ திசைமார்க்கத்தை, முதலாளித்துவப் பாதையை மேற்கொள்வதாகும்.



படிப்பகம்

www.padippakam.com

லியு செளசி வர்க்கங்களும் வர்க்க முரண்பாடுகளும்
வர்க்கப் போராட்டமும் தொடர்வதையே மறுத்தார். அவருடைய
விசுவாசமான சீடராகிய தெங் சியெள பிங் முதல் அரசியல் மறு
வாழ்வு பெற்றபின் அதாவது எழுட்துகளின் மத்தியில் கடடத்தன
மாக இதே கோட்பாட்டைக் கொல்லைப்புற வழியாக கடத்திவர
முயன்றார். அப்பொழுது வர்க்கப் போராட்டம், உற்டத்தி மற்றும்
விஞ்ஞான பரிசோதனைக்கான போராட்டம் ஆகிய மூன்றையும்
கேந்திரமான கண்ணியாகக் கொள்ளும் கலவை வாதத்தை முன்
வைத்தார். இக் கலவை வாதக் கோட்பாட்டை நியாயப்படுத்த
தனது அபகீர்த்தி வாய்ந்த "கருப்புப் பூனையாக இருந்தால்
என்ன, வெள்ளைப் பூனையாக இருந்தால் என்ன, எலி பிடித்தால்
சரி" என்ற பிதற்றலை உளறினார். இவற்றின் மூலம் வர்க்கப்
போராட்டம் கேந்திரமான கண்ணி என்டதைபட்டுமல்ல வர்க்கப்
போராட்டத்தையே மறுத்தார். தற்போது 'வர்க்கப் போரர்ட்டம்
நீடிக்கிறது' என்ற கோட்பாட்டை சொல்லளவில் ஏற்றுக் கொண்
டாலும் கட்சி மற்றும் அரசினுடைய வேலையின் குவிமையம்
பொருளாதாரத் துறையில் செலுத்தப்படும் போது வர்க்கப்
போராட்டம் பிரதான முரண்பாடாக இனியும் இல்லை என்கிறது
தெங் கும்பல்; கேந்திரமான கண்ணியாக வர்க்கப் போராட்
டத்தைக் கொள்வதை நிராகரிக்கிறது. அரசியல் துறையில்
வர்க்கப் போராட்டம் வெடிக்கும்போது மட்டுமே, அது நாடு
தழுவிய, பெரும் அளவினதாக, கொந்தளிப்பானதாக வடிவ
மெடுக்கும்போது மட்டுமே பிரதானமானது, கேந்திரமானது என்
கிறது. கட்சி மற்றும் அரசினுடைய வேலையின் குவிமையம் எத்
துறையில் செலுத்தப்படினும் அதன் சாராம்சம் அத்துறையில்
பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும்,
கம்யூனிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான
வர்க்கப் போராட்டமாக வெளிப்படுகிறது என்பதும், ஒரு துறை
யிலேயே கட்சி மற்றும் அரசின் வேலையின் குவிமையம் நீடிக்
காது; அதன் வளர்ச்சிக்கேற்ப சோசலிச காலகட்டம் முழுவ
தும் வெவ்வேறு படி நிலைகளில், வெவ்வேறு துறைகளில்
மையம் கொள்ளும் என்பதும், எவ்வாறாயினும் வர்க்கப்போராட்
டமே கேந்திரமான கண்ணியாக அவற்றிலெல்லாம் வெளிப்படு
கிறது என்பதும் அடிப்படை மார்க்சிய – லெனினிய விதியாகும்.

சகல துறைகளிலும் நடக்கும் வர்க்கப் போராட்டத்தின்
சாராம்சம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கெட்டிப்படுத்தி,
விரிவுபடுத்தி, பலப்படுத்துவதும் இறுதியில் உலர்ந்து உதிர்



படிப்பகம்

www.padippakam.com

வதும் என்ற மாறிச் செல்லும் காலகட்டத்தினூடாகச்சென்று கம்யூனிசத்தை நிலை நாட்டுவதற்காக பாட்டாளி வர்க்கமும் அந்தப் புரட்சிகரப் போக்கை முறியடித்து முதலாளித்துவ சர்வாதிகாரத்தை மீட்பதற்காக முதலாளித்துவ வர்க்கமும் நடத்தும் போராட்டத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் தக்க வைத்துக் கொள்வதையும், அதற்கான தயாரிப்புகளையும் இலட்சியமாகக் கொண்டிருக்கின்றன என்கிற முறையில் பாட்டாளி வர்க்கக் கட்சி 'அரசியலை ஆணையில் வைக்கும்' முழக்கத்தை கருதுகிறது. ஆனால் முதலாளித்துவ மீட்சிக்காக கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, அதன் உண்மை நோக்கத்தை மூடி மறைப்பதற்காக, திசை திருப்புவதற்காக அரசு மற்றும் அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சினையே அரசியல் என்ற மார்க்சிய - லெனினிய வரையறுப்பை-யே லியு தெங் கும்பல் முற்றாக மறுக்கிறது. ஒரு முறை அரசியல் அதிகாரத்தை பாட்டாளி வர்க்கம் கைப்பற்றியவுடன், சோசலிச உடைமை மாற்றத்தை சாதித்தவுடன் கட்சி மற்றும் அரசினுடைய வேலையின் குவிமையம் பொருளாதார நிர்மாணமாக மாறி விடுவதாகக் கூறி 'வர்க்கப் போராட்டம் கேந்திரமான கண்ணி' மற்றும் அரசியலை ஆணையில் வைப்பது ஆகிய கோட்பாடுகளை லியு - தெங் கும்பல் எதிர்க்கிறது. இவ்வெதிர்ப் புரட்சி திரிபுவாதத்தை நியாயப்படுத்த அவர்களது மூதாதையர்களான ட்ராட்ஸ்கியும் புகாரினும் இன்னும் பிற திரிபுவாதிகளும் ஏந்திய பொருளாதாயவாதமாகிய முனை மழுங்கிய கத்தியை லியு - தெங் கும்பல் ஏந்தி வருகிறது. வெகுகாலத்திற்கு முன்பே மார்க்சிய - லெனினிய ஆசான்களால் பொருளாதார வாதத்தை மறுத்துரைக்க முன்வைக்கப்பட்ட வாதங்களின் ஒரு பகுதியை மட்டும் கொச்சையாக, கபடமாக மேற்கோள் காட்டுகிறது தெங் கும்பல்.

'பொருளாதாரத்தின் ஒன்று செறிந்த சித்தரிப்பே அரசியல்' என்ற ஒரு பகுதி மேற்கோளை மட்டும் கொச்சையாக வியாக்கியானம் செய்து பொருளாதாரமே பிரதானமானது என்றும், பொருளாதாரமே அரசியல் என்றும், பொருளாதார நிர்மாணமே மிகப்பெரிய அரசியல் என்றும், பொருளாதாரப் பணிகளை நிறைவேற்றுவதே அரசியல் பணிகளை நிறைவேற்றுவதாகும் என்றும் திரித்துப் புரட்டுகிறது தெங் கும்பல்.

" இது கேட்கப்படுகிறது; இவ்வளவு நாட்களாக வர்க்கப் போராட்டத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தீர்கள்; நான்கு நவீனமயமாக்குதலை செய்வது தான் முகப்பெரிய அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

என்று இட்பொழுது ஏன் சொல்கிறீர்கள் ? மிகப்பெரிய அரசியல் வர்க்கப் போராட்டம் மற்றும் அரசியல் இயக்கமாகத்தான் இருக்க முடியுமென்று இந்த ஆட்கள் உணர்கிறார்கள். நான்கு நவீன மயமாக்குதல் பிரதானமாக பொருளாதார நிர்மாணத்தோடு சம்பந்தப்பட்டவை, அட்டடியானால் அவை மிகப் பெரிய அரசியல் என்று எட்டடிச் சொல்ல முடியும் ? ''

என்று தானே கேள்வி எழுப்பி தெங் கும்பல் சொல்கிறது :

'' அரசியலின் பொருள் என்ன ? மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் ஒரு கறாரான இரத்தினச் சுருக்கமான புரிதலின்படி பொருளாதாரத்தின் ஒன்று செறிந்த வெளிப்பாடே அரசியல் ஆகும். ஒரு வர்க்க சமுதாயத்தில், பொருளாதார நலன்கள். பல்வேறு வர்க்கங்களின் மிகவும் அடிப்படையான நலன்கள். ஒவ்வொரு வர்க்கமும் அதன் சொந்த பொருளாதார நலன்களைப் பேணுவதில் தவிர்க்கவியலாமல் பிற வர்க்கங்களுக்கெதிராக கடும் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுகிறது. பொருளாதாரம் அதன் ஒன்று செறிந்த வெளிப்பாடாகத் தோன்றும் மிக முக்கியமான வடிவமாக வர்க்கப் போராட்டம் மாறுகிறது. இதனால் தான் லெனின் மற்றும் தோழர் மாசேதுங் இருவரும் பகைமையான வர்க்கங்களுக்கெதிரான போராட்டத்தைப் பற்றி பேசும்போது அரசியல் என்பது வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம் என்றனர்.''

என்ற வரையறுப்பை தனது எதிர்ப்புரட்சி திரிபுவாதத்திற்கு பின் வருமாறு திரித்துப் புரட்டுகிறது தெங் கும்பல்.

'' ஆனால் அவர்கள் வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டத்தை குறிப்பாக பாட்டாளி வர்க்கம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு அரசியலின் தனியான மற்றும் மொத்தமான உள்ளடக்கமாகக் கருதவில்லை.''

அதற்கு ஆதாரமாக பின் வரும் லெனினது மேற்கோளை தெங் கும்பல் காட்டுகிறது.

'' 1920 - ன் இறுதியை நெருங்கும்போது, அவர்களது உள் மற்றும் வெளி வர்க்க எதிரிகளுக்கு எதிரான சோவியத் மக்களின் இராணுவப் போராட்டம் ஒரு முடிவை அடையும், 'போராட்டத்தின் குவிமையம் சிறுகச் சிறுக பொருளாதாரக்



படிப்பகம்

www.padippakam.com

கொள்கைக்கு மாற்றப்பட வேண்டிய'தின் அவசியத்தை லெனின் நிச்சயமாக சுட்டிக் காட்டினார், அவரது கருத்தின் படி 'மேலும் கூடுதலான கூடைகள் தானியத்தை சேர்க்கும் வகையில், மேலும் கூடுதலான கூடைகள் நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் வகையில், இந்தக் கூடுதலான தானியத்தையும் நிலக்கரியையும் பயன்படுத்தி எவ்வளவு சிறந்த முறையில் பஞ்சம் பட்டினியைத் தவிர்ப்பது என்கிற வகையில் பொருளாதார ரீதியில் அரசை எப்படி வளர்ப்பது என்பது நமது தற்போதைய பிரதானக் கொள்கையாக இருக்க வேண்டும். இது நமது கொள்கை. (இங்கும் கூட அவற்றிற்காக அரசை வளர்ப்பதைத் தான் லெனின் குறிப்பிடுகிறார் – த. மா. அ. க.) இந்த நோக்கத்திற்காக நமது கிளர்ச்சி மற்றும் பிரச்சாரமெல்லாம் குவிக்கப்பட வேண்டும். பேச்சு ஜாலங்களையெல்லாம் குறைக்க வேண்டும். ஏனெனில் உழைக்கும் மக்களை அழகான வார்த்தைகளால் நீங்கள் திருப்திப்படுத்த முடியாது.' இது தெட்டத் தெளிவாகவும் நேரிடையாகவும் விஷயத்தை வைப்பதாகும் ...... ஒரு நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் இன்னும் வர்க்கப் போராட்டம் நீடிக்கிறது. ஆனால் பாட்டாளி வர்க்கத்தினுடைய அடிப்படைப் பொருளாதார நலன்களின் ஒன்று செறிந்த வெளிப்பாடாகிய சோசலிச நிர்மாணத்தை வளர்ப்பது நாட்டின் முக்கியமான, பிரதானமான அரசியல் என்று மிகத் தெளிவான சொற்களில் அவர் (லெனின்) சொன்னார்''

(பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் : 17, பக்10–11)

ஆனால் தெங் கும்பல் காட்டியிருக்கும் மேற்கோளில் எங்கேயுமே பொருளாதார நிர்மாணத்தை அரசியல் என்று வரையறுக்கும் பொருளில் லெனின் கூறவேயில்லை; பொருளாதார நிர்மாணத்தின் முக்கியத்துவத்தை மட்டுமே வலியுறுத்தியிருக்கிறார். ஆனால் அரசியலிலும் டார்க்க பொருளாதாரம் சோசலிச காலகட்டத்திலும் கூட முன்னிலை அல்லது மேல்நிலை பெறுகிறது என்று லெனின் கூறவேயில்லை. 'அரசியல் என்பது பொருளாதாரத்தின் ஒன்று செறிந்த வெளிப்பாடு' என்ற மேற்கோளின் அடுத்த வரியைப் பார்த்தாலே இது விளங்கும். கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்றிய நவீன திருத்தல்வாத குருஷ்சேவ் – பிரஷ்நேவ் கும்பல் அதன் சீனத்து சகபாடியான லியு - தெங் கும்பலைப் போலவே



படிப்பகம்

www.padippakam.com

"சோசலிசத்தின் கீழ் அரசியலின் மீது பொருளாதாரம் பிரதான மாகிறது" என்றும் கம்யூனிச நிர்மாண காலகட்டம் முழுவதும் பொருளாதார மற்றும் உற்பத்திப் பிரச்சினைகளை முன்னணிக்கு தள்ளப்பட வேண்டும்; அவற்றை நமது வேலையின் மூலைக் கல்லாக வைக்க வேண்டும் என்றும் கூறிய போது சீனப் பொதுவுடமைக் கட்சி பின் வருமாறு விமர்சித்தது.

"குருஷ்சேவ் சொன்னார்: 'நாங்கள் நேரிடையாக சொல்கிறோம், கட்சி உறுப்புக்களின் பணிகளில் பிரதானமான விஷயம் உற்பத்தியாகும்' மேலும் விஷயம் என்னவென்றால் லெனின் மீது இந்தக் கண்ணோட்டத்தை இட்டுக்கட்டி அவரது நியதிகளுக்குப் பொருத்தமாக தாங்கள் செயல்படுவதாக உரிமை கொண்டாடினார்கள்,

"எனினும், சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் வரலாற்றுடன் பரிச்சியமான எவரும் அறிவர்; லெனினது கண்ணோட்டங்களுக்கு வெகு தூரம் மாறாக அவை லெனினியக் கண்ணோட்டங்களுக்கு எதிரானவை, அவை ட்ராட்ஸ்கி வைத்திருந்த கண்ணோட்டங்கள். இந்தப் பிரச்சினையின் மீது கூட ட்ராட்ஸ்கியின் ஒரு தகுதியான சீடரே குருஷ்சேவ்.

"ட்ராட்ஸ்கி மற்றும் புகாரினை விமர்சித்து லெனின் சொன்னார்: 'அரசியல் என்பது பொருளாதாரத்தின் ஒன்று செறிந்த வெளிப்பாடு —. . பொருளாதாரத்தின் மீது அரசியல் முன்னிலை பெறாமல் இருக்க முடியாது. வேறுவிதமாக வாதிடுவதன் பொருள் மார்க்சியத்தின் அரிச்சுவடியை மறப்பதாகும்.'

"அவர் தொடர்ந்தார்: ...... 'எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு (குடிமக்கள் மீது) ஒரு சரியான அரசியல் அணுகுமுறையின்றி வர்க்க ஆட்சியை நிலைநாட்ட முடியாது; **அதன் விளைவாக அதன்** சொந்த உற்பத்தி பிரச்சினையே தீர்க்க முடியாது.'' (லெனின்: மீண்டும் தொழிற்சங்கங்கள் மீது, தற்போதைய நிலைமையும் ட்ராட்ஸ்கி மற்றும் புகாரினது தவறுகளும்; சீனா விலகிப்போகிறதா? என்ற நூலில் இருந்து, பக் 81)

"நான்கு நவீனமயமாக்குதலை நிச்சயமாக வெற்றுப் பேச்சால் அடைய முடியாது. வெற்றுப் பேச்சில் நாம் திளைக்கக் கூடாது. உற்பத்தி, தொழில் முறை மற்றும் தொழில் நுட்ப சாதனைகள் வாயிலாக அரசியலுக்கு நாம் தீர்மானகர



படிப்பகம்

www.padippakam.com

மான அர்த்தமளிக்க வேண்டும் ''

சரியாகத் தொடங்குவது போல் காட்டிக் கொண்டு எவ்வளவு கீழ்த்தரமாக லியு-தெங் கும்பல் சீரழிந்து போயுள்ளது பாருங்கள் :

'' பல்வேறு அரங்குகளிலும் உள்ள மக்கள் தாம் தற்போது செய்யும் ஒவ்வொரு வகையான வேலைகளையும் நவீனமய மாக்குதல்களுக்கு சேவை செய்யும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே தான், அவை அரசியல் ரீதியில் அதி முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இதனால் பெட் ரோலியம் தொழிலில் அரசியல் என்பது மேலும் கூடுத லான எண்ணெய் எடுப்பதாகும். நிலக்கரிச் சுரங்கத்தவர் களுக்கு அரசியல் என்பது மேலும் கூடுதலான நிலக்கரி தோண்டுவதாகும் ; விவசாயிகளுக்கு மேலும் கூடுதலான நவதானியத்தை உற்பத்திச் செய்வதும், படை வீரர்களுக்கு எல்லையைக் காப்பதும், மாணவர்களுக்கு கடினப்பட்டு படிப்பதுவுமாகும். 'மேலும் அரசியல் போதனையின் விளை வுகளுக்கான ஒரே அளவுகோல் தொழிலிலும் விவசாயத் திலும் வளர்ச்சியை சாதிப்பதாகும்.' யூனிட்டுகள் மற்றும் தனி நபர்களது அரசியல் மட்டத்தை அளப்பதற்கான அளவு கோலாக உண்மையையும், யதார்த்த விளைவுகளையும் ஒருவரது வேலையையும் சோதிப்பதை விடாப்பிடியாக நடை முறைப் படுத்த வேண்டும். ''

(பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 17, பக் : 11)

இவ்வாறு அரசியல் பற்றிய வரையறுப்பையே கொச்சைப் படுத்தி அப்பட்டமான பொருளாதார வாதமாக்குகிறது லியு-தெங் கும்பல். ஆனால் அரசியல் என்பது எப்பொழுதுமே அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சினை என்கிற முறையிலேயே வர்க்கங் களுக்கிடையிலான போராட்டத்தில் வெளிப்படுகிறது என்று லெனின் போதித்தார். மேலும் குறிப்பாக அரசு பற்றிய பிரச்சி னையே அரசியல் என்றார்.

'' அரசியல் என்பது அரசு தொடர்பான விவகாரங்களில் ஈடு படுவதாகும்; அரசை வழி நடத்துவதாகும்; அரசு நடவடிக் கைகளின் வடிவமுறைகள், குறிக்கோள்கள், உள்ளடக்கம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதாகும்.'' (லெனின் : அரசு பற்றி மார்க்சியம்).

லின்பியௌ மற்றும் நால்வர் கும்பலைச் சாக்குக் காட்டி யே அவர்களது வாதங்கள் என்று கூறியே மார்க்சிய-லெனினிய-



படிப்பகம்

www.padippakam.com

மாசேதுங் நிலைப்பாடுகளை நிராகரித்து தமது எதிர்ப்புரட்சித் திரிவாதத்தை முன்தள்ள தெங் கும்பல் எத்தனிக்கிறது

"இருப்பினும் லின்பியௌ மற்றும் நால்வர் கும்பல் பொருளாதாரத்தை அரசியலற்ற ஒரு விஷயமாக அவதூறு செய்தது. பொருளாதார நிர்மானத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 'நாற்காலி அரசியலை' ஊக்குவித்தது. லெனின் சொன்னார்: 'முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தின் படி அதன் இயல்பில் பொருளாதாரத்திலிருந்து அரசியல் பிரிந்திருக்கிறது' பல்லாண்டுகளாக லின் பியௌ மற்றும் நால்வர் கும்பல் முதலாளித்துவ உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலான இந்தக் கருத்தோட்டத்தை மிகப் பெரும் அளவு விரிவுபடுத்திக் கொண்டனர்; பொருளாதாரத்திலிருந்து அரசியலை முற்றாக பிரிப்பதற்கும், அரசியலையும் பொருளாதாரத்தையும் எதிரெதிராக நிறுத்தவும் 'அரசியலுக்கு முக்கியத்துவம் அளிப்பதை'ப் பற்றியும் மற்றெல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் மேல்நிலை பெற முடியும் என்றும் பேசினார்கள்"

லின் பியௌ மற்றும் நால்வர் கும்பலுக்கெதிரான போராட்டத் தீயில் குளிர்காயும், அதன் நிழலில் ஒளிந்து நிற்கும் ஹியு - தெங் கும்பல் 'ஆட்டைக் கடித்து மாட்டைக்கடித்து மனிதனையே கடிக்கும்' அளவுக்கு மாறி மாசேதுங்கே இந்த 'இடது' தீவிர வாதத் தவறிழைத்ததாக சீ.பொ.க. - யின் ஆறாவது பிளீனக் கூட்டத்தொடரில் 'சீனப் பொதுவுடமைக் கட்சியின் வரலாற்றுப் பிரச்சினைகள்' என்ற தொகுப்பில் குற்றஞ் சாட்டுகிறது.

"அவரது (மாசேதுங்கினது) பிந்திய ஆண்டுகளில், பிரச்சினைகளில் சரியான ஓர் ஆய்வை செய்வதற்கு வெகுதூரம் மாறாக 'கலாச்சாரப் புரட்சியின் போது' அவர் சரியையும் தவறையும், எதிரியோடு மக்களையும் போட்டு குழப்பி விட்டார்; பாரதூரமான தவறிழைக்கும் அதே சமயம் அவர் மீண்டும் மீண்டும் கட்சி முழுவதையும் மார்க்சு, எங்கல்சு மற்றும் லெனினது படைப்புகளை ஊன்றிப் படிக்கும்படி வலியுறுத்தினார்; அவரது கோட்பாடும் நடைமுறையும் மார்க்சிய வாதமானது என்றும், அவை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கெட்டிப்படுத்த அவசியமானவை என்றும் கற்பனை செய்து கொண்டார். இங்கு தான் அவரது சோகமே கப்பியிருக்கிறது." (சீ. பொ. க. 11 வது மத்தியக்கமிட்டியின் ஆறாவது பிளீனத் தொடர் அறிக்கை... ஃபிரான்டியர், தொகுதி 14, எண் 4, பக். 6)



படிப்பகம்

www.padippakam.com

அரசியலுக்கும் பொருளாதாரத்துக்குமிடையிலான உறவு குறித்து லியு-தெங் கும்பல் தூற்றுவது போல் கலாச்சாரப் புரட்சியின்போது தவறிழைக்கப்பட்டதா ? இல்லவே இல்லை. முற்றிலும் சரியான மார்க்சிய - லெனினிய அணுகுமுறையே கைக்கொள்ளப்பட்டது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின்போது முன் வைக்கப்பட்ட "புரட்சியை இறுகப் பற்று; உற்பத்தியை முன்னேற்று" என்ற மிக மிகச் சரியான கொள்கை புரட்சிக்கும் உற்பத்திக்கும் இடையிலான, உணர்வுக்கும் பொருளுக்கும் இடையிலான, மேல் கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடையிலான, உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான உறவு முறையை மிகச் சரியாக விளக்குகிறது. மேலும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி குறித்து கொள்கையளிப்பான மத்தியக் கமிட்டியின் 16-அம்சத் தீர்மானம் கூறுகிறது.

"மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் நோக்கம் மக்களது சித்தாந்தத்தை புரட்சிமயமாக்குவதாகும்; அதன் விளைவாக வேலையின் எல்லா அரங்கங்களிலும் மிகப் பெரிய, மிக துரிதமான, மிகச் சிறந்த மற்றும் கூடுதலான பொருளாதார பலன்களைச் சாதிப்பதாகும். பரந்துபட்ட மக்கள் பூரணமாக தட்டியெழுப்பப்பட்டால், பொருத்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டால், ஒன்று மற்றொன்றை ஊறுபடுத்தாமல் கலாச்சாரப் புரட்சி, உற்பத்தி இரண்டையுமே நடத்த முடியும்; அதே சமயம் நமது வேலை அனைத்திலும் அதி உயர் அதிகாரத்தை உத்திரவாதம் செய்யமுடியும்.

"நமது நாட்டில் சமூக பொருளுற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு ஒரு பலம் வாய்ந்த உந்து சக்தியாக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சி இருக்கிறது. மகத்தான கலாச்சாரப் புரட்சியை உற்பத்திக்கு எதிராக நிறுத்தும் எந்தக் கருத்தும் பிழையானது." (லிபரேஷன், தொகுதி-1, எண்: 12, பக்-44, சீ.பொ.க-யின் எட்டாவது மத்தியக் கமிட்டியின் 11-வது பிளீன அறிக்கையிலிருந்து)

இவ்வாறு மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி நாட்டின் சமூக பொருளுற்பத்தி சக்திகளை வளர்ப்பதற்கான ஒரு பலம் வாய்ந்த உந்து சக்தியாகவே கருதப்பட்டது; உற்பத்திக்குத்



படிப்பகம்

www.padippakam.com

தடையானதாக அல்ல; ஒன்பதாவது, பத்தாவது மற்றும் பதினோராவது கட்சிக் காங்கிரசுகள் மற்றும் நான்காவது, ஐந்தாவது மக்கள் தேசிய காங்கிரசுகள் மற்றும் பிளீனக் கூட்டத் தொடர்கள், திட்டம் வகுக்கும் மாநாடுகளின் வேலை அறிக்கைகளில் மாபெரும் சாதனைகளை அனைத்து உற்பத்தித் துறைகளிலும் சாதித்ததாகவே சௌ என் லாயை பிரதமராகக் கொண்ட அமைச்சரவை அறிவித்து வந்திருக்கிறது.

"நாம் மேற்கட்டுமானத்தில் புரட்சி செய்ய தவறினால், விவசாயிகள் மற்றும் தொழிலாளிகளாகிய பரந்துபட்ட மக்களைத் தட்டியெழுப்பத் தவறினால், திருத்தல்வாதப் பாதையை விமரிசிக்கத் தவறினால் கையளவேயான ஒடுகாலிகளை, எதிரி உளவாளிகளை, அதிகாரத்திலுள்ள முதலாளித்துவப் பாதையாளர்களை அம்பலப்படுத்தத் தவறினால், மற்றும் பாட்டாளி வர்க்கத் தலைமையை உறுதிப்படுத்தத் தவறினால் சோசலிசப் பொருளாதாரத்தை நாம் எப்படி மேலும் கெட்டிப்படுத்த முடியும், சோசலிச உற்பத்திச் சக்திகளை மேலும் எப்படி வளர்க்க முடியும்? இதன் பொருள் உற்பத்திக்கு பதிலாக புரட்சியை வைப்பதில்லை. ஆனால் உற்பத்தியின் மீது ஆணை செலுத்த, அதை முன்னேற்ற, முன்னோக்கி வழிநடத்த புரட்சியைப் பயன்படுத்துவதாகும். 'யுத்தத்திற்கெதிராக ஆயத்தமாக இரு, இயற்கை அழிவுகளுக்கெதிராக ஆயத்தமாக இரு, மக்களுக்காக எதையும் செய்' என்ற மாவோவினது மகத்தான யுத்த தந்திர கருத்தோட்டத்திற்கேற்பவும், 'விவசாயத்தை அஸ்திவாரமாகக் கொள், ஆலைத் தொழிலை வழி நடத்தும் காரணியாகக் கொள்' என்பது போன்ற சரஞ்சரமான நியதிகளோடும் 'எல்லாவகையிலும் முன் செல்வது, உயர்ந்ததை நோக்கமாகக் கொள்வது, சோசலிசத்தைக் கட்டியமைப்பதில் மிகப்பெரிய, துரிதமான, சிறந்த மற்றும் கூடுதலான விளைவுகளை சாதிப்பது' என்ற தலைவர் மாவோவின் பொதுப்பாதைக்கேற்பவும் நாம் ஆய்வு செய்ய வேண்டும்; கற்க வேண்டும். பொருளாதார முன்னணியிலான போராட்டம், விமர்சனம் மாற்றத்திற்கான கொள்கையின் பல பிரச்சினைகளை ஊக்கமாகவும் சரியாகவும் தீர்க்க வேண்டும். எல்லா தேசிய இனங்களின் மக்களது புரட்சிகர முன் முயற்சியையும், ஆக்கபூர்வமான ஆற்றலையும் முற்றாக கட்டவிழ்த்து விட வேண்டும்; புரட்சியை இறுகப் பற்ற



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும்; சக்தி வாய்ந்த முறையில் உற்பத்தியை முன்னேற்றி தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை பூர்த்தி செய்யவும், மிதமிஞ்சி பூர்த்தி செய்யவும் வேண்டும். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் மாபெரும் வெற்றி பொருளாதார முன்னணியிலும் சோசலிச நிர்மாணம் முழுவதற்குமான எமது இலட்சியத்திலும் பல புதிய முன்னேறிச் செல்லும் பாய்ச்சல்களை நிச்சயம் தொடர்ச்சியாக கொண்டு வரும்.'' (ஒன்பதாவது காங்கிரசு அறிக்கை, சீனா விலகிப் போகிறதா என்ற நூலிலிருந்து, பக். 182)

இந்தக் கொள்கையையே தொடர்ச்சியாகவும் வழுவாமலும் உறுதியாகவும் பின்பற்றி வந்திருப்பதாக மூன்று கட்சிக் காங்கிரசுகளும், இரு தேசிய மக்கள் காங்கிரசுகளும் அறிவித்திருக்கின்றன. எனவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் கோட்பாடும் சரி, வர்க்கப் போராட்டம் கேந்திரமான கண்ணி என்ற மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் கண்ணோட்டமும் சரி உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கும், சோசலிச நிர்மாணத்திற்கும் எதிரானவை அல்ல. மாறாக, அவையே மிகச் சரியான பாதையாகவும் வழி வகையாகவும் இருக்கின்றன.

சோசலிச உடமை மாற்றம் அடிப்படையில் சாதிக்கப்பட்டபின் கட்சி மற்றும் அரசின் வேலையின் குவிமையத்தை பொருளாதார நிர்மாணத்திற்கானதாக மாற்றிவிட வேண்டுமென்று கூறும் லியு - தெங் திரிபுவாதம் அதை ஒரு கடைகோடித்தனமாகவே முன் வைக்கிறது.

> "ஒரு அன்னிய எதிரியால் பெரும் அளவிலான ஆக்கிரமிப்பு என்ற நிகழ்வைத் தவிர இந்த குவிமையத்திலிருந்து நாம் எப்போதும் விலகிப் போகக் கூடாது. (அப்பொழுதும் கூட யுத்தகால நிலைமைகளின் தேவை மற்றும் அனுமதிக்கும் அளவு என்கிற முறையில் அந்த மாதிரியான பொருளாதார நிர்மாணத்தை நிறைவேற்றுவது அவசியமானதாக இருக்கும்.) பொருளாதார நிர்மாணம் — இந்த மையக் கடமைக்கு நமது கட்சியின் அனைத்து வேலைகளும் கீழ்ப்படிதலானது மற்றும் சேவை செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.'' (சீ. பொ. க., பதினோராவது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளீன அறிக்கை, ஃபிராண்டியர், தொகுதி 14, எண் 4, பக். 8).



படிப்பகம்

www.padippakam.com

இந்தத் திரிபுவாதக் கண்ணோட்டத்திலிருந்து சீனப் பொதுவுட
மைக் கட்சியின் பதினோராவது மத்தியக் கமிட்டியின் மூன்றா
வது பிளீனமும் ஐந்தாவது மக்கள் தேசிய காங்கிரசின் இரண்டா
வது பிளீனமும் பிரதான முரண்பாடு பற்றி தவறான
நிலைப்பாடு எடுத்தன :

“ நூற்றாண்டின் இறுதிக்குள் நவீனமயமாக்குதலைச் சாதிப்
பது; உற்பத்தித் திறனின் தற்போதைய மட்டத்தைத் ஒரு
நவீன தேசத்திற்குப் பொருத்தமாக உயர்த்துவது; அதன்
விளைவாக, நவீனமயமாக்குதலுக்குத் தடையாக இருக்கும்
நமது தற்போதைய உற்பத்தி உறவுகள் மற்றும் மேற்கட்டு
மானத்தின் அந்தப் பகுதிகளை மாற்றுவது; மற்றும் அதற்கு
தடைக்கல்லாக உள்ள எல்லாப் பழைய பழக்க வழக்கங்
களையும் ஒழித்துக் கட்டுவது - இவையே தற்போதைய
கட்டத்தில் நமது எல்லா மக்களும் தீர்க்கப்பட வேண்டிய
பிரதான முரண்பாடாகவும் செய்து முடிக்க வேண்டிய மையப்
பணியாகவும் அமைகின்றன.” (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22,
எண் 47, பக். 16)

அதன் பிறகு சீனப் பொதுவுடைமைக் கட்சியினுடைய
பதினோராவது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளீனம் வேறு
ஒரு பிரதான முரண்பாட்டை அறிவித்திருக்கிறது.

“ சோசலிச மாற்றம் அடிப்படையில் பூர்த்தியான பிறகு
நமது நாடு தீர்க்க வேண்டிய பிரதான முரண்பாடு மக்களது
வளரும் பொருளாதாய மற்றும் கலாச்சாரத் தேவைகளுக்கும்
சமூகப் பொருளுற்பத்தியின் பின்தங்கிய நிலைக்கும் இடையி
லானதாக இருந்திருக்கிறது.” (ஃபிராண்டியர், தொகுதி 14,
எண் 4, பக். 8).

தெங் சியெள பிங் கும்பல் தற்போது முன் வைத்திருக்கும் பிரதான
முரண்பாடு பற்றிய மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனைக்கு
விரோதமான நிலைப்பாடு அதன் குருவான லியு செள ஷி
எட்டாவது காங்கிரசிலும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்
சாரப் புரட்சிக்கு சற்று முன்னரும் முன்வைத்த நிலைப்பாட்டின்
மறுவடிவமே ஆகும்; அதாவது “ முன்னேறிய உற்பத்தி உறவு
களுக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதே
பிரதான முரண்பாடு ” என்பதன் மறுபதிப்பே ஆகும். இதன்
மூலம் லியு - தெங் கும்பல் விஷயத்தைத் தலைகீழாக புரட்டிப்
போடுகிறது. பிரதான முரண்பாடு குறித்து மாசேதுங் சிந்தனை
யின் போதனைகளை மறுக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

சோசலிச காலகட்டத்தில், குறிப்பிட்ட சமயத்தில் கட்சி மற்றும் அரசு வேலையின் குவிமையம் நவீனமயமாக்குதலும், உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதும், உற்பத்தித் திறனை உயர்த்துவதும் என்பதாலேயே அந்த சமுதாயத்தின் பிரதான முரண்பாடாக இவற்றுக்கும் இவற்றுக்கு எதிரான போக்குகளுக்கும் இடையிலானது என்று லியு-தெங் கும்பல் வாதிடுகிறது. சோசலிசத் திசை மார்க்கத்தில் ஊன்றி நிற்காமல் வெறுமனே நவீனமயமாக்குதலும், உற்பத்தி சக்திகளை வளர்ப்பதும், உற்பத்தித் திறனை உயர்த்துவதும் என்பது தன்னியல்பாகவே முதலாளித்துவ திசை மார்க்கத்திற்குக் கொண்டு சென்று விடும். அது மட்டுமல்ல சோசலிச திசை மார்க்கத்தில் ஊன்றி நிற்கும் போது மட்டுமே நவீனமயமாக்குதலையும் உற்பத்தி சக்திகளை வளர்ப்பதையும் உற்பத்தித் திறனை உயர்த்துவதையும் உண்மையில் விஞ்ஞான பூர்வமாகவும் அதிவேகமாகவும் நிச்சயமாகவும் உறுதி செய்ய முடியும். மாவோ வகுத்தளித்தவாறு சோசலிச சமுதாயத்திலும் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலானதும், அடித்தளத்திற்கும் மேற்கட்டுமானத்திற்கும் இடையிலானதும் ஆகிய இரு அடிப்படை முரண்பாடுகள் நிலவுகின்றன. இவ்விரு அடிப்படை முரண்பாடுகளுமே சமுதாய ரீதியில், வர்க்க ரீதியில் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலானதாக ஒன்று செறிந்த வகையில் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. இம்முரண்பாடே அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி-கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் வெவ்வேறு வடிவங்களில் வெடிக்கிறது.

சோசலிச சமுதாயம் கொண்டிருக்கும் கம்யூனிசம், முதலாளித்துவம் ஆகிய இரு அம்சங்களில் கம்யூனிச அம்சங்களை சகல துறைகளிலும் விரிவடையச் செய்து, உறுதி செய்து, வளர்த்தெடுத்து, பலப்படுத்தி முதலாளித்துவ அம்சங்களை முற்றாக துடைத்தொழிக்கும் போக்குக்கும், அவற்றுக்கெதிராக முதலாளித்துவ அம்சங்களை சகல துறைகளிலும் மேலாண்மைக்கு கொண்டு வந்து இறுதியில் முதலாளித்துவத்தை மீட்கும் போக்குக்கும் இடையிலான போராட்டமாக இம்முரண்பாடே வெளிப்படுகிறது. அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் இவ்விரு போக்குகளும் பாட்டாளி வர்க்கம் மற்றும் முதலாளித்துவ வர்க்கம் ஆகிய இரு வர்க்கங்களின் நலன்கள் என்கிற முறையில் எதிரெதிரானவையாகவே வெளிப்படும். வர்க்க பேதமின்றி, வர்க்க சமரசமின்றி, வர்க்க முரண்பாடின்றி வெறுமனே அரசியல், பொருளாதார, சித்தாந்தம் மற்றும் கல்வி - கலாச்சார வளர்ச்சி என்ற ஒன்று சோசலிச



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயத்தில் மட்டுமல்ல எந்த வர்க்க சமுதாயத்திலும் கிடை
யாது. பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் மட்டுமே அவற்றின்
வர்க்க நலன்களுக்குத் தான் போராடுகின்றன என்பதை அப்பட்
டமாக ஒப்புக் கொள்கின்றன. பிற சமுதாய வர்க்கங்கள்
அனைத்துமே - குறிப்பாக சுரண்டும், ஒடுக்கும் வர்க்கங்கள்
அனைத்துமே — இவற்றை மறைத்து பொதுவான அரசியல்,
பொருளாதார, சித்தாந்த, கல்வி - கலாச்சார வளர்ச்சி பற்றி
பசப்பி ஏமாற்ற எத்தனிக்கின்றன. சாராம்சத்தில் முதலாளித்துவ
நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் லியு - தெங் எதிர்ப்புரட்சி
திரிபுவாதக் கும்பலும் அதே போன்று வர்க்க சாராம்சத்தை,
வர்க்க முரண்பாட்டை மூடி மறைக்கிறது. எத்தகைய யாருக்
கான அரசியல், பொருளாதார, சித்தாந்த, கல்வி - கலாச்
சார வளர்ச்சி என்ற கேள்விகளை வசதியாக புறக்கணிக்கிறது.

அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி-
கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் வெடிக்கும் பாட்டாளி
வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையிலான
முரண்பாட்டின் வாழ்வும் வளர்ச்சியுமே பிற முரண்
பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதால்
அதுவே சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம்
ஆகிய நிகழ்ச்சிப்போக்கு முடியும் வரை பிரதான முரண்
பாடாக இருக்கிறது. ஆனால் லியு - தெங் எதிர்ப்புரட்சி திரிபு
வாதக் கும்பல் வர்க்க சாராம்சத்தை மறைத்துக் கொள்ளும்
பொருட்டு - அதன் மூலம் முதலாளித்துவ நலன்கள் மற்றும் முத
லாளித்துவ மீட்சியின் பொருட்டு - கம்யூனிச சமுதாயத்தை
அடைந்த பின் நிலவஇருக்கும்பிரதான முரண்பாடாகிய இயற்கைக்
கும் மனித இனத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் வெளிப்
பாடுகளுள் ஒன்றை பிரதான முரண்பாடாக சோசலிசக் கட்டத்தி
லேயே முன் வைக்கிறது. அதாவது மக்களது வளரும் பொருளா
தாய மற்றும் கலாச்சாரத் தேவைகளுக்கும் பின் தங்கிய சமூகப்
பொருளுற்பத்திச் சக்திகளுக்கும் இடையிலான பிரதான முரண்
பாடாக லியு - தெங் கும்பல் சித்தரிக்கிறது; சாராம்சத்தில் இக்
கண்ணோட்டம் பாட்டாளி வர்க்க நலன்களையும் அதன் இறுதி
இலட்சியமான கம்யூனிசத்தையுமே காட்டிக் கொடுத்து துரோக
மிழைக்கிறது.

சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய புற
வயமான விதிகளைக் கண்டறிந்து பாட்டாளி வர்க்க சர்வாதி
காரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வது என்ற முறையான,
மார்க்சிய - லெனினிய அடிப்படையிலான சோசலிசப் புரட்சி மற்
றும் சோசலிச நிர்மாணத்துக்கான கோட்பாட்டை பின்வருமாறு
மாவோ வகுத்தளித்தார் என்று சீனப் பொதுவுடைமைக் கட்சியின்



படிப்பகம்

www.padippakam.com

பதினோராவது காங்கிரசு அறிக்கை கூறுகிறது.

"மார்க்சிய கோட்பாட்டை சோசலிச சமுதாயத்திற்கு இந்தக் கோட்பாட்டில் தலைவர் மாவோ பிரயோகிக்கிறார்; அதன்படி உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதும், மேற்கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடையிலானதுமான முரண்பாடுகள் சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகள்; உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையில், மேற்கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடையில் சோசலிச சமுதாயத்தில் இணக்கமிருப்பதைப் போலவே முரண்பாடுமிருக்கிறது என்றும் சுட்டிக் காட்டினார். உற்பத்தி சக்திகளுக்கு உற்பத்தி உறவுகள் பொருத்தமாக இல்லாதவரை, பொருளாதார அடித்தளத்திற்கு மேற்கட்டுமானம் பொருத்தமாக இல்லாதவரை உற்பத்தி சக்திகள் தளையிடப்படுகின்றன. எனவே சோசலிசப் பொருளாதார அடித்தளத்திற்கு சாலவும் பொருத்தமாக மேற்கட்டுமானம் அமையும் வகையில் கலாச்சாரத்தின் எல்லாக் கிளைகளும் உள்ளடக்கிய மேற்கட்டுமானத்தின் அரங்கத்தில் புரட்சியை நடத்துவது அவசியமாகிறது; இந்த அரங்கத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை கெட்டிப்படுத்தி பலப்படுத்துவது அவசியமாகிறது; விரிவடையும் உற்பத்திச் சக்திகளுக்கு சாலவும் பொருத்தமாக உற்பத்தி உறவுகள் அமையும் வகையில் உற்பத்தி உறவுகளின் அரங்கத்தில் புரட்சியை நடத்துவது அவசியமாகிறது; சோசலிசப் பொது உடமைமுறையும் சோசலிச உற்பத்தி உறவுகளின் பிற அம்சங்களும் கெட்டிப்படுத்தப்பட்டு வளர்ப்பது அவசியமாகிறது. ஒரு வளரும் பொருளாதாய அடித்தளத்தோடு சோசலிசக் கட்டமைவை பெற்றிருக்கவும், உற்பத்திஉறவுகள் மற்றும் மேற்கட்டுமானத்தில் மாற்றத்தையும் வளர்ச்சியையும் முன்னெடுக்கவும் ஆகிய வகையில் உற்பத்திச் சக்திகளை விரைந்து வளர்க்கவும் தொழில் நுட்பப் புரட்சியை நடத்தவும், தொழில் நுட்ப முன்னேற்ற விழைவுகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகிறது. இவை அனைத்தையும் செய்வதால் மட்டுமே நாம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கெட்டிப்படுத்தி பலப்படுத்த முடியும்; சோசலிச இலக்கியத்தை தொடர்ச்சியாக முன் தள்ளிச் செல்ல முடியும்; அனைத்து வர்க்கங்களும் ஒழிக்கப்பட்ட கம்யூனிச சமுதாயத்தை இறுதியில் அடைய முடியும்" (சீ. பொ. க. வின் பதினோராவது காங்கிரசு ஆவணங்கள், பக். 29.)

சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றி மார்க்சிய - லெனினிய ஆசான்கள் வரையறுத்த புறவயமான விதிகளை



படிப்பகம்

www.padippakam.com

யும், சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்திற்கான நியதிகளையும், வழிகாட்டும் நெறிமுறைகளையும் திரித்துப் புரட்டியும், இருட்டடிப்பு செய்தும் லியு - தெங் கும்பல் தனது எதிர்ப்புரட்சி வாதத்தையும் நடவடிக்கைகளையும் நியாயப்படுத்துகின்றது.

"முதல் சோசலிச நாடு நிறுவப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேலாகவும் சீனத்தில் சோசலிச சமுதாய அமைப்பு நிறுவப்பட்டதிலிருந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகவும் கடந்து விட்டன. இருப்பினும் இந்தக் கட்டமைவு மாற்றம் மற்றும் அபிவிருத்தியினுடைய ஒருநிரந்தர நிகழ்ச்சிப்போக்காக கருத வேண்டுமா அல்லது ஒரு மாறா நிலை ஒருமையாக கருத வேண்டுமா என்பது இன்னும் பதிலிறுக்கப்படாமல் இருக்கிறது." (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 24, எண் 3, பக் - 16)

என்று தெங் கும்பல் கூறுகிறது; ஆனால் அதே சமயம் கட்சி, அரசு மற்றும் பிற நிறுவனங்களில் தமது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை முன்தள்ளவும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சியின் சரியான தீர்ப்புகளை திருத்தி மாற்றவும் வேண்டி சோசலிச சமுதாய சமுதாயம் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் நிகழ்ச்சிப்போக்கு வகைப்பட்டது என்று எங்கெல்சை மேற்கோள் காட்டுகிறது, சீனத்தில் அடிப்படை அரசியல் பொருளாதார அமைப்பு நிறுவப்பட்டபின் அவ்வப்பொழுது தேவையான குறிப்பான நிறுவனங்கள் நிறுவப்படவில்லை அல்லது அபிவிருத்தி செய்யப்படவில்லை; அவ்வாறு செய்யப்பட்டவையும் அந்நிய மாதிரிகளினானவை; சீனத்தின் சோசலிச நிர்மாண யதார்த்தத்துக்குப் பொருத்தமற்றவை என்று கூறிக்கொண்டு லியு-தெங் கும்பல் பின்வரும் மாற்றங்களை செய்கிறது. அவை புரட்சியாளர்களைக் களையெடுக்கும் நோக்கமும் உள்ளவை.

"மேலும், அணிகளை தெரிந்தெடுக்கவும், நியமிக்கவும் பரிசோதிக்கவும், மதிப்பிடவும், மேற்பார்வையிடவும், சன்மானமளிக்கவும், தண்டிக்கவும், நீக்கவும், ஓய்வளிக்கவும் சோசலிசக் குடியரசினுடைய பருண்மையான வடிவங்களும், வழிமுறைகளும் உறுப்புகளும் நிறுவனங்களும் வழிவகைகளும் உட்பட அவசரத் தேவையான பல தனிச் சிறப்பான நிறுவனங்கள் வழிவகைகளும் உட்பட அவசரத் தேவையான பல தனிச் சிறப்பான நிறுவனங்கள் ஒரு கிரமமான முறையில் நிறுவப்படவில்லை". (மேற்படி பீஜிங் ரிவ்யூ, பக். 17)

இவற்றை நிறுவும் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கான சித்தாந்த அடிப்படையாக சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப்போக்கு பற்றிய விதிகளையும், சோசலிசப்



படிப்பகம்

www.padippakam.com

புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்துக்கான நியதிகளையும் வழி காட்டும் நெறிமுறைகளையும் இதுவரை யாரும் அறியவில்லை என்கிறது வியு-தெங் கும்பல். அவற்றைக் கண்டறிந்து பிர யோகிப்பதாகப் பீற்றிக் கொள்கிறது.

''சமுதாயத்தின் விதிகளை ஒரே நாளில் மனிதன் பகுத் துணர முடியாது. தவறுகள் உட்பட பல திரும்பத் திரும்ப நிகழும் அனுபவங்களின் மூலமாக அவனது புரிதல் சிறிது சிறிதாக வளர்கிறது. இது சோசலிச சமுதாயத்தைப் பகுத் துணர்வதற்கு மிகச் சிறப்பாகப் பொருந்தும். சீனத்திலும் உலகிலும் சோசலிசத்தின் வரலாறு குறுகியது; சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கை ஆளும் விதிகளைப் பற்றிய மனிதனது அறிவு இன்னமும் சிறுபிராய நிலையில் உள்ளது. இம்மாதிரி சூழலில் நிறுவப்பட்ட ஒரு சோசலிச கட்டமைப்பு பல குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது. இது ஏனென்றால் சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய புறவயமான விதிகளோடு பொருத்தமாக சோசலிசக் கட்டமைப்பைக் கொண்டு வரும் அளவுக்கு பூரணத்துவ முடையதாக இருக்கிறது.

''மக்கள் குடியரசு நிறுவப்பட்டதிலிருந்து 30 ஆண்டு களுக்கு மேலாக சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக் கினுடைய விதிகளை புரிந்து கிரகித்துக் கொள்ளும் நமது முயற்சியில் நெளிவு அறிவுகள் மற்றும் திருப்பங்களில் இருந்து மிகப் பெரும் அளவு நாம் கற்றுக் கொண்டிருக்கிறோம். இப் பிரச்சினையில் இரண்டு பெரும் அம்சங்கள் உள்ளன: ஒன்று, புறவயமான விதிகளுக்கு போதிய மதிப்பளிக்கப்பட வில்லை; அவை தனிமனித சித்தத்தால் மிகவும் அடிக்கடி இடம் பெயர்க்கப்பட்டன; தனிமனித அதிகாரத்தால் மீறப் பட்டன; மற்றது, சமூக வாழ்வு முழுவதும் ஆதிக்கம் செலுத் தும் தனித்துவமான அதி உயர் 'விதியாக' 'வர்க்கப் போராட்டத்தைக் கேந்திரமான கண்ணியாக பற்றுவது' மற் றும் 'எதுவொன்றுக்கும் அரசியல் ஆணை செலுத்துகிறது' என்டன அமைக்கப்பட்டன. இவ்வாறு, சோசலிச அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் வளர்ச்சிப் போக்கை ஆளும் விதிகளை படித்தறிவது விட்டொழிக்கப்பட்டது. இந்த தவறான கருத்துக்கள், கண்ணோட்டங்களுக்கும், ஜன நாயகத்துக்கான நமது அரசியல் நிறுவனங்கள், பொரு ளாதார நிர்வாக மற்றும் கலாச்சார நிறுவனங்களின் பார தூரமான குறைபாடுகளுக்கும் இடையில் ஒரு நேரடி உறவு முறை இருக்கிறது. இப்பொழுது கட்சி மற்றும் அரசு நிறு



படிப்பகம்

www.padippakam.com

வனங்களில் நாம் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துகிறோம், இது புறவயமான விதிகளின் கோரிக்கைகளின் ஒரு பிரதிபலிப்பு; புறவயமான விதிகளைக் கிரகிப்பதற்கும் சோசலிச அமைப்பு முறையை குறைபாடற்றதாக்குவதற்கும் இடையிலான நமது புரிதல் முன்னேறியிருப்பதற்கு ஒரு அடையாள சின்னம். இம்மாதிரியான சீர்திருத்தம் மற்றும் குறைபாடற்றதாக்குவது மூலமாக மட்டுமே சோசலிசக் கட்டமைப்பு அதன் வீரியத்தையும் பலத்தையும் தக்கவைத்துக் கொள்ள முடியும்.'' (மேற்படி பீஜிங் ரிவ்யூ, பக்: 17-18) இவ்வாறு தனது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கு லியு-தெங் கும்பல் தத்துவார்த்த நியாயப்படுத்தலைக் கொடுக்கிறது.

லியு - தெங் கும்பல் கண்டறிந்திருக்கும் புறவயமான விதிகளும் அவற்றுக்குப் பொருத்தமான சீர்திருத்தங்களும் பூரணத்துவமாக்கலும் என்ன? சீனத்தில் சோசலிச கட்டமைப்பின் பிறப்புக் குறியீடாக நிலப்பிரபுத்துவ செல்வாக்கு சமூக, பொருளாதர, அரசியல் வாழ்வில் நீடிப்பதாகக் கூறுகிறது.

''கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான குறிப்பாக கொந்தளிப்பான பத்தாண்டுகளிலான அனுபவங்கள் நிலப்பிரபுத்துவத்தின் நச்சுத்தன்மை வாய்ந்த செல்வாக்கால் விளைந்த நாசத்தை அதிகரிக்கும் தெளிவுடன் மக்கள் காண உதவியிருக்கின்றன. அதிகாரத்தின் மிதமிஞ்சிய ஒன்றுகுவிப்பு, வேலையில் ஒரு தந்தைவழிப்பாணி, தலைமை அணிகளின் வாழ்க்கை முழுவதுமான பதவிகளும் சலுகைகளும் போன்ற நமது கட்சி மற்றும் அரசினுடைய தலைமை மற்றும் அணிவரிசை நிறுவனங்களில் உள்ள குறைபாடுகளும் அதே போன்று நமது பொருளாதார நிர்வாகத்தில் அதிகார வர்க்கப்போக்கு மற்றும் பிற குறைபாடுகளும் – இவை அனைத்தும் வெவ்வேறு அளவுகளில் நமது அமைப்பில் நிலபிரப்புத்துவ செல்வாக்குகள் ஊடுருவியுள்ளதை தெளிவாகக் காட்டுகின்றன.'' (மேற்படி பீஜிங். ரிவ்யூ. பக் 17 ) என்று கூறுகிறது லியு - தெங் கும்பல்.

பழைய சமுதாயத்தின் செல்வக்கை தொடர்ந்து முற்றாகத் துடைத்தெறிவதன் போக்கில்தான் சோசலிச சமுதாயத்தின் சீர்திருத்தத்தையும் பூரணத்துவத்தையும் கொண்டுவர முடியும் என்று லியு - தெங் கும்பல் கூறிக்கொண்டாலும், நிலப்பிரபுத்துவத்தின் செல்வாக்குகள் இன்னமும் சீனத்தில் நீடிப்பதாகவும், அவற்றைப் போக்க தாம் முயலுவதாகவும் கூறுவதெல்லாம் சோசலிசப் புரட்சியையும், சோசலிசநிர்மணாத்தையும் முன்னெடுத்துச்



படிப்பகம்

www.padippakam.com

செல்வதற்கல்ல. முதலாளித்துவ மீட்புக்கான தமது எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக நிலப்பிரபுத் துவத்தோடு ஒப்பிட்டு முதலாளித்துவ 'சாதனைகளையும் படிப்பினைகளையும்' 'முற்போக்கு அம்சங்களையும்' சகல துறைகளிலும் புகுத்துவதற்கான பீடிகையே அவை.

"சோசலிச பொது உடமை முறை மற்றும் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தினால் நிரப்பப்பட்ட பெருவீத சமுதாயமயமாக்கப்பட்ட உற்பத்தி ஆகியவற்றின் ஓர் இணைப்பானது சோசலிசப் பொருளாதாரம் என்று லெனின் கருதினார். முதலாளித்துவ பொருளாதாரத்தில் அவைகளாகவே வெளிப்படுபவையும், பெருவீத உற்பத்தியை ஸ்தாபனப்படுத்துவதில் எல்லா சமுதாயத்திலும் பயனுடையனவாக நிரூபிக்கப்பட்டவையுமான சர்வ வியாபகமான பொருளாதார விதிகளை மட்டும் பயன்படுத்தினால் போதாது; நவீன உற்பத்தியை ஸ்தாபனப்படுத்துவதிலும் நிர்வகிப்பதிலும், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை வளர்ப்பதிலும் பயன்படுத்துவதிலும் முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் மற்றும் நாடுகளின் நடைமுறை அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப் பெற்று பயன்படுத்தவும் வேண்டும். இவ்வாறு மட்டுமே சோசலிசப் பொருளாதாரம் மற்றும் தொழில் நிறுவன நிர்வாகங்களினுடைய தனிச் சிறப்பான வழிமுறைகளையும் நிறுவனங்களையும் செழுமைப் படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் முடியும்" (பேற்டிபீஜிங் ரிவ்யூ, பக். 18)

முதலாளித்துவ முறையிலான பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி, முதலாளித்துவ லாப நோக்கு, சந்தைப் பொருளாதாரம், முதலாளித்துவ பொருளாதாய ஊக்கமளிப்பால் உற்பத்திப் பெருக்கம் இவற்றின் அடிப்படையிலான முதலாளித்துவப் பொருளாதாரப் போட்டியையும் முதலாளித்துவ அராஜகத்தையுமே இங்கு முதலாளித்துவத்தின் முற்போக்கு அம்சங்களாகவும், சர்வ வியாபகமான பொருளாதார விதிகளாகவும் சீனத்தின் சோசலிசப் பொருளாதாரத்தினிடத்தில் புகுத்துவதற்கு வேண்டியே லியு - தெங் கும்பல் இந்த முகாரி பாடுகிறது. பாட்டாளி வர்க்கம் மற்றும் கட்சி அணிகள் சோசலிசப் பொருளாதாரத்தை இயக்குவதற்குப் பயிற்றுவிக்கப்படுவதற்குப் பதில் அவர்களினிடத்தில் தொழில் நுட்ப வல்லுனர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினரின் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கே பொருளாதார நிர்வாகத் திறமைக்காக முதலாளித்துவ நிறுவன நிர்வாகத்தின் முற்போக்கு அம்சங்களை கற்பதாகக் கூறுகிறது. அதே



படிப்பகம்

www.padippakam.com

போன்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினிடத்தில் பல கட்சி ஆட்சியுடைய முதலாளித்துவ ஜனநாயகத்தை மீட்பதற்காக நிலப்பிரபுத்துவ எதேச்சதிகார ஆட்சி முறையுடன் ஒப்பிட்டு அதை வானளாவப் புகழ்கிறது.

"உள்ளடக்கம், வடிவம் இரண்டிலும் முதலாளித்துவ ஜனநாயகத்தை விட சோசலிச ஜனநாயகம் மிகவும் உயர்ந்தது; ஒரு மிக விசாலமான பரிமாணத்தைக் கொண்டது. ஆனால் நிலப்பிரபுத்துவ எதேச்சதிகாரத்துடன் ஒப்பிடுகையில் முதலாளித்துவ ஜனநாயகம் ஒரு பெரும் அடி முன்னேற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முதலாளித்துவ ஜனநாயகத்தின் சில தனிச்சிறப்பான வடிவங்களும் வழிமுறைகளும் உண்மையில் முதலாளித்துவ வர்க்கத்திற்கெதிராக பாட்டாளி வர்க்கம் மற்றும்பிற உழைக்கும்மக்களின் நீண்ட நெடிய போராட்டத்தின் விளைவானவை. சோசலிச ஜனநாயகத்தை வளர்த்தெடுப்பதில் அவை உதவிகரமானவை, குறிப்பாக எதேச்சதிகார மரபுகள் ஜனநாயக மரபுகளை விடக் கூடுதலாகவுள்ள ஒரு நாட்டில், நாம் அவை அனைத்தையும் நிராகரித்து ஒதுக்கித்தள்ள ஒரு காரணமும் இல்லை. இவ்வாறு அரசு மற்றும் சமூக வாழ்வை நிர்வகிப்பதில் சில பருண்மையான அனுபவங்கள் உட்பட முதலாளித்துவ ஜனநாயகத்தின் அனுபவங்கள், வடிவங்கள் மற்றும் வழிமுறைகளில் பயனுடைய பகுதியிலிருந்து பாடங்களைப் பெற்று உய்த்துணர்வது மிக மிக முக்கியத்துவமுடையதாக இருக்கிறது" (மேற்படி பீஜிங் ரிவ்யூ, பக். 18).

முதலாளித்துவ மீட்பிற்காக அரசியல் பொருளாதாரத் துறைகளில் இவ்வளவு அப்பட்டமாக மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை நிராகரித்து முதலாளித்துவ சித்தாந்தங்களை வியு - தெங் கும்பல் உயர்த்திப் பிடிக்கிறது.

இதே போன்றுதான் சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் ஆகிய சகல துறைகளிலும் குறிப்பாக விஞ்ஞானம் மற்றும் கலைத் துறைகளிலும் முதலாளித்துவ வடிவங்களையும் வழிமுறைகளையும் அப்பட்டமாகப் புகுத்துகிறது.

"விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அரங்கங்களில் பணிபுரிபவர்கள் அறிவார்ந்த உற்பத்தி மற்றும் ஆக்கபூர்வ உழைப்பில் ஈடுபட்டுள்ளதால் பரந்துபட்ட மக்களின் அறிவாற்றலை ஒன்று சேர்க்கவும், ஜனநாயகத்தை அபிவிருத்தி செய்யவும், சுதந்திரமான விவாதங்களை நடத்தவும், சில சுயேச்சையான சிந்தனை செய்யவும் வேண்டுவது அவர்களுக்கு குறிப்பாக அவசியமாக உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ஜனநாயகமின்றி விஞ்ஞானமிருக்க முடியாது. விஞ்ஞானமும், கலாச்சாரமும் சுதந்திரமான விவாதமின்றி முன்னேற முடியாது. எவரொருவரும் அறிந்துள்ளவாறே, ஒரு விஞ்ஞானி அல்லது ஒரு கலாச்சார தொழிலாளி புறவயமான உலகின் வளர்ச்சிப் போக்கினுடைய உள் விதியை விசாரணை செய்து, புலனாய்வு செய்து வெளிப்படுத்தும் போதும், இறுதியாக உண்மையை வந்தடைந்து புரியும் முன்பு அவர் ஒரு வேதனைமிக்க பாதையினூடாக பயணம் செய்கிறார்; ஏனெனில் அகவயமான மற்றும் புறவயமான நிலைமைகளால் அவர் வரம்பிடப்படுகிறார்; ஏனெனில் சிறிது சிறிதான திறப்புகள் மற்றும் சிறிது சிறிதான வளர்ச்சிப் போக்குகள் ஆகிய ஒரு நிகழ்ச்சிப் போக்குக்குப் பிறகு மட்டுமே புறவயமான நிலைமையை அறியமுடியும்.'' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 14, பக், 9-10).

இவ்வாறு வர்க்கக் கண்ணோட்ட மில்லாத விஞ்ஞான மற்றும் கலாச்சாரக் கொள்கையையே லியு - தெங் கும்பல் முன் வைக்கிறது.

இதுவரை தொகுத்தளிக்கப்பட்டதிலிருந்து அரசியல், பொருளாதார, சித்தாந்த, கல்வி - கலாச்சார, விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப கொள்கைகளின் அடிப்படையில் காணும் போது, முதலாளித்துவ மீட்புக்கான பாதையில் அடியெடுத்து வைத்து அதே திசையில் செல்லவும் லியு - தெங் கும்பல் ஆரம்பித்து விட்டது என்பதை பின்வரும் விஷயங்களின் ஆதாரத்துடன் அறிய முடியும்.

கலை இலக்கியத் துறையில் நிலப்பிரபுத்துவ, அடிமைச் சமுதாய கலாச்சாரத்தை புதுப்பிக்கின்றது லியு - தெங் கும்பல். பேரரசர்கள், அரசர்கள் அவர்களது அரசு அதிகாரிகளை சீன வரலாற்று வளர்ச்சிக்கு பங்காற்றியவர்களாக கருதி நாயகர்களாக்கி படைப்புகளை கொண்டு வருகிறது. சீரழிந்த முதலாளித்துவ கலாச்சாரம், பிற்போக்கு மதக் கலாச்சாரம் உட்பட வெளிநாடுகளின் பிற்போக்குப் படைப்புகளையும் இறக்குமதி செய்கிறது.

மத சுதந்திரத்தை அங்கீகரிப்பதோடு நிற்கவில்லை. மக்களது மத நம்பிக்கையை மதித்து அவர்களது பொருளாதாய வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவது போலவே ஆன்மீக வாழ்க்கைப் பிரச்சினைகளையும் தீர்க்க உதவுவதாக உறுதி கூறுகிறது. மத விவகாரங்களுக்கான அரசின் கீழிருந்த



படிப்பகம்

www.padippakam.com

அமைப்புகளைப் புதுப்பித்து, கம்யூனிச விரோத மதவாதிகளுக்கு மறு வாழ்வளிக்கிறது. சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கம் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களை விட இன்றைய உலக நிலைமைகளைக் காரணம் காட்டி மத நடவடிக்கைகளை வரவேற்று முக்கியத்துமளிக்கிறது லியு - தெங் கும்பல். (ஆதாரம்: பீஜீங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 8; தொகுதி 22, எண் 51.) மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் விமர்சித்து நிராகரிக்கப்பட்ட கன்ஃபூசியஸ்க்குக் கூட மறு வாழ்வளித்துள்ளனர். கன்ஃபூசியஸ் ஒரு மகத்தான கற்றறிந்த மேதை, கல்வியாளர், சிந்தனையாளர், அரசியல்வாதி, பொருள் முதல்வாதி, ஜெர்மனியின் ஹெகலைப் போன்ற தத்துவஞானி என்று புதிய மதிப்பீடுகளில் புனைந்துரைக்கின்றனர். (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 14)

முதலாளித்துவ புத்தி ஜீவிகள் உட்பட எல்லா வர்க்க புத்தி ஜீவிகளையும் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாகக் கருதி லியு - தெங் கும்பல் நடத்துகிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் மக்கள் திரள் விமர்சனத்தில் அம்பலப்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டவர்களின் வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, விடுதலை செய்து, வலதுசாரிப் போக்குடையவர்கள் என்ற முத்திரைகளையும் அகற்றி விட்டு பட்டம் பதவியளித்துள்ளது. மக்களது வாழ்க்கைத் தரத்தை விட கூடுதலான வசதிகள் அவர்களுக்கு வழங்கியுள்ளதோடு இன்னும் கூடுதலாக இல்லையே என்று வருந்துகின்றது. ஏற்பாடுகள் செய்வதாக உறுதியும் கூறுகிறது. (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 13.)

கடைந்தெடுத்த எதிர்ப்புரட்சியாளர்களும் லியு - தெங் கும்பலின் சகாக்களுமானவர்களுக்கு அரசியல் மறுவாழ்வளித்து பதவி உயர்வும் முக்கியத் தலைமைப் பதவியும் அளித்துள்ளது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் லியு - தெங் கும்பலின் முதலாளித்துவ தலைமையக முன்னணி வரிசைப் போராளிகளான பெங் ஜெங், ஹூஹான், ஹுயாவோ பாங், ஜாவோ ஜியாங் போன்றோர் அரசு மற்றும் கட்சியின் தலைமைப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண்கள் 10, 16.)

நான்காவது தேசிய மக்கள் காங்கிரசு மற்றும் பத்தாவது தேசிய கட்சிக் காங்கிரசைத் தொடர்ந்து சீனா பொதுவுடைமைக் கட்சியினது தலைமையிலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கொண்ட சோசலிச நாடாக பிரகடனப்படுத்தப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

சீனத்தில் பல கட்சி கூட்டணி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் தற்போது தெங் சியெள பிங் தலைமையில் பல கட்சி கூட்டணி மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேசிய முதலாளி கள் மற்றும் குட்டி முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எட்டுக்கட்சி மற்றும் இரு முதலாளிகளின் ஸ்தாபனங் கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கட்சி உறுப்பினர்கள் அல்லாத வரை குறிப்பிட்டாக மேற்கண்ட கட்சியினரை பத்தியக்கமிட்டி பிளீனங்களுக்கு அழைத்து அவர்களது விருப்பங்களை ஏற்பதாக முடிவெடுத்துள்ளது. லியு - தெங் கும்பல். முன்பு முதலாளிகள் மற்றும் குட்டி முதலாளிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத் திய இந்த அமைப்புகள் தற்போது தொழிலாளர்கள் மற்றும் தேச பக்தர்களின் கூட்டாக மாறி விட்டதாக லியு - தெங் கும்பல் நம்பச் சொல்கிறது. (ஆதாரம்: பீ ஜிங் ரிவ்யூ தொகுதி 22 எண் 25, 50)

சோசலிச ஜனநாயகத்தை, பாட்டாளி வர்க்க ஜனநாயகத் தை நிறுவி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பலப்படுத்து வதாகக் கூறிக்கொண்டு லியு - தெங் கும்பல் முதலாளித்துவ முறையிலான சட்டங்களும், போலீசு நிர்வாக, நீதி மன்றங் களும் நிறுவிக் கொண்டிருக்கிறது. பின்வரும் சட்டங்கள் அடங் கிய அதிகார வர்க்க முதலாளித்துவ முறையிலான அமைப்பு களையும் ஏற்படுத்தி வருகிறது: சிவில் சட்டம், சிவில் வழி முறைச்சட்டம், கிரிமினல் சட்டம், கிரிமினல் வழி முறைச் சட்டம், குடும்பக்கட்டுப்பாடு சட்டம், தொழிற்சாலை சட்டம், தொழிலாளர் சட்டம், கூட்டு நிறுவனங்கள் சட்டம், ஒப்பந்தச் சட்டம், எரிபொருள் சட்டம், புறச்சூழல் பாதுகாப்புச் சட்டம் ஆகியன. (ஆதாரம்: பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண்கள் 7, 27) அடிமுதல் முடிவரை அரசு ஆட்சி முறையையும் கூட முதலாளித் துவ நாடாளு மன்ற முறையாக சீரழிப்பதற்கான நடவடிக்கை களும் சட்ட திட்டங்களும் நிறைவேறியுள்ளன. தொழில் நுட்ப வல்லுநர்கள், விற்பன்னர்கள், நிர்வாகிகள் கட்சி மற்றும் அரசின் உயர் நிலைகளுக்கு தெரிந்தெடுப்பதையே ஊக்கப்படுத்துகிறது.

கட்சிக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஸ்தாபன உறவை, வேலை இணைப்பை லியு - தெங் கும்பல் வேரறுத் துள்ளது. கட்சியையும், தலைமையையும், அணியையும் அரசியல் சித்தாந்த பூர்வமாக உறுதிப்படுத்துவதாகவும், அரசு நிறுவனங்களின் செயல்பாடுகளின் திறனை அதிகரிப்பதாகவும் கூறிக்கொண்டு அரசின் மீதான கட்சித் தலைமையையும், அதிகார வர்க்கத்தைக் கட்டுப்படுத்துவதையும் மறுக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

" அரசாங்க உறுப்புகளுக்கு (அதே போன்று தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற கட்சி அல்லாத அமைப்புகளுக்கு) கட்சித் தலைமை என்பது பாதை, கோட்பாடு மற்றும், கொள்கைகளில் மட்டுமே இருக்கும்; நாட்டின் ஐக்கியம், மக்களின் ஒருமைப்பாடு மற்றும் சோசலிச திசை வழியை இவ்வாறு தான் உத்திரவாதமளிக்க முடியும்."

" அரசு அதிகாரம் மற்றும் நிர்வாக உறுப்புகள் அவற்றின் செயல்பாடுகளை முழுமையாக ஆற்றும் வகையில் பல வழிகளில் கட்சி உறுதி செய்ய வேண்டும். கட்சி பாதை, கொள்கைகள், மற்றும் கோட்பாடுகளின் கீழ் நீதித்துறையின் சுதந்திரத்தையும், எல்லாப் பொருளாதார, நிதி அமைப்புகள், கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அமைப்புகள் மற்றும் மக்கள் திரள் அமைப்புகள் ஒரு கிரமமாக, திறமையாக, ஒன்றோடொன்று இசைந்து சுதந்திரமாக செயலாற்றுவதையும் உறுதி செய்ய வேண்டும்" " ஒரு கட்சி அமைப்பு அதன் சொந்த உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தும்; ஒரு உறுப்பினருக்குச் சொல்லலாம் அல்லது தண்டிக்கலாம்; எனினும் மக்கள் காங்கிரசு, பிற அரசியல் கட்சிகள், மக்கள் திரள் அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு உத்திரவிடவோ, ஆணைகள் தரவோ, தண்டிக்கவோ முடியாது; அவர்கள் மீது தமது சொந்த சித்தாந்தம், பாதை, கோட்பாடுகள், கொள்கைகள் மூலமும் தமது சொந்த உறுப்பினர்களின் சான்றிண்மை மிக்க செயல்களாலும் செல்வாக்கு செலுத்தலாம்" (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 24, எண் 4)

என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகளது குற்றச் சாட்டுகளை கட்சி மீது அள்ளி வீசி அவர்களது தீர்வையே முன் வைக்கிறது.

இதன் விளைவுகளையும் நோக்கங்களையும் லியு - தெங் கும்பல் தானே ஒப்புக் கொள்கிறது.

" வேலைப் பிரிவினையை அமுலாக்குவதால், அடிமட்ட கட்சிக் கமிட்டிகள், சான்றாக ஒரு ஆலையின் பட்டறையில், அரசியல் சித்தாந்த வேலை செய்யும் கட்சி உறுப்பினர்கள் தமது முன்னணி மற்றும் சான்றாண்மைப் பாத்திரமாற்றும்படியும், உற்பத்திக் குறியீட்டை பூர்த்தி செய்யும்படி தொழிலாளர்களது ஆர்வத்தை தட்டியெழுப்பவும் தூண்டி விடும். பட்டறை இயக்குநர்கள் போன்ற நிர்வாகத் துறை அணியினர் தொழிலாளர்களின் தொழில் நுட்ப பயிற்சி மற்றும் உற்பத்திக்கு பொறுப்பாக்கப்படுவர். இந்த வழியில் கட்சி மற்றும் அரசாங்கம் ஒரே நோக்கத்திற்கு வேலை செய்து தமது சொந்த வேலையை நன்கு செய்ய பரஸ்பரம் ஊக்குவிப்பர்" (பீஜிங் ரிவ்யூ: தொகுதி 24, எண் 2)



படிப்பகம்

www.padippakam.com

இவ்வாறு பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையை அடிமுதல் முடிவரை அகற்றி அதிகார வர்க்கத் தலைமையை நிறுவுவதே லியு - தெங் கும்பலின் நோக்கமும் நடவடிக்கைகளுமாகும். இதையே பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் அரசில் தலைமையேற்கும் முறை என்கிறது. இதற்கு மாறாக

''பாட்டாளி வர்க்கத்தின் மக்கள் திரள் அமைப்புகளில் (தொழிற்சங்கம், சோவியத்துக்கள், கூட்டுறவுகள், இளைஞர் அமைப்புகள் பிற - மா. அ. க.) கட்சியிலிருந்து வழிகாட்டும் ஆணைகளின்றி எந்த ஒரு முக்கிய முடிவும் வரக்கூடாது.''

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது கட்சியின் வழிகாட்டும் ஆணைகளும் பாட்டாளி வர்க்கத்தின் மக்கள் திரள் அமைப்புகள் இந்த ஆணைகளை நிறைவேற்றுவதும், பரந்துபட்ட மக்கள் தொகையினர் இதைப் பூர்த்தி செய்வதும் அடங்கும்'' என்றார் ஸ்டாலின். (லெனினிசத்தின் பிரச்சினைகள், மாஸ்கோ பதிப்பு 1952, பக் 170)

'' ஆளும் கட்சி என்கிற முறையில் சோவியத்தின் 'மேல்மட்ட தலைமை' கட்சியின் 'மேல்மட்ட தலைமை' யோடு இணையாமல் இருக்க முடியாது - நமது நாட்டில் அவை ஒன்று' கலந்துள்ளன; அவ்வாறு தான் நீடிக்கும்'' என்றார்லெனின். (மேற்படி நூலில்மேற்கோளிட்டவாறு, பக்.172)

அரசியல் துறையில் பாட்டாளி வர்க்கம் மற்றும் அதன் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைப் போன்றே பொருளாதாரத் துறையிலும் நிர்வாகப் பொறுப்புகளை தொழில் நுட்ப வல்லுநர்கள், பொருளாதார நிபுணர்கள் மற்றும் அதிகாரவர்க்கத்திடம் ஒப்படைத்துள்ளது; உற்பத்தித் திறனை உயர்த்துவதாகவும், அதிகார வர்க்கப் போக்கு, அதிக ஆட்கள், சிகப்பு நாடாமுறை, முடிவற்ற கமிட்டி கூட்டங்கள் ஆகியவற்றை ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு முழுக்க முழுக்க முதலாளித்துவ பாணியில் தொழிலாளர்களுக்கு வேலை ஒதுக்குவது, வேலைப் பளுவை சுமத்துவது இவ்வளவோடு விமர்சன-சுய விமர்சன முறையை ஒழித்துக் கண்டிப்பது மற்றும் தண்டிப்பது என்கிற முறை புகுத்தப்பட்டுள்ளது. (ஆதாரம்: பீஜிங் ரிவ்யூ, தொகுதி22, எண் 17) தொழில் நிறுவனங்கள், ஆலைகள், அரங்கங்கள், விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள், பல்கலைக் கழகங்களில் உள்ளவர்களான அறிஞர்கள், பேராசிரியர்கள், அனுபவம் வாய்ந்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு அமைப்பை நிறுவி அதன் மூலம் அதிகாரவர்க்கத்துக்குப் பயிற்சி அளித்து ஊக்கப்படுத்துகிறது. 'நிறுவன நிர்வாகத்திற்கான சீன சங்க' மாகிய இதன் நோக்கம்



படிப்பகம்

www.padippakam.com

உள்நாட்டு, வெளி நாட்டு தொழில் நுட்பம், நிர்வாக வழி முறைகள், அனுபவங்கள், கோட்பாடுகள் மற்றும் கட்டமைவுகளைக் கற்பதாக லியு - தெங் கும்பல் கூறிக் கொள்கிறது. (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 12)

1975 ல் மாவோ தலைமையிலான பத்தாவது மத்தியக் கமிட்டியால் கடுமையாக விமர்சித்து நிராகரிக்கப்பட்ட மூன்று நச்சுக்களைகளில் ஒன்றும், தெங் சியௌ பிங் முன் வைத்ததுமான 'தொழில் வளர்ச்சியை துரிதப்படுத்துவது பற்றிய சில பிரச்சினைகள் மீதான ஆவணம், (நகல் : 20 அம்ச ஆவணம்) மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனுடைய சாராம்சத்தை முன்பே விளக்கியுள்ளோம். முதலாளித்துவ லாப நோக்கு, முதலாளித்துவ போட்டி முதலாளித்துவ பண்ட உற்பத்தி மற்றும் சந்தை, முதலாளித்துவ பொருளாதாய ஊக்கமளிப்பு, முதலாளித்துவ நிர்வாக முறை, சந்தை, மூலதனம் தொழில் நுட்பத்திற்கு ஏகாதிபத்திய சார்பு நிலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழில் நவீனமயமாக்குதல் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 21, எண் 28 மற்றும் தொகுதி 22 எண் 12) மூளை உழைப்பிற்கும் உடல் உழைப்பிற்கும் இடையிலான வேறுபாடுகளைக் களைவதற்கான சமனற்ற பங்கீடு முறையை ஒழிப்பதற்கான திசை வழியாக இல்லாது மேலும் வளர்ப்பதற்கான முதலாளித்துவ அராஜகத்தையும் முதலாளித்துவ நெருக்கடியையுமே இவை கொண்டுவரும். இவற்றால் ஏற்படும் பிரச்சினைகளையும் முதலாளித்துவ முறையான ஆலைகளை மூடுவது, சிறிய, நலிந்த ஆலைகளைப் பெரிய நிர்வாகங்கள் விழுங்குவது, நிர்வாகத்துக்கும், தொழிலாளர்களுக்கும் தண்டனை விதிப்பது போன்றவையே கைக்கொள்ளப்படும். (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 6.)

முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கை மற்றும் ஏகாதிபத்தியச் சார்பால் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுரண்டல் நீடிக்கும் என்பதை லியு - தெங் கும்பல் ஒப்புக் கொள்கிறது

> தனி நபர்களிடமிருந்து சில அரசு நிறுவனங்கள் ஒரு சிறு அளவு முதலீட்டை எடுத்துக் கொள்கிறது; அவர்கள் ஒரு குறிப்பிட்ட சதவிகித லாப ஈட்டுத் தொகைகள் பெறுகிறார்கள். இந்த லாப ஈட்டுத் தொகைகள் வங்கி வட்டியோடு ஒப்பிடும் போது மிகவும் கூடுதலாக இல்லாதவரை சுரண்டலாகக் கருத முடியாது.
>
> '' கூட்டு நிறுவனங்களில், அந்நிய மூலதனத்திலிருந்து வரும் லாபத்தின் ஒரு பகுதி அந்நிய முதலாளிகளுக்கு



படிப்பகம்

www.padippakam.com

தரப்படும்; இது சுரண்டும் தன்மையுடையது. ஆனால் சீனத்தில் சோசலிசப் பொது உடமை முறை மேலாண்மை நிலையில் இருக்கிறது; எனவே தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்து வரும் வரை பயப்பட எதுவுமில்லை'' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 24, எண் 6)

என்று தரகு அதிகார வர்க்க முதலாளிகள் மற்றும் ஏகாதிபத்திய வாதிகளது வாதங்களை லியு - தெங் கும்பல் அப்பட்டமாகவே முன் வைக்கிறது.

'' அந்நிய நிதிகள் மற்றும் மூலதனத்துடன் சீரழிந்த முதலாளித்துவ விஷயங்கள் தொடர்ந்து வரும் என்பது மறுக்க முடியாத உண்மை. சீனக்கட்சியும் அரசும் இதை நன்குணர்ந்தே உள்ளது; இதில் பயப்பட ஒன்றுமில்லை'' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 24, எண் 4)

என்று கூறும் லியு - தெங் கும்பல் தொழில் நுட்பம் மற்றும் நிர்வாகத்திறனும் முதலாளித்துவமானது அல்ல என்கிறது; நவீனமயமாக்குதலின் பெயரால் எதையும் செய்யலாம் என்ற நிலைக்கு சீரழிந்துள்ளது.

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போது முதலாளிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மூலதனத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுத்துள்ளதோடு அவர்கள் மூலதனமிட்டு தொழில் நடத்தவும் சுரண்டவும் லியு - தெங் கும்பல் ஊக்குவிக்கிறது. எடுத்துக் காட்டாக 1099 முதலாளி குடும்பங்கள் 100,000 யுவான் முதலீடு செய்து அவர்களில் பலரை இயக்குநர்களாகவும், லியு ஜின்கி என்ற முதலாளியை நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவராகவும் கொண்டு 'தேசபக்த கட்டுமானக் கம்பெனி' ஒன்று நிறுவப்பட்டுள்ளது. வீட்டு வசதி கட்டுமானம், அந்நிய வர்த்தக நிதி உதவி, ஏற்றுமதி வர்த்தகம் மற்றும் தொழில் - நிர்வாகப் பயிற்சி ஆகிய பணிகளை இக்கம்பெனி ஏற்கனவே மேற்கொண்டு விட்டது. இத்துடன் சீன ஜனநாயக தேசிய நிர்மாண அங்கம் மற்றும் அனைத்துச் சீன தொழில் மற்றும் வர்த்தகக் கூட்டமைப்பு என்ற இரு முதலாளிகளது தொழில் ஸ்தாபனங்கள் புத்துயிர் பெற்றுள்ளன. அதன் தலைவர்கள் தற்போதைய தொழில் நிறுவனங்களின் நிர்வாகத் தலைமைப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். எடுத்துக் காட்டாக சீனத்தின் மிகப்பெரும் தேசிய முதலாளியான ரோங் ஈரேன் என்பவர் அந்நிய நாடுகளுடன் கூட்டுக்கான சீனத்தின் பெரும் நிறுவனமான 'சீன சர்வதேசிய டிரஸ்டு மற்றும் முதலீடு



படிப்பகம்

www.padippakam.com

கார்ப்பரேஷன்' தலைவராகியுள்ளார். இந்நிறுவனத்தின் மூலம் ஜப்பான் மற்றும் மேற்கு ஏகாதிபத்தியங்களுடன் பல தொழில் கூட்டு ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டுள்ளன. (ஆதாரம்: பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 7; தொகுதி 23, எண்கள் 16, 17.)

பின்வரும் அந்நிய கூட்டு நிறுவனங்களுக்கான கொள்கை அறிவிப்பு மூலம் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு சீனத்தின் கதவுகளை லியு - தெங் கும்பல் அகலத் திறந்து விட்டிருக்கிறது. ''முதலாவதாக, கூட்டு நிறுவனங்களுக்கான சட்டத்தின்படி அந்நிய முதலீட்டாளர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை சீன அரசாங்கம் பறிமுதலோ, எடுத்துக் கொள்வதோ செய்யாது. தனிச் சிறப்பான சூழ்நிலைகளில் அவற்றை ஒப்படைக்க சீனா கோரும்படி நேர்ந்தால் அந்நிய முதலீட்டாளர்களுக்கு அது நியாயமான நட்டஈடு தரும்.

''இரண்டாவதாக, கூட்டு நிறுவனங்களில் இயக்குநர்கள் கழகத்தின் கீழ் பொதுநிர்வாகியின் ஒரு பொறுப்பான அமைப்பு முறை நிறுவப்படும். பொதுநிர்வாகி ஒரு சீனர் அல்லது ஓர் அந்நியர் எவரும் இருக்கலாம்.

''மூன்றாவதாக, நிர்வாகத்தின் தேவைக்கேற்ப தமது தொழிலாளர்களை சேர்க்கவும் துரத்தவும் கூட்டு நிறுவனங்களுக்கு உரிமை உண்டு. தொழில் கட்டுப்பாடுகளை பாரதூரமாக மீறுபவர்களை நீக்குவது உட்பட தண்டிக்கலாம்.

''நான்காவதாக, கச்சாப்பொருட்கள் மற்றும் பிறவும், எரிபொருள் மற்றும் உதிரி பாகங்கள் ஆகிய நிறுவனங்களுக்குத் தேவையானவை சாத்தியமான அளவு சீனத்தில் வாங்கப்பட வேண்டும். ஆனால்அவற்றுக்குத் தேவையானதை நேரடியாக வெளி நாட்டிலிருந்து வாங்க அவர்களது சொந்த அந்நிய செலாவணியைப் பயன்படுத்த உரிமை உண்டு.

''ஐந்தாவதாக, கூட்டு நிறுவனங்களுக்கான வரிவிகிதத்தை நிர்ணயிக்கும்போது அந்நிய முதலீட்டாளர்களின் நீதியான நலன்கள் கணக்கில் கொள்ளப்படும். அந்நிய முதலீட்டாளர்களின் சட்டபூர்வ நலன்கள் உத்திரவாதம் செய்யப்படும்''. (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 16). எந்தவொரு தரகு அதிகாரவர்க்க முதலாளியும் இதைவிட நல்லமுறையில் ஏகாதிபத்திய நலன்களைக் காக்கமுடியாது. லியு - தெங் கும்பல் புதிய இலக்கணம் எழுதுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

1975-ல் மாவோ தலைமையிலான பத்தாவது மத்தியக் கமிட்டியால் கடுமையாக விமர்சித்து நிராகரிக்கப்பட்ட மூன்று நச்சுக்களைகளில் ஒன்றும் — தெங்சியௌ பிங் முன் வைத்தது மான 'விவசாய வளர்ச்சியைத் விரைவுடுத்துவது குறித்து சில பிரச்சனைகள் மீதான தீர்மானங்கள்' (நகல்) மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற குலாக்குகளைத் தோற்று வித்து பாதுகாக்கும் ருசிய புகாரினது கொள்கைகளின் மறு பதிப்பே இது. கிராமப்புறச் சந்தை, பணப்பயிர், பரிவத்தவனை பண்ட உற்பத்தி, பொருளாதாய ஊக்கமளிப்பு, சுய தீர்மான திட்டமிடுதல் ஆகியவற்றின் அடிப்படையிலான விவசாய நவீனமயமாக்குதலையே லியு-தெங் கும்பல் முன் வைக்கிறது. படிப்படியாக கூட்டுத்துவ உடமை முறையை அனைத்துமக்கள் உடமை முறையாக மாற்றுவதற்கான விவசாயம்-தொழில், கிராமம்-நகரத்துக்கிடையிலான வேறுபாடு களைக் களைவதற்குப் பதில், எல்லா வகையிலும் குலாக்குகள் மற்றும் அதிகாரவர்க்க ஆதிக்க உறவுகளை நிலைநிறுத்திப் பாது காக்கும், உறுதிப்படுத்தும் கொள்கையை கடைப்பிடிக்கிறது. கிராமப்புறங்களில் விவசாயிகளினுடைய முன் முயற்சியைக்கட்ட விழ்த்து விடுவதாகக் கூறிக்கொண்டு, கம்யூன்களில் வைப்பு நிதி மற்றும்மூலதனசேமிப்பிற்குப்பதில் விவசாயிகளுக்குக் கூடுதலான பொருளாதாய பங்களிப்பு தருகிறது. (ஆதாரம்: பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 11; தொகுதி 23, எண் 12; தொகுதி 24 எண் 3)

கிராமப்புற, நகர்ப்புற புதிய சுரண்டலாளர்களைத்தோற்று விப்பதோடு பழைய சுரண்டலாளர்களையும் உயிர்ப்பித்து லியு-தெங் கும்பல் ஊக்குவிக்கிறது. எல்லா நேர்மறை சக்திகளையும் திரட்டுவது என்ற பெயரால், பழைய பணக்கார விவசாயிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளுக்கு பொருளாதார மறுவாழ் வளித்துள்ளது. அவர்களது அரசியல் பிரதிநிதிகளுக்கு, குறிப் பாக வலதுசாரிகளுக்கு அரசியல் மறுவாழ்வளித்துள்ளது. சோசலிசநிர்மாணத்தையும்நான்குநவீனமயமாக்குதலையும்விரை படுத்தும் வகையில் எல்லா நேர்மறைக் காரணிகளையும் திரட்டு வதற்காகவும், எதிர்மறைக் காரணிகளை நேர்மறைகளாக மாற்றவும் வலதுசாரிகளின் முத்திரையை அகற்றியதைப் போலவே நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், முதலாளி கள், எதிர்ப்புரட்சியாளர்கள், மற்றும் மோசடிக்காரர்கள் என்ற முத்திரையையும் அகற்றி அவர்களைக் கிராமப்புறங்களில் கம்யூன் உறுப்பினர்கள் என்றும், நகரங்களில் தொழிலாளர்கள் என்றும் அழைக்கப்படுவதாக லியு-தெங் கும்பல் கூறுகிறது- (ஆதாரம்: பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 7)



படிப்பகம்

www.padippakam.com

முதலாளித்துவ மீட்புக்கான இந்த திசையிலேயே பொருளாதார நோக்கத்தையும் கட்டுமானத்தையும் லியு-தெங் கும்பல் நிர்மாணித்து வருகிறது. சந்தைச் சார்புடைய பொருளாதாரத்தை வளர்க்கிறது. கிராமப்புறங்களில் 33000 சந்தைகளை 1979 க்குள் உயிர்ப்பித்துள்ளது. இதற்காக நுகர்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கியுள்ளது. ஸைக்கிள், தையல்மெஷின்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களினிடத்தில், தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப்பெட்டி, அனுவியங்கி கெடிகாரம் இவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனை பெருகியுள்ளது. உற்பத்திச் சாதனங்களையும் சந்தைக்கு விடுவதன்மூலம் மொத்தமக்களது உடமையான அரசு நிறுவனங்களுக்கும், கூட்டுத்துவ உடமையான கம்யூன்களுக்கும் இடையில் இந்த வியாபார உறவுகளை ஏற்படுத்தியுள்ளது.(ஆதாரம்: பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 10; தொகுதி 22, எண் 22.)

சந்தைப் பொருளாதாரம் எந்த அளவு வளர்ந்துள்ளது என்று பின்வருமாறு லியு-தெங் கும்பல் ஒப்புக் கொள்கிறது. ''கிராமப்புறங்களில் பிரபலமாகி உள்ள சுதந்திர சந்தைகள் நகரங்களில் கூட ஒரு சிறு அளவுதோன்றியுள்ளன. சீனப் பொருளாதாரத்தில் சந்தைகளின் செயல்பாடுகளும் பாத்திரங்களும் அதிகரித்துள்ளன; அதிகரித்து வரும் சுதந்திர சந்தைகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன; ஒரு வரம்புக்குட்பட்டு இயங்குகின்றன. சந்தையில் சில போட்டிகளும் உள்ளன; ஆனால் அவையும் கூட வரம்புக்குட்பட்டவை. ... சந்தையில் கறாரான கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத நடவடிக்கைகளும் இருக்கலாம்; ஆனால் அவை சிரமமின்றி தடுக்கப்பட முடியும்'' (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 24, எண் 3.)

சந்தை வியாபாரப் பொருளாதாரத்தில் அடியெடுத்து வைத்துள்ள லியு - தெங் கும்பல் அதற்கே உரித்தான விதியிலும் இழுத்து விடப்பட்டுள்ளது. திட்டமிட்ட பொருளாதாரத்தையும், சந்தைப் பொருளாதாரத்தையும் இணைப்பதாகக் கூறிக்கொண்டு சந்தை-நுகர் பொருட்களின் ஆய்வில் இறங்கியுள்ளது. விற்பனையைப் பெருக்குவதற்காக வேண்டி பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, திரைப்பட விளம்பரங்களிலும், கண்காட்சிகளிலும் முதலாளித்துவ உத்திகளை மேற்கொள்கிறது. (ஆதாரம் : பீஜிங் ரிவ்யூ, தொகுதி 23, எண் 10) சந்தை வியாபாரத்தில் லியு - தெங் கும்பல் எந்த அளவு சீரழிந்துள்ளதென்றால் சோசலிசப் பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக சுற்றுலா, ஹோட்டல் பொருளாதாரத்தையும் இணைத்



படிப்பகம்

www.padippakam.com

துள்ளது. இதற்கும் வெளிநாடுகளிலுள்ள சீனர்களின் முதலீடு மற்றும் அந்நிய முதலீடுகளை வரவேற்றுள்ளது

"கடந்த இரு பத்தாண்டுகளாக உலகின் எல்லா பாகங்களிலும் ஒரு விரைந்து வளரும் பொருளாதாரப் பிரிவான சுற்றுலாத்துறை, தற்போது சீனப் பொதுமக்களிடையே அதிகரித்து வரும் கவனத்தைப் பெற்று வருகிறது" (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 11).

முதலாளித்துவ நாடுகளிலிருந்து லியு - தெங் கும்பல் கற்கும் முற்போக்கு பொருளாதார, நிர்வாக அம்சங்களைப் பாருங்கள்!

இவ்வாறு அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம், கல்வி - கலாச்சாரம் போன்ற சகல துறைகளிலும் முதலாளித்துவ மீட்புக்கான அடித்தளமிட்டு அடியெடுத்து வைத்து விட்டது லியு -தெங் கும்பல். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் படைப்புகளான புதிய விஷயங்கள் அனைத்தையும் ஒழித்துக் கட்டி, அதன் சரியான தீர்ப்புகளைத் திருத்தி மாற்றுகிறது.

"நம்முன்னே கிளர்ந்தெழும் புதிய விசயங்களாவன : மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையைக் கற்பதில் மக்கள் திரள் இயக்கத்தின் உயிரோட்டமான வளர்ச்சி; புரட்சிகரக் கமிட்டிகளின் பிறப்பும் கட்சியின் மத்தியப்பட்ட தலைமையின் பலமாக்குதலும்; மாதிரி புரட்சிகர அரங்கப் பங்களிப்புகளின் படைப்பும், ஜன ரஞ்சகமாக்குதலும்; மார்க்சிய கோட்பாட்டு ஆய்வாளர்களின் திரளான குழுக்களின் விரிவாக்கம்; உயர்தரப் போதனைக்கான நிறுவனங்களில் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் படைவீரர்களின் பதிவும், கல்வியில் சீர்திருத்தமும்; கிராமப்புறங்களிலும், மலைப்பாங்கான பகுதிகளிலும் படித்த இளைஞர்கள் குடியேறுவது; கிராமப் பகுதிகளுக்கு மருத்துவ ஊழியர்கள் செல்வது; கிராமப்புற 'முறைசாரா மருத்துவர்கள்' மற்றும் கூட்டுறவு மருத்துவ சேவை; கன்ஃபூசியஸ் மற்றும் சட்டவாதக் கருத்தோட்டங்களுக்கிடையிலான போராட்டம் மற்றும் வர்க்கப் போராட்டம் முழுமையும் பற்றிய வரலாற்று அனுபவங்களை நூற்றுக்கணக்கான, பல பத்துலட்சக்கணக்கான மக்கள் திரளினர் படிப்பது; எல்லா பட்டங்களிலும் உள்ள தலைமை உறுப்புகளில் வயோதிகர், நடுத்தர வயதினர், மற்றும் இளைஞர்களின் மூன்றில் ஒன்று என்ற இணைப்புகள்; தொழிலாளர் — விவசாயிகள் — படைவீரர்களின் அணிகளது பயிற்சிக்கான படிப்பு வகுப்புகள்; விசாலமான எண்ணிக்கையிலான அணிகள், குறிப்பாக தலைமை அணிகள் உடல் உழைப்பில் பங்கேற்பது; விவசாயம்,



படிப்பகம்

www.padippakam.com

தொழில், வர்த்தகம், கலாச்சாரம் மற்றும் கல்வியில் பல முன்னேறிய யூனிட்டுகளும், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தில் எண்ணிறந்த கண்டு பிடிப்புகளும் படைப்புகளும்'' (1974, பீஜிங் ரிவ்யூ, தொகுதி 17, எண் 51, பக் 9).

மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி தொடங்கியதி லிருந்து இரு வர்க்கங்களுக்கிடையிலான, இருபாதைகளுக்கி டையிலான கூர்மையான கடுமையான போராட்டத்தில் பிறந்த இச்சோசலிசப் புதிய விஷயங்கள் அனைத்தையும் லியு - தெங் கும்பல் திருத்தி மாற்றி விட்டது.

லியு - தெங் கும்பலின் எதிர்ப்புரட்சி திரிபுவாதம் குறித்த எமது மதிப்பீடுகள் அவசரமானவை, ஆதாரபூர்வமற்றவை என்று அதன் நேரடி ஆதரவாளர்களும், மறைமுக ஆதரவாளர் களான மையவாதிகளும் குற்றம் சாட்டுகின்றனர். மாறாக எமது முடிவுகள் முற்றிலும் ஆதாரபூர்வமானவை என்பதற்கு கடைசியாக லியு - தெங் கும்பல் தனது பதினோராவது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளீனத் தொடரில் நிறைவேற்றியுள்ள 'எமது கட்சி வரலாற்றில் சில பிரச்சினைகள் மீதான தீர்மானத் தில்' ஒப்புதல் வாக்குமூலமளித்திருக்கிறது. [ஆதாரம்: மாசே துங்கின் வரலாற்றுப் பாத்திரமும், மாசேதுங் சிந்தனையும் என்ற சின்ஹுவா செய்தி நிறுவனத் தொகுப்பிலிருந்து, ஃபிராண் டியர், தொகுதி 13, எண் 52; தொகுதி 14, எண்கள் 1—4.) லியு- தெங் கும்பலே ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளவாறு சோசலிசப் புரட்சியையும், சோசலிச நிர்மாணத்தையும் 1956 ஆம் ஆண் டிற்குப் பின்னிழுத்துச் சென்றுள்ளது. ஆனால் இவ்வளவோடு லியு-தெங் கும்பல் நிற்கவில்லை; நிற்கப் போவதில்லை என்ப தையே அதன் பிரகடனப்படுத்தப்பட்ட கொள்கைகள் காட்டு கின்றன.

சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தின் பொது நோக்கம் குறித்த அதன் வரையறுப்பிலேயே லியு - தெங் கும்பலின் எதிர்ப்புரட்சித் திரிபுவாதம் துவங்கி விடுகிறது.

"எல்லா சுரண்டும் கட்டமைவுகளையும், எல்லா சுரண் டும் வர்க்கங்களையும் துடைத்தொழிப்பதை மட்டும் வெறுமனே சோசலிசம் நோக்கமாகக் கொண்டிருக்க வில்லை; உற்பத்திச் சக்திகளை மிகப்பெரும் அளவு விரிவ டையச் செய்து, சோசலிச உற்பத்தி உறவுகளையும் மேற்கட்டுமானத்தையும் அபிவிருத்தி மற்றும் வளர்ப்பதை யும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது; இதன் அடிப்படையில்,



படிப்பகம்

www.padippakam.com

இறுதியாக கம்யூனிசத்தை அடையும் வரை பிரதானமாக உற்பத்திச்சக்திகளின்வளர்ச்சிப்போக்கின் பற்றாக்குறை காரணமாக எழுந்துள்ள எல்லா வர்க்க வேறுபாடுகளையும், எல்லா பெரிய சமூக வேறுபாடுகளையும், சமனற்றவைகளையும் சிறிது சிறிதாக துடைத்தொழிப்பதையும் நோக்கமாகக் கொண்டிருக்கிறது'' [சீ. பொ. க. 11வது மத்தியக் கமிட்டியின் ஆறாவது பிளீன அறிக்கை, ஃபிராண்டியர், தொகுதி 14, எண் 4, பக், 10]

இந்த நோக்கத்திலிருந்து உற்பத்திச் சக்திகளின் பெருக்கத்தை குறிக்கோளாகக் கொண்டிருப்பதாக லியு-தெங் கும்பல் கூறிக் கொள்கிறது. ஆனால் உற்பத்திப் பெருக்கத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் எல்லா வர்க்க வேறுபாடுகளையும், எல்லா சமூக வேறுபாடுகளையும் சமனற்றவைகளையும் பாதுகாக்கும் கொள்கையையே முன் வைக்கிறது. உற்பத்தி உறவுகள் மற்றும் மேற்கட்டுமான அரங்கத்திலான சோசலிசப் புரட்சியையும் இறுதியில் சோசலிச பொருளாதார நிர்மாணத்தையுமே சீரழிக்கும் கொள்கையையே முன் வைக்கிறது. ஏனெனில் மக்களிடையே நிலவும் வேறுவேறான பொருளாதார நலன்களை அங்கீகரித்து, அவற்றால் மக்களிடையே எழும் உறவுகளிலான வேறுபாடுகளையும், அனைத்து மக்கள் உடமை முறை மற்றும் கூட்டுத்துவ உடமை முறை நிறுவனங்களுக்கிடையிலான வேறுபாடுகளையும், அனைத்து மக்கள் உடமை முறை என்ற வகையிலேயே வரும் வெவ்வேறு நிறுவனங்களுக்கிடையே நிலவும் வேறுபாடுகளையும் அங்கீகரித்து 'இயல்பாக' அவற்றை ஆளும் 'விதி'களினடிப்படையிலான பொருளாதாரத் திட்டமிடுதலையே லியு-தெங் கும்பல் முன்வைக்கிறது. உணர்வுபூர்வமாக அவ் வேறுபாடுகளைக் களைவதற்கான திட்டமிடுதலை யதார்த்த விதிகளுக்குப் புறம்பானது, 'இடது' தீவிரமானது என்று நிராகரிக்கிறது.

''உற்பத்திச் சாதனங்களின் பொது உடமை முறையின் நிலைமைகளின் கீழ் சுரண்டுவோருக்கும், சுரண்டப்படுவோருக்கும் இடையிலான உறவு முறையும், அதிலிருந்து எழும் பொருளாதாய நலன்களில் பகைமையான உறவும் ஒழிக்கப்பட்டுள்ளன; ஆனால் உழைப்பு வாழ்வின் பிரதான தேவையாக கம்யூனிச காலத்திலிருப்பது போல சோசலிச காலகட்டத்தில் மாறவில்லை; வாழ்வதற்கான ஒரு சாதனமாக மட்டுமே இருக்கிறது. மக்களது உழைப்புத்திறனும், அவர்களது பங்களிப்பின் அளவும் மாறுபடுவதால் அவர்களது பொருளாதாய நலன்களில் இன்னமும் வேறு



படிப்பகம்

www.padippakam.com

வேறுபாடுகள் நிலவுகின்றன; இது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவுமுறையில் மட்டுமல்ல அனைத்து மக்களின் உடமை முறை என்ற வகையின் கீழுள்ள நிறுவனங்களுக்கிடையிலான உறவுமுறையிலும் வெளிப்பாட்டைக் காணுகிறது.

" புறவயமான காரணிகளால் அல்லாது ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்தால் விளைந்த உற்பத்தியிலான வேறுபாடுகள் அந்நிறுவனங்களுக்கும் அவற்றின் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும் வெவ்வேறு பொருளாதாய பலன்களைக் கொண்டுவர வேண்டும்; இல்லையானால், உற்பத்தியின் வளர்ச்சிக்கு சாதகமாக இருக்காது. இக்காரணத்துக்காக, அனைத்து மக்களது பொது உடமைமுறை என்ற வகையின் கீழுள்ள நிறுவனங்கள் (ஒப்பீட்டு ரீதியில் சுயேச்சையான அகவிலைக் கணக்கீடு செய்யும் யூனிட்டுக்கள்), சமமான மதிப்புகளின் பரிமாற்றம் என்றகோட்பாட்டைப்பின்பற்றி அவைகளது பொருளாதார உறவு முறைகளைக் கையாள்வது அவசியம். இந்தக் கோட்பாட்டை பற்றி ஒழுகத் தவறுவது மக்களது பொருளாதாய நலன்களிலுள்ள வேறுபாடுகளை மறுதலிப்பதாகும்; அதன் மூலம் மக்களது பொருளாதாய நலன்களில் மக்களிடையேயான உறவு முறையைத் தலைகீழாகப் புரட்டிப்போடுவதாகும்" (பீஜிங் ரிவ்யூ, தொகுதி 22, எண் 31, பக் 12) எவ்வளவு அப்பட்டமான எதிர்ப்புரட்சித் திரிபுவாதம் பாருங்கள்!

மக்களிடையே நிலவும் வெவ்வேறான பொருளாதாய நலன்களுக்கு அவர்களது உழைப்புத்திறன் மற்றும் அவர்களது பங்களிப்பின் அளவிலான வேறுபாடுகள்தான் காரணம் என்றும், உழைப்பாளிக்கு இயற்கை வழங்கியிருக்கும் வெவ்வேறான சன்மானமாக இதை அங்கீகரித்து அதன் அடிப்படையில் உபரி மதிப்பை கொள்ளையிடுவது சரி என்றும், அதேபோன்று உற்பத்தியில் வேறுபாடும் நிர்வாகத் திறமையினால்தான் எழுகிறது என்றும் எனவே அதன் பலன்கள் வேறுபடுவதை அங்கீகரித்து முதலாளித்துவ லாபத்துக்கு நியாயம் கற்பிப்பது என்றும் முதலாளித்துவ பொருளாதாரக் கோட்பாட்டை லியு-தெங் கும்பல் முன்வைக்கிறது. மக்களது உழைப்புத்திறன், அவர்களது பங்களிப்பின் அளவு மற்றும் நிர்வாகத்திறனில் சமத்துவத்தை கொண்டு வருவதால் மக்களிடையேயும், மக்கள் அனைவருக்கும் சொந்தமான உடமை முறையின் கீழ்வரும் நிறுவனங்களுக்கிடையேயும் உள்ள வேறுபாடுகளை களைவதன் மூலம் அவற்றுக்கிடையிலுள்ள பொருளாதாய நலன்களின் வேறுபாடுகளை ஒழிக்க வேண்டுமென்கிறது; இதற்கு ஓரேவழியாக உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும், குறிப்பாக உற்பத்தி சக்திகளையும் பெருக்குவதற்கான வகையில்



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதாய ஊக்கமளிப்பு மற்றும் போட்டியைக் கொண்டு வருவதாகக் கூறுகிறது.

சாராம்சத்தில் லியு - தெங் கும்பலின் வாதம் ஒருவகையில் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தின் இறுதி வெற்றிக்கான உத்திரவாதமாக சோவியத் யூனியனில் எதிர் புரட்சியாளன் ஜினோவியேவ் முன் வைத்த வாதமே. அதாவது சோசலிசத்தின் இறுதி வெற்றி ஒரு நாட்டின் சோலிசப் பொருளாதார நிர்மாணத்தில் தங்கியிருக்கிறது; தொழில் நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மிகவும் முன்னேறிய நாடுகளுடைய அரசின் உதவியின்றி அது சாத்தியமில்லை என்றான் ஜினோவியேவ். இதற்குமாறாக, சோசலிசப் பொருளாதார நிர்மாணம் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் மிகவும் முன்னேறிய நாடுகளுடைய அரசின் உதவியின்றி சாத்தியம்; ஆனால் சோசலிசத்தின் இறுதிவெற்றி ஏகாதிபத்தியத் தலையீடு மற்றும் உள்நாட்டில் முதலாளித்துவ மீட்பிற்கெதிரான உத்திரவாதத்திலும், பலநாடுகளின் சோசலிசப் புரட்சியிலும் தங்கியிருக்கிறதுஎன்றார் லெனின். (லெனினிசத்தின் பிரச்சினைகள், பக்197.) இந்த லெனினிசக் கோட்பாட்டையே லியு -தெங் கும்பல் மறுத்துரைக்கிறது.

சாராம்சத்தில் லியு-தெங் கும்பலின் வாதம் மற்றொருவகையில் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்தின் இறுதி லட்சியமும் வழிமுறையும் பற்றி சோவியத் யூனியனில் யரோஷெங்கோ முன் வைத்த வாதமே. அதாவது சமூக உற்பத்தியில் உற்பத்திச் சக்திகளின் திட்டமிட்ட ஸ்தாபனபடுத்துதல் மூலமே கம்யூனிசத்தை அடைந்து விட முடியும்; 'சோலிசத்தின் கீழ் கம்யூனிச சமுதாயத்தை கட்டியமைப்பதற்கான அடிப்படைப் போராட்டம் சமூக உற்பத்தியில் உற்பத்திச் சக்திகளுக்குப் பொருத்தமான ஸ்தாபனப்படுத்துதல் மற்றும் அவற்றின் முறையான பயன்படுத்துதலுக்கான போராட்டமாகிறது' எனவே இந்த வகையிலான விதிக்குட்பட்ட உற்பத்திப் பெருக்கமே பிரதானமாகிறது என்றார் யரோஷெங்கோ.

''சமுதாயத் தேவைகள் அனைத்தையும் நிரப்பக்கூடிய திறனுடையதாக உற்பத்திப் பொருட்கள் மிதமிஞ்சி வழிவதோ, 'ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப' என்ற சூத்திரத்திற்கு மாறுவதோ கூட்டுத்துவ பண்ணைகள், குழுக்கள், சொத்துடமை, பண்டப்பொருட்களின் சுழற்சி இன்னும் பிற போன்ற பொருளாதாரக் காரணிகள் சக்தியாக நிலவும் வரை கொண்டுவர முடியாது'' (சோவியத் யூனியனில்



படிப்பகம்

www.padippakam.com

சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள், ஸ்டாலின் பக்.68) ஸ்டாலினது இந்த வரையறுப்புக்கு மாறாக சோசலிசப் புரட்சியையும் சோசலிச நிர்மாணத்தையும் நோக்கி லியு-தெங் கும்பல் செல்கிறது.

மக்களது உழைப்புத் திறனையும், அவர்களது பங்களிப்பின் அளவையும், நிர்வாகத் திறனால் எழும் உற்பத்தியையும் அவற்றிலுள்ள வேறுபாடுகளையும் இயற்கையின் சன்மானங்களாகக் கருதி அங்கீகரித்து பொருளாதாரக் கொள்கைத் திட்டங்கள் வகுப்பதும், இல்லையானால் மக்களது உறவு முறையைப் புரட்டிப் போட்டு கொந்தளிப்பான, நாடு தழுவிய வர்க்கப் போராட்டம் எழும் என்று அஞ்சுவதும் தான் லியு-தெங் கும்பலின் எதிர்ப்புரட்சித் திரிபுவாத அடிப்படை. மாறாக கம்யூனிசத்தை நோக்கிய பயணம் சமுதாயம் முழுவதும் பல பொருளாதாரக் கட்டங்களையும், கலாச்சார மறுபோதனைக் கட்டங்களையும் உள்ளடக்கியது. அதன் போக்கில் உழைப்பு வாழ்வுக்கான சாதனமாக மட்டுமன்றி வாழ்வின் பிரதான தேவையாக மாறுவது; தனிமனிதன் உழைப்புப் பிரிவினைக்கு அடிமைப்படுவதிலிருந்து விடுபடுவது; உடல் உழைப்புக்கும் மூளை உழைப்பிற்குமிடையிலான வேறுபாடுகளை களைவது; உற்பத்திச் சக்திகளைப் போலவே தனிநபரும் அனைத்தும் தழுவிய வளர்ச்சி பெறுவது ஆகியவற்றின் மூலமே சமுதாயம் முழுவதற்குமான தேவையை நிரப்பும் திறனுடைய உற்பத்திப் பொருட்கள் மிதமிஞ்சி வழியும், இயற்கையில் வேறுவேறான நலன்கள், தேவைகள் அங்கீகரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப என்ற கம்யூனிச விதி செயலுக்கு வரும்.

கம்யூனிசத்தை நோக்கிச் செல்வதற்கு குறைந்தபட்சம் பின்வரும் மூன்றுமுன்தேவைகளை ஸ்டாலின் தொகுத்தளித்தார்:

''முதலிடமாக உற்பத்திச் சக்திகளை 'கிரமமான ஸ்தாபனமாக்குதல்' என்ற மாயாவாதத்தால் அல்ல, உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி ஓர் ஒப்பீடு ரீதியில் கூடுதலான விகிதத்தில் விரிவடைவதோடு கூடிய எல்லா சமூக பொருளுற்பத்தியையும் தொடர்ந்து ஒரு விரிவாக்கம் செய்வதை உறுதி செய்வது அவசியம். அதன் சொந்தஆலைகள் மற்றும் தேசியப் பொருளாதாரத்தின் பிற எல்லா கிளைகள் ஆகிய இரண்டுக்கும் இயந்திரங்கள் அளிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல ஒருவிரிவாக்கப்பட்ட அளவு மறு உற்பத்தி அதுவின்றி ஒரேயடியாக சாத்தியமின்றிப் போகும் என்பதாலும் கூட ஒப்பீடு ரீதியில் கூடுதலான விகிதத்தில்



படிப்பகம்

www.padippakam.com

உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி விரிவாவது அவசியம்.

''இரண்டாவதிடத்தில், கூட்டுத்துவ பண்ணைகளுக்கும், அதன் விளைவாக அனைத்து சமுதாயத்திற்கும் சாதகமாக சிறிது சிறிதான மாற்றங்கள் மூலமாக கூட்டுத்துவப் பண்ணையின் சொத்தை பொதுச் சொத்தின் மட்டத்திற்கு உயர்த்துவது அவசியம்; சிறிது சிறிதான மாற்றங்கள் மூலமாக பரிவர்த்தனைப் பண்டச் சுழற்சியினிடத்தில் உற்பத்திப் பொருட்களைப் பரிவர்த்தனை செய்யும் ஒரு அமைப்பு முறையும் கூட அவசியம்; அம்முறையின் கீழ் சமுதாயத்தின் நலன்களுக்காக சமூக உற்பத்தியின் பொருட்கள் முழுவதும் மத்திய அரசாங்கம் அல்லது வேறு சில சமூக-பொருளாதார மையம் கட்டுப்படுத்தும்.

''மூன்றாவதிடத்தில், சமுதாயத்தின் உறுப்பினர்கள் சமுதாய வளர்ச்சிக்கான செயலூக்கமிக்க ஊக்குவிப்பாளர்களாவதற்கு போதுமான அளவு ஒரு கல்வியைப் பெறும் ஒரு நிலையிலிருக்கவேண்டும்; அவர்கள் தமது வேலைகளை சுதந்திரமாக தெரிவு செய்யவும், நிலவும் வேலைப்பிரிவினை காரணமாக தங்களது வாழ்க்கை முழுவதும் ஏதாவது ஒரு வேலையோடு கட்டுண்டிருக்காமலும் உள்ள நிலையிலிருக்க வேண்டும்; இதற்கேற்ப சமுதாயத்தின் எல்லா உறுப்பினர்களும் தங்களது உடல்வலிமை மற்றும் அறிவார்ந்த திறமைகளில் எல்லா வகையான வளர்ச்சியையும் பெறுவதற்கான வகையில் சமுதாயத்தின் ஒரு கலாச்சார முன்னேற்றத்திற்கு உறுதி செய்வது அவசியம்''. (மேற்குறிப்பிட்டது. பக் 68-70)

எனவே கம்யூனிச சமுதாயத்தை நோக்கிய பயணத்தில் ஒரே சமயத்தில் பொருளாதார அடித்தளம் மற்றும் மேற்கட்டுமானம் ஆகிய இரு அரங்கங்களிலும் வர்க்கப் போராட்டத்தையும், புரட்சியையும் நிர்மாணத்தையும் தொடர வேண்டியுள்ளது. பொருளாதார அடித்தளத்தைப் பொருத்தவரை (சப்போத்னிக்குகளில்) சேவை உழைப்புகளில் மக்கள் திரளினரது செயலூக்கம் கட்டவிழ்த்து விடப்படுதல் உற்பத்தி உறவுகள் என்ற அரங்கத்திலான பெரும் புரட்சியாகும். சேவை உழைப்பு பற்றி லெனின் சொன்னார்:

''இது ஒரு துவக்கம் தான் என்பது வெளிப்படை. ஆனால் இது அசாதாரணமான பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துவக்கம். இது முதலாளித்துவ வர்க்கத்தைத் தூக்கியெறிந்



படிப்பகம்

www.padippakam.com

தைதக் காட்டிலும் மேலும் கடினமான, மேலும் திடமான, மேலும் தீவிரமான, மேலும் தீர்க்கமான ஒரு புரட்சியின் துவக்கமாகும்; ஏனெனில் இது நமது சொந்தப் பழமைவாதத்துக்கும், கட்டுப்பாடின்மைக்கும், சிறுமுதலாளித்துவ அகங்காரத்துக்கும் எதிரான வெற்றியாகும். கேடுகெட்ட முதலாளித்துவம் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் வழங்கிய பழக்க வழக்கங்களின் மீது ஈட்டப்பட்ட வெற்றியாகும்...... இந்த வெற்றி வலுப்படுத்தப்படும் போது தான், புதிய சமூகக் கட்டுப்பாடு, சோசலிசக் கட்டுப்பாடு உருவாக்கப்பட முடியும்; - பிறகு மட்டுமே - முதலாளித்துவத்துக்குத் திரும்பிச் செல்வது சாத்தியமற்றதாகும்; பொதுவுடமை உண்மையிலேயே வெல்லப் பட முடியாததாகும்.'' (லெனின் மொத்த தொகுதி 29, பக். 411)

சித்தாந்தத் துறையில் தொழிலாளர்களது கல்வி மற்றும் கலாச்சார மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளும் அதன் பயனாய் எல்லா அரசாங்கப் பணிகளையும் ஊதியமின்றி தொழிலாளர்கள் ஆற்றுவதே மேற்கட்டுமானம் என்ற அரங்கத்திலான புரட்சியாகும். இதுபற்றி லெனின் சொன்னார்:

''முதலாளித்துவ குடியரசுகளில் மிகச்சிறந்தவை, அவை எவ்வளவுதான் ஜனநாயகத் தன்மை உடையவையாக இருந்தபோதிலும், ஆயிரமாயிரம் சட்டரீதியான தடங்கல்களைக் கொண்டுள்ளன; அரசாங்கப் பணிகளில் மக்கள் பங்கேற்பதைத் தடுக்கின்றன. நாம் செய்துள்ளதெல்லாம் இத் தடைகளை நீக்குவதையே. ஆனால் இதுவரை நாம் உழைக்கும் மக்கள் அரசாங்கத்தில் பங்கு வகிக்கிற கட்டத்தை அடையவில்லை. சட்டம் ஒருபுறம் இருக்க கலாச்சார அளவு என்ற ஒன்று இன்னும் இருக்கிறது. இதை எந்தச் சட்டத்துக்கும் உட்படுத்த முடியாது. இந்தத் தாழ்ந்த கலாச்சார அளவின் விளைவு என்னவென்றால், சோவியத்துகள் உழைக்கும் மக்களால் நடத்தப்படும் அரசாங்க உறுப்புக்கள் என்று அவற்றின் செயல் திட்டத்தில் காணப்படுவதற்கு மாறாக, பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பிரிவால் மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்க உறுப்புகளாகவே உண்மையில் இருக்கின்றன. உழைக்கும் மக்கள் அனைவராலும் நடத்தப்படும் அரசாங்க உறுப்புகளாக இல்லை'' (லெனின் தொகுதி 29, பக். 188.)

எனவே தொழிலாளர்கள் மற்றும் பிற பரந்துபட்ட மக்களின் கல்வி -கலாச்சார மட்டத்தை உயர்த்துவதற்கான கலாச்



படிப்பகம்

www.padippakam.com

சாரப் புரட்சியின் அவசியத்தை லெனின் உணர்ந்து அறைகூவல் விடுத்தார்,

> " போதுமான அளவு கலாச்சாரம் வளர்ந்திராத ஒரு நாட்டில் சோசலிசத்தை நிலைநாட்டுவதை மேற்கொள்வதில் நாம் மிகவும் அவசரப்பட்டுவிட்டோம் என்று நமது எதிர்ப்பாளர்கள் திரும்பத் திரும்ப நம்மிடம் கூறியிருக்கிறார்கள். தத்துவத்தில் - எல்லாவகை பண்டிதர்களின் தத்துவத்திலும் - குறிப்பிட்டுள்ள முடிவுக்கு நேர்மாறான முடிவிலிருந்து நாம் தொடங்கியதால் அவர்கள் இத்தவறான கருத்துக்கு வருகிறார்கள். நமது நாட்டில் அரசியல் மற்றும் சமூகப் புரட்சி. கலாச்சாரப் புரட்சியை முந்தி விட்டது. ஆயினும் அதே கலாச்சாரப் புரட்சி இப்போது நம்மை எதிர் கொண்டு உள்ளது " (லெனின் தொகுதி 33, பக். 474)

லெனினது அறைகூவலை ஏற்று, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய அவரது போதனைகளை விரித்துக் கொண்டு, காத்து வளர்த்து, சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கு பற்றிய புறவயமான விதியைக் கண்டறிந்து, பாட்டாளி வர்க்கசர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடர்வதுஎன்றகோட்பாட்டையும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி என்ற வடிவத்தையும் வழிமுறையையும் மாவோ பங்களித்தார். ஆனால் சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணம் பற்றி மார்க்சிய-லெனினிய ஆசான்கள் வகுத்தளித்த நியதிகளுக்கும் வழிகாட்டும் நெறி முறைகளுக்கும் துரோகமிழைத்து, மார்க்சிய-லெனினிய - மாசேதுங் சிந்தனையைக் காட்டிக் கொடுத்து ருசியாவின் குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலைப் போலவே சீனத்து வியு - தெங் கும்பலும் ஓடுகாலியாக சீரழிந்து போனது. நமது சமகாலத்தின் மிகப்பெரும் மார்க்சிய - லெனினிய வாதியும் புரட்சியாளரும், யுத்த தந்திர வாதியும் மார்க்சிய - லெனினியத்தை மாசேதுங் சிந்தனையாகிய உயர்ந்த கட்டத்திற்கு வளர்த்தெடுத்தவருமான மாவோவால் தோற்றுவித்து கட்டியமைக்கப்பட்ட மகத்தான, புகழ்மிக்க சீனப்பொதுவுடைமைக் கட்சியின் தலைமையை - பாரிஸ் கம்யூன், மற்றும் அக்டோபர் புரட்சிக்கு பின்னர் மிகப்பெரும் புரட்சியை வெற்றிகரமாகவழி நடத்திய சீனப்பொதுவுடைமைக் கட்சியின் தலைமையை - வியு - தெங் எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கும்பல் கைப்பற்றியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# VI

# திரிபுவாதத்தின் வெற்றி தற்காலிகமானதே; இறுதி வெற்றி மார்க்சியத்திற்கே!

லியு - தெங் கும்பலை நேரடியாக ஆதரிப்பவர்களை விட்டுத் தள்ளுங்கள், சீனப்பொதுவுடமைக் கட்சியின் தலைமையை லியு - தெங் எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கும்பல் கைப்பற்றியிருப்பது மறைமுகமாக லியு - தெங் கும்பலை ஆதரிக்கும் மையவாதிகளாலும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் இது மட்டுமே நவீன டிராட்ஸ்கிய வாதிகள் கூறுவது போல சீனப் பொதுவுடமைக்கட்சி திரிபுவாதக் கட்சியாகவோ, அதிகார வர்க்க முதலாளித்துவக் கட்சியாகவோ சீரழிந்து போனதைக் குறிக்குமா? சீனா முதலாளித்துவ நாடாகவோ மற்றுமொரு சமூக ஏகாதிபத்திய நாடாகவோ நிறமாறி விட்டதாகக் கூற முடியுமா? இல்லை. அவ்வாறு கூறுவதும், மதிப்பீடு செய்வதும் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் அனுபவங்களை அறியாததும், அங்கீகரிக்காததும் ஆகும்.

படிப்பகம்

www.padippakam.com

சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மறுக்க முடியாத அனுபவம் என்னவென்றால் ஒவ்வொரு முறையும் 'இடது' சந்தர்ப்பவாதம் முறியடிக்கப்படும்போதும் அதன் கூடவே வலது சந்தர்ப்பவாத அபாயம் தலை தூக்குகிறது; அதே போன்று வலது சந்தர்ப்பவாதம் முறியடிக்கப்படும்போதெல்லாம் 'இடது' சந்தர்ப்பவாதம் தலை தூக்குகிறது என்பதாகும். இந்த அபாயங்களுக்கெதிராக பாட்டாளி வர்க்கக்கட்சி உறுதியாக நின்று முறியடிக்க வேண்டும். மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் வளர்ச்சிப் போக்கும் இத்தகையதே.

சீனத்தில் உற்பத்திச் சாதனங்களின் சோசலிச உடைமை மாற்றத்தை எட்டியபோது பழைய, புதிய சுரண்டலாளர்கள் வலதுசாரி பிற்போக்குவாதிகளாக அணிதிரண்டு பாட்டாளி வர்க்கக் கட்சி மற்றும் அரசைத் தாக்கினர். கட்சிக்குள் அவர்களது நலனைப் பிரதிபலித்த முதலாளித்துவப் பாதையாளர்கள் லியு - செள ஷியின் தலைமையில் கட்சி மற்றும் அரசின் தலைமையைக் கைப்பற்றினர். 'தலைமையகத்தைத் தாக்குங்கள்!' என்ற மாவோவின் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சிக்கான அறைகூவலைத்தொடர்ந்துமக்கள்திரள்புரட்சியால் லியு - செள ஷி கும்பல் தூக்கியெறியப்பட்டது. மாவோவின் தலைமையிலான பாட்டாளி வர்க்க வழி, சோசலிசப் பாதை வென்றது. வலது சந்தர்ப்ப வாதத்தை முறியடித்த இந்த வெற்றியைத் தொடர்ந்து அதீத 'இடது' முகத்திரை அணிந்து முதலாளித்துவப் பாதையாளர்கள் லின் பியௌ தலைமையில் முதலாளித்துவ மீட்சிக்கு மீண்டும் முயன்றனர். வலது சந்தர்ப்பவாதத்தை எதிர்த்துத் தாக்குவது என்ற பெயரால் லின் - பியௌ கும்பல் ஒரு குறிப்பிட்ட காலம் ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரத்தையும் கைப்பற்ற முடிந்தது. லின் - பியௌவின் எதிர்ப் புரட்சி நடவடிக்கைகள் தோல்வியுற்று முதலாளித்துவ மீட்சிக்கான அதன் முயற்சி முறியடிக்கப்பட்டு மீண்டும் மாவோவின் தலைமையில் பாட்டாளி வர்க்கப் பாதை வென்றது.

'இடது' சந்தர்ப்பவாதத்தை முறியடித்த உடனேயே திரிபுவாதம் தெங் சியௌ பிங் கும்பலின் வலது சந்தர்ப்பக் கலவைவாதத்தின் வடிவில் மீண்டும் தலை தூக்கியது. ஒரு குறிப்பிட்ட அளவு செல்வாக்கும் பெற்று அதிகாரத்தையும் செலுத்த முடிந்தது. ஆனால் முதலாளித்துவ மீட்சிக்கு தியன் ஆன் மென் சதுக்கத்தில் ஒரு எதிர்ப்புரட்சி கலகத்தைத்தூண்டிய போது அது முறியடிக்கப்பட்டது. தெங் சியௌ பிங் கும்பல் தூக்கியெறியப்பட்டு மாவோவின் பாட்டாளி வர்க்கப் பாதையி



படிப்பகம்

www.padippakam.com

லான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாதுகாக்கப்பட்டது. தெங் சியௌ பிங்கினுடைய கலவை வாத வடிவிலான வலது சந்தர்ப்ப வாதம் முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து நால்வர் கும்பல் அதீத இடது சந்தர்ப்பவாதத்தை முன்வைத்து எதிர்ப் புரட்சிக் குடைக் கவிழ்ப்பின் மூலம் கட்சி மற்றும் அரசின் அதி உயர் அதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனித்தது. நால்வர் கும்பல் மார்க்சிய-லெனினியத்தின் பெயரால், மாவோவின் பெயரால் ஒரு குறிப்பிட்ட காலம் ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரத்தைக் கைப்பற்றி செல்வாக்குச் செலுத்தவும் முடிந்தது. மாவோவின் மரணத்திற்குப் பிறகு முதலாளித்துவ மீட்சிக்கு முழுஅளவு தனது சக்திகளைக் கட்டவிழ்த்து விட்டபோது, நால்வர் கும்பல் முறியடிக்கப்பட்டு மவோவின் பாட்டாளிவர்க்கப் பாதை வென்றதையும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் உறுதிப்பட்டதையுமே பதினோராவது காங்கிரசின் முடிவுகள் அறிவித்தன. ஆனால் அதீத 'இடது' சந்தர்ப்பவாதத்தை முறியடித்த அதேசமயம் தெங் சியௌ பிங் கும்பலின் வலது சந்தர்ப்பவாதத்திற்கு எதிராக எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருக்கத் தவறியதால் லியு-தெங் எதிர்ப் புரட்சி ஓடுகாலிக் கும்பல் சீனப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையை கைப்பற்றுவது சாத்தியமாயிற்று. மகத்தான சீனப் புரட்சியின் நாயகர்களான மாசேதுங், சூடே மற்றும் சௌ என் லாய், காங் ஷென் போன்ற தலைவர்களின் அடுத்தடுத்த மரணமும் வரிசை வரிசையாக அதன் முன்னணித் தலைமையினரை இழந்ததுவும் இதற்குச்சாதகமான தருணமாகஅமைந்தது.

சீனப் பொதுவுடமைக் கட்சியின் தலைமையை லியு-தெங் எதிர்ப் புரட்சித் திரிபுவாத கும்பல் கைப்பற்றியிருப்பதானது முழுமையானதும், நிரந்தரமானதும் இறுதியானதும் அல்ல; புரட்சியின் வளர்ச்சிப்போக்கு நெளிவு சுழிவுகளும், வளைவுகளும் திருப்பங்களும், இடர்பாடுகளும் வேதனைகளும், வெற்றிக் களிப்புகளும் துன்ப துயரங்களும் மிக்க நீண்ட நெடிய திருகுசுழல் பாதையினூடே முன்னேறுகிறது. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் போக்கும் இத்தகையதே. மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப்புரட்சியில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான ஒரு ஜீவமரணப் போராட்டத்தில் பலமுறை மாறிமாறி அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், எதிர்க் கைப்பற்றுவதும் நிகழ்ந்திருக்கின்றன. புரட்சிகர இயக்கம் அதன்போக்கில் பலமுறை நெளிவு சுழிவுகளுக்கும் பின்னடைவுகளுக்கும் மீண்டும் முன்னேற்றங்களுக்கும் உள்ளாகியிருக்கிறது.

மாவோவால் தலைமையேற்கப்பட்ட சரியான பாட்டாளி வர்க்கப் பாதையின் கீழ் மிகச் சரியான, மகத்தான, புகழ்மிக்க



படிப்பகம்

www.padippakam.com

சீனப் பொதுவுடமைக்கட்சி கட்சிக்குள்ளும், வெளியேயும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள வர்க்க எதிரிகளுடனான நீண்ட நெடிய பலப்பரிட்சை நடத்திய போராட்டங்களில் பல வெற்றிகளை ஈட்டி சோதிக்கப்பட்டுள்ளது. அது பிளவுபடவோ ஒடுக்கப்படவோ இல்லை - மாறாக மார்க்சிய — லெனினியப் பாதையும், கட்சியும் வளர்ந்து பலம் பெற்றன. ஆனால்,

> "வலதுசாரிகள் சீனத்தில் ஒரு கம்யூனிச எதிர்ப்புக் குடைக் கவிழ்ப்பை நடத்தினால் அவர்கள் அமைதியைக் காணவும் முடியாது, அவர்களது ஆட்சியும் தற்காலிகமானதாகவே இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்; ஏனெனில் மக்கள் தொகையில் 90%க்கும் மேலானவர்களை உள்ளடக்கிய மக்களது நலனுக்கு எதிராக அது போகும்போது புரட்சியாளர்களால் அது சகித்துக் கொள்ளப்படாது." என்றார் மாவோ (சீ. பொ. கட்சியின் பத்தாவது காங்கிரசு அறிக்கை; சீனா விலகிப் போகிறதா? என்ற நூலிலிருந்து, பக். 241)

கட்சி முழுவதும் அதன் வரலாற்று அனுபவத்தை நெஞ்சில் நிறுத்தி மாவோவின் சரியான பாதையை உயர்த்திப் பிடிக்கும் வரை எவ்வளவு முறை இரு பாதைகளுக்கிடையிலான பெரும் போராட்டங்கள் எழுந்தாலும் முதலாளித்துவ மீட்சிக்கான முயற்சிகள் நிச்சயம் தோல்வியுறும். அதாவது சர்வதேசப் பாட்டாளிவர்க்க இயக்கத்தின் ஒத்துழைப்புடன் சீனப் பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னணிப்படையும் விழிப்புற்று எழுந்து நின்று வியு - தெங் எதிர்ப்புரட்சி ஓடுகாலிக் கும்பலைத் தூக்கியெறிவதும் முதலாளித்துவ மீட்சியைத் தடுத்து நிறுத்துவதும் சாத்தியமே. வியு - தெங் கும்பலின் எதிர்புரட்சித் திரிபுவாதத்திற்கெதிரான பதில் தாக்குதலைத் தொடுக்கும், மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடிக்கும் புரட்சிகர சக்திகள் வலுப்பெற்று வருவதாகவும், வியு - தெங் கும்பல் நிம்மதியற்றிருப்பதாகவும் நம்பிக்கையளிக்கும் செய்திகள் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தளப்பிரதேசத்திலிருந்து வருகின்றன. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான அரசியல் அதிகாரத்திற்கான ஜீவமரணப் போராட்டம் இன்னும் தொடர்கிறது. எது வெல்லும், சோசலிசப் பாதையா? முதலாளித்துவப் பாதையா? என்ற கேள்வி இன்னும் தீர்க்கப்படவே இல்லை.

சீனப் பாட்டாளி வர்க்கமும், பிற உழைக்கும் மக்களும் மாவோவால் போதம் பெற்று, ஏகாதிபத்தியம் நிலப்பிரபுத்துவத்



படிப்பகம்

www.padippakam.com

திற் கெதிரான புதிய ஜனநாயகப் புரட்சியிலும், சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிச நிர்மாணத்திலும் குறிப்பாக மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியிலும் படம் போடப்பட்டவர்கள். புகழ் மிக்க புரட்சிகர மரபுகளை உடையவர்கள். இந்தியப் பாட்டாளி வர்க்கத்துக்கும் அதன் முன்னணிப் படைக்கும் ஒளிவிளக்கான மாசேதுங் சிந்தனையை வழங்கியவர்கள். இந்திய மக்களின் கடைந்தெடுத்த எதிரியான பாசிச இந்திரா கும்பலுடனும், துரோகியான நவீன திரிபு வாதத்துடனும் லியு - தெங் எதிர்ப்புரட்சி ஒடுகாலிக் கும்பல் கூடிக் குலாவினாலும், சீன மக்கள் பாலும் புரட்சியின் பாலும் ஆழ்ந்த நம்பிக்கையும் பற்றும் இந்திய மக்களுக்கு என்றும் உண்டு.

மகத்தான சீனப்பொதுவுடைமைக் கட்சியை எதிர்ப்புரட்சித் திரிபுவாதக் கட்சியாக சீரழிப்பதிலும், முதலாளித்துவ மீட்பிலும் ஏகாதிபத்திய சரணடைவிலும் லியு - தெங் எதிர்ப்புரட்சி ஒடுகாலி கும்பல் ஒரு வேளை வெற்றி பெறினும் மார்க்கிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் கோட்பாடுகள் அழிவற்றவை ; நித்தியத்துவம் பெற்றவை ; சரியானவை ; விஞ்ஞான பூர்வமானவை என்பதை எவரும் மறுக்க முடியாது. ஏனெனில் புரட்சிகர இயக்கம் அதன் பாதையில் பின்னடைவுகளை எதிர் கொள்ளும் என்பது முன்னறிந்த ஒன்றே.

> "புதிய விஷயங்கள் எப்பொழுதும் அவை வளரும் போது பின்னடைவுகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. சோசலிசத்தின் இலட்சியம், கஷ்டங்களும், பின்னடைவுகளும் அல்லது பிரம்மாண்டமான பிரயத்தனங்கள் செலுத்துவதும் இல்லாமல் சமநீர்ப்பயணமாகவும் சுலப வெற்றியாகவும் இருக்கும் என்று கற்பனை செய்வது வெறும் இன்பக் கனவே ஆகும்"

என்றார் மாவோ. வரலாறு நேர்கோட்டுப் பாதையில் அல்ல திருகு சுழல் பாதையில் முன்னேறுகிறது. சோசலிசத்தின் இறுதி வெற்றி எதில் தங்கியிருக்கிறது என்பதை தீர்க்க தரிசனத்துடன் மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனை அறுதியிட்டிருக்கிறது.

> "நாம் மகத்தான வெற்றி பெற்றுள்ளோம்- ஆனால் தோற்கடிக்கப்பட்ட வர்க்கம் இன்னும் மீண்டும் போராடும். இந்த நபர்கள் இன்னும் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள்; இந்தவர்க்கம் இன்னமும் நிலவுகிறது. எனவே, நாம் இறுதி வெற்றியைப் பற்றி பேச முடியாது. பல பத்தாண்டுகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

கூட நமது எச்சரிக்கைகளை நாம் தளர்த்தக் கூடாது. லெனினியக்கண்ணோட்டத்தின் படி ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றி உள்நாட்டிலுள்ள பரந்து விரிந்த பெருந்திரளினரதும் பாட்டாளி வர்க்கத்தினரதும் பிரயத்தனங்களை மட்டுமல்ல கோருகிறது; உலகப் புரட்சியின் வெற்றியையும், மனித இனம் முழுவதும் விடுதலை பெறக்கூடியதான உலக முழுவதும் மனிதனைச் சுரண்டும் அமைப்பு முறையை ஒழிப்பதையும் கூட சார்ந்திருக்கிறது. எனவே, நமது நாட்டில் புரட்சியின் இறுதி வெற்றியைப் பற்றி லேசாகப் பேசுவது தவறு; அது லெனினிசத்திற்கு எதிராகப் போவதும், உண்மைக்குப் பொருத்தமற்றதும் ஆகும்'' (சீ.பொ. கட்சியின் ஒன்பதாவது காங்கிரசு அறிக்கை, மேற்படி நூல், பக் 182)

இதன் பொருள் 'ஏக காலத்தில் உலகம் முழுவதும் புரட்சி வெற்றியடைவதில்தான் சோசலிசத்தின் நிச்சயமான, நம்பகமான வெற்றி தங்கியிருக்கிறது; இல்லையானால் புரட்சியின் வெற்றி நீடித்திருப்பதும், ஒரு நாட்டில் சோசலிச நிர்மாணமும் சாத்தியமில்லை' என்ற டிராட்ஸ்கிய 'உலகப்புரட்சி மற்றும் நிரந்தரப் புரட்சி' வாதம் சரியானது, ஏற்புடையதுஎன்பதல்ல. ஏகாதிபத்திய உலகக் கட்டமைவு என்ற சங்கிலியின் பலவீனமான கண்ணியை உடைத்துக் கொண்டு ஒரு நாட்டில் புரட்சி வெற்றி பெறும்; சோசலிசப் புரட்சியையும் சோசலிச நிர்மாணத்தையும் கட்டியெழுப்ப முடியும் என்பதையே நடைமுறை நிரூபித்துள்ளது. ஆனால் சோசலிசத்தின் இறுதி வெற்றி அடுத்தடுத்து பல நாடுகளில் புரட்சி வெற்றி பெறுவதிலும் உலகு தழுவிய அளவில் ஏகாதிபத்தியமும் சுரண்டும் அமைப்பும் துடைத்தெறியப்படுவதிலும் தங்கியுள்ளது என்ற மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் மதிப்பீடுகள் முற்றிலும் சரியானவையே. இதற்கு மாறாக சோசலிசப் புரட்சியையும் சோசலிச நிர்மாணத்தையும் வழி நடத்துவதில், கட்டியெழுப்புவதில் உள்ள இடர்ப்பாடுகளையும், சிக்கல்களையும், வேதனைகளையும், துன்ப துயரங்களையும், நெளிவு சுழிவுகளையும், பின்னடைவுகளையும் தாங்கிக் கொண்டு சலிப்புறாது, சளையாது, விடாப்பிடியாக புரட்சியை முன்னெடுப்பதில் மக்கள் மீதும், புரட்சியின் மீதும், கட்சியின் மீதும், சித்தாந்தத்தின் மீதும் நம்பிக்கையிழந்து வர்க்க எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு எதிர்ப்புரட்சித் துரோகிகளாக, ஓடுகாலிகளாக சீரழிவதில்டிராட்ஸ்கியவாதத்தின் அடிப்படையைக் கொண்டிருப்பதையே ருசியாவின் குருச்சேவ் - பிரஷ்னேவ் மற்றும் சீனத்தின் லியு - தெங் கும்பல் வெளிப்படுத்தியுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

குருச்சேவ் – பிரஷ்னேவ் கும்பலைப் போலவே லியு - தெங் கும்பலும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு கனத்த நாசத்தை விளைவித்துள்ளது. ஆனால், அதேசமயம் உலகம் முழுவதிலுமுள்ள மார்க்சிய-லெனினிய வாதிகளையும், புரட்சிகர மக்களையும் எதிர்மறையில் போதித்துள்ளன. ருசியப் புரட்சியும் சீனப் புரட்சியும் எல்லா நாட்டு மார்க்சிய—லெனினிய வாதிகளுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்த நேர்மறை அனுபவமளித்து பாட்டாளி வர்க்கத் தலைமையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புதிய பாதைகளைத் திறந்துவிட்டன. ருசியாவின் குருச்சேவ் — பிரஷ்னேவ் கும்பலும் சீனத்து லியு - தெங் கும்பலும் பாட்டாளி வர்க்கக் கட்சியும் சோசலிச அரசும் சீரழிந்து போகாமல் தடுப்பதற்கு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடரவேண்டியதன் அவசியத்தை எல்லா நாட்டு மார்க்சிய — லெனினிய வாதிகளுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எதிர்மறை அனுபவமளித்துள்ளன.

வரலாறு காட்டியிருக்கிறது; எல்லாப் புரட்சிகளும் பின்னடைவுகளையும், வளைவுகளையும் திருப்பங்களையும் கண்டிருக்கின்றன. லெனின் சொன்னார்,

"விஷயத்தை அதன் சாராம்சத்தில் எடுத்துக் கொண்டால், பின்னடைவுகள், தவறுகள் மற்றும் குறைபாடுகள் ஆகிய ஒரு நீண்ட தொடர்நிகழ்வின்றி ஒரு புதிய உற்பத்தி முறை உடனடியாக வேரூன்றுவது வரலாற்றில் எப்பொழுதாவது நிகழ்ந்திருக்கிறதா?" (ஒரு மகத்தான தொடக்கம், தேர்ந்த நூல்கள் தொகுதி 2, பகுதி 2, பக். 229)

சர்வதேசப் பாட்டாளிவர்க்கத்திற்கு, அதன் இயக்கத்திற்கு சோசலிசம் இன்னமும் புதிய விஷயம், இளமையானது; அது கற்றுத் தேர்ந்து வளர்த்தெடுக்கப்பட வேண்டியது. சுரண்டும் எல்லா வர்க்க சமுதாயத்தோடும் ஒப்புநோக்குகையில் குறுகிய காலத்திலான சோசலிசத்திற்கு ஏற்படும் பின்னடைவு தற்காலிக மானதே. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான முதல் வீர தீரமிக்க பாரிஸ் கம்யூனிலிருந்து கணக்கிட்டாலும் சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒரு நூறு ஆண்டு வரலாறுடையதே; மகத்தான ருசிய அக்டோபர் புரட்சியிலிருந்து அரை நூற்றாண்டு வரலாறுடையதே; மகத்தான சீனப் புரட்சியிலிருந்து முப்பதாண்டு வரலாறுயுடையதே. இந்த வரலாறு இரண்டு வகையான எடுத்துக்காட்டுகளை வழங்கியுள்ளது. முதலாளித்துவ ஆயுதந்தாங்கிய ஒடுக்குமுறை நடவடிக்கைகளால்



படிப்பகம்

www.padippakam.com

பாட்டாளி வர்க்க ஆட்சி வீழ்ந்த சான்றுகளும் உண்டு; அவை: 1871 பாரிஸ்கம்யூன் மற்றும் 1919 ஹங்கேரியன் சோவியத் குடியரசு. உள்ளிருந்து பாட்டாளி வர்க்க ஆட்சி மற்றும் கட்சியைச் சீரழித்து எதிர்ப் புரட்சி திரிபுவாதக் குடைக் கவிழ்ப்பால் முதலாளித்துவத்தை மீட்டெடுத்த சான்று களும் உண்டு ; அவை : சோவியத் யூனியன், மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ மீட்பு. இவற்றை முறியடித்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பாதுகாக்கப்பட்ட வரலாறும் உண்டு ; அவை : சோவியத் யூனியனில் 1918 – 20; சீனத்தில் மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியில் லியு - லின் – நால்வர் கும்பல் முறியடிப்பு. பாட்டாளி வர்க்க ஆட்சியை வென்றடக்கி வீழ்த்த எதிர்ப்புரட்சியாளர்களின் அந்நியப் படையெடுப்பில் பாட்டாளி வர்க்கம் வென்றதும் உண்டு ; ஸ்டாலின் தலைமையில் பாசிச ஹிட்லரை வென்றது ; அம்மாதிரியான படையெடுப்பில் பாட்டாளி வர்க்கம் தோற்று ஆட்சியை இழந்ததும் உண்டு : கம்பூச்சியா.

எனவே, மனித வரலாற்றில் மகத்தான புரட்சியாகிய, பாட்டாளி வர்க்கப் புரட்சி எல்லா வகையான சுரண்டும் முறைகளையும், சுரண்டும் வர்க்கங்களையும் மட்டுமல்ல, எல்லா வகையான வர்க்க வேறுபாடுகளையும், பிற சமூக வேறுபாடுகளையும் வேரோடு கெல்லி எறிவதற்கான உலகைக் குலுக்கும் கடுமையான வர்க்கப் போராட்டங்களைக் கொண்டது; வெற்றிகளையும் தோல்விகளையும், முன்னேற்றங்களையும் பின்னேற்றங்களையும் கொண்டது. ஆனால் தோல்விகளும் பின்னேற்றங்களும் தற்காலிகமானவையே. எனவே மார்க்சிய - லெனினியவாதிகள் பாட்டாளி வர்க்கப் புரட்சி இலட்சியத்தின் எதிர்காலம் குறித்து புரட்சிகர வெற்றிக் கண்ணோட்டம் கொண்டவர்கள். மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் பதாகையால் ஒளியூட்டப்பட்ட பாதையில் முன்னேறி உலகம் முழுவதும் கம்யூனிசம் வெல்லும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# பிழை - திருத்தம்

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 6 | 2 | 5 | பொதுவுமைக் | பொதுவுடமைக் |
| 8 | 1 | 3 - 4 | முதலாளித்து | முதலாளித்துவ |
| 10 | 4 | 5 | அதிக்கத்திற்கும் | ஆதிக்கத்திற்கும் |
| 21 | 3 | 8 | தழு ய | தழுவிய |
| 25 | 2 | 2 | ற்றும் | மற்றும் |
| 26 | 1 | 4 | சர்வா கரம் | சர்வாதிகாரம் |
| 34 | 1 | 7 | சுருக்கம க | சுருக்கமாக |
| 35 | 2 | 5 | சக்திக ளப் | சக்திகளைப் |
| 37 | 1 | 2 | பற்றி | பற்றிய |
| 41 | 3 | 4 | பபங்கரமான | பயங்கரமான |
| 41 | 3 | 8 | முயைனை | முனையை |
| 42 | 5 | 1 | துக்கி | தூக்கி |
| 42 | 6 | 3 | நின்று | நின்ற |
| 47 | 2 | 17 | மட்டுமின்றி | மட்டுமின்றி |
| 50 | 3 | 12 | என்றும் அவதூறு | என்றும் யுத்த வெறியர்கள் என்றும் அவதூறு |
| 55 | 2 | 12 | பொருத்தவனா | பொருத்தவரை |
| 55 | 3 | 11 | ப நூ ற்றுக்கணக்கான | பல நூற்றுக்கணக்கான |
| 56 | 1 | 3 | நடக் ம் | நடக்கும் |
| 56 | 2 | 3 | எடு தாக | எடுத்தாக |
| 58 | 1 | 10 - 11 | இரண்வது | இரண்டாவது |
| 58 | 1 | 17 | அனைத்தைபும் | அனைத்தையும் |
| 70 | 1 | 3 | உறவுக க்குப் | உறவுகளுக்குப் |
| 71 | 7 | 4 | 196 , | 1964, |
| 73 | 2 | 4 – 5 | வெற்றி கும் | வெற்றிக்கும் |
| 75 | 1 | 1 | முதலரவதாக | முதலாவதாக |
| 77 | 1 | 7 | மாாவா | மாவோ |
| 81 | 2 | 12 | திரளினரு | திரளினரும் |
| 84 | 3 | 12 | இ வழிப் | இருவழிப் |



படிப்பகம்

www.padippakam.com

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 87 | 2 | 18 | சித்தாந் | சித்தாந்த |
| 90 | 2 | 14 | பங்கனிப்பு | பங்களிப்பு |
| 91 | 1 | 3 - 4 | விட்டது தான் '' | விட்டது தான்' '' |
| 94 | 2 | 18 | பாந்து கிடக் | பரந்து கிடக் |
| 96 | 2 | 4 | சர்வாதிகாரத்தின் புரட்சியைத் | சர்வாதிகாரத் தின் கீழ் புரட்சியைத் |
| 98 | 2 | 8 | ; அனைவரையும் | ' அனைவரையும் |
| 99 | 1 | 13 | திசிக்கலான | அதி சிக்கலான |
| 101 | 2 | 3 - 4 | தழு ய | தழுவிய |
| 102 | 2 | 1 - 2 | மற்றும் முழுதான | மற்றும் முற்றும் முழுதான |
| 102 | 2 | 15 | நிறுத்துவது | நிறுவுவது |
| 104 | 3 | 2 | தெரிந்தெடுப்பவர்க | தெரிந்தெடுப்பவர்கள் |
| 105 | 1 | 1 | கோட்பாட்டின்கீ | கோட்பாட்டின் கீழ் |
| 106 | 1 | 1 | ஒழிப்பத ாக | ஒழிப்பதற்காக |
| 107 | 1 | 1 | நிக ந்த | நிகழ்ந்த |
| 108 | 2 | 27 | ஆனரல் | ஆனால் |
| 111 | 1 | 8 | ல்வியையும் | கல்வியையும் |
| 111 | 1 | 9 | அமை ப்பை | அமைப்பை |
| 111 | 2 | 4 | எட்டு தே வைகளை 'யும் | எட்டு தேவை களையும் |
| 111 | 3 | 7 | ' ம | ' மன |
| 114 | 1 | 7 | புத்தத்தை | யுத்தத்தை |
| 114 | 1 | 30 | நட்புயர்வற்ற | ஒப்புயர்வற்ற |
| 117 | 2 | 23 | நிககால | நிகழ் கால |
| 119 | 2 | 1 | 'அப்படி | '' அப்படி |
| 119 | 2 | 4 | போ ாட்டம் | போராட்டம் |
| 119 | 2 | 19 | இப்போதிருந்து | 'இப்போதிருந்து |
| 119 | 2 | 30 | தை யாயப் | தலையாயப் |
| 122 | 3 | 2 | ச ாதான | சமாதான |
| 122 | 5 | 1 | ரிபுவர்தம் | திரிபுவாதம் |
| 124 | 1 | 3 | மூலைக் கல்லாக | மூலைக்கல்லாக ' |



படிப்பகம்

www.padippakam.com

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 127 | 4 | 3 | இல்லையா ? | இல்லையா ? '' |
| 128 | 2 | 10 - 11 | இடையிலான போராட்டம் | இடையிலான வர்க்கப் போராட்டம், சோசலிசப் பாதைக்கும் முதலாளித் துவப் பாதைக்கும் இடையிலான |
| 128 | 3 | 5 | இயங்கியலின் | இயங்கியலில் |
| 130 | 1 | 5 | பலகஅளைப் | பலன்களைப் |
| 135 | 2 | 5 | நடவடிககக்ளள் | நடவடிக்கைகள் |
| 135 | 3 | 7 | நிறுவனங்கள் என்பதை | நிறுவனங்கள் அரசு நிறுவனங்கள் என்பதை |
| 137 | 3 | 9 | போவதாக, | போவதாக' |
| 138 | 2 | 4 | தொடர்வதற்கான என்று வடிவத் தையும் | தொடர்வதற் கான வடிவத்தையும் |
| 138 | 2 | 23 | சாராதிரட்டாக — | சாரத்திரட்டாக ... |
| 138 | 3 | 9 | சீ- கட்சி | கட்சி |
| 139 | 2 | 8 | ' கூட்டுத்தலைவ' னாக | 'கூட்டுத்தலைவ' ராக |
| 141 | 1 | 16 | உருமாற்ற முடியும் ; உருமாற்ற முடியும் | உருமாற்ற முடியும் ; |
| 142 | 2 | 7 | மற்ற டி | மற்றபடி |
| 142 | 5 | 1 | கலாச்சாரப் | கலாச்சாரப் புரட்சியின் |
| 145 | 2 | 14 | கலை - இலக் யம் | கலை - இலக்கியம் |
| 145 | 2 | 17 | பல வர்கள் | பலமானவர்கள் |
| 145 | 3 | 2 | கை பற்றுவதற்கே | கைப்பற்றுவதற்கே |
| 145 | 3 | 3 | வெ ப்பதாகவும் | வெடிப்பதாகவும் |
| 146 | 1 | 22 | கைப்பற்றுவது ' | கைப்பற்றுவது' '' |
| 149 | 2 | 25 | வாய்ப் களைத் | வாய்ப்புகளைத் |
| 150 | 1 | 1 | இருக்கிறது. | இருக்கிறது. '' |



படிப்பகம்

www.padippakam.com

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 151 | 1 | 4 | அநரயல் | அரசியல் |
| 151 | 2 | 23 | 'இ து' | 'இடது' |
| 153 | 3 | 9 | அப மாக | அபாயமாக |
| 153 | 3 | 11 | த்த வேண்டியதே | நடத்த வேண்டியதே |
| 153 | 3 | 14 | வற்றாலு | வற்றாலும் |
| 153 | 3 | 14 | பாய்ச்சில் '' | பாய்ச்சலில்' |
| 154 | 1 | 8 | முதலாளித்துவ மட்சிக்கான | முதலாளித்துவ மீட்சிக்கான |
| 159 | 2 | 1 | எதிர் தீச்சல் | எதிர் நீச்சல் |
| 159 | 3 | 2 | எதிர் நிச்சல் | எதிர் நீச்சல் |
| 167 | 3 | 4 | புரட்சியின் போதைய | புரட்சியின் அப்போதைய |
| 186 | 2 | 18 | இருந்தது. | இருந்தது.'' |
| 188 | 3 | 10 | இறுதியிவ் | இறுதியில் |
| 189 | 4 | 3 | பயன்படுத்தும் உற்பத்திச் | பயன்படுத்தும் — உற்பத்திச் |
| 191 | 2 | 4 | ஊதியங்களை | ஊதிய |
| 192 | 4 | 11 | பூர்வமான | பூர்வமாக |
| 193 | 3 | 4 | அவர்களது | அவர்களது |
| 197 | 2 | 2 – 3 | விரும்புவர்களுக்கு | விரும்புபவர்களுக்கு |
| 198 | 1 | 6 | கலைந்துவிட்டு | களைந்து விட்டு |
| 198 | 1 | 9 | நிராகரிப்பதிலும். | நிராகரிப்பதிலும், |
| 198 | 2 | 1 - 2 | வர்க்கங்களிலி ருந்தும், | விளக்கங்களிலிருந்தும் |
| 198 | 3 | 1 | (1)உற்பத்திச் | '(1) உற்பத்திச் |
| 199 | 2 | 8 | போன்று போராட்டத்தை | போன்று வர்க்கப் போராட்டத்தை |
| 200 | 1 | 4 | வெளிப்படும் | வெளிப்படும்' |
| 200 | 3 | 6 | ஒரு முழுமை யான' | ஒரு முழுமையான, |
| 201 | 1 | 5 | இனிமேல் இருக்காது., | இனிமேல் இருக்காது.' |



படிப்பகம்

www.padippakam.com

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 201 | 2 | 12- 13 | ஒரு குழு நிச்சயமான | ஒரு குழு ஒரு நிச்சய மான |
| 201 | 3 | 3 | வர்க்ககள் | வர்க்கங்கள் |
| 202 | 3 | 3 | அளவில்அல்ல. | அளவில் அல்ல, |
| 203 | 2 | 23 | அத்தாட்யைப் | அத்தாட்சியைப் |
| 204 | 1 | 13 | இன்னமும் | இன்னமும் — |
| 205 | 1 | 21 | றதாக இருக்க | சமனற்றதாக இருக்க |
| 206 | 3 | 2 | முடிமென்று | முடியுமென்று |
| 213 | 1 | 8 | காரணங்களி லாயே | காரணங்களிலாலேயே |
| 219 | 3 | 1 | மார்க்சிய - லெனினிய வாதிகளது | மார்க்சிய - லெனினிய ஆசான்களது |
| 228 | 2 | 2 - 3 | நிபந்தகளை | நிபந்தனைகளை |
| 234 | 1 | 12 | (Inconcenivable) | (Inconceivable) |
| 241 | 1 | 14 | சீ. பொ. க. ஆறாவது | சீ. பொ. க பதினோரா வது மத்தியக் கமிட்டி யின் ஆறாவது |
| 247 | 1 | 23 | பொருளாதாய வாதமாகிய | பொருளாதாரவாத மாகிய |
| 248 | 6 | 3 | அடையும் | அடையும் போது |
| 250 | 1 | 4 | தள்ளப்பட | தள்ள |
| 260 | 3 | 5 | சோசலிச சமு தாய சமுதாயம் | சோசலிச சமுதாயம் |
| 260 | 4 | 7 - 9 | தனிச்சிறப்பான நிறுவனங்கள்வழி வகைகளும் உட்பட அவசரத்தேவையான பல தனிச்சிறப்பான நிறு வனங்கள் ஒருகிரமமான | தனிச் சிறப்பான நிறு வனங்கள் ஒரு கிரமமான |
| 261 | 3 | 4 | நெளிவுஅழிவுகள் | நெளிவு சுழிவுகள் |
| 268 | 1 | 23 | சான்றிண்மை | சான்றாண்மை |
| 270 | 4 | 1 | தனி நபர்களி டமிருந்து | " தனி நபர்களிட மிருந்து |
| 273 | 2 | 8 - 9 | விரைபடுத்தும் | விரைவு படுத்தும் |
| 277 | 3 | 10 | இன்னமும் வேறு | இன்னமும் |



படிப்பகம்